ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸுதர்சனர் பதில்

(பத்தாவது சதகம்)

மதங்கள், சாஸ்திரங்கள், இலக்கியங்களில் வாசகர்களின் 100 ஐயவினாக்களுக்கு ஆசிரியரின் விளக்கங்கள்

ஆசிரியர் ;—

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M.A., B.L.
(ஸுதர்சனர்) அட்வகேட்,
ஆசிரியர்: 'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்',
3 B, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620 017.

ஸ்ரீ. ரா. ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப
தர்ம சொத்துக்களின் ஆதரவில் வெளியிடப்பெற்றது.

டிரஸ்டிகள்:
S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M.A., B.L., அட்வகேட்,
S. ராம அய்யங்கார், B.Sc., B.L., அட்வகேட்,

[25—1—1990]

விலை ரூ. 10.00] ★ [தபால் 1.00

http://acharya.org

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸுதர்சனர் பதில் — பத்தாவது சதகம்

ஆசிரியரின் முன்னுரை

"ஸுதர்சனர் பதில்" தொடங்கி சுமார் 14 வருடங்கள் ஆகிறது. இதுவரை பத்து சதகங்களில் ஆயிரம் கேள்விகளுக்கு பதில்கள் வெளிவந்துள்ளன. இவை பொது மக்களிடையேயும், மாற்றுக்கருத்துடையவர்களால் நடத்தப் பெறும் பத்திரிகைகளிலும் பெருத்த வரவேற்பைப் பெற்று வருவது ஐந்தாவது எட்டாவது சதகங்களின் முன்னுரையில் காட்டப்பட்டது.

இப்பதினலு வருடங்களில் நாம் நம் நாட்டிலுள்ள நூற்றுக்கணக்கான இடங்களுக்குச் சொற்பொழிவுகள் ஆற்றச் சென்று, ஆயிரக்கணக்கானவர்களைச் சந்தித்துப் பேசிவருகிறோம். பலர் நமக்கு அவ்வப்போது கடிதங்களும் எழுதிவருகின்றனர். அனைவரும் "ஸுதர்சனர் பதில்கள் — வைணவர்களிடையே ஒரு மறுமலர்ச்சியையே விளைத்துள்ளது. இளைஞர்கள் பலர் உபயவேதங்கள், கீதை, ப்3ரஹ்மஸூத்ரம் முதலானவற்றை விளக்கும் தங்களது நூல்களைக்காட்டிலும், ஸுதர்சனர் பதில்களையே விரும்பிப் படிக்கின்றனர்." என்னும் கருத்தைத் தெரிவிக்கின்றனர். இது உண்மையேயாகிலும், ஸுதர்சனர் பதில்களை அடியேன் எழுதுவதற்கு ஊற்றுவாயான உபயவேதங்களுக்கும் நமது பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கும் விவரணமாக அடியேன் எழுதிவரும் நூல்களையும் சிறிது சிரமம் எடுத்துக் கொண்டாவது படித்தால்தான் வைணவத்தில் ஞானமும், உறுதியும் சிறப்பாக விளையும் என்பதை இளைஞர்களுக்கு உணர்த்துகிறேன். நிற்க.

http://acharya.org

ஸுதர்சனர் பதில்களால் பல பொதுஜனப் பத்திரிகைகளில் விஷ்ணுவைஷ்ணவ துவேஷப் பிரசாரங்கள் குறைந்துள்ளன என்பது வெளிப்படை. "கலைம்கள்" பத்திரிகை மட்டுமே தொடர்ந்து காமகோடி பீடாதிபதியின் இத்தகைய் பிரசாரங்களை வெளியிட்டு வருகிறது. இதுவும் படிப்படியாகக் குறையும் என நம்புகிறோம்.

தினமணி கதிரில் சரபக்கதையை ஒருவர் எழுதினார். அதற்கு நாம் எழுதிய மறுப்பை 25-6-89 இதழில் வெளியிட்டு தினமணி கதிர் தனது நேர்மையை நிலைநாட்டிக் கொண்டது. அந்த மறுப்பில் சரபக்கதையின் பொய்ம்மையை நிலைநாட்டி நாம் எழுதியிருந்த ஆதாரங்களை மறுக்க இயலாத அவர் நவம்பர் "(ஓம்) சக்தி" எனும் பத்திரிகையில் மறுபடியும் அந்தப் பொய்க்கதையை வெளியிட்டுச் சிங்கப்பிரானை மனம்போனபடி தூஷிக்கிறார். சைவர்களும், அத்வைதிகளும் இந்த மனப்பான்மையைக் கைவிடாத வரையில் நமது ஸுதர்சனர் பதில்கள் ஸுதர்சனத்திலும், கீதாசார்யனிலும் தொடரவே செய்யும். காமகோடியின் கைக்கூலியான 'அஹோ' வின் சில வாதங்களும், அவரைப் பின்பற்றி மற்றொரு 'வைணவர்'(!) ஆழ்வார்களையும், ஆசார்யர்களையும் நிந்திக்க முற்பட்ட கட்டுரைகளும் இந்த சதகத்தில் அடியறுக்கப்பட்டன.

தவறான விஷயங்களை வெளியிடுபவர்கள் வைஷ்ணவர்களேயாயிருந்தாலும், அவற்றையும் ஸுதர்சனர் பதில் வசவுமாலையில் இறங்காமல் அவர்கள் மறுக்கமுடியாதபடி நிரஸிக்கும் என்பதை இந்த சதகத்தின் பல கேள்விகளின் பதில்கள் காட்டுகின்றன. ஸுதர்சன விஜயம் இப்படியே தொடரவேண்டும் என்றும், அதற்கு இலக்கானவர்கள் திருந்தவேண்டும் என்றும் எம்பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீவைஷ்ணவ தாஸன்,

ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,

20—12—89 (ஸுதர்சனர்)

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸுதர்சனர் பதில் — பத்தாவது சதகம்

Dr R. ரங்கராஜன், மதுரை.
பேராசிரியர் R. ராஜகோபாலாச்சாரி, காரைக்கால்.
திருவேங்கடாசார்யர், ஸ்ரீரங்கம். மற்றும் பலர்.

1. 'தாய் வார இதழ் 20—4—86, 27—4—86, 4—5—86 இதழ்களில் 'ஞானச்சேரியில் மோனவேள்வி' என்ற கட்டுரைத் தொடரில் திருமால், சிவன், வடகலை, தென்கலை பற்றி ஏதேதோ பிதற்றப்பட்டிருக்கிறது. முன் இதழ்களிலும், பின் இதழ் களிலும் இப்பிதற்றல் வந்திருக்கிறது, வரப்போகிறது என்றும் விளங்குகிறது. இதனை விமர்சிக்கும்படி வேண்டுகிறோம்.

'ஞானச்சேரியில் மோனவேள்வி' என்னும் இக்கட்டுரைத் தொடரில் டிஸம்பர் 85 'தாய்' இதழில் மனம் போனபடி யெல்லாம் எழுதப்பட்டிருந்தது. 'ஸுதர்சனர் பதில்' எட்டாவது சதகம் 92 வது கேள்வியின் பதிலில் அதை விமர்சித்து அந்த சதகத்தை 'தாய்' ஆசிரியருக்கும் அனுப்பியிருக்கிறோம். 20—10—85 'தாய்' வாரஇதழில் ஆண்டாளைத்தாக்கி ஓர் கட்டுரை வெளியிடப்பட்டது. அதற்கு எட்டாவது சதகம் 89 வது கேள்வியின் பதிலில் தக்க மறுப்பு உரைத்திருக்கிறோம். இப்பொழுது தொடர்ந்து பல வாரங்களாக 'தாய்' பத்திரிகை வைஷ்ணவத்தைத் தாறுமாறாகத் தாக்கிவருகிறது என்பதைப் பல அன்பர்களிடமிருந்து கேள்விப்படுகிறோம். மட்டரகமான சோரம் போகும் கதைகளை வெளியிட்டே பிழைக்கும் 'தாய்' போன்ற பத்திரிகைகளை நாம் படிப்பதில்லை. இந்த 'ஞானச் சேரியில் மோனவேள்வி' என்னும் தலைப்பில் 20—4—86 முதல் மூன்று வாரம் தாய்' இதழ்களில் வெளிவந்திருப்பதை மாத்திரம் ஓர் அன்பர் நமக்கு அனுப்பியிருக்கிறார். அதிலுள்ள பொய் களுக்கும், புரட்டுக்களுக்கும் அளவேயில்லை. திருமாலைப் பற்றியும், வேதாந்ததேசிகரைப்பற்றியும், தென்கலை வடகலைப் பிரிவைப் பற்றியும் பல பிதற்றல்கள் இக்கட்டுரையில் உள்ளன. அவற்றில் சில பின்வருமாறு:—

http://acharya.org

"செல்வகுமாருக்கு உடலில் காமவேகம் தோன்றியது. உடனே சம்பத்குமார் சொல்லுவதைப் பாருங்கள். மனித சமுதாயமே, குதிரையும், கழுதையும் வலிமை மிக்க மிருகங்கள். இவைகளின் உணர்ச்சி வேகமும் மிக வலிமையானது. மேதையான ஓர் பிள்ளையைப் பெற்றெடுக்க, கடவுளைத்தானே வேண்டி நிற்கிறான், மனிதன்......என்று ஹயக்ரீவர் செல்வகுமாரைப் பார்த்து சிரித்தார். சாத்திரத்தால் ஒன்றும் முடியாது. அல்லது இப்போது உள்ள சாத்திரம். ஓர் சாத்திரம் அல்ல. அவைகள் அனைத்தும் இறைவனை உணராத ஆணவம்...... என்பதையும் தெரிந்துகொண்டான் செல்வகுமார். இருவரும் கோயிலைச்சுற்றி வந்து குதிரைமுகக் கடவுளை வணங்கினர். திருமாலின் இத்தோற்றத்தை...வடகலை ஐயங்கார்களே வணங்குகின்றனர். இந்த மூர்த்தியின் வடிவம், தென்கலைக் கோயில்களில் இல்லை. இந்த இடத்திலேயே மனிதன் ஆண்டவனை நினைக்கவில்லை. ஆணவத்தைச் சாத்திரமாகவே கொண்டு பிரிந்தனர், தென்கலை வைணவர்களில், அந்தணரும், அந்தணரல்லாதாரும் கலந்து வருகிறார்கள். இவ்வந்தணர்கள் சுத்தமான அந்தணர்கள் அல்ல...என்று, என்றே விளம்பினர் வடகலை வைணவர்கள். வடகலை வைணவர்கள் தங்களையே சுத்தமான அந்தணர்கள் என்று கருதி வருகின்றனர். தென் கலை வைணவர்களுக்கு ராமாநுஜர் குரு. வடகலை வைணவர்களுக்கு வேதாந்ததேசிகர் குரு. வடகலையார்...சைவர்களை அந்தணர்களாக ஒப்புக்கொள்வதில்லை அக்காலத்தில் [20-4-86 இதழ்]

"தென்கலைவைணவ அந்தணர்கள் ஆரியதிராவிடக்கலப்பு என்பது பழுதே என்றார் இவர் (வேதாந்ததேசிகர்). வடகலை வைணவர்களே ஆரியர்கள். திருமாலைத் தவிர இவர்கள் வேறு எக்கடவுளையும் கடவுளாக ஏற்பதில்லை எனப்பகர்ந்தார். நெற்றியில் இடும் வடகலை நாமத்தின் பேதம் தங்களது சுத்தத்தை எடுத்துக் காட்டும் என்பதே இவரது மனம். சிவத்தலமும் சிவதரிசனமும் வைணவர்களுக்கு ஆகாது என்றார். சிவனுறையும் வீடு சுடுகாடு என்றும், திருநீறு பிணத்தின் சாம்பல் என்பதால் ஆசாரத்திற்குப் பழுதானதே அது என்றனர் ஓர் சாரார். வேதாந்த தேசிகர் காஞ்சி வரதராஜனை நேராகப் பார்த்துப் பேசிய மிகப்பெரிய அடியார். வழிபாட்டில் வடமொழியே

http://acharya.org

முதலிடம் பெறவேண்டும் என்ருர். தேசிகர் தென்மொழிக்குப் பெரிய இடமில்லை எனக்கருதினர். கடவுள் தானே அருளியதால் தேசிகன் சொன்னதை எல்லாம் கேட்டுக்கொண்டே இருந்தார். தேசிகர் இறைவனின் அருளால் நாடெல்லாம் பக்திப்பிரசாரம் செய்து வந்தார். திருமாலே மெய்யான கடவுள் என்றும், சிவனை நிந்தனை செய்வதும் நியாயமே என்றனர் பலர். இவர் காலத்தில் அந்தணீயம் வலுத்தது. தென்கலை வடகலை சச்சரவுகள் பெருகின. நான்கு வேதங்களில் சிவனைப் பற்றிய பகுதிகளெல்லாம் மறைக்கப்பட்டன, அங்கெல்லாம் திருமாலின் பெயரை வைத்து மந்திரங்கள் மாற்றப்பட்டன. இப்படியே நடைமுறை மந்திர உச்சாடனங்களும் வைணவர்களுக்கு அனுபவத்திற்காக மாற்றி எழுதப்பட்டன. சாத்திரங்களும் மாறின. இக்காலத்தை கடவுட்துறையில் இருண்டகாலம் என்றே கடவுளும் எண்ணினன். யுத்தகாலத்தில் இருட்டடிப்பு. பிளாக் அவுட் என்று சொல்லி தெரு விளக்குகளில் பாதிவெளிச்சம் தெரியும்படியாக விளக்குகளில் தார்பூசுவது வழக்கம். இப்படிப்பட்டதே இது என்று காஞ்சி வரதராஜன் எண்ணினன். ஆழ்வார்களில்—அந்தணர்களையே இவர் ஏற்ருர். ஜாதியால்தாழ்ந்த திருப்பாணாழ்வாரை ஒதுக்கினர்; பிரசாரம் செய்யலானர். வேதாந்த தேசிகர் மீண்டும் தீவிரமானர். சிவனைக் கடவுளாக ஏற்காதீர் என்ருர். ஆதிசங்கரரின் ஆறுசமய ஒற்றுமையை வைணவம் ஏற்ககூடாது என்ருர். இதனல் இன்றும் பெருமாள் கோவிலில் சிவன், தேவி, முருகன், பிள்ளையார், பைரவர் போன்ற கடவுள்கள் இருக்காது. இவைகள் இந்துசமயம் அல்ல என்பதே இதன் கருத்து அன்று. வைணவம் தனிச்சமயமாகவே இருக்கும். ஆனல் சிவாலயத்தில் எல்லா உருவங்களையும் காணலாம். [27—4—86 இதழ்]

"கடைசியில்...தேசிகர் சங்கரரின் கொள்கைகளை மறுத்து... சைவத்தையும்...அத்வைதத்தையும் எதிர்த்தார். இதற்காக... ஆயிரம் முறை திட்டி இருக்கிருர். அப்படி அவர் திட்டி எழுதிய நூலுக்கு 'சததூஷணி' என்று பெயர். இத்தீவிரத்தைக் கண்டான் திருமால். தேசிகனின்முன் தோன்றினன். திருப்பாணாழ்வார் எனது பக்தன், அவனை நானே ஏற்றேன் என்ருன். 'கடவுளான எனக்கும் பறவைதான் வாகனம், பக்தனன பாணனுக்கு அந்தணனின் தோள்களே வாகனம்'—என்ருன் கடவுள்.

http://acharya.org

பக்தியில் ஆழ்ந்த தேசிகர் ஆழ்வாரை ஏற்ருர். அவர்மீது வட மொழியில் ஓர் நூலையும் செய்தார். "தேசிகனே...நீ சொல் வதை நானே கேட்டேன் என்பதால்...நாடும் நீ சொல்வதைக் கேட்கும். அதுவே சாத்திரம். அந்தச் சாத்திரமே கோயில் மணி. இன்று முதல் நீ அந்த மணியாக ஆவாய்' என்ருர்... காஞ்சி வரதராஜர். உடனே...சாத்திரப்புலியான வேதாந்த தேசிகர்...கோயில் மணியாளுர்.'' [4—5—86]

இந்தக்கட்டுரைத் தொடரை எழுதிவருபவர் சங்கரர், ராமாநுஜர், வேதாந்ததேசிகர் முதலானுர் இயற்றிய வடமொழி நூல்களிலும், சங்க நூல்கள் முதலான பண்டைத்தமிழ் இலக்கி யங்களிலும் அடியோடு அறிவற்றவர் என்பது அவர் எழுதி யிருக்கும் விஷயங்களிலிருந்தே தெளிவாக விளங்குகிறது. இதை நாம் சில மாதங்களுக்கு முன், ஸுதர்சனர் பதில் எட்டாவது சதகம் 92-வது கேள்வியின் பதிலில் சுருக்கமாகக் காட்டினேம். இப்பொழுது விரிவாக விளக்குகிறேம். வேதாந்ததேசிகரின் எந்த நூலையும் அடியோடு படிக்காத இவர், அவருடைய நூல்கள் யாவை என்பதுகூடத் தெரியாத இவர், அவரைப்பற்றியும் அவரது கருத்துக்களைப்பற்றியும் அவருடைய நூல்களுக்கு ஸம்பந்தமில்லாமல் ஏதேதோ எழுதி ஆகாயக் கூத்தாடுகிருர். "தென்கலை வைணவ அந்தணர்கள் ஆரியத் திராவிடக்கலப்பு என்பது பழுதே; வடகலை வைணவர்களே ஆரியர்கள்'' என்று வேதாந்ததேசிகர் கூறியதாகக் கதைக்கிருர் இவர். எந்தநூலில் அப்படிக் கூறினுர் என்றும் இவர் காட்ட வில்லை. உண்மையில் வேதாந்ததேசிகர் காலத்தில் வைணவ அந்தணர்களிடையே தென்கலை வடகலை என்னும் பிரிவே கிடையாது. பிரித்தாளும் சூழ்ச்சியாலே ஆங்கிலேயர்கள் ஒரு நூற்ருண்டுக்குள் கற்பித்த ஆரிய திராவிட இனப்பிரிவும் அக்காலத்தில் எவராலும் எந்த நூலிலும் ஏற்றுக் கொள்ளப் பட்டதில்லை. ஆக, வேதாந்ததேசிகர் இப்படிக் கூறியிருப் பதற்கு இடமே இல்லையாகையால் இந்த வாக்யம் பிரமாண் டப்புளுகு என்று தேறிற்று. தென்கலை வடகலைப் பிரிவு ஏற் பட்டகாலம் முதல் இன்று வரை தென்கலை, வடகலை என்னும் வேறுபாடில்லாமல் வைணவர்கள் அனைவருமே

http://acharya.org

திருமாலைத்தவிர வேறு எக்கடவுளையும் பரம்பொருளாக ஏற்ப தில்லை; மற்ற தெய்வங்களைத் தொழுவதுமில்லை ஏன்? அதற்கு முன்னமே ஆழ்வார்கள் காலத்திலிருந்தே வைணவர்கள் அனைவர்க்கும் பொதுவான கொள்கையிது. இப்படியிருக்க, வேதாந்ததேசிகர் புதிதாகக் கிளப்பிவிட்ட கொள்கையாக இதை இவர் எழுதுவது வைணவநூல் எதிலுமே இவர்க்கு அடியோடு அறிவில்லை என்று காட்டுகிறது. காஞ்சி வரத ராஜனை நேராகப் பார்த்துப்பேசியவர் திருக்கச்சிநம்பி ஒருவரே என்பது வைணவ நூல்கள் பலவற்றிலும் காணக்கிடக்கிறது. தேசிகருக்கு அந்தப்பெருமையை ஏற்றிக் கதைகட்டுவது இவருக்கு வைணவநூல்களில் அறிவில்லை என்பதை உறுதிப் படுத்துகின்றது. "நான்கு வேதங்களில் சிவனைப் பற்றிய பகுதி களெல்லாம் மறைக்கப்பட்டன. அங்கெல்லாம் திருமாலின் பெயரைவைத்து மந்திரங்கள் மாற்றப்பட்டன......... சாத்தி ரங்களும் மாறின" என்று தொடங்கிப் பிதற்றுகிறார் இவர். எந்த இடத்தில் இப்படி மாற்றப்பட்டது என்பதற்கு ஒரு சான்றுகூடக் காட்டவில்லை. அப்படி வைணவர்கள் வேத மந்திரங்களை மாற்றியதாக இதுவரை வேதமறிந்த எவரும் கூறியதேயில்லை. தாய்ப் பத்திரிகையை மிக்க ஆர்வத்துடன் வாசிப்பவர்களில் ஒருவரான (ஒரு தாய் இதழ் அட்டையிலேயே வாசிக்கும் படம் வந்துள்ளது) காமகோடி பீடாதிபதியின் முன்னோர்களான அத்வைதிகளாலேயே விஷ்ணுபரத்வத்தைக் காட்டும் பல வேதவாக்யங்கள் மாற்றப்பட்டுள்ளன என்ப தற்கு நாம் விஷ்ணுசித்தவிஜயத்திலும் மற்ற பல கட்டுரை களிலும் பல சான்றுகள் காட்டியிருக்கிறோம். "ஆழ்வார்களில் அந்தணர்களையே வேதாந்ததேசிகர் ஏற்றார். ஜாதியில் தாழ்ந்த திருப்பாணாழ்வாரை ஒதுக்கினார்" என்று இவர் எழுதியிருப்பது வேதாந்ததேசிகர் நூல்களையே அறியாதவரிவர் எனக் காட்டு கிறது. வேதாந்ததேசிகர் அந்தணரல்லாதாருள்ளிட்ட எல்லா ஆழ்வார்களைப் பற்றியும் தென்மொழியிலும் வடமொழியிலும் பல பாடல்களில் போற்றியுள்ளார். பல நூல்களில் பாராட்டி யுள்ளார். குறிப்பாகத் திருப்பாணாழ்வாரை "நம்பாணநாதன்" என்று பாடியுள்ளார். இதிலிருந்து திருப்பாணாழ்வாரைத் தம் திருவாராதனத்தில் வைத்துக்கொண்டிருந்தார் என விளங்கு

http://acharya.org

கிறது என்று பல பெரியோர்கள் கூறுவர். நாலாயிர திவ்யப் பிரபந்தங்களுக்குள்ளும் திருப்பாணாழ்வார் அருளிய 'அமலனாதி பிரான்' என்னும் ஒரு திவ்யப்பிரபந்தத்துக்கே வேதாந்த தேசிகர் 'முனிவாஹனபோகம்' என்னும் தலைப்பில் வ்யாக்யானம் அருளியுள்ளார். இத்தகைய வேதாந்ததேசிகரை 'திருப்பாணாழ்வாரை ஒதுக்கினார்' என்று எழுதுவது பெரிய மோசடியாகும். கடைசி இதழில் இவர் கதைப்பதுபோல் தேசிகன் திருப்பாணாழ்வார்மீது எந்த வடமொழி நூலையும் இயற்றவில்லை. மற்ற ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்கள் ஆழ்வார்களுக்கு ஜாதி போய்விடும் என்று கருதினார்கள். வேதாந்த தேசிகர் ஆழ்வாரானாலும் ஜாதி போகாது என்று கருதினார். இவ்வண்ணமாக மற்ற பூர்வாசார்யர்களோடு வேதாந்த தேசிகருக்குப் பல கருத்து வேற்றுமைகள் இருந்தன. அவை பூர்வாசார்யர்களுக்குப் பிற்காலத்தில் வைஷ்ணவர்களிடையே வடகலைப் பிரிவு ஏற்படுவதற்குக் காரணமாயமைந்தன, சுமார் அறுநூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த மணவாளமாமுனிகள் காலம் வரையில் வைஷ்ணவர்களிடையே இப்போது காண்பது போல் வடகலை, தென்கலை என்னும் பிரிவு இருந்ததற்கு எந்த நூலிலும் எந்த ஆதாரமும் கிடையாது. ஆதிசங்கரர் ஆறு சமயங்களை ஸ்தாபித்தார் என்பது பிரம்மாண்டப் புளுகுகளில் ஒன்று என்று நாம் "சங்கரரும் வைணவமும்" என்ற நூலில் அசைக்கமுடியாதபடி நிலைநாட்டியிருக்கிறோம். பொய்யைப் பலமுறை கூறுவதால் அது உண்மையாகிவிடாது.

ஹயக்ரீவர் என்னும் குதிரைமுகக் கடவுளின் வடிவம் தென்கலைக் கோயிலில் இல்லை என்றும் இதை வடகலை ஐயங்கார்களே வணங்குகின்றனர் என்றும் இவர் கதைப்பது விலா வறச் சிரிக்கத்தக்கது. ஸ்ரீரங்கம் முதலிய பல தென்கலைக் கோயில்களில் ஹயக்ரீவர் எழுந்தருளியிருப்பதையும், அவரைத் தென்கலை வைணவர் அனைவரும் வணங்குவதையும் இவர் அறியாமல் உளருகிறாரா அல்லது கூசாமல் பொய் கூறுகிறாரா என்பதை இவரைக் கூண்டிலேற்றி விசாரித்தால்தான் புரியும். வடகலை வைணவர்களுக்கு ராமாநுஜர் குருவல்லர் என்று பொருள்படும்படி எழுதியிருப்பதும் இத்தகையதே. சததூஷணி என்னும் நூலில் உள்ள சதம் என்னும் பதம் நூறு என்னும்

http://acharya.org

எண்ணைக் குறிக்கிறது என்பது வடமொழியறியாத தமிழர்களுக்கும் புரியும். இவருக்கு அதுகூடப் புரியாமல் ஆயிரம் என்று அப்பதத்திற்குப் பொருள்கொண்டிருப்பது இவர் எந்த மொழியிலும் நல்ல அறிவில்லாதவர் என்பதையே வலியுறுத்துகிறது. 20—4—86 இதழில் குதிரை கழுதைகளின் காம வேகத்தைப் பற்றி எழுதியிருப்பதிலிருந்து இவருக்கு இத்தகைய விஷயங்களை எழுதுவதிலேயே வேகம் அதிகம் என விளங்குகிறது. இத்தகையவரைக்கொண்டு காமக்களியாட்டக் கதைகளை எழுதச் சொல்லியிருந்தால் ''தாய்'' வாசகர்களுக்கு நல்ல விருந்து படைத்திருப்பார். இனியாவது இவரைக் கொண்டு இத்தகைய அபத்தக் கட்டுரைகளை எழுதச்செய்யாமல் காமக்களியாட்டக் கதைகளையும், கட்டுரைகளையும் எழுதச் செய்து 'தாய்' தன் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ளுமாக!

இந்தக் கட்டுரையில் பொருளற்ற மற்றும் பல வாக்கியங்கள் உள்ளன. ''ஞானிகளின் சொற்பொழிவுநதி'' என்று இக்கட்டுரைக்குத் தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. உண்மையில் ''அஞ்ஞானிகளின் பிதற்றல் சாக்கடை' என்பதே இதற்குப் பொருத்தமான தலைப்பாகும். 92வது கேள்வியின் பதிலில் இவருக்கு 'அக்கிலி பிக்கிலி' என்று நாம் கொடுத்த பட்டம் இக்கட்டுரையாலும் உறுதியாகிறது இத்தகைய கட்டுரைகளைக் கண்டிக்க வேண்டிய பொறுப்புள்ள ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவும், ஸ்ரீரங்கநாதபாதுகாவும் யாருடைய தாக்ஷிண்யத்துக்காகக் கண்டிக்காமல் இருக்கின்றன என்பதை அப்பத்திரிகைகளின் வாசகர்கள் அவற்றின் நிர்வாகிகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம் ஒவ்வொரு இதழிலும் தன் புகைப்படத்தை வெளியிட்டுக்கொள்ளும் இவர், தன் ஊரையும், பெயரையும் வெளியிட்டுக்கொள்ளாமல் அநாமதேயப் பேர்வழியாயிருப்பதும், எந்த 'ஞானி'களின் சொற்பொழிவு நதி என்று வெளியிடாமலிருப்பதும், இவருடையவும் அந்த 'ஞானி'களுடையவும் சாயும் வெளுத்துவிடும் என்னும் பயத்தாலேயே என்பது தெளிவு. மொத்தத்தில் இக்கட்டுரைத் தொடர் சிறிதும் சகிப்புத் தன்மையில்லாமல் விஷ்ணு வைஷ்ணவ த்வேஷ ப்ரசாரம் செய்யவேண்டும் என்னும் கெட்ட எண்ணத்

தோடு சில வைஷ்ணவ விரோதிகளால் எழுதப்படுகிறது என்பது வெளிப்படை.

மேஜர் தாசன், ஈரோடு, திருவாலி ஸ்ரீநிவாஸன்,
V. ஸ்ரீதரன், மதுரை. மற்றும் பலர்.

2. 3—4—86 "குமுதம்' வார இதழில்" தேவகார்யங்களின் போது வலமாகவும், பித்ருகார்யங்களின்போது இடமாகவும், ஆபீஸ் போவது முதலான மற்ற லௌகிககார்யங்களின்போது மாலையாகவும் அந்தணர்கள் பூணூலை அணிந்துகொள்ளவேண்டும்" என்று காமகோடிப் பெரியவர் எழுதியிருப்பதாக ஓர் செய்தி வந்துள்ளது. இது உண்மையா?

ஆசார சீலர்களின் அனுஷ்டானம் மாலையாகப் போட்டுக்கொள்ளும் விஷயத்தில் வேறுபடுகிறது. இது விஷயமாக சாஸ்திர வசனங்களை விளக்கும்படி தர்மசாஸ்த்ர வித்தமரான ஸ்ரீ உ. வே. மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியைப் பிரார்த்தித்திருந்தோம். அந்த ஸ்வாமி எழுதிய பதிலின் ஸாரமாவது:— "'நிவீதம் மநுஷ்யாணும், ப்ராசீநாவீதம் பித்ருணும், உபவீதம் தேவாநாம்' [தேவகார்யத்தில் வலமாகவும், பித்ருகார்யத்தில் இடமாகவும், மநுஷ்யகார்யத்தில் மாலையாகவும் பூணூலை அணிந்துகொள்ளவேண்டும்] என்று ஶ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. மநுஷ்யகார்யமாவது—தேவர்ஷிபித்ரு தர்ப்பணங்களுக்குள் ருஷிதர்ப்பணம், வஸ்த்ரநிஷ்பீடநம் இவைகள். இவைகளில் பூணூலை மாலையாகப் போட்டுக்கொள்ளவேண்டும். மலமூத்ர உத்ஸர்ஜனத்தின்போது மாலையாகப் போட்டுக்கொண்டு பூணூலை வலது காதில் சுற்றிக்கொள்ளவேண்டும். மற்ற ஸாதாரண காலங்களில் "ஸதோபவீதிநா பாவ்யம்" [எப்போதும் பூணூலை வலமாகவே போட்டுக்கொள்ளவேண்டும்] என்னும் ஸாமாந்ய வசனப்படி பூணூலை வலமாகவே போட்டுக்கொள்ளவேண்டும். தர்மசாஸ்த்ர வசனங்களும், எல்லா ப்ராஹ்மண சிஷ்டர்களின் அநுஷ்டாநமும் இப்படியே உள்ளது" என்பது. காமகோடி பீடாதிபதி எந்த சாஸ்திரத்தைக் கொண்டு அப்படிச் சொன்னார் என்று யாராவது அவரை விசாரித்துத் தெரிவித்தால் அதையும் வெளியிடுவோம். தெரிவிக்காத வரையில் இதுவரையுள்ள (பொதுவாகப் பூணூலைவலமாக அணிந்துகொள்ளும்) அநுஷ்டாநமே கடைப்பிடிக்கத்தக்கது.

http://acharya.org

S முரளி. அந்தணல்லூர்

3. ஸுதர்சனர் பதில் பத்தாவது சதகம் முதல் கேள்வியின் பதிலில் 'தாய்' பத்திரிகை செய்துவரும் அக்கிரமத்தைக் கண்டிக்கும்போது ' இத்தகைய கட்டுரைகளைக் கண்டிக்கவேண்டிய பொறுப்புள்ள 'ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா'வும் 'ஸ்ரீரங்கநாதபாதுகா'வும் யாருடைய தாக்ஷிண்யத்துக்காகக் கண்டிக்காமலிருக்கின்றனர்?'' என்னும் கேள்வியை எழுப்பியிருந்தீர்கள். இரண்டு மாதம் கழித்து 'ஸ்ரீரங்கநாதபாதுகா' ஜுலை இதழில் 'தாய்' பத்திரிகையின் அக்கிரமத்தைக் கண்டித்த பாதுகா ஆசிரியர் அக்கண்டனத்தின் கடைசிப் பாராவில் தாங்கள் எழுதியிருப்பதற்கும் மறுப்புத் தெரிவித்திருக்கிறார், அதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

25—6—83-இல் நமது வைகாசிமாதப் பத்திரிகையில் கண்டனம் வருவதற்கு ஒருவாரம் முன்பே நம் கண்டனத்தின் ஒரு பிரதியை அனுப்பி, பாதுகாவில் விரைவில் இதுபற்றிக் கண்டித்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று 'பாதுகா'ஆசிரியரைக் கேட்டுக்கொண்டிருந்தோம். ''யாருடைய தாக்ஷிண்யத்துக்காக'' இத்யாதிகளை நாம் எழுதியிருப்பது இத்தகைய விஷயங்களில் பல வருஷங்களாக மெத்தனமாக இருக்கும் 'ப்ரியா'வையும் 'பாதுகா'வையும் இப்போதாவது கண்டிக்கும்படி செய்வதற்கே என்று பாதுகா ஆசிரியரிடமும் தெரிவிக்கச் செய்திருந்தோம். இரண்டுமாதங்கள் கழித்தாவது 'பாதுகா'வில் கண்டனம் வெளிவந்தது பற்றி மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால், கண்டனத்தின் கடைசிப் பாராவில் எழுதியிருப்பது சிறிதும் பொருந்தாது என்பதை நம்மிடம் பரமானுக்ரஹமுடைய ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமிக்காகவே இவ்விளக்கத்தின்மூலம் விண்ணப்பிக்கிறோம்.

''ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்தை மோனவேள்விக்காரரால் அழிக்கவோ அசைக்கவோ முடியாது என்பதை உலகம் அறியும். இதுநாள்வரை இதற்கு மறுப்பு எழுதாததற்கு இதுவே காரணமேயொழிய தாக்ஷிண்யமல்ல'' என்று பாதுகா ஆசிரியர் எழுதியுள்ளார். 'இத்தகைய கட்டுரைகளை'' என்னும் தொடரால் நாம் ''தாய்'' பத்திரிகையை மாத்திரம் குறிப்பதாகக்கொண்டு ''மோனவேள்விக்காரரால்'' இத்யாதிகளைப் பாதுகா ஆசிரியர் எழுதுகிறார். ஏப்ரல் மாதம் தாய் இதழ்களில் வெளிவந்த விஷயங்கள் பாதுகா ஆசிரியரின் பார்வைக்கு வந்திராது என்னும் விஷயம் கண்டனத்தை எழுதும்போது நமக்கு நன்றாகத்

http://acharya.org

தெரியும். ஆகையால் "இத்தகைய கட்டுரைகள்' என்னும் தொடரால் நாம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக "கல்கி', "கலைமகள்", "விகடன்', "ஞானபூமி' முதலான லக்ஷக்கணக்கானவர்கள் படிக்கும் பத்திரிகைகளில் காமகோடி சங்கராசார்யர், அக்னிஹோத்ரி, ராஜாஜி, வாரியார் போன்ற புகழ் பெற்ற பிரமுகர்கள் விஷ்ணுவையும் வைஷ்ணவத்தையும் தாக்கி எழுதுவதையும், ஆழ்வார்கள் பாசுரங்களுக்கு அவப்பொருள் கூறுவதையும் முக்கிய நோக்காகக் கொண்டு எழுதிவரும் கட்டுரைகளையே குறித்தோம் என்பது வெளிப்படை. இப்படிக் கால்நூற்றுண்டுக்குமேல் பொதுஜனப் பத்திரிகைகள் செய்துவரும் துஷ்பிரசாரத்தினுல் ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமி சிஷ்யர்கள், ஸ்ரீமதஹோபிலமடத்துச் சிஷ்யர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான ஸ்ரீவைஷ்ணவர்கள் தென்கலை வடகலை என்னும் வாசியில்லாமல் வைஷ்ணவ லக்ஷணமான மறந்தும் புறந் தொழாமையையிழந்து சமரசவாதிகளாக மாறிவிட்டார்கள் என்பது உலகமறிந்த விஷயம். இந்தப் பொதுஜனப் பத்திரிகைகளின் துஷ்பிரசாரத்தை ஸுதர்சனம் ஒன்றே கடந்த கால் நூற்றுண்டுக்கு மேலாகக் கண்டித்துவருகிறது. ப்ரியாவும், பாதுகையும் இக்கடமையைச் செய்வதில்லை. வைஷ்ணவத்ரோஹியான அக்னிஹோத்ரி கலியுக சிசுபாலரோடு சேர்ந்து கொண்டு பெருமாளையும், பிராட்டியையும், ஆழ்வார்களையும், ஆசார்யர்களையும் வாய்க்குவந்தபடியெல்லாம் வைது எழுதியிருக்கும் புத்தகத்தைத் திருமோகூரில் நடந்த வைஷ்ணவ மகாநாட்டின் போது பாதுகா ஆசிரியரிடம் கொடுத்து 'இதை அவச்யம் கண்டிக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டிருந் தோம். இன்றுவரை பாதுகையில் எந்தக் கண்டனமும் வரவில்லை. (புத்தகமும் திரும்பி வரவில்லை)'மோனவேள்விக்காரரால் வைஷ்ணவத்தை அசைக்கமுடியாது' என்று எழுதியிருப்பது கடந்த கால்நூற்றுண்டாகப் பொதுஜனப்பத்திரிகைகளில் வெளி வந்திருக்கும் எல்லாக்கட்டுரைகளுக்கும், இனிவரப்போகும் நூற்றுக்கணக்கான கட்டுரைகளுக்கும், கலியுகசிசுபாலரும், அக்னிஹோத்ரியும் சேர்ந்து எழுதியிருக்கும் புத்தகங்களுக்கும் பொருந்துமா?

கடைசிப்பாராவின் அடுத்த வாக்யத்தில் "இந்த ந்யாயத்தை எப்போதும் கடைபிடித்தால் நன்ருக இருக்கும். ஸ்வாமி தேசிகனைப்பற்றி 3 வருடங்களுக்கு முன்பு இதேபோல் எழுதியவர்கள் இப்போதாவது ஸ்வாமி தேசிகனைப்பற்றி ஸ்தோத்திரம் செய்வதை மனமாரப்பாராட்டுகிருேம்'' என்று எழுதியிருப்பதுபற்றி ஆராய்வோம் இனி. "இதேபோல் எழுதியவர்

http://acharya.org

கள்'' என்பதற்கு ''மோனவேள்விக்காரரைப்போல் எழுதியவர்கள்'' என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். மோனவேள்விக்காரரைப்போல் தேசிகனைப்பற்றி நாம் என்றுமே பொய்யையும் புளுகையும் எழுதினதேயில்லை. இருந்தால் அடுத்த பாதுகாவில் எடுத்துக்காட்டலாம். ''இப்போதாவது ஸ்வாமி தேசிகனைப்பற்றி ஸ்தோத்திரம் செய்வதை'' என்று இக்கட்டுரையில் குறிப்பதால் முந்தின வாக்யத்தில் கருதப்பட்ட நர்மையே இவ்வாக்யமும் விஷயமாகக் கொண்டது என்று விளங்குகிறது. ''3 வருடங்களுக்கு முன்பு'' என்னும் தொடரிலிருந்து இவர் எதை நெஞ்சில் கொண்டு இப்படி எழுதுகிறார் என்பதை ஒருவாறு ஊகிக்கமுடிகிறது. மூன்று வருடங்களுக்கு முன்பு ருதிரோத்காரி ஆடி மாதத்தில் ஸுதர்சனத்திலும் உபயவேதாந்த ஆசார்யபீட பத்திரிகையிலும், அப்போது சிலநாட்களுக்கு முன் பரமபதமடைந்த ஸ்ரீ காஞ்சி மஹாவித்வான் அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் நினைவு மலர் ஒன்று இணைந்து வெளியிடப்பட்டது. அதில் ஸுதர்சனம் ஆசிரியரான நாமும், ஆசார்ய பீடபத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீ உ.வே. சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியும் கட்டுரைகள் எழுதியிருந்தோம். நம்முடைய கட்டுரைகளில் தேசிகனைப் பற்றி எதுவுமே எழுதவில்லை. ஸ்ரீ உ. வே. சதாபிஷேகம் ஸ்வாமி தேசிகனைப் பற்றிப் பின்வருமாறு எழுதியிருந்தார்:—

''நம் ஸ்வாமியால் ஏற்பட்ட மஹோபகாரம் ஒன்றுண்டு. அதனை விவரிக்கிறேன்:—

''காஞ்சியில் ''திருத்தண்கா'' என்னும் திவ்யதேசத்தில் வேதாந்த தேசிகன் அவதரித்தார். அவர் ஸகல சாஸ்த்ரங்களையும் கற்றறிந்தவர். கவிகேஸரி. தார்க்கிககேஸரி, வேதாந்தாசார்யர் என்னும் பிருதங்களைப் பெற்றுத் திகழ்ந்தவர். அவர் நூறு க்ரந்தங்களுக்குமேல் ஸாதித்துள்ளார். அவர் ஸாதித்த ரஹஸ்யத்ரயஸாரம் முதலான தமிழிலான ரஹஸ்ய க்ரந்தங்களை ஆராயும்போது நாதமுனிகள் தொடங்கி மாமுனிகளளவும் வந்த நாலாயிர திவ்யப்ரபந்த ப்ரதானமான தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்துக்கு மாறுபட்ட சில அர்த்தங்கள் காணப்படுகின்றன ஆகவே, 'வேதாந்ததேசிகனின் உபகாரம் ஸம்ஸ்க்ருத வேதாந்த பாகத்துக்கே தவிர, த்ராவிட வேதாந்த பாகத்துக்கன்று. அவருக்கு ஆழ்வார்களிடத்தும், அருளிச்செயலிடத்தும் விசேஷ ப்ரதிபத்தி கிடையாது; அவர் தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்துக்கு உபகாரகரல்லாமையாலே தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தவர்கள் அவரை ஆதரிக்கவேண்டிய நிர்ப்பந்தமில்லை'' என்று ஓர் அபிப்ராயம் ஏற்பட்டிருந்தது. நம் ஸ்வாமி அவ்வபிப்ராயத்தை மாற்றி, தேசிகன் ரஹஸ்யத்ரய ஸாராதிகளில் தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்துடன் மாறுபட்ட அபிப்ராயங்கொண்டிருந்தபோதிலும். அவர் செய்தருளின அமலனாதிபிரான்

http://acharya.org

வ்யாக்யானமான முனிவாஹன போகத்தைக்கொண்டும், குறிப்பாக, 'தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே' என்றதைக்கொண்டும், அவர் அருளிய ஸ்தோத்ர க்ரந்தங்களை அநுபவிக்கும்போதும் அவரும் தென்னாசார்ய ஸம்ப்ரதாய பரம்பரையையே சேர்ந்தவர் எனக் கொள்ளவேணும் எனப் பற்பல க்ரந்தங்களால் பரக்க நிருபித்துள்ளார். இப்படி நம் ஸ்வாமி நிருபிக்கக் காரணம் — நம் ஸ்வாமியின் கூடஸ்தரான, ஒன்றான ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா தேசிகனின் ஸம்பந்தத்தை ஸாக்ஷாத்தாகவோ, தேசிகன் குமாரர் மூலமோ பெற்றிருந்தமையேயாம்.''

இதில் ஸ்ரீ உ. வே. சதாபிஷேகம் ஸ்வாமி மோனவேள்விக்காரரைப்போல் ஓர் அக்ஷரங்கூட எழுதவில்லை என்பதை நடுநிலையாளர்கள் தெளிவாகக் கண்டுகொள்ளலாம். உண்மையில் தேசிகனுடைய பெருமைகளையெல்லாம் எழுதி அந்த ஸ்வாமி அவரை மனமாரப் பாராட்டியிருக்கிறார். ''ரஹஸ்யத்ரய ஸாரம்'' முதலான ரஹஸ்யக்ரந்தங்களில் நாலாயிரதிவ்யப்ரபந்த ப்ரதானமான தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்துக்கு மாறுபட்ட சில அர்த்தங்கள் காணப்படுகின்றன'' என்றும் எழுதியிருக்கிறார். இக்காரணத்தாலே தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களிடையே சிலர் 'அவரை ஆதரிக்கவேண்டிய நிர்ப்பந்தமில்லை' என்று கருத்துக்கொண்டிருந்ததாகவும், அந்தக் கருத்தைமாற்றி, ''ஸ்ரீதேசிகனும் தென்னாசார்ய ஸம்ப்ரதாய பரம்பரையைச் சேர்ந்தவர் எனக் கொள்ளவேண்டும் எனப் பற்பல கிரந்தங்களால் அண்ணாஸ்வாமி பரக்க நிருபித்துள்ளார்'' என்றும் எழுதியிருக்கிறார் சதாபிஷேகம் ஸ்வாமி. இதில் எந்த விஷயமும் மோனவேள்விக்காரரைப்போல் எழுதப்படவில்லை. எந்த அபிப்ராயத்தையும் அந்த ஸ்வாமி இப்போது மாற்றிக்கொள்ளவுமில்லை. அதற்கு அவசியமுமில்லை. இவ்விளக்கம் போதுமானது என நினைக்கிறோம்.

அண்ணாவியார் ஸ்ரீநிவாஸன், ஆழ்வார்திருநகரி.

4. 13—7—86 'தாய்' இதழில், அதன் ஆசிரியர் திரு. வலம்புரிஜான் 'பைரவி பதில்' பகுதியில் தங்களைத் தாக்கி எழுதியுள்ளார். இதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

''பைரவி பதிலின் பிதற்றல்'' என்னும் இம்மாதத் தலையங்கத்தில் இது விரிவாக விமர்சிக்கப்பட்டு வலம்புரிஜானைக் குறித்துச் சில கேள்விகளும் கேட்கப்பட்டுள்ளன. ஆனிமாத ஸுதர்சனத்தில் 'வலம்புரிஜானின் விதண்டாவாதம்' என்னும் தலைப்பில் வெளிவந்த தலையங்கமும் இந்த ஆடிமாதத் தலையங்கமும் ஸுதர்சனர் பதில் பத்தாவது சதகத்துக்கு அநுபந்தமாக இணைக்கப்படுகின்றன.

http://acharya.org

(பின்வரும் இரண்டு கேள்விகளும் 2—9—86 அன்று ஸ்ரீரங்கம் தசாவதார ஸந்நிதியில் நடைபெற்ற 'மாலோல வித்வத் ஸதஸ்'ஸில் ஸுதர்சனர் கலந்து கொண்டபோது லோகோபகாரார்த்தமாக ஸ்ரீமதழகியசிங்கரால் ஸுதர்சனரிடம் கேட்கப்பட்டவை. ஸதஸ்ஸில் அவகாசமில்லாமையால் சுருக்கமாக பதில் அளிக்கப்பட்டது. இங்கு விரிவாக பதில் கூறப்படுகிறது.)

5. ''அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யு: விஶோக: விஜிக₄த்ஸ: அபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:'' என்னும் வேத₃ வாக்யத்தில் கு₃ணாஷ்டகம் (எட்டு கு₃ணங்கள்) கூறப்படுவதாகப் பூர்வாசார்யர்கள் கூறுகிறார்கள். இவற்றில் முதல் ஆறும் ப்ராக்ருத கு₃ணங்களின் இன்மையைக் கூறுகிறதேயொழிய, குறிப்பிட்ட கு₃ணத்தைக் கூறவில்லையே. ''ஸத்யகாம: ஸத்ய ஸங்கல்ப:'' என்னும் இரண்டுதானே கு₃ணங்களைக் கூறுகிறது. அப்படியிருக்க, கு₃ணாஷ்டகம் என்று அனைத்தையும் கு₃ணங் களாகக் கூறுவது எப்படிப் பொருந்தும் ?

நையாயிகர்களைப்போலே அபா₄வம் (இன்மை) என்னும் ஒரு தனிப்பொருளை நம் ஸித்₃தா₄ந்தத்தில் ஒப்புக்கொள்வதில்லை. எந்த அபா₄வமும் ஒரு பா₄வபதா₃ர்த்த₂த்தையே (உள்ளதொரு பொருளையே) குறித்து நிற்கும் என்பது நம் பூர்வாசார்யர்கள் கண்ட முடிவு. ''பூ₄தலே க₄டோ நாஸ்தி'' [தரையில் குடம் இல்லை] என்று வழங்கும்போது தரையில் க₄டாபா₄வம் என்னும் ஒரு பொருள் இருப்பதாக நையாயிகன் ஒப்புக் கொள்கிறான். க₄டாபா₄வமென்பது பூ₄தலமாகிற தரையைத் தவிர வேறொன்றில்லை என்பது நமது மதம். அந்த ரீதியில் கு₃ணாஷ்டகத்தில் முதலில் படிக்கப்படும் அபஹதபாப்மத்வம் என்னும் பாபமின்மை கு₃ணஸத்₃பா₄வத்தையே குறிக்கும். இரண்டாவதான 'விஜர:' என்னும் கிழத்தனமின்மை யௌவன மாகிற கு₃ணத்தையே குறிக்கும். மூன்றாவதான 'விம்ருத்யு:' என்னும் மரணமின்மை நித்யத்வமாகிற கு₃ணத்தையே குறிக்கும். நாலாவதான 'விஶோக:' என்னும் வருத்தமின்மை ஆனந்த₃மாகிற கு₃ணத்தையே குறிக்கும். ஐந்தாவதான 'விஜிக₄த்ஸ:' என்னும் பத₃த்தால் குறிக்கப்படும் பசியின்மையும், ஆறாவதான 'அபிபாஸ:' என்னும் பத₃த்தால் குறிக்கப்படும் தாக

http://acharya.org

யின்மையும், அப்ராக்ருதத்வமாகிற கு₃ணத்தில் அடங்கிய இரு அவாந்தர கு₃ணங்களைக் குறிக்கும். ஆக, எந்த அப₄ாவமும் ஒரு ப₄ாவப்பொருளையே குறிக்கும் என்று கொள்ளும் ப₄ாவாந்தரா ப₄ாவவாதி₃களான நமது மதத்தில் இந்த வேத₃வாக்யத்தில் சொல்லப்படும் எட்டையும் கு₃ணாஷ்டகம் என்று கூறத் தட்டில்லை.

6. நம்முடைய ஸித்₃தா₄ந்தத்தில் ஸூக்ஷ்ம சேதநாசேதந விசிஷ்டப்₃ரஹ்மத்திற்கே ஜக₃த்காரணத்வம் ஒப்புக்கொள்ளப் படுகிறது. அப்ராக்ருதமான பரமபத₃த்தில் ப்ராக்ருதமான ஸூக்ஷ்ம சேதநாசேதநங்கள் புகுவது இயலாது. ஆகையால் ஸூக்ஷ்ம சேதநாசேதந விசிஷ்டப்₃ரஹ்மத்துக்கு ஜக₃த்கார ணத்வமுண்டேயொழிய பரரூப தி₃வ்யமங்க₃ள விக்₃ரஹ விசிஷ் டனான பரமபத₃நாத₂னுக்கு ஜக₃த்காரணத்வம் இல்லை என்று விளங்குகிறது. இது பற்றி உமது கருத்து என்ன ?

பரரூப தி₃வ்யமங்க₃ளவிக்₃ரஹவிசிஷ்டனான பரமபத₃ நாத₂னுக்கே ஜக₃த்காரணத்வமுண்டு. ப்ராக்ருதத்₃ரவ்யம் அப்ராக்ருத தேசத்தில் புக இயலாது என்று கூறுவது பொருந் தாது. வைதிகன் பிள்ளைகள் பரமபத₃த்துக்குச் சென்று வந்ததாக ஆழ்வார்களும் பூர்வாசார்யர்களும் அருளியுள்ளார் கள். அப்ராக்ருத தி₃வ்யமங்க₃ளவிக்₃ரஹத்தோடு ப்ராக்ருத மான இவ்லீலாவிபூ₄தியில் எம்பெருமான் அவதரிப்பதாலும் ப்ராக்ருதாப்ராக்ருதஸம்யோக₃ம் ஏற்படமுடியாது என்று கூறுவது பொருந்தாது என விளங்குகிறது. ஸுபா₄லோப நிஷத்தில் "*தம: பரே தே₃வே ஏகீப₄வதி*" (தமஸ் என்னும் மூலப்ரக்ருதியின் நிலை பரவாஸுதே₃வனிடம் ஒன்றுகிறது) என்று பரமபத₃நாத₂னே தமஸ் சென்று சேருமிடமான லயஸ்தா₂னம் என்று தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது. அடுத்த வாக்யத்தில் இது மேலும் தெளிவாக்கப்பட்டது. "*பரஸ்தாந்நஸந்நாஸந்ந ஸத₃ஸதி₃தி*" [இந்தத் தமஸ்ஸுக்கு மேலே—கார்ய நிலையிலுள்ள ஜீவாத்மாக்களைக் காட்டிலும் வேறுபட்டதாய், கார்ய நிலையிலுள்ள அசேதனங்களைக் காட்டி லும் வேறுபட்டதாய், கார்ய நிலையிலுள்ள இரண்டும் சேர்ந்த உலகத்தைக் காட்டிலும் வேறுபட்டதாயுள்ள (பரதெய்வ

http://acharya.org

மாகிற) தத்துவமுள்ளது] என்பது அவ்வாக்யம். இவ்வாக்யத்தின் கருத்தை விளக்கும்போது ஶ்ருதப்ரகாஶிகாசார்யர்— ''பர ஶப்₃த₃ ஊர்த்₄வதே₃ஶபர:......தமஸ ஊர்த்₄வதே₃ஶே இத்யர்த்த₂: ஸத₃ஸச்ச₂ப்₃தௌ₃ கார்யாவஸ்த₂சேதநாசேதநபரௌ I ... தமஸ உபரிப₄ாகே₃ கார்யாவஸ்த₂சித₃சித₃ாத்மகோப₄யாத்மக ஜக₃த்₃விலக்ஷணம் தத்த்வமித்யர்த்த₂:...அத: ப்ரக்ருதிப்ராக்ருத ஸமஸ்தவஸ்து விலக்ஷணம் கிமபி தத்த்வம் விவக்ஷிதம்; தச்ச கிமித்யபேக்ஷாயாம் 'ஆதி₃த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்' 'தத₃க்ஷரே பரமே வ்யோமந்' 'விஶ்வம் புராணம் தமஸ: பரஸ்தாத்' இத்யாதி₃பி₄: வேத₃ாந்தவாக்யை: முக்தப்ராப்ய ஸ்த₂ாநவிஶேஷவிஶிஷ்டம் பரம் ப்₃ரஹ்மேதி நிஶ்சீயதே I நச கேவலம் பரம் ப்₃ரஹ்மைவ விஶ்வவிலக்ஷணத்வாத் 'ந ஸந்நாஸந்நஸத₃ஸத்' இத்யுச்யதே; பரஸ்தாச்ச₂ப்₃த₃ாநந்வய ப்ரஸங்க₃ாத் I த்ரிவித₄பரிச்சே₂த₃ரஹிததயா ஸர்வக₃தஸ்ய பரப்₃ரஹ்மண: ஸ்வரூபம் ஹி தே₃ஶவிஶேஷ பரிச்சி₂ந்நம் கத₂முச்யதே? அத: ஸ்த₂ாநவிஶேஷ ரூபவிஶேஷ விஶிஷ்டமேவ தத₂ா வக்தும் யுக்தம் I பரஸ்ய ப்₃ரஹ்மணோ ரூபம் அநேந வாக்யேந ப்ரதிபாத்₃யதே இதி ஸித்₃த₄ம்'' ['பரஸ்தாத்' என்பதில் பரஶப்₃த₃ம் மேலிருக்கும் தே₃ஶத்தைக் குறிக்கிறது. 'தமஸ்ஸுக்கு மேலுள்ள தே₃ஶத்தில்' என்று பொருள். 'ஸத்' என்னும் ஶப்₃த₃மும் 'அஸத்' என்னும் ஶப்₃த₃மும் முறையே கார்யநிலையிலுள்ள சேதனர்களையும், அசேதனங்களையும் குறிக்கிறது....'நஸத்' என்னும் தொடரால் கார்ய நிலையிலுள்ள சேதனர்களைக் காட்டிலும் வேறுபட்டதாகவும், 'நாஸத்' என்னும் தொடரால் கார்ய நிலையிலுள்ள அசேதனங்களைக் காட்டிலும் வேறுபட்டதாகவும், 'நஸத₃ஸத்' என்னும் தொடரால் கார்ய நிலையிலுள்ள சேதனுசேதனங்களையுடைய உலகத்தைக் காட்டிலும் வேறுபட்டதாகவும் உள்ளதொரு தத்துவம் தமஸ்ஸுக்கு மேலுள்ளப்ரதே₃ஶத்தில் இருக்கிறது என்பதுஇவ்வாக்யத்தின் திரண்டபொருள்...ஆகையால்,தமஸ்ஸுக்கு மேலுள்ள ப்ரதே₃ஶத்தில் (உள்ளதொரு) ப்ரக்ருதி-ப்ராக்ருத விலக்ஷணதத்துவமே இவ்வாக்யத்தில் கருதப்படுகிறது. அந்தத் தத்வம் எது என்று விசாரிக்குமளவில்; 'தமஸ்ஸுக்குமேலே ஸூர்யன்போல் ஒளியுள்ளது' 'அப்பரம்பொருள் அழியாததான

http://acharya.org

பரமாகாசத்தில் உள்ளது' 'தமஸ்ஸுக்குமேலே பழையதாய், பரந்திருக்கும் தத்துவம் உள்ளது' முதலான வாக்யங்களில் முக்தர்களால் அடையத்தக்கதாக முழங்கப்படும் பரமபதத் தோடு கூடிய பரப்ரஹ்மமே அத்தத்துவம் என்று நிர்சயிக்கப் படுகிறது. "அனைத்தைக்காட்டிலும் வேறுபட்டிருக்கையாலே பரம்பொருளின் ஸ்வரூபமாத்திரமே 'நஸந்நாஸந்நஸதஸத்' என்னும் தொடரால் குறிப்பிடப்படுகிறது" என்று கொள்வது பொருந்தாது. பரஸ்தாத் (தமஸ்ஸுக்கு மேல் ப்ரதேசத்தில்) என்னும் பதம் அப்படிப் பொருள்கொள்ளும்போது பொருந்தா மற்போய்விடும். தேசம், காலம், வஸ்து என்னும் மூன்றாலும் அளவுபடாத பரப்ரஹ்ம ஸ்வரூபத்தைப் பரமபதமாகிற தேசத் துக்குள் அடங்கியதாக எப்படிக்கொள்ள முடியும்? ஆகையால் அந்தப் பரமபதத்திலுள்ள பரரூபத்தோடு கூடிய பரப்ரஹ்ம ஸ்வரூபமே இவ்வாக்யத்தால் கூறப்படுவதாகக் கொள்வதே பொருந்தும். ('தம: பரே தேவே ஏகீபவதி' என்னும் வாக்யத் துக்கு விவரணமான இந்த வாக்யப்) பரப்ரஹ்மத்தினுடைய பரரூபத்தைச் சொல்லுகிறது என்று தேறிற்று] என்று பாஷ்ய மிட்டிருப்பதிலிருந்து விபக்ததமஸ் பரவாஸுதேவ விக்ரஹத்தி னுள்ளிருக்கும் அவிபக்த தமஸ்ஸோடு சேர்ந்துவிடுகிறது என்பதே இவ்வுபநிஷத்வாக்யங்களின் கருத்து என்று தெளி வாக விளங்குகிறது. இதிலிருந்து பரவாஸுதேவன் தன் திரு மேனியிலுள்ளிருக்கும் அவிபக்ததமஸ்ஸின் ஒரு சிறு பகுதி யையே விபக்ததமஸ்ஸாக்கி ஸ்ருஷ்டிகாலத்தில் அதை லீலா விபூதியாகப் பரிணமமடையச் செய்கிறான் என்றும், ப்ரளய காலத்தில் லீலாவிபூதி முழுவதும் விபக்ததமஸ்ஸாக ஆனபிறகு அதைத் தன் திருமேனியிலுள்ள அவிபக்ததமஸ்ஸுக்குள் அடக்கிக்கொள்கிறான் என்றும் இந்த ஸுபாலோபநிஷத்தின் திரண்ட கருத்தாக விளங்குகிறது இப்படி, பரரூபதிவ்ய மங்கள விக்ரஹ விசிஷ்டனே ஸூக்ஷ்ம சேதனாசேதன விசிஷ்டனுமாயிருக்கையால் பரமபதநாதனே ஜகத்காரணம் என்று வயிரவுருக்காகத் தேறிற்று. கார்யநிலையிலும் பரரூபம் லீலா விபூதியிலுள்ள ஒவ்வொரு தத்துவத்துக்கும் தன்னிடமுள்ள அஸ்த்ரபூஷணங்களின் மூலம் ஆதாரமாயுள்ளது என்னும் விஷயம் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் அஸ்த்ரபூஷணாத்யாயத்தில்

http://acharya.org

பரக்க நிருபிக்கப்பட்டது. இதைப் "புருடன் மணிவரமா" என்னும் பாட்டிலே ஸ்ரீவேதாந்ததேசிகரும் அருளிச்செய்தார். இதிலிருந்து "பரரூபவிஶிஷ்டனாய், ஜக₃த்காரணமாயிருக்கும் பரமபத₃நாத₂னே கார்யமாயுமிருக்கிறான்" என்று தேறுகிறது.

இப்படி வடமொழி வேத₃ம் நிலைநாட்டிய அர்த்த₂த்தைத் தென்மொழி வேத₃மும் பலவிடங்களில் நிலைநாட்டிற்று. சில இடங்களைக் காட்டுவோம். பரமபத₃நாத₂னுக்கு ஶ்ருதிப்ரக்ரியையாலே பரத்வம் கூறவந்த வேதம் தமிழ்செய்த மாறனை நம்மாழ்வார் முதல் திருவாய்மொழியிலே "பரந்ததண்பரவை" (10) என்னும் பாட்டிலே எம்பெருமான் ஒவ்வொரு அணுவிலும் தன் ஸ்வரூபத்தாலே பூர்ணமாக வியாபித்திருக்கிறான் என்று கூறியவுடன் "ஓர் அணுவில் பூர்ணமாக வியாபித்த பிறகு மற்றோர் அணுவில் எப்படிப் பூர்ணமாக வியாபிக்க முடியும்?" என்னும் கேள்வியெழ, அதற்குப்பதிலாக "இவையுண்டகரனே" என்று அருளிச்செய்கிறார். இதன் கருத்தாவது— "ப்ராக்ருத பிரளயகாலத்தில் கீழே அநந்தமான லீலாவிபூ₄தி முழுவதையும் தன்னுடைய பரவாஸுதே₃வ விக்₃ரஹத்தினுள் அடக்கிக்கொள்வது கூடும் என்று ஸூத்₃ருட₄ப்ரமாணமான ஸுப₃ாலோபநிஷத் கூறுவதும், ஆலிலைக் கண்ணன் தனது சிறிய வயிற்றிலே அனைத்துலகங்களையும் அடக்கி ஆலிலையில் கண் வளருவதாக வேதோ₃பப்₃ரும்ஹணமான இதிஹாஸபுராணங்கள் கூறுவதும் எப்படி இவனுடைய அக₄டிதக₄டநாஶக்தியாலே பொருந்துமோ அப்படியே அணுக்கள்தோறும் எம்பெருமான் ஸ்வரூபத்தாலே பூர்ணமாக வியாபித்திருப்பதும் அக₄டிதக₄டநா ஶக்தியால் பொருந்தும்" என்பதேயாகும். தென்னாசார்ய ஸம்ப்ரதா₃யஸ்த₂ர்களுக்குமட்டுமல்லாமல் அஹோபி₃ல மட₂த்துக்கும் இன்றும் காலக்ஷேபக்₃ரந்த₂மாக விளங்கும் ஈட்டில்இவ்விடத்தில் "விபு₄த்வத்தை அவனுக்குச் சொல்லி அணுத்வத்தை இவனுக்குச் சொல்லி இதுக்குள்ளே அவன் குறைவற வ்யாபித்திருக்கும் என்றால் அது கூடுமோ? என்னில்— (இவையுண்ட கரனே) சிறு வடிவைக்கொண்டு பெரியவற்றை யெல்லாம் தன் வயிற்றிலே வைத்தால் 'தயிருண்ட பொன்வயிறு இவ்வேழுலகுமுண்டும் இடமுடைத்தால்' என்கிறபடியே பின்னையும் அவ்வயிறே இடமுடைத்தாம்படி இருக்கவல்ல ஸர்வஶக்தி சிறிய

http://acharya.org

வற்றிலே குறைவற இருக்கமாட்டானோ? என்கிறார். (கரன்) இப்படி ஸூத்ருட, ப்ரமாணஸித்தன்'' என்று அருளிச் செய்திருப்பது குறிக்கொள்ளத்தக்கது. வேதம் தமிழ்செய்த மாறன் ''முந்நீர் ஞாலம் படைத்த எம்முகில் வண்ணனே'' (திருவாய்மொழி 3-2-1) என்றவிடத்திலும் பரமபதநாதனுக்கு ஜகத்காரணத்வத்தை அருளிச்செய்தார். ஆண்டாளும் ''ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கறுத்து'' (திருப்பாவை-4) என்னும் இடத்தில் இதை அருளிச்செய்தாள். ஆக ''பரமபத நாதனுக்கு ஜகத்காரணத்வம் உண்டு'' என்று அசைக்க முடியாதபடி தேறிற்று.

S. முரளி, அந்தணல்லூர்

7. 'தாய்' இதழில் சேரிப்பேர்வழி சிங்கப்பிரானைப்பழித்து எழுதியிருக்கிறது. நரஸிம்ஹ பக்தர்களாகக் கூறிக்கொள்ளும் அஹோபில மடத்தவர்களுடைய ப்ரபல பத்திரிகையான ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா இதையாவது கண்டிக்குமோ என்னவோ தெரியவில்லை. சேரிப்பேர்வழி இப்படித் தொடர்ந்து எழுதிக் கொண்டே போனால் அதை நிறுத்துவதற்கு வழியேயில்லையா?

வைஷ்ணவர்கள் எதையும் பொறுத்துக்கொள்ளும் ஸாதுக்களாயிருக்கும் வரையில் எவன் வேண்டுமென்றாலும் அவர்களை ஏறிமிதித்துக்கொண்டுதான் இருப்பான். சேரிப்பேர் வழி காமகோடி பீடாதிபதியின் தூண்டுதலாலேயே அவருக்கு வேண்டியவரான வலம்புரி ஜானின் பத்திரிகையில் இக்கட்டு ரைத் தொடரை எழுதி வருவதாகத் தெரிகிறது. 'யதிராஜர்' என்று ஸ்ரீமதழகியசிங்கரால் புகழப்பட்ட காமகோடி பீடாதி பதியின் மனம் நோகும்படியான கார்யத்தை ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா செய்யுமென்று தோன்றவில்லை. இக்கட்டுரைத் தொட ரால் வைஷ்ணவம் அழிந்துவிடாது என்று நொண்டிச்சாக்குச் சொல்வதைத்தான் செய்வார்கள். கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக கல்கி, கலைமகள், விகடன், இதயம், ஞானபூமி, தாய் முதலான பல பொதுஜனப் பத்திரிகைகளில் ஆயிரக்கணக்கான கட்டுரைகளில் விஷ்ணு வைஷ்ணவத்வேஷ ப்ரசாரமும் ஸமரஸவாதமும் பெரும் புள்ளிகளாலே செய்யப் பட்டு வருவதும், அதனால் தென்கலை, வடகலை என்னும் வாசி

http://acharya.org

யில்லாமல் பல்லாயிரக்கணக்கான ஸ்ரீவைஷ்ணவர்கள் மூளைச் சலவை செய்யப்பட்டு வைஷ்ணவ லக்ஷணத்தை இழந்து வருவதும் அனைவரும் கண்கூடாகக் கண்டுவரும் விஷயம். ஸ்ரீவைஷ்ணவ மடாதிபதிகள், பத்திரிகைகள், ஆசார்ய புருஷர்கள், உபந்யாஸகர்கள், எழுத்தாளர்கள் ஆகிய அனைவரும் ஒருமுகமாக எதிர்த்து உண்மையைப் பிரசாரம் செய்தால்தான் இந்தப் பொய்ப்பிரசாரங்களை முறியடிக்க முடியும். சேரிப் பேர்வழியைப் பொறுத்தவரையில் அவர் பொதுமக்களைப் பொய்கூறி ஏமாற்றிவரும் மோசடிக்காரர் என்பதை, சென்ற இதழ்த் தலையங்கத்தில் நாம் காட்டியிருக்கிறோம். (இத்தலையங்கம் ஸுதர்சனர் பதில் பத்தாவது ஶதகத்துக்கு அனுபந்தமாக இணைக்கப்படுகிறது.) ஜூனியர் விகடன், தராசு போன்ற பத்திரிகைகளில் இவருடைய மோசடிகளை அம்பலப் படுத்தியோ, வழக்குத்தொடுத்தோ அப்பேர்வழிக்குப் பாடம் கற்பித்தாலொழிய, பிதற்றல் கட்டுரைகள் தொடர்ந்து வந்து கொண்டேதானிருக்கும். இதைச் செய்வதில் பொதுவாகத் தமிழ்நாட்டு ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும், குறிப்பாகச் சென்னை வாசிகளுக்கும் பெரும் பொறுப்புண்டு.

K. V. அனந்தராம ஐயர், தஞ்சை (8 *to* 10 கேள்விகள்)

8. தசரதன் என்ற பெயர் '10 திசைகளிலும் ரதம் செலுத்தும் வல்லமை உடையவர்' என்று பொருளுள்ள காரணப்பெயர். தசரதருக்குத் தந்தையால் நாமகரணம் சூட்டப்பட்ட பெயர்என்ன?

தசரதருக்குத் தந்தையால் சூட்டப்பெற்ற பெயர் 'தசரதன்' என்பதே. அதுவே பொருத்தமான பெயராகவும் அமைந்தது.

9 மகாவிஷ்ணு எடுத்த 10 அவதாரங்களில், திரிவிக்ரம அவதாரமும், ஹயக்கிரீவ அவதாரமும் இன்னும் சில அவதாரங்களும் சேராதது ஏன்?

எம்பெருமானுடைய கணக்கற்ற அவதாரங்களில் முக்கியமானவைபத்து. வேதத்தை மீட்டுவரும் மத்ஸ்யாவதாரத்தோடு. வேதாபஹாரியைக்கொன்ற ஹயக்ரீவாவதாரமும், வேதத்தை மறுபடி பிரமனுக்கு உபதேசித்த ஹம்ஸாவதாரமும் தொடர்புடையவை வாமனவதாரத்தின் வளர்ச்சியே திரிவிக்கிரம அவதாரம்.

http://acharya.org

10. ஸ்ரீமந் நாராயணன் பல அவதாரங்களில் கர்ப்பவாசம் செய்து அவதரித்தார். ஸ்ரீதேவி, பூதேவி இவர்கள் அயோனிஜராய் அவதரிப்பது ஏன்?

ஸீதையும் ஆண்டாளுமே அயோநிஜராய் அவதரித்தனர். ருக்மிணி, ஸத்யபாமா முதலான பல அவதாரங்களில் ஸ்ரீபூமி தேவிகளும் கர்ப்பவாஸம் செய்து பிறந்ததுண்டு. மத்ஸ்யம், கூர்மம், வராஹம், நரஸிம்ஹம், கஜேந்திரவரதன், த்ருவவரதன் முதலான பல அவதாரங்கள் எம்பெருமான் கர்ப்பவாஸம் செய்யாமல் ஆவிர்பவித்தவையே.

மேஜர் தாசன், ஈரோடு. (11, 12 கேள்விகள்)

11. "கம்பன் இராமாயணம் இயற்றுவதற்கு அடிப்படைக் காரணமே திருக்குறள் தான்" என்று புலவர் கீரன் கூறியிருக்கிறார். இது எந்த விதத்தில் உண்மை?

"மூற்குணத்தவரே முதலோர் அவர் நற்குணக்கடல் ஆடுதல் நன்றரோ" என்றும், "காசில் கொற்றத்து இராமன் கதை - ஆசைபற்றி அறையலுற்றேன்" என்றும் காவியத்தின் தொடக்கத்தில் கம்பனே கூறியபடி ஸ்ரீராமகுணத்தில் ஆழ்ந்து அனுபவிக்கவேண்டும் எனும் ஆசையே இராமாயணம் இயற்று வதற்கு அடிப்படைக் காரணம். இயற்றும்போது அருளிச் செயல், திருக்குறள் முதலான உயர்ந்த நூல்களைத் தழுவியிருக்கிறான் என்பதும் உண்மை.

12. ஓலைச்சுவடி நாடிஜோஸ்யத்தில் தங்களுக்கு நம்பிக்கை உண்டா?

"ஜ்யோதிஷம்" என்பது வேதத்தின் ஆறு அங்கங்களில் ஒன்று. அதில் நம்பிக்கை உண்டா என்று ஆஸ்திகர்களிடம் கேட்க இடமில்லை. ஆனால் விவாஹத்தின்போது ஜாதகம் பார்ப்பது, நாள் பார்ப்பது ஆகியவை தவிர, நம் எதிர்காலத்திற்காகச் சோதிடம் பார்ப்பதில் எனக்கு ஊற்றமில்லை. சோதிடம் பார்ப்பதால் விதியை மாற்றமுடியாது. பகவத் கிருபையை நம்பியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் பரிஹாரம் செய்வது தகாது. நாடி ஜோஸ்யத்தில் பரிசயமே கிடையாது. பரிசயங்கொள்ள எண்ணமுமில்லை.

http://acharya.org

T. ரங்கராமானுஜய்யங்கார், பள்ளத்தூர்.

13. புதுக்கோட்டை கம்பன் கழகம் சார்பில் 1986 ஜூலையில் நடந்த கம்பன் விழா வெளியீடாக வந்த கம்பன் மணிமலரில் பக்கம் 56 தொடங்கி திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் என்பவரால் "இராமனும் மும்மூர்த்திகளும்" என்னும் தலைப்பில் ஓர் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. அதில் "மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்டவரும், மும்மூர்த்தி வடிவமும் ஒருருவில் அமையப்பெற்றவருமான பரந்தாமனே பரம்பொருள்;. அப்பெருமான் அவதரிக்கும்போது, திருமால், பிரமன், சிவன் என்னும் மூன்று தெய்வங்களாகப் பிரிந்து முத்தொழில்களில் ஒவ்வொன்றைச் செய்கிறுன்; இம்மூவரும் பரந்தாமனிடத் தாழ்ந்தவர்கள்" என்றே ஆழ்வார்கள் கருதுகிருர்கள் என்றும், அக்கருத்தையே கம்பன் தன் காவியத்தில் விளக்குகிருன் என்றும், திவ்யப்ரபந்த வ்யாக்யாதாக்கள் இக்கருத்தை மாற்றிவிட்டார்கள் என்றும் எழுதியுள்ளார். தேவரீரைப்பற்றியும் பல கண்டனங்களை எழுதியுள்ளார். இக்கட்டுரையை எழுதி அனுப்பியுள்ளேன். இதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

வெளியாகி சுமார் நாலு மாதமாகியும் இக்கட்டுரையோ, இதைத் தாங்கிநிற்கும் மலரோ, இதை எழுதியவரால் நமக்கு அனுப்பப்படவில்லை. "நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்" என்னும் பாடற்பகுதிக்கிணங்க, வெளிவந்தால் உடனே ஸுதர்சன ப்ரயோகமாகி அழிந்தொழியும் என்னும் பயத்தாலே நமக்கு அனுப்பப்படவில்லைபோலும்! நிற்க; இவர் ஒரு சைவர். தமிழறிந்தவரேயொழிய வடமொழியிலேயோ, அதிலுள்ள சாத்திரங்களிலேயோ அதிகமான பயிற்சியில்லாதவர். இத்தகையவர் தென்மொழி வடமொழி நூல்களைக் கரைகண்டவர்களான திவ்யப்ரபந்தவ்யாக்யாதாக்களை வாய்க்குவந்தபடி பழிப்பதைக் காணும்போது, "ஈயாடுவதோ கருடற்கெதிரே, இரவிக்கெதிர் மின்மினியாடுவதோ, நாயோடுவதோ உறுமிப்புலிமுன் நரிகேசரிமுன் நடையாடுவதோ, பேயாடுவதோ அழகூர்வசிமுன்" என்னும் சடகோபரந்தாதிப்பாசுரமே நினைவுக்கு வருகிறது. "பரமபதத்

ஸ—4

http://acharya.org

தில் மூவுருவும் சேர்ந்த பரந்தாமனே பரம்பொருள் என்றும், அவன் இவ்வுலகில் அவதரிக்கும்போது பிரிந்திருக்கும் மும் மூர்த்திகளும் அவனைக்காட்டிலும் தாழ்ந்தவர் என்றும் ஆழ் வார்கள் கருத்து'' எனக் கற்பனைக்கோட்டையைக் கட்டுகிறார் இவர். ஆழ்வார்கள் பாசுரங்கள் சிலவற்றையும், தம் கொள் கைக்கு ஆதாரமாகக் காட்டுகிறார். அப்படிக் காட்டும்போது சில பாசுரங்களின் பாடங்களை இஷ்டப்படி மாற்றுகிறார். சில பாசுரங்களில் இவர் கொள்கையை உடைக்கிற முன்னும் பின்னும் உள்ள பகுதிகளை மறைத்து ஓர் பகுதிக்கு மாத்திரம் மனம் போனபடி பொருளுரைக்கிறார். உதாரணமாக, ''ஏருரு வில் மூவருமே என்ன நின்ற இமையவர்'' [திருநெடு-2] என்ற தை ''ஒருருவில் மூவருமே என்ன நின்ற இமையவர்'' என்று மாற்றி, பரந்தாமனுகிற பரநிலையில் மூவரும் ஒன்றாகவே யுள்ளனர் என்னும் தம் அவத்தகொள்கைக்கு அதை சான் ருகக் காட்டுகிறார். எந்தப் பதிப்பிலும் காணுத 'ஒருருவில்' என்னும் இவரது பாடம் மோனைக்கு முரணானது என்பதையும், எல்லாப் பதிப்பிலும் காணும், ''ஏருருவில் மூவருமே என்ன நின்ற இமையவர் ''என்னும் பாடமே மோனைக்கு ஒத்தது என் பதையும் காண்பார்க்கு இவர் கூறும் பொருள் ஆழ்வார் திரு வுள்ளமுகந்ததன்று என்றும், திவ்யபிரபந்த வ்யாக்யாதாக்கள் அருளிய பொருளே ஆழ்வார் திருவுள்ளமுகந்தது என்றும் தெளிவாக விளங்கும். அவ்வண்ணமே முதற்பத்து மூன்றும் திருவாய்மொழியில் 'உணர்ந்துணர்ந்து' என்னும் பாட்டிலும், அடுத்ததான 'ஒன்றெனை' என்னும் பாட்டிலும் ஆழ்வார் ''முப்மூர்த்திகளின் ஸ்வரூப ஸ்வபாவங்களை நடுநிலை நின்று ஆராய்ந்து, பரம்பொருளல்லர் என்று விளங்கும் இருவரிடம் உங்களது பற்றை விட்டு, பரம்பொருளாகத் தேறும் ஒருவ னிடமே பக்தி செய்யுங்கள்'' என்று தெளிவாகக்கூறி, அடுத்த பாட்டில் ''திருவுடையடிகள்'' என்று அப்படி நடுநிலைநின்று ஆராய்ந்தால் பரம்பொருளாகத் தேறக்கூடியவன் திருமாலே என்று தெளிவாகக் காட்டியிருக்க, இப்பாடல்களில் ''அரி அயன் அரனென்னும் இவரை......இறைஞ்சுமின் மனப்பட்ட தொன்றே'' என்னும் பகுதியைமட்டும் எடுத்துக்காட்டி மனம்போனபடி பொருளுரைக்கிறார். பாடல் முழுவதையும்

http://acharya.org

மூன்பின் பாடல்களையும் எடுத்தாலல்லவா இவர் கூறுவது அவ்பொருள் என்று படிப்பவர்களுக்கு விளங்கும், மற்ற சில பாசுரங்களுக்கு இவர் கூறும் பொருள்களும் முன்பின் பாடல்களுக்கும், அவ்வாழ்வாரின் மற்ற பல பாடல்களுக்கும் மிகவும் முரண்பட்டன்றோ நிற்கின்றன! திவ்யப்ரபந்த வ்யாக்யாதாக்கள் ஶ்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸங்கள், பாஞ்சராத்ரம், புராணங்கள் முதலானவற்றை மேற்கோள் காட்டி திவ்யப்ரபந்தங்கள் முழுவதற்கும் உரையிட்டதுபோல் இவர் செய்தாலொழிய இவரது அபத்தக்கருத்தை அறிவாளிகள் எவரும் ஏற்கமாட்டார்கள், இவ்விடத்தில் தமிழ்த்தாத்தா, உ. வே. சாமிநாதய்யர் தமிழ்ப் பெரும் புலவர் தியாகராசச்செட்டியாரைப்பற்றி எழுதியுள்ள வரலாறு நினைக்கத்தக்கது. "திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களைப்போல் தேவார திருவாசகங்களுக்கும் உரையெழுதவேண்டும்" என்று அவரை அடிக்கடி நச்சரித்துவந்த பட்டாபிராமப் பிள்ளையிடம் "இருமொழி நூல்களையும் கரைகண்ட திவ்யப்ரபந்த வ்யாக்யாதாக்கள் செய்த காரியத்தை ஒருமொழியே சிறிது அறிந்த என்னைச் செய்யச் சொல்லுகிறீரே, இனியும் நச்சரித்தால் நான் காவிரியில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வேன்," என்று தம் தகுதியறிந்து நேர்மையுடன் பேசிய அந்தச் செட்டியார் எங்கே? தம் தகுதியறியாமல், அருளிச்செயல்களுக்கு மூலமான வேதசாஸ்த்ரங்களிலிருந்து ஒரு மேற்கோளையும் காட்டாமல் மனம்போனபடி பொருளுரைத்து திவ்யப்ரபந்த வ்யாக்யாதாக்களை வசைபாடும் நேர்மையிலியான இந்தச் செட்டியார் எங்கே? "ஆழ்வார்கள் வான்மீகத்தையும், பாரதத்தையும் ப்ரமாணமாகக் கொண்டவர்கள்" என ஒப்புக்கொண்டு, "வால்மீகத்தில் 'நித்யராகிய பரமேச்வரன்' எனச் சிவனுக்கு நித்தியத்துவம் சொல்லப்பட்டுள்ளது. பாரதம் பலவிடங்களில் சிவ பரத்துவம் பேசுகிறது" என்று இடத்தைக் காட்டாமல் எழுதும் இவரது நேர்மையை என்னென்பது! ஆழ்வார்களுக்கு மூலமான ஶ்ருதியிலும், இதிஹாஸங்களிலும், ஸ்ம்ருதிகளிலும், பாஞ்சராத்ரத்திலும், "பரமபதத்தில் மூவுருவும் சேர்ந்தவனாகவேயிருக்கிறான் பரந்தாமன்" என்னும் தம் கொள்கைக்கு ப்ரமாணங்களைக் காட்ட இவரால்

http://acharya.org

முடியுமா? நேர்மாறாக இந்த ப்ரமாணங்கள் அனைத்தும் பரமபதநாதன் ஶங்கசக்ரகதாதரனாய், ஸ்ரீபூமிநீளாநாயகனாய், அநந்த கருட விஷ்வக்ஸேநாதி நித்யஸூரிகளோடு கூடியவனாகக் காட்சியளிக்கிறான் என்றன்றோ முழங்குகின்றன, பரமபதத்தில் பரமபதநாதன் உருவத்தில் சிவன் பிரமன் உருவம் சேர்ந்துள்ளது என்பதற்கு இவரால் ப்ரமாணம் காட்டமுடியுமா? ப்ரமாணங்கள் திருமாலையும், பிரமனையும் சிவனையும் மூன்று தனித்தனிச் சேதனர்களாகவும், உருவம், மனைவியர், வாஹனம், உலகம், துணைவர் முதலானவற்றில் மிகவும் வேறுபட்டவர்களாகவுமன்றோ காட்டுகின்றன. அருளிச் செயல்களுக்கு இவர் கூறுவது க்ஷணநேரமும் நிலைநிற்க மாட்டாத அவப்பொருள் என்று இவ்வளவால் நிலைநாட்டப்பட்டதாயிற்று. இனி, சில கம்பன் பாடல்களுக்கு இவர் கூறும் பொருளும் அவப்பொருளே என நிலைநாட்டுவோம்.

நமது "சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம் எனும் நூலில் "மும்மூர்த்திகளின் அவதாரம் இராமன்" "மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்ட ஓர் தத்துவத்தின் அவதாரம் இராமன்" என்றெல்லாம் கம்பன் கூறுவதாகச் சொல்லும் பல கூற்றுக்களை சுமார் ஆயிரம் கம்பன் பாடல்களைக்காட்டி நாம் மறுத்திருக்கிறோம். அந்நூல் எழுவதற்கு மூலகாரணமாயிருந்த திரு ம. பொ சி. யும் அதைப்பெற்றுப் படித்த பல சைவத் தமிழறிஞர்களும் அந்நூலுக்கு மறுப்பெழுத இயலாமல் வாய்மூடி மௌனிகளாய் நிற்கிறார்கள். இந்தச் செட்டியாரும் நமது நூலை வாசித்திருக்கிறார் என்பது இவரது கட்டுரையிலிருந்தே விளங்குகிறது. இருநூறு பக்கங்களுக்கு மேற்பட்ட நமது நூலில் "மும்மூர்த்தியுருவன் பரந்தாமன்" என்னும் இவரது கொள்கைக்கு முரணான நூற்றுக்கணக்கான கம்பன் பாடல்களை நாம் காட்டியிருக்கிறோம். அவற்றில் ஒன்றைக் கூடத் தொட்டு இவர் பதில் எழுதவில்லை. பரந்தாமன் மும்மூர்த்தியுருவுடன் பரமபதத்தில் விளங்குகிறான் என்பதைக் கம்பனின் ஒரு பாடலும் உண்மையில் காட்டவில்லை. 'மூலமும் நடுவும்" என்னும் பாடலில் மும்மூர்த்திகளின் இருப்பிடமும், ஆயுதங்களும் மும்மூர்த்திகளுக்கும் மூலமான

http://acharya.org

நாராயணனுடையனவையே என்றே கம்பன் காட்டியிருக்கிறான். நாராயணன் மும்மூர்த்திகளாக மட்டுமல்லாமல், உலகம் முழுவதுமாகவே விரிகின்றான் என்பதே விசிஷ்டாத்வைத ஸ்ரீ வைஷ்ணவசித்தாந்தம். அதில் திருப்பாற்கடல் நாதன் நாராயணனின் நேர் அவதாரம். பிரமன், சிவன் முதலானோர் ஓர் ஜீவனை இடையிட்டு, அவர்களுக்கு அந்தர்யாமியாயிருக்கும் அம்சாவதாரங்கள் என்பதற்கு ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் ஆயிரக்கணக்கான ஆதாரங்கள் உள. "தானும் சிவனும் பிரமனும் ஆகிப்பணைத்த தனி முதலை" [திருவாய்8-8-4] "அரன் அயன் என உலகழித்து அமைத்துளனே" [திருவாய் 1-1-8] முதலான பாடல்களில் ஆழ்வார்களும் இதைக் காட்டியுள்ளனர். இப்படிப் பிரமனுக்கும், சிவனுக்கும் அந்தர்யாமியாயிருப்பதாலேயே "சிவனாய் அயனாய்" [6-9-1] "அயனை அரனை அலற்றி" [10-10-11] "நான்முகனே! முக்கண்ணப்பா" [10-10-1] முதலான பாசுரங்களில் அவர்களைத் திருமாலாகவே பாடியதுபோல், "நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்ச் சீரார் சுடர்களிரண்டாய்" [6-9-1] முதலான பலவிடங்களில் அறிவற்ற ஜடப் பொருள்களையும், அறிவுள்ள எல்லா ஜீவர்களையும் திருமாலாகவே பாடியிருக்கிறார்கள். இதற்குக்காரணம் திருமால் அனைவர்க்கும் அந்தர்யாமியாயிருப்பதே என்பதை "உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்" [1-1-7] என்றும் காட்டியுள்ளனர். 'மூலமும் நடுவும்' முதலான சில பாடல்களில் மும்மூர்த்தியுருவிலும் கரந்தெங்கும் பரந்திருப்பவன் திருமாலே எனக் காட்டிய கம்பனும், "ஆழி நீ அனலும் நீயே; அல்லவை எல்லாம் நீயே, ஊழி நீ; உலகும் நீயே" என்று எல்லாவுலகுமே 'திருமால் தான் எனக்காட்டி, அதற்குக்காரணத்தை 'அவற்று உறை உயிரும் நீயே' [யுத்தகாண்டம் வருணனை வழிவேண்டு படலம் 68] என்று மிகத் தெளிவாகக் காட்டினான். இப்படிப் பல விடங்களை நமது கம்பனின் சமய நூலில் நாம் எடுத்துக் காட்டியிருக்கிறோம். கம்பனுக்கும் ஆழ்வார்களுக்கும் முன்னமே வைதிக சமயத்தைத் தம் நூல்களில் விளக்கிய சங்க காலச் சான்றோர்களும் இவ்வுண்மையை "அனைத்தும் நீ. அனைத்தின் உட்பொருளும் நீ ஆகலின்" என்று திருமாலைப்

http://acharya.org

பற்றிய பரிபாடலிலே பறைசாற்றினார்கள். "*ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாந்*" [சாந் 3-14-1] [ப்ரஹ்மத்திடமிருந்தே தோன்றி, மறைவதாலும், அதனாலேயே அந்தர்யாமியாயிருந்து ரக்ஷிக்கப்படுவதாலும் அனைத்தும் ப்ரஹ்மமே] முதலான பல வேதவாக்யங்களும், '*ஸர்வம் ஸமாப்நோஷி ததோऽஸி ஸர்வ:*" [கீதை 11-40] [நீ அனைத்தையும் வியாபித்திருப்பதால் எல்லாமாகிறாய்] என்று கீதை முதலான சாஸ்திர வாக்யங்களும் இதை நிலைநாட்டின. இப்படிச் சங்க காலத் தமிழர் கண்ட வைதிகசமயமான விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தையே ஆழ்வார்களும் கம்பனும் நிலைநாட்டியிருக்க, அதைப்பொறுத இந்தச் சைவச் செட்டியார் எந்த ப்ரமாணத்திலும் இல்லாத மும்மூர்த்தியுருவான பரந்தாமனைக்கற்பித்து மனம்போனபடி ஏதேதோ கதை திரிக்கிறார். இவருடைய கற்பனைகளை இருமொழி நூற்புலமையுள்ள நடுநிலையாளர்கள் கண்டு விலவறச்சிரிப்பார்கள். நிற்க. கம்பன் வைணவனல்லன் எனக்காட்ட திரு ம. பொ. சி. எடுத்தசிலபாடல்களுக்கு நாம் சரியான பொருளை நமது நூலில் கூறினோம். ம. பொ. சி எடுக்காத சில பாடல்களை எடுத்து "இதற்கு ஐயங்கார் பொருள் கூறவில்லை" என்று செட்டியார் புலம்புகிறார். அந்த ஒரு சில பாடல்களுக்கும் உண்மைப்பொருளை இதோ கூறுகிறோம் — சுந்தரகாண்டத்தில், காட்சிப் படலத்தில் "அங்கண்மாஞாலமும்" [122] என்று தொடங்கும் பாடலில் சீதாபிராட்டி இராவணனுக்கு உபதேசம் செய்யும்போது "*செங்கண்மால் நான்முகன் சிவன் என்றே கொலாம் எங்கள் நாயகனையும் நினைத்தது ஏழை நீ*"என்று இராமனை மும்மூர்த்திகளிலும் சிறந்தவனாகச் சொல்லியிருக்கிறாளே-என்பது செட்டியாரின் வாதம். தேவர்களின் வரம் பழுதுபடாமைக்காகத் திருமால் மனிதனாக அவதரித்திருக்கிறான். நேரே வந்து அவனாலும் இராவணனை அழிக்க இயலாது. அந்த இயலாமையைப்பற்ற, இராமன் தன் மூலமூர்த்தியான திருமாலைவிடச் சிறந்தவனே. "சிவனோ? அல்லன்; நான்முகனல்லன்! திருமாலாம் அவனோ? அல்லன்" என்று உயுத்தகாண்டத்தில் இராவணன் கூறியதும் அதற்குக் காரணத்தை "மெய்வரம் எல்லாம் அடுகின்றான்" எனக்காட்டியதும் திருமாலாகிய தேவன் தன்னை அழிக்க இய

http://acharya.org

லாது என்னும் கருத்திலேயே என்பது தெளிவு. இப்பாடலைப் பற்றி நமது நூலில் 196-ம் பக்கத்தில் தெளிவு படுத்தியிருந்தும் செட்டியார் இதைத் தமக்குச் சாதகம் போலே எடுக்கிறார். நிற்க; "தேவர்கள் என்னை அழிக்கக்கூடாது" என்று வரம்பெற்ற இராவணனிடம், அவனை அழிப்பதற்கே மனிதவுருவெடுத்து வந்த இராமபிரானின் அவதார ரஹஸ்யத்தைப் பிராட்டி வெளிப்படையாக வெளியிடுவாள் என்று செட்டியார் எப்படி எதிர்பார்க்கிறார் என்பது நமக்கு விளங்கவில்லை, அடுத்த பாடல்களில் பிராட்டி திருமாலின் அவதாரமே இராமன் என்று குறிப்பாக உணர்த்தியுமிருக்கிறாள். 'மானுயர் இவர்" என்னும் அடுத்த பாடலில் கார்த்தவீரியன் பரசுராமனுகிற ஒரு மனிதனுல் கொல்லப்பட்டான் என்று கூறுவதன் மூலம் பரசுராமனைப் போல இராமபிரானும் திருமாலின் மனுஷ்யாவதாரமே எனக் குறிப்பால் உணர்த்தினுள். அடுத்த பாடலில் "ஒருவனன்றே உலகழிக்கும் ஊழியான் ஏசருவரும் காலை என் மெய்ம்மை தேர்கியால்" என்று ஊழி முதல்வனை திருமாலே இவன் என்று உணர்த்தி "இந்த உண்மையை போரில் நீயே புரிந்து கொள்ளப்போகிருய்" என்றும் கூறுகிருள். இப்படியிருக்க, இப்பாடல் செட்டியாருக்கு எப்படிக் கைகொடுக்கும்? நமது நூலில் 84, 85 பக்கங்களில் "மூலமும் நடுவும்" என்று தொடங்கும் பாடலை அதற்கு முன் உள்ள பாடலோடு சேர்த்துப் பார்க்கும்போது, சங்ககாலத் தமிழர் சமயமான விசிஷ்டாத்வைத ஸ்ரீ வைஷ்ணவமதத்தைப் பின்பற்றியவனே, கம்பன் என்பது தெளிவு என்று நிரூபித்திருக்கிறோம். அப்படியிருக்க அதைத் தனக்குச்சாதகமானதுபோலே எடுக்கிறார் செட்டியார். "இராமனுக இருக்கும் போதும் திருமால் சிவனுள்ளும் பிரமாவினுள்ளும் அந்தர்யாமியாகத்தான் இருப்பார். அந்நிலையை அவர் எக்காலத்திலும் எந்நிலையிலும் விடமுடியாது. இதனை கம்பன் ஆயுதங்களைத் துறந்தும் இருப்பிடத்தை விட்டும் வருவதாகச் சொல்வதால் அந்தர்யாமியாக உள்ள நிலையை அவன் குறிப்பிடுகிருன் என்பது பொருந்தாது. புறத்தே உள்ள நிலையைத்தான் அவன் குறிப்பிட வேண்டும்" என்கிறார் செட்டியார். திருமாலாகிற திருமேனியைக் கொண்டிருக்கும் தேவதேவன் அத்திருமேனியிலுள்ள சங்கசக்கரங்களையும்

http://acharya.org

அத்திருமேனிக்கு இருப்பிடமான ஆலிலையையும் விட்டும், பிரமனுருவிலிருக்கும் பிரமதேவனுக்கு அந்தர்யாமியாய் இருக்கும் திருமால் அவ்வுருவிலிருக்கும் கரகத்தையும், அவ்வுருவுக்கு இருப்பிடமான தாமரைமலரையும் விட்டும், சிவனுருவிலிருக்கும் சிவனுக்கு அந்தர்யாமியாயிருக்கும் திருமால் அவ்வுருவிலிருக்கும் சூலத்தையும் அவ்வுருவுக்கு இருப்பிடமான வெள்ளிமலையையும் விட்டும் நிற்கும் இராமனுருவை எடுத்துக்கொண்டு கைவில்லை ஆயுதமாக ஏந்தி அயோத்தியை இருப்பிடமாகக்கொண்டு அவதரித்தான் என்று கூறுவதில் என்ன பொருந்தாமை உள்ளது? கம்பன் திருமால் தன் உருவை விட்டதாகவோ, பிரம்மருத்ரர்களுக்கு அந்தர்யாமியாயுள்ள நிலையை விட்டதாகவோ, மும்மூர்த்தியுருவங்களையோ, அவர்களின் ஆயுதங்களையோ, இருப்பிடத்தையோ அடியோடு கைவிட்டு விட்டதாகவோ கூறவில்லையே! இராமனாக அவதரித்த நிலையில் அவ்வாயுதங்களை விட்டு வில்லையும், அவ்விருப்பிடங்களைவிட்டு அயோத்தியையும் கைக்கொண்டதாகவன்றோ கூறுகிறான். இதில் எப்பொருந்தாமையும் இல்லாமலிருக்க, செட்டியார் அந்தர்யாமி நிலையையே விட்டுவிட்டதாகக் கூறுவதாகக் கூறிப் பாமர மக்களை ஏமாற்றப் பார்க்கிறார். அறிவாளிகள் இதில் ஏமாற மாட்டார்கள்.'' ''மூப்பரம் பொருளுக்குள் முதலை மூலத்தை', என்று கம்பன் கடிமணப்படலத்தில் மும்மூர்த்திகளையும் 'பரம்பொருள்' என்று கூறியிருக்கிறானே; அய்யங்கார் இதுபற்றி எதுவும் பேசவில்லையே'' என்று புலம்புகிறார் செட்டியார். சாஸ்திரங்களில் அசேதனமான மூலப்ரக்ருதியைக் குறித்தும், ஜீவனைக் குறித்தும், ப்₃ரஹ்ம சப்தமும், பரமாத்மசப்தமும் வழங்கப்பட்டிருக்கின்றன. அதுபோல் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் பெருந்தொழில்களைச் செய்யும் மும்மூர்த்திகளையும் 'பரம்பொருள்' என்று கம்பன் குறித்திருக்கிறான். பொய்கையாழ்வார் ''முதலாவார் மூவர்'' என்று மூவரையும் முதல்வராகக்குறித்து, ''அம்மூவருள்ளும் முதலாவான் மூரிநீர் வண்ணன்'' என்று குறித்ததுபோல், கம்பனும் முப்பரம் பொருள்களுக்குள் திருமாலேமுதலாகவும் மூலமாகவுமிருக்கிறான் என்கிறான். இது எமக்குச் சாதகமானதேயொழிய. செட்டியா

http://acharya.org

ருடைய துரீய (நான்காவது) ப்ரஹ்மவாதத்திற்கு எப்படிச் சாதகமாகும்?

"முளரிமேல் வைகுவான் முருகன் தந்த அத்
தளிரியல் பாகத்தான் தடக்கை ஆழியான்
அளவி ஒன்று ஆவரே அன்றி, ஐயமில்
கிளவியரய் தனித்தனிக் கிடைப்பரோ துணை"

[கிட்கிந்தா-களங்காண் படலம்-17]

என்னும் பாட்டில்—மும்மூர்த்திகளும் சேர்ந்தால் இராமனுக்கு ஒப்பாவரேயன்றி. தனித்தனியே ஒப்பாகமாட்டார்கள்கள்" என்று சுக்கிரீவன் கூற்றாகக் கூறியிருப்பது அய்யங்கார் கருத்துக்குப் பெரியதோர் இடையூருக அமைந்திருப்பதால் அவர் இதுபற்றிப் பேசவேயில்லை—என்று கூறுகிருர் செட்டியார். ம. பொ. சியைக் குறித்து எழுதிய நூலில் அவர் தம் கொள்கைக்குச் சாதகமாக எடுத்த பாடல்களையே நாம் எடுத்து விளக்கிஞேம். சுமார் ஆயிரம் பாடல்களை எடுத்துக்காட்டி. சங்ககாலத் தமிழர் சமயமான வைணவமே கம்பனின் சமயம் என்றும் நிலைநாட்டியுள்ளோம். அவற்றில் நூற்றுக்கணக்கான பாடல்கள் செட்டியாரின் துரீய ப்ரஹ்மவாதத்தையும் வெடி வைத்துத் தகர்ப்பவை: அவைகளில் எதையும்தொடாத செட்டியார் வெட்கமில்லாமல் கம்பராமாயணத்தைத் துருவித்துருவிப் பார்த்து, தாம் விதண்டாவாதம் செய்ய இடங்கொடுக்கும் ஒரிரு பாடல்களை எடுத்து "இதற்கு ஐயங்கார் பதில் கூறவில்லை" என்று பன்னிப்பன்னிப் புலம்புகிருர். இப்பாடலில் "மும்மூர்த்திகளும் சேர்ந்தால் இராமனுக்கு ஒப்பாவரேயன்றித் தனித்தனியே ஒப்பாகமாட்டார்கள்" என்று கூறியது—அவதார நிலையில் எம்பெருமான் மூலமூர்த்தியைக் காட்டிலும் சிறப்புறுகிருன் என்று "ஸ உ ஶ்ரேயாந் ப₄வதி ஜாயமாந:" [அவன் பிறந்த பின்பே பெருமை பெறுகிருன்] என்று வடமொழி வேதத்திலும், "பலபிறப்பாய் ஒளிவரும் முழுநலம்" என்று தமிழ் வேதத்திலும் முழங்கியதை அடியொற்றியதாகும். இதனுல் கம்பன் பரம வைஷ்ணவன் என்று தேறுமேயொழிய, செட்டியார் கற்பனைசாணும் துரீய ப்ரஹ்மவாதி என்று எப்படித் தேறும்? "பரம்பொருள் நிலை மூழுநிலையாகும். பாற்கடல் நிலையிலிருந்து தோற்றுவிக்கின்ற சிவனும் பிரமாவும் அம்சநிலையினரே ஆவார் முதலில் அம்சநிலையிலுள்ள இவர்களைப் பாற்கடற் பெருமான் தன்னுள் அடக்கிக்கொண்டு ஆலிலைமீது சயனித்திருப்பார் என ஆழ்வார்கள் கூறுகின்றனர். அம்சநிலை முழுநிலையைப் பாதிக்காதென்பது வைணவ சித்தாந்தமாகும்," என்று தமது துரீய ப்ரஹ்மவாதத்தை ஆழ்வார்களின்மீது

http://acharya.org

ஏறிடும்போது ஆலிலைப்பெருமானை எடுப்பதன் மூலம் செட்டியார் வகையாக மாட்டிக்கொள்கிறார்! ஆழ்வார்கள் ஆலிலைப் பெருமான் விழுங்கித் தனக்குள் அடக்கிக்கொள்வதாகக் கூறுவது பிரமனையும், சிவனையும் மட்டுமல்ல. மூவுலகிலுமுள்ள சேதனுசேதனங்கள் அனைத்தையுமேயாம் "பாலன் தனதுரு வாய் ஏழுலகுண்டு ஆலிலையின்மேலன்று நீ வளர்ந்த மெய் என்பர்" (முதல் திருவ 69) "பாலனாய் ஏழுலகுண்டு...... ஆலிலை அன்னவசஞ் செய்யும் அண்ணலார்' (திருவாய் 4-2-1) "பாலனாகி ஞாலமேழும் உண்டு பண்டு ஆலிலைமேல் சாலநாளும் பள்ளிகொள்ளும் தாமரைக் கண்ணன்" [பெரிய திரு 2-2-5] "ஆலமாமரத்தினிலைமேல் ஒரு பாலகனாய் ஞாலமேழுமுண் டான்" (அமலனாதி) "பாலகனாய் ஆலிலைமேல் பைய உல கெல்லாம் மேலொருநாள் உண்டவனே!" [மூன்-திருவ-33] "வானகமும் மண்ணகமும் வெற்பும் ஏழ் கடல்களும் போனகம் செய்து ஆலிலைத்துயின்ற புண்டரீகனே" [திருச்சந்த-30] "நளிர்மதிச் சடையனும் நான்முகக்கடவுளும் தளிரொளியிமைய வர் தலைவனும் முதலா யாவகையுலகமும் யாவரும் அகப்பட...... ஒருபொருள் புறப்பாடின்றி முழுவதும் அகப்படக் கரந்து ஓராலிலைச்சேர்ந்த எம்பெருமாமாயனையல்லது ஒரு மாதெய்வம் மற்றுடையமோ யாமே?" [திருவாசிரியம்-7] முதலான பாசுரங் கள் காண்க. கம்பனும் பல பாடல்களில் இவ்வண்ணமே பாடியிருப்பதை நமது நூலில் காட்டியிருக்கிறோம். வயிற்றுக் குள் சென்ற பிரமனும், சிவனும் பரமபதத்தில் பரந்தாமனின் உருவில் வெளியே நீட்டிக்கொள்கிறார்கள் என்று ஓராதாரத் தையும் காட்டாமல் கதைக்கிறார் செட்டியார், வயிற்றுக்குள் சென்ற இந்திரனும், ஏழுலகங்களும் வெளியே நீட்டிக் கொள்ளவில்லையா? என்று கேட்டால் திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல் விழிப்பதுதவிரச் செட்டியாருக்கு வேறு வழியில்லை. "முதலாம் திருவுருவம் மூன்றென்பர் ஒன்றே முத லாகும் மூன்றுக்கும் என்பர்—முதல்வா, நிகரிலகு காருருவா! நின்னகத்ததன்றே புகரிலகு தாமரையின் பூ" [பெரிய திருவ 72] என்று மும்மூர்த்திகளுக்கும் முதலாயிருக்கும் மூர்த்தி ஒன் றுண்டு என்னும் கொள்கையை வெடிவைத்துத் தகர்த்திருக் கும் நம்மாழ்வாரையே அக்கொள்கையை ஆதரிப்பவராகச் செட்டியார் கூறுவதைக் கலியின் கோலாஹலம் என்பது தவிர வேறு என் சொல்வது? இவ்வளவால் சங்ககாலத்தமிழர் சமய மாய், ஆழ்வார்கள் மதமான விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதமே கம்பனின் சமயம் என்னும் உண்மை அசைக்கமுடி யாதபடி மறுபடியும் நிலைநாட்டப்பட்டதாயிற்று,

http://acharya.org

கோவிந்தசாமி, திருநகரிக்கோயில் திருப்பணிக்குழு

14 தங்கள் தலையங்கத்திலும் ஸுதர்சனர் பதிலிலும் காமகோடி பீடாதிபதி, அக்னிஹோத்ரம் தாத்தாச்சாரியர், முக்கூர் ஸ்ரீநிவாஸவரதாசார்யர் போன்றவர்களைத் தரக்குறைவாகத்தாக்கி எழுதுவது நியாயமா?

அவர்கள் வைஷ்ணவத்தையும், ஆழ்வார்களையும், ஆசார்யர்களையும் பொதுமேடைகளில் பழித்தும், இழித்துரைத்தும் பேசுவதையும், விஷ்ணு கோயில்களை மாற்ற முயல்வதையும் ஸுதர்சனத்தில் யாம் கண்டிக்கிறோமேயொழிய, தரக்குறைவாக எதுவும் எழுதவில்லை. நேரில் வந்தால் அவர்கள் செய்வது தரக்குறைவேயொழிய நாம் செய்வது தரக்குறைவல்ல என்று நிரூபிக்கத் தயாராயிருக்கிறோம்.

R. ஸுந்தரம், சென்னை-78. மற்றும்பலர்.

15. ஆந்திர அரசும், திருமலை-திருப்பதி தேவஸ்தானமும், 'ஸப்தகிரி' பத்திரிகையும் போகிற போக்கைப் பார்த்தால், விரைவில் விபூதிதரித்த சைவர்களையேகொண்டு திருமலையில் பூஜை நடத்தினால் வியப்பதற்கில்லை. இதைத் தடுத்து நிறுத்த வழி உண்டா?

அறநிலையச் சட்டங்கள் வைணவர்களின் மத சுதந்திரத்தைப் பறிப்பதால் செல்லாதவை என்று அறிவிக்கவேண்டும் என்று கோரி ஸுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடுத்து, விஷ்ணுகோயில்கள் வைஷ்ணவமத சமூகத் தலைவர்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட சுயாதிகார அமைப்பினால் நிர்வகிக்கப்பட வழிகோலுவதே—திருமலைக்கோயில் முதலான விஷ்ணு கோயில்கள் அனைத்தையும் காப்பாற்ற ஒரே வழி. இதைச் செய்ய இன்றுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் தவறினால் திருமலைக்கோயில் மட்டுமல்ல, தமிழகத்திலும், ஆந்திரத்திலுமுள்ள எல்லா விஷ்ணுகோயில்களும் அவைஷ்ணவர்களின் பிடிக்குள் அகப்பட்டு விரைவிலேயே அழிந்துவிடும். ஸுதர்சனம் 467, 468, 469 தலையங்கங்களில் இவ்விஷயம் விவரிக்கப்பட்டுள்ளது. ஸுதர்சனர் பதில் இந்த சதகத்துக்கு அநுபந்தமாக அந்தத் தலையங்கங்கள் இணைக்கப்படுகின்றன.

http://acharya.org

K. A. தேவராஜன் *C. A.*, நெல்லை-2

16. திருமலையில் ஸஹஸ்ரநாமார்ச்சனையின்போது, "தெலுங்கு தேசாய நம:" என்று ஒரு நாமாவளியைச் சேர்த்துச் சொல்லுவதாக 16—11—86 "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் செய்தி வந்துள்ளது. கொண்டையா கமிஷன் சொன்னபடி தாம் அக்கமிஷனிடம் கருத்துத் தெரிவிக்கவில்லை என்று சிருங்கேரி பீடாதிபதி பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்துள்ளார். N, T. R அரசின் இவ்வடாத செயல்களை மத்திய அரசுக்குத் தெரிவித்துப் பரிஹாரம் காணமுடியுமா?

அரசியல்வாதிகளின் பிடியில் கோயில்கள் சிக்கியிருக்கும் வரையில் இத்தகைய அக்ரமங்கள் நடந்துகொண்டுதான் இருக்கும். சிருங்கேரி பீடாதிபதியின் அறிக்கையை மறுத்துக் கொண்டையா கொடுத்திருக்கும் அறிக்கையும் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. 'நாங்கள் ஆகமத்தை மாற்றச் சொல்லவில்லை' என்று காமகோடி கொடுத்திருக்கும் கபட நாடக அறிக்கையும் பத்திரிகையில் வெளிவந்துள்ளது. இன்றுள்ள 'ஜனநாயக' அமைப்பின்கீழ் நாம் மத்திய அரசுக்கு 'மகஜர்' அனுப்பினாலும் ஒன்றும் நடக்காது. சென்ற இரு மாதத் தலையங்கங்களில் தெரிவித்தபடி ஸுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடுப்பதொன்றே சரியான பரிஹாரமாகும்.

பெயரை வெளியிட விரும்பாத ஓரன்பர்.

17. 2-11-86 தாய் இதழ் 54-ம் பக்கத்தில் ஒரு விளம்பரம் வந்திருக்கிறது. அதனைக் கத்தரித்து இத்துடன் அனுப்பியுள்ளேன். இந்த ஒரு பக்க விளம்பரத்தில் இரண்டு கருத்துக்கள் கண்டிக்கத்தக்கவை. அவை :—

1. நாயன்மார்களின் பாடல்களுக்கு உள்ள "மகிமை வியாபகம் ஆழ்வார் செய்யுள்கட்கு இல்லை".

2. சிவனுக்குச் சமமாக விஷ்ணுவை நினைத்தல் நரகத்தை நல்கும்.

பல மதத்தினரும் படிக்கும் 'தாய்' இதழில், நாயன்மார்கள் பாடல்களைவிட ஆழ்வார் செய்யுட்கள் தாழ்ந்தது என்றும், சிவனைவிட விஷ்ணு தாழ்ந்தவன் என்றும் ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருப்பது — வைணவர்கள் அனைவரின் கண்டனத்திற்கும் உரியது.

http://acharya.org

ஸ்ரீஸுதர்சநம் மட்டும்தான் இந்தப் பணியைச் செய்ய வேண்டுமா? மற்ற வைஷ்ணவப் பத்திரிகைகளுக்கும் ஸ்ரீமடங்களுக்கும் இந்தப் பொறுப்பு இல்லையா?

ஸ்ரீவைஷ்ணவர் அனைவர்க்கும் இதைக் கண்டிக்கவேண்டிய பொறுப்பு உண்டு. கிளர்ச்சி செய்வதும் வழக்குத் தொடுப்பதும் செய்யாவிட்டாலும், சில நூறு ரூபாய்கள் செலவழித்து, "ஆழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தத்துக்குள்ள பெருமை நாயன்மார் பாடல்களுக்கு இல்லை; விஷ்ணுவுக்குச் சமமாகச் சிவனை நினைத்தல் நரகத்தை அளிக்கும்" என்று அதில் குறித்து அதை அனுப்பி "தாய்" பத்திரிகை விளம்பரமாக வெளியிடுகிறதா என்று தன்மானமுள்ள ஸ்ரீவைஷ்ணவர் எவராவது 'தாய்' பத்திரிகையின் நடுநிலைமையைச் சோதித்துப் பார்க்கலாம்.

M. வரதராஜன், திருப்பதி

18. ஸப்தகிரி அக்டோபர் 1986 இதழில் பக்கம் 43-ல் 'வேங்கடமும் விண்ணகரும்' என்ற தலைப்பில் டாக்டர் வி. என். வேதாந்த தேசிகன் (மதுரை) என்பவர் எழுதிய கட்டுரையில்— "வேங்கடமும் விண்ணகரும்......நின்றான் இருந்தான்......என்றால் கெடுமாமிடர்; (77) ;என்கிற பொய்கையாழ்வார் பாசுரத்திற்கு உரை வழங்கிய பெரியவாச்சான் பிள்ளை இப்பாசுரத்தின் முன்னுரையில் (அவதாரிகை) "'உகந்தருளின தேசங்கள் பூமியில் உண்டாயிருக்க, ஸம்ஸாரமுண்டோ' என்று சொல்லி, 'இருந்தான்' என்பதற்கு வைகுந்தம் என்று குறிப்பிட்டுள்ளார்" என்றும், "விண்ணகர் என்பதற்குப் பூமியிலுள்ள திவ்ய தேசமாகக் கொள்ளாது மேல் வீடாக — வைகுந்தமாக அர்த்தம் செய்வது பொருந்தவில்லையே!" என்றும், "பரம காருணிகர் அடியேனைப் பொறுத்தருள்க!" என்றும் கிண்டலாக எழுதியுள்ளார். விமர்சிக்க வேண்டுகிறேன்.

வ்யாக்யான சக்ரவர்த்தியான பெரியவாச்சான் பிள்ளையைக் கிண்டல் செய்யுமளவுக்கு இக்காலத்தில் எவருக்கும் தகுதியில்லை. "வேங்கடத்தில் நின்றான்; விண்ணகரில் இருந்தான்; வெஃகாவில் கிடந்தான்; நீள்கோவலில் நடந்தான்" என்று ஆழ்வார் நாலு திவ்யதேசங்களில் நாலு திருக்கோலங்களில் உள்ளதாகத் தெளிவாக அருளிச்செய்துள்ளார். அப்படியிருக்க, இங்கு நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கும்

http://acharya.org

திருவிண்ணகரை 'விண்ணகர் இருந்தான்' என்பதற்குப் பொருளாகக்கொள்வது ஆழ்வார் திருவுள்ளத்திற்குச் சிறிதும் பொருந்ாது. அதனுலேயே பெரியவாச்சான்பிள்ளை பரமபதத்தைப் பொருளாகக் கொண்டார். இப்பாட்டில் அருளிய பெரும்பாலான திவ்யதேசங்கள் பூமியிலிருப்பதைத் திருவுள்ளத்திற்கொண்டு "உகந்தருளின தேசங்கள் பூமியில் உண்டாயிருக்க, ஸம்ஸாரமுண்டோ" என்று அவதாரிகையுமிட்டார். இதில் பொருந்தாமை ஏது? உண்மையில், குல்லாய்க்குத் தக்கபடி தலையைச் சீவுவாரைப்போலே, "பொய்கையாழ்வார் ஸேவித்தபோது, இன்று நின்று ஸேவைதரும் திருவிண்ணகரப்பன் ஒருக்கால் அமர்ந்த திருக்கோலமாகக் காட்சி கொடுத்திருந்தால்? யார் மறுக்க முடியும்? யாரே அறிவர்?" என்று இவர் எழுதுவதன்றே பொருந்தாததாகவும், சிரிக்கத்தக்கதாகவும் உள்ளது!

T. S. நரசிம்மன், சிங்கப்பெருமாள்கோயில்

19. 30—10—86 அன்று சென்னைத் தொலைக்காட்சியில் கிருபானந்தவாரியார் தம் சொற்பொழிவில் அடிமுடி தேடிய கதையைக் கூறுகையில், ஸ்ரீமந் நாராயணனைப்பற்றி 'மிகத் தாழ்ந்தவன்' என்றும், 'நீசன்' என்றும், 'தாமஸகுணம்' என்றும் கூறினர். இவருக்கு வேத சாஸ்திரங்கள் ஏதாவது தெரியுமா?

இவர் வடமொழிகூடச் சரியாக அறியாதவர்; தமிழ் நூல்கள் சிலவற்றைக் கற்றுப் பாமரமக்களை மயக்குவது தவிர வேறு அறியாதவர். நமது ஸாத்விக விஜயம், சங்ககாலத் தமிழர் சமயம் முதலான பல நூல்களில் அடிமுடி தேடிய கதை முதலானவை வேதசாஸ்திரங்களிலும், சங்க நூல்களிலும், பழைய வடமொழிக் காவியங்களிலும் தொடப்படாத கட்டுக் கதை என நிரூபித்திருக்கிறோம்; திருமாலே பரம ஸத்வகுணமுடைய முழுமுதல்வன் என நிலைநாட்டியுள்ளோம். அவற்றுக்கு எந்த பதிலையும் சொல்ல இயலாத இவர் T. V., வானொலி போன்ற பொதுமேடைகளில் ஒரு பொய்யைத் திருப்பித் திருப்பிப் புலம்புவதின் மூலம் மெய்யாக்கப் பார்க்கிறுர். T. V. நிர்வாகிகளுக்கு இவ்வடாத செயலைக் கண்டித்து வைஷ்ணவர்கள் ஆயிரக்கணக்கில் கடிதம் எழுதவேண்டும்.

http://acharya.org

T. ரங்கராமானுஜய்யங்கார், பள்ளத்தூர்.

20. 13-வது கேள்வி பதிலில், திரு. முரு. பழ. இரத்தினஞ் செட்டியாரின் வாதங்கள் அடியோடு பொருந்தாதவை என்று தேவரீர் நிரூபித்திருப்பதைக் குறிப்பிட்டுச் செட்டியாருக்கு விளக்கங்கோரிக் கடிதம் எழுதினேன். இதுவரையில் எந்த பதிலும் இல்லை. தேவரீருக்கு ஏதாவது பதில் வந்ததா?

நமது மறுப்பைப்பெற்று சுமார் ஒரு மாதம் ஆனபின்பு திரு. செட்டியார் ஏழு பக்கங்கொண்ட ஒரு கட்டுரையை அனுப்பி, அதை ஸுதர்சனத்தில் வெளியிட்டு பதில் கூற வேண்டும் என்று எழுதியிருந்தார். அக்கட்டுரையில் தாம் விளக்கவேண்டிய நூற்றுக்கணக்கான கம்பன் பாடல்களில் ஒன்றுக்குக்கூட விளக்கம் எழுதவில்லை. இவர் கொள்கைக்கு முரணான ஆழ்வார் பாடல்களில் ஒன்றைக்கூடத் தொடவே யில்லை. க்ஷீராப்₃தி₄நாத₂னைக்காட்டிலும் பரமபத₃நாத₂ன் வேறு பட்டவன் எனக்காட்ட ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸபுராணங்களி லிருந்து ஒரு துணுக்கைக்கூட எடுத்துக்காட்டவில்லை. தாம் ஏற்கனவே எடுத்திருக்கும் ஒருசில கம்பன் பாடல்களையே எடுத்து, பழைய விதண்டாவாதங்களையே புதிய சொற்களில் எழுதியிருக்கிறார். இதை ஸுதர்சனத்தில் வெளியிடச்செய்து, தாம் ஏதோ பதில் எழுதிவிட்டதுபோன்ற மயக்கத்தைச் சில ருக்கு ஏற்படுத்தி, ஒரு ப்ரமாணமுமில்லாத இவரது துரீய ப்₃ரஹ்மவாத₃த்திற்குப் பசையுண்டாக்கப்பார்க்கும் முயற்சியே யிது. அவருக்கு அவரது வாதங்களின் பொய்ம்மையையும், அவர் செய்யவேண்டிய காரியங்களையும் விளக்கி ஓர் கடிதம் எழுதினோம். அதைப்பெற்ற பின்பு, தமது கட்டுரையை வெளியிட இயலாவிடினும் தமது ஒரு கேள்விக்காவது பதி லிறுக்கவேண்டும் என்று கோரி ஓர் கேள்வியை எழுதியனுப்பி யுள்ளார். நமது பதில் கடிதத்தை இனி அச்சிட்டு, அவரது கேள்வியை அடுத்த கேள்வியாகக் கொடுத்து பதிலளிக்கிறோம். இதற்குமேல் அவர் ஏதாவது அச்சிட்டு நமக்கு அனுப்பினால் அதை ஆராயச் சித்தமாயிருக்கிறோம்.

திரு. முரு. பழ. இரத்தினஞ் செட்டியாருக்கு ஸுதர்சனரின் கடிதம்

திரு முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்களுக்கு அன்புடன் எழுதியது. தங்கள் கடிதம் நேற்று கிடைத்தது.

http://acharya.org

அதிலும் விதண்டாவாதங்களையே பெய்திருக்கிறீரேயொழிய "பரமபதத்தில் திருமால், பிரமன், உருத்திரன் ஆகிய மூவரும் சேர்ந்த உருவமாகப் பரந்தாமன் இருக்கிறான்" என்பதற்கு ஒரு பிரமாணத்தையும், ஒரு கம்பன் பாடலையுங்கூடக் காட்டவில்லையே.

பத்திரிகையை 4 மாதம் எனக்கு அனுப்பாமலிருந்த தற்கு "மலரின் உபரிபிரதி கிடைக்கவில்லை" என்று விதண்டா வாதம் செய்கிறீர்; ரங்கராமாநுஜய்யங்கார் ஸ்வாமி செய்தது போல ஒரு கைப்பிரதி எடுத்து அனுப்பியிருக்கலாமே! இப்போது அச்சுப்பிழை என்று நீர் வாதமிடும் "ஒருருவில்" என்னும் பாடத்தை அதில் திருத்தியும் அனுப்பியிருக்கலாமே! ஆகையால் பிழை உமது உள்ளத்திலேயேயொழிய அச்சிலல்ல எனத்தெளிவாக விளங்குகிறது. நான் தினவடங்க விளக்கி பதில் சொல்லியிருக்கும் சில கம்பன் பாடல்களை எடுத்து, திருப்பித்திருப்பி உமது விதண்டாவாதங்களையே செய்கிறீர்! அப்பாடல்களில் ஒன்றுகூட, "பரமபதத்தில் மூன்று மூர்த்தி யுருவமும் சேர்ந்தவனாகப் பரந்தாமன் இருக்கிறான்" என்று காட்டவில்லையே! கம்பன் பாடல்கள் மட்டுமல்ல, கம்பன் பிரமாணமாகக் கொண்ட வேதங்களிலோ, ஸ்ம்ருதிகளிலோ, இதிஹாஸங்களிலோ, புராணங்களிலோ, சங்கநூல்களிலோ, அருளிச்செயல்களிலோ ஒரு துணுக்குக்கூட இப்படிக் கூற வில்லையே! நேர்மாறாக இந்த ப்ரமாணங்களில் ஆயிரக்கணக் கானவையும், கம்பன் பாடல்களில் நூற்றுக்கணக்கானவையும் பரமபதத்தில் பரந்தாமன் ஸ்ரீ பூமிநீளாதேவி நாயகனாய், சங்கசக்ராதிபஞ்சாயுததரனாய், அநந்தகருடவிஷ்வக்ஸேநாதி நித்யஸூரிகளோடு கூடியவனாயிருக்கிறான் என்றல்லவோ முழங்குகின்றன! நீர்சொல்லும் அபத்தக்கொள்கை உண்மை யானால் பரமபதத்தில் ஸ்ரீபூமிநீளாதேவிகளோடு கூட ஸரஸ் வதியும், பார்வதியுமன்றோ பரந்தாமனுக்குப் பத்தினிகளா யிருக்கவேண்டும்! இப்படி எந்தப் பிரமாணமும் கூறவில்லையே! இவற்றிலிருந்து சைவத்திற்போல வைஷ்ணவத்தில் த்ரி மூர்த்யுத்தீர்ணவாதம் கிடையாது என்பது கையிலங்கு கனியாக விளங்குகிறதே! "முதலாம் திருவுருவம்" "முதலா வார் மூவரே" முதலான பாடல்களில் ஆழ்வார்கள் உத்தீர்ண வாதத்தை உதறித்தள்ளியிருக்கிறார்களே! பரந்தாமனும்

http://acharya.org

திருமாலும் வேறுயிருந்தால் பரந்தாமன் கோயிலும், திருமால் கோயிலும் தனித்தனியாகக் காணப்பட வேண்டுமே! எங்கும் இப்படியில்லையே! இவற்றுக்கெல்லாம் ப்ரமாணங்களைக் காட்டி நூல் எழுதி உமது கொள்கையை நிலைநாட்ட இயலாமல், உமது விதண்டாவாதக் கடிதத்தை, என்னை ஸுதர்சனத்தில் வெளியிடச் சொல்லுவது எந்தவிதத்தில் நியாயமாகும்? அடுத்தவருடம் கம்பன்கழகமலரிலேயே சென்ற இதழில் வெளி வந்த எனது மறுப்பையும், அதற்கு உமது பதிலையும் அச்சிடச் செய்தால் உமது விதண்டாவாதம் கம்பன் கழகக்காரர்களுக்கே வெட்டவெளிச்சமாகிவிடும். அப்படி வெளியிட்டால் மறக்காமல் எனக்கு ஒரு பிரதி அனுப்பவும்.

முரு. பழ. இரத்தினம் செட்டியார், புதுக்கோட்டை.

21 "முளரிமேல் வைகுவான்" என்னும் பாடலில் கம்பன் "தனித்தனி மும்மூர்த்திகளுக்கும் இராமபிரான் ஒப்பாகமாட்டான்" என்றும், "மூவரும் சேர்ந்தால் ஒப்பாவான்" என்றும் சொல்கிறான். பிறந்த பிறப்பால் சிறப்புறுகிற இராமன் தனித் தனி மும்மூர்த்திகளுக்கு இணையாகமாட்டான் என்பது பொருந்தும். மூவரும் சேர்ந்தால் இணையாகிவிடுவான் என்பது எப்படிப் பொருந்தும்? தனித்தனியாக உள்ள மூவர்க்கு ஒப்பாகாத இராமன் மூவரும் சேர்ந்தால் மட்டும் ஒப்பாகிவிடுவான் என்பதற்குரிய காரணத்தை விளக்க வேண்டுகிறேன்.

திரு. செட்டியார் கேள்வியைச் சரியாக அமைக்கவில்லை. "மும்மூர்த்திகளும் சேர்ந்தால் இராமனுக்கு ஒப்பாவரேயன்றி, தனித்தனி ஒப்பாகமாட்டார்கள் என்று கம்பன் கூறுவது எப்படிப் பொருந்தும்?" என்று கேள்வியை அமைத்திருக்க வேண்டும். இனி, பதில் கூறுகிறோம். பரமாத்மாவுக்கு உவமைகூறும் வால்மீகி முதலான ரிஷிகளும், ஆழ்வார்களும், கம்பன் முதலான கவிகளும் பல தேவர்களையும் பல ஜடப் பொருள்களையுங்கூட ஒவ்வொரு விஷயத்தில் உவமையாகக் கூறுகிறார்கள். வால்மீகியும் தம் ஸ்ரீராமயாணத்தில் "விஷ்ணு இராமனுக்கு வீர்யகுண விஷயத்திலே ஒப்பாவார்; நீர்மை, எளிமை முதலான மற்ற பல குணங்கள் விஷயத்தில் ஒப்பாக மாட்டார்' என பாலகாண்டத்தின் தொடக்கத்தில் முழங்கியிருக்கிறார். இராமனுடைய குணங்களுக்கு ஓரிடத்தில் உவமை காணமாட்டாமல் பலவிடங்களில் ஒப்புத்தேடி "பொறுமையில்

http://acharya.org

பூமியை ஒப்பான்; அறிவில் பிருஹஸ்பதியை ஒப்பான்; வீர்யத்தில் இந்திரனை ஒப்பான்; (இல்லையில்லை) யமனும் இந்திரனும் சேர்ந்தால்தான் வீர்யத்தில் அவனுக்கு ஒப்பாவார்கள்; உறுதியில் மலையை ஒப்பான்'' என்றெல்லாம் அயோத்யாகாண்டத்தின் தொடக்கத்தில் வாய்வெருவியுள்ளார், இதனால் "இவ்வளவு தேவர்களும், ஜடப்பொருள்களும் சேர்ந்ததொரு கூட்டே பரந்தாமன் என்பதே வால்மீகியின் கருத்து'' என்று முடிவுகட்டிவிட முடியுமா? இதுபோலவே, 'மூவரும் சேர்ந்தால் இராமனுக்கு ஒப்பாவரேயன்றி, தனித்தனியே மும்மூர்த்திக்கும் ஒப்பாகமாட்டார்கள்'' என்று கம்பன் கூறியதால், மும்மூர்த்திகளும் சேர்ந்ததொரு கூட்டாகவே பரமபதத்தில் பரந்தாமன் எழுந்தருளியிருக்கிறான் என்று ஒருபோதும் தேருது. இப்படியெல்லாம் ஞானிகள் பரமபுருஷனுக்குப் பலபல பொருள்களை உவமையாகக் கூறுவது "உண்மையில் எப்பொருளும் அவனுக்கு எவ்விதத்திலும் ஒப்பாகமாட்டாது'' என்னும் கருத்தை உடையதேயாகும் என்பதை நம்மாழ்வார் தாமே தாமரை, பொன் முதலான பலபல பொருள்களைப் பரமாத்மாவுக்குப் பலபலவிடங்களில் உவமையாகக் கூறிவிட்டு,

> "கட்டுரைக்கில் தாமரை நின் கண் பாதம் கையொவ்வா
> சுட்டுரைத்த நன்பொன் உன்திருமேனி ஒளி ஒவ்வாது
> ஒட்டுரைத்து இவ்வுலகு உன்னைப் புகழ்வெல்லாம்
> பெரும்பாலும்
> பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதி''
>
> [திருவாய் 3-1-2]

என்னும் பாடலில் முடிவுகட்டுகிறார். இதே ரீதியில் கம்பன் "மும்மூர்த்திகளும் தனித்தனியே இராமனுக்கு ஒப்பாகமாட்டார்கள்; சேர்ந்தால் ஒப்பாகலாம்'' என்று கூறுவது "உண்மையில் மூவரும் சேர்ந்தாலும் அவனுக்கு ஒப்பாகமாட்டார்கள்'' என்னும் கருத்துடையதே என்பது அறிவாளிகளுக்கு எளிதில் விளங்கும். இப்பாடலால் "மும்மூர்த்திகளும் சேர்ந்ததே பரம்பொருள்'' என்பதே கம்பனின்கருத்து எனத்தேருது என்பது சிற்றறிவினர்க்கும் விளங்கும். இதற்குமேலும் செட்டியார் ஏதேனும் எழுதவிரும்பினால், அதைப் பொறுப்புள்ளதொரு வெளியீட்டில் அச்சிட்டு நமக்கு அனுப்பலாம்.

http://acharya.org

N. S. பத்மநாபன். புதுடெல்லி.

22. 11—1—87 'விகடன்' கடைசிப் பக்கத்தில் கோரமான ஒரு பெண் உருவத்தை வரைந்து அதற்கு 'ஆண்டாள் மாமி' என்று பெயர் வைத்து "காலே வேளை டென்ஷனில் அந்த மாமிக்கு திருப்பாவை கொஞ்சம் தடுமாறி விட்டது" என்று குறிப்பெழுதி, 'மார்கழித் திங்கள்' என்னும் திருப்பாவை முதல் பாட்டைத் தாறுமாருக மாற்றி அச்சிடப்பட்டிருக்கிறது. இதைக் கண்டித்து விகடன் ஆசிரியருக்குக் கடிதம் எழுதினேன். யாதொரு பதிலு மில்லே. விமர்சிக்கவேண்டுகிறேன்,

'ஹாஸ்யம்' என்னும் பெயரில் வைஷ்ணவர்களின் சின்னங் களேயும் அவர்கள் வேதமாகக் கொண்டாடும் திவ்யப்ரபந்தங் களேயும் பரிகசித்துப் பொதுஜனப் பத்திரிகைகளில் எழுதுவது இது முதல் தடவையல்ல. 'துக்ளக்', 'விகடன்' 'தாய்' போன்ற பொது ஜனப் பத்திரிகைகள் இதை அடிக்கடி செய்து வருகின்றன. "வைஷ்ணவர்கள் உணர்ச்சியற்ற மரக்கட்டை கள்" என்னும் எண்ணத்தால் இப்படி நடந்து வருகிறது. கிறிஸ்துவர்களின் பைபிளேயோ, இஸ்லாமியர்களின் குர் ஆனேயோ, சைவர்களின் தேவார திருவாசகங்களேயோ இவர்கள் இப்படி இழிவுபடுத்தத் துணியமாட்டார்கள். வைஷ்ணவர்களில் பெரும்பான்மையினர் சமய உணர்ச்சியற்றிருக்கும் வரையில் இப்படி நடந்து கொண்டுதான் இருக்கும்.

கி. ஜகந்நாதன், சென்னே-28.

23. சமீபத்தில் எனது குழந்தைக்கு(மணல்வாரி) அம்மை கண்டிருந்தது. எனது நண்பரொருவர் "மகமாயி இருப்பதால் பெருமாள் திருவாராதனத்தை நிறுத்தி விடுங்கள். மாரியம்மன் கோவிலுக்குச் சென்று ஜலம் விடுங்கள்" என்று சொன்னுர். நான் அதன்படி செய்யவில்லே. குழந்தைக்கும் சரியாகித் தலேக்கு ஜலம் விட்டாயிற்று. பலருக்குக் கண் திறக்கும்படி இதில் தெளிவு பிறப்பிக்கவேண்டுகிறேன்.

http://acharya.org

நம் நாட்டைப் பிடித்திருக்கும் சாபக்கேடுகளில் மகமாயிக்கும் அம்மை நோய்க்கும் தொடர்பு ஏற்படுத்துவதும் ஒன்று. அம்மைஎன்பது நோய் தவிர வேறல்ல என்று விஞ்ஞான பூர்வமாக நிருபிக்கப்பட்ட உண்மை, சென்ற தலைமுறை வரை பல உயிர்களைப் பலி வாங்கி வந்த பெரியம்மை நோய் தடுப்பு மருந்துகள் செலுத்துவதன் மூலம் இந்நாட்டில் அடியோடு ஒழிக்கப்பட்டு விட்டது. இந்த நோய் ஒரு தெய்வத்தின் கோபத்தினால் விளைவதாயிருந்தால் இது எப்படி சாத்தியமாகும்? ஆகையால் ஸ்ரீவைஷ்ணவர்கள் கர்மவசத்தால் உண்டாகும் பல நோய்களில் ஒன்றான இந்தநோய்க்கு எம்பெருமானைத்தவிர எந்த தெய்வத்தையும் ப்ரார்த்திக்க வேண்டிய அவசியமில்லை. எம்பெருமானையும் நோய்கள் தீரப் ப்ரார்த்திக்காமலிருப்பது தலை சிறந்த ஞானிகளின் நிலை. ஆகையால் "திருவாராதனத்தை நிறுத்த வேண்டும். மாரியம்மன் கோவிலுக்குப் போக வேண்டும்" முதலான அபத்தமான உபதேசங்களுக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் எவரும் செவி சாய்க்க வேண்டியதில்லை.

N. ராமன், கும்பகோணம்.

24. ஆதி சங்கரர் "தேவதைகளுக்கு சரீரமுண்டு, நமது உலகம்போல் அவர்களுக்கும் ஸ்தூல வடிவுடன் தேவலோகங்கள் உண்டு" என்று ஏற்றுக்கொண்டிருக்கிறாரா? பிரமாணம் காட்டி விளக்கவேண்டுகிறேன்.

ஆதி சங்கரர் தமது பாஷ்யங்களில் இதிகாஸ புராணங்களிலிருந்து பலமேற்கோள்களைக்காட்டுகிறார். அவ்விதிகாஸபுராணங்களில் தேவர்களுக்கும் ஸ்தூலமான வடிவங்களும் உலகங்களும் உண்டு என்று காணப்படுகிறது. குறிப்பாக கீதையில் 11-வது அத்தியாயத்தில் கண்ணனுடைய விச்வரூபத்திலே எல்லா தேவர்களும் காணப்படுவதாக உள்ளது. "ப்,ரஹ்மாணம் ஈசம்

http://acharya.org

கமலாஸநஸ்தம்'' என்று பிரமன் தாமரையில் வீற்றிருப்ப தாகக் காணப்படுகிறது. ஆதி சங்கரரும் இத்தகையவிடங்களில் தேவர்களுக்கு உருவம் உண்டு என்றே பாஷ்யமிட்டிருக்கிறார். தேவாதி தேவனான கண்ணனின் உருவத்தையும் வர்ணித்திருக் கிறார். "ஆப்ரஹ்மபுவநால்லோகா:" என்ற கீதாச்லோகத்திலும், அதன் பாஷ்யத்திலும் ப்ரஹ்மலோகம் முதலான தேவதை களின் லோகங்கள் உண்டு என்றும், அவை அழியக்கூடியவை என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

P. R. வஸந்தகுமார், வேலூர் (வ. ஆ)

25. வேதக் கடவுளரில் உண்மையான பரமாத்மா யார்? அவரைப் பற்றி வேதங்களில் என்ன கூறியிருக்கிறது? அப்பர மாத்மாவுக்குப் பெயர் உண்டா? உருவமுண்டா? அவர் தான் பரமாத்மா என்று தெரிந்து கொள்வதற்கு ஏதேனும் அடை யாளம் உண்டா?

வேதங்கள் 'விஷ்ணு' என்றும் 'ஹரி' என்றும் 'புருஷன்' என்றும் 'நாராயணன்' என்றும் பெயர்கொண்ட தேவனே எல்லா தெய்வங்களுக்கும் மேலான பரதெய்வம் என்று பல இடங்களில் முழங்குகின்றன. நமது விஷ்ணுசித்த விஜயம் முதல் இரண்டு பாகங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்கங்களில் நூற்றுக்கணக்கான வேதவாக்கியங்களைக் காட்டி இதை நிலை நாட்டியிருக்கிறோம். நம் தமிழ்நாட்டில் மிகப் பழைய நூல்க ளான சங்க நூல்களில் ஒன்றான பரிபாடலில் பல இடங்களில் 'திருமால்' ஒருவனே அனைத்துலகையும் படைத்து அளித்து அழிப்பவனாய், மோக்ஷத்தை அளிக்கவல்லவனான பரம்பொருள் என்று வேதங்கள் முழங்குவதாகக் கூறப்பட்டிருக்கிறது. நம் முடைய சாதி மத ஆராய்ச்சி, சங்ககாலத் தமிழர் சமயம், ஸ்ரீவைஷ்ணவ மத விஜயம் முதலான நூல்களில் இதை அசைக்கமுடியாதபடி நிலைநாட்டியிருக்கிறோம். இனி, அவ னுக்குப் பெயரும், உருவமும் உண்டா? எனில், உலகத்தி லுள்ள எல்லாப் பொருள்களின் பெயரும் பரமாத்

http://acharya.org

மாவின் பெயர்களேயானாலும், தன் பெயர்களில் பலவற்றைத் தன்னால் படைக்கப்பட்ட பொருள்களுக்குக் கொடுத்து, ''நாராயணன்'' முதலான சில பெயர்களைத் தனக்கே உரியவை யாக அவன் கொண்டிருக்கிறான் என்று சாஸ்த்ரங்கள் முழங்கு கின்றன. உலகமெல்லாம் அவனுக்கு உருவமானாலும் திருமக ளைத் திருமார்பில் தரித்ததாய், பஞ்சாயுதங்களை ஏந்தியதாய், பீதாம்பரத்தை தரித்ததாய், கிரீடம் ஹாரம் கௌஸ்துபம் முதலான ஒப்பற்ற திவ்யாபரணங்களை உடையதான அப்ராக் ருதத் திருமேனியையும் பக்தர்களின்பொருட்டு அவன் ஏற்றுக் கொண்டிருக்கிறான் என்றும் சாஸ்திரங்கள் முழங்குகின்றன. பிரமன் படைக்கும் கடவுள் என்றும், திருமால் ரக்ஷிக்கும் கடவுள் என்றும், சிவன் அழிக்கும் கடவுள் என்றும் பிரஸித்தி இருந்தபோதிலும், படைக்கும் கடவுளான பிரமனைத் தன் உந்தித்தாமரையில் படைத்தவன் திருமாலே என்றும், அப்பிரமனையும், அழிக்கும் கடவுளான சிவனையும் பிரளய காலத்தில் விழுங்கித் தன் வயிற்றில் வைத்து ரக்ஷிப்பவனும், பிறகு ஸ்ருஷ்டி காலத்தில் உமிழ்ந்து வெளிப்படுத்துபவனும் திருமாலே என்றும் எல்லா சாஸ்திரங்களிலும் பண்டைச்சான்றோர்களின் நூல்களிலும் காணப்படுவதொன்றே திருமாலே முழுமுதற் கடவுள் என்ப தற்கு அசைக்க முடியாத அடையாளமாகும். வராகாவதாரத்தில் உலகத்தை யெல்லாம் எடுத்தது, திரிவிக்ரமாவதாரமெடுத்து உலகையெல்லாம் அளந்தது, பிரமன் உருத்திரன் முதலான தேவர்கள் இரணியன், இராவணன் முதலான அசுரர் அரக்கர் களால் அல்லல்படும்போது திருமாலே அவதரித்து வந்து அவர் களின் இடர்களை நீக்கியது முதலியவை 'அவனே பரம் பொருள்' என்பதற்கு எவரும் மறுக்க முடியாத அடையாளங்கள். இவற்றின் விரிவு நமது முற்கூறிய நூல்களில் காணலாம்.

http://acharya.org

K. A தேவராஜன், நெல்லை.

26. பிப்ரவரி மார்ச் 87, "கலைமகள்" பத்திரிகையில் காமகோடிப் பெரிய பீடாதிபதி எழுதியுள்ள கட்டுரைகளில் பிரம்மா லக்ஷ்மி, சிவன் சரஸ்வதி, விஷ்ணு பார்வதி ஆகிய மூன்று ஜோடி இரட்டைப் பிறவிகளும் பராஶக்தியிட மிருந்து தோன்றினார்கள் என்றும், மூன்று மூர்த்தி மூன்று சக்தி மூன்று குணம் மூன்று நிலை என்றும் ஏதேதோ கூறிக் குழப்புகிறார். இவற்றுக்கு ஏதேனும் பிரமாணம் உண்டா?

வேதத்திலும் ஸ்ம்ருதிகளிலும் இதிஹாஸங்களிலும் ஸாத்விக புராணங்களிலும் பண்டைச் சான்றோர்கள் இயற்றிய தென்மொழி வடமொழிக்காவியங்களிலும் இவற்றுக்கு அணுவளவும் ஆதாரமில்லை, மிகப்பிற்காலத்தில் எழுந்த ஶாக்த நூல்கள் எதிலாவது இப்படிப் பிதற்றியிருக்கக்கூடும். 'விஷ்ணுவின் நாபீகமலத்தில் பிரமன் உண்டானான்' என்பது வேதம் முதலான ஶாஸ்த்ரங்களிலும், பழையகாவியங்களிலும் ஆயிரக்கணக்கான இடங்களில் முழங்கப்படும் விஷயம்; இந்த நாட்டில் பாமரமக்களுக்கும் தெரிந்த விஷயம். அதன்படி விஷ்ணு பத்னியாக வேதங்களில் கொண்டாடப்படும் லக்ஷ்மீதேவிக்குப் பிரமன் பிள்ளையாகிறான். அப்படியிருக்க, ஓர் ஆதாரத்தையும் காட்டாமல் லக்ஷ்மீதேவி பிரமனுக்கு ஸஹோதரி என்று கதைக்கிறார் பீடாதிபதி. அதுபோலவே சதபதப்ராஹ்மணம் முதலான பல வேதபாகங்களிலும் மற்றும் ஆயிரக்கணக்கான இதிஹாஸ புராணவசனங்களிலும் உருத்திரன் பிரமனின்பிள்ளையாகப் பேசப்படுகிறான், அதன்படி பிரமனின் பத்னியான ஸரஸ்வதி சிவனின் தாயாகவேண்டும். அப்படியிருக்க, அவளை சிவனின் ஸஹோதரி ஆக்குகிறார் பீடாதிபதி. முற்கூறிய சாஸ்திர வசனங்களின்படி உருத்திரன் விஷ்ணுவுக்குப் பேரனாக வேண்டும். அதன்படி சிவனின் பத்னியான பார்வதி விஷ்ணுவுக்குப் பேரன் மனைவி ஆகவேண்டும். அப்படியிருக்க, பார்வதியை விஷ்ணுவுக்கு ஸஹோதரி ஆக்குகிறார் பீடாதிபதி. தாய்க்கும் ஸஹோதரிக்கும் பேரன் மனைவிக்கும் வித்தியாசம் தெரியாத எவனோ ஒருவன் எழுதிவைத்த பொய்ந்நூலை ஆதாரமாகக்கொண்டு, அந்நூலின் பெயரைச்சொன்னால் அதன் சாயம் வெளுத்துவிடுமே என்று பயந்து அதன் பெயரையும்

http://acharya.org

சொல்லாமல் மனம்போனபடி பீடாதிபதி கதையளப்பது கண்டு நல்லோர்கள் சிரிப்பார்களேதவிர இப்பிதற்றலுக்கு மதிப்பு அளிக்கமாட்டார்கள். முப்பது வருடங்களுக்கு முன் "விஷ்ணுவுக்குத் தமோகு,ணமுண்டு" என்று எல்லாப்பத்திரிகைகளிலும் வெளியிட்டார் இப்பீடாதிபதி. ஆயிரக்கணக்கான பிரமாணங்களைக் காட்டி இதைமறுத்து ஸாத்விக விஜயம் என்னும் நூலை நாம் எழுதினோம். அதற்கு ஓர் உபந்யாஸத்தின் மூலம் பதில் அளிக்க முயன்றார் பீடாதிபதி அவருடைய வாதங்களை 'ஸாத்விக விஜய ஸந்தேஹபரிஹாரம்' என்னும் கட்டுரையில் தகர்த்தெறிந்தோம். ஸாத்விகவிஜயமும், ஸந்தேஹபரிஹாரமும், மற்றும் பல கட்டுரைகளும் அடங்கிய 'ஸாத்விகவிஜய ஸர்வஸ்வம்' என்னும் நூல் பல பதிப்புகள் ஏறி ஆயிரக்கணக்கான வாசகர்கள் பாராட்ட நிற்கின்றது. பீடாதிபதியோ அவரது ஶிஷ்யர்களோ இன்றுவரை அந்நூலை மறுக்கத் துணியவில்லை. பொய்யைப் பாமரமக்கள் நம்பிடச் செய்ய வேண்டும் என்னும் கெட்ட எண்ணத்தாலே லக்ஷக்கணக்கான பாமரமக்கள் படிக்கும் பொதுஜனப் பத்திரிகைகளில் ஓர் ஆதாரமும் காட்டாமல், வேதம் முதலான ஶாஸ்த்ரங்களுக்கும் தமது பரமாசார்யரான ஆதிசங்கரரின் பா,ஷ்யங்களுக்கும் முரணாக "விஷ்ணுவுக்குத் தமோகு,ணமுண்டு. பராஶக்தியிடமிருந்து மும்மூர்த்திகளும் அவரது பத்னிகளும் தோன்றினார்கள்" என்று கதை அளக்கும் இவரை ஓர் வைதிகர் என்றோ, ஆதிசங்கரரின் பரம்பரையில் வந்தவர் என்றோ நல்லோர்கள் ஏற்கமாட்டார்கள்.

ஸ்ரீமதாண்டவன்ஸ்வாமியின் சதாபிஷேக மஹோத்ஸவ வித்வத்ஸதஸ்ஸில் ஸுதர்சனர் "ப்ரயோஜனவத்த்வாதி,கரணம்" பற்றி வாக்யார்த்தம் விண்ணப்பித்தபோது, ஸ்ரீமதழகியசிங்கர் லோகோபகாரார்த்த,மாக ஸுதர்சனரைக் கேட்ட கேள்வி.

27. ப்ரயோஜனவத்த்வாதிகரணத்தில் எம்பெருமான் உலகைப்படைப்பதற்குக் கேவல லீலைதவிர வேறு பயனில்லை என்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது. ப்ரயோஜனமென்பது தனக்காகவுமாகலாம், பிறர்க்குமாகலாம். இங்கு கேவலலீலை தவிர எம்பெருமானுக்கு வேறு பயனில்லாவிடினும், இவ்வுலகிலுள்ள ஸம்ஸாரி ஜீவர்களுக்கு ப,க்தியையோ ப்ரபத்தியையோ அனுஷ்டி,த்து எம்பெருமானை அடைவது பயனாகையால் ஸூத்ரத்தில் கேவலலீலை பயன் என்றது எப்படி ஒட்டும்?

http://acharya.org

ஜீவர்கள் எம்பெருமானையடைவது அவர்களுக்குப் பயனு வதுபோலவே, எம்பெருமான் ஜீவர்களை அடைவது அவனுக்குப் பெரும்பயனாக ஆகும். அந்தப் பயனைக் கருதியே அவன் உலகைப் படைக்கிறான் என்பதை *''சோம்பாது இப் பல்லுருவை யெல்லாம் படர்வித்த வித்தா''* [பெரிய திருவ 18] *''ஒன்றியொன்றி உலகம் படைத்தான்''* [திருவாய் 3-9-10] *''ஆள்பார்த்துழிதருவாய்''* [நான் திரு. 60] என்று ஆழ்வார் களும் அருளினார்கள். இப்படி எம்பெருமானுக்கும் பெரும் பயனாய், அவன் குழந்தைகளான ஜீவர்களுக்கும் பயனாயிருக் கும் சேதன லாபத்தை ஸூத்ரகாரர் இங்கு ஏன் ஓதுக்கினார்? என்னும் கேள்வி எழுகிறது. இதற்கு பதில் பின்வருமாறு:- எம்பெருமான் சேதன லாபத்தைக் கருதியே உலகைப்படைக் கின்றபோதிலும், பெரும்பாலான ஜீவர்கள் விஷயத்தில் அது அவனுக்கு நிறைவேறுவதில்லை. லீலாரஸமே ஸித்திக்கிறது. உத்திஷ்டமான (கருதிய) பலம் சேதன லாபமாயிருந்தாலும் பலிக்கும் (நிறைவேறும்) பலம் லீலாரஸமே ஆகிவிடுவ தாலேயே ஸூத்ரகாரர் கேவல லீலையே ப்ரயோஜனம் என்றார். [ஸ்ரீமதழகியசிங்கர் வித்வான்களை ஸதஸ்ஸில் அவ்வப்போது கேட்கும் கேள்விகளுக்கு வித்வான்கள் அளிக்கும் ஸாரமான பதில்களையும், வித்வான்கள் பதில்கூற இயலாதபோது ஸ்ரீம தழகியசிங்கர் கூறும் பதில்களையும் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவிலும் வெளியிட்டால் லோகோபகாரமாயிருக்கும்.]

முன் கேள்வியின்மேல் நடுநிலையாளர்கள் கேட்கக்கூடிய கேள்வியும் அதற்குப் பதிலும் ஸுதர்சனராலேயே அங்கு விண்ணப்பிக்கப்பட்டன. அவை பின்வருமாறு:—

28. பரமகாருணிகனான எம்பெருமானுக்கு, தன்னால் படைக்கப்பட்ட ஜீவர்கள் படும் துன்பம் ஆனந்தத்தை விளைப் பதாய், லீலாரஸத்தை அளிக்கிறது என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?

''பலபல மாயமயக்குக்களால் இன்புறும் இவ்விளையாட் டுடையானைப்பெற்று'' [திருவாய் 3-10-7] என்னும் பாசுரத்தின் வ்யாக்யானங்களில் நஞ்சீயர், பெரியவாச்சான்பிள்ளை நம் பிள்ளை ஆகிய மூவரும் இதே கேள்வியை எழுப்பிக்கொண்டு பின்வருமாறு பதில் அளித்திருக்கிறார்கள். ''எம்பெருமான் கருணையாலே ஜீவர்களை ரக்ஷிக்க நினைத்து அவர்களுக்கு

http://acharya.org

தேஹேந்த்ரியங்களைக் கொடுத்துப் படைத்து, ஶாஸ்த்ரத்தைக் கொடுத்து, அவதாரங்கள் முதலான பல முயற்சிகளையும் செய்தாலும், அது இச்சேதனர்க்கு அனிஷ்டமாயிருக்கிற இருப்பு சிரிப்பை விளைத்து அவ்வழியாலே அவனுக்கு லீலா ரஸத்தை விளைப்பவையாய் விட்டது'' என்பது பதிலின் ஸாரம், இந்த பதிலை ஸுதர்சனர் விண்ணப்பித்தவுடன் சில வித்வான்கள் ''இது நிர்வேதமும் (துக்கம்) ஆகுமேயொழிய ஆனந்தத்தை விளைக்காது. பாபகர்மத்தின் பலனாக இவர்களுக்கு தண்டனையாகத் துன்பத்தை அளித்தபின் 'இவர்கள் நம்மை அடைவதற்குத் தடையாயிருந்த ஒரு பாபம் கழிந்ததே' என்று எம்பெருமான் அடையும் ஆனந்தமே லீலாரஸம்'' என்று ஆக்ஷேபித்தார்கள். ''முந்நீர் ஞாலம்படைத்த'' [திருவாய் 3-2-1] வ்யாக்யானத்தில் இவ்விஷயம் உள்ளதாகவும் கூறினார்கள். பகவத்விஷயம் மூன்றும்பத்து ஸ்ரீகோசத்தைக்கொண்டு வரச் சொல்லி ஸுதர்சனர் ப்ரார்த்தித்தும், அங்கு கொண்டு வருவார் எவருமில்லை. சேதனர்கள் ஸம்ஸாரத்தில் துன்பமுறுவதைக்கண்டு எம்பெருமான் துன்பமடைகிறான் என்பதும் ஒரு ஶாஸ்த்ரார்த்தம், அதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அதேசமயத்தில், தான் நல்லதை நினைத்து இவர்களுக்கு ஶரீரேந்த்ரியங்கள் முதலானவற்றைக்கொடுக்க, அந்த ஶரீரேந்த்ரியங்களைக்கொண்டு தான் கருதிய நல்லதை விரும்பாமல், தங்களுக்குத் தீயதை விளைக்கும் கார்யங்களையே செய்வதைக் காணும்போது எம்பெருமானுக்கு ஒரு சிரிப்பு உண்டாவதும் உசிதமேயாகும். ''கொடுத்த சைதன்யம்தான் பொதுவாய், ருசிபேதத்தாலே வழிவிலங்கிப்போய், அனர்த்தத்தை விளைத்துக்கொண்டிருக்கிறபடியைக்கண்டு 'நாம் ஒன்றை நினைத்துச் செய்ய இவை ஒன்றைச் சூழ்த்துக்கொண்டபடி கண்டாயே' என்று பிராட்டி முகத்தைப்பார்த்து ஸ்மிதம் பண்ண, அது கோல்விழுக்காட்டாலே லீலாரஸமாய்த்தலைக்கட்டும்'' என்பது [3-10-7] ஈட்டு ஸ்ரீஸூக்தி-ஆகையால் இதுவே லீலாரஸமாகும். 'து:க்கானுபவத்தால் பாபம் கழிந்ததே' என்று எம்பெருமான் நினைப்பது த்ருப்தியாகுமேயொழிய ஆனந்தமாகாது. ஆகையால், [3-10-7] மூன்று வ்யாக்யானங்களிலும் காட்டப்பெற்றதே கேள்விக்குப் பொருத்தமான பதிலாகும். ''முந்நீர் ஞாலம் படைத்த'' [திருவாய் 3-2-1] பாசுரத்திலோ அதன் வியாக்யானங்களிலோ லீலையைப்பற்றிய பேச்சேயில்லை.

http://acharya.org

8. முரளி, அந்தணநல்லூர்

29. 'இதயம் ஜூன் 7-13 இதழில் 'ஜாதிகள் இல்லைய(ா)டி பாப்பா!' என்னும் தலைப்பில் ஆசிரியர் மணியன் எழுதியுள்ள கட்டுரையில் "இந்திய சமூக அமைப்பிலிருந்து ஜாதியை அகற்ற முடியாது; அப்படி ஒழிக்க முடியும் என்று சொல்வதெல்லாம் பிரசாரமாய்மாலம் என்கிற உண்மைதான் உறுதியாகிறது" என்றும், "எனவே ஜாதி ஒழிப்பு என்கிற மாயையிலிருந்து விடுபட்டு ஜாதியை அங்கீகரித்துக்கொண்டு ஜாதிகளுக்கிடையேயான ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க முயல்வதுதான் யதார்த்தமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. உங்களுக்கு?" என்றும் முடிவுகட்டியிருக்கிறார். சைவ வைணவ பேதத்தை ஒழிக்கவேண்டும் என்னும் எண்ணத்துடன் 'ஞானபூமி' பத்திரிகையை நடத்தி அதில் வைணவமதத் தலைவர்கள் கூறுவதை மாற்றியும் திரித்தும் வெளியிட்டு வைணவமதத்தை ஒழிக்கமுயலும் இவருக்கு 'மதங்களையும் ஒழிக்கமுடியாது' என்னும் ஞானோதயம் பிறக்குமா?

காமகோடிப் பீடாதிபதி ஆணைப்படி 'ஞானபூமி'யைத் தொடங்கி அதில் வைணவத்தைப் பல வழிகளில் திரித்துக் கூறிவரும் இவருக்கு அந்த "ஞானோதயம்" பிறக்கும் என்று தோன்றவில்லை. சிவனே பரம்பொருள் என்னும் அடிப்படைக் கொள்கையுடைய சைவமும், விஷ்ணுவே பரம்பொருள் என்னும் அடிப்படைக்கொள்கையுடைய வைணவமும் மற்றும் பல நூற்றுக்கணக்கான முக்கியமான கொள்கைகளில் வேறுபட்டு நிற்கின்றன என்பது இவர் அறியாததல்ல. ஆயினும் "உலகம் பொய், ஜீவனும் பிரம்மமும் ஒன்றே, ஸகுண ப்ரஹ்மம் நாராயணனே" என்னும் ஆதிசங்கரரின் பாஷ்யங்களில் தெளிவாகக் காணப்படும் வைஷ்ணவாத்வைதக் கொள்கையிலிருந்து வெகுதூரம் விலகி, "ஆதிசங்கரர் சைவம், வைணவம் முதலான ஆறு மதங்களை ஸ்தாபித்தார்" என்னும் பொய்யை உறுதியாகப்பற்றிக்கொண்டு முன்னுக்குப்பின் முரணாக "சிவனே பரம்பொருள், சக்தியே பரம்பொருள், மும்மூர்த்திகளும் ஒன்றே, சிவனும் விஷ்ணுவும் சமமானவரே, மும்மூர்த்திக்கும் மேற்பட்ட ஏதோ ஒன்று பரம்பொருள்" முதலான

http://acharya.org

சமய சந்தர்ப்பவாதங்களைப் புரிந்துவரும் காஞ்சிகோடி பீடாதிபதியின் நியமனத்தால், இந்தப் பித்தலாட்டத்தின் மொத்த உருவமான கொள்கைகளைப் பரப்புவதற்காக 'ஞானபூமி' பத்திரிகையை நடத்திவரும் இவருக்கு "சைவமும் வைணவமும் எவராலும் எக்காலத்திலும் ஒன்றுக்க முடியாத தனித்தனி மதங்களே. இவற்றைப் பின்பற்றுகிறவர்கள் பரஸ்பர சகிப்புத்தன்மையுடன் தம்தம் மதங்களில் உறுதியாக நிற்பதே இந்து சமூகத்தின் பலபிரிவினரிடையே ஒற்றுமையையும் நல்லொழுக்கத்தையும் உண்டாக்கும்" என்னும் வெளிப்படையான உண்மை விளங்காது. "எம்மதமும் சம்மதம் என்னும் கொள்கை பித்தலாட்டத்தின் மொத்த உருவமே" என்பதை இஸ்லாம் மதத்தை உறுதியாகப் பின்பற்றிவரும் மூன்று மௌலானாக்களின் கட்டுரைகள் அடங்கிய ஓர் புத்தகம் மிகத் தெளிவாக நிலைநாட்டுகிறது. இப்புத்தகம்பற்றிய விமர்சனத்தைக் கீழே தருகிறோம்.

புத்தக விமர்சனம்.

எம்மதமும் சம்மதம் ஓர் ஆய்வு:— வெளியீடு : இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், இஸ்லாமிக் ஃபவுண்டேஷன் காம்ப்ளக்ஸ், 78, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை-600 012, விலை ரூ. 4-50.

இஸ்லாமியமதம் ஒன்றே உண்மையான மதம் என்னும் உறுதியுடைய மூன்று மௌலானாக்கள் எழுதிய மூன்று தமிழ்க்கட்டுரைகளில் 'எம்மதமும் சம்மதம்' என்ற வாதம் ஆராயப்பட்டுள்ளது. "இந்த வாதம் பித்தலாட்டத்தின் மொத்த வடிவம்" என்றும், "இதைக்கூறுபவர்கள் ஒன்றும் அறியாத அப்பாவிகளாயிருக்கவேண்டும்; அல்லது வேண்டுமென்றே மக்களை ஏமாற்றும் கயவர்களாயிருக்கவேண்டும்" என்றும், "இந்தக் கொள்கைக்கு அறிவுப்பூர்வமான எந்த அடிப்படையுமில்லை. அது வெறும் குழப்பங்களை மட்டுமே ஏற்படுத்தும் ஒரு குளறுபடி வாதமாகும். மேலும் உண்மையைத் துணிச்சலுடன் ஒப்புக்கொள்ளும் இயல்பையும் அது மங்கச் செய்துவிடுகிறது" என்றும் இந்தக்கட்டுரைகளில் பல ஆதாரங்களைக் காட்டி விளக்கப்பட்டிருக்கிறது. சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பே 'சர்வசமய சமரசம்' என்னும் நூலில் நாம் போலிச்சமரச வாதத்தை விரிவாக மறுத்திருக்கிறோம். இஸ்லாமியர் ஓரே

http://acharya.org

பிறவியை ஒப்புக்கொள்கையால் அவர்கள் மற்ற மதங்களோடு சகிப்புத் தன்மையோடு வாழ இடமில்லை என்பதும், அனாதி வைதிக மதமான வைஷ்ணவத்தில் வேதசாஸ்திரங்களின் அடிப்படையில் ஜீவனுக்குப் பல பிறவிகளை ஒப்புக்கொள்கையால், இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள், ஏன் நாஸ்திகர்கள்கூட இறைவனது ஒப்பில்லாக் கருணையாலே இனிவரும் பிறவிகளில் ஒன்றில் உய்வு பெறுவதற்கு வழியிருக்கையாலே நமது மதத்தில் மத சகிப்புத்தன்மைக்குப் பெரிதும் இடமுள்ளது என்பதும் நடுநிலையாளர்களால் குறிக்கொள்ளத்தக்கது. போலிச்சமரச வாதிகளுக்குச் சவுக்கடி கொடுக்கும் இந்நூல் உண்மையை மதிப்பவர்களால் பாராட்டத்தக்கது.

V ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்

30. 21-6-'87 'கல்கி'யில் காமகோடிப் பெரிய பீடாதிபதி "இஷ்டதெய்வம் என்று ஒன்று இருக்கலாம். ஆனால் அதுதான் எல்லாமாயிருக்கிறது என்பதால் அதுவேதான் மற்ற தெய்வங்களுமாயிருக்கிறது என்ற எண்ணம் இருக்கவேண்டும். ஒன்றைப் பிடித்துக்கொண்டதற்காக இன்னொன்றை நிந்திக்கக் கூடாது. விஷ்ணுதான் கடவுள் சிவன் ஒரு ஜீவன்—அல்லது சிவன்தான் கடவுள் விஷ்ணு ஒரு ஜீவன் என்றால்கூட ஒரு மூர்த்தியிடம் துவேஷம் பாராட்ட இடமில்லை. ஒருத்தர் ஸ்வாமி இன்னொருத்தர் பக்தர் என்றாலும் பக்தருக்குரிய மரியாதையைச் செய்யத்தானே வேண்டும்" என்றும், "பகவானைப் பூஜிக்கிற மாதிரியே பாகவதர்களையும் பூஜிக்கவேண்டும் என்று வைஷ்ணவர்கள் சொல்கிறார்கள். சிவனைப்போலவே சிவனடியாரையும் வழிபடவேண்டும் என்று சைவர்களும் சொல்லுகிறார்கள். பூஜை செய்பவரை நாம் நமஸ்கரிக்கத்தான் வேண்டும்" என்றும் கூறியிருக்கிறார். இதில் தெளிவு பிறப்பிக்க வேண்டுகிறேன்.

வேதசாஸ்திரங்கள் "எல்லா தெய்வங்களுக்கும் மேலான பரமாத்மா நாராயணன் ஒருவனே; மற்ற தெய்வங்கள் அனைவரும் அவனால் படைக்கப்பட்டவர்கள், ரக்ஷிக்கப்படுபவர்கள், பிரளய காலத்தில் ஸம்ஹரிக்கப்படுபவர்கள், அவனுக்கு அவயவமாயிருப்பவர்கள், நாராயணனொருவனைச் சரணமடைந்தால் தான் மோக்ஷம் கிட்டும், சிவன் முதலான மற்ற தெய்வங்களை வணங்குபவர்களுக்கு அல்ப பலன்கள் கிடைக்குமேயொழிய

http://acharya.org

மோக்ஷம் கிட்டாது, ஆகையால் மற்ற தெய்வங்கள் அனைவரையும்விட்டு, மோக்ஷத்தை விரும்புபவர்கள் நாராயணனொருவனையே பற்றவேண்டும்'' என்று பல இடங்களில் முழங்குகின்றன. இதை விஷ்ணுசித்தவிஜயத்தில் ஆயிரக்கணக்கான பக்கங்களில் நிலைநாட்டியிருக்கிறோம் நாம். கீதாபாஷ்யம் முதலானவற்றில் ஆதிசங்கரரும் இப்படியே முழங்கியிருக்கிறார். பீடாதிபதியின் வாதத்தை ஒப்புக்கொண்டால், இந்த வேதசாஸ்த்ர வாக்யங்களுக்கும் ஆதிசங்கரர் பாஷ்யத்துக்கும் முரணாக பிரமன், சிவன், இந்திரன், சந்திரன், கறுப்பு, காட்டேறி முதலான எந்த தெய்வத்தை வணங்கினாலும் மோக்ஷம்கிடைக்கும் என்று ஒப்புக்கொள்ளவேண்டி வரும். வேதசாஸ்திரங்களை ஆராய்ந்து ''ஒரு தெய்வமே பரதெய்வம்; மற்றவர்கள் ஜீவர்கள்'' என்று கூறுவது உண்மை உரைப்பதாகுமேதவிர ஒருவரையும் நிந்திப்பதாகாது. யானையை யானை என்றும், கழுதையைக் கழுதையென்றும் கூறினால் இது கழுதையை நிந்திப்பதாகவோ கழுதையிடம் துவேஷம் பாராட்டுவதாகவோ ஆகுமா? ''பக்தர் என்னும் முறையில் சிவனை வணங்கக்கூடாதா?'' என்பது அடுத்த கேள்வி. ''தமோகுணமிகுதியாலே ஒவ்வொரு சமயத்தில் பகவானோடு எதிரம்பு கோப்பவர்களாய், அஸுரராக்ஷஸர்களுக்கு அற்பபலன்களை அளிப்பவர்களாய், பரமாத்மாவுக்குத் தாழ்வைக் கூறும் தாமஸமான ஆகமங்களை வெளியிட்டவர்களான தெய்வங்களை, அவர்கள் சிலசமயங்களில் பக்தர்களாயிருந்தபோதிலும் மோக்ஷமடைய விரும்பும் பரம ஸாத்விகர்கள் வணங்குவதில்லை'' என்பது இதற்கு பதில்.

''ப்₃ரஹ்மாணம் ஶிதிகண்ட₂ம் ச யாஶ்சாந்யா தே₃வதா: ஸ்ம்ருதா: ।
ப்ரதிபு₃த்₃தா₄ ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் ப₂லம் ॥''
[பா₄ர·ஶாந்தி 350·36]

[பிரமனையும் சிவனையும் மற்ற தே₃வர்களையும் அறிவாளிகள் ஸேவிப்பதில்லை. ஏனெனில்: அவர்கள் அளிக்கும் ப₂லம் அல்பமன்றோ] என்னும் ஒருபிரமாணமே இவ்விஷயத்தை விளக்கப் போதுமானது.

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்.

31. "ஸ்ரீரங்கநாத பாதுகா" ப்ரபவ ஆவணி இதழில் ஸ்ரீரங்கம் வித்வான் நாவல்பாக்கம் வரதாசாரியரால் எழுதப் பெற்ற "அரங்கனின் லீலைகள்" என்னும் கட்டுரையில் ஸுதர்சனர் பதில் பத்தாவது சதகம் 27, 28 கேள்விகளுக்கு பதில் எழுத முயற்சி செய்யப்பட்டுள்ளது. திருநாமமிட்டோ "ஸுதர்சனம்" ஆசிரியர் என்றோ தேவரீரைக் குறிக்காமல் "ஒருவர்" என்று குறிப்பிட்டு எழுதியுள்ளார் இவர். "ஒப்பற்றவர்" என்னும் பொருளில் அதுவும் பொருத்தமாகவே உள்ளது! அக்கட்டுரையினுல் விளைந்துள்ள குழப்பங்களைத் தெளிவு படுத்த வேண்டுகிறேன்.

இக்கட்டுரை எழுதியவர் கீர்த்தி மூர்த்தியான மதுராந்தகம் ஸ்வாமியின் ஜாமாதா (மாப்பிள்ளை). நாம் தலைமையேற்றிருக்கும் உபய வேதாந்த ப்ரசார ஸபையில் வித்வானுயிருப்பதால் நம்மை நன்கு அறிந்தவரே. ஆகையால் நமது பெயரையோ 'இது ஸுதர்சனர் பதிலில் வந்தது' என்பதையோ குறிப்பிட்டு எழுதியிருக்கலாம். அப்படியெழுதினுல் வாசகர்கள் நமது கருத்தையும் அறிந்துகொண்டு விடுவார்களாகையாலே அதைத் தவிர்க்க விரும்பினுர்போலும்! நிற்க. ஸ்ரீமதழகிய சிங்கர் தம் வினுவில் "எம்பெருமான் ஜீவர்களைப் பெறுதல்" என்னும் ப்ரயோஜனத்தைக் குறிப்பிடவேயில்லை என்பது ஸ்ரீமதாண்டவன் முதலான அனைவர்க்கும் தெரியும். அவர் சொல்லாததை ஏறிட்டு எழுதியுள்ளார் இவர். இதுவும் நிற்க. விஷயத்தை ஆராய்வோம். ஸ்ரீமதழகியசிங்கர் கேட்ட கேள்வியும் அதற்கு அடியேன் அளித்த விடையும், ப்ரயோஜநவத்த்வாதிகரணத்தின் பூர்வபக்ஷ ஸித்தாந்தங்களின் மேல் உத்ஸூத்ரமாக எழுந்தவை: எம்பெருமானுடைய ஸ்ருஷ்டிக்கு உத்₃தி₃ஷ்டமான ப₂லன் சேதநலாப₄ம் என்பது ஆழ்வார்களுடைய ஸ்ரீஸூக்திகளிலிருந்து தேறுவது; சேதனர்களுக்குக் கிடைக்கும் பயனும் வேறு அதிகரணங்களிலிருந்து தேறுவது; இவ்வதி₄கரணத்துக்கு விஷயமல்ல. "ஜகத் ஸ்ருஷ்டிக்குப் பயனே இல்லாமையால் ப்₃ரஹ்மம் ஜக₃த்காரணமாக முடியாது" என்பது பூர்வபக்ஷம். "லீலையாகிற பயனே ப்₃ரஹ்மத்துக்கு உண்டாகையால் ப்₃ரஹ்மம் ஜக₃த்காரணமாக மூடியும்" என்பது ஸித்₃தா₄ந்தம். "கருதிய பயன் சேதனலாபம், ப₂லித்த பயன் அது அல்ல" என்பதெல்

லாம் இவ்வதிகரணத்திற்கு அப்பாற்பட்ட ப்ரமாணங்களைக் கொண்டு செய்யப்படும் விசாரங்கள். இதைப் புரிந்துகொள்ளாமல் அவற்றை இவ்வதிகரணத்திற்குட்பட்டவையாகக் கொண்டு "ப்ரஶ்னோத்தரங்கள் அபிந்நவிஷயமாக இருத்தல் வேண்டும்" இத்யாதிகளை 14-ம் பக்கத்தில் எழுதியிருப்பது எழுதுபவரின் குழப்பத்தையே வெளிப்படுத்துகிறது. இனி முக்கிய விஷயத்திற்கு வருவோம். "படைப்பு முதலியன போலவே ஸம்ஸார விமோசனம் எனப்படும் சேதனலாபச் செயலும் லீலையாகும். இதையே ஆளவந்தார், 'த்வதாஶ்ரிதாநாம் ஜகத்த்பவஸ்திதி ப்ரணாஶ ஸம்ஸார விமோசநாதய: பவந்தி லீலா:' என்று காட்டினார்" என்பது இவரது வாதம். இதுவும் லீலா ஶப்தம் இரண்டு பொருள்களில் வழங்கப்படுவதை ஆராயாமையால் இவருக்கு விளைந்த குழப்பமேயாகும். "உலகைப்படைத்து அளித்து அழித்தல், மோக்ஷமளித்தல் முதலான லீலைகள் (அநாயாஸமான செயல்கள்) உன்னுடைய அடியார்களின் பொருட்டே செய்யப்படுகின்றன" என்னும் ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியில் "அநாயாஸமான செயல்" என்னும் பொருளில் லீலா ஶப்தம் வழங்கப்பட்டது. '*லோகவத்து லீலாகைவல்யம்*' [2-1-33] [உலகில் (*அரசர்களுக்குப்* பந்தாடுவது முதலான செயல்களைப்) போலே கேவல லீலா ரஸமே (ஜகத்ஸ்ருஷ்டி முதலானவற்றுக்குப்பயன்)] என்னும் ஸூத்ரத்திலோவெனில், லீலா ஶப்தம் ஜகத்ஸ்ருஷ்டி முதலான அநாயாஸமான காரியங்களால் எம்பெருமானுக்கு விளையும் தாதாத்விகரஸம் (அப்போதைக்குவிளையும் ஆனந்தம்) என்னும் பொருளில் வழங்கப்படுகிறது. ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியில் "ஸம்ஸார விமோசனம் முதலான லீலாரஸமாகிற தாதாத்விகரஸம் உன் அடியார்களுக்காகவே" என்னும் பொருள் பொருந்தாது. "ஸம்ஸார விமோசனம் முதலான அநாயாஸமான செயல்கள் உன் அடியார்களுக்காகவே" என்னும் பொருளே பொருந்தும். ஸம்ஸார விமோசனச் செயலும் எம்பெருமானுக்கு அநாயாஸமான செயலேயாகையால் அப்பொருளில் லீலா ஶப்தத்தை வழங்கும்போது ஆளவந்தார் ஸம்ஸாரவிமோசனத்தைச் சேர்த்ததில் எக்குறையுமில்லை. ஆனால் "லீலாகைவல்யம்" என்னுமிடத்

http://acharya.org

தில் லீலாஶப்₃த₃த்தால் அநாயாஸமான செயல் கருதப்படவில்லை. தாத₃ாத்விகரஸமே கருதப்படுகிறது. ஆனால் சேதனர் அடையும் யாவதா₃த்மபா₄வியான பேரின்பமோ, பரம சேதனன் அடையும் பெரும்பயனான சேதந லாப₄மோ அப்போதைக்கு உண்டாகும் இன்பமல்லவே; எல்லாக்காலத்திலும் அநுப₄விக்கப்படும் பேரின்பமன்றோ. ஆகையால் "*லீலா கைவல்யம்*" என்ற ஸூத்ரத்தில் லீலா ஶப்₃த₃த்தில் சேதநலாப₄ரஸத்தைச் சேர்க்கவே இயலாது, ப்₃ரஹ்மத்திற்கு ஜக₃த்ஸ்ருஷ்டி முதலானவற்றால் விளையும் *பயனைப்பற்றிப்பேசும்* அதி₄கரணத்தில் லீலா ஶப்₃த₃த்திற்கு லீலாரஸம் பொருளாக முடியுமேயொழிய ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியிற்போலே லீலைச்செயல் பொருளாக முடியாது என்பதைக்கூட அறியாமல் "சேதனலாபம் லீலாரஸமாகாதுபோனால் சேதனலாபச் செயலான ஸம்ஸாரவிமோசனம் லீலையாகாதன்றோ?" என்று எழுதுகிறார். லீலாஶப்₃த₃ம் ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியில் "அநாயாஸமான செயல்" என்னும் பொருளிலும், "*லீலா கைவல்யம்*" என்னும் ஸூத்ரத்தில் 'தாத₃ாத்விகரஸம்' என்னும்பொருளிலும்வழங்கப் பட்டுள்ளது என்னும் வாசியை இவர் புரிந்துகொள்ளாமல் குழப்புகிறார் என்று தேறிற்று. அநந்தஸ்தி₂ரப₂லனான மோக்ஷஸுகத்தையும் ஜக₃த்ஸ்ருஷ்ட்யாதி₃களுக்குப் பயனாக ஸூத்ரகாரர் கருதியிருந்தால், ஸூத்ரத்தில் "லோகவத்" என்னும் பத₃மும், அதன் பா₄ஷ்யாதி₃களும் பொருந்தமாட்டா; "*லீலா கைவல்யம்*" என்பதற்கு பதிலாக "*ஆநந்த₃ கைவல்யம்*" என்றே ஸூத்ரமிருக்கவேண்டும். இன்று (18-8-87) வந்த ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஆசிரியர் ஸ்வாமியின் "தேசிகாசயம்" என்னும் கட்டுரையின் இறுதிப்பாராவுக்கும் இதுவே பதில். ஆகையால் 28, 29வது கேள்விகளின் பதிலில் நாம் எடுத்துக்காட்டிய நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை ஆகிய மஹாசார்யர்களின் வ்யாக்யானத்தின்படி, தான் கருதிய நல்லதைவிரும்பாமல் தங்களுக்குத் தீயதையே விருப்பி விளைத்துக்கொள்ளும் சேதனர்களின் இயல்பைக் காணும்போது, எம்பெருமானுக்குக் கோல் விழுக்காட்டாலே உண்டாகும் சிரிப்பினால் விளையும் தாத₃ாத்விகரஸமே லீலாரஸமாகும் என்பது கல்வெட்டாயிற்று.

http://acharya.org

இனி "ஸம்ஸாரி சேதனரின் துன்பத்தைக்கண்டு தான் துக்கித்தல்தான் கருணை. அது நிர்ஹேதுகம். ஸஹேதுகமான கருணையே பகவானுக்குக் கிடையாது" என்று சிலர் கூறுவதாகத் தொடங்கி, "ஸ்ரீபாஷ்யம் ஶ்ருதப்ரகாஶிகா ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திகளில் கருணையை துக்க ரூபமாகக் கூறுது பிறர் துன்பத்தைத் துடைக்க எண்ணுதலே கருணை என்று நிருபணம் செய்யப்பட்டது. 'வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்₄ருஶம் ப₄வதி து₃:க்கி₂த:' என்பது அவதார த₃சையில் அபிநயமாத்ரம் என்று விமர்சிக்கப்பட்டது" என்பதிருக எழுதியிருப்பவற்றை ஆராய்வோம். "ஸஹேதுகமான கருணையே பகவானுக்குக் கிடையாது" என்று எந்தப் பூர்வாசார்யரும் கூறியதில்லை. பகவத் ஸந்நிதியில் வந்து கன்னத்தில் 'பளார்பளார்' என்று அறைந்துகொள்பவர்களைக்கண்டு ஆவாவென்று இரங்கி, அவர்கள் விரும்பும் க்ஷுத்₃ர ப₂லன்களை எம்பெருமான் அளிக்கிறான் என்பதையோ, மோக்ஷ ஸாத₄னங்களுக்குப் ப₂லனாக மோக்ஷத்தையே எம்பெருமான் அருள்கிறான் என்பதையோ எவரும் மறுக்கவில்லை. "நிர்ஹேதுக ஸஹேதுககருணைகள் இரண்டும் எம்பெருமானுக்கு உண்டு; எம்பெருமான் படிப்படியாகச் சேதனரைத்திருத்தி, கடைசியில் தனது நிர்ஹேதுககிருபைக்கு இலக்காக்குவதற்காவே ஸஹேதுககிருபைகளைச் செய்கிறான்" என்றே பல பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகள் காட்டுகின்றன. கருணாலக்ஷணத்தைக் கூறும்போது பூர்வாசார்யர்கள் "பரது₃:க்க₂ து₃:க்கி₂த்வம்" என்றும், "பரது₃:க்கா₂ஸஹிஷ்ணுத்வம்" என்றும் பிறர் துன்பத்தைப்பொறுமல், தானும் துன்புறுகையை லக்ஷணமாகக் கூறியிருப்பதோடு கருத்து வேறுபாடுகொண்டு, தேசிகன் 'பரது₃:க்க₂நிராசிகீர்ஷா'(பிறர் துன்பத்தைப் போக்க வேண்டும், என்னும் விருப்பம்) என்று லக்ஷணம் கூறினார். 'வ்யஸநேஷு மநுஷ்யாணாம்' முதலானவற்றில் அவதாரங்களில் பிறர் துன்பங்களைக்கண்டு துன்புற்றது அபிநயமாத்ரமே என்றும் உரைத்தார். இக்கருத்தை ஸ்ரீ பாஷ்யகார ஶ்ருதப்ரகாஶிகாகாரர்களின்மேல் ஏறிடுவது கற்பனையேயாகும். "ஆ ஆ என்று அருள்" "ஆ! ஆ! என்று இரங்கு" என்று ஆழ்வார்களும் ஆண்டாளும் பலவிடங்களில் "எம்பெருமான்

http://acharya.org

சேதனர்படும் துன்பத்தைக்கண்டு, ஹாஹாகாரம் செய்து அதைப் பொறுமல் துன்புறுவதே இரக்கம்" என்று காட்டினர்கள். இதை அடியொற்றியே "த₃யா பூ₄தேஷு—ஸர்வ பூ₄தேஷு து₃:க்கா₂ஸஹிஷ்ணுத்வம்" [கீ₃தாபா₄ஷ்யம் 16-2] [எல்லா ஜீவர்களும் படும் துன்பத்தைக்கண்டு பொறுக்காமையே 'பூ₄தேஷு த₃யா' எனப்படுகிறது] முதலான இடங்களில் ஸ்ரீபா₄ஷ்யகாரரும், "காருண்யம் ஸ்வார்த்த₂நபேக்ஷா பரது₃:க்க₂ாஸஹிஷ்ணுதா" [ஶரணாக₃தி க₃த்₃யபா₄ஷ்யம்-சூர்ணை 5] [தன் பயனைக் கருதாது பிறர்துன்பங்கண்டு பொறுக்காமை காருண்யமாகும்] முதலானவிடங்களில் ஶ்ருதப்ரகாஶிகாகாரும் கருணைலக்ஷணத்தை அருளினர். ஸ்ரீபராஶரப₄ட்டரும் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பா₄ஷ்யத்தில், "அதி₄காரீ ஜீவோऽபி ஹி ஸ்வயம் ஸ்வஸ்ய யதா₂ ஸுக₂து₃:க்கா₂பி₄மாநீ, ததா₂ தத₃தி₃ஶயேந வா தத₃வஸ்தா₂பி₄மாநீ ஹி ப₄க₃வாந்' ['கர்த்தா' என்னும் 382-வது திருநாமத்தின் பா₄ஷ்யம்] [ஓர் காரியத்தைச் செய்ய உரிமையுடையவனும், அதன் பயனை அனுப₄விப்பவனுமான ஜீவன் அக்கர்மப₂லமான இன்ப துன்பங்களை எப்படித் தன்னுடையவையாகவே கருதுகிறானோ, அப்படியே, அல்லது அதற்கு மேலாகவே அவ்வின்பதுன்பங்களைத் தன்னுடையவையாகவே அபி₄மானிக்கிறானன்றோ எம்பெருமான்] என்று அருளிச்செய்து, 'வ்யஸநேஷு' என்று தொடங்கும் ஸ்ரீராமாயண ஶ்லோகத்தை அதற்கு ப்ரமாணமாகக் காட்டுகிறார். அடுத்ததான 'விகர்த்தா' என்னும் திருநாமத்தின் பா₄ஷ்யத்தில் "அத ஏவ தத்ப₄வயோகே₃ந ஹர்ஷஶோகாதி₃பி₄: விகுர்வாண: விகர்த்தா [ஸ்வார்த்த₂ ஹர்ஷஶோகாத்₃யபா₄வேऽபி பரார்த்த₂ தத்ப்ரஸக்தி: அதோ₃ஷ: 1 அந்யதா₂ பரது₃:க்க₂து₃:க்கி₂த்வாத₃யோ கு₃ணா: கத₂மஸ்ய ஸ்யு:" [இப்படி ஜீவர்களுடைய கர்மப₂லமான இன்ப துன்பங்களைத் தன்னுடையவையாகக்கொண்டு விகாரத்தை அடைபவனாகையாலே எம்பெருமான் "விகர்த்தா' எனப்படுகிறான். தன் காரியத்தால் அவனுக்கு இன்பதுன்பங்கள் விளையாவிடினும், பிறர் படும் இன்பதுன்பங்களைத் தன்னுடையவையாகக் கொண்டு விகாரமடைவது குற்றமில்லையே! இல்லாவிடில் ஸ்ரீராமாயணத்தில்கு₃ணங்களைக்கூறிவரும்போது '(ஸ்ரீராமபிரான்) பிறர் துன்பங்கண்டு மிகுதியாகத் துன்புறுகிறான். அவர்களது

http://acharya.org

இன்பங்களில் தந்தைபோலே இன்புறுகிறான்" என்று கூறியது எப்படிப் பொருந்தும்?] என்று பாஷ்யமிடுகிறார் 4-10-2 ஈடு வ்யாக்யானத்தில் பட்டர் பற்றியதோர் ஐதிஹ்யத்தில், "பரம பதத்திலும் ஸம்ஸாரிகள் படுகிற க்லேசத்தை அநுஸந்தித்து எம் பெருமான் திருவுள்ளத்திலே வெறுப்போடேயாயிற்று எழுந் தருளியிருப்பது" என்று பட்டர் அருளிச்செய்ய, இதைக் கேட்ட சிலர் 'பரமபதத்திலே ஆனந்தம் நிறைந்திருக்குமிடத்தில் துன்பத்தோடிருந்தான் என்பது உசிதமோ?' என்று கூறியதாக ஒருவர் பட்டரிடம் வந்து விண்ணப்பம் செய்ய, "'மனிதர்கள் துன்புறும்போது அவர்களைக்காட்டிலும் ஸ்ரீராமன் மிகுதியாகத் துன்புறுகிறான்' என்று வால்மீகி கூறியது ஸ்ரீராமனுடைய குணத் தைச் சொல்லும்போதோ? குற்றத்தைச் சொல்லும்போதோ? என்று நீர் அவர்களைக் கேட்டிருக்கவேண்டாமோ? இது குண மானால் பரமபதத்தில் இல்லாததொரு குணம் அவதார நிலையில் மட்டும் உண்டு என்று சொல்ல முடியுமோ?" என்று பட்டர் அருளினார் என்று நம்பிள்ளை அருளியிருப்பது இவ்விஷயத்தில் பட்டருடைய திருவுள்ளத்தை மிகத்தெளிவாகக் காட்டுகிறது. இவற்றிலிருந்து ஆழ்வார்கள், ஸ்ரீபாஷ்யகாரர், பட்டர், ச்ருத ப்ரகாசிகாகாரர் ஆகியவர்களுடைய ஸ்ரீஸூக்திகளைக்கண்டிக்க எண்ணியே 'அரங்கனின் லீலைகள்' கட்டுரையின் பின்பகுதி எழுதப்பட்டுள்ளது என விளங்குகிறது. லீலா சப்தத்தின் இரு பொருள்களைக்கூடப் புரிந்துகொள்ளாமல் தாமும் குழம்பிப் பிறரையும் குழப்புகின்றவர் மஹாசார்யர்களை மறைமுகமாகக் கண்டிக்க முற்படுவது ஸாஹஸமேயாகும் என்பது இவற்றால் நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். நீண்டநாளாக ஸம்ப்ரதாய பேதவிஷயமாயிருக்கும் இது நிற்க. ஸம்ப்ரதாயபேதத்திற்கு இடமில்லாத முதல் விஷயத்தை (அதாவது '*லீலா கைவல்யம்*' என்னுமிடத்தில் லீலாசப்தம் சேதநலாபமாகிற அநந்த ஸ்திர பலனைக்குறிக்குமா குறிக்காதா என்னும் விஷயத்தை) 19-8-87 முதல் நடைபெறும் மாலோல வித்வத் ஸதஸ்ஸில் நிர்ணயிக்க லாம்படி இந்த ஸுதர்சனர் பதில் பலவித்வான்களுக்கு அனுப்பப் படுகிறது. ஸபையில் ஏற்படும் நிஷ்கர்ஷத்தை ஸ்ரீரங்கநாதபாது காவிலோ ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவிலோ வெளியிட்டால், ஸுதர் சனத்திலும் அதைச் சுருக்கமாக அநுவதித்து ஆராய்வோம். ஸதஸ்ஸில் கலந்துகொள்ளாத வித்வான்களும் தம் கருத்தை நமக்கு எழுதியனுப்பினால், அவற்றின் ஸாரமான பகுதிகள் ஸுதர்சனத்தில் வெளியிடப்படும்.

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்

32. சென்ற கேள்வியின் பதிலில் தேவரீர் கேட்டுக்கொண்டிருந்தபடி மாலோல வித்வத் ஸதஸ்ஸில் ஏதேனும் நிர்ணயம் ஏற்பட்டதா? ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவிலாவது ஸ்ரீரங்கநாத பாதுகாவிலாவது புரட்டாசி இதழ்களில் இதுபற்றி விசாரம் வந்ததா? ஸ்ரீபாஷ்யவல்லுநர்களான வித்வான்களில் எவராவது தங்கள் கருத்தைத் தெரிவித்தார்களா?

நம்முடைய ஸுதர்சனர் பதிலை மாலோல வித்வத் ஸதஸ்ஸில் எல்லா வித்வான்களுக்கும் அனுப்பியதோடன்றியில் ஸ்ரீமத் அழகியசிங்கருக்கும் அனுப்பி அதையே அடியேனுடைய வாக்யார்த்தமாகக்கொண்டு அனுக்ரஹிக்க வேண்டும் என்று விண்ணப்பமும் எழுதியிருந்தோம். மாலோல வித்வத் ஸதஸ்ஸில் இதுபற்றி எந்த விசாரமும் நடந்ததாகத் தெரியவில்லை. புரட்டாசிமாத ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவிலோ ஸ்ரீரங்கநாத பாதுகாவிலோ இதுபற்றிய விசாரம் எதுவுமில்லை. வாகம்ருதவர்ஷீ ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரதாசார்யஸ்வாமியும், ஸ்ரீ உ. வே. சதாபிஷேகம் கோவிந்தநரஸிம்ஹாசார்ய ஸ்வாமியும் அடியேனுடைய விஷய விசாரத்தை முழுமனத்துடன் ஏற்றுக்கொண்டார்கள். நாவல்பாக்கம் வரதாசார்யர் ஒரு கட்டுரையை எழுதியனுப்பி அதில் மறுபடி குழப்பவாதங்களையும் விதண்டாவாதங்களையுமே செய்திருக்கிறார். முதலில் லீலா விஷயத்தை எடுத்துக்கொள்வோம். ப்ரயோஜநவத்த்வாதி கரணத்தில் பூர்வபக்ஷம் பின்வருமாறு:—"அவாப்தஸமஸ்தகாமமான ப்ரஹ்மத்துக்குத் தனக்காகப் பெறவேண்டிய பயன் ஒன்றுமில்லை; இருக்கிறதென்றுகொண்டால் அவாப்தஸமஸ்தகாமத்வம் போய்விடும். ஸம்ஸாரம் து:க்கமயமாயிருக்கையாலே ஜீவர்களுக்கும் ஜகத்ஸ்ருஷ்டியால் பயனில்லை" என்பது. இதற்கு வ்யாஸர் ஸித்தாந்தத்தில் கூறிய பதிலில் பரப்ரஹ்மத்துக்கு லீலையே பயன் என்றளவோடு நிற்கிறார். ஜீவர்களுக்கு ஒரு பயன் உண்டு என்னும் விஷயத்தை அவர் ப்ரஸ்தாவிக்கவேயில்லை. இது ஏன்? என்னும் கேள்விக்கு வரதாசார்யர் எந்த பதிலும் உரைக்க முடியாது.

http://acharya.org

அனந்த ஜீவர்களில் எப்போதோ எவருக்கோ கிடைக்கும் மோக்ஷலாபமாகிற பயன் அஸத்ஸமமாகையாலே அதை ஸூத்ர காரர் ஸித்தாந்தத்தில் ஓதுகிறார் என்பது நமது தெளிவான பதில். சேதனர் அடையும் மோக்ஷ லாபத்தையும் லீலாசப்தத் திற்குப் பொருளாகக் கொள்கிறவர்களுக்கு 'லோகவத்' [உலகில் ராஜாக்கள் பந்தாடுவது முதலான இடங்களிற்போலே] என்ற த்ருஷ்டாந்தமும் அப்பதத்தின் பாஷ்யம் முதலானவை யும் அடியோடு பொருந்தமாட்டா. சேதனரைப் பெற்று எம்பெருமான் அடையும் பேரானந்தமும் லீலாசப்தத்துக்குப் பொருளாக முடியாது. உலகில் பந்தாடுவது போன்ற தாதூாத்விகரஸங்களே லீலாரஸமாகச் சொல்லப்படுகின்றன வன்றோ. இங்கும் பாஷ்யத்தில் அரசர்கள் பந்தாடு வதை த்ருஷ்டாந்தமாகக் காட்டியிருப்பது ஒட்டாது. ஆகை யால் விதண்டாவாதங்களைச்செய்து வீண்வாதங்களை வளர்க் காமலிருப்பதற்காக ப்ரதிபக்ஷிகள் அனைவரைக்குறித்தும் பின் வரும் கேள்விகளை வெளியிடுகிறோம். இக்கேள்விகளை ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவிலோ ஸ்ரீரங்கநாத பாதுகாவிலோ அல்லது பொறுப்புள்ள வேறு பத்திரிகைகளிலோ, அப்படியே அச்சிடச் செய்து அவற்றுக்கு பதிலிறுத்தாலொழிய நமக்குத் தனியே எழுதும் விதண்டாவாதக் கட்டுரைகளுக்கு நாம் பதிலிறுக்க மாட்டோம்.

ஸுதர்சனரின் கேள்விகள்.

1. ப்ரயோஜநவத்த்வாதிகரணத்தில் பூர்வபக்ஷத்தில் ஜகத் ஸ்ருஷ்டி முதலானவற்றால் ப்ரஹ்மத்துக்கும் பயனில்லை. ஜீவர் களுக்கும் பயனில்லை என்று ஆக்ஷேபித்திருக்கும்போது, ஸித்தாந்தத்தில் வேதவ்யாஸர் ஜீவர்கள் அடையும் மோக்ஷ லாபமாகிற பயனை ஏன் ஓதுகிறார்?

2. உலகவழக்கிலும் சாஸ்த்ரவழக்கிலும் அப்போதைக்கு உண்டாகும் இன்பமே லீலாரஸம் என்று ப்ரஸித்தி இருக்கும் போது, 'லீலா கைவல்யம்'' என்னுமிடத்தில் கைவல்ய சப்தத் தாலே பணத்திற்காக விளையாடும் சூதாட்டத்தையும் ஸூத்ர காரர் தவிர்த்திருக்கும்போது, மோக்ஷத்தில் சேதனர்களைப் பெற்று எம்பெருமான் அடையும் பேரானந்தம் "லீலா கைவல்

http://acharya.org

யம்'' என்றவிடத்தில் லீலாசப்தத்திற்கு எப்படிப் பொருளாக முடியும்?

3 ''லோகவத்'' என்னும் பதத்திற்கு பாஷ்யம் முதலான வற்றில் ராஜாக்கள் பந்தாடுவது முதலானவற்றைச் செய்வதால் உண்டாகும் தாதூாத்விக ரஸத்தைப் பொருளாகக் கூறியிருப் பது அனந்த ஸ்திர பலத்தை லீலாசப்தத்துக்குப் பொருளாகக் கூறும் உங்களுக்கு எப்படி ஒட்டும்?

இனி எம்பெருமானுக்குப் பரது:க்கது:கித்வம் அல்லது பரது:க்கஸஹிஷ்ணுத்வமாகிற தயாகுணம் உண்டு என்று கூறும் பூர்வாசார்ய வசனங்களை இவர் கண்டித்திருப்பதை ஆராய்வோம். ''தன் குடிகள் துன்புறும்போது ராமன் அவர் களைக் காட்டிலும் அதிகமாகத் துன்புறுகிறான்'' என்று வால் மீகி குணப்ரகரணத்தில் முழங்குகிறார். ''ஸுக்ரீவன் சொன்ன தற்காகப் பெருமாள் வாலியைக்கொன்றார். வாலிஇறந்ததும் ஸுக் ரீவன் அழுததைப் பார்த்து ''ஸஞ்ஜாதபாஷ்ப: பரவீரஹந்தா'' என்கிறபடியே தானும் அழுது இந்த மஹா குணத்தை நடை முறையிலும் பெருமாள் காட்டினார் என்று வால்மீகி உத் கோஷிக்கிறார். இவையெல்லாம் கூலிவாங்கிக்கொண்டு பிலாக்க ணம் பாடுபவர்களுடைய சோகத்தைப்போலே அபிநயமாத்தி ரமே என்று எழுதும் இவருடைய அரஸிகத்தன்மையைப். பார்த்துக் கைகொட்டிச்சிரிக்கவேண்டியுள்ளது. ''ஸமஸ்தகல்யா ணகுணாத்மகோஸௌ'' [வி பு] 'ஸமஸ்தகல்யாண குணாம்ருதோததி:'' [ஸ்தோ-ர] என்று எம்பெருமானை எல்லாக்கல்யாண குணங்களுக்கும் கொள்கலமாக ஞானிகள் முழங்குகிறார்கள் பிறர் துன்பத்தைக்கண்டு தான் துன்புறுகையைச் சிறந்த கல் யாண குணமாக வால்மீகியும் ஆழ்வார்களும் பல பூர்வாசார்யர் களும் கூறியிருப்பதை முன்னமே காட்டினோம். ''உலகப் பொதுமறை'' என்று கொண்டாடப்படுமளவுக்குத் தலைசிறந்த நீதிநூல் எழுதிய திருவள்ளுவரும், தம் திருக்குறளில்

''அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்
தம்நோய்போல் போற்றாக்கடை'' (3 ; 5)

என்று பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகக்கொள்வது அறிவு படைத்த பயனாகும் என்று முழங்குகிறார். இத்தகைய கல்யாண

http://acharya.org

கு$_3$ணம் எம்பெருமானுக்கு இல்லை என்று அடம்பிடிக்கும் இவர்களை என் சொல்வது? பரது$_3$:க்க$_2$து$_3$:க்கி$_2$த்வத்தை எம்பெருமானுக்கு இசைந்தால் ஆனந்த$_3$மயாதி$_4$கரண விரோத$_4$ம் வரும் என்று கூறுகிறார். இதுவும்—ஸ்வரூபநிரூபக கு$_3$ணங்களுக்கும் நிரூபித ஸ்வரூப விசேஷணங்களுக்குமுள்ள வேற்றுமையை அறியாமையால் விளைந்த மயக்கமேயாகும். 'ஆனந்த$_3$மயன்' எனப்படும் ப்$_3$ரஹ்மத்துக்கு ஸ்வரூபநிரூபககு$_3$ணத்தைப்பற்றிப் பேசுவது அவ்வதி$_4$கரணம் பரது$_3$:க்க$_2$து$_3$:க்கி$_2$த்வத்தை ஸ்வரூப நிரூபக குணமாக எவரும் சொல்லவில்லை. எம்பெருமானுடைய த$_4$ர்மபூ$_4$தஜ்ஞானத்தின் விகாரங்களாயிருக்கும் நிரூபித ஸ்வரூப விசேஷணங்களான அனந்த கல்யாண கு$_3$ணங்களில் பரது$_3$:க்க$_2$து$_3$:க்கி$_2$த்வமாகிற மஹாகு$_3$ணமும் ஒன்றாகும். இந்த மஹாகுணத்தை ஸுபாலோபநிஷத் 'விகர்த்தா' என்று படித்தது. இத்திருநாமத்தையே வ்யாஸர் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் சேர்த்தருளினார். '*ஸ ஏகாகீ ந ரமேத*' என்னும் வேதவாக்யமும் 'ப்ரளயதசையில் இறகொடிந்த பறவைகள்போலேயிருக்கும் ஜீவர்களைக்கண்டு எம்பெருமான் துன்புறுகிறான்' என்று கூறிற்று. வேதாவதாரமான ஸ்ரீ ராமாயணமும் இதைப் பெருமாளின் பெருங்குணமாகப் படித்தது. பஞ்சம வேதமான பாரதத்தில் கீதோபநிஷத்திலும் '*க்ருபயா பரயாவிஷ்டோ விஷீத$_3$ந்*' [1-28] [அர்ஜுனன் மேலான கருணையாலே நிறைந்தவனாய்த் துன்பமுற்றான்] என்று துன்பமுறுகையே மேலான கருணை என்று காட்டப்பட்டது. [இது அஸ்தான கருணை என்பதும் அனைவரும் இசைந்ததே] ஒளியிருக்குமிடத்தில் இருள் எப்படியிருக்க முடியும்? ஆனந்தம் இருக்குமிடத்தில் துன்பம் எப்படி இருக்கமுடியும்? என்னும் கேள்வி எழுகிறது. நரசிங்கன் ஒரே சமயத்தில் இரணியனிடம் சீற்றத்தோடும் ப்ரஹ்லாத$_3$னிடம் அருளோடும் இருந்ததுபோலே, எம்பெருமான் ஒரே சமயத்தில் இன்புறுபவர்களைக்கண்டு இன்புறுபவனாகவும், துன்புறுபவர்களைக்கண்டு துன்புறுபவனாகவும் இருக்கத் தட்டில்லை. ஆனந்தமனைத்துமே கல்யாணகுணமென்று சொல்லி விடமுடியாது. பிறர் துன்புறுவதைக்கண்டு ஆனந்தமடைவது குற்றமேயொழிய குணமில்லை. அத்தகைய ஆனந்தம் எம்பெருமானிடம் இல்லை என்றே கொள்ளவேண்டும். அப்படியே

http://acharya.org

துன்பமனைத்துப் தோஷம் என்று கூறமுடியாது. எம்பெருமானுக்குத் தன் செயலால் விளையும் துன்பமான அவகுணம் அடியோடு இல்லை. அப்படி இருப்பதுபோல் அவதாரதசையில் அவன் நடிப்பதை அபிநய மாத்ரமாகக் கொள்ளத் தட்டில்லை அத்தகைய ஶோகத்தையே அந்தரங்கரண ஶ்ருதப்ரகாஶிகையில் அபிநய மாத்ரம் என்று ஸுதர்சனபட்டர் அருளினார்; 'ஸ்வார்த்தஹர்ஷஶோகாத்யபாவேऽபி' என்று பராசரபட்டரும் பகவத்குண தர்ப்பணத்தில் அருளினார். இதைக்கொண்டு பிறர் துன்பங்கண்டு துன்புறுகையாகிற மஹாகுணம் எம்பெருமானுக்கு இல்லை என்று கூறுவது தவறு என்பதை அவரே "பரார்த்ததத்ப்ரஸக்தி: அதோஷ:" என்று விளக்கினார். 'அனர்த்தமும் தோஷமாவது உண்டு; துன்பமும் குணமாவது உண்டு' என்னும் உண்மையை எவ்வளவு எடுத்துச்சொன்னாலும் அரஸிகர்களுக்கு ஏறாது. "பரதுக்கா ஸஹிஷ்ணுத்வம்" என்று ஸ்ரீபாஷ்யகாரர் அருளியிருக்குமிடத்தில் அஸஹிஷ்ணுத்வம் என்பது கோபத்தையே காட்டும் என்று கூறி, பரசுராமனுக்கு 'அஸஹனமுனி' என்று பெயர் இருப்பதை உதாஹரணமாகக்காட்டுகிறார். இப்படிக்கொண்டால் "பரது:க்கா ஸஹிஷ்ணுத்வம்" என்பதற்கு 'பிறர் துக்கத்தைக்கண்டு கோபிக்கை' என்ற அபத்தமான பொருளே ஏற்படும். 'அஸஹிஷ்ணுத்வம்' என்பதற்கு, பொறுக்காமல் துன்புறுதல், கோபித்தல் என்று இருபொருள்கள் இருப்பதைக்கூட அறியாமல் வாக்யார்த்தமும் சொல்லுமிவருடைய மேதாவிலாஸத்தை என்னென்பது! இனி, தயாஶப்தத்துக்கு, துன்பங்கண்டு பொறாமல் துன்புறுவதைப் பொருளாகக்கொள்வதா? துன்பங்களைப் போக்குவதில் விருப்பத்தைப் பொருளாகக்கொள்வதா? என்பது பற்றி ஆராய்வோம். ஏற்கனவே ஒருவன் துன்புற்றபின்பு, அதைக்கண்டு துன்பம் விளையுமேயொழிய அதைப் போக்குவதில் இச்சைவிளைய முடியாது. "ஆ ஆ என்று அருள்" என்று பல இடங்களில் ஆழ்வார்கள் இதையே 'அருள்' எனப்படும் கருணாகுணமாகக் காட்டினார்கள். அக்கருணாகுணத்தின் விளைவாக அவன் மேலும் துன்புறாமல் தடுப்பதில் விருப்பமும் விளையலாம். அது கருணாகுணத்தின் விளைவேயொழிய கருணாகுணமாகாது. நல்லறிவுபடைத்த அனைவர்க்கும் பிறர் துன்பத்

http://acharya.org

தைக்கண்டால் துன்பம் ஏற்படும். சக்தியில்லாதவர்களுக்கு, பிறர்க்கு வரப்போகும் துன்பத்தைப் போக்கமுடியாதாகை யால், நிரார்சிகீர்ஷையும் ஏற்படாது. எம்பெருமானுக்கும் ப்ரப₃லகர்மத்தால் ஏற்பட்டே தீரவேண்டிய துன்பங்கள் விஷயத்தில் நிராசிகீர்ஷை விளையாது. ஆகையால் நல்லறிவு படைத்த அனைவர்க்கும் எப்போதும் விளையக்கூடிய பரது₃:க்கா₂ ஸஹிஷ்ணுத்வம் (பிறர் துன்பங்கண்டு பொறுக்காமல் துன் புறுதல்) த₃யாலக்ஷணமாகுமேயொழிய, சூழ்நிலைகள் சரியாக அமைந்தால்மட்டும் சிலர்க்கே விளையக்கூடிய பரது₃:க்க₂ நிராசிகீர்ஷை த₃யாலக்ஷணமாக முடியாது. இதனாலேயே ‘பரது₃:க்கா₂ஸஹிஷ்ணுத்வம்’ என்றும், ‘பரது₃:க்க₂து₃:க்கி₂த் வம்’ என்றும் பல பூர்வாசார்யர்கள் தயைக்கு லக்ஷணம் கூறி னார்கள். விரிவிற்கஞ்சி இத்துடன் நிற்கிறோம். இவ்விஷ யத்திலும் சில கேள்விகளைக் கேட்கிறோம், பொறுப்பான பத் திரிகைகளில் அப்படியே அச்சிட்டு பதிலுரைத்தால் ஆராய ஸித்தமாயிருக்கிறோம்.

ஸுதர்சனரின் கேள்விகள்

(1) பிறர்படும் துன்பங்களைக்கண்டு படும் ஆனந்தம் கு₃ணமாகாதாகையால், அத்தகைய ஆனந்தம் ப்₃ரஹ்மத்திடம் இருக்கமுடியாது. பிறர்படும் துன்பத்தைக்கண்டு துன்புறுகை பரமகல்யாண கு₃ணமாகையாலே அது ப்₃ரஹ்மத்திடமில்லை யென்பது ப்₃ரஹ்மத்தின் கல்யாணகு₃ணங்களில் ஒன்றை இல்லை செய்வதாகாதா?

(2) “குடிகளின் துன்பத்தைக்கண்டு அவர்களைக் காட் டிலும் மிகுதியாகத் துன்புறுகிறான் இராமன்” என்று ஸ்ரீராம கல்யாணகு₃ணங்களைக் கூறிவரும்போது முழங்குகிறார் வால்மீகி. அப்படியிருக்கும்போது ‘இது கல்யாண கு₃ணமல்ல; அபி₄நய மாத்ரமே’ என்று எப்படிக் கூறுகிறீர்கள்?

(3) ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் ‘*கர்த்தா*’ [382] ‘*விகர்த்தா*’ [383] என்னும் திருநாமங்களின் ப₄ட்டர் பா₄ஷ் யத்தைத் தமிழ் மொழிபெயர்ப்போடும், ஈடு 4-10-2ல் ப₄ட்டர் பற்றிய ஐதிஹ்யத்தை எளிய தமிழ் விவரணத்தோடும் அச்சிட்டு அவை உங்கள் கொள்கைக்கு பா₃த₄கமானவையல்ல என்று நிரூபிக்க முடியுமா?

(4) நல்லறிவு படைத்த அனைவர்க்கும் எப்போதும் விளை யக்கூடிய பரது₃:க்கா₂ஸஹிஷ்ணுத்வம் த₃யாலக்ஷணமாகுமே

http://acharya.org

யொழிய, சூழ்நிலை சரியாக அமைந்தால் மட்டும் சிலர்க்கே விளையக்கூடிய பரதுஃக்க, ராஸிகர்ஷை தயாலக்ஷணமாக முடியாது என்பதை மறுக்கமுடியுமா?

T. ரங்கராமாநுஜய்யங்கார், பன்னத்தூர்.

33 13, 20, 21 கேள்விகளின் பதில்களில் படுதோல்வியடைவிக்கப்பெற்ற திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் 1987 காரைக்குடி கம்பன் மலரில் தங்கள் பதில்களைப்பற்றி "கம்பன் உணர்த்தும் பரம்பொருள் நிலை" என்னும் கட்டுரையில் எழுதியுள்ளார். அதைத் தங்களுக்கு அனுப்பினாரா? அக்கட்டுரையை இத்துடன் பிரதியெடுத்து அனுப்பியுள்ளேன். அதை விமர்சிக்கவேண்டுகிறேன்.

சென்ற முறைபோல் இம்முறையும் செட்டியார் தம் கட்டுரையை எமக்கு அனுப்பவில்லை. காரணம் வெளிப்படையானது. "அடுத்த வருடம் கம்பன் கழக மலரிலேயே சென்ற இதழில் வெளிவந்த எமது மறுப்பையும், அதற்கு உமது பதிலையும் அச்சிடச் செய்தால் உமது விதண்டாவாதம் கம்பன் கழகக் காரர்களுக்கே வெட்ட வெளிச்சமாகிவிடும்" என்று நாம் கேட்டுக்கொண்டிருந்ததுபோல் நமது மறுப்பை அச்சிட்டு பதிலுரைக்கத் துணிவில்லாமல், நமது மறுப்பை அரைகுறையாக எடுத்து, பழைய விதண்டாவாதங்களையே புதிய சொற்களில் இம்மலரிலும் புதுப்பித்திருக்கிறார். இவரது படுதோல்வி ஒரு முக்கியமான விஷயத்திலிருந்து வெட்ட வெளிச்சமாகிறது. "மூவரும் சேர்ந்த வடிவம் பரம்பொருள் வடிவம் என்பதைச் சிலர் மறுக்கின்றனர். இதற்கு ஆதாரமாக வேதம், ஸ்மிருதி, புராணங்களில் எங்கேனும் சொல்லப்பட்டிருக்கிறதா என வினவுகிறார்கள். இங்கே நாம் கம்பன் சொல்வதைத்தான் ஆராய்கிறோம். தம் இயலாமையை மறைக்கவே வேத புராணங்களை இழுத்துக்கொண்டுவந்து பேசுகிறார்கள்" என்று எழுதுகிறார். கம்பன் தன் காவியத்தைத் தொடங்கும்போது "வேதம் என்பன ஒன்றோ மெய்ந்நெறி நன்மையன் பாதமல்லது பற்றிலர்" என்று தான் வேதத்தைப் பின்பற்றியவனே எனக் காட்டுகிறான். "வேதங்களறைகின்ற உலகெங்கும் விரிந்தன உன் பாதங்கள் இவையென்னில் படிவங்கள் எப்படியோ" முதலான பலவிடங்களில் காவியம் முழுவதிலும் இதை வலியுறுத்துகிறான். "மூவரான வர் தம்மிலும் முந்திய நாவினுரையின்படி யான் தமிழ்ப்

பாவினால் இது உணர்த்திய பண்பரோ" என்று தான் வடமொழி ராமாயணத்தைப் பின்பற்றுகிறவன் என்கிறான் கம்பன். அவன் ஆழ்வார்களைப்பின்பற்றியவன் என்பதை இவரே ஒப்புக்கொள்கிறார். ஆழ்வார் திருவாய்மொழியின் முதல் பதிகத்திலேயே "உளன் சுடர் மிகுசுருதியுள்" என்று தாம் வேதங்களைப் பின்பற்றுகிறவர் என்று முழங்குகிறார். வேதமும் அதை விளக்கும் ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களும் இவருடைய கொள்கையை வெடிவைத்துத் தகர்ப்பவை என்று விஷ்ணுசித்தவிஜயத்தில் இரண்டாயிரம் பக்கங்களில் நாம் நிலை நாட்டியிருக்கிறோம். ஆழ்வார்கள் இவரது த்ரிமூர்த்யுத்தீர்ண வாதத்தைத் தம்பாசுரங்களில் தகர்த்திருப்பதைக்காட்டியிருப்பதற்கு இவர் எந்த பதிலும் சொல்லவில்லை. நமது 'கம்பனின் சமயம்' நூலில் சங்ககாலச் சான்றோர்கள் தம் நூல்களில் மும்மூர்த்திகளுக்கு மேற்பட்டதொரு தத்துவத்தைப்பற்றிப் பேசவேயில்லை என்றும், வேதங்களில் திருமாலே பரம்பொருளாகக் கூறப்படுவதாகவே முழங்குகிறார்கள் என்றும், அச்சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம் என்றும் நிலைநாட்டியிருப்பதை மறுக்க இவருக்குத் துணிவில்லை. "இலக்கியங்களிலும், பிரமாணங்களிலும் மும்மூர்த்திகளுக்கும்மேற்பட்ட உருவமுடைய பரந்தாமன் பேசப்பட்டிருந்தால், விஷ்ணு கோயில்களைக்காட்டிலும் வேறுபட்ட பரந்தாமன் கோயில்கள் நாடெங்கும் ஏற்பட்டிருக்கவேண்டும். அப்படி ஏற்படாததிலிருந்தே இது இவரது கற்பனைக்கோட்டையே என விளங்குகிறது" என்று நாம் காட்டியிருந்ததை இவர் எடுக்கவேயில்லை. கம்பனுடைய நூற்றுக்கணக்கான பாடல்கள் இவரது கொள்கையைத் தூக்கியெறிபவை என்று நாம் நமது 'கம்பனின் சமயம்' நூலில் நிலைநாட்டியிருப்பதை மறைத்து ஏழெட்டுப் பாடல்களை எடுத்துக்கொண்டு மனம்போனபடி விதண்டாவாதம் செய்து அவற்றுக்கு அவப்பொருள்கூறி, நமது மறுப்புக் கட்டுரைகளையும் முழுதும் வெளியிடாமல் ஆயுளுள்ளவரையில் குழப்பக் கட்டுரைகளை எழுதி, கம்பன்கழக வாசகர்களைக் குழப்பப்பார்க்கிறார் இவர். இவருடைய வாதங்களைக் கம்பராமாயண அறிஞர் வேறு எவரும் ஆதரிக்கவில்லை. ஆகையால் அவற்றைப் பொருட்படுத்தாமல் காலவெள்ளத்தில் அழியவிடுவதே நல்லது. காலம் இதைக் காட்டும்.

http://acharya.org

S. முரளி, அந்தணல்லூர்.

34. 28—8—87 அன்று சென்னைத் தொலைக்காட்சியில் டாக்டர் K. A. மணவாளன் அவர்கள் ராமாநுஜர் பற்றி ஓர் பேட்டி அளித்தார். அதில் ஸ்ரீ ராமாநுஜர் செய்த சீர் திருத்தங்களைப்பற்றிப் பேசும்போது "ஸ்ரீராமாநுஜர் ஸ்தாபித்த எழுபத்து நான்கு பீடங்களில் பெண்களும் உண்டு" என்று கூறினார். 'திருநாராயணபுரத்தில் திருக்குலத்தாரைக் கோயிலில் வழிபட அனுமதித்தது முதலான சீர்திருத்தங்களுக்கு ஸநாதனிகளின் எதிர்ப்பு இருந்தது' என்றும் கூறினார். இக்கூற்றுக்களுக்கு ஆதாரமுண்டா?

ஆதாரமிருப்பதாகத் தெரியவில்லை. ஸ்ரீராமாநுஜர் ஸ்தாபித்த பீடங்களில் பல இன்றும் உள்ளன. எழுபத்து நாலு ஸிம்ஹாஸனாதிபதிகளின் வம்சங்களில் வந்த ஆசார்ய புருஷர்கள் இன்றும் சிஷ்யர்களுக்கு ஸமாச்ரயணம் செய்து வருகிறார்கள். அவர்களில் பெண் எவருமில்லை. ஹோமம் செய்தே பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்யவேண்டும். ஹோமம் செய்ய ஸ்த்ரீகளுக்கு அதிகாரமில்லை என்பது சாஸ்த்ர ப்ரஸித்தம். நடைமுறையிலும் உள்ளது. ஆகையால் எம்பெருமானார் ஸ்த்ரீகளை ஸிம்ஹாஸனாதிபதிகளாக நியமித்திருப்பதற்கு இடமேயில்லை. எழுபத்துநாலு ஸிம்ஹாஸனாதிபதிகளில் 'அம்மங்கியம்மாள்' முதலான சில திருநாமங்கள் இருப்பதைப் பார்த்து அவர்களைப் பெண்கள் என்று மயங்கியிருக்கக்கூடும். கூடாதூரம்மாளைப்போலே எம்பெருமானிடம் பரிவாலே 'அம்மாள்' என்று பட்டப்பெயரைப்பெற்ற ஆண்களே இவர்கள். ஸ்ரீராமாநுஜர் செய்த சீர்திருத்தங்கள் எல்லாம் சாஸ்திர வரம்பிற்குட்பட்டே செய்யப்பட்டன. ஆகையாலே அவற்றுக்கு எந்த எதிர்ப்பும் இருந்ததாக வரலாறு இல்லை. சமீபகாலத்தில் காங்கிரஸ்காரர்கள் சாஸ்திரவரம்பை மீறிச் சீர்திருத்தங்கள் செய்தபோது ஸநாதநதர்மத்தைப் பின்பற்றும் பலர் அவற்றை எதிர்த்தார்கள் அதனால் ஸநாதனிகள் என்று அழைக்கப்பட்டார்கள். இப்பெயர்கொண்ட ஓர்பிரிவு ஸ்ரீராமாநுஜர் காலத்திலும் ஏற்பட்டதாகக் கற்பிப்பது முறையற்றது. அரசியல்வாதிகளை உகப்பிப்பதற்காக இத்தகைய ஆதாரமற்ற செய்திகளைத் தொலைக்காட்சிபோன்ற பொதுமேடைகளில் பிரசாரம் செய்யாமல் இருப்பது நல்லது.

http://acharya.org

T. V. ராமஸ்வாமி, தலைவர், திருப்பாவைக்கமிட்டி, திருக்குடந்தை

35. 1987 ஆகஸ்ட் சப்தகிரியில் திரு. B. ரவீந்திரன் என்பவர் காயத்ரீ ஜபத்தால் உலகில் எல்லா சித்திகளையும் பலர் அடைந்து வருவதைப்பார்த்து, 'காயத்ரீ ஜபம் செய்பவர்கள் அதன் முழுப்பலனையும் அடையமுடியாது' என்று சில ரிஷிகள் சாபமிட்டதாகவும், அந்த சாப நிவ்ருத்திக்காக மகரிஷிகள் ஏற்படுத்திய காயத்ரீ சாப விமோசன மந்திரத்தையும் ஜபித்தால்தான் காயத்ரீ ஜபத்தின் பூர்ண பலனை அடையமுடியும்' என்றும் எழுதியுள்ளார். இது உண்மையா?

இது முழுப் பொய். அனைவரும் ஏற்கத்தக்க எந்த ப்ரமாணத்திலும் இப்படியில்லை. இப்படி அநுஷ்டானமும் இல்லை. காயத்ரீ மந்திரத்தால் எல்லாப்பலனையும் அடைய முடியாது. குறிப்பாக மோக்ஷத்தை அடையமுடியாது. இப்படி எவர் எதை எழுதினாலும் ஆராயாமல் அதை அப்படியே 'ஸப்தகிரி' வெளியிடுவது மிகவும் கண்டிக்கத்தக்கது.

'மாலின் மைந்தன்' S. இரமேஷ், ஸ்ரீவில்லிபுத்தூர்.

36. 10—10—'87 அன்று இரவு 8 மணிக்கு திருவில்லிபுத்தூர்—மடவார் வளாகம்—நாக பாச விநாயகர் கோவிலில் டாக்டர் திருமதி சரஸ்வதி இராமநாதன் அவர்கள் "தம்பியர் இருவர்" எனும் தலைப்பிலே உரையாற்றும்போது 'விநாயகர் இன்றி எந்தக் கோவிலும் இருக்காது' என்றும், 'வைணவக் கோவில்களிலும் "தும்பிக்கையாழ்வார்" என்னும் பெயரில் விநாயகப்பெருமான் இருப்பார்' என்றும் உபந்யஸித்தார். இதற்குப் புராண சாஸ்திர பூர்வமான ஆதாரம் ஏதும் உண்டா? தயவுசெய்து விளக்க வேண்டுகிறேன்.

'விநாயகர்' என்னும் கடவுளை சங்க நூல்களில் காணப்படவில்லை. சிலப்பதிகாரம் முதலான பண்டையிலக்கியங்களிலும் ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்கள் போன்ற பக்தி இலக்கியங்களிலும் விநாயகர் இல்லை "பரஞ்சோதி எனனும் சேனைத் தலைவரால் வாதாபியிலிருந்து கணபதியுருவம் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட பிறகே சைவத்தில் கணபதி தோன்றுகிறார்; அதற்கேற்பப் புராணங்கள் கற்பிக்கப்பட்டன. நாயன்மார்களும் அதை ஏற்றுக்கொண்டனர்" என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். வேதவியாஸருடையவை

http://acharya.org

என அனைவரும் இசைந்த மஹாபாரதத்திலும் ப்ரஹ்ம ஸூத்ரத்திலும் எடுக்கப்பட்ட பாஞ்சராத்ர ஆகமத்தில் திருமாலின் சேனைத்தலைவரான விஷ்வக்ஸேனரின் தளபதிகளில் ஒருவராக கஜானனர் எனும் நித்யஸூரி எடுக்கப்படுகிறார். இவரே விஷ்ணுகோயில்களில் காணப்படும் யானைமுக தெய்வம். இவர் விநாயகர் அல்ல. இவரை சைவர்கள் காப்பியடித்துச் சைவத்தில் ஓர் கடவுளை உண்டாக்கிவிட்டு, விஷ்ணுகோயிலிலுள்ள கஜானனருக்கு "தும்பிக்கை ஆழ்வார்" என்று பெயர்வைத்து விட்டார்கள் என்பதே உண்மை. பாரதத்தைப் பிள்ளையார் எழுதினார் என்று சில பாரதப் பதிப்புகளில் உள்ளதும் இடைச் செருகல் என்று ஸுதர்சனர் பதிலில் முன்பே நிலைநாட்டப் பட்டது. சென்னை-17 திரு. O. M. ஸ்ரீநிவாஸன் கேட்டுள்ள கேள்விக்கும் இதுவே பதில்

37. நவராத்ரி விழாநாட்கள் "துர்க்கை அம்பிகை" வழிபாட்டுக்குரிய நாட்கள் என்று திரு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தொலைக் காட்சியில் நவராத்ரியின்போது பேட்டி கொடுத்திருப்பது ஆதார பூர்வமானதா? தயவு செய்து இதை விவரிக்க வேண்டுகிறேன்.

மிகப் பிற்காலத்தில் கற்பிக்கப்பட்ட சாக்த நூலான தேவீ பாகவதத்தில் இப்படி இருப்பதைக் கொண்டு விளம்பர மடாதிபதி இப்படிக் கூறுகிறார், ஆதிசங்கரர் தமது பாஷ்யங்களில் ப்ரமாணமாக எடுத்திருக்கும் பழைய ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களில் இதற்கு எந்த ஆதாரமும் இல்லை. எம்பெருமான் விஜயதசமியன்று விஜய யாத்ரை செல்வதற்கு அங்கமாகவே விஷ்ணுகோயில்களில் ஸ்ரீ மகாலக்ஷ்மிக்கு நவராத்ரி விழா ஏற்பட்டுள்ளது.

V. ஸ்ரீதரன், மதுரை (38 39, கேள்விகள்)

38 'ஞானபூமி' இதழுக்கு அண்ணன்போல் விளங்கும் 'ஞானவழி' என்னும் இதழில் பல விஷ்ணு நிந்தைகள் காணப்படுகின்றன. இவற்றில் சிலவற்றை அனுப்பியிருக்கிறேன், விமர்சிக்க வேண்டுகிறேன்.

சைவசாக்த மதங்களோடு புது உறவுகொண்டாடும் விளம்பர மடாதிபதிகளான காமகோடியின் பக்தர்களால் வேத

http://acharya.org

சாஸ்த்ரவிருத்தமாக இப்படிப் பல பொய்கள் பல புதுப்புதுப் பத்திரிகைகளில் பரப்பப்படுகின்றன. "புலையறமாகினின்ற புத்தொடு சமணமெல்லாம் கலையறக்கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோதாம்" என்று திருமாலையில் தொண்டரடிப்பொடியாழ்வார் அருளியபடியே நாம் இவற்றைக் காற்கடைக் கொண்டு காணாமலிருப்பதே தக்கது. இவற்றுக்கு பதிலளித்து இல்லாத மதிப்பை உண்டாக்கவேண்டாம். பொதுஜனப் பத்திரிகைகளில் நெடுங்காலமாகப்பரப்பப்பட்டுவரும் இத்தகைய விஷ்ணு நிந்தைகள் ஆதாரங்காட்டி நமது ஸுதர்சனர் பதில்களில் மறுக்கப்பட்டுள்ளன. அஜ்ஞானமே வடிவெடுத்த ஞானபூமிப் பிதற்றல்களுக்கும் ஞானவழிப் பிதற்றல்களுக்கும் அவையே தக்க பதிலாகும்.

39 "ஸப்தகிரி" யில் வெளிவரும் "வால்மீகியின் திருவுள்ள விளக்கு" பகவத்பரத்வத்தை அசைக்கமுடியாதபடி நிலைநாட்டுகிறது. அதைக்கண்டு வயிறெரிந்த மதுரை திரு நா. வேணுகோபாலன் என்பவர் "இக்காலத்தில் 'யார் பரம்பொருள்' என்னும் விவாதம் தேவையில்லை. ஆகையால் இத்தகைய கட்டுரைகளை வெளியிடக்கூடாது" என்று எழுதிய கடிதத்தை ஸப்தகிரி வெளியிட்டுள்ளது. அக்கருத்து தவறென்று அடியேன் பல ஆதாரங்களைக்காட்டி எழுதிய கடிதத்தை வெளியிடவில்லை. விமர்சிக்க வேண்டுகிறேன்.

தன்னை 'வைணவர்' என்று கூறிக்கொள்ளுமிவர் புரியும் அபத்த சைவசமரச வாதங்களை மட்டும் விஷ்ணுகோயில் பத்திரிகை வெளியிடவேண்டும். 'திருவேங்கடமுடையானை திருமால் மற்ற எல்லா தெய்வங்களுக்கும் தலைவனான பரமாத்மா' என்னும் வேதசாஸ்த்ர நிர்ணயத்தை வெளியிடக்கூடாது என்று கூறும் இவரது குரங்கு மத்யஸ்தத்தை நியாயவுணர்ச்சியுள்ள எவரும் ஏற்கமாட்டார்கள். சாஸ்திர ஞானமற்ற இவரது கடிதத்தை வெளியிட்ட 'ஸப்தகிரி' பல சாஸ்த்ர ஆதாரங்களைக்காட்டி அதை மறுத்திருக்கும் தங்கள் கடிதத்தை வெளியிடமறுப்பது நடுநிலை தவறிய செயலாகும். விஷ்ணுகோயில் பத்திரிகை அவைஷ்ணவர்களால் நடத்தப்படும்போது இத்தகைய அநீதிகள் நடந்துகொண்டுதான் இருக்கும்.

http://acharya.org

Dr. K. A. மணவாளன், சென்னை.5.

40 34வது கேள்வியின் பதிலில் எனது தொலைக்காட்சி பேட்டிபற்றி விமர்சித்திருந்தீர்கள். எனது கருத்தை விளக்கி "ஸ்ரீராமானுஜரும் சீர்திருத்தங்களும்" என்னும் கட்டுரையை இத்துடன் அனுப்பியுள்ளேன். அதை வெளியிடக் கேட்டுக் கொள்கிறேன். அல்லது அதிலுள்ள விஷயங்களையாவது விமர்சிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இடநெருக்கடியால் கட்டுரையை வெளியிட இயலவில்லை. 34வது பதிலுக்கு சம்பந்தபட்ட விஷயங்களை, சில கேள்விகளாகக் கொடுத்து, அவற்றுக்கு பதில் அளித்து விமர்சிக்கிறேன். (1) ஸ்ரீராமானுஜர் செய்த சீர்திருத்தங்கள் சாஸ்திர வரம்பிற்குட்பட்டே செய்யப்பட்டவை என்று ஸுதர்சனர் பதிலில் உள்ளது. ஆசார்யநியமனத்தை மீறி மந்திரத்தை ஆசையுடையோர்க்கு அளித்தது எப்படி சாஸ்திரவரம்புக்கு உட்பட்டதாகும்? பதில்: க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யராக அவதரிக்கப் போகும் பவிஷ்யதாசார்யரின் விக்ரஹத்தை நம்மாழ்வார் நாதமுனிகளுக்கு அளிக்க, அதை உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார் ஆகிய ஆசார்ய பரம்பரைமூலம் பெற்றவர் திருக்கோட்டியூர்நம்பி. இவ்விஷயம் நாயனாராச்சான்பிள்ளை அருளிய சரமோபாய நிர்ணயத்தில் உள்ளது. அவரை க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யராக ஆக்கி தர்ஶன நிர்வாஹகராகச் செய்யும் பொறுப்பு ஆளவந்தாரால் திருக்கோட்டியூர்நம்பியிடமே ஒப்படைக்கப்பட்டது. அதை நிறைவேற்றவே அவரைப் பதினெட்டு முறை திருக்கோட்டியூருக்கு நடக்கச்செய்து சூளுறவு கொண்டு திருமந்திரத்தின் பொருளை உபதேசித்தார் நம்பி. ஆசார்ய நியமனத்தை மீறி அதைப் பல ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உபதேசித்த எம்பெருமானார் அந்தச்செயலால் பல சேதனர் உஜ்ஜீவிக்க இடமிருக்கும்போது தனக்குவரும் நரகத்தைத்தான் அனுபவிக்க ஸித்தமாயிருப்பதாகக் கூறியவுடன் ஆளவந்தார் விருப்பத்தின்படி க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யராக ஸ்ரீராமானுஜர் உருவானதறிந்து உகந்து அவரை எம்பெருமானார் என்று கொண்டாடினார் நம்பி. ஆகையால், எம்பெருமானாருடைய இச்செயல் வெளிப்படையாக ஆசார்ய நியமனத்தை மீறியது போல் தோற்றமளித்தாலும், உண்மையில் ஆசார்யரின் உட்கருத்தை அறிந்து அதன்படி நடந்த செயலேயாகும். யதாஶ்ருதக்ராஹியாயிராமல், தாத்பர்யக்ராஹியாயிருந்து ஆசார்ய

http://acharya.org

னுக்கும் தமக்கும் த₃ர்சனத்திற்கும் பெருமை சேர்த்த எம்பெருமானாரின் செயல் ஆசார்யஹ்ருத₃யத்தையும், ஶாஸ்த்ர ஹ்ருத₃யத்தையும் அறிந்து செய்த செயலேயொழிய ஆசார்ய நியமனத்தையும் சாஸ்த்ரவரம்பையும் மீறிய செயலல்ல. (2) 74 பீடாதிபதிகள் திருவிலச்சினை ஸாதிப்பதற்குத் தனி உரிமையுடன் எம்பெருமானாரால் நியமிக்கப்பட்டவர்கள் என்பதற்கு கு₃ருபரம்பராதி₃ நூல்களில் எங்கும் சான்று இல்லையே. இதற்கு பதில்.:"குளப்படியிலே தேங்கினால் குருவிகுடித்துப்போம்; வீராணத்து ஏரியிலே தேங்கினால் நாடுவாழும்" என்று நாதமுனிகள் தம்மை வீரநாராயணபுரத்து ஏரியாகத் திருவுள்ளம் பற்றியதை அறிந்து அந்த ஏரியின் 74 மதகுகளைப்போலே த₃ர்ஶனத்தைப் பரப்ப உடையவரால் நியமிக்கப்பட்டவர்களே இந்த 74 ஆசார்ய புருஷர்கள். "லக்ஷ்மீநாத₂ாக்₂யஸிந்தௌ₄" என்னும் ஶ்லோகத்தில் இதை எம்பார் அருளினார். பெரியதிருமந்திரத்தை உபதேசிப்பவனே ஆசார்யன் என்பது ஸம்ப்ரத₃ாயம். திருமந்த்ரோபதேசம் பஞ்சஸம்ஸ்காரங்களில் அடங்கியது. ஆகையால் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்துவைப்பவர்களே இவ்வாசார்ய புருஷர்கள் எனத்தேறிற்று. ஹோமாக்₃னியில் காய்ச்சப்பெற்ற சங்குசக்ரங்களாலே தோள்களில் அடையாளத்தைச் செய்யும் தாபஸம்ஸ்காரத்தைப் புருஷர்களே செய்யமுடியும் என்பது அனைவரும் இசைந்தது. இந்த 74 ஸிம்ஹாஸநாதிபதிகளின் வமிசத்தில் வந்தவர்களாக இன்று காணப்படும் ஆசார்யர்கள் அனைவரும் பஞ்சஸம்ஸ்காரம் செய்ய உரிமையுடைய புருஷர்களாகவே உள்ளனர். காலப்போக்கில் மற்றும் சிலர்க்கும் இவ்வுரிமை ஏற்பட்டிருக்கலாம். ப்ராக்ருத ஸ்த்ரீகள் பஞ்சஸம்ஸ்காரம் செய்ததாக இக்காலத்திலுமில்லை; முற்காலத்திலிருந்ததாக எந்த நூலிலுமில்லை. ஆகையால், 74 பீடாதிபதிகளில் பெண்கள் இருக்க இடமில்லை. (8) உறங்காவில்லியின் கையைப்பிடித்துக் கொண்டு நீராடியபின் மடத்திற்கு எழுந்தருளியது, யதிவரரான ராமாநுஜர் அத்துழாயை தண்டனிட்டது, திருக்கச்சி நம்பிகளின் போனகம் செய்தசேஷம் விரும்பியது முதலானவை ஸ்ரீராமானுஜர் சமுதாயநலன் கருதிக் காருண்யத்தாலே சாஸ்த்ர வரம்பை மீறிச்செய்த செயல்களல்லவா? *இதற்குபதில்:*—சாஸ்திரங்களில் ஸாமாந்ய த₄ர்மம் விஶேஷத₄ர்மம் என்று இரண்டு உண்டு. வர்ணாஶ்ரம த₄ர்மம் ஸாமாந்ய த₄ர்மம். "*நஶூத்₃ரா ப₄க₃வத்₃ப₄க்தா: விப்ரா பா₄க₃வதா: ஸ்ம்ருதா:*" [எம்பெருமானடியார்கள் நாலாவது வர்ணத்தில் பிறந்திருந்தாலும் ஶூத்₃ரர்க

ளல்லர்; அந்தணர்களேயாவர்] முதலான ப்ரமாணங்கள் மூற் கூறிய ஸாமாந்யத⁴ர்மத்திற்கு விதிவிலக்கான விஶேஷத⁴ர்மத் தையே காட்டுபவை. எம்பெருமானர், பெரியநம்பி முதலானர் பா⁴க³வதர்கள் விஷயத்தில் ஸாமாந்ய ஶாஸ்த்ரம் செல்லாதாகை யாலே விஶேஷ ஶாஸ்த்ரத்தைப் பின்பற்றி நடந்தனர். ஆகை யால் இதில் சாஸ்திர வரம்பை மீறிய செயல் ஒன்றுமில்லை. எம் பெருமானர் உந்துமதகளிறு பாசுராநுஸந்தானத்தின்போது தண்டனிட்டது தேவகிப்பிராட்டியையே என்று பூர்வாசார் யர்கள் வார்த்தைகளடங்கிய வார்த்தாமாலையில் உள்ளது. அத் துழாயை தண்டனிட்டார் என்று அரும்பதவுரையில் உள்ளது இதற்கு முரணுகையாலே தவறு. நிற்க, தேவகிப்பிராட்டியை ஆண்டாளாகவே கண்டு தண்டனிட்டாராகையாலே இதில் சாஸ்திர வரம்பை மீறிச் செய்த செயல் எதுவுமில்லை. (4) ராமா நுஜர் உறங்காவில்லியைப் பிடித்துச் சென்றதை ஆக்ஷேபித்தவர் கள், அவருக்கு விஷமிட்டவர்கள் முதலானரை ஸநாதனிகள் என்பதில் தவறென்ன? இதற்குப் பதில்:— சாஸ்திர ஸாரத்தை அறியாதவர்களும் ஶாஸ்த்ர விருத்³த⁴மாக விஷமிட்டவர்களும் ஸநாதன த⁴ர்மத்திற்கு முரண்பட்டவர்களேயாகையால் இவர் களை ஸநாதனிகள் என்பது சிறிதும் பொருந்தாது.

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்,

41. அடியேன் கேட்ட 32-வது கேள்வியின் பதிலில் சுமார் 6 பக்கத்தில் ஸாமாந்ய ஜனங்களுக்கும் புரியும்படியாக எளிய தமிழ்நடையில் பதில் உரைத்து, ப்ரியா பாதுகா பத்திரிகை களின் வாசகர்களும் தெளிவாக உணரலாம்படி லீலாவிஷயத்தில் மூன்று கேள்விகளையும், த⁴யாவிஷயத்தில் நாலு கேள்விகளையும் வெளியிட்டு அவற்றை அப்படியே அச்சிட்டு பதிலுரைக்கும்படி ப்ரதிபக்ஷிகள் அனைவரைக் குறித்தும் கேட்டிருந்தீர்கள், ஸ்ரீந்ரு ஸிம்ஹ ப்ரியா கார்த்திகை இதழில் 51-ம் பக்கத்தில் உத்தர மேரூர் வாஸுதேவாசார்யர் தங்கள் மூன்று கேள்விகளின் கடைசிப் பகுதிகளைமாத்திரம் அச்சிட்டு, முறையே (1) "ப்ராசுர் யத்தைப்பற்ற" (2) 'லீலாரஸேச்சையாலே" (3) "முதலில் கூறிய பதிலே இதற்கு பொருந்தும்" என்று ஒரு பதத்திலும், ஒரு வரியிலும் எதையோ பதிலாக எழுதி, அதற்கு ப்ரமாணமாக மாமுனிகளின் தத்வத்ரய (162) வ்யாக்²யானத்திலிருந்து சில துணுக்குகளை எடுத்திருக்கிருர். இவருடைய பதில்களின் கருத்து என்ன என்றும், இவர் எடுத்திருக்கும் துணுக்குகள் இவருடைய பதில்களை எப்படி ஸாதிக்கும் என்றும் அடியேனுக்குப் புரிய வில்லை; நல்ல நிருபகர்களான வித்வான்களைக் கேட்டபோது, "எதையோ பதிலாக எழுதவேண்டும் என்று எழுதியிருக்கிருர்" என்றே கூறுகிருர்கள். ஸ்ரீரங்கநாத பாதுகாவில் தங்கள்

http://acharya.org

கேள்விகளையே தொடாமல் நாவல்பாக்கம் வரதாசார்யர் வழக்கம்போல் எவருக்கும் எதுவும் புரியாதபடி "அரங்கனின் லீலையும், தயையும்" என்னும் கட்டுரையை எழுதியுள்ளார். இவற்றை விமர்சிக்க வேண்டுகிறேன்.

ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா வாசகர்களிலும், ஸ்ரீரங்கநாத பாதுகா வாசகர்களிலும் பெரும்பகுதியினர் நமது ஸ்ரீவைஷ்ணவ ஸௌதர்சனத்தைப் படிக்காதவர்கள். வாதத்தில் நமது கருத்துக்களை அவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்வதற்காகவே நாம் லீலா விஷயத்தைப்பற்றி மூன்று கேள்விகளையும், தயாவிஷயத்தைப் பற்றி நான்கு கேள்விகளையும் வெளியிட்டு, அவற்றை அப்படியே அச்சிட்டு பதிலுரைக்கும்படி கேட்டுக்கொண்டோம். அதில் முதல் விஷயத்தைப்பற்றிய மூன்று கேள்விகளும் பதினெட்டு வரிகள் வருகின்றன. அக்கேள்விகளின் பின்பகுதிகளை மாத்திரம் 5 வரிகள் அச்சிட்டு, முதல் இரண்டு கேள்விகளுக்கு ஒவ்வொரு பதத்தின் மூலமும், மூன்ருவது கேள்விக்கு "முதலில் கூறியபதிலே இதற்கு பொருந்தும்" என்றும் பதில் எழுதியுள்ளார் வாஸுதேவாசார்யர். அதற்கு மாமுனிகளின் ஸூக்திகளிலிருந்து சில துணுக்குகளை ப்ரமாணமாகக் காட்டுகிருர். தாம் எழுதியதற்கு இது எப்படி ப்ரமாணமாகும் என்பதுபற்றி ஒரு உபபாதநமும் இல்லை. மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளின் ஸாரமே நம்முடைய கருத்துக்கள் என்பது அந்த ஸ்ரீஸூக்திகளை ஓராசார்யனிடம் கற்றவர்களுக்கு எளிதில் விளங்கும். வாஸுதேவாசார்யர் நம் கேள்விகளை முழுவதும் ப்ரியாவில் அச்சிட்டு அவற்றுக்குத் தெளிவாகவும் விரிவாகவும் பதில் எழுதி, மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகள் அந்த பதிலை எப்படி வலியுறுத்துகின்றன என்று காட்டினுலொழிய எந்த வாசகருக்கும் எதுவும் விளங்காது. ப்ரியா ஆசிரியர்ஸ்வாமி "தேசிகாசயம்-2" என்னும் தலைப்பில் "ஸ்ரீவைஷ்ணவ ஸௌதர்சனம் ஆசிரியர் ஸ்வாமி இவ்விஷயத்தில் குற்றம் காணுமல் இசைந்துள்ளார்" என்று எழுதியிருக்கிருர். எந்த விஷயத்தை இசைந்துள்ளார் என்று குறிப்பிடவில்லை. நிற்க. மதுராந்தகஸ்வாமிஜாமாதா "அரங்கனின் லீலையும், தயையும்" என்னும் தலைப்பில் பாதுகாவில் எழுதியிருக்கும் கட்டுரையிலும் நமது ஏழு கேள்விகளையும் அச்சிட்டு பதிலளிக்கத் துணியவில்லை. கேள்விகளை அச்சிட்டால் பாதுகாவாசகர்களுக்குத் தம் விதண்டாவாதங்கள் புரிந்துவிடும் என்றே இப்படிச் செய்திருக்கிருர். இதிலிருந்து இவரது படுதோல்வி விளங்குகிறது. நாம் நம்ப்ரதிஜ்ஞையின்படி நமது ஏழு கேள்விகளையும் அப்படியே அச்சிட்டு பதிலிறுத்தாலொழிய விதண்டாவாதங்களுக்கு பதிலிறுத்து நமது பொன்னுன நேரத்தை வீணுக்கமாட்டோம்.

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்.

42. ப்ரப₄வ மார்கழி பாதுகாவில் நாவல்பாக்கம் வரதா சாரியரால் 'அரங்கனின் லீலையும் தயையும்' என்னும் கட்டுரை தொடரப்பெற்று தயாவிஷயமான தேவரீருடைய கேள்விகள் மட்டும் அரைகுறையாக அனுவதி₃க்கப்பெற்று ஏதோ பதில் எழுதப்பட்டிருக்கிறது. தேவரீரைக் குறித்தும் சில கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. அவற்றை விமர்ஶிக்க வேண்டுகிறேன்'

லீலா விஷயமான கேள்விகளை அச்சிடத்துணியாததி லிருந்தும், த₃யாவிஷயமான கேள்விகளையும் அப்படியே அச்சிடத்துணியாமல் அரைகுறையாக அச்சிட்டு மனம்போனபடி பதிலுரைத்திருப்பதிலிருந்தும் இவரது படுதோல்வி தெளிவாக விளங்குகிறது. மேலும் *'ததோ நிந்த₃ாம் ப்ரகுர்வதே'* [விஷய விசாரத்தில் வெல்ல முடியாதவர்கள் ப்ரதிபக்ஷியின் மேல் நிந்தையைச் செய்கிறார்கள்] என்கிற கணக்கிலே நம்மீது வெளிப்படையாகவும், பூர்வாசார்யர்கள் மீது மறைமுகமாகவும் வசவுமாரியைப் பொழியத்தொடங்கி விட்டார் மது₄ராந்தக ஸ்வாமிஜாமாதா. "பரது₃:க்க₂ து₃:க்கி₂த்வம் அபி₄நயமன்று, உண்மையானதே" என்று ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம பா₄ஷ்யத்தில் கல்வெட்டாக ஸாதித்திருக்கும் ஸ்ரீபராஶரப₄ட்டரையும் நம்மையும் ஆஸுரப்ரக்ருதிகள் என்றும், அப்பக்ஷம் பே₄த₃ா பே₄த₃பக்ஷம் போல் உபேக்ஷணீயம் என்றும் எழுதுகிறார். "நிரூபகர்களுக்கே புலனாகும் இதைப் பூர்வபக்ஷி அறியாததில் வியப்பில்லை" "தென்னாசார்ய நூல்களே இச்சைதான் தயை என்று நிரூபித்திருக்கிறது என்பதற்கு, இவ்வாறு சொல்பவர்கள் அரஸிகர்கள், விதண்டாவாதிகள், மூடர்கள் என்கிறார் பூர்வபக்ஷி" "பராஶரபட்டர் போன்ற ஆசார்யர்களையும் இகழ்ந்து பேசும் பூர்வபக்ஷி—ப்ரமாணம், ப்ரமாதா—ப்ரமேயம் என்று ஏற்பவர்கள் விதண்டாவாதிகள்—என்கிற ஸௌகத மதத்தைப் பற்றியதால் - ஸௌகத துர்தர்சனராகக் காட்சியளிக்கிறார்" முதலான கேட்பார் செவிசுடும் வசவுகளை நம்மை குறித்துப் பொழியத்தொடங்கிவிட்டார். இப்படி நம்மைக் இகழ்ந்திருப்பதாலும் தம்மைப் பலவாறு புகழ்ந்து கொள்வதாலும் நமது தகுதியையும் இவரது தகுதியின்மையையும் சிறிது விளக்கி விட்டு, மேலே இவருடைய கேள்விகளை அப்படியே அச்சிட்டு பதிலுரைக்கின்றோம். கடந்த மூப்பத்தைந்து வருடங்களாக

http://acharya.org

உபயஸம்ப்ரதாயஸ்தர்களான ஸ்ரீவைஷ்ணவர்களும் மற்றவர்களும் உச்சிமேல்வைத்து மெச்சுப்படியான பல்லாயிரம் பக்கங்கள்கொண்ட பற்பல நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறோம் நாம் ஸ்ரீவிஷ்ணுசித்த விஜயம், ஶாரீரககாரிகாவளீ விவரணம், யதீந்த்ரமததீபிகா காரிகாவளீ விவரணம், ஸாத்விகவிஜயம், விஶிஷ்டாத்வைத விஜய விவரணம். கீதா வ்யாக்யானம் முதலான ஸம்ஸ்க்ருத வேதாந்த விவரண க்ரந்தங்களும், திவ்யப்ரபந்த வ்யாக்யான விவரணங்களான த்ராவிட வேதாந்த விவரணபரங்களான பல க்ரந்தங்களும். ஸ்ரீராமாயண பாரதாதி தனிஶ்லோக விவரணம், வார்த்தாமாலா விவரணம். சாதிமத ஆராய்ச்சி சங்ககாலத்தமிழர் சமயம், கம்பனின் சமயம், ஸ்ரீவைஷ்ணவமத விஜயம் முதலான ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ப்ரதிஷ்டாபகமாயும், இதரமத ப்ரதிக்ஷேபகமாயும் இருக்கும் பல க்ரந்தங்களும் இவற்றில் அடங்கும். ப்ரதிபக்ஷி இப்படி எந்த நூலும் எழுதியிருப்பதாகத் தெரியவில்லை. "பக்தானுக்ராஹகம் புண்யம் ப்ரதிபக்ஷ நிராஸகம்" என்னும் ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்ஶன மங்களாஶாஸன ஶ்லோகத்தில் உள்ளபடி நாம் கடந்த முப்பத்தைந்து வருடங்களாக ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ப்ரதிஷ்டாபக க்ரந்தங்களையும் இதரமத நிரஸன க்ரந்தங்களையும் எழுதுவதிலேயே போதுபோக்கி வருகிறோம். வலுச்சண்டைக்கு எவராவது வந்தாலொழிய நாம் ஸம்ப்ரதாயச் சண்டைகளில் இறங்குவதில்லை. பல வருடங்களுக்குமுன் ஸ்ரீரங்கநாத பாதுகாவில் ஸமரஸவாதியான ராமலிங்கசாமியைப்போற்றி ஒரு கட்டுரையும், பெரியவாச்சான்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர், மணவாளமாமுனிகள் முதலான தென்னாசார்யர்களைக் கலிபுருஷனின் அவதாரம் என்று தூற்றி ஒரு கட்டுரையும் வெளிவந்தது. அதை மறுத்து ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்தில் நாம் ஒரு கட்டுரை எழுதினோம். அதைக் கண்டு கடுங்கோபங்கொண்ட நமது ப்ரதிபக்ஷியின் மாமனாராய், கீர்த்திமூர்த்தியான மதுராந்தகம் வீரராகவாசாரிய ஸ்வாமி நம்மை வலுவில் ஸம்ப்ரதாயச் சண்டைக்கு இழுத்துச்சில நூல்கள் எழுதினார். நாமும் வாதம்ருகஸரீஹி ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரதாசாரிய ஸ்வாமியும் சேர்ந்து எழுதிய ஸித்தோபாய விஜயத்தால் மதுராந்தக ஸ்வாமியின் வாதங்கள் நிரஸிக்கப்பெற்றன. அவரும் அடங்கி நின்றார். தென்னாசார்

யர்களின் ஸ்ரீஸூக்திகளை இங்கொன்றும் அங்கொன்றுமாக எடுத்து (முன்பின் ப்ரகரணங்களுக்கு முரணாக) 'அவை தே3ஶிக ஸம்ப்ரதா3யத்தையே தழுவி நிற்கின்றன' என்று நூல்கள் எழுதுவதையே போதுபோக்காகக் கொண்டிருந்தார் மது4ராந்தகம் ஸ்வாமி. அவருடைய இத்தகைய வாதங்கள் நமது ஸித்3தோ4பாய விஜயத்தில் தலையெடுக்க முடியாதபடி அடியறுக்கப்பட்டன. ஸ்ரீ காஞ்சீமஹாவித்3வான் ஸ்ரீ உ. வே. ப்ர. ப. அண்ணங்கராசாரிய ஸ்வாமியும் ஸ்ரீதே3ஶிக ஸ்ரீஸூக்திகளில் பலவற்றை எடுத்து 'இவை தென்னாசார்ய ஸம்ப்ரதா3யத்தையே தழுவி நிற்பனவை' என்று விளக்கும் பல நூல்களை எழுதி மது4ராந்தகம் ஸ்வாமியை அடங்கி நிற்கச் செய்தார். சில வருஷங்களுக்குமுன் ஸ்ரீமத3ஹோபி3ல மட2த்தாரின் கொள்கையைக் கண்டித்து மது4ராந்தகம் ஸ்வாமி ஒரு நூல் எழுதியபோது ஸ்ரீமட2த்து ஶிஷ்யர்களான வித்3வான்கள் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவிலேயே ஒரு கட்டுரை எழுதினார்கள். அதில் 'ஸ்ரீ மது4ராந்தகம் ஸ்வாமி விதண்டா3வாத3ம் செய்வதையே இயல்பாகக் கொண்டவர் என்பது ஸ்ரீ காஞ்சீமஹாவித்3வான் ஸ்வாமியின் க்ரந்த2ங்களிலிருந்தும் ஸுத3ர்ஶனம் ஆசிரியருடைய க்ரந்த2ங்களிலிருந்தும் விளங்கும்' என்று பொருள்பட எழுதியுள்ளது ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் அறிந்ததாகும்.

"உத்தமா ஆத்மநா க்2யாதா: பித்ரா க்2யாதாஸ்து மத்4யமா: ।
மாதுலேந அத4மா: க்2யாதா: ஶ்வஶுரேண அத4மாத4மா: ॥"

[தம் ஸாத4னைகளால் புகழ்பெற்றவர்கள் உத்தமர்கள்; தகப்பனின் ஸாத4னைகளால் புகழ்பெற்றவர்கள் மத்4யமர்கள். மாமாவின் ஸாத4னைகளால் புகழ்பெற்றவர்கள் அத4மர்கள். மாமனாரின் ஸாத4னைகளால் புகழ்பெற்றவர்கள் அத4மாத4மர்கள்] என்னும் ஶ்லோகத்தில் நாலாவது பாத3த்தில் சொல்லியபடி 'மது4ராந்தக ஸ்வாமி ஜாமாதா' என்றே புகழ்பெற்றிருக்கும் நமது ப்ரதிபக்ஷி ஆத்மக்2யாதியையும் அடைய விரும்பி மாமனாரின் அடிச்சுவட்டைப் பின்சென்று வலுவில் நம்மை ஸம்ப்ரதாயச் சண்டைக்கு இழுத்துப் பொய்வாத3ங்களையும் விதண்டாவாத3ங்களையும் செய்து பாதுகையில் கட்டுரை எழுதத் தொடங்கியுள்ளார் என்று விளங்குகிறது. ஆவணிப் பாதுகாவில் விவாத3த்தைத் தொடங்கும்போதே ஸ்ரீமத3ழகியசிங்கரால் தம்வினாவில் குறிப்பிடப்பெறாத 'எம்பெருமான் ஜீவர்களைப் பெறுதல்' என்னும் பயனை ஸ்ரீமத3ழகியசிங்கர் குறிப்பிட்ட

http://acharya.org

தாகப் பொய்யை எழுதினார் இவர். இவ்விஷயம் ஆவணி ப்ரியாவில் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஆசிரியர்ஸ்வாமி தமது 'தேஶிகாஶயம்' என்னும் கட்டுரையில் ஸ்ரீமதழகியஸிங்கரின் வினவை அனுவதித்திருப்பதிலிருந்தும். அக்கட்டுரையின் கடைசியில் "சேதனலாபமும் பகவானுடைய ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களுக்கு ப்ரயோஜனம் என்பார்க்கும் இதுவே ஸமாதானம்" என்று எழுதியிருப்பதிலிருந்தும் தெளிவாக விளங்குகிறது. இவர் செய்திருக்கும் மற்றும் பல க்ருத்ரிமச் செயல்களை இவர் நம்மைக் குறித்துக் கேட்டிருக்கும் கேள்விகளுக்கு வரிசையாக பதில் அளிக்கையில் விளக்குகிறோம் இனி.

கேள்வி 1. ஸ்வாதீநத்ரிவித சேதநாசேதந ஸ்வரூபஸ்திதி ... பேதம் என்று ஸ்ரீகத்யம் நித்யர் முக்தரும் பரமனின் தயாபாத்ரர்கள் என்கிறது. அவர்களிடம் துக்கமேயில்லாதபோது அவர்களைப் பற்ற பரதுக்க துக்கித்வம் ஏது? அவர்கள் பரமனின் தயாபாத்ரர்கள் அல்லரா? ஸ்ரீகத்யம் உங்கள் கொள்கைக்கு பாதகம் என்பதை மறுக்க முடியுமா?

இதற்குப் பதில்:—இங்கு தம் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் முதலானவை எம்பெருமானுக்கு அதீனமாயிருக்கைக்கு உறுப்பான அனுக்ரஹம் — நித்யமுக்தர்கள் விஷயத்தில் மட்டுமன்று. பத்தர்கள் விஷயத்திலும் அசேதன விஷயத்திலும் உள்ளது. அசேதன விஷயத்தில் துக்கத்துக்கு ப்ரஸக்தியேயில்லை. ஆகையால் அது விஷயத்தில் எம்பெருமானுக்குப் பரதுக்க துக்கித்வமோ பரதுக்கநிராசிகீர்ஷையோ இருப்பதற்கு இடமேயில்லை. ஆகையால் இக்குணம் தயையிலும் வேறுபட்ட அனுக்ரஹமேயென்று கொள்ளவேண்டும். பரதுக்க துக்கித்வமோ அல்லது பரதுக்கநிராசிகீர்ஷையோ துக்கத்துக்கு ப்ரஸக்தியுள்ள லீலாவிபூதியில் பத்தசேதனர்கள் விஷயத்திலேயே பிரகாசிக்கக் கூடியது. ஆகையால் நமக்கு ஸ்ரீகத்யம் எந்தவிதத்திலும் பாதகமன்று. இனி, பரதுக்க அஸஹிஷ்ணுத்வம் அல்லது பரதுக்க துக்கித்வம் தயாலக்ஷணமாகுமா. பரதுக்க நிராசிகீர்ஷை தயாலக்ஷணமாகுமா என்று ஆராய்ந்தால் பிறர் துன்பங்கண்டு பொறுது ஹாஹாகாரம் செய்வதாகிற பரதுக்க அஸஹிஷ்ணுத்வமே நல்லறிவுபடைத்த தயாவான்கள் என்று உலகில் புகழ்பெற்ற அனைவருக்கும் இருக்கக்கூடியது; 'ஸ ஏகாகீ ந ரமேத' என்று உபநிஷத்தில் பரவாஸுதேவனுக்கும், 'ப்ருஶம் பவதி து:கித:' என்று ஸ்ரீராமாயணத்தில் ஸ்ரீராமபிரானுக்கும் உள்ளதாக

http://acharya.org

உத்₃கோ₄ஷிக்கப்பட்டது. நல்லறிவுபடைத்த த₃யாவான்களி லும் சக்தியில்லாதவர்களுக்குப் பிறர் துன்பத்தைப் போக்குவ தில் விருப்பமாகிற பரது₃:க்க₂நிராசிகீர்ஷை ஏற்பட இடமில்லை. ஏற்கனவே அனுப₄வித்துவிட்ட து₃:க்க₂ விஷயத்தில் எவர்க் குமே பரது₃:க்க₂நிராசிகீர்ஷை ஏற்பட இடமில்லை. அவச்யம் அனுப₄வித்தே தீரவேண்டிய துன்பவிஷயத்தில் எம்பெருமானுக் கும் நிராசிகீர்ஷை ஏற்பட இடமில்லை, ஆகையால், பரது₃:க்க₂ நிராசிகீர்ஷையை த₃யாலக்ஷணமாகக் கொண்டால் த₃யாவான் கள் என்று புகழ்பெற்ற பலருக்கு த₃யை இல்லை என்று சொல்ல வேண்டிவருமாகையால் த₃யாலக்ஷணத்திற்கு அவ்யாப்தி தோ₃ஷம் விளையும். இதை, கேள்வியைப் படித்தவுடனேயே அனைவரும் புரிந்து கொள்ளலாம்படி நாம் நமது நாலாவது கேள்வியில் (32 வது கேள்வியின்பதிலில்) அமைத்திருக்க, அதில் முக்கியமான பகுதிகளை எடுத்துவிட்டுத் தம் இஷ்டத்துக்குச் சுருக்கி வெளியிட்டு மனம்போனபடி பதிலுரைத்திருப்பது இவருடைய க்ருத்ரிமச் செயலாகும். "குடும்பத்தலைவன் நோயி னால் வருந்தும்போது அவனது துன்பத்தைத் துடைக்க வழி அறியாத அவனது மக்கள் மிகவும் துன்புறுகிறார்கள் இதை த₃யைபுரிந்ததாக வழங்குவதில்லையே" என்கிறார் இவர். த₃யாலக்ஷணத்தில் '*ஸ்வார்த்த₂நிரபேக்ஷா*' என்று பரது₃:க்க₂ அஸஹிஷ்ணுதைக்கு விசேஷணமிட்டிருக்கையாலும் மக்கள் தங்களுடைய ரக்ஷகனுக்குத் துன்பம் நேரிட்டு விட்டதே என்று தம்பயன் கருதியே வருந்துகையாலும், இது த₃யையாகாது. ஆகையால் இங்கு லக்ஷணத்திற்கு அதிவ்யாப்தி வாராது. "ஸமர்த்த₂னை மருத்துவன் தன்பயன் கருதாது ஒருகுடும்பத் தலைவனின் நோயைப்போக்குமிடத்தில் நோயுற்ற வனும் சுற்றத்தாரும் அவனை த₃யையுடையவனாகப் பாராட்டு கிறார்கள். அம்மருத்துவன் குடும்பத்தார்போல் துன்புறுவ தில்லையே. த₃யாவானென்று கொண்டாடப்படும் இவனிடத்தில் உங்களுடைய லக்ஷணத்துக்கு அவ்யாப்தி வருகிறதே" என் கிறார். அம்மருத்துவன் பணம் புகழ் முதலான தன் பயன் கருதாது செயல்படும் இடங்களில் நோயாளி படும் துன் பத்தைக் கண்டு ஐயோ என்று இரங்கியே செயல்படுகிறானே யொழிய, அவிக்ருதனாய் நின்று செயல்படுவதில்லை என்பதை எங்கும் எவரும் காணலாம். ஆகையால் இங்கும் த₃யா லக்ஷணமுள்ளதாகையால் அவ்யாப்தி தோ₃ஷமில்லை.

http://acharya.org

கேள்வி 2: பரமன் ஸர்வசேஷி என்பது ஸித்தாந்தம். பரமன் ஸர்வ சேஷியாகையாவது தன் பயன் கருதியே ஸர்வத்தையும் பரிக்ரஹித்து அவற்றால் அதிசயவானாகை. பரார்த்த துன்பம் சேஷ வஸ்துக்களால் இசைந்தால் சேஷ வஸ்துக்கள் சேஷியின் அனர்த்தத்திற்காக என்று முடிவதால் பரமனுக்கு ஸர்வசேஷித்வமும், சேஷ வஸ்துவுக்குச் சேஷத்வமும் குலைவதால் சேஷ சேஷி பாவ ஸித்தாந்தம் உங்கள் மதத்தில் வருமா?

இதற்குப்பதில்-பரது3:க்க2து3:க்கித்வம் கல்யாண கு3ணமே யென்று ஸ்ருதிஸ்ம்ருதிகளால் தேறியவளவில், அந்த மஹா கு3ணத்தை விளைப்பது சேஷிக்குப் பெருமையை விளைக்குமே யொழிய அனர்த்த2த்தை விளைக்காது. ஆகையால் எங்கள் பக்ஷத்தில் சேஷ சேஷி பா4வத்திற்கு எக்குறையுமில்லை. ஈடு 4-10-2-ல் எடுக்கப்பட்ட ஐதிஹ்யத்தில் பரது3:க்க2து3:க்கித்வம் கல்யாண கு3ணமேயென்று ப4ட்டரால் நிலைநாட்டப்பட்டது. 'கர்த்தா' 'விகர்த்தா' என்னும் திருநாமங்களின் பா4ஷ்யத்திலும் இது ப4ட்டரால் நிலைநிறுத்தப்பட்டது. இதை 'பா3து3கா' வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்றே இவற்றை எளிய தமிழ் விவரணத்தோடு அச்சிட்டு இவை உங்கள் கொள்கைக்கு பா3த4கமானவையல்ல என்று நிரூபிக்க முடியுமா? என்று நாம் நமது மூன்றாவது கேள்வியில் கேட்டிருந்தோம். அப்படி இவற்றை எளிய தமிழ் விவரணத்தோடு அச்சிட்டால் வாசகர்கள் புரிந்துகொண்டுவிடுவார்கள் என்று பயந்தே நமது கேள்வியை அடியோடு மாற்றி அச்சிட்டு மனம்போனபடி பதிலுரைத்திருக்கிறார் இவர். அந்த பதிலை ஆராய்வோம். ''த3யா பரவ்யஸநஹரா'' (ர-ஸ்த 2-98) என்று ப4ட்டர் ஸாதித்திருப்பது தமக்கு ஸாத4கம் என்று பலகால் கூத்தாடுகிறார். இங்கு ப4ட்டர் த3யாலக்ஷணம் சொல்ல வரவில்லை. ''த3யையானது பிறருடைய துன்பத்தைப் போக்கவல்லது'' என்பதே இதன் பொருள். நிராசிகீர்ஷை த3யாலக்ஷணம் என்று கூறும் இவருக்கு ஸாத4கமாகவோ, து3:க்க2ாஸஹிஷ்ணுத்வம் த3யாலக்ஷணம் என்னும் நமக்கு பா3த4கமாகவோ இதில் என்ன இருக்கிறது? பிறர் துன்பத்தைப் போக்குவது த3யாகார்யம் என்னும் இவ்வளவுதானே இதில் உள்ளது. நாலு ஸ்லோகத்திற்குப் பிறகு '*த3யா Sந்யேஷாம் து3:க்க2ப்ரஸஹநம்*'(*103*) என்று ஸ்ரீபா4ஷ்யகாரரைத் தழுவி ப4ட்டர் த3யைக்கு லக்ஷணமுரைத்திருப்பதை மறைத்தது இவரது மற்றொரு க்ருத்ரிமச்

http://acharya.org

செயலாகும். இதுபோலவே அந்தராதி₁கரண ஶ்ருதப்ரகாஶிகா ஸ்ரீஸூக்தியை எடுக்கும்போது நாலுவரிக்கு முன் 'காருண்யம் —பரது₃:க்கா₂ஸஹிஷ்ணுத்வம்' என்று கருணைக்குப் 'பிறர் துன்பங்கண்டு பொறுமை' என்று லக்ஷணமுரைத்திருப்பதை மறைத்ததும் க்ருத்ரிமச் செயலேயாகும். பூர்வாசார்யர்கள் காலத்திற்குப் பிற்பட்ட யதீந்த்₃ரமத தீ₃பிகையில் பரது₃:க்க₂ நிராசிகீர்ஷையே லக்ஷணமாகக் கூறப்பட்டிருக்கிறது என்று ஆகாஶத் தாண்டவம் புரிகிறார். அவர் த₄ர்மபூ₄தஜ்ஞான ப்ரகரணத்தில் நிராசிகீர்ஷையோடு பரது₃:க்கா₂ஸஹிஷ்ணுத்வம் அல்லது பரது₃:க்க₂து₃:க்கி₂த்வத்தையும் த₃யாலக்ஷணமாக எடுத்திருப்பதை மறைத்தது இவருடைய பெரிய க்ருத்ரிமச் செயலாகும். தீ₃பிகாகாரர் இரண்டு ஸம்ப்ரதா₃ய பக்ஷங்களையுங் காட்டிப் பலவிடங்களில் எழுதியிருக்கிறார் என்பது அனைவருமறிந்தது. மணவாளமாமுனிகள், அவருக்கு முற்பட்ட ஆசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளைக்கொண்டு நாம் அர்த்த₂ நிஷ்கர்ஷம் செய்யவேண்டுமேயொழிய பிற்பட்டவர்களுடைய வசனங்களைக்கொண்டு செய்ய இயலாது. பூர்வாசார்யத்வம் மாமுனிகளுக்குப் பிற்பட்டவரிடத்தில் எவரும் இசைவதில்லை. உபநிஷத்₃ பா₄ஷ்யகாரர் பரிஸமாப்யவர்த்தித்வம் முதலான விஷயங்களில் தென்னாசார்யர்களை ஆதரித்திருப்பதை தே₃ஶிக ஸம்ப்ரதா₃யஸ்த₂ர்கள் இசைவார்களா?

கேள்வி 3: ஆனந்தமயாதிகரணம் விரோதியாதா?

இதற்குப்பதில்—ப்₃ரஹ்மத்தை ஆநந்த₃மயன் என்று கூறும் வேத₃வாக்யங்கள் ப்₃ரஹ்மத்தின் ஸ்வரூபநிருபக த₄ர்மம் ஆநந்தந்தவிர வேறில்லை என்றே முழங்குகின்றன. த₄ர்மபூ₄த ஜ்ஞானத்தின் விகாரமான அநந்த கல்யாண கு₃ணங்களில் பரார்த்த₂மான ஆநந்த₃ம் போலே பரது₃:க்க₂து₃:க்கி₂த்வமாகிற மஹாகு₃ணமும் ஒன்றாயிருப்பதை இது தடைசெய்யாது.

கேள்வி 4: துக்கித்வ பக்ஷத்தை எம்பெருமானாரே-அபரிமித துக்கஸ்ய பாரமார்த்திகத்வாத் ப்ரும்மாஜ்ஞான பக்ஷாதபி பாவியான அயம் பக்ஷ: என்று கர்ஹ செய்கிறாரே—அதை ஏற்க முடியுமா? ['பாபீயாந்' என்பது இங்கு 'பாவியான' என்று அச்சிடப்பட்டுள்ளது — ஸுதர்சனர்]

இதற்குப் பதில்-ப்₃ரஹ்மமே அநந்த து₃:க்க₂மயமான உலகமாகப் பரிணமிக்கிறது எனும் யாத₃வப்ரகாஶ மதத்தைக்

http://acharya.org

குறித்து 'பாபீயாநயம் பக்ஷ:' என்று இகழ்ந்தது மிகப்பொருத்தமானதே. ச்ருதிஸ்ம்ருதிகளில் மஹாகுணமாக எடுக்கப்பட்ட பரது:க்கது:க்கித்வத்தை நீங்கள் இகழ்வது மிகவும் பொருத்தமற்றது. 'ப்ருசம் பவதி து:க்கித:' என்று பரது:க்கது:க்கித்வத்தை மஹாகுணமாகக் காட்டினார் ஸ்ரீவால்மீகி. 'ததாவிதம் த்விஜம் த்ருஷ்ட்வா நிஷாதேந நிபாதிதம்| ருஷேர் தர்மாத்மநஸ்தஸ்ய காருண்யம் ஸமபத்யத||" [ரா. பா 2-13] [அந்தப் பறவை அவ்வண்ணம் வேடனால் அடித்துவீழ்த்தப்பட்டிருப்பதைப் பார்த்து தர்மாத்மாவான அந்த வால்மீகி மஹர்ஷிக்குக் கருணை உண்டாயிற்று. 'சோகார்த்தஸ்ய ப்ரவ்ருத்தோமே ச்லோகோ பவது" [ரா. பா 2—16] [சோகத்தினால் வருந்திய என்னுடைய வாக்யம் ச்லோகம் என்று பெயர்பெறக்கடவது] என்கிறபடியே தர்மாத்மாவான வால்மீகியின் சோகரூபமான கருணையால் எழுந்த ச்லோகமன்றோ ஸ்ரீராமாயணமாகப் பரிணமித்தது. இங்கு காருண்யம் நிராசிகீர்ஷை ஆகவே முடியாதே! பரார்த்தமான சோகம் குணமே ஒழிய தோஷமன்று என்பதை இந்நிகழ்ச்சியும் காட்டித்தருகிறது.

கேள்வி 5: தென்னாசார்ய ஸம்பிரதாய நூல்களிலேயே பரதுக்க நிராசிகீர்ஷையே தயை என்றிருக்க துக்கித்வம்தான் தயை என்றால் ஆசார்ய தூஷணமாகாதா?

இதற்குப்பதில்:—ஸ்ரீபாஷ்யகாரர், ஸ்ரீபராசரபட்டர், ச்ருதப்ரகாசிகாசார்யர், பெரியவாச்சான்பிள்ளை முதலான தென்னாசார்யர்களனைவரும் ஸ்வார்த்தநிரபேக்ஷமான பரது:க்காஸஹிஷ்ணுத்வம் அல்லது பரது:க்கது:க்கித்வம் தயாலக்ஷணம் என்று கூறியிருக்கிறார்களேயொழிய, பரது:க்கநிராசிகீர்ஷை தயாலக்ஷணம் என்று எவரும் கூறவில்லை, ஆகையால் இதில் ஆசார்யதூஷணம் எதுவும் இல்லை.

முடிவுரை:— இவரது ஐந்து கேள்விகளையும் அப்படியே அச்சிட்டு நாம் பதிலுரைத்தது போலே, நம்முடைய லீலா விஷயமான மூன்று கேள்விகளையும், தயாவிஷயமான நாலு கேள்விகளையும் இவர் பாதுகாவில் அப்படியே அச்சிட்டு தூஷணபரிஹாரஸங்களில் இழியாமல் பதிலுரைத்தாலொழிய இவரது பக்ஷம் நிலைநிற்கமாட்டாது என்பதை நடுநிலையாளர்கள் நன்கு உணர்ந்து கொள்வார்கள்.

பிழைதிருத்தம் :- இந்த சதகத்தில் பக்கம் 71 வரி 12-ல் 'ஆண்டாளாகவே' என்றிருப்பதை 'நப்பின்னையாகவே' என்று திருத்துக.

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்.

43. ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா ஆவணி, கார்த்திகை, தை இதழ்களில் "தேசிகாசயம்" என்னும் தலைப்பில் 'ப்ரியா' ஆசிரியர் மூன்று கட்டுரைகள் எழுதியுள்ளார். தேவரீருடைய கருத்துக்கும், அந்த ஸ்வாமியின் கருத்துக்கும் லீலாவிஷயத்தில் ஏதாவது வேறுபாடு உள்ளதா என்று எங்களைப்போன்ற பலருக்கு விளங்கவில்லை. ஆகையால் ஸம்ப்ரதா₃ய பே₄த₃ விஷயம் தவிர வேறு விஷயங்களில் அக்கட்டுரைகளில் விமர்சிக்க வேண்டியவை உள்ளனவா என்று விளக்கவேண்டுகிறேன்.

"ஸம்ப்ரத₃ாயபே₄த₃ விஷயத்தில் அந்தந்தப் பத்திரிகைகளில் அவரவர் கொள்கைகளை விளக்குவதே உசிதம். வலுச் சண்டைக்கு வந்தாலொழிய மற்ற ஸம்ப்ரதாயப் பத்திரிகைகள் அவற்றில் சகிப்புத்தன்மையுடனிருக்கவேண்டும்" என்பதே நம்கொள்கை. லீலாவிஷயம் ஸம்ப்ரத₃ாயபே₄த₃த்திற்கு உட்பட்டதல்ல. ஆகையால் இதுபற்றி மாத்திரம் தேசிகாசயக்கட்டுரைகளை விமர்சிக்கிறோம். "ஜகத் ஸ்ருஷ்டிக்கு க்ருபா ஸஹக்ருத லீலைதான் ப்ரயோஜநம்" என்று ப்ரியா ஆசிரியர் ஸ்வாமி அடிக்கடி எழுதுகிறார். "கேவல லீலையால் மட்டும் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறான் என்பதில்லை. க்ருபையை ஸஹகாரியாகக்கொண்டு ஸ்ருஷ்டிக்கிறான்" என்றும் எழுதுகிறார். முதல் வாக்யத்தைப் பார்த்தால் 'க்ருபையும் லீலையும் ஜக₃த் ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜனம்' என்று பொருள் படுகிறது. இரண்டாவது வாக்யத்தைப் பார்த்தால் 'க்ருபையும் லீலையும் ஜக₃த் ஸ்ருஷ்டிக்குக் காரணம்' என்று பொருள்படுகிறது. இது ஸாமான்ய ஜனங்களுக்குக் குழப்பத்தையே விளைக்கும். இனி, லீலாவிஷயத்தில் இந்தக் குழப்பத்தை ஒருவிதமாகப் போக்கலாம். லீலையாவது லீலாரஸம். இது ஜக₃த்ஸ்ருஷ்டிக்குப் பயன் என்பது அனைவரும் இசைந்தது. இந்தப் பயனை உத்₃தே₃ஶித்தே எம்பெருமான் உலகைப் படைக்கிறானாகையாலே, இந்த லீலாரஸம் இவ்வகையில்

http://acharya.org

ஜகத்ஸ்ருஷ்டிக்குக் காரணமாகவும் ஆகிறது. ஆக இப்படியாகப் பயனே காரணமாகிறது என்று 'ப்ரியா' ஆசிரியர் குழப்பத்தைப் போக்கலாம். ஆனால், க்ருபா விஷயத்திலே இப்படி நீக்க வழியில்லை. க்ருபை என்பது எம்பெருமானுடைய கல்யாணகுணம். அது ஜகத்ஸ்ருஷ்டிக்குக் காரணமாகிறது என்பதில் கருத்துவேற்றுமைக்கே இடமில்லை. ஆனால், அது ஜகத்ஸ்ருஷ்டிக்குப் பயனாவதற்கு வழியேயில்லை. ஆகையால் இக்குழப்பத்தை நீக்க வழியேயில்லை. "க்ருபை என்பது ஔபசாரிகமாக அதன் கார்யமான சேதனர் பெறும் மோக்ஷமாகிற பெரும்பயனைக் குறிக்கிறது" என்று 'ப்ரியா' ஆசிரியர் சொல்லுவாராகில், இதை "*லோகவத்து லீலாகைவல்யம்*" என்னும் ஸித்தாந்த ஸூத்ரத்தில் ஸூத்ரகாரர் ஏன் ஓதுக்கிறார்? என்னும் நம்முடைய லீலா விஷயமான முதற்கேள்விக்கு அவர் பதிலிறுத்தே தீர வேண்டிவரும். "அனந்த ஜீவர்களில் எப்போதோ எவருக்கோ கிடைக்கும் மோக்ஷலாபமாகிற பயன் அஸத்ஸமமாகையாலே அதை ஸூத்ரகாரர் ஸித்தாந்த ஸூத்ரத்தில் ஓதுக்கிறார்" என்று மாமுனிகளின் தத்வத்ரய வ்யாக்யானத்தைப் பின்பற்றி நாம் ஸ்ரீமதழகியசிங்கர் திருமுன்பே விண்ணப்பித்த பதிலையே அவரும் பதிலாகக் கூறமுடியுமே தவிர வேறு பதில் எதையும் சொல்ல முடியாது. முடியுமானால், நமது லீலா விஷயமான மூன்று கேள்விகளையும் (வாஸுதேவாசார்யரைப்போலே அரைகுறையாக அநுவதித்து ஒரு பக்தியிலும், ஒரு வரியிலும் பதில் சொல்லாமல்) முழுவதும் அச்சிட்டு, பாமரர்களும் புரிந்துகொள்ளும்படி அடுத்துவரும் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா இதழில் பதில் எழுத வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறேன். 'ப்ரியா' ஆசிரியர் இதைச் செய்யாமல் விட்டுவிட்டால், லீலா விஷயத்தில் நம்மோடு அவருக்குக் கருத்து வேற்றுமையில்லை என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும்.

P. சுந்தரராஜன், சென்னை-24.

44. ***டிசம்பர்' 87*** கலைமகளில், *"இரண்டு பாவைகள்"* ***என்னும் தலைப்பில்*** *காமகோடிப் பெரிய பீடாதிபதி எழுதியுள்ள* ***கட்டுரையில் "திருப்பள்ளியெழுச்சி*** *என்பது திருப்பக்ஷி" என்று*

http://acharya.org

திரிந்துவிட்டது அதே மாதிரி திருமஞ்சனம் என்பதும் தவறு. திருமெய் அஞ்சனம் என்று சொல்ல வேண்டும் அஞ்சனம் என்றால் தேய்த்தல்'' என்று கூறியிருக்கிறார். இது சரியா? செத்துப்போன பாவமாநாடுகளுக்குப் பீடாதிபதி இக்கட்டுரையின் மூலம் உயிரூட்ட விரும்புகிறாரா?

''திருமஞ்சனம் என்பது தவறு'' என்று பீடாதிபதி எழுதுவது அவருடைய தமிழிலக்கிய அறிவின்மையைக் காட்டுகிறது. பெரியாழ்வார் தம் திருமொழியில் கண்ணனை நீராட அழைக்கும்போது 'நீராடவாராய்' [2-4-1,4] ''மஞ்சனம் ஆட நீ வாராய்'' [2—4—3, 6, 7, 9] 'யசோதை மஞ்சனம் ஆட்டிய ஆற்றை' [2—4—10] என்று பலபாடல்களில் நீராடுவதே மஞ்சனமாடுவது என்று காட்டியிருக்கிறார்; 'திருமஞ்சனம்' என்பது இவ்வழக்கை அடிபொற்றி வந்தது. இச்சொல் 'மஜ்ஜனம்' என்னும் வடமொழிச் சொல்லிலிருந்து வந்ததேயொழிய பீடாதிபதி கூறுவதுபோல் அஞ்சனம் என்னும் சொல்லை அடிப்படையாகக்கொண்ட 'திருமெய் அஞ்சனம்' என்னும் சொற்களின் திரிபு அன்று 'மஜ்ஜனம்' என்றால் வடமொழியில் நீராடுதலைக்குறிக்கும். அதுவே தமிழில் மஞ்சனம் ஆகி, திரு என்னும் அடைமொழிபெற்று 'திருமஞ்சனம்' ஆயிற்று என்பதே உண்மை. திருமஞ்சனத்தில் அர்ச்சாவிக்ரஹம் நீராட்டப்படுகிறதேயொழியப் 'பீடாதிபதி கூறுவதுபோல் தேய்த்துவிடப்படவில்லை, சிற்க; பீடாதிபதி சைவத்தையும், வைணவத்தையும் அழிப்பதற்காகக் கிளப்பிவிட்ட பாவமாநாடுகள் ஏராளமான கோயில்பணத்தை விரயமாக்கிய பின்பு ஸுதர்சனத்தின் எதிர்ப்பினால் அழிந்துவிட்டன. பல கோயில்கள் நித்யபூஜைக்கே வழியில்லாமல் திவாலாகியிருக்கும் இன்றுள்ள நிலையில் பீடாதிபதியே முயன்றாலும் அவற்றை உயிர்ப்பிக்கமுடியாது.

R. பிரசன்ன வேங்கடேசன், கோயமுத்தூர்-1.

45 ஜனவரி 88 ''ஞானபூமி''யில் ''ஸ்ரீகவி'' என்பவர் காஞ்சியில் மஹாவிஷ்ணு கச்சபேஸ்வரர் என்ற ருத்ரமூர்த்தியை உபாஸித்ததாகக்கூறியுள்ளார், மேலும் ''சபரி''

http://acharya.org

என்பவர் அதே இதழில் ''வல்வினை போக்கிடும் வன்மீக நாதன்'' என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில், மாபலியை எம்பெருமான் மூன்றடி மண் யாசித்து மூன்றும் அடியை அவன் தலையின் மீது வைத்தபோது தர்ம தேவதை விஷ்ணுவை சபித்ததாகவும், ஆதலால் காலில் பழம் புற்று நோய் வந்ததாகவும் அதனுல் விஷ்ணு ருத்ரோபாஸகம் செய்து பதினெட்டு தீர்த்தங்களில் நீராடி எல்லா சிவாலயங்களையும் தரிசித்து அந்த நோய் நீங்கப் பெற்ருர் என்றும் (கயிறு) திரித்திருக்கிருர். இதைப்படித்தபோது மிகவும் வருத்தமாக இருந்தது. இதுபோல் பொய்யான ப்ரமாணங்கள் வளர வளர வைஷ்ணவம், ஏன் ஹிந்து மதமே குன்றி விடும். ஆகையினுலே தேவரீர் தயை கூர்ந்து இந்தப்பொய் ப்ரமாணங்களைக் கண்டித்து தங்களுடைய வைஷ்ணவ ஸுதர்சன பத்திரிகையிலே விமர்சிக்க வேண்டுமாய்ப் பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

பெரும்பாலான சைவ ஸ்தல புராணங்கள் விஷ்ணு த்வேஷத்தாலே சங்ககாலத் தமிழர் கண்ட வேதமுதல்வனை திருமாலைத் தாழ்த்தி ஒருசில நூற்ருண்டுகளுக்குள் எழுதப் பெற்றவை. காமகோடி பீடாதிபதியின் தூண்டுதலாலே வைஷ்ணவத்தையும், விஷ்ணுவையும் இழிவுபடுத்துவதற்காகவே ''ஞானபூமி''யை நடத்தும் மணியன் பாலுணர்ச்சிப் பத்திரிகைகளை நடத்தி நாட்டைக் குட்டிச்சுவராக்குவது போதாதென்று. ஞானபூமியின் மூலம் வைதிகமதத்தையும் உருவழித்துவருகிருர். எவ்வளவு சொன்னுலும் இவர் திருந்தமாட்டார் ஆகையால், வைஷ்ணவர்கள் இப்பத்திரிகையைக் காணுமலிருப்பதே நல்லது.

R. ரங்கராமானுஜதாஸர், இளங்காடு.

46. 'ஓம், நம' என்னும் மந்திரங்களை, பஞ்சசம்ஸ்காரம்செய்து கொண்டவர்கள் தான் உச்சரிக்கவேண்டுமா? மற்றவர்கள் உச்சரிக்கவும் கூடாதா? எழுதவும் கூடாதா?

பஞ்சஸம்ஸ்காரத்தின் போது திருவஷ்டாக்ஷரத்தை உபதேசம் பெற்றவர்களே அதில் அடங்கிய ப்ரணவத்தையும் நமஶ்ஶப்தத்தையும் உச்சரிக்கலாம். எழுதலாம். 'நம:' என்னும் சப்தம் இதிஹாஸபுராணங்களிலும் வருகையாலே அதைத் தனியாக அனைவருமே உச்சரிக்கவும் எழுதவும் செய்யலாம்.

http://acharya.org

P. ஸௌந்தரராஜன், சென்னை – 24.

47. ஸ்ரீவைஷ்ணவர்களில் சிலர் பகவத் ஸன்னிதியில் கன்னத்தில் அறைந்து கொள்கிறார்களே. இதுசரியா?

சிவபக்தர்கள்தான் சிவன் கோயிலில் "ஹரஹர" என்று கூறிக்கொண்டு அறைந்துகொள்வார்கள். மற்ற தெய்வங்கள் ஆராதனைக்கு எளியவர்களல்லாமையாலே அவர்களுடைய பக்தர்கள் அறைந்துகொள்வது, குட்டிக்கொள்வது, தோப்புக்கரணம் போடுவது, உடலில் அலகு குத்திக்கொள்வது. காவடி எடுத்து ஆடுவது, இருமுடி சுமந்து செல்வது முதலான கடுமையான செயல்கள் செய்கிறார்கள். ஆராதனைக்கு எளியனாய் ஓர் இலையையோ, மலரையோ, கனியையோ ஒன்றுமில்லாவிட்டால் நீரையோ முறைகெட அன்போடு இட்டாலும் போதும் என்னும் எம்பெருமான் இத்தகைய கடுஞ்செயல்களைத் தன்னடியார்கள் செய்வதைக் கண்டால் மிகவும் மனம் புண்படுவான். ஆகையால் ஸ்ரீவைஷ்ணவர்கள் பகவத் ஸன்னிதியில் இத்தகைய செயல்களைச் செய்வது கூடாது.

S. முரளி, அந்தணல்லூர்.

48. மார்கழி ஸ்ரீரங்கநாதபாதுகாவில் வெளிவந்துள்ள "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்னும் கட்டுரையில் ஸ்ரீசங்கரபாஷ்யத்தின் உரையான பாமதியைப்பற்றி அத்வைதிகள் கூறிவரும் நம்பத்தகாத கதையொன்றை எழுதி, அந்த பாமதீகாரருடைய ஜ்ஞானம் கைவல்யாநுபவத்தையும் இங்கேயே அளிக்குமென்று எழுதியுள்ளார். இதுசரியா?

இது சரியல்ல. "இந்த அத்வைத ஜ்ஞானத்தை ஸ்ரீபாஷ்யத்தில் கண்டிக்கப்புகுந்த ஸ்ரீபாஷ்யகாரர் "ததிதம் ஔபநிஷதபரமபுருஷவரணீயதாஹேது குணவிஶேஷ விரஹிணாம் அநாதிபாபவாஸநா தூஷிதாஶேஷஶேமுஷீகாணாம்.......... விவிதகுதர்க்க கல்ககல்பிதம் இதி ந்யாயாநுக்ருஹீத ப்ரத்யக்ஷாதி, ஸகல ப்ரமாண வ்ருத்தயாதாத்ம்ய வித்பி: அநாதரணீயம்

ஸௌ—20

ணீயம்'' [இது வரையில் சொல்லப்பட்ட அத்₃வைதிகளின் மதம் – உபநிஷத்துக்களில் முழங்கப்படும் பரமபுருஷனால் வரிக்கத்தக்க நற்கு₃ணங்களற்றவர்களாய், அநாதி₃பாப வாஸனையாலே அறிவு முழுவதும் கெட்டவர்களுடைய பலவிதமான அஸாரமான குதர்க்கங்களால் கற்பிக்கப்பட்டது என்னும் காரணத்தாலே, நியாயங்களோடு கூடிய ப்ரத்யக்ஷம் முதலான எல்லா ப்ரமாணங்களும் அறிவிக்கும் உண்மையை அறிந்தவர்களால் அநாத₃ரிக்கத்தக்கது] என்று அருளிச்செய்திருப்பதிலிருந்து ப₃ாமதி உரை முதலானவை அநாதி₃பாபவாஸனையாலே அறிவு கெட்டவர்களின் குதர்க்கப்பேச்சுக்கள் என்று விளங்குகிறது. இத்தகைய உரையினால் கைவல்யாநுபவம் இங்கேயே கிடைக்கும் என்று ஒரு ஸ்ரீவைஷ்ணவர் எழுதுவதும் அதை ஒரு ஸ்ரீவைஷ்ணவப் பத்திரிகை வெளியிடுவதும் மிகவும் அருவருக்கத்தக்கது. இத்தகைய கட்டுரைகளை வெளியிடாமலிருக்கும்படி பாதுகா ஆசிரியரை நியமிக்கவேண்டும் என்று ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமியைப் பிரார்த்திக்கிறோம். பாதுகாவில் பிழைகள் ஏராளமாயுள்ளன. பல கட்டுரைகளில் வாக்யங்கள் அநர்விதமாயுள்ளன. இவற்றைக் கவனித்துத் திருத்தக் கூடியவரை ஆசிரியராக நியமித்தால் நல்லது.

S, ஸ்ரீநிவாஸன் (கண்ணன்), மேலக்கொட்டையூர்; கும்பகோணம்

49. 1-2-88ல் நாகேசுவரன் கோவில் கும்பாபிஷேகத்துக்கு நிர் 2. காமகோடி சங்கராசாரியார் வந்தபோது, திருவையாறு தி. வி. அண்ணுசாமி சிரௌதிகள் ஒரு துண்டுக்கடிதம் வெளியிட்டிருக்கிறார். 'ஆதிசங்கரபகவத்பாதாள் ஸித்தாந்தம்' எனும் தலைப்புள்ள ஒரேபக்கமுள்ள அந்தத் துண்டுக் கடிதத்தில் சிவாநந்தலஹரி முதலான சில ஸ்தோத்ரங்களைப் பிரமாணமாகக் காட்டி ஆதிசங்கரர் சிவனையே மோக்ஷமளிக்கும் பரமாத்மாவாகக் கூறியிருக்கிறார் என்றும், விஷ்ணுவை அப்படிக் கூறவில்லை என்றும் எழுதியிருக்கிறார் இதை விமர்சிக்கவேண்டுகிறேன்.

இந்த சிரௌதி ஆதிசங்கரருடைய பாஷ்யங்களை அறியாதவர் என்றும், அவர் பெயரில் பின்னால் வந்த சங்கராசாரியர்

http://acharya.org

கள் எழுதிய துதிநூல்களையே அறிந்தவர் என்றும் விளங்குகிறது. ஆதிசங்கரர் தம் ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யத்தில் பாஞ்சராத்ராதிகரணத்தில் "நாராயணனே ப்ரஸித்தமான பரமாத்மா, ஸர்வாத்மா; அவனை ஆராதித்தாலேயே மோக்ஷம் கிடைக்கும்" என்று முழங்கியிருக்கிறார். ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் அந்தர்யாமி ப்ராஹ்மணத்துக்கு உரையிடும்போது நாராயணனே உலகனைத்துக்கும் அந்தர்யாமி என்று காட்டியிருக்கிறார். கீதா பாஷ்யத்தைத் தொடங்கும் போதே "*நாராயண: பரோऽவ்யக்தாத் வ்யக்தம் அவ்யக்த ஸம்பவம் । அண்டஸ்யாந்தஸ்த்விமே லோகா: ஸப்தத்வீபா ச மேதிநீ ॥*" [நாராயணன் மூல ப்ரக்ருதிக்கு மேற்பட்டவன். ஸ்தூலமான இவ்வுலகம் மூல ப்ரக்ருதியிலிருந்து உண்டானது. ஸ்தூலமான இவ்வண்டத்திற்குள்ளேயே இந்த லோகங்களும் ஏழு தீவுகளையுடைய பூமியும் இருக்கின்றன] என்று நாராயணனே ஸர்வ காரணன் என்னும் மங்கள ஶ்லோகத்தை இட்டுவிட்டு, "*ஆதிகர்த்தா நாராயணாக்யோ விஷ்ணு:*" என்று பாஷ்யத்தைத் தொடங்குகிறார். மேலே பல இடங்களிலும் நாராயண பரத்வத்தை முழங்குகிறார். கீதையில் ஈஶ்வரன், பரமேச்வரன் முதலான பதங்களுக்கு பாஷ்யம் எழுதுகையில் '*நாராயணாக்ய:*' [நாராயணன் என்னும் பெயரையுடையவன்] '*வாஸுதேவாக்ய:*' [வாஸுதேவன் என்னும் பெயருடையவன்] என்று ஐயந்திரிபற நாராயணனே பரம்பொருள் என்று காட்டுகிறார். "*அந்தவத்து பலம் தேஷாம்*" [கீதை 7-23] என்னுமிடத்திற்கு உரையிடும்போது, "படுகிற சிரமம் ஒன்றாயிருக்கையில் என்னையடைந்து மோக்ஷத்தைப் பெறாமல், அல்பமான அறிவுடைய இவர்கள் மற்ற தெய்வங்களையடைந்து அழிவுள்ள பலன்களைப் பெற்றுப்போகிறார்களே! இது என்ன கஷ்டம் என்று வருத்தத்தைக் காட்டுகிறான் பகவான்' என்று முழங்கியிருக்கிறார். கீதை [6-47] பாஷ்யத்தில் "உருத்திரன், ஆதித்யன் முதலானவர்களிடம் பக்தி செலுத்தும் யோகிகளைக்காட்டிலும் என்னிடத்தில் நெஞ்சு செலுத்தியவனாய், ஶ்ரத்தையுடையவனாய் எவனொருவன் என்னை ஸேவிக்கிறானோ அவனே மிகச்

http://acharya.org

சிறந்தயோகி என்று கருதப்படுகிருன் என்று கருத்து" என்று முழங்குகிருர். [கீதை 9-23,24-25] *பாஷ்யத்தில்* "எவர்கள் வேறுதேவதைகளிடம் பக்தர்களாய் இருந்துகொண்டு பூஜிக்கிருர்களோ அவர்கள் என்னையே அவித்யை முன்னிட்டுப் பூஜிக்கிருர்கள். அவித்யாவது அஜ்ஞானம். அஜ்ஞானத்தோடு பூஜிக்கிருர்கள் என்று கருத்து. தேவபூஜகர்கள் தேவர்களை அடைகிருர்கள். பித்ருபூஜகர்கள் பித்ருக்களை அடைகிருர்கள், பூதகணங்களைப் பூஜிப்பவர்கள் விநாயகர், மாத்ருகணம் சதுர்பகினி முதலான பூதங்களை அடைகிருர்கள். என்னைப்பூஜிக்கும் *வைஷ்ணவர்கள்* என்னையே அடைகிருர்கள். மற்றவர்களைப் பூஜிப்பவர்களுக்கும் பூஜிக்கும் *ஶ்ரமம்* ஒன்ருயிருந்தபோதிலும் நாமே ஸகல யஜ்ஞங்களுக்கும் ஸ்வாமி என்பதை அறியாமையாலே அவர்கள் என்னை அடைவதில்லை அதனுல் அவர்கள் அல்ப பலன்களைப் பெறுகிருர்கள் என்று கருத்து" என்றுகல்வெட்டாகக் காட்டியிருக்கிருர் ஆதிசங்கரர். சிவனை ஆதிசங்கரர் பரம்பொருளாகத் தமது பாஷ்யத்தில் எங்கும் குறிக்கவில்லை. சாந்தோக்யம் மூன்ரும் அத்தியாயத்தில் ப்ரஹ்மத்திஞல் ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்களைக்காட்டும் உபநிஷத் "*இந்த்ரோ, வருண: ஸோம: ருத்ர:*" என்று பல தேவர்களைப் படிக்கிறது. அவ்விடத்தில் பாஷ்யத்தில் "*ருத்ர: பஶூநாம்*" என்று உரையிடுவதன்மூலம் பஶுபதியான ருத்ரன் ப்ரஹ்மத்தால் படைக்கப்பட்டவனே என்று தெளிவாகக் காட்டினுர். இப்படி பாஷ்யங்களில் மிகத் தெளிவாக ஆதிசங்கரர் நாராயணனே பரம்பொருள் என்று நிலைநாட்டியிருக்கும்போது அவருடைய காலத்துக்குப் பல நூற்ருண்டுகளுக்குப் பின்னும் எவராலும் தொடப்படாதவையாகையாலே அவருக்கு மிகவும் பிற்பட்ட காலத்தில் வந்த சங்கராசார்யர்களால் எழுதப்பட்டவை என்று விளங்கும் 'சிவாநந்த லஹரீ' முதலான ஸ்தோத்ரங்களைக்கொண்டு, 'அவர் சிவனையே பரம்பொருளாகச் சொன்னுர். விஷ்ணுவைச் சொல்லவில்லை' என்று சிரௌதி புலம்புவது அவரது சாங்கரபாஷ்ய ஜ்ஞானமின்மையையே வெளிப்

http://acharya.org

படுத்தும். ஸ்ரௌதியிடம் நீங்கள் இதைக்காட்டி இதற்கு அவர் என்ன பதில் சொல்லுகிறார் என்பதைக்கேட்டு எழுதலாம். முன்னமே நாம் ''சங்கரரும் வைணவமும்'' என்னும் நூலில் ஆதிசங்கர பா$_4$ஷ்யங்களிலிருந்து பற்பல மேற்கோள்களைக்காட்டி அவர் விஷ்ணுவையே ஸகு$_3$ண ப்$_3$ரஹ்மமாகக் கொண்டவர் என்பதையும் அவர் ஷண்மத ஸ்தாபகர் என்பது தவறு என்பதையும் நிலைநாட்டியிருக்கிறோம். சென்னையிலுள்ள வரகூர் கல்யாணஸுந்தரசாஸ்திரி முதலான பலர் நமது நிருபணங்களுக்கு இன்றளவும் பதில்கூற மாட்டாதவர்களாயுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்.

50. மார்கழி மாதத்தில் வெளிவந்த தங்களது 42-வது கேள்வியின் பதிலில் மதுராந்தக ஜாமாதாவின் கேள்விகளை அச்சிட்டுத் தாங்கள் நேர்மையுடன் பதிலிறுத்துவிட்டு, தங்களுடைய கேள்விகளைப் பாதுகாவில் அச்சிட்டு பதிலிறுக்கும்படி கேட்டிருந்தீர்கள். கேள்விகளை அச்சிட்டாலே தம் விதண்டாவாதச்சாயம் வெளுத்துவிடும் என்று உணர்ந்து ம. ஜாமாதா மாசிப் பாதுகாவில் வழக்கம்போல் எவர்க்கும் எதுவும் புரியாத விதண்டாவாதங்களைச் செய்தும் பூர்வாசார்யர்களையும் தங்களையும் தாறுமாறாகத்தாக்கியும் பழைய தலைப்பிலேயே ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

ம. ஜாமாதா என்றே புகழ்பெற்றிருக்கும் இவரே ஆத்மக்$_2$யாதியை விரும்பி ஆவணி பாதுகா இதழில் இவ்விவாதத்தைக் கிளப்பி நம்மை வலுச்சண்டைக்கு இழுத்தார். பரது$_3$:க்க$_2$ா ஸஹிஷ்ணுத்வத்தையும், பரது$_3$:க்க$_2$து$_3$:க்கி$_2$த்வத்தையும் கு$_3$ணமாகக் காட்டியிருக்கும் ஸ்ரீ பா$_4$ஷ்யகாரர், ஸ்ரீ பராசரபட்டர் முதலான மஹாசார்யர்களை அசுரராக்ஷஸர்கள் என்றும், புத்தர்களையும் பே$_4$தா$_3$பே$_4$த$_3$வாதி$_3$களையும் ஒத்தவர்கள் என்றும் தாக்கினார். ப்ரயோஜநவத்த்வாதி$_4$கரணத்தில் ஸ்ரீ பா$_4$ஷ்யாதி$_3$களுக்கு முரண்பட எழுதினார். நம்முடைய கருத்துக்களை

http://acharya.org

அறியாத பாதுகா வாசகர்கள் அதை உணர்ந்து கொள்வதற்காகவும், இவர் உண்மையில் ஸ்ரீ பாஷ்யகாரரையும் ஸ்ரீ பராசர பட்டரையும் சேர்த்தே வைகிருரேயொழிய நம்மை மாத்திர மல்ல என்று அவர்கள் உணர்ந்து கொள்வதற்காகவும் இவரைக் குறித்துப் புரட்டாசி மாதத்தில் லீலா விஷயமாக மூன்று கேள்விகளையும், த்யா விஷயமாக நாலு கேள்விகளையும் வெளியிட்டு அவற்றைப் பத்திரிகைகளில் *அப்படியே அச்சிட்டு* பதில் உரைக்கும்படி கேட்டிருந்தோம். அவற்றை அப்படியே அச்சிட்டால் தமது சாயம் வெளுத்துவிடும் என்று உணர்ந்த இவர் இன்றளவும் லீலா விஷயமான கேள்விகளை அச்சிட்டு பதிலுரைக்கத் துணியவில்லை. நாம் கேட்டிருந்தபடி த்யா விஷயமான கேள்விகளை அப்படியே அச்சிட்டு, ஸ்ரீ பராசர பட்டரின் கர்த்ருவிகர்த்ரு நாம பாஷ்யங்களை அச்சிட்டு எளிய தமிழில் அவற்றுக்கு விவரணமும் 4-10-2 ஈட்டில் பட்டர் பற்றிய ஐதிஹ்யத்தை வெளியிட்டு அதற்கு எளிய தமிழில் விவரணமும் செய்தால் தாம் வைவது ஸ்ரீபராசரபட்டரையே என்பது பாதுகா வாசகர்களுக்குத் தெரிந்துவிடுமாகையால்; மார்கழிப் பாதுகாவில் நமது கேள்விகளை முழுவதும் அச்சிடாமலும், கர்த்ருவிகர்த்ருநாம பாஷ்யங்களையும், ஈடு ஐதிஹ்யத்தையும் வெளியிடாமலும் மனம்போனபடி விதண்டாவாதங்களையே எழுதி, நம்மைக்குறித்து ஐந்து கேள்விகளை வெளியிட்டிருந்தார். இவரைப்போல் மாதக்கணக்காக நாள்கடத்தாமல், வழக்கம்போல் சில நாட்களிலேயே இவரது கேள்விகளையும்: அவற்றுக்கு பதிலையும் மார்கழி ஸுதர்சனத்திலேயே 42 வது கேள்வியின் பதிலில் வெளியிட்டு, அதுபோலவே *நமது 7 கேள்விகளையும் அப்படியே அச்சிட்டு அவற்றுக்கு பதிலைப் பாதுகாவில் அச்சிடும்படி இவரை அறைகூவி அழைத்திருந்தோம்.* கேள்விகளை அச்சிட்டாலே தமது சாயம் வெளுத்துவிடுமாகையால், மாசிப்பாதுகையில் வழக்கம்போல் அவற்றை அச்சிடாமல் விதண்டாவாதங்களையும், தூஷணங்களையுமே இட்டு நிரப்பியிருக்கிறார். நமக்குச் சித்தஸ்வாதீனமில்லையென்றும், தேசிகனைத் தாறுமாருகப் பழிப்பதால் நாம் நரகத்

http://acharya.org

திற்கே வழிதேடிக்கொள்கிறோம் என்றும் எழுதுகிறார், நாம் எங்கே தேசிகனைத் தாறுமாறாகப் பழித்தோம்? பூர்வாசாரியர்களோடு தேசிகன் பல விஷயங்களில் கருத்து வேற்றுமை தெரிவித்திருக்கிறார் என்றுதானே தெரிவித்தோம். இது உண்மைதானே! எம்பெருமானாருடைய திருமருகனான நடாதூராம்மாள் ஸ்ரீபராசரபட்டர் முதலான பல பூர்வாசார்யர்களோடு கருத்து வேற்றுமைகளை ந்யாய ஸித்தாஞ்ஜனத்தில் வெளிப்படையாகத் தெரிவித்திருப்பதை இவர் அறியார் போலும்! ஜீவனுக்கு ப்ரத₂ம ப்ரவ்ருத்தியில் ஸ்வாதந்த்ர்ய விஷயத்தில் நடாதூரம்மாளோடு கருத்துவேற்றுமையும், ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் முதலான பல ஆசார்யர்களோடு பல விஷயங்களில் கருத்துவேற்றுமையும் பல நூல்களில் ஸ்ரீதேஶிகன் தெரிவித்திருப்பது உலகறிந்த விஷயமாயிற்றே! நமது ஸ்ரீஸூக்த வ்யாக்₂யானம், ஸித்₃தோ₄பாய விஜயம், கைவல்ய ஸித்₃தா₄ஞ்ஜனம் முதலான நூல்களில் பலவிடங்களைக் காட்டியிருக்கிறோமே! இப்படி தேசிகன் பல பூர்வாசார்யர்களோடு கருத்து வேற்றுமையைத் தெரிவித்திருப்பது பூர்வாசார்ய தூ₃ஷணமாகாதபோது. நாம் தே₃ஶிகனோடு கருத்து வேற்றுமையைத் தெரிவித்திருப்பது எப்படி அவரைத் தாறுமாறாகப் பழிப்பதாகும்? உண்மையில் ஸ்ரீபா₄ஷ்யகாரர், ஸ்ரீபராசரப₄ட்டர் முதலான மஹாசார்யர்களை இவர் அஸுரராக்ஷஸர்கள் என்றும் பு₃த்₃த₄னையும், யாத₃வப்ரகாசனையும் போன்றவர்கள் என்றும் தூ₃ஷித்திருப்பதன்றோ நரகவழிக்கு ஸாத₄நாநுஷ்டா₂நமாகும். "பஶ்யதி பரேஷு தோ₃ஷாந்" என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்ததுபோல் பிறர் கு₃ணத்தைக் குற்றமாகவும், தமது குற்றங்களைக் குணமாகவும் சாதும் அப்ராமாணிகஶிகாமணியான இவரோடு விவாதம் செய்ய நேர்ந்ததற்கு நாம் வெட்கி நிற்கிறோம். நிற்க. நம்முடைய எழு கேள்விகளையும் அப்படியே அமுக்கிட்டு பதிலுரைக்கத் துணியாததிலிருந்து லீலா விஷயத்திலும் தயாவிஷயத்திலும் இவரது படுதோல்வி வெட்ட வெளிச்சமாயிற்று என்பதைக் காட்டி நிற்கின்றோம்.

http://acharya.org

S. கீதா, சென்னை–17.

51. "பெருமாளுக்கு சமர்ப்பித்த கர்ப்பூரத்தைக் கண்ணில் ஒற்றிக்கொள்ளக்கூடாது" என்று சொல்லுகிறார்களே; ஏன்?

பெருமாளுக்குக் கர்ப்பூரம் ஸமர்ப்பிப்பதில் இரண்டு கருத்துக்கள் உண்டு. பெருமாள் ஸேவை நன்றாக ஆக வேண்டும் என்பது ஒன்று. ஸ்ரீவைஷ்ணவர்கள் மங்களாசாஸனபரர்களாகையாலே பெருமாளுக்கு 'என் வருகிறதோ!' என்று அஞ்சி திருஷ்டி கழிப்பது இரண்டு. திருஷ்டி கழிப்பதைக் கையால் தொடுவதில்லை என்பது எல்லாரும் அறிந்தது. முதல் கருத்தைக் கொண்டாலும், நமக்கு எல்லாமாயிருக்கும் பெருமாளுக்கு முன்னிலையில் அவன் ஸேவிப்பதற்கு உபகரணமான கர்ப்பூரத்தைக் கண்ணில் ஒற்றிக்கொள்வதன் மூலம் அதற்கு முக்கியத்துவம்கொடுப்பது தகாது. இக்காரணங்களாலேயே ஸ்ரீ வைஷ்ணவர்கள் கர்ப்பூரத்தைக் கண்ணில் ஒற்றிக்கொள்வதில்லை. எம்பெருமான் சூடிக்களைந்த புஷ்பம் அவனது ப்ரஸாதமாகையால் அதைக் கண்ணில் ஒற்றிக்கொள்ளலாம்; கர்ப்பூரம் ப்ரஸாதமல்ல.

கேசவராமாநுஜம், மதுரை.

52. வேதம் என்பது எழுதாக்கிளவியாய் சப்தரூபமாயிருப்பது. அதை மது கைடபர்கள் பிரமனிடமிருந்து அபஹரித்துச் சென்றனர் என்றும், எம்பெருமான் மத்ஸ்யாவதாரம் எடுத்து அதை மீட்டுக்கொண்டுவந்தான் என்றும் புராணங்கள் கூறுவது எப்படிப் பொருந்தும்?

நாலு வேதங்களுக்கு நாலு அபிமானி தேவதைகளுண்டு. அவர்கள் பிரமனின் வசத்தில் இருக்கும்வரையில்தான் பிரமனுக்கு வேதம் நினைவிலிருக்கும். அந்த தேவதைகளை மது கைடபர்கள் அபஹரித்துச் சென்றவுடன் வேதத்தை மறந்துவிட்டதால், பிரமன் "கண்ணிழந்தேன் தனமிழந்தேன்" என்று எம்பெருமானிடம் கதறினான். மதுகைடபர்களை ஹயக்ரீவாவதாரமெடுத்துக் கொன்று வேதத்தின் அபிமானி தேவதைகளை மத்ஸ்யரூபியாக எம்பெருமான் மீட்டுக் கொண்டுவந்து கொடுத்தபின்பே வேதங்களைப் பிரமன் திரும்பப்பெற்றான் என்று புராணங்கள் கூறுவது இவ்வகையில் பொருந்தும்.

http://acharya.org

S. V. ரங்கராமாநுஜன். ஸ்ரீரங்கம்.

53 16—2—88 ஹிந்து' பத்திரிகை. பக்கம் 23 ல் வெளி வந்த புத்தக விமர்சனத்தில் S. ஜகந்நாராயணன் எழுதிய ''ப்ரஹ்ம வித்யா'' என்னும் தமிழ் நூலை விமர்சிக்கும்போது அக்னிஹோத்ரம் ராமாநுஜதாதாசாரியார் மனம்போனபடி தம் கருத்துக்களைக் கூறியுள்ளார். தக்க ப்ரமாணங்களைக் காட்டி அவற்றை மறுக்கவேண்டுகிறேன்.

ஸ்ரீ S. ஜகந்நாராயணன் என்பவர் ஏற்கனவே சிலநூல்கள் எழுதியுள்ளார். இவருக்குப் போதுமான சாஸ்திர ஞானமோ வடமொழி தென்மொழிப்புலமையோ கிடையாது. இவருடைய நூல்களில் பற்பல சொற் பொருட் பிழைகளிருப்பது நம்மாலும் மற்றும் பலராலும் காட்டப்பட்டுள்ளது. சில வருடங்களுக்கு முன் ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு சங்கரரும் ராமாநுஜரும் செய்த பாஷ்யங்களைத் தமிழில் விளக்கும் 'ப்ரஹ்மவித்யா' என்னும் கையெழுத்துப் பிரதியை அச்சுப்போடவேண்டும் என்று நம் மிடம் கொண்டுவந்து காட்டினார். அதில் பற்பல சொற் பொருட் பிழைகள் இருப்பதைக் கண்டு ''இந்த விஷயங்களை யெல்லாம் எழுதுவதற்கு நீர் அதிகாரியல்லர். இதை அச்சிடு வதால் ஒருபயனுமில்லை'' என்று அவருக்குப் புத்திமதி கூறி அனுப்பினோம். சில மாதங்களுக்கு முன் ஸ்ரீரங்கத்தில் தற் செயலாகச் சந்தித்தபோது ''ப்ரஹ்ம வித்யாவை நான் அச்சிட்டு விட்டேன்'' என்று கூறிவிட்டு, தான் எழுதி அச்சிட்டிருந்த ஓர் திருப்பாவை உரையை நம்மிடம் கொடுத்துச்சென்றார். இவருடைய மற்ற நூல்களிற்போல் அதிலும் ஏராளமான சொற் பொருட்பிழைகளிருந்தன. ஸ்ரீராமாநுஜரைப்பற்றியும் ஸ்ரீ பாஷ் யாதிகளைப்பற்றியும் இழித்தும் பழித்தும் திரித்தும் கூறுவ தையே தம் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கும் அக்னி ஹோத்ரி இந்த 'ப்ரஹ்ம வித்யா' புத்தகத்தை விமர்சிக் கும் வியாஜத்தாலே அக்காரியத்தை மறுபடியும்செய்திருக்கிறார். அத்வைதத்தை வானளாவப் புகழ்வதையும், விசிஷ்டாத்வைத வைஷ்ணவத்தைப் பழிப்பதையும் தவிர இந்த விமர்சனத் தில் ஸாரம் எதுவுமில்லை. இதன் தொடக்கத்தில் ''ப்ரஹ்மம் என்னும் பதம் ரிக்வேதத்திலிருந்து உபநிஷத்துக்களில் கடன் வாங்கப்பட்டது'' இத்யாதிகளை எழுதியிருப்பதைக்கண்டு அழுவதா, சிரிப்பதா என்று நமக்கு விளங்கவில்லை. ''விமர்சிக்

http://acharya.org

கப்படும் நூலில் ஸ்ரீ பாஷ்ய ஜிஜ்ஞாஸாதிகரணம் அழகாக விளக்கப்பட்டுள்ளது'' என்று விமர்சகர் எழுதுவது பெரிய மோசடியாகும். புத்தகம் எழுதியவரும் விமர்சனம் எழுதியவரும் ஸ்ரீபாஷ்ய ஜிஜ்ஞாஸாதிகரணத்தைப் புரிந்துகொள்ளவும் தகுதியற்றவர்கள் என்பது இந்தப்புத்தகத்தையும் விமர்சனத்தையும் படிக்கும் சாஸ்திரஜ்ஞர்கள் எவர்க்கும் விளங்கும். விமர்சனத்தில் உள்ள சில பிதற்றல்களைக் காட்டுகிறோம் இனி:—(1) நம் காலத்து வைஷ்ணவம் ஏராளமான பெயர்களையும் உருவங்களையும் கதைகளையும் கொண்ட இஷ்ட தேவதைக்கும் சரணாகதிக்கும் முக்கியத்துவம் கொடுத்துவிட்டதால் ப்ரஹ்ம வித்யையைப் பின்பற்ற முடியவில்லை. (2) ஸ்ரீராமாநுஜர் ஆழ்வார்களின் அருளிச்செயல்களை ஆழ்ந்து படித்து அவற்றின் ஸாரத்தையும் தம் நூல்களில் பொறித்து வைத்திருப்பதாக நூலாசிரியர் எழுதியிருப்பது சரியல்ல. ராமாநுஜருடைய கிரந்தம் ஸம்ஸ்கிருதத்தில் உள்ளது. ஸம்ஸ்கிருதத்தில் நூல் எழுதிய ஆசார்யர்களை மட்டுமே அவர் குறிப்பிடுகிறார். ராமாநுஜர் உபநிஷத்துக்களைப் பின்பற்றிய புராணங்களில் சொல்லப்பட்ட பக்தியையே காட்டியிருக்கிறார். பிற்கால ஆசார்யர்கள் சொன்ன சரணாகதியை அவர் காட்டவில்லை. (3) ராமாநுஜருடைய க்ரந்தத்தைப் பார்த்தால் அவர் பக்கா வர்ணாச்ரமி என்று விளங்குகிறது. அவர் மேல் வர்ணங்களுக்குத்தான் மோக்ஷமடையத் தகுதியுண்டு என்று வெளிப்படையாகக் கூறியிருக்கிறார். ராமாநுஜரைச் சமூகச் சீர்திருத்தவாதி என்று வர்ணிப்பது பெரும் பொய்யாகும். (4) விசிஷ்டாத்வைதம் தமிழ்நாட்டில் நடையாடாமையால் அது நடையாடிவந்த காஷ்மீருக்கு ராமாநுஜர் சென்றார் (என்று நூலாசிரியர் கூறுகிறார்).

இப்பிதற்றல்கள் "த்ரமிடோபநிஷத் ப்ரபாவஸர்வஸ்வம்" என்னும் நூலில் ஸ்ரீ காஞ்சீ மஹாவித்வான் ஸ்வாமியாலும், "அக்நிஹோத்ரியும் வைணவமும்" என்னும் நூலில் நம்மாலும் டல ப்ரமாணங்களைக் காட்டி மிக விரிவாகக் கண்டிக்கப்பட்டுள்ளன. அந்த நூல்களுக்கு இன்றுவரை யாதொருபதிலும் எழுதாமல் பொய்யையே திருப்பித்திருப்பி லஜ்ஜையில்லாமல் எழுதி வரும் இவரை எந்த வார்த்தைகளால் வர்ணிப்பது என்றே விளங்கவில்லை. இவருடைய பிதற்றல்களுக்குச் சுருக்கமாக மறுப்புரைக்கிறோமினி:- (1) ரிக்வேதத்தில் விஷ்ணு

http://acharya.org

ஸூக்தத்தில் "ஆஸ்ய ஜாநந்தோ நாமசித்விவக்தந" [அறிவாளிகளே! விஷ்ணுவின் நாமங்களைக் கூறுங்கள்] "த்ருவாஸோ அஸ்ய கீரயோ ஜநாஸ:" [இந்த விஷ்ணுவின் திருநாம ஸங்கீர்த்தனத்தைச் செய்பவர்கள் நிலையான மோக்ஷத்தைப் பெறுகிறார்கள்] என்று விஷ்ணுவுக்கு நாமங்கள் பல இருக்கின்றன என்று முழங்கப்பட்டது. "தத்விஷ்ணோ: பரமம் பதம்" என்று பரமபதமும், "ப்ருஹச்சரீரோ விமிமாந:– யுவாகுமார:" என்று நித்ய யௌவனத்தையுடைய பெரிய ரூபமும், 'விஷ்ணோ: கர்மாணி பஶ்யத' [விஷ்ணுவின் செயல்களைப் பாருங்கள்] "த்ரீணி பதா விசக்ரமே" முதலான பல மந்திரங்களில் விஷ்ணுவின் உலகளந்தது முதலான வீரச் செயல்களைப் பேசும் கதைகளும் முழங்கப்படுகின்றன. "ய: பூர்வ்யாய வேதஸே நவீயஸே ஸுமஜ்ஜாநயே விஷ்ணவே தததாதி" [எந்தமனிதன் ஆதிமுதல்வனும், விதவிதமான உலகைப் படைத்தவனும், என்றும் புதியவனும், லக்ஷ்மீநாதனுமான விஷ்ணுவுக்குத் தன் ஆத்மாவை அளிக்கிறானோ] என்று சரணாகதியும் முழங்கப்பட்டது. இவையே உபநிஷத்துக்களிலும் இதிஹாஸ புராணங்களிலும் விரிவாக உபப்ருஹ்மணம் செய்யப்பட்டன. இவற்றின் பொருளை அறியாமல் கண்டபடி பிதற்றும் இந்த அக்னிஹோத்ரி 'நாலு வேதங்களையும் படித்தும், வாஸுதேவனே பரமாத்மா என்று அறியாதவன் வேதமாகிற சுமையைச் சுமக்கும் கழுதையேயாவான்" என்னும் மஹர்ஷிகளின் கண்டனத்துக்கே இலக்கானவர் என்று விளங்குகிறது.

(2) ஸ்ரீராமாநுஜர் தமது ஒன்பது க்ரந்தங்களிலும் நூற்றுக்கணக்கான இடங்களில் அருளிச்செயல்களைத் தழுவியிருக்கிறார் என்பதை ஸ்ரீகாஞ்சி மஹாவித்வான் ப்ர-ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி இந்த அக்னிஹோத்ரியைக் குறித்து எழுதிய "த்ரமிடோபநிஷத்ப்ரபாவஸர்வஸ்வம்" என்னும் நூலில் நிலைநாட்டியிருக்கிறார். அதற்கு இன்றுவரை எந்த பதிலையும் எழுதாத இவர் திருப்பவும் தம் பொய்வாதத்தையே எழுதுவது பெருத்த மோசடியாகும். ஸ்ரீராமாநுஜருடைய ப்ராசார்யரும் அவரால் அடிக்கடி தமது நூல்களில் பாராட்டப்படுபவருமான ஆளவந்தார் தமது ஸ்தோத்ரரத்னத்தில் நம்மாழ்வாரைத் தமது 'குலபதி' என்று குறித்திருப்பதிலிருந்து ஸ்ரீராமாநுஜரும் நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களைப் பரமாசார்யர்களாகக்கொண்டிருந்தவர் என்பது சிறுவர்க்கும் விளங்கும். ஸ்ரீராமாநுஜருடைய காலத்

http://acharya.org

தில் அவரது சிஷ்யரான அமுதனார் தாம் அருளிச்செய்த இராமாநுச நூற்றந்தாதியில் "பாமன்னுமாறன் அடி பணிந்துய்ந்தவன்" என்று தொடங்கிப் பல பாடல்களில் ஸ்ரீராமாநுஜர் ஆழ்வார்களிடம் மிகுந்த ஈடுபாடுடையவர் என்று காட்டினார். ஸ்ரீராமாநுஜருடைய சிஷ்யப்ரசிஷ்யர்களான எல்லா ஆசார்யர்களும் தம் நூல்களில் இதை வலியுறுத்தினர். ஸ்ரீ வேதாந்த தேசிகரும் தமது யதிராஜ ஸப்ததி முதலான பல நூல்களில் இதை நிலைநாட்டினார். இவர்கள் எல்லோரையும் பொய்யர்களாக்கப் பார்க்கும் அக்னிஹோத்ரியே பொய்யர்களில் தலைமை பெற்றவர் என்பது சொல்லாமலே விளங்கும். ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீ பாஷ்ய கீதா பாஷ்யங்களில் பக்தியோடு ப்ரபத்தியையும் காட்டியிருக்கிறார். கத்ய த்ரயத்தில் சரணாகதியையே பறை சாற்றியிருக்கிறார். இந்த ஒன்பது நூல்களும் எங்களாழ்வான் முதலான அவரது சிஷ்யப்ரசிஷ்யர்களால் உரையிட்டுப் பாது காக்கப்பட்டுள்ளன. ஆகையால் ஸ்ரீ ராமாநுஜர் சரணாகதியைக் காட்டவில்லை என்பது ப்ரஹ்மாண்டப் புளுகுகளில் ஒன்றாகும். (3) ஸ்ரீ ராமாநுஜர் வேதாந்தங்களில் சொல்லப்பட்ட ஸாதன பக்தி மேல் வர்ணத்துக்குரியது என்று கூறியிருந்தபோதிலும், எல்லா வர்ணத்தவர்களும், ஸ்த்ரீகளும் மோக்ஷமடைய வழியுண்டு என்று காட்டியிருக்கிறார். ராமாநுஜர் சாஸ்திர விருத்தமாக எந்தச் சீர்திருத்தத்தையும் செய்யவில்லை. அவர் செய்த சீர்திருத்தங்களெல்லாம் சாஸ்திர வரம்புக்கு உட்பட்டவையே. எம்பெருமானையே எல்லாமாகக்கொண்ட தாழ்ந்த சாதியினர்க்கு அந்தந்தத் தாழ்ந்த சாதி விலகிவிடும் என்று சாஸ்திரங்களிலுள்ள விசேஷ விதிகளைத் தம் அநுஷ்டானத்தில் கடைப்பிடித்தார் ராமாநுஜர். இதை 9-32ல் எல்லா வர்ணங்களுக்கும் ஸ்த்ரீகளுக்குங்கூட மோக்ஷமுண்டு என்று கீதாசார்யன் முழங்குகிறான். கீதாபாஷ்யத்திலும் அப்படியே உரையிட்டுள்ளார் ஸ்ரீராமாநுஜர். இவற்றையெல்லாம் அறியாமல் அக்னிஹோத்ரி மனம் போனபடி எழுதுகிறார் என்று விளங்குகிறது. (4) நமது "சங்ககாலத் தமிழர் சமயம்" "சாதி மத ஆராய்ச்சி" 'ஸ்ரீவைஷ்ணவ மத விஜயம்' முதலான நூல்களில் சங்ககாலத்திலிருந்தே தமிழ்நாட்டில் சான்றோர்கள் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தையே கைக்கொண்டிருந்தார்கள் என்றும், அத்வைதம் சைவம் முதலான மதங்கள் சங்ககாலத்தில் இல்லை என்றும் எதிரிட்டவர்

http://acharya.org

களும் மண்ணுண்ணும்படி விலோட்டியிருக்கிறோம். விஶிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவமதத்தைப்பரப்பிய த்ரமிடபாஷ்யகாரர் ஸ்ரீராமாநுஜரால் தம் நூல்களில் எடுக்கப்பட்டுள்ளார். அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்று அவர் பெயரிலிருந்தே விளங்குகிறது. இவை ஒன்றையும் அறியாத அரைகுறை அறிவுள்ள ஒருவர் ப்ரஹ்மஸூத்ர பாஷ்யங்களைப்பற்றிப் புத்தகம் எழுதுவதும், அதை விஷ்ணு வைஷ்ணவ த்வேஷியான அக்னிஹோத்ரி ஆதரிப்பதும் மிகவும் விந்தையாகும். இலக்கிய மதத்துறை மோசடி மன்னரான அக்னிஹோத்ரியைக்கொண்டு இலக்கியமத நூல்களுக்கு விமர்சனம் எழுதச்செய்வதன் மூலம் 'ஹிந்து' பத்திரிகை தன் தரத்தைத் தாழ்த்திக்கொள்வது மிகவும் வருந்தத்தக்கது.

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்.

54. 43 வது கேள்வியின் பதிலுக்கு 'ப்ரியா' ஆசிரியர் ஸ்வாமி பங்குனி ப்ரியாவில் பதிலளிக்கத் தொடங்கியுள்ளார். இந்த பதிலும் பாமரர்களான எங்களுக்குக் குழப்பத்தையே விளைக்கிறது. குறிப்பாகக் கடைசி வாக்கியம் முடிவு பெறுமல் நின்று குழப்பத்தை அதிகரிக்கச் செய்கிறது. குழப்பங்களை நீக்கியருள வேண்டுகிறேன்.

" 'ஸ்ருஷ்டிக்கு க்ருபையும் லீலையும் காரணம்' என்று ஒப்புக்கொள்ளும்போது அவ்விரண்டும் ப்ரயோஜனம் என்று சொல்லுவதில் ஆக்ஷேபிப்பதற்கு என்ன காரணம்?" என்று நம்மைக் கேள்விகேட்டுவிட்டு, "உபயப்ரயோஜனமும் உண்டாயிருக்கச் செய்தேயும் லீலையே ப்ரயோஜனம் என்ற இது ப்ராசுர்யத்தைப் பற்றச் சொன்னவித்தனை" என்னும் மாமுனிகள் ஸ்ரீஸூக்தியை மேற்கோள்காட்டுகிறார் 'ப்ரியா' ஆசிரியர் ஸ்வாமி. இதற்கு *நமது பதில்:–* காரணமாயிருப்பதெல்லாம் ப்ரயோஜனமாகாது. ஜகத் ஸ்ருஷ்டிக்குக் காரணமான ஜ்ஞாநஶக்த்யாதி குணங்கள் ஜகத் ஸ்ருஷ்டிக்குப் பயனாக முடியாதன்றோ. அவ்வண்ணமே ஜகத் ஸ்ருஷ்டிக்குக் காரணமான க்ருபையும் அதற்குப்

http://acharya.org

புயனுக முடியாது. மேற்கோளாகக் காட்டப்படும் மாமுனிகளின் வாக்யமும், லீலாரஸத்தையும், சேதநருடைய உஜ்ஜீவனத்தையுமே ப்ரயோஜனமாக எடுத்து, அவற்றை "உபய ப்ரயோஜனமும் உண்டாயிருக்கச்செய்தேயும்" என்று அநுஸந்திக்கிறது. க்ருபையை ப்ரயோஜனமாக மாமுனிகள் அருளவேயில்லை என்பதைத் தத்வத்ரயம்-ஈச்வர ப்ரகரணம் 22 வது சூர்ணையின் வ்யாக்யானத்தில் எவரும் காணலாம். க்ருபை என்பது ஔபசாரிகமாக அதன் கார்யமான மோக்ஷத்தைக் குறிப்பதாகத் தாம் எழுத உத்தேசிக்கவுமில்லை. எழுதவும் இல்லை என்று 'ப்ரியா' ஆசிரியர்ஸ்வாமி எழுதுகையால், மாமுனிகளின் இந்த ஸ்ரீஸூக்தி அவருக்கு ப்ரமாணமாகமாட்டாது. எப்படி ப்ரமாணமாகும் என்பதை அவர் விளக்கவேண்டியது அவச்யம். கட்டுரையின் கடைசியில் எழுதியுள்ளபடி நம்முடைய லீலாவிஷயமான மூன்று கேள்விகளையும் அப்படியே அச்சிட்டு பதிலுரைத்தபின்பு நாம் இவ்விஷயத்தைத் தொடர்வோம். 'ப்ரியா' கட்டுரையின் கடைசி வாக்யம் முடிவுபெறாமல் அநந்விதமாக அரைகுறையாக நிற்பதற்குக் காரணம் என்ன என்று நமக்கும் புரியவில்லை. அவரே விளக்கவேண்டும். திருநாராயணபுரத்தில் எம்பெருமானார் திருநக்ஷத்திரத்தன்று பங்களூர் உபயவேதாந்த ப்ரவர்த்தந ஸபையில் அக்ராஸனம் வஹித்துத் தலைமையுரையாற்றுவதற்கும், மேல்கோட்டை ஸம்ஸ்க்ருதக் கழகத்தில் உபந்யாஸங்கள் செய்வதற்கும் 16–4–88 அன்றேநாம் புறப்படுவதால் இவ்விஷயமான நமது பதில் வைகாசி மாதத்திலேயே வெளிவரும்.

R. மாதவன், துறையூர், மற்றும் பலர்.

55. தொலைக்காட்சியில் காட்டப்படும் ராமாயணத் தொடரில் ராமன் சிவலிங்கபூஜை செய்வதாக வருகிறது. இதற்கு ஆதாரம் உண்டா?

T. V. ராமாயணத்தொடரில் வால்மீகி ராமாயணத்தோடு மற்றும் பலபல ராமாயணங்களின் கலப்படம் உள்ளது. ராமன் லிங்கபூஜை செய்தான் என்பதற்கு வால்மீகிராமாயணம் கம்பராமாயணம், ரகுவம்சம் முதலான பழைய ராமாயணம் எதிலும் ஆதாரமில்லை. பிற்காலக் கற்பனையே இது. இவ்விஷயம் நமது வெளியீடான ராமலிங்கப்ரதிஷ்டையில் விவரிக்கப்பட்டுள்ளது. அதில் கண்டு தெளியலாம்.

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்.

56 விபவ சித்திரையிதழில். 'ப்ரியா' ஆசிரியர்ஸ்வாமி 'கேள்வியும் பதிலும்' என்னும் தலைப்பில் தம் பதிலைத் தொடர்ந்துள்ளார். 'எனது கேள்விகளை அச்சிட்டு பதிலிறுக்கவேண்டும், என்று தேவரீர் பலமுறை ப்ரார்த்தித்திருந்தும். முதல் கேள்வியை மாத்திரம் முழுதும் அச்சிட்டு ஏதோ பதில் எழுதி விட்டு, இரண்டாவது கேள்வியை அரைகுறையாக அச்சிட்டும், மூன்றாவது கேள்வியை அடியோடு அச்சிடாமலும் ஏதோ பதில் எழுதியிருக்கிறார், இந்த பதில்கள் சரியான பதில்கள் அல்ல என்பது என்னைப்போன்ற பாமரனுக்கே தெளிவாக விளங்குகிறது. அவற்றை விமர்சிக்கவேண்டுகிறேன்.

நாம் கேள்விகளைக்கேட்டது சென்ற புரட்டாசி மாத ஸுதர்சனத்தில் கேட்கும்போதே. "ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவிலோ, ஸ்ரீரங்கநாதபாதுகாவிலோ அப்படியே அச்சிடச் செய்து அவற்றுக்கு பதிலிறுக்கவேண்டும்" என்று ப்ரார்த்தித்திருந்தோம். அடுத்துவந்த ஸுதர்சனங்களிலும் இப்படிப் பலமுறை ப்ரார்த்தித்திருந்தோம், கேள்விகளை அச்சிட்டாலே ப்ரியா பாதுகா வாசகர்கள் உண்மையைப் புரிந்து கொள்வார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தோம். கேள்விகேட்டு ஏழுமாதமாகியும் மூன்று கேள்விகளையும் அப்படியே அச்சிட்டு பதிலுரைக்கும் துணிவு இரு பத்திரிகைகளுக்கும் இல்லை. பதினெட்டே வரிகளுள்ள கேள்விகளை 'ப்ரியா' இருமுறை அரைகுறையாகவே அச்சிட்டது. 'பாதுகா' இன்று வரை கேள்விகளை அச்சிடவே துணிவற்றிருக்கிறது. இந்நிலையே இவர்களுடைய வாதத்தில் வலுவில்லை என்பதை நடுநிலையாளர்களுக்கு நன்கு எடுத்துக் காட்டும். நிற்க; சித்திரை 'ப்ரியா'விலுள்ள பதில்களை ஆராய்வோம் இனி.

நமது முதல் கேள்வி: —

1. ப்ரயோஜநவத்த்வாதி,கரணத்தில் பூர்வபக்ஷத்தில் ஜக,த்ஸ்ருஷ்டி முதலானவற்றால் ப்,ரஹ்மத்துக்கும் பயனில்லை.

http://acharya.org

ஜீவர்களுக்கும் பயனில்லை என்று ஆக்ஷேபித்திருக்கும்போது ஸித்₃தா₄ந்தத்தில் வேத₃வ்யாஸர் ஜீவர்கள் அடையும் மோக்ஷ லாப₄மாகிற பயனை ஏன் ஓதுக்கினர்?

முதல் கேள்விக்கு 'ப்ரியா' பதிலின் விமர்சனம்.

நமது கேள்வியில் "ஜக₃த்ஸ்ருஷ்டி முதலானவற்றால் ப்₃ரஹ்மத்திற்கும் ஜீவர்களுக்கும் பயனில்லை என்று எழுதியிருப்பதில் 'முதலானவற்றால்' என்று பூர்வபக்ஷத்தை அநுவதித்திருப்பது தவறு" என்பது 'ப்ரியா'வின் வாதம். "பா₄ஷ்யத்தில் பூர்வபக்ஷத்தில் ஸ்ருஷ்டி மாத்திரமே கூறப்பட்டுள்ளதேயொழிய ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்கள் மூன்றும் கூறப்படவில்லை; ஆகையால். பாஷ்யத்தில் இல்லாத 'ஆதி' பதத்தைச் சேர்த்துக்கொண்டு 'ஸ்ருஷ்டி முதலானவற்றால்' என்று எழுதியிருப்பது தவறு" என்பது 'ப்ரியா' வாதம். இது சரியல்ல. இங்கு ஶ்ருதப்ரகாஶிகையில் ஸ்ருஷ்டிபத₃ம் 'காரணத்வம்' என்று விவரிக்கப் பட்டிருக்கையால், பா₄ஷ்யத்தில் ஸ்ருஷ்டியைச்சொன்னது காரணத்வத்தில் அடங்கிய ஸ்தி₂தி லயங்களுக்கும் உபலக்ஷணம் என்று விளங்குகிறது. பா₄ஷ்யத்தில் பூர்வபக்ஷத்தின் உபக்ரம உபஸம்ஹாரங்களில் 'ஸ்ரஷ்ட்ருத்வம்' என்னும் பதத்தை யிடாமல் "ஈஶ்வரகாரணத்வம் ந ஸம்ப₄வதி" "ப்₃ரஹ்மண: காரணத்வம் நோபபத்₃யதே" என்று அருளியிருப்பது இதை வலியுறுத்துகிறது. இரண்டாவதான ஸித்₃தா₄ந்த ஸூத்ரத்தின் பா₄ஷ்யத்தில் "ஸ்வஸங்கல்பமாத்ராவக்லுப்த ஜக₃ஜ்ஜந்மஸ்தி₂தித்₄வம்ஸாதே₃: லீலைவ ப்ரயோஜநமிதி நிரவத்₃யம்" என்று ஸ்ரீபா₄ஷ்யகாரர் ஸ்தி₂திலயங்களையும் சேர்த்திருப்பது இதை அசைக்கமுடியாதபடி நிலைநாட்டுகிறது. 'ப்ரியா' ஆசிரியரால் ப்ரமாணமாக எடுக்கப்படும் மாமுனிகளுடைய தத்வத்ரயவ்யாக்யானத்திலும், அதற்கு மூலமான தத்வத்ரயத்திலும், "ஆனால் ஸம்ஹாரத்தில் லீலை குலையாதோ வென்னில்: ஸம்ஹாரந்தானும் லீலையாகையாலே குலையாது' [தத்வத்ரயம்—ஈஶ்வர 23,24] என்றும், "கொட்டகமிட்டு விளையாடுகிற பா₃லர்க்கு, இட்ட கொட்டகந்தன்னை மீள அழித்துப் போகடுகிறதுதானும்

http://acharya.org

லீலையாயிருக்குமாபோலே. இவற்றை ஸம்ஹரிக்கைதானும் ஸ்ருஷ்டியோபாதி லீலையாயிருக்கையாலே, எப்போதும் லீலை குலையாது'' (ஷெ மாமுனிகள் வ்யாக்யானம்) என்றும் அருளியிருப்பது பூாஷ்யத்தில் ஸ்ருஷ்டியைச்சொன்னது ரக்ஷண ஸம்ஹாரங்களுக்கும் உபலக்ஷணம் என்று காட்டுகிறது. ஆகையால், 'முதலானவற்றால் என்று நாம் எழுதியது தவறு என்றதே தவறு'' என நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும்.

''ஜீவர்கள் அடையும் மோக்ஷமாகிற பயனை ஏன் ஸித்தாந்தத்தில் ஓதுக்கிறார் வேதவ்யாஸர்?'' என்னும் நமது கேள்விக்கு ''மோக்ஷலாபமாகிற பயனைப்பற்றிப் பூர்வபக்ஷத்தில் சொல்லாததால் அப்ருஷ்டோத்தரமும் இல்லை. ஆக, முதல் கேள்வி முற்றிலும் தவறு'' என்று பதிலளிக்கிறது 'ப்ரியா'. நடுநிலையாளர்களே! இங்கு பூர்வபக்ஷியின் ஆக்ஷேபத்தை நன்கு பாருங்கள். ''ஜகத்ஸ்ருஷ்டி முதலானவற்றால் ப்ரஹ்மத்திற்கும் பயனில்லை—ஜீவர்களுக்கும் பயனில்லை'' என்பது பூர்வபக்ஷியின் வாதம். ''ப்ரஹ்ம ஜீவர்களுக்கு ஜகத்ஸ்ருஷ்டி முதலானவற்றால் எப்பயனுமில்லை'' என்பது இவ்வாதத்தின் திரண்ட பொருள். இனி, ஸித்தாந்தியின் கடமை என்ன? ப்ரஹ்மத்திற்கோ ஜீவர்களுக்கோ ஜகத்ஸ்ருஷ்டி முதலானவற்றால் என்னென்ன பயன்களுண்டோ அவ்வளவையும் சொல்லவேண்டியது ஸித்தாந்தியின் கடமையாகும், ஆகையால் ஜீவன் மோக்ஷமடையும்போது ஜீவேச்வரர்கள் இருவரும் பெறும் பேரானந்தமாகிற பயனை அவர் அவசியம் சொல்லியிருக்க வேண்டும். ஆகையால், 'ஸித்தாந்தத்தில் மோக்ஷலாபமாகிற பயனை வேதவ்யாஸர் ஏன் ஓதுக்கிறார்'' என்னும் நமது கேள்வி மிகப் பொருத்தமானதேயாகும். 'ப்ரஹ்மஜீவர்களுக்கு எப்பயனுமில்லை'' என்னும் பூர்வபக்ஷியின் வாதம் 'இம்மையிலோ மறுமையிலோ அவர்களுக்கு எப்பயனுமில்லை' என்றே பொருள்படுமாகையால், ''மோக்ஷலாபமாகிற பயனைப்பற்றிப் பூர்வபக்ஷத்தில் சொல்லாததால் அப்ருஷ்டோத்தரமும் இல்லை'' என்று ப்ரியா பதில் கூறுவது வெளிப்படையான விதண்டா

http://acharya.org

வாதமேயாகும். ஆகையால் "முதற்கேள்வி முற்றிலும் தவரு னது" என்னும் 'ப்ரியா'வின் பதிலே முற்றிலும் தவருனது என்பதும் நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். இதனால் ப்ரியாவில் 'ஐயா' என்று தொடங்கும் இரு பாராக்களும் பத்ரபூரணமே (ஏட்டை நிரப்புவதே) என விளங்கும். மேலே இரு பாராக்களில் மாமுனிகளின் தத்வத்ரயவ்யாக்₂யான ஸ்ரீ ஸூக்திகளை எடுத்துக்காட்டி, 'ஸ்ரீமதழகியசிங்கரின் கேள் விக்கு மாமுனிகள் அருளிய ஸமாதானத்தையன்றோ சொல்லி யிருக்கவேண்டும்' என்று முடிக்கிறுர் 'ப்ரியா' ஆசிரியர்.

ஸ்ரீமதழகியசிங்கரின் கேள்விக்கு மாமுனிகள் அருளிய ஸமா தானத்தையே நாம் சொல்லியிருக்க, அதை நாம் சொல்லாதது போல் எழுதுவது ஆச்சரியமாயிருக்கிறது! தத்வத்ரயம் ஈஶ்வரப்ரகரணம் 27-வது சூர்ணை "இதுக்கு ப்ரயோஜநம் கேவல லீலை" என்பது. இது "*லோகவத்து லீலா கைவல்யம்*" [2–1–33] என்னும் ப்₃ரஹ்ம ஸூத்ரத்தின் அர்த்தத்தைச் சொல்லுவது. இதற்கு வ்யாக்₂யானமெழுதும்போது, இவ்விஷயத்தை ஸாதித்துவிட்டு, இதற்கு ப்ரமாணமாக வ்யாஸ பராஶர வசநங்களையும், ஆண்டாள் நம்மாழ்வார் ஸ்ரீஸூக்திகளையும் காட்டி, இவர்கள் ஜக₃த்₃வ்யாபாரத்துக்கு ப்ரயோஜநம் லீலை யாகவே சொல்லுகிறுர்கள் என்று அருளினுர். உடனே சில அருளிச்செயற்பகுதிகளையும் விஷ்ணுதத்துவத்தையும், ஸ்ரீரங்க ராஜஸ்தவ வசனத்தையும் எடுத்து, "சேதன நடைய உஜ்ஜீவ நம் ப்ரயோஜனமாக ஜக₃த்ஸ்ருஷ்டி பண்ணினுன் என்று சொல்லுகிற இவ்வசநங்களுக்கு வையர்த்₂யம் வாராதோ?" என்னும் உத்ஸூத்ரமான (ப்₃ரஹ்மஸூத்ரத்தில் செய்யப் படாத ஆக்ஷேபத்தைச் செய்தார். [ஸ்ரீமதழகியசிங்கர் கேட்டகேள்வியும் இதுவேயாகும்] இதற்கு மாமுனிகள் அரு ளிய பதில் "வாராது: எங்ஙனே என்னில்: உப₄யப்ரயோ ஜநம் (அதாவது லீலாரஸமும் சேதநோஜ்ஜீவநமும்) உண் டாயிருக்கச்செய்தேயும், (மூலத்திலும் ப்₃ரஹ்மஸூத்ரத்தி லும்) லீலையே ப்ரயோஜநம் என்ற இது ப்ராசுர்யத்தைப் பற்றச்சொன்னவித்தனை" என்று தொடங்கி, "ஆகையாலே

http://acharya.org

இவ்விபூதியில் லீலையே ப்ரசுரப்ரயோஜநமாகச் செல்லுகையாலே ஸூத்ரகாராதிகளெல்லாரும். ஸ்ருஷ்டிப்ரயோஜநம் லீலையே யாகச்சொல்லுகையாலே. இவரும் (பிள்ளைலோகாசார்யரும்) கேவல லீலை என்று அருளி செய்தாராயிற்று." என அமைந்துள்ளது. நாம் ஸ்ரீமதழகியசிங்கர் முன்பேயும் நமது ஸுதர்சனர் பதில்களில் பலவிடங்களிலும், இந்த மாமுனிகளின் முடிகின்றது. ஸாரத்தைத்தானே வெளியிட்டிருக்கிறோம். நமது ஸுதர்சனர் பதில் பத்தாவது சதகத்தில் 53-வது பக்கத்தின் 19-வது வரியில் "அநங்கஸ்திரபலஞை" என்று தொடங்கி, "இன்று (18-8-87) வந்த ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஆசிரியர் ஸ்வாமியின் 'தேசிகாசயம்' என்னும் கட்டுரையின் இறுதிப் பாராவுக்கும் இதுவே பதில்" என்னும் வரையிலும். 58-வது பக்கத்தின் தொடக்கத்தில் "அனந்த ஜீவர்களில்" என்று தொடங்கி, "பர்தாடுவதை த்ருஷ்டாந்தமாகக் காட்டியிருப்பது ஒட்டாது" என்னும் வரையிலும், 72—வது பக்கத்தில் பதிலின் தொடக்கத்திலிருந்து "மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளின் ஸாரமே நம்முடைய கருத்துக்கள் என்பது அந்த ஸ்ரீஸூக்திகளை ஓராசாரியனிடம் கற்றவர்களுக்கு எளிதில் விளங்கும்" என்பதிருகவும், 82—வது பக்கத்தில் 9-வது வரியில் "க்ருபை என்பது' என்று தொடங்கி, "மூன்று கேள்விகளையும் (அரை குறையாக அநுவதித்து பதில் சொல்லாமல்) முழுவதும் அச்சிட்டு, பாமரர்களும் புரிந்துகொள்ளும்படி அடுத்துவரும் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா இதழில் பதில் எழுதவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்' என்பதிருகவும், 97–வது பக்கத்தில் 54 வது கேள்வியின் பதிலின் தொடக்கத்திலிருந்து, 98-வது பக்கத்தில் "நம்முடைய லீலா விஷயமான மூன்று கேள்விகளையும் அப்படியே அச்சிட்டு பதிலுரைத்தபின்பு நாம் இவ்விஷயத்தைத் தொடர்வோம்." என்பதிருகவும் எழுதியிருப்பவற்றை இப்போதும் காணலாமே. உண்மை இப்படியிருக்க, மாமுனிகள் அருளிய ஸமாதானத்தைச் சொல்லாமல், நாம் வேறு எதையோ சொல்லுவதாக 'ப்ரியா' எழுதுவது அப்பட்டமான பொய்யல்லவா? "ப்ரியா ஆசிரியர்

http://acharya.org

எழுதியுள்ளபடி க்ருபை ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜனமாக மாட்டாது; மாமுனிகளும், லீலாரஸத்தையும், சேதநோஜ்ஜீவனத்தையும் ஸ்ருஷ்டிமுதலானவற்றுக்குப் பயனாக எடுத்திருக்கிறாரேயொழிய, க்ருபையை ப்ரயோஜனமாக அருளவேயில்லை" என்று (பக்கம் 98ல்) நாம் தெளிவாக நிரூபித்திருக்கிறோம். "மாமுனிகள் காரணத்தைச் சொல்லவேண்டிய இடத்தில் கார்யத்தைச் சொல்லியுள்ளார்" என்று இதற்கு பதில் எழுதுகிறார் 'ப்ரியா' ஆசிரியர். மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளை ஓராசார்யனிடம் காலக்ஷேபம் செய்யாமையாலேயே இப்படி அதை அமுக்யமாக்கி அவப்பொருள்கொள்ளப்பார்க்கிறார். "ஜகத் ஸ்ருஷ்டிக்குக் காரணமான ஜ்ஞாநசக்த்யாதி குணங்கள் ஜகத் ஸ்ருஷ்டிக்குப் பயனாக முடியாதன்றோ. அவ்வண்ணமே ஜகத் ஸ்ருஷ்டிக்குக் காரணமான க்ருபையும் அதற்குப் பயனாக முடியாது" என்று பக்கம் 97, 98ல் எழுதியிருப்பதற்கு எந்த பதிலும் சொல்லமுடியாதாகையாலே, அதைக் காணக்கண்ணிட்டிருக்கிறார் 'ப்ரியா' ஆசிரியர். அசைக்கமுடியாத இந்த யுக்தியைக் காணும்போது, 'க்ருபையை எவராவது ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜனமாகச் சொல்லியிருந்தாலும், க்ருபா கார்யமான சேதநோஜ்ஜீவனத்தை க்ருபா சப்தத்தாலே உபசரிக்கிறார்' என்று கொள்வதே பொருத்தம் என விளங்கும். ஆக, இவ்வளவால் நமது முதற்கேள்விக்கு ப்ரியா எழுதியிருக்கும் பதில் அடியோடு பொருந்தாது என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். இனி, இரண்டாவது கேள்வியை அச்சிட்டு, அதற்கு 'ப்ரியா' ஆசிரியர் அளித்திருக்கும் பதிலை ஆராய்வோம்.

நமது இரண்டாவது கேள்வி

2. உலக வழக்கிலும் சாஸ்த்ரவழக்கிலும் அப்போதைக்கு உண்டாகும் இன்பமே லீலாரஸம் என்று ப்ரஸித்தி இருக்கும்போது, 'லீலா கைவல்யம்" என்னுமிடத்தில் கைவல்ய சப்தத்தாலே பணத்திற்காக விளையாடும் சூதாட்டத்தையும் ஸூத்ரகாரர் தவிர்த்திருக்கும்போது. மோக்ஷத்தில் சேதனர்களைப்

http://acharya.org

பெற்று எம்பெருமான் அடையும் பேரானந்தம் "லீலா கைவல்யம்" என்றவிடத்தில் லீலாசப்தத்திற்கு எப்படிப் பொருளாக முடியும்?

இதற்கு 'ப்ரியா' பதிலின் விமர்சனம்

இக்கேள்வியை அச்சிடும்போது, "சாஸ்த்ர வழக்கிலும் அப்போதைக்கு உண்டாகும் இன்பமே லீலாரஸம் என்று ப்ரஸித்தி இருக்கும்போது, 'லீலா கைவல்யம்' என்னுமிடத்தில் கைவல்ய சப்தத்தாலே பணத்திற்காக விளையாடும் சூதாட்டத்தையும் ஸூத்ரகாரர் தவிர்த்திருக்கும்போது" என்னும் முக்கியமான பகுதியை அச்சிடாமல் புள்ளியிட்டுக் காட்டிவிட்டார் 'ப்ரியா' ஆசிரியர். இதை அச்சிட்டால், லோக சாஸ்த்ர வழக்குகளுக்கு முரணாகத் தாம் வாதம் செய்வது தம் வாசகர்களுக்கே புரிந்துவிடும் என்னும் காரணத்தாலேயே இதை விட்டுவிட்டார் என்பது வெளிப்படை. இந்தக் கேள்வியை அச்சிடும்போது, 'லீலா சப்தத்திற்கு' என்று நாம் எழுதியிருப்பது 'லீலா சப்தார்த்தத்திற்கு' என்று மாற்றி அச்சிடப்பட்டுள்ளது. இதுவும் 'ப்ரியா' வாசகர்களுக்குக் குழப்பத்தையே விளைக்கும். "இந்தக் கேள்வியில் நான் இசைந்த விஷயத்தை அநுவாதம் பண்ணவில்லை" என்றும் பதில் எழுதுகிறார். மோக்ஷத்தில் சேதனர்களைப் பெற்று எம்பெருமான் பேரானந்தம் அடைவது இவர் இசையாததினால் இல்லையாகிவிடுமோ? பல ப்ரமாணங்களால் ஸித்திக்கும் இவ்வானந்தம் லீலா சப்தத்திற்குப் பொருள் என்றாவது விளக்க வேண்டும்; அல்லது இப்பயனை ஸூத்ரகாரர் ஏன் ஒதுக்கினார் என்பதற்கு நாம் காட்டாத காரணத்தையாவது காட்டவேண்டும். இரண்டையும் செய்யாமல் விட்டதிலிருந்து இவரது இந்த பதிலும் அடியோடு பொருந்தாது என நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும்.

நமது மூன்றாவது கேள்வி

3 "லோகவத்" என்னும் பதத்திற்கு பாஷ்யம் முதலானவற்றில் ராஜாக்கள் பந்தாடுவது முதலானவற்றைச் செய்வதால் உண்டாகும் தாதாத்விக ரஸத்தைப் பொருளாகக் கூறியிருப்பது அனந்த ஸ்திர பலத்தை லீலாசப்தத்துக்குப் பொருளாகக் கூறும் உங்களுக்கு எப்படிப் பொருந்தும்?

http://acharya.org

இதற்கு 'ப்ரியா' பதிலின் விமர்சனம்.

இக்கேள்வியை அச்சிடாமலே விட்டுவிட்டார் 'ப்ரியா' ஆசிரியர். இதை அச்சிட்டால், பூர்வாபர விருத்தமாகத் தாம் வாதம் செய்வது தம் வாசகர்களுக்கே புரிந்துவிடும் என்னும் காரணத்தாலே அச்சிடவில்லை என்பது வெளிப்படை. "மூன்றாவது கேள்விக்கு இரண்டாவது கேள்விக்குச் சொன்ன ஸமாதானமே போதும்" என்கிறார். இரண்டாவது கேள்வியின் பதிலின் விமர்சனமே இந்த பதிலும் பொருந்தாது என்பதைத் தெளிவாகக் காட்டும். 'லீலார்த்தமாகச் சொன்னேன்' என்று எழுதுவது ஸூத்ரகாரர் 'லீலாரஸம்' என்னும் பொருளிலேயே லீலா ஶப்தத்தை வழங்கியுள்ளார் என்பதைப் புரிந்துகொள்ளாமல் எழுதியிருப்பதாகும். இதுவும் வாசகர்களுக்குக் குழப்பத்தையே விளைக்கும். லீலாஶப்தத்திற்கு 'அநாயாஸமான செயல்' 'அதனால் ஏற்படும் ரஸம் (ஆநந்தம்)' என்னும் இரு பொருள்களிருப்பதைக் காட்டாமல் 'ப்ரியா' கட்டுரைகளில் பலவிடங்களில் லீலா ஶப்தத்தை ஒவ்வொரு பொருளில் ஒவ்வோரிடத்தில் வழங்குவது வாசகர்களுக்குப் பெருங்குழப்பத்தையே விளைக்கும். மாமுனிகளின் தத்வத்ரய வ்யாக்யானத்தில் இப்பொருள் வேற்றுமை தெளிவாக விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பலவருடங்களுக்கு முன்பே இப்பொருள் வேற்றுமையையும், உலகைப்படைப்பது ஈஶ்வரலீலையே என்பது பற்றிய மற்றும் பல விளக்கங்களையும் கொண்ட "ஈஶ்வரலீலா ஜகத்ஸ்ருஷ்டி:" என்னும் ஸம்ஸ்க்ருதக் கட்டுரை வித்வத்வரிஷ்டரான திருநாங்கூர் ப்ர, ப, அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் வெளியிடப்பட்டுள்ளது. புகழுடம்பாளரான அந்த ஸ்வாமியின் அக்கட்டுரையும், அதற்கு அவரது திருத்தம்பியாரான ஸ்ரீ உ. வே. P. B. K. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் தமிழ் மொழிபெயர்ப்பும் ஸ்ரீராமாநுஜமிஷன் வெளியீடாக ஸமீபத்தில் வெளியிடப்பெற்றது. லீலாவிஷயமாகப் பல தெளிவுகளைப் பிறப்பிக்கும் இந்நூல் ரூ. 1—50 விலையில் "ஸ்ரீ உ. வே, P. B K. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி. 8. புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17" என்னும் விலாஸத்தில் கிடைக்கும். அன்பர்கள் பெற்றுப் பயனடையலாம்.

http://acharya.org

கே. வி. வரதன், சென்னை — மற்றும் பலர்.

57. (i) எம்பெருமான் அவனுடைய அடியார்களுக்குக் கடுமையான துன்பங்களை அளித்து அளவுக்கு அதிகமாகச் சோதிக்கிறானே. 'முன்புசெய்த தீவினையின் பயனை இப்போது அனுபவித்தே தீரவேண்டும்' என்றால் அவன் அபார கருணையுடையவன், வாத்ஸல்யாதி குணங்களையுடையவன் என்று பூர்வர்கள் அருளியது பொய்யா? பிராட்டிமார்கள் புருஷகாரம்செய்து அவன் அடியார்கள் குற்றங்களைக் காணாதிருக்கவும் அவற்றையே போக்யமாகக்கொள்ளவும் செய்வார்கள் என்று அருளியது பொய்யா? (ii) முற்பிறப்பில் செய்த தீவினைக்கு இப்பிறப்பில் தண்டனை ஏன்? இந்தத் தண்டனை சரீரத்துக்கா? மனத்துக்கா? ஆத்மாவுக்கா? தெளிவுபடுத்தப் பிரார்த்திக்கிறேன்.

(i) ஜீவனுடைய சரீர யாத்ரையைப் பொறுத்தவரையில் அது மிகுதியாகக் கர்மம் காரணமாகவே நடக்கிறது. ஜீவனுடைய ஆத்ம யாத்ரையைப் பொறுத்தவரையில் அது எம்பெருமானுடைய க்ருபை காரணமாகவே நடக்கிறது. இது இந்த லீலா விபூதியிலுள்ள எல்லாச் சேதனர்களுக்கும் பொதுவாயுள்ள நியதி. எம்பெருமான் அபார கருணையுடையவன், வாத்ஸல்யம் முதலான குணங்களையுடையவன் என்று சாஸ்திரங்களும் பூர்வர்களும் அருளுவது இந்த ஆத்மயாத்திரை விஷயத்திலேயேயாகும். பெரியபிராட்டியார் புருஷகாரம் செய்வதற்காக எப்போதும் திருமார்பில் எழுந்தருளியிருப்பதும் சேதனனை எம்பெருமானோடு சேர்த்து வைப்பதற்கேயாகும். தேஹயாத்ரையிலும் சேதனர்கள் அனுஷ்டிக்கும் உபாயங்களுக்கு அனுகுணமாகக் கருணை முதலான குணங்களைக் காட்டுவது உண்டாயினும், பூர்வகர்மங்களோடு முரண்படாத விஷயங்களிலேயே அது செயல்படும். பஞ்சபாண்டவர்களுக்கும்

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
103	5	அமைந்துள்ளது	முடிகின்றது
,,	7	முடிகின்றது.	ஸ்ரீ ஸூக்திகளின்

http://acharya.org

த்ரௌபதிக்கும் அவர்களுடைய தேஹயாத்ரையில் அளவற்ற கருணையைச்செய்தான் கண்ணன், அவர்கள் விரும்பிய ராஜ்ய ப்ராப்தி சத்ரு நிரஸனம் முதலானவற்றை அவர்களின் சரணுகதிக்குப் பலமாகவும், த்ரௌபதியின் மானஸம்ரக்ஷணத்தை அவள் செய்த திருநாம ஸங்கீர்த்தனத்துக்குப் பலமாகவும் அளித்தான். ஆனால் அவர்களும் கர்மானுகுணமாக வனவாஸம் முதலான கணக்கற்ற துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. பிள்ளைகளையும் உற்றார் உறவினர்களையும் கர்மானுகுணமாக இழக்கவேண்டியிருந்தது "மற்றவர்களுக்குக் கர்மானுகுணமாகப் பலன் அளித்தாலும் தன் அடியார்கள் விஷயத்தில் பக்ஷபாதத்தோடு பாபானுகுணமான பலனை அளிக்காமலிருக்கக் கூடாதோ?" எனில்; அடியார்கள் விஷயத்தில் பாபங்களை அனுபவிக்கச் செய்யாமல் புண்ய பலனையே அளித்துவந்தால் அவ்வடியார்களுக்கு இந்த லீலா விபூதியிலேயே இருந்துவிடலாம் என்று தோன்றிவிடும். இவ்வுலகப் பயன்களில் வைராக்யம் விளையாது. இது பிறவிகளைக் கொடுத்து அவர்களது ஆத்மாவுக்கு அனர்த்தத்தையே விளைத்துவிடும். அதனாலேயே தனக்கு மிக இனிய அடியார்களான ப்ரபன்னர்களுக்கு இப்பிறவியில் அனுபவிக்கவேண்டிய ப்ராரப்தகர்மங்கள் தவிர மற்ற கர்மங்கள் அனைத்தையும் போக்கி, இந்த சரீரத்தில் அனுபவிக்கவேண்டிய ப்ராரப்த கர்மங்களை மட்டும் அனுபவித்தே தீரவேண்டும் என்று விதித்திருக்கிறான் பரம காருணிகனான எம்பெருமான்.

(ii) சேதனன் செய்யும் நல்வினை தீவினைகளுக்குப் பயனை அவன் ஏதாவது ஒரு பிறப்பில் அனுபவித்தே தீரவேண்டும் என்னும் நியதி நியாயமானதேயாகும். அவற்றில் மிகக்கொடியவையான பாகவதாபசாரம் அஸஹ்யாபசாரம் முதலான பாபங்களுக்கும், எம்பெருமானுக்கும் பாகவதர்களுக்கும் மிகவும் கைங்கர்யம் செய்வதாகிற மிகச்சிறந்த புண்யங்களுக்கும் அப்பிறவியிலேயே பலனை அனுபவித்துவிடுவார்கள் என்பது சாஸ்த்ரநியதி. மற்ற புண்ய பாப பலனை ஏதாவது ஒருபிறவியில் அனுபவிக்க வேண்டும் என்பதே நியதி. "தீவினை செய்த ஜீவன் அவ்வினையாலே முற்பிறவியில் செய்த தீவினைக்கு இப்பிறப்பில் தண்டனை ஏன்?" என்ற கேள்விக்கு இடமேயில்லை. சரீரத்

http://acharya.org

தோடும் மனத்தோடும் கூடிய ஜீவனே நல்வினை தீவினைகளைச் செய்தவனுகையாலே சரீர மனங்களோடு கூடிய அவனே அவற்றின் பலனை அனுபவிக்கிருன்.

S. வேங்கடம், சமயபுரம். (58, 59 கேள்விகள்)

58. ஒரு ஜீவன் இன்ன சமயத்தில் மோக்ஷமடைவான் என்னும் நிச்சயம் உண்டா? ஸர்வஜ்ஞனை எம்பெருமான் அந்த சமயத்தை அறிவானு?

எம்பெருமான் தனக்கு வைஷம்ய நைர்க்ருண்யங்கள் (பக்ஷபாதமும் கருணையின்மையும்) விளையாமைக்காக, ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஜீவனுக்கு அளித்திருக்கும் ஸ்வாதந்த்ர்யத்தினுல் உண்டாகும் 'ப்ரதிபத்தி' எனப்படும் நினைவுகளையும், அந்த நினைவுகளுக்கு அனுகுணமாக அவன் கைக்கொள்ளும் ஸாதனங்களையும் எதிர்பார்த்தே அவ்வப்பலன்களை அளிக்கிருன். இக்காரணத்தால் ஜீவனுக்கு மோக்ஷத்திற்கு உறுப்பான நினைவும் ஸாதன பரிக்ரஹமும் எப்போது விளைகிறதோ அப்போதே அவன் மோக்ஷமடையும் ஸமயம் நிஶ்சிதமாகிறது. பக்தியாகிற உபாயத்தைக் கைக்கொண்டவனுக்கு அந்த உபாஸனம் நிறைவடைந்தவுடன் ப்ராரப்தகர்மம் முடிவடையும் சரீரத்தின் இறுதியில் மோக்ஷம் கொடுப்பதாக ஸங்கல்பித்து விடுகிருன் எம்பெருமான். ப்ரபன்னனுக்கு அந்த சரீரத்தின் இறுதியிலேயே மோக்ஷம் கொடுப்பதாக ஸங்கல்பித்து விடுகிருன். இவை சாஸ்திர ஸித்தமான நிர்ணயங்கள். இதிலிருந்து பக்தனுகவோ, ப்ரபன்னனுகவோ ஆகாதவரையில் இன்ன சமயத்தில் ஜீவன் மோக்ஷமடைகிருன் என்பது நிச்சயமில்லாத விஷயம் என விளங்குகிறது. இவர்கள் விஷயத்தில் நிச்சயமில்லாமையாலே எம்பெருமானும் இவர்கள் மோக்ஷமடையும் சமயத்தை அறியமாட்டான். நிச்சயமில்லாத விஷயத்தில் அறியாமலிருப்பது ஸர்வஜ்ஞத்வத்துக்குக் குறையாகாது, பக்த ப்ரபன்னர்கள் விஷயத்தில் நிச்சயம் ஏற்பட்டுவிட்டபடியால் அதை எம்பெருமான் அறிவான்.

59. ஒரு ஜீவன் மரணமடையும் ஸமயம் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டதா? அல்லவா? நிச்சயிக்கப்பட்டதென்ருல் அதை நீட்டிக்கமுடியுமா? ஜாதகம் முதலானவற்றைக்கொண்டு அந்த ஸமயத்தை நிர்ணயிக்க முடியுமா?

http://acharya.org

இந்த சரீரத்திற்குரிய ப்ராரப்₃த₄கர்மத்தை அனுபவித்து முடித்தவுடன் மரணம் ஏற்படுகிறது என்பது சாஸ்திரஸித்தம். ஆகையால் இது எம்பெருமானால் நிச்சயிக்கப்பட்ட விஷயம்; நீட்டிக்கவும் முடியாது. இதையே பொதுஜனங்கள் மனிதன் பிறக்கும்போதே பிரமன் ஆயுளைத் தலையில் எழுதிவிடுவதாகக் கூறுகிறார்கள். ஆயுள் முடியும் ஸமயம் அந்த ஜீவன், அவனுடைய மனைவி மக்கள், பெற்றோர் முதலான பலருடைய கர்ம வினைகளும் கூடிவரும்போது ஏற்படுகிறதாகையாலே அவனுடைய ஜாதகத்தை மாத்திரம் பார்த்து இதை அறுதியிடுவது இயலாது. இப்படி ஆயுளை நிர்ணயிக்க முடியாமலிருப்பதாலேயே மனிதன் வாழும்வரையில் ஓரளவுக்கு நிம்மதியுடன் வாழ்கிறான்.

R. பத்மநாபய்யங்கார், மேலக்கொட்டையூர், கும்பகோணம்.

60. விசுவஹிந்துபரிஷத் (43, ராமாநுஜம் தெரு, தி.நகர் சென்னை-600 017) வெளியிட்ட "ஆலயம் காக்க ஓர் அறப்போர்" என்னும் புத்தகத்தைத் தங்கள் பார்வைக்கு அனுப்பியிருக்கிறேன். இதுபற்றித் தங்கள் கருத்தை வெளியிடவேண்டுகிறேன்.

இப்புத்தகத்தில் ஆலயங்களின் நிர்வாகவரலாறும், இன்று அவற்றின் நிர்வாகம் மதநம்பிக்கையற்ற அரசின் பிடியில் சிக்கி அவலமான நிலையிலிருப்பதும், அதற்காகப் பரிஷத் நடத்தும் போராட்டங்களின் முன்னேற்றமும் விவரிக்கப்பட்டுள்ளன. அரசின் பிடியிலிருந்து சைவ வைஷ்ணவ ஆலயங்கள் விடுவிக்கப்படவேண்டும் என்பதில் நமக்குச் சிறிதும் கருத்து வேற்றுமையில்லை. அதற்காகப் பரிஷத் நடத்தும் போராட்டங்கள் மிகவும் பாராட்டத்தக்கவை. ஆனால் "சைவவைணவ ஆலயங்கள் ஓரே ஹிந்து வாரிய நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்படவேண்டும்' என்னும் பரிஷத்தின் கோரிக்கையை நாம் ஏற்பதற்கில்லை. "சைவாலயங்கள் சைவ அறவோர் வாரியத்தின் நிர்வாஹத்தின் கீழும், வைணவாலயங்கள் வைணவ அறவோர் வாரியத்தின் நிர்வாஹத்தின் கீழும் கொண்டுவரப்படவேண்டும்" என்பதே நமது திடமான கருத்து. வைணவ மதத் தலைவர்களின் கருத்தும் இதுவேயாகும். ஸுதர்சனம் 484, 485 486, தலையங்கங்களில் இதை நாம் விளக்கியிருக்கிறோம். அத்தலையங்கங்கள் ஸுதர்சனர் பதில் பத்தாவது சதகத்துக்கு அனுபந்தமாக இணைக்கப்பட்டுள்ளன.

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்

61. ''கலைமகள்'' ஆகஸ்ட் '88 இதழில் ''அத்வைதமதுர ரஸம்'' என்னும் கட்டுரை ஒன்று வெளிவந்துள்ளது. (பல வருடங்களுக்குமுன்?) 'தினமணி'யில் இக்கட்டுரை வெளிவந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை எழுதியவர் யாரென்று குறிக்கப்படவில்லை, அதில், குலசேகராழ்வார் முகுந்தமாலையில் 'திருமாலின் திருவடியைத் தொழுவது அத்வைதத்தைக் கொடுக்கும்' என்று குறிப்பிட்டிருப்பதாகவும், 'ப₄ர்த்ருஹரி அத்₃வைதத்தைப் பரிஹஸிப்பது என்னும் நிலையிலேயே அத்₃வைத மோக்ஷத்தின் ஸ்வரூபத்தை வெளிப்படுத்துகிறார்' என்றும் எழுதப்பட்டுள்ளது. இவற்றை விமர்சிக்கப் பிரார்த்திக்கிறேன்.

முகுந்தமாலை குலசேகரர் என்னும் பரம விஷ்ணுப₄க்தரான கேரள ராஜாவால் இயற்றப்பட்டது என்பது அனைவரும் இசைந்தது. இவர் குலசேகரர்ழ்வாரே என்று சுமார் நானூறு வருடங்களுக்குட்பட்ட ப்ரபந்நாம்ருதகாரரின் கருத்தாகத் தெரிகிறது. மாமுனிகளுக்கு முற்பட்ட எவரும் முகுந்தமாலையிலிருந்து மேற்கோள் காட்டவில்லை. மாமுனிகளும் முகுந்தமாலையை மேற்கோள் காட்டும்போது அதை இயற்றியவரது பெயரை நிர்தே₃ஶிக்கவில்லை. குலசேகராழ்வாரே அதை அருளியவராயிருந்தால், அவசியம் அதைக் குறிப்பிட்டிருப்பார்; பெரியவாச்சான் பிள்ளை முதலான தி₃வ்யப்ரப₃ந்த₄ ஸ்தோத்ர வ்யாக்₂யாதாக்கள் அதற்கு வியாக்கியானமே இட்டிருப்பார்கள். நேர்மாறாக அதிலிருந்து அவர்கள் ஒரு துணுக்கைக்கூட மேற்கோளாகவும் காட்டவில்லை. ஆகையால், முகுந்தமாலையை இயற்றியவர் மாமுனிகளுக்குச் சில வருடங்கள் முற்பட்ட கேரளவரசர் ஒருவர் என்றே கொள்ளவேண்டும். முகுந்தமாலையின் கடைசி ஶ்லோகத்தில் 'த்₃விஜஜந்மவரர்' 'பத்₃மஶரர்' என்னும் கவிஞர் தலைவர் இருவர் தமக்கு நண்பர்கள் என்று குலசேகரர் குறிப்பிட்டிருப்பதும் இவர் குலசேகராழ்வாராயிருக்கமுடியாது என்பதை வலியுறுத்துகிறது. இருந்தபோதிலும் ப்ரபந்நாம்ருதகாரர் காலத்திலிருந்து முகுந்தமாலை குலசேகராழ்வாரால் இயற்றப்பட்டது என்னும் ப்ரஸித்₃தி₄ ஏற்பட்டுவிட்டது. ப்ராஸங்கி₃கமான இது நிற்க.

முகுந்தமாலை நாலாம் ஶ்லோகத்தில் "நாஹம் வந்தே₃ தவ சரணயோர் த்₃வந்த்₃வமத்₃வந்த்₃வஹேதோ:" என்று 'அத்₃வந்த்₃வ' என்னும் பத₃த்தால் ஜீவப்₃ரஹ்ம ஐக்யமாகிற அத்₃வைத மோக்ஷம் குறிக்கப்படுவதாக மதுரரஸக் கட்டுரையாளர் எழுதியிருப்பது அவர் கீ₃தையையும் அதனுடைய சங்கரபா₄ஷ்யத்தையும் அறியாதவர் என்பதையே காட்டுகிறது. த்₃வந்த்₃வஶப்₃த₃ம் ப்ராக்ருதமான ஸுக₂து₃:க்க₂ங்கள், லாப₄ாலாப₄ங்கள், ஜயாஜயங்கள் முதலான நேர்மாறான இரட்டைகளுக்குள்ள ரூடி₄ (இடுகுறிப்) பெயராகவே கீ₃தையில் பல இடங்களில் வழங்கப்பட்டுள்ளது; ஶங்கரர் முதலான எல்லா பா₄ஷ்யகாரர்களாலும் அவ்வண்ணமே பா₄ஷ்யமிடப்பட்டுள்ளது. ஆகையால் அத்₃வந்த்₃வ த்₃வந்த்₃வாதீத நிர்த்₃வந்த்₃வ ஶப்₃த₃ங்கள் பொதுவாக இவ்விரட்டைகளால் பா₃தி₄க்கப்படாமலிருத்தலையும், குறிப்பாக இவ்விரட்டைகளால் என்றுமே பா₃தி₄க்கப்படாத முக்தி நிலையையும் குறிக்கும். கீ₃தையில் "*நிர்த்₃வந்த்₃வ:*" [2-45] "*த்₃வந்த்₃வாதீத:*" [4-22] "*நிர்த்₃வந்த்₃வ;*" [5-3] "*த்வந்த்₃வமோஹேந*" [7-27] "*த்₃வந்த்₃வமோஹநிர்முக்தா:*" [7-28] என்று த்₃வந்த்₃வ ஶப்₃த₃ம் வழங்கப்பட்டிருக்கும் சில இடங்களையும், அவ்விடங்களில் ஶங்கர ராமாநுஜ பா₄ஷ்யங்களையும் காண்பார்க்கு இது தெளிவாக விளங்கும். சங்கரர் [2-45] பா₄ஷ்யத்தில் "*நிர்த்₃வந்த்₃வ:-ஸுக₂து₃:க₂ஹேதூ ஸப்ரதிபக்ஷௌ பதா₃ர்த்தௌ₂ த்₃வந்த்₃வ ஶப்₃தா₃வாச்யௌ; தத: நிர்க₃த: நிர்த்₃வந்த்₃வ:*" [இன்பதுன்பங்களுக்குக் காரணமாய் நேர்மாறாயிருக்கும் இரட்டைப் பொருள்கள் (லாப₄ாலாப₄ங்கள் ஜயாஜயங்கள் முதலியவை) த்₃வந்த்₃வஶப்₃த₃த்தால் குறிக்கப்படுபவை; அவற்றால் பா₄தி₄க்கப்படாதவன் நிர்த்₃வந்த்₃வன்] என்றும், [4-22] பா₄ஷ்யத்தில் "*த்₃வந்த்₃வாதீத:-த்₃வந்த்₃வை:-ஶீதோஷ்ணாதி₃பி₄: ஹந்யமாநோऽபி அவிஷண்ணசித்த: த்₃வந்த்₃வாதீத உச்யதே*" [*ஶீதம்* உஷ்ணம் முதலான இரட்டைகளால் துன்புறுத்தப்பட்டபோதிலும் வருந்தாத நெஞ்சுடையவன் 'த்₃வந்த்₃வாதீதன்' எனப்படுகிறான்] என்றும் மிகத்தெளிவாக இவ்விஷயத்தை விளக்கியிருப்பதைக் காணலாம். ஆகையால் முகுந்த₃மாலையில் '*அத்₃வந்த்₃வ*' ஶப்₃த₃ம்

http://acharya.org

இரட்டைகளால் என்றும் பா₃தி₄க்கப்படாத முக்திநிலையைக் குறிக்குமேயொழிய அத்₃வைதிகளின் கற்பனையிலேயே உலவிவரும் ஜீவப்₃ரஹ்ம ஐக்ய மோக்ஷத்தைக் குறிக்காது என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். இங்கு குலசேகரர் "எனக்கு மோக்ஷம் தேவையில்லை. பிறப்புத்தோறும் எம்பெருமானை நினைத்துக்கொண்டிருந்தால் போதும்' என்று சொல்லுவது பொருந்துமோ? எனில்: "இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" [திருமாலை 2] என்ற தொண்டரடிப் பொடியாழ்வாரைப்போலவும், "அமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" [அமல 10] என்ற திருப்பாணாழ்வாரைப் போலவும், "எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமேயாவோம்" [திருப்பாவை 29] என்ற ஆண்டாளைப் போலவும், "உலகம் மூன்றுடனே நல்வீடு பெறினும் கொள்வதெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே" [திருவாசிரியம் 2] என்ற நம்மாழ்வாரைப் போலவும் பிறப்புகள்தோறும் பகவதநுபவம் நீடித்துச் சென்றால் மோக்ஷலோகமும் தேவையில்லை என்கிறாராகையாலே குறையில்லை. ப₄ர்த்ருஹரி "ப₄ஸ்மோத்₃தூ₄ளந ப₄த்₃ரமஸ்து ப₄வதே" என்று தொடங்கும் ஶ்லோகத்தில் அத்₃வைத மோக்ஷத்தைப் பரிஹஸிக்கிறார் என்பதை மது₄ரரஸக் கட்டுரையாளரே ஒப்புக்கொள்கிறார். சைவரான அவர் சிவஸாயுஜ்யம் மோக்ஷமாகுமேயொழிய ஆத்ம விநாஶமேயான ஜீவப்₃ரஹ்ம ஐக்யம் மோக்ஷமாகாது என்பதை விபூ₄தி ருத்₃ராக்ஷங்களைப் பார்த்து. "இதுவரை உங்களை அணிந்திருந்ததின் பயனாகப் பரமாத்மா என்னை மோக்ஷமாகிற காரிருளில் அழுத்திவிட்டார்." என்று கூறுகிறார். அத்₃வைதிகள் கூறும் ஜீவப்₃ரஹ்ம ஐக்ய மோக்ஷம் காரிருளை ஒத்தது என்று பரிஹஸித்திருக்கும் இந்த ஶ்லோகத்தில் அத்₃வைத மோக்ஷத்தின் ஸ்வரூபத்தை வெளியிடுகிறார் என்று கட்டுரையாளர் எழுதுவது விலவறச் சிரிக்கத்தக்கதாயுள்ளது. இனி, இவர்கள் அத்₃வைதிகளின் கருத்தைப் பலவாறாகக் கண்டித்திருக்கும் ஸ்ரீபா₄ஷ்யம் முதலான க்ரந்தங்களும் அத்₃வைத மோக்ஷத்தின் ஸ்வரூபத்தை வெளியிடுபவை என்று கூறினாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. "நாம் எதை எழுதினாலும் கேட்பாரில்லை. எவராவது மறுத்தாலும் அது யாருக்குத் தெரியப்போகிறது" என்னும் தைரியத்தில் அத்₃வைதிகள்

http://acharya.org

நடத்தும் பத்திரிகைகள் இத்தகைய உண்மைக்கு மாறான விஷயங்களை வெளியிட்டுப் பொதுமக்களைப் பல வருடங்களாக ஏமாற்றிவருவது மிகவும் வருந்தத்தக்கது.

டாக்டர் R. நாராயணய்யங்கார், பங்களூர்

62. பரமபதத்திலுள்ள பரவாஸுதேவனின் திருமார்பில் பெரியபிராட்டியார் நித்யவாஸம் செய்கிறாளா? நித்யஸூரிகளுக்குப் பெரியபிராட்டியாரின் புருஷகாரத்திற்கு அவசியம் உண்டா?

ராவண வதத்திற்குப்பின் ஸ்ரீ ராமன் பரமபதநாதனே தான் என்று மண்டோதரி உணர்வதற்காகப் பரவாஸுதேவ விக்ரஹத்தோடு அவளுக்கு ஸேவை ஸாதித்தான் என்பது "*தமஸ: பரமோ தாதா*" என்று தொடங்கும் ச்லோகங்களிலிருந்து விளங்குகிறது. அதில் "ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீ:" என்று திருமார்பில் பெரியபிராட்டியார் எழுந்தருளியிருந்ததாகவே வால்மீகி காட்டியிருக்கிறார். ஆளவந்தாரும் சது:ச்லோகீ நாலாவது ச்லோகத்தில் "மூர்த்தம் ப்ரஹ்ம" என்று பரவாஸுதேவ விக்ரஹத்தை எடுத்து, அத்திருமேனியில் பிராட்டி எழுந்தருளியிருக்கிறாள் என்கிறார். "தேவிமாராவார் திருமகள் பூமி ஏவ மற்றமரர் ஆட்செய்வார்" [திருவாய் 8-1-1] என்று நித்யஸூரிகள் கைங்கர்யம் செய்வதற்கும் பிராட்டிமார் புருஷகாரம் உண்டு என்பதை ஆழ்வாரே அருளினார். ஆகையால் இவ்விஷயங்களில் ஐயத்திற்குச் சிறிதும் இடமில்லை.

G. முத்துசாமி பாகவதர், நல்லூர், பெருமத்தூர்

63. சூழ்விசும்பணிமுகில் முதலானவற்றில் வைகுண்டத்திலும் பெண்கள் உள்ளதாகக் காணப்படுகிறது. முக்திநிலையிலும் ஆத்மாக்களுக்கு ஆண் பெண் பேதம் உண்டா?

ஆத்மாக்களுக்கு எந்த நிலையிலும் ஆண் பெண் பேதம் கிடையாது. ஸம்ஸாரமண்டலத்தில் ஆத்மாக்கள் கர்மம் காரணமாக ப்ராக்ருதமான ஆண் அல்லது பெண்ணுரு அடைகிறார்கள். மோக்ஷத்தில் எம்பெருமானுடைய விருப்பத்தையொட்டி பகவத்பாகவத கைங்கர்யம் செய்வதற்காக நித்யமுக்தர்கள் அப்ராக்ருதமான ஆண் அல்லது பெண்ணுருவை விரும்பி ஏற்கிறார்கள். ப்ராக்ருதசரீரம் ஞானத்தை மறைக்கும்; அப்ராக்ருத சரீரம் ஞானத்தை வெளிப்படுத்தும்.

http://acharya.org

வித்துவான் மு. இராதாகிருஷ்ணன், புதுச்சேரி.

64. "இலக்கியத்தில் வேங்கடவேலவன்" என்றொரு நூலை முனைவர் சுந்தரசண்முகனார் என்பவர் எழுதியுள்ளார். ஒரு மன்றத்தில் அவரை அடியேனும் (கல்விக்கடல்) திருகோபாலய்யரும் இப்பிரச்னையில் எதிர்த்தோம். முற்கூறிய நூலில் அவர் எங்களைத் தாக்கி எழுதி, சில வினாக்களை எழுப்பியுள்ளார். அவ்வினாக்களுக்கு விடையளிக்க வேண்டுகிறேன்.

வினாக்களை வரிசையாகக் கொடுத்து, சுருக்கமாக விடையளிக்கிறேன்.

1 "சேயோன் மேய மைவரை உலகம்" என்பது விதி' மலைகளில் திருமால் எப்படிக் கோயில் கொள்ளமுடியும்?

தொல்காப்பியர் இந்தச் சூத்திரத்தில் கண்ணன் காடு சார்ந்த முல்லை நிலத்திலும், முருகன் மலைசார்ந்த குறிஞ்சி நிலத்திலும், இந்திரன் வயல் சார்ந்த மருதநிலத்திலும், வருணன் கடல் சார்ந்த நெய்தல் நிலத்திலும் பொருந்தியிருப்பதாகக் கூறியுள்ளார். சண்முகனாரின் வாதத்தை ஒப்புக்கொண்டால், திருமால் முல்லைதவிர வேறு நிலங்களில் கோயில்கொள்ள முடியாது. முருகன் குறிஞ்சி தவிர வேறு நிலங்களில் கோயில்கொள்ள முடியாது. இது உண்மைநிலைக்கு மிகவும் மாறுபட்டது. அந்நாள் தொடங்கி இந்நாள்வரை திருமால் கோயில்கள் நாலுவகை நிலங்களிலும் உள்ளன. முருகன் கோயில்களும் அப்படியே. வயலூர் முதலான மருத நிலத்தில் உள்ள கோயில்களில் இருப்பவன் முருகனல்லன் என்று இந்த வாதத்தின்படி சண்முகனார் இசைய வேண்டிவரும். இந்திரனுக்கு மருதநிலத்திலோ, வருணனுக்கு நெய்தல் நிலத்திலோ மிகுதியாகக் கோயில்கள் இருந்தமைக்கு நூல்களில் சான்றில்லை. இவற்றிலிருந்து இந்தத் தொல்காப்பியர் சூத்திரம் கோயில்களைப்பற்றியதன்று என்பது சிறுவர்க்கும் விளங்கும். அப்படியானால் இச்சூத்திரத்தின் பொருள் என்ன? என்னும் கேள்வி எழுகிறது. காடுவாழ் சாதியில் பிறந்த கண்ணனைக் காட்டிலும் காடு சார்ந்த நிலத்திலும் வாழ்ந்த மக்களும், மலை வேட்டுவப்பெண்ணான வள்ளியை மணந்த முருகனை மலையிலும், மலை சார்ந்த நிலத்திலும்

http://acharya.org

வாழ்ந்த மக்களும், மழைபொழியும் தெய்வமான இந்திரனை, மழையை நம்பி வாழும் வயல் நிறைந்த மருதநிலமக்களும், கடலுக்குத் தலைவனான வருணனை, கடல்சார்ந்த நெய்தல் நிலமக்களும் அக்காலத்தில் சிறப்பாக வழிபட்டுவந்தனர். அதனால் அந்த நான்கு தெய்வங்களும் முறையே அந்த நான்கு நிலங்களிலும் வாழ்ந்த மக்களின் நெஞ்சங்களில் மிகுதியாகப் பொருந்தி வாழ்ந்தனர் என்பதே இச்சூத்திரத்தின் பொருளாயிருக்கமுடியும். இல்லையேல், குறிஞ்சி நிலம் தவிர்ந்த இடங்களில் உள்ள முருகன்கோயில்களில் இருப்பவன் முருகனல்லன் என்று சண்முகனார் இசையவேண்டிவரும்.

2 வேங்கட சுப்பிரமணியன் என்று பெயர் உள்ளதே; இல்லாமல் பிறக்குமா?

பல வடமொழி நூல்கள், சிலப்பதிகாரம், திவ்யப்ரபந்தங்கள் முதலான தமிழ் இலக்கியங்கள் ஆகியவற்றில் திருவேங்கடவன் திருமாலே என முழங்கப்படுவதற்கு முரணாக, இராமாநுசர் காலத்திலிருந்தே சிவபக்தர்கள் திருவேங்கடவன் சிவனே என்றும், சக்தியே என்றும், முருகனே என்றும் மனம் போனபடி பிதற்றிவந்தனர் என்பது வரலாறு கூறும் உண்மை. இத்தகைய பொய்க்கருத்தை நிலைநாட்ட முருகபக்தர்களான ஸ்மார்த்தர்கள் இருநூறு வருடங்களுக்குள் தங்கள் குழந்தைகளுக்கு 'வேங்கடசுப்பிரமணியன்' என்று பெயரிடத்தொடங்கினர். இதுகொண்டு இலக்கியங்களில் குன்றிலிட்ட விளக்குப்போலே திருமாலாகக் காட்சிதரும் வேங்கடவனை முருகனாக்கப்பார்க்கும் சண்முகனாரின் சமயவெறி அருவருக்கத்தக்கது.

3 திருமலையில் முருகபக்தர் இன்றும் கூட்டங்கூட்டமாகக் காவடி எடுத்து ஆடுகின்றனரே, இது பரம்பரையாக நடைபெறுகிறது; மரபுவழிதானே முக்கியம்! (Tradition)

சிவபக்தர்களும், காளி பக்தர்களும், முருகபக்தர்களும், கணபதி பக்தர்களும் திருமலையில் மாத்திரமல்லாமல் எல்லாத் திருமால் கோயில்களிலுமே கூட்டம் கூட்டமாக நெடுங்காலமாகத் திருமாலை வழிபடுகிறார்கள். இதிலிருந்து பரம்பொருளான திருமாலின் அவயவங்களான மற்றத் தெய்வங்களை வழிபடுபவர்களும், அந்த தெய்வங்களாலும் வழிபடப்படும் திருமாலைக் கைவிடமுடி

http://acharya.org

யாது என்னும் உண்மையே நிலைநாட்டப்படுகிறது. இது கொண்டு திருவேங்கடவனின் தன்மையை மாற்ற முனைவது விலாவறச் சிரிக்கத்தக்கது.

4 "பாலாஜி" என்றால் பாலசுப்பிரமணியன் என்று பொருள் அல்லவா?

வடநாட்டு மக்கள் 'பாலகிருஷ்ணன்' என்னும் பொருளிலேயே "பாலாஜி" என்று வேங்கடவனை வழிபடுகிறார்கள். வடநாட்டில் ராமனையும், கிருஷ்ணனையும் வழிபடுபவர்களே மிகுதியாகவுள்ளனர் என்பதையும், முருகனை வழிபடுபவர்கள் பெரும்பாலும் இல்லை என்பதையும், "பாலசுப்பிரமணியன்" என்னும் பெயர் தமிழ்நாட்டிலுள்ள முருகபக்தர்களிடம் மாத்திரம் வழங்கப்படுவதொன்று என்பதையும் காண்பார்க்கு இவ்வுண்மை தெளிவாக விளங்கும்.

5 கோயில் மதில்மேல் சிங்கம் வைப்பானேன்? கருடன்தானே வைக்கவேண்டும்?

சிங்காசனம் ஸர்வலோக சக்ரவர்த்தியான திருமாலுக்கே பொருத்தமானது. சிம்மவாகனமும் நரசிங்கனுக்கே இசைவானது. அதுபோல் மதிளில் சிங்கத்தை அமைப்பதும் அவனுக்கு இசைந்ததே. முருகனுக்கும் சிங்கத்திற்கும் எத்தொடர்பும் இல்லையாகையால், இதுகொண்டு வேங்கடவனை முருகனாக்க முயல்வது பகற்கனவாகவே முடியும்.

6 வெள்ளிக்கிழமைகளில் (மார்கழியில்) வில்வார்ச்சனை எப்படித் திருமாலுக்கு நடைபெறலாம்?

திருமாலுக்கு ஆகாத பூவும், இலையும் இல்லை. தனக்குத்தனி அடையாளமான துளவத்திலும், "வநஸ்பதிஸ்தவ வ்ருக்ஷோऽத பில்வ:" என்று ஸ்ரீஸூக்தத்தில் சொல்லியபடி தனது தேவியான ஸ்ரீதேவி உகந்த பில்வமும் அவனுக்கு மிகவும் இனியவையாகையாலே வில்வார்ச்சனை நடைபெறுவதில் தடையொன்றுமில்லை.

7 'குமாரதாரை' 'முருகன் அருவி' என்று பொருள் படுகிறதே!

"யுவாகுமார:" என்று ருக்வேத விஷ்ணுஸூக்தத்தில் விஷ்ணுவைக் குமாரன் என்று வேதமே வழங்கிற்று. "தண்ட

http://acharya.org

வரக்கன் தலைதாளால் பண்டெண்ணிப்போம் குமரன் நிற்கும் பொழில் வேங்கடமலைக்கே" [நான்-திருவ 44] என்று ராவண ஸம்ஹாரம் செய்த திருவேங்கடத்திருமாலையே திருமழிசை யாழ்வாரும் "குமரன்" என்று வழங்கினார். "பண் டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம் ...... இளங் குமரன் தன் விண்ணகர்" [மூன்-திருவ 61] என்று பேயாழ்வாரும் இதை வலியுறுத்தினர். ஆகையால் குமாரசப்தம் முருகனுக்கேயுரியதுபோல் பேசுவது வேதத்தையும், திவ்ய ப்ர பந்தங்களையும் அறியாமையால் விளைந்தது. புராணங்களில் குமார தாரையருவியருகிலிருந்து முருகன் வேங்கடவனை நோக்கித் தவமிருந்ததால் அவ்வருவிக்கு அப்பெயர் விளைந்தது என்று கூறப்பட்டுள்ளது என்றும் இக்கேள்விக்குப் பதில் கூறலாம்.

8 'சாமி' என்பது முருகன்; சாமி புஷ்கரணி என்றால் முருகன் குளம் அல்லவா? இது சான்றாகாதா?

தகப்பன் சாமியானதால் முருகனுக்குப் பிற்காலத்தில் 'சாமி' என்னும் பெயர் அவனது பக்தர்களிடம் வழங்குகிறது. இதுகொண்டு "**பதிம் விஶ்வஸ்ய நாராயணம்**" என்று வேதத் திலும், பல்லாயிரக்கணக்கான இதிஹாஸ புராண வாக்யங் களிலும் **லோகஸ்வாமியாக** முழங்கப்படும் திருமாலுக்கு 'ஸ்வாமி' என்னும் பெயரை இல்லைசெய்யப் பார்ப்பது பகற் கொள்ளைக்காரனின் செயலை ஒக்கும்.

9 ஈசன், ஈஶ்வரன் சிவனுக்குரிய நாமங்களே! வேங்க டேசன், வேங்கடேஶ்வரன் என்பவை சைவப் பெயர்கள் போல் இல்லையா? (இங்கு 100 பெயர்கள், சிவனுக்கு ஈஶன் என்று முடிவதை உதாரணம் காட்டியிருக்கிறார்.)

பல தென்மொழி வடமொழி ப்ரமாண நூல்களிலும், நிகண்டு களிலும்'ஈசன்' 'ஈச்வரன்' என்னும் பெயர்கள் பிரமன், விஷ்ணு, உருத்திரன் முதலியவர்களைக்குறிக்கும் பொதுப்பெயர்களாகக் குறிப்பிடப்படுகின்றன. இலக்கியங்களிலும் அவ்வாறே வழங்கப் படுகின்றன. "ஈசன் வானவர்க்கு என்பன் என்றால் அது தேசமோ திருவேங்கடத்தானுக்கு" [திருவாய் 3-3-4] என்று நம்மாழ்வார் திருவேங்கடவனையே 'ஈசன்' என்னும் நாமத்தால் குறித்தார். விஷ்ணுஸஹஸ்ரநாமத்திலும் ஈசானநாமமும் ஈச்வர நாமமும் விஷ்ணுநாமமாகப் படிக்கப்பட்டன; ஆகையால்,

http://acharya.org

வேங்கடத்திற்குத் தலைவன் என்னும் பொருளுள்ள வேங்கடேச வேங்கடேச்வர சப்தங்களைக்கொண்டு அவனைச் சிவனுக்கப் பார்ப்பது பகற்கனவேயாகும். 'கமலா' 'ரமா' என்னும் திருநாமமுடைய ஸ்ரீதேவிக்குத் தலைவன் என்னும் பொருளில் 'கமலேசன்' 'ரமேசன்' என்று நாரணனைக் குறிப்பதுண்டு. ஈசஸப்தத்தைப் பார்த்துவிட்டு 'இவன் சிவன்தான்' என்று அடம்பிடிப்பதுபோன்றது,'வேங்கடேசன் சிவன்தான்' என்பது.

10 சிலப்பதிகாரக்காரர் திருமால் என்ருல் சங்கு சக்கரம் இருந்தாக வேண்டும் என்று கருதிப்பாடினுரே ஒழிய, பார்த்துப்பாடவில்லை; அல்லது அந்த வரிகள் 'இடைச் செறுகல்'

சிலப்பதிகாரமியற்றிய இளங்கோவடிகள் வேங்கடவனைப் பார்த்துப்பாடினுரா, பார்க்காமல் பாடினுரா என்பதை எவரா லும் முடிவுகட்ட முடியாது. பார்க்காமல் பாடியிருந்தாலும் சங்க சக்கரங்களை ஏந்திய செந்தாமரைக் கண்ணனுன நெடி யோனே (திரிவிக்கிரமனே) திருவேங்கடவன் என்னும் பிரசித்தி அவர் காலத்திலேயே இருந்தது என்பதைச் சிலப்பதிகாரம் தெளிவாகக் காட்டுகிறது. தங்களுக்குப் பிடிக்காததையெல் லாம் 'இடைச்செறுகல்' என்பது பிடிவாதமேயொழிய வாதமல்ல.

11 நெற்றிமுழுவதும் நாமமிட்டிருப்பது எதையோ மறைக்கத்தான். இயற்கைக்கு விரோதமாக இருக்கிறதே.

வியாழக்கிழமைகளில் குறுகிய திருநாமத்துடனும், வெள் ளிக்கிழமைதோறும் திருமஞ்சனத்தின்போது திருநாமமில் லாமலும் சேவை தருகிருன் திருவேங்கடத்திருமால். அப்போது பேரய்ச் சேவித்தால் திருநாமம் எதையும் மறைக்கவில்லை என்றும், தமது கண்ணே காமாலைக்கண் என்றும் இவர் உணர்வார்.

12 சிலப்பதிகார காலத்திற்கு முன்பே இது திருமால் கோயிலாக மாற்றப்பட்டது என்று தெரிகிறது.

"நாயன்மார்கள் காலத்திற்கு முன்பு அவர்கள் பாடிய சிவன் கோயில்களெல்லாம் திருமால் கோவில்களாயிருந்து சிவன்கோயில்களாக மாற்றப்பட்டவை" என்று ஒருவர் கூறி ஞல், அதற்கு இவர் என்ன பதில் கூறுவாரோ, அத்தகைய பதிலே இக்கேள்விக்கும் பதிலாகும்.

http://acharya.org

13 சங்கு, சக்கரம் இயற்கையாக இல்லை; இடைச் செறுகல்; இது இராமானுசர் செய்த திருவிளையாடல்.

இராமாநுசர் காலத்திற்குப் பல நூற்றாண்டுகள் முற்பட்ட இளங்கோவடிகள் சங்கசக்கரங்களைத் திருவேங்கடவன் ஏந்தியிருப்பதாகக் கூறியிருப்பதிலிருந்தே நெடுங்காலமாக அவற்றைத் திருவேங்கடவன் ஏந்தியிருந்தான் என்றும், சைவர்கள் ஆக்ரமிப்பு வெறியாலே அதை மாற்றிக் கூறிவருகிறார்கள் என்றும் விளங்குகிறது.

14 தாயார் சந்நிதிக்கு மலைமேல் இடமில்லையா? துயஸ்ஸ்தம்பத்துக்கு நேரே (சந்நிதியில்) தாயார் இல்லை; கண்ணன் உள்ளார்; அக்கோயிலில் சீனிவாஸனும் உள்ளார்; தாயார், அவர்மனைவியாய் இருக்கவேண்டும்; அவருக்குத் தாயார் எங்கே? இதில் ஏதோ தில்லுமல்லு என்று தெரிகிறது.

"அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறைமார்பா" [திருவாய் 6-10-10] என்று நம்மாழ்வார் அருளியபடியே திருவேங்கடவன் திருமார்பிலேயே திருமகள் எழுந்தருளியிருக்கிறாள். தாயார் சன்னிதி தனியாயிருக்க வேண்டிய அவசியமில்லை. பல திருமால் கோயில்களில் தாயார் கோயில் தனியாயில்லை. திருச்சானூரில் அலர்மேல்மங்கைக்கு அருகிலேயே ஸ்ரீநிவாசன் எழுந்தருளியிருப்பதை இவர் மறைக்கிறார். தனிக்கோயில் தாயாரில்லாத கண்ணன்கோயில்கள் பல உள்ளன. ஆயிரம் வருடங்களுக்குமேல் தில்லுமல்லுகள் செய்துவரும் தமது பரம்பரையின் குற்றத்தை இவர் பிறர்மேல் ஏறிடுவது—பரம்பரைக் குணத்தையே இவர் கொண்டுள்ளதைக் காட்டுகிறது. இவ்வளவால் இவரது வாதங்கள் அனைத்தும் விதண்டாவாதங்களே என விளங்கும்.

முடிவுரை

ஆயிரம் வருடங்களுக்கு முன்பே திருமலையில் வம்புசெய்து பங்கப்பட்டபின்பும், காமகோடி பீக்ஷுவும் அவரது சீடர்களான திரு. கி. வா. ஜகந்நாதன் போன்றவர்களும், சைவர் பலரும் இத்தகைய விதண்டாவாதங்களை இன்றும் இடைவிடாமல் செய்துவருவதிலிருந்து இவர்களுடைய ஆக்ரமிப்பு மனப்பான்மையே விளங்குகிறது. வைணவர்கள் விழிப்புடனிருக்கவேண்டும்.

http://acharya.org

S. வேங்கடம், சமயபுரம்.

65. 1988 'கல்கி' தீபாவளி மலரில், "ஸ்ரீ சங்கர அவதாரம்'' எனும் கட்டுரையில், காமகோடிப் பெரிய பீடாதிபதி தாங்கள் நெடுங்காலமாக அசைக்கமுடியாதபடி பல நூல்களில் மறுத்திருக்கும் பின்வரும் விஷயங்களை ஓராதாரமும் காட்டாமல் திருப்பி எழுதியிருக்கிறார்:-(1) ஆதிசங்கரர் பிறந்தது 2500 வருடங்களுக்கு முன்னர். (2) அவர் காலத்திலிருந்த எழுபத்திரண்டு மதங்களையும் அவர் தலையெடுக்க முடியாதபடி கண்டித்து அழித்து ஹிந்து மதத்தை ஸ்தாபித்துவிட்டார். (3) ஆறு தெய்வங்களைப் பரம்பொருளாகக் கூறும் சைவம் முதலான ஆறுமதங்களை அவர் நிலைநாட்டிவிட்டார். (4) சிவனும், விஷ்ணுவும் ஒன்றேயாகையால் கீதையில் து₃ஷ்டநிக்₃ரஹ சிஷ்ட பரிபாலன த₄ர்ம ஸம்ஸ்தா₂பனங்களுக்காக அவதரிக்கப்போவதாகக்கூறிய கண்ணனின் அடுத்த அவதாரமே சிவாவதாரமான சங்கரர். (5) அத்வைதத்திலும் வேறுபட்ட த்வைதம் விசிஷ்டாத்வைதம் முதலிய மதங்கள் சங்கரருக்குப் பிற்பட்டவையே. இன்று வெளிதேச அறிவாளிகள் அணுவிஞ்ஞானிகள் எல்லாருங்கூட சங்கரருடைய ஸித்தாந்தத்தையே தலைக்குமேலே வைத்துக்கொண்டாடுவதால் இப்போது அவரே ஜகத்குரு.

ஏற்கனவே பல நூல்களில் பலகால் மறுக்கப்பட்ட இவ்விஷயங்களை இங்கு சுருக்கமாக ஆதாரங்களைக் காட்டி மறுக்கிறேன்.

(1) ஆதிசங்கரர் பிறந்தது எட்டாவது நூற்றாண்டில் என்று ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் இசைகிறார்கள். சென்ற நூற்றாண்டில் உண்டான காமகோடி மடத்திற்குப் பல நூற்றாண்டுகள் முன் ஸ்தாபிக்கப்பட்ட சிருங்கேரி, துவாரகை, பூரி, ஜ்யோதிர்மடம் என்னும் நாலு மடத்தினரும் இவ்வுண்மையை இசைகின்றனர். தமது மடம் மிகவும் ப்ராசீனமானது என்று ஜனங்களை நம்பவைப்பதற்காகக் காமகோடி மடத்தார் எழுதிவைத்துக்கொண்டிக்கும் குருபரம்பரை நூல் பொய்யெல்லாம் பொதிந்துகொண்ட கள்ளநூல் என்று சிருங்கேரிமடத்தார் பல நூல்களில் ஆதாரபூர்வமாக நிலைநாட்டியுள்ளனர். தமிழ்நாட்டில் எட்டாவது நூற்றாண்டுக்கு

http://acharya.org

முற்பட்ட சங்கநூல்கள், திருக்குறள், சிலப்பதிகாரம் முதலான நூல்களில் பல மதக்கொள்கைகள் எடுக்கப்படுகின்றன. அவற்றில் அத்வைதமதம் காணப்படவில்லையாகையால் ஆதி சங்கரர் தோன்றியது அந்நூல்களுக்குப் பிறகே என்பதை உறுதியாகச் சொல்லலாம். "சிவரஹஸ்யம் என்னும் இதிஹாஸத்தில் சங்கரரின் அவதாரம் கலியில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப்பின்னர்" என்று சொல்லியிருப்பதாகக் கட்டுரையில் அடிக்குறிப்பு கூறுகிறது. 'சிவரஹஸ்யம்' என்று ஓர் இதிஹாஸம் இருப்பதாகக் கூறுவதே பிரம்மாண்டப்புளுகாகும். சில நூற்றாண்டுகளுக்குமுன் தமிழில் எழுதப்பட்ட திருவிளையாடற்புராணம் என்னும் நூலின் வடமொழியாக்கமே 'சிவரஹஸ்யம்' என்னும் நூல். இதுவரை இந்நூல் அச்சாகவில்லை. இதில் கூறப்பட்டுள்ள சிவனின் திருவிளையாடல்கள் சங்கநூல்கள் முதலான பழைய நூல்கள் எதிலும் காணப்படாமையாலும், பண்டைச்சான்றோர்கள் எவராலும் கையாளப்படாததாலும் இது பிற்காலக் கற்பனை என எளிதில் அறுதியிடலாம். இக்கள்ள நூலை நம் நாட்டில் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக வழங்கிவரும் ஸ்ரீராமாயண மஹாபாரதங்களுக்குப் போட்டியாக ஓரிதிஹாஸமாக்கப் பார்ப்பது விலவறச்சிரிக்கத்தக்கது.

2. எழுபத்திரண்டு மதங்களில் பலவற்றின் பேர்கூடத் தெரியவில்லை என்று பீடாதிபதியே எழுதுவதால் இக்கூற்று பெரும் பொய்யென்று விளங்குகிறது. மேலும் ஆதிசங்கரருக்குப் பிற்காலத்தில் உதயனர் முதலான மிகப்பெரிய நையாயிக மதஸ்தர்களும், நன்னூல் எழுதிய பவணந்தி முனிவர் முதலான ஜைனர்களும் தத்தம் மதங்களைப் பரப்பி வந்தனர் என்பது வரலாறு கூறும் உண்மை. இக்கூற்று பொய்யென்பதை இவ்வுண்மையும் வலியுறுத்துகிறது. ஆதிசங்கரருக்கு முன் இருந்த ஆழ்வார்களும், முன்னும் பின்னும் இருந்த நாயன்மார்களும், பின் இருந்த நாதயாமுநமுநிகளும், ஸ்ரீராமாநுஜரும், மத்வாசார்யரும் தமது நூல்களில் இம்மதங்களைப் பலவாறு கண்டித்ததாலேயே இவை படிப்படியாக வலிமை குறைப்பெற்றன. இதிலிருந்து ஆதிசங்கரர் ஒருவரே இவற்றை அழித்துவிட்டார் என்று எழுதுவது பெரும் பொய்யென விளங்கும். ஆதிசங்கரர் ஸ்தாபித்தது அத்வைத மதத்தையேயொழிய ஹிந்துமதத்தையல்ல.

http://acharya.org

'ஹிந்து மதம்' என்னும் மதம் அவருடைய நூல்களிலோ நூற்றாண்டுகளுக்குமுற்பட்ட மற்ற எந்த வைதிகநூலிலோ காணக் கிடைக்காததொன்று. இன்று இந்தியாவில் வாழும் ஜைனர், பௌத்தர் முதலானவர்களும் ஹிந்துக்கள் என்றே வழங்கப்படுகிறார்களாகையால், சங்கரர் ஹிந்துமதத்தை ஸ்தாபித்தார் என்றால் அவர் கண்டித்த ஜைனமதத்தையும், பௌத்தமதத்தையும் அவரே ஸ்தாபித்தார் என்றுகொள்ள வேண்டிவரும். இன்று இந்தியாவில் வழங்கும் கிறிஸ்தவ இஸ்லாமிய மதங்கள் தவிர மற்ற பல மதங்கள் 'ஹிந்துமதம்' என்றே வழங்கப்படுகின்றனவாகையால் அவர் ஒன்றோடொன்று முரண்பட்ட அத்தனை மதங்களையும் ஸ்தாபித்தார் என்றுகொள்ளவேண்டிவரும். அத்வைதம் ஒன்றுதான் ஹிந்து மதம் என்பதை அறிவுள்ள எவரும் இசையமுடியாது.

3. ஆதிசங்கரர் சைவம் முதலான ஆறுமதங்களை ஸ்தாபித்தார் என்பது ப்ரஹ்மாண்டப் புளுகு. உண்மையில் தமது ப்ரஹ்மஸூத்ர பாஷ்யத்தில் இரண்டாம் அத்தியாயத்தின் இரண்டாம் பாதத்தின் கடைசி இரண்டு அதிகரணங்களில் முதலாவதில் அவர் சைவாகமங்களில் சொல்லப்பட்ட சைவ மதத்தை முழுவதும் கண்டித்திருக்கிறார். இரண்டாவதில் பாஞ்சராத்ராகமங்களில் சொல்லப்பட்ட நாராயணபரத்வத்தை ஏற்றுக்கொண்டு, ஜீவோத்பத்தி முதலான மற்ற சில விஷயங்கள் அவ்வாகமங்களில் உள்ளதாக மயங்கி அவற்றைக் கண்டித்திருக்கிறார். சாக்தம், காணபத்யம், கௌமாரம், ஸௌரம் ஆகிய மதங்கள் அவரது உண்மையான நூல்களான ப்ரஸ்தாநத்ரய ஸஹஸ்ரநாம பாஷ்யங்களில் காணப்படவேயில்லை. அவர் பெயரில் வழங்கும் ஸ்தோத்ரங்கள் அவர் காலத்திலிருந்து பல நூற்றாண்டுகள்வரையில் எவராலும் கையாளப்படாமையால் அவருடையவையாக இசையத்தக்கவையல்ல. ஆகையால் அவர் ஷண்மத ஸ்தாபகர் என்பது பெரும் பொய்யேயாகும். இதை நாம் நமது "சங்கரமும் வைணவமும்" என்னும் நூலில், எதிரிட்டவர்களும் வாய்திறக்க முடியாதபடி நிலைநாட்டியிருக்கிறோம்.

4. இந்த வாதத்தின்படி பேசுவதானால், அத்வைதிகளுக்கு எல்லா ஜீவர்களுமே பரம்பொருளேயாகையால் ஹிரண்யன், ராவணன், கம்ஸன், சிசுபாலன் ஆகியவர்களும் கண்ணனோடு ஒன்றாகையால் அவர்களையும் கண்ணனுடைய அவதாரமாகக் கொள்ளவேண்டிவரும். "விஷ்ணு

http://acharya.org

வால் கொல்லப்பட்ட அவர்களுக்கும், விஷ்ணுவுக்கும் வ்யாவஹாரிக நிலையில் பேதம் உண்டே'' எனில் விஷ்ணுவால் படைத்து அளித்து அழிக்கப்படுபவனாக வேதவேதாந்தங்களில் சொல்லப்படும் சிவனுக்கும் அந்நிலையில் விஷ்ணுவோடு பேதம் உண்டாகையால் சிவாவதாரத்தை விஷ்ணுவின் அவதாரமாகக் கொள்ளமுடியாது என உணரலாம். விஷ்ணுசித்த விஜயம் முதலான நூல்களில் சிவவிஷ்ணு ஐக்யவாதத்தை நாம் அடியறுத்திருப்பதும் இங்கு அறியத்தக்கது.

5. இது ஆராய்ச்சியின்மையால் விளைந்த வாதம். போதாயனரின் வ்ருத்திக்ரந்தத்தையும், டங்கர், த்ரமிடர் முதலானோரின் நூல்களையும் பின்பற்றியே தாம் பாஷ்யமிடுவதாக ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீபாஷ்யத்தின் தொடக்கத்தில் குறிப்பிடுவதாலும், அவர்களது நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுவதாலும் ஸ்ரீராமாநுஜர் நிலைநாட்டிய விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதம் சங்கரருக்கு மிக முற்பட்டது என விளங்கும். சங்க நூல்களில் இம்மதமே வேதமதமாகக் கொண்டாடப்பட்டிருப்பதை நாம் சங்ககாலத்தமிழர் சமயம், சாதிமத ஆராய்ச்சி, ஸ்ரீவைஷ்ணவமத விஜயம் முதலான பல நூல்களில் நிலைநாட்டியிருக்கிறோம். சங்கரருக்கு மிக முற்பட்ட பாஞ்சராத்ர ஆகமத்திலும், ஆழ்வார்களின் அருளிச்செயல்களிலும் இம்மதமே நிலைநாட்டப்பட்டுள்ளது என்பது அனைவரும் அறிந்தது. பேதவாதத்தைச் சொல்லும் த்வைதமதமும் சங்கரருக்கு முன்பே இருந்தது என்பது ப்ரஹ்மஸூத்ரத்திலும், சங்கர பாஷ்யங்களிலும் அது கண்டிக்கப்பட்டிருப்பதிலிருந்து நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். வெளிதேசங்களில் இன்று அத்வைதத்தைக் காட்டிலும் 'ஹரேக்ருஷ்ண' இயக்கத்தினர் பரப்பிவரும் வைஷ்ணவமதமேஅதிகமாகப்பரவியுள்ளது. விஞ்ஞானிகளிலும் 99 சதவீதத்தினர் அத்வைதம் கூறும் 'உலகம் பொய்' 'ஜீவனே பரம்பொருள்' எனும் அத்வைத மதக்கொள்கைகளை ஏற்காதவர்களாகவே உள்ளனர். ஆகையால் ஆதி சங்கரரே இன்று ஜகத்குரு என்று எழுதியது அபிமானத்தால் எழுதியதேயாகும். அத்வைத ஜகத்திற்கு அவர் குருவேயொழிய மற்ற எந்த மதத்தவர்களுக்கும் அவர் குருவல்ல என்பது வெளிப்படை. ஜகத்குரு ஆசார்யர் என்று அந்தந்த மதத்தவர்களால் கொண்டாடப்படும் அனைவர்க்கும் இது ஒக்கும். இவ்வளவால் மாயாவாதியான பீடாதிபதியின் மாயவாதங்கள் தலையெடுக்க முடியாதபடி மறுக்கப்பெற்றன. எத்தனைமுறை திருப்பித் திருப்பி அச்சிடப்பட்டாலும் பொய் உண்மையாகிவிடாது.

http://acharya.org

S. ஸௌம்யநாராயணன், ஸ்ரீரங்கம். மற்றும் பலர்.

66. டிசம்பர் '88 திருமாலில் "ஒருவன் அங்கத்தில் ஒருவன்" என்னும் கட்டுரையில் 'திருமால்' துணை ஆசிரியர் "திரு இரா சுராஜ்" அவர்கள் முன்னுக்குப்பின் முரணான பல குழப்ப வாதங்களைச் செய்கிறார். பொய்கையாழ்வார் தம் திருவந்தாதியில் "பொன் திகழும்" என்று தொடங்கும் 98-வது பாட்டில் "சிவனுக்கு நாயன்மார்களைப்போலே பெருமை சொல்லுகிறார்" என்றும், "சிவனும், திருமாலும் இருவேறு உடல்களோடு திரிவதாகத்தோன்றுவது உண்மையல்ல" என்றும், "அவர்கள் ஒருவருக்குள் ஒருவராக அன்யோன்யமாகத்தான் இருக்கிறார்கள்" என்றும், "திருமால் தன் உடலில் சிவனுக்கும் இடமளித்துள்ளான். நாம்தான் 'சரீர ஆத்மபாவம்' (உடல் உயிர் தொடர்பு) அறியாமல் தடுமாறிக்கொண்டிருக்கிறோம்" என்றும், "பின் வந்த ஆழ்வார்களுக்கு, முதலாழ்வார்களுக்கு இருந்த 'சமயப் பொறை' இல்லை" என்றும் பூர்வாசாரியர்களுடைய வியாக்கியானங்களைக் கண்டிப்பதுபோல எழுதியிருக்கிறார். இதனால் கலங்கியிருக்கும் திருமாலடியார்களைத் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

'கல்கி' போன்ற பத்திரிகைகளில், ராஜாஜிபோன்ற அரசியல்வாதிகளாலும், 'காமகோடி பீடாதிபதி' போன்ற அத்வைதிகளாலும் எழுதப்பெற்று, நம்மால் பலமுறை கண்டிக்கப்பட்டிருக்கும் வாதங்கள் 'திருமால்' பத்திரிகையில் வெளிவந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. "ஒருமுறைக்கு இருமுறை சொல்லிப்பாருங்கள். உங்களுக்கே பொருள்விளங்கிவிடும்" என்று துணை ஆசிரியர் கட்டுரைத் தொடக்கத்திலேயே கூறுவதிலிருந்து, அவர் 'முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு, பின் ஓர்ந்து தாம் அதனைப் பேசாமல், தம் நெஞ்சில் தோற்றினதே சொல்லிப் பிறரைக் குழப்புகிறார் என விளங்குகிறது. உண்மையில் முன்பின் பாடல்களைப் பார்க்காமல் இந்தப் பாட்டை மாத்திரம் வைத்துக்கொண்டு, பெரியவாச்சான்பிள்ளை அப்பிள்ளை உரைகளை ஓர் நல்லாசிரியரிடம் கேளாமல் எத்தனைமுறை படித்தாலும் எவராலும் பொருள்விளங்கிக் கொள்ள முடியாத பாடல் இது. இதற்கு உரையாசிரியர்கள் இருவிதமாகப் பொருள் அருளியுள்ளார்கள் என்பதைப் புரிந்துகொள்ளாமல், இரு பொருள்களையும் போட்டுக் குழப்பு

http://acharya.org

கிருர் துணை ஆசிரியர். உரையாசிரியர்கள் அருளியிருக்கும் இரு பொருள்களாவன :—(1) "சடைபுனைந்து தவம்புரிந்து அதனுல் சில பெருமைகளைப் பெற்றிருக்கும் சிவனும், நின்ற விடத்திலிருந்தே சிவனையுள்ளிட்ட எல்லார் தலையிலும் காலை வைத்து உலகளந்து தன் பரத்துவத்தை நிலைநாட்டிக்கொண்ட நெடுமாலும் இரு அரங்கத்தால், அதாவது இரண்டு வகையான நாமம், ரூபம், வாகனம், உலகம், பரிஜனங்கள், செயல்கள், இருப்பிடங்கள் முதலானவற்றைக்கொண்டு, இருவரும் பரம் பொருளே என்று பாமரர்க்குத் தோன்றும்படி திரிந்தபோதிலும், இவர்களில் முதலில் சொல்லப்பட்ட சிவன் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட நாராயணனுடைய சரீரமாகவே ஸத்தை பெற்றிருக்கிருன். ஆகையால் நாராயணனே பரம்பொருள்; சிவன் ஓர் சீவனே" என்பது முதல் பொருள். "இரு அரங்கத்தால் திரிவரேலும்", என்றதற்கு "ஒருவன் நாராயணன், அரி முதலான பெயர்கொண்டிருந்தால், ஒருவன் அரன் முதலான பெயர் பூண்டு திரிகிருன். ஒருவன் கொண்டல் வண்ணனுய்த் திகழ்ந்தால், ஒருவன் பொன்திகழும் மேனியனுய் விளங்குகிருன். ஒருவன் வேத₃ாத்மாவான க₃ருட₃னை வாஹனமாகக்கொண்டு ஸஞ்சரித்தால், ஒருவன் எருதின்மேல் ஏறித் திரிகிருன். ஒருவன் ஸ்ரீவைகுண்ட₂லோகத்திலிருந்தால் ஒருவன் கைலாஸவாஸியாய் விளங்குகிருன். ஒருவன் ரக்ஷணத்தைச் செய்தால், ஒருவன் ஸம்ஹாரத்தைச் செய்கிருன். ஒருவன் நித்யஸூரிக₃ணங்களால் சூழப்பெற்றிருந்தால், ஒருவன் பூ₄தப்ரேத பிசாசக₃ணங்களால் சூழப்பெற்றிருக்கிருன். ஒருவன் ஸாத்விகாசாரமுள்ள நூறு கோயில்களைப் பெற்றிருந்தால், ஒருவன் தாமஸாசாரமுள்ள ஆயிரங்கோயில்களைப் பெற்றிருக்கிருன். ஒருவன் ஸாத்விகர் சிலரை ப₄க்தர்களாகப் பெற்றிருந்தால், ஒருவன் தாமஸர் பலரை ப₄க்தர்களாகப் பெற்றிருக்கிருன். ஒருவன் வேத₃த்தாலும், ஸாத்விகசாஸ்த்ரத்தாலும் கோஷிக்கப் பட்டால், ஒருவன் சைவாக₃மத்தாலும், தாமஸசாஸ்த்ரத்தாலும் கோ₄ஷிக்கப்படுகிருன். இவற்றையெல்லாம் காணும் அறிவிலிகளுக்கு இருவரும் பரம்பொருளோ என்னும் ஐயம் விளையும்படியிருக்கிறது" என்பது கருத்து. இந்த ஐயத்துக்குப் பாடலின் பிற்பாதியாலே பதில் உரைக்கிருர் ஆழ்வார். "இப்படி மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இருவரும் தனித்தனியாகப் பரம்பொருள் என்று பாமரர்களுக்குத் தோன்றினுலும், உண்மை அது அல்ல. சிவன் நாராயணனுடைய சரீரமாகவே ஸத்தை பெற்றிருக்கையால் நாராயணனே பரம்பொருள்; சிவன் ஓர் சீவனே" என்பது ஆழ்வாருடைய பதில். பெரியவாச்சான்

http://acharya.org

பிள்ளை முதலான பேராசிரியர்கள் காட்டிய இந்தப்பொருள் "அரன் நாரணன்" "முதலாவார் மூவரே அம்மூவருள்ளும் முதலாவான் மூரிநீர் வண்ணன்" "மாமதிள் மூன்றெய்த இறையான் நின் ஆகத்து இறை" "திருமாலையல்லது தெய்வ மென்றேத்தேன்" "பொடிசேர் அன்றங்கு அங்கையேற்றான் அவிர்சடைமேல் பாய்ந்த புனற்கங்கை" "ஏற்றான் புள்ளூர்ந் தான்...காப்பு"முதலான இவ்வாழ்வாருடைய மற்ற பல பாசுரங் களுக்குப் பொருந்திய பொருளாகும். துணை ஆசிரியர் காட்டும் அவப்பொருள் இப்பாடல்களுக்கு மிகவும் முரண்பட்டது. (2) "சிவனும் திருமாலும், இருவர் அங்கத்தால்-இரண்டு உடல் களோடு திரிவதன்மூலம் இருவருமே தனித்தனிப் பரம்பொருள் என்று பாமரருக்குத் தோன்றினாலும், சிவன் ஓர் ஆபத்துக் காலத்தில் நாரணன் திருமேனியில் இடம் பெற்று ஸத்தை பெற்றவனாகையாலே நாரணனே பரம்பொருள். சிவன் ஓர் சீவனே" என்பது பேராசிரியர்கள் காட்டியுள்ள இரண்டா வது பொருள். துணை ஆசிரியர் இந்த இரண்டாவது பொரு ளைத் தழுவிக்கொண்டு "சிவனும் நெடுமாலும் ஒருவருக்குள் ஒருவராக அன்யோன்யமாகத்தான் இருக்கிறார்கள்" என்று சிவவிஷ்ணு ஸாம்யபரமாக அதற்குக் குயுக்தியாக அர்த்தமும் செய்து, "நாம்தான் சரீர ஆத்மபாவம் அறியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறோம்" என்று குழப்பத்தின் எல்லையில் நின்று தடுமாறித் தம் கட்டுரையை முடிக்கிறார். துணையாசிரியர் தழு விய இரண்டாவது பொருளுக்கும் சரீராத்மபாவத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. திருமாலின் சரீரத்தில் ஒரு மூலையில் சிவன் இடம் பெற்றதால் ஒருவன் ஆத்மா என்றும் ஒருவன் சரீரம் என்றும் எப்படித்தேறும்? இரண்டுமுறை பாடலைப் படித்துவிட்டு உரையாசிரியர்கள் அருளியிருக்கும் இருபொருள் களையும் புரிந்து கொள்ளாமல் ஒன்றுக்கிக்குழப்பி, தன் நெஞ் சில் தோற்றினதே சொல்லுகிறார் துணையாசிரியர். பெரிய வாச்சான்பிள்ளை முதலான பேராசிரியர்கள் அருளிய விஷ்ணுபரத்வபரமான பொருள்களைக் கண்டித்து, மற்ற ஆழ்வார்களையும் 'சமயப்பொறை' இல்லாதவர்கள் என்று குறைகூறி, துணையாசிரியர் எழுதிய கட்டுரையை ஸ்ரீவைஷ் ணவ பூர்வாசார்யர்கள் ஆழ்வார்களுடைய பெருமையைப் பேசுவதற்காகவே தொடங்கப்பெற்ற பத்திரிகையில் வெளியிட்டதற்கு 'திருமால்' ஆசிரியர் தம் பத்திரிகையிலேயே வருத்தம் தெரிவிக்கவேண்டும் என்று நமக்குத் தெரிந்த பல

http://acharya.org

உண்மையான திருமாலடியார்கள் விரும்புகிறார்கள். [இதன் பிரதிகள் ஸ்ரீரங்கத்தில் இவ்வருடம் வைகுண்ட ஏகாதசியை யொட்டி நடைபெற்ற பல ஸ்ரீவைஷ்ணவ மாநாடுகளில் திருமாலடியார்களுக்கு வழங்கப்பெற்றன.]

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம் (67, 68 கேள்விகள்)

67. விபவ ஐப்பசி ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் "திருவாய் மொழி அமுதம்" கட்டுரையில் "கண்டாயே நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்று" [திருவாய்.1-10-5] என்னும் அருளிச்செயலில் "கருமங்கள்" என்று புண்யபாபகர்மங்களைக் குறிப்பதாகப் பொருள் எழுதப்பட்டுள்ளது. "ஓர் எண் தானுமின்றியே" என்ற அடுத்த தொடருக்கு என்ன பொருள் கருதுகிறார் எழுதியவர் என்றே கட்டுரையிலிருந்து விளங்கவில்லை. சரியான பொருளை விளக்க வேண்டுகிறேன்?

இந்தப் பதிகம் எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபையைக்காட்டுகிறது. "கருமங்கள் வாய்க்கின்று ஓர் எண்தானுமின்றியே வந்தியலுமாறு" என்னும் இப்பாட்டின் உயிரான பகுதியில் ஆழ்வார் அதை வெளியிடுகிறார். திருவாறுயிரப்படியில் பிள்ளான் "நமக்கு அசிந்திதமாக வந்து ஸம்ருத்₃தி₄கள் விளைகிறபடி கண்டாயே" என்று இந்த அருளிச்செயல் தொடருக்குப்பொருள் அருளிச்செய்கிறார். ஒன்பதினாயிரப்படியில் நஞ்சீயரும் "தன் திறத்தில் எண்ணுகை தானும் இன்றியே இருக்கச்செய்தே எம்பெருமான் நம்மை ஆகஸ்மிகமாக விஷயீகரித்தபடியைச் சொல்லுகிறார்" என்று அருளுவதன் மூலம் ஆறுயிரப்படியை விளக்குகிறார். இருபத்துநாலாயிரப்படியிலும், ஈடு முப்பத்தாறுயிரத்திலும் இவ்வர்த்தமே மேலும் தெளிவாக விளக்கப்பட்டது. "கருமங்கள்" என்றதற்குப் புண்யபாபகர்மங்கள் என்று எந்தப் பூர்வாசார்யரும் பொருள்கொள்ளவில்லை. "கருமங்கள் வாய்க்கின்று" எனும் தொடருக்கு "ஸம்ருத்₃தி₄கள் விளைகிறபடி" "ப்ரயோஜநங்கள் நேர்படப்புக்கால்" "(அத்₃வேஷம், ஆபி₄முக்₂யம், ஆஶ்ரயணம், அறிவு தொடக்கமான) காரியங்கள் பலிக்குமிடத்தில்" என்றே அனைவரும் பொருள் அருளியுள்ளனர். வேதாந்த தேசிகரும் தம் தாத்பர்யரத்னாவளியில் இந்தப் பதிகத்தின் பொருள் நிர்ஹேதுக க்ருபையே என்பதை "அவ்யாஜோத₃ர ப₄ாவாத்" என்னும் தொடராலே தெளிவாகக் காட்டினர். ஸகலபூர்வாசார்யர்களின் திருவுள்ளத்துக்கும் முரணாக இப்பாட்டுக்குப்

http://acharya.org

பொருள் எழுதியதற்கு நமது அன்பரும், தேசிக ஸம்ப்ரதாயத்திற்கு மிகவும் உபகாரகராயெழுந்தருளியிருந்த நவநீதம் ஸ்ரீராமதேசிகாசார்ய ஸ்வாமியின் குமாரருமான கோபால தேசிகன் வருத்தம் தெரிவித்து, பூர்வாசார்யர்கள் அருளிய பொருளை 'ப்ரியா'விலேயே விளக்குவார் என்று எதிர்பார்க்கிறோம்.

68. 'ப்ரியா' புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை இதழ்களில் "தேசிகதர்சனம்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வெளிவந்துள்ளது. "தேசிகன் பாம்பாட்டியை அடக்கினார், கொத்தனாரை அடக்கினார்" முதலான கதைகளை எழுதிவிட்டு, "ஸ்ரீரங்கத்தில் அத்வைதவித்வான்கள் க்ருஷ்ண மிச்ரனை முன்னிட்டுக் கொண்டு ஸ்ரீவைஷ்ணவர்களை வாதத்திற்கு இழுத்து, கோயில் வழிபாடுகளைத் தடைசெய்ய முயன்றபோது அங்கு ஆசார்யகம் செய்துகொண்டிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அருளிச்செயலை மட்டும் அதிகரித்து, ஸ்ரீபாஷ்யம் முதலான சாஸ்த்ரங்களைப் பரிசயம்செய்து பிற மதத்தினருடன் வாதம் செய்ய உரியராயிராமையாலே தேசிகன் எழுந்தருளி வாதப்போர் புரிந்து அத்வைதிகளை வென்று கோயிலில் வைஷ்ணவ வழிபாடுகளை ஸ்தாபித்தார்" என்று எழுதப்பட்டுள்ளது. இது உண்மையா?

இக் கதை முழுப்பொய் என்பது பின்வரும் காரணங்களிலிருந்து விளங்கும்:—(1) க்ருஷ்ணமிச்ரனுடைய "ப்ரபோத சந்த்ரோதயம்" என்னும் நூலிலுள்ள "அஹல்யாயைஜார:" என்னும் ஶ்லோகம் தேசிகனுக்கு மிக முற்பட்ட பெரியவாச்சான் பிள்ளையால் தமது தனிஶ்லோக வ்யாக்யானத்தில் மேற்கோளாகக் காட்டப்பட்டிருப்பதிலிருந்து க்ருஷ்ணமிஶ்ரன் தேசிகன் காலத்தில் இருந்திருக்கவே முடியாது என்று விளங்கும். (2) அக்காலத்தில் ஸ்ரீரங்கத்தில் ஆசார்யகம் செய்துவந்தவர்களில் 'ஶ்ருதப்ரகாசிகை' அருளிய ஸுதர்சனபட்டரும் ஒருவர். அவரைப்போலவே ஸ்ரீபாஷ்யாதி ஶாஸ்த்ரங்களில் மிகவல்லவர்களான அஷ்டாதசரஹஸ்ய கர்த்தாவான பிள்ளைலோகாசார்யரும், அவரது திருத்தம்பியாரும், பெரியவாச்சான்பிள்ளையின் திருக்குமாரரான நாயனாராச்சான்பிள்ளையும் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீராமாநுஜதர்ஶன நிர்வாஹம் செய்துவந்தனர். (தேசிக தர்சனம் என்னும் புது தர்சனம் அக்காலத்தில் வழங்கிய

http://acharya.org

தில்லை.) ரங்கராஸ்தானத்தில் தர்ம நிர்வாஹகர்களாயெழுந் தருளியிருந்த இவர்களை ரஸிகர்கள் என்றும், வித்வான்கள் என்றும் தேசிகன் குறிப்பிட்டு, இவர்களுக்குக் கைங்கர்யம் செய்து தம் மனம் பரிசுத்தியடைந்ததாகவும் ஸாதித்துள் ளார். உண்மை இவ்வாறிருக்க, ஸ்ருதப்ரகாஸிகாசார்யர் முதலான இந்தப் பேராசிரியர்களுக்கு ஸ்ரீபாஷ்யம் தெரியாது என்று எழுதியிருப்பது எழுதியவரின் ஆராய்ச்சியைக் காட்ட வில்லை; குருட்டுத்தன்மான ஸம்ப்ரதாய வெறியையே காட்டு கிறது. இத்தகைய வெறியரின் கட்டுரை 'ப்ரியா'வில் வெளி வந்தது மிகவும் வருந்தத்தக்கது.

S. பார்த்தசாரதி, கும்பகோணம்-2.

69. தஞ்சை சரஸ்வதி மஹால் நூல்நிலயம் தனது 268வது வெளியீடாக "சிவவாக்கியர் வேதசாத்திரக்கும்மி" என்னும் நூலை வெளியிட்டுள்ளது. அதில் ஹிந்து ஸமூஹ மும், அவர்களுடைய மதஸம்ப்ரதாயங்களும் மிகக் கீழ்த்தர மான முறையில் தாக்கப்பட்டுள்ளன. இந்நூல் — ஹிந்துக் கள் உயிருள்ள பிணங்கள், மாய்மாலக்காரார், ரெண்டகக் காரர் (833), சர்ப்பவீரியங்கள் (835) என்கிறது; நாள் பார்க்கும் பேர்வழிகள் 'விபசாரனுக்கும், வேசிக்கும் விற் றான பேர்கள் (815)' என்கிறது; சைவசமயம் 'மோசத்துக் கான சைவம்' (781) என்கிறது. சைவர்களைத் 'தேவடியா ளுடைய எச்சிலைத் தின்றவர்' (529) என்கிறது; சக்தி பூசை யினரைப் 'பத்தினி வேஷம் குலைந்தவர்' (530) என்கிறது. இதுபோல் மற்றும் பலதாக்குதல்களை ஹிந்துக்களைக் குறித் தும், இந்துக் கோயில்களைக் குறித்தும், தெய்வங்களைக் குறித்தும் செய்கிறது. இந்நூல் கிறிஸ்துவையும், கிறிஸ்துவ மதத்தையும் புகழ்ந்திருப்பதிலிருந்து சிவவாக் கியர்—என்னும் பெயரில் ஒரு கிறிஸ்துவர் இயற்றிய நூல் இது எனத்தெரிகிறது. தஞ்சை இந்து இயக்கங்களின் கூட்டமைப்பு இந்நூலைப்பற்றி ஓர் எதிர்ப்பு இயக்கத்தை நடத்தி வருகிறது. இதுபற்றித் தங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

சுமார் 500 வருடங்களுக்குள் சைவசித்தர்களில் ஒருவர் சிவவாக்கியர் என்னும் பெயருடன் சில நூல்கள் எழுதினார். திருமழிசையாழ்வாருடைய திருச்சந்தவிருத்தத்தைக் காப்பி யடித்து, அதே சந்தத்தில் பல பாடல்களைப் பாடினார். திருச்

http://acharya.org

சந்தவிருத்தத்திலிருந்து சில பாடல்களை அப்படியே திருடிச் சேர்த்துக்கொண்டார். இதைக் கண்ட வைஷ்ணவர்களில் சிலரும், சிவவாக்யர்தான் திருமழிசையாழ்வாராக மாறினர் என்று நம்பத் தொடங்கினர்கள். (ப்ரபந்நாம்ருதத்தி லும் அப்படி உள்ளது) உண்மையில் திருமழிசையாழ்வா ருக்குப் பல நூற்றுண்டுகள் பிற்பட்டவர் சிவவாக்யர். இவருடைய பாடல்களில் ஆலய வழிபாடு மறுப்பு முதலான நாஸ்திக வாதங்கள் காணப்படுகின்றன. "நட்ட கல்லை தெய்வமென்று நாலுபுஷ்பம் சாத்தியே, சுற்றிவந்து மொணமொண என்று சொல்லும் மந்த்ரம் ஏதடா? நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்? சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ? பணத்தி ஆவது ஏதடா பறத்தி ஆவது ஏதடா? பணத்தி போகம் வேறதோ? பறத்தி போகம் வேறதோ?" (பணத்தி-பார்ப்பனப்பெண்) முதலான அவரது பாடல்களைக் காணலாம், "தன்வினை தன்னைச் சுடும்" என்னும் முதுமொழிப்படி ஆலய வழிபாட்டைத் தாக்கு வதற்காகச் சைவர்களால் கற்பிக்கப்பட்ட சிவவாக்கியர் பெயரிலேயே இன்று "சிவவாக்கியர் வேத சாத்திரக் கும்மி" வெளிவந்துள்ளது. இந்த இந்து இயக்கங்கள் சிவவாக்கியர் போன்ற போலிகளைத் தங்களுடைய "இந்து மதத்தினுள்" சேர்ந்தவராக எற்றுக்கொண்டதனுல் வந்த வினையே இது. விஷ்ணுவையும் வைஷ்ணவத்தையும் ஆலய வழிபாட்டையும் தாறுமாருகத் தாக்கும் நாயன்மார்கள், சித்தர்கள் பாடல் களைப் பொறுத்துக்கொள்ளும் இந்து இயக்கங்கள் 'தலை விதியே!' என்று சிவவாக்கியர் வேதசாத்திரக் கும்மியையும் பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான். இன்று 'இந்துமதம்' என்று அழைக்கப்படும் மதக் கும்பலில் நாத்திகவாதங்களும் சேர்ந்துதானே காணப்படுகின்றன!

V. ஸ்ரீதரன், மதுரை

70. நேற்று திருமாலிருஞ்சோலையில் அழகரை ஸேவித்துவிட்டு, நூபுரகங்கைக்குச் செல்லும் வழியில் முருகன் கோவிலில் ஏதேனும் ஆக்ரமிப்பு உள்ளதா? என்று பார்க்கப்போனேன். அக்கோவிலுக்கு 100 மீட்டருக்கு முன்னுல் உள்ள நாவல் மரத்தின் கீழ் ஒரு பிள்ளையாரைப் புதிதாக வைத்து "ஔவையாருக்கு முருகன் நாவல் கனி கொடுத்த இடம். (சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம்

http://acharya.org

வேண்டுமா? என்று கேட்ட இடம்)" என்று அந்த மரத்தில் ஒரு பலகை அடிக்கப்பட்டுள்ளது. பெரிய மோசடியான இப்புது ஆக்ரமிப்பு விஷயத்தில் வைணவர்கள் செய்ய வேண்டியது என்ன? அழகர் மலை வழக்கு எந்த நிலையில் இருக்கிறது?

வைணவர்கள் தூங்கிக்கொண்டிருந்தால் 'தூங்கினவன் தொடையில் திரித்தவரையில் லாபம்' என்று சைவர்கள் கயிறு திரித்துக்கொண்டுதான் இருப்பார்கள். மதுரையில் இருக்கும் வைணவர்களில் ஆண்பிள்ளையாக இவ்வக்ரமங்களைத் தடுக்க எவராவது முன்வருவாரா என்பது நமக்கும் விளங்கவில்லை.

அழகர்மலை கேஸ் **19—1—88**ந்தேதி கோர்ட்டு கட்டணத்தைப்பொறுத்து **(Prelimiary Point)** விசாரணை ஏற்பட்டதில் அன்று அடியேன் செல்லமுடியாத நிலையில் நமது வக்கீல் ராஜமய்யங்காரால் **(No Instruction report)** செய்யப்பெற்று, மறுபடி மனுதாக்கல்செய்து விசாரணையில் உள்ளது. இந் நிலையில் நமது பெரிய ஜீயர் ஸ்வாமி பரமபதித்ததினாலும் பிரதிவாதி ஒருவர் காலஞ்சென்றதாலும், சிக்கல்கள் விளைந்து மனு விசாரணையில் உள்ளது. இதன் மத்தியில் தேவஸ்தானத்தார் தனியாகப்போட்டிருந்த கேஸ் கோர்ட்கட்டண விசாரணையில் தள்ளுபடி ஆகி, சென்னை உயர்நீதிமன்றத்தில் அப்பீல் (மேல்முறையீடு) செய்திருக்கிறார்கள். சென்னை உயர்நீதிமன்றத்தில் 'ரிட்' மனு தாக்கல் செய்து, '**Permanent Stay and Injunction**' [நிரந்தரத் தடை உத்தரவு] வாங்கிய ஐக்கிய வைஷ்ணவ சபைத் தலைவரை மதுரைக் கோர்ட் கேஸில் பார்ட்டியாகச் சேரும்படி உத்தரவாகியும், மதுரை அட்வகேட் **T.** ஸ்ரீநிவாஸராகவன் இப்போது சபைத்தலைவராக இல்லாமையால் கேஸ்களில் சேராமல் இருக்கிறார். சபையின் அடுத்த தலைவர் அதைத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஸ்ரீநிவாஸராகவன் தலைவர் என்ற ஹோதாவில்தான் கேஸ் நடத்தினார். ஆகையால் மதுரை ஐக்கிய வைஷ்ணவ சபையாரும் இதில் அக்கரை எடுத்துக்கொண்டு வழக்கில் வாதியாகச் சேர்ந்து வழக்கைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

http://acharya.org

K. P. ராஜகோபாலன், சென்னை-24.

71. "மங்கை" மாதப்பத்திரிகையின் நவம்பர், டிசம்பர் இதழ்களில் "திருப்பதி" பற்றிய கட்டுரையில் ஆக்ரமிப்பு வெறியுடன் கூடிய பல அபத்தமான வாதங்கள் செய்யப்பட்டுள்ளன. விமர்சிக்கவேண்டுகிறேன்.

இந்த வாதங்கள் நம்மால் பலமுறை நமது ஸுதர்சனர் பதில்களில் நொறுக்கித்தள்ளப்பட்டுள்ளன. ஐப்பசி மாதத்தில் வெளிவந்த 64-வது கேள்வியின் பதிலைக்காணலாம். திருப்பித் திருப்பி அத்தகைய பதில்களை அடியேன் எழுதிக்கொண்டிருப்பதால் பயனில்லை. 'மங்கை' பத்திரிகையில் கட்டுரை எழுதிய பேர்வழி எந்த நூலையும் படிக்காத ஓர் அறிவிலி என்பது "ஸ்ரீராமானுஜரின் பிரதான சீடரான ஆளவந்தார் பாடிய 'வேங்கடேச இதிகாசமாலை'யில் திருமலையில் முருகனும் ஒரு தெய்வமே என்று உறுதியாகக் கூறியிருக்கிறார்" என்று இவர் எழுதியிருப்பதிலிருந்து விளங்குகிறது. ஸ்ரீராமானுஜருடைய ஆசாரியருக்கு ஆசார்யரான ஆளவந்தாரை அவருக்குப் பிரதான சீடர் என்று எழுதுவதும், "அவர் வேங்கடேச இதிகாச மாலையைப் பாடினார்" என்று எழுதுவதும் இவர் அந்த நூலைப் படித்ததே இல்லை என்பதைக் காட்டுகிறது. வேங்கடேசஇதிகாச மாலை என்பது ஸ்ரீராமானுஜரின் சீடரான அனந்தாழ்வானால் வடமொழியில் உரைநடையில் அருளிச்செய்யப்பட்டது. அதுபாடல் அல்ல. திருமலையில் எழுந்தருளியிருப்பவன் திருமாலே என்பதை அவர் அந்த வடமொழி நூலில் அசைக்க முடியாதபடி நிலைநாட்டியிருக்கிறார். இவ்விஷயத்தையே தெரிந்து கொள்ளாமல், அதில் தமக்கு ஏதோ சாதகம் இருப்பதுபோல் எழுதுவது பெரிய மோசடியாகும். திருமலையை அடுத்த நூற்றாண்டில் சிவன் கோயிலாக ஆக்கப்போவதாக இவர் பயமுறுத்துகிறார். "மங்கை" பத்திரிகையைப் படிப்பவர்களுக்கு — வடமொழியில் உள்ள வேங்கடேச இதிஹாஸ மாலா போன்ற நூல்களிலும், சிலப்பதிகாரம் போன்ற தமிழ் நூல்களிலும் திருவேங்கடத்தில் எழுந்தருளியிருப்பவன் திருமாலே என்று முழங்கப்பட்டிருப்பது தெரியாது என்னும் தைரியத்தில் இவர் மனம் போனபடி எழுதுகிறார். அடிக்கடி காமகோடி பக்தர்களின் பத்திரிகைகளில் 'சமரசம்' என்ற போர்வையில் திருவேங்கடத்தைப்பற்றித் திரித்துக்கூறும் ஆக்கிரமிப்பு வெறியுடன் கூடிய இத்தகைய கட்டுரைகள் வருவதை இனியும் வைணவர்கள் பொறுத்துக்கொண்டிருக்கக் கூடாது. ஆக்ரமிப்பு வெறியர்

http://acharya.org

களின் இத்தகைய கட்டுரைகளைச் சுமந்து வரும் 'மங்கை' போன்ற பத்திரிகைகளை வைஷ்ணவவுலகம் பஹிஷ்கரிக்க வேண்டும். அல்லது ஏராளமான கண்டனக் கடிதங்களைப் பல வைஷ்ணவர்கள் இப்பத்திரிகைகளுக்கு எழுதவேண்டும். இது செய்யாமல் தூங்கினால் வடக்குத் திருமலையிலும் விரைவில் ஆக்ரமிப்பு நிகழ்வது திண்ணம்.

S. முரளி, அந்தணல்லூர்.

72. பொதுஜனப் பத்திரிகைகள், வானொலி, தொலைக் காட்சி முதலான மக்கள் தொடர்புச் சாதனங்களில் அத்வைதிகளாலும், சைவர்களாலும் வைஷ்ணவ விரோதப் பிரசாரம் திட்டமிட்டுச் செய்யப்படுகிறது. இதற்கு நாம் செய்யக்கூடிய பரிஹாரம் என்ன?

இப்பிரசாரத்தை முறியடிக்க, கீதாசார்யன், யதிராஜ பாதுகா, திருமால், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா, ஸ்ரீரங்கநாதபாதுகா முதலான ஸ்ரீ வைஷ்ணவப் பத்திரிகைகளும் விடாமல் உண்மை நிலையைப் பிரசாரம் செய்யவேண்டும். மக்கள் தொடர்புச் சாதனங்களின் பொய்ப்பிரசாரங்களைக் கண்டிக்கவேண்டும். ஸ்ரீவைஷ்ணப் பொதுமக்களும் ஏராளமான கண்டனக் கடிதங்களை எழுதவேண்டும். சென்ற மாதம் திருச்சி வானொலியில் தீபாவளி பற்றி, தருமபுரம் ஆதீனம் விஷ்ணு விரோதப் பிரசாரம் செய்தார். அது பற்றிய நமது 9—11—88 கண்டனக் கடிதத்தைப் பெற்றபின் வானொலி நிலையத்திலிருந்து 23-11—88 அன்று "உங்கள் கடிதம் தருமை ஆதீன கர்த்தருக்கு அனுப்பப்பட்டது" என்று கடிதம் வந்தது. ஆதீன கர்த்தர் இதுவரை தம் பேச்சுக்கு எந்த ஆதாரத்தையும் காட்டவில்லை. ஆயினும் நமது கண்டனக் கடிதத்திற்கு ஒரு நல்ல விளைவு ஏற்பட்டது. திருச்சி வானொலியில் கார்த்திகை தீபம் பற்றிப் பேசிய தருமையாதீன கர்த்தர் வழக்கமாகச் சொல்லிவரும் அடிமுடி தேடிய கட்டுக்கதையைச் சொல்லவில்லை. ஆகையால், பல அன்பர்களும் வைணவப் பத்திரிகைகளும் கண்டனக் குரலை விடாமல் எழுப்புவதே இந்தப் பொய்ப் பிரசாரங்களுக்குத் தக்க பரிஹாரமாகும். "ஸுதர்சனத்தில் வெளிவரும் மறுப்புக்கட்டுரைகளைப் பொதுஜனப் பத்திரிகைகளில் வெளியிடலாமே" என்று ஓரன்பர் அடிக்கடி நமக்குக் கடிதம் எழுதுகிறார். நாம் எவ்வளவு மறுத்தாலும் பொய்ப் பிரசாரத்தை விடாமல் தொடர்ந்து செய்துவரும் பத்திரிகைகள் நமது கட்டுரைகளை வெளியிடமாட்டா என்பது வெளிப் படை. முடிந்தால் அவ்வன்பரே அப்பத்திரிகைகள் மூலம் உண்மைகளை வெளியிட முயன்று பார்க்கலாம்.

http://acharya.org

K. A. தேவராஜன், சென்னை-1.

73. 1—1—89 அன்று மயிலை ஆதிகேசவப்பெருமாள் பேயாழ்வார் தேவஸ்தான மண்டபத்தில் நடந்த திருப்பாவை ஸதஸ்ஸில் ஸ்ரீமான் சுராஜ் அவர்கள் ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும் அபத்தமாகப் பலவாறு நிந்தித்துப்பேசினார். அவர் பேசினதின் சுருக்கத்தை எழுதியிருக்கிறேன். அதை வெளியிட்டு விமர்சிக்க வேண்டுகிறேன்.

V. செல்வநாரண ராமாநுஜதாசர், சென்னை-85.

74. '89 ஜனவரி திருமாலில் ஸ்ரீ சுராஜ் திருமழிசையாழ்வாரைச் சண்டைக்காரர் என்றும், தொண்டரடிப்பொடியாழ்வாரின் ஸ்ரீஸூக்திகளை வெறிச்சொற்கள் என்றும் எழுதியிருந்தார். அதைக்கண்டித்து அவருக்கு அடியேன் கடிதம் ஒன்று எழுதியிருந்தேன். 'திருமால்' ஆசிரியர் ஸ்வாமியிடமும் இதுபற்றித் தெரிவித்தேன். அவர் இது தவறான போக்கு என்றே கருதுவதாகவும், அதனாலேயே சுராஜ் அவர்களின் ராஜிநாமாவை ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவித்தார். அப்பொழுதே சுராஜ் ஸ்ரீ உ. வே. கே. ஏ. தேவராஜனுக்கு எழுதிய கடிதத்தையும் காட்டினார். அதில் சுராஜ் தான் எந்த ஆசார்யரிடமும் கீழ்ப்பணிந்ததில்லை எனவும், அதனால் தான் மூளைச்சலவை செய்யப்படவில்லை என்றும் எழுதியிருந்தார். மேலும் 5-2-89 அன்று அடியேன் குடிசைக்கருகில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீப்ரஸன்னவேங்கடேசப்பெருமாள் திருக்கோயிலில் 'திருமாலடியார் குழாம்' கருத்தரங்கு நடந்தது. அதில் சுராஜுடன்வந்த நாவல்பாக்கம் வரதாசாரியர் என்னும் வடகலை ஸ்வாமி "திருமழிசையாழ்வார் சிவனைத் தாழ்த்திச்சொன்ன வாக்குகளையெல்லாம் தள்ளிவிட வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். "அந்தச் சொற்கள் ஆழ்வாரின் நாக்கிலிருந்து வந்ததேயன்றி நெஞ்சிலிருந்து அல்ல" என்றும், இதை ஸ்ரீ தேசிகரே பம்பாயில் அவருக்குக் கனவில் அருளினதாகவும் கூறினார். இரண்டுநாள் கழித்து அடியேன் எழுதின கடிதத்துக்கு பதிலாக சுராஜிடமிருந்து ஒரு நீண்ட கடிதம் வந்தது. அதிலும் பகவத் பாகவத அபசாரமே. ஆழ்வார்களின் ஸ்ரீ ஸூக்திகளுக்கு அபார்த்தம் சொல்லுவது, தங்களிடம் அபசாரப்படுவது

http://acharya.org

ஆகியவற்றையே செய்திருக்கிறார். அடியேன் தங்கள் திருவடிகளைத் தியானித்துக்கொண்டு தங்கள் க்ரந்தங்களிலிருந்தும் ஸுதர்சனர் பதில்களிலிருந்தும் அவருக்கு மறுமொழி எழுத முற்பட்டேன். ஆனால் அவரது கடிதம் பக்கம் 10ல் "அறிவுக்குப் பொருந்தாதவற்றை எந்த ஆச்சான் பிள்ளை சொன்னாலும் என்னால் ஏற்க முடியாது" என்று அவர் எழுதியிருப்பதைக்கண்டு பதில் எழுதவில்லை. இத்துடன் அடியேன் அனுப்பியுள்ள சுராஜின் கடிதத்தின் தரத்தை வைணவவுலகுக்கு எடுத்துக்காட்டி, ஸ்ரீ வைஷ்ணவர்கள் அவரையும் அவரது நண்பரையும் இனங்கண்டுகொள்ளச் செய்யவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

இவ்விரண்டு கேள்விகளுக்கும் பொதுவான பதில்

முதலில் ஸ்ரீ.கே.ஏ. தேவராஜன் எழுதிய கடிதத்தை வெளியிட்டு, எனது விமர்சனங்களை அடுத்தபடி அச்சிடுகிறேன்.

ஸ்ரீ K, A. தேவராஜனின் கடிதம்

1—1—89 அன்று மயிலை ஆதிகேசவப்பெருமாள் ஸ்ரீ பேயாழ்வார் தேவஸ்தான மண்டபத்தில் நடந்த திருப்பாவை சதஸ்ஸில் ஸ்ரீமான் சுராஜ் அவர்கள் தொண்டரடிப்பொடியாழ்வார்பற்றிப் பேசுகையில் திருமாலைப் பாசுரங்களை உதாஹரித்து அபத்தமாக ஸ்ரீ வைஷ்ணவ பூர்வாசார்யர்களை மிகவும் நிந்தித்து, அவர்களின் வியாக்யானங்களை நெருப்பில் இட்டுப் பொசுக்க வேண்டும் என்றும், பூருவாசார்யர்கள் வெறும் உரையாசிரியர்களே தவிர அவதார புருஷர்கள் அல்லர் என்றும், சைவ நிந்தனையும் சிவ த்வேஷமும் உருவாக்கிய பூருவாசார்யர்களால் வைணவம் தழைக்கவில்லை என்றும், சமரச வாதம் நம்மாழ்வார், பேயாழ்வார் கருத்து என்றும், சைவ வைணவ சமரசம் ஏற்பட்டாலொழிய 21ம் நூற்றுண்டில் வைணவம் அழிந்துவிடும் என்றும், "ஆழ்வார்களிலேயே முரண்பாடுகள் அவர்கள் பாசுரங்களில் தெரிகின்றன. அவர்களில் அந்தணராகப் பிறந்த தொண்டரடிப்பொடிகள் ஸ்ரீ வைஷ்ணவ ப்ராம்மணர்களைக் கசையடி கொடுத்துள்ளார்" என்றும் ஏதேதோ கூறினர், பல வடகலையாரும், பாகவதர்களும் இந்த அபத்தமான பேச்சைக் கேட்டனர். ஸ்ரீகுமாரவாடி ஸ்வாமி ஸ்ரீசுராஜ் அவர்களுக்கு அதிக இடம் கொடுத்ததே இதற்குக் காரணம், ஸ்ரீ உ. வே. குமாரவாடி ஸ்வாமி கடைசியில் பேசும்பொழுது ஸ்ரீசுராஜ் அவர்களை மிகவும் கண்டித்தார். அடியேனும் கண்டித்துப் பேசினேன். அதன் விளைவாக ஸ்ரீசுராஜ் திருமால் பத்திரிகையின் துணை ஆசிரியர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

http://acharya.org

ஸுதர்சனரின் விமர்சனம்

ஆழ்வார்களையும் ஆசாரியர்களையும், அவர்களுடைய வ்யாக்யானங்களையும்பற்றி "ஆழ்வார்கள்வாழி அருளிச் செயல்வாழி, தாழ்வாதுமில்குரவர் தாம்வாழி, ஏழ்பாரு முய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம்வாழி" என்று மாமுனிகள் கொண்டாடி மங்களாசாஸனம் செய்திருக்கிறார். "ஆழ்வார்களையும் அருளிச்செயல்களையும் தாழ்வா நினைப் பவர்கள்தாம்நரகில் வீழ்வார்கள் என்று நினைத்து நெஞ்சே எப்பொழுதும் நீ அவர்பால் சென்றணுகக்கூசித்திரி' என்று அவரே ஆழ்வார்களையும் அருளிச்செயல்களையும் தாழ்வாக நினைப்பவர்களை நிந்தித்துமிருக்கிறார். அந்த மாமுனிகளின் திருவுள்ளத்தைப் பின்பற்றி நடந்தவர்களில் தலைசிறந்தவரான ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு வேங்கடா சார்ய ஸ்வாமியின் சீடரான ஸ்ரீ உ. வே. குமாரவாடி ராமா நுஜாசார்ய ஸ்வாமி ஆழ்வார்களையும் அருளிச்செயல்களையும், வியாக்கியானங்களையும் வெளிப்படையாகவே தாக்கும் ஒருவ ருக்கு, தாம் நடத்தும் 'திருமால்' பத்திரிகையில் இவ்வளவு நாளாகக் கட்டுரைகள் எழுதுவதற்கு இடமளித்து வந்ததே தவறு. டிஸம்பர் மாதம் முதல் ஆழ்வார்களையும் ஆசாரியர்களை யும் நேரே கண்டித்து அவர் எழுதிய கட்டுரைகளை வெளியிட் டது மிகப்பெரிய தவறு. இதை ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகா தசியின்போது நடைபெற்ற மகாநாடுகளில் கலந்துகொண்ட பாகவதோத்தமர்கள் அனைவரும் ஒருமுகமாகச் சொன்னார்கள். 'திருமால்' ஆசிரியரிடம் நேரில் தெரிவிப்பதாகவும் கூறினார் கள். குரோம்பேட்டையில் வாழும் ஸ்ரீ உ. வே. கே. ஏ. பார்த்த சாரதி அய்யங்கார் ஸ்வாமி 'திருமால்' ஆசிரியருக்கு சுராஜின் எழுத்துக்களைக் கண்டித்துப் பல கடிதங்கள் எழுதி அவற்றின் நகல்களையும் அடியேனுக்கு அனுப்பியுள்ளார். மற்றும் பலரும் கண்டனக்கடிதம் எழுதினர். இப்படியிருக்கும்போது சுராஜின் தூஷணக் கட்டுரையை அடியேன் மறுத்து எழுதிய ஸுதர்சனர் பதிலை, திருமால் ஆசிரியர் பாராட்டி யிருக்கவேண்டும். அல்லது சுராஜுக்கு அவர் எழுத்து சுதந்திரம் அளித்துவிட்டது உண்மையானால் எனது கட்டு ரையை மறுத்து, திருமாலில் சுராஜை ஒரு கட்டுரை எழுதவா

http://acharya.org

வது செய்திருக்க வேண்டும். இப்படியெல்லாம் செய்யாமல் 1989 பிப்ரவரி திருமாலில் "புரட்சி வைணவம் 31" என்னும் தலைப்பில் அடியேனை "கடைந்தெடுத்த பிற்போக்காளர், பத்தாம்பசலி, பழமையின் பிடியிலிருந்து மீளாதவர்" என்று வசவுமாலை பொழியும் சுராஜின் கட்டுரையை வெளியிடுவித்து, "சுராஜின் கட்டுரைகள் இனியும் வரும்" என்று அறிவித்தது எந்தவிதத்திலும் நியாயமானதாக எமக்குத் தோன்றுமையாலே, நாம் 'திருமால்' ஆசிரியருக்கு 18—2—39 அன்று ஓர் கடிதம் எழுதி அதில் ஸ்ரீ கே. ஏ. தேவராஜனின் கடிதத்தின் சுருக்கத்தையும் கொடுத்து, "இப்படி ஆழ்வார்கள் ஆசார்யர்கள் விஷயத்தில் அஸஹ்யாபசாரம் செய்யும் சுராஜின் தொடர்பு அவர் துணை ஆசிரியர் பதவியை ராஜிநாமா செய்தபின்பும் திருமாலுக்குத் தேவைதானு" என்று கேட்டிருந்தோம். அதற்கு "சர்ச்சைக்கிடமில்லாத திருமால் நெறிக்கு உதவுபடியான யாருடைய எந்தக் கட்டுரைக்கும் திருமால் இதழில் இடமுண்டு, அந்த வகையில் சுராஜ் கட்டுரைக்கும் இடமுண்டு. 'திருமால்' ஒரு குடும்பப்பத்திரிகையன்று. இதில் தேவரீர் துணுக்குறுவதற்கு ஏதுமில்லை" என்று அந்த ஸ்வாமி பதில் எழுதினுர். "1—1—89 அன்று கேசவப்பெருமாள் மண்டபத்தில் சுராஜ் பேசினபோது பூர்வாசார்யர்களை மிகவும் நிந்தித்தோ, அவர்களின் வ்யாக்யானங்களை நெருப்பிலிட்டுப் பொசுக்கவேண்டுமென்றோ அவர் கூறவில்லை; சில கருத்துக்கள் பூர்வாசார்யர்களுடையதேயானுலும் அக்காலத்துக்கு மட்டுமே ஏற்றவை என்று விட்டுவிடவேண்டும் என்றுகூறி, இதற்குமாருன போக்குகளைச் சற்றுக் கடுமையாக விவரித்தார்" என்றும் எழுதியிருந்தார். சற்றுக்கடுமையாக என்பது என்ன? என்பதை இவர் சரியாக விவரிக்கவில்லை. சுராஜ் பேசியதை எவரும் ஒலிப்பதிவு செய்யவில்லை என்னும் தைரியத்தில் எப்படி வேண்டுமானுலும் சொல்லலாம்; திருமாலில் அச்சில் வந்திருப்பது வைணவவுலகமெங்கும் பரவியுள்ளது. '88 டிஸம்பர் திருமாலில் "சில ஆழ்வார்களுக்கு 'சமயப்பொறை இல்லை" என்று எழுதினுர். 'தாழ்வாதுமில்குரவர்' என்று மாமுனிகளால் பாராட்டப்பட்ட ஆசார்யர்களது வியாக்கியானங்களைத் தாக்கிக் கட்டுரையே எழுதினுர். '89 ஜனவரி திருமாலில் "திருமழிசையாழ்வார்

http://acharya.org

சண்டைக்காரராகத்தான் தெரிகிறார்; நாட்டுக்கு அத்தகைய மனப்பான்மை, தொட்டால் சுருங்கிபோல வைணவத்தைத் தவிர மற்றவற்றைக் காண்பது பாபம், நெருங்கினால் தீட்டு என்று எண்ணுவது சரி என்று அடியேனுக்குப்படவில்லை" என்று திருமழிசையாழ்வாரை ஏசினார். " 'அறுப்பதே கருமம் கண்டாய்' 'தலையறுப்புண்டும் சாகேன்' என்று தொண்டரடிப்பொடியாழ்வார் கூறியது வெறிநிறைந்த சொற்கள்" என்று நிந்தித்தார். இவையெல்லாம் "ஆழ்வார்களைத் தாழ்வா நினைப்பவர்" என்று மாமுனிகள் அருளியதற்கு நல்ல உதாரணங்களாகவன்றோ விளங்குகின்றன! இத்தகையவர்களைச் சென்றணுகக் கூசித் திரியவேண்டும் என்று மாமுனிகள் கூறியிருக்கும்போது 'திருமால்' ஆசிரியர் இவருடைய கட்டுரைக்கு இன்னமும் இடம் கொடுப்பது மாமுனிகள் நியமனத்துக்கு முரண் அல்லவா என்பதை உண்மையான திருமாலடியார்கள் 'திருமால்' ஆசிரியருக்கு எடுத்துச் சொல்லவேண்டும். மேலும், சுராஜின் 21 பக்கம்கொண்ட 6—2—89 தேதியிட்ட கடிதம் ஒன்று செல்வநாரணராமாநுஜதாஸருக்கு அனுப்பப்பெற்று, அவரால் நமக்கு விமர்சனத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது. அதில் சுராஜ் "நரசிம்மன் குடல் மாலைபோட்டு இரத்தம் குடிக்கும் கோரத்தை என்னால் எண்ணிப்பார்க்கவே முடியவில்லை. நரசிம்மர், பரசுராமர் இவர்கள் எல்லாம் ஸாத்விகமூர்த்திகளா?" என்று ஆராய்ச்சியில்லாமல் எழுதி பகவதபசாரப்பட்டிருக்கிறார். திருமழிசையாழ்வார் சிவனை 'ஊசியில் நூல் கோர்ப்பாயா' என்று கூறிய வரலாற்றைக்காட்டி, இப்படியெல்லாம் ஒரு தேவதையைப் பரிபவப் படுத்தலாமா? என்று கேள்விக்கணை தொடுக்கிறார். 'மறந்தும் புறம்தொழமாட்டேன்' என்று கூறுவது குறுகிய மனப்பான்மை என்று கூறுகிறார். "திருமழிசையாழ்வார் தம் பாசுரங்களில் சிவபெருமானை வீண் சண்டைக்கு இழுக்கிறார்" என்று எழுதி அவரிடம் அபசாரப்படுகிறார். "ஆலகாலத்தை உண்ணச் சிவன் தானே வரவேண்டியிருந்தது" என்று சிவபரத்வவாதம் செய்கிறார். "அறிவுக்குப் பொருந்தாததை எந்த ஆச்சான்பிள்ளை சொன்னாலும் என்னால் ஏற்க முடியாது. வியாக்யானத்தில் சண்டைக்கு வித்திட்டிருக்கிறார்,

http://acharya.org

குழப்புகிறார்" என்று வ்யாக்யாதாக்களிடம் அபசாரப்படு கிறார். "ஒன்றே தெய்வம்; பெயர்கள்தான் வேறு; உயர்வு தாழ்வு கற்பித்து சைவரும் வைணவரும் சண்டையிடுவதால் பயனில்லை" என்று சமரசவாதமும் செய்கிறார். "ஆசார்யர் களுடைய வியாக்கியானங்களால் வைணவ் சமூகம் மூளைச் சலவை செய்யப்பட்டு விட்டது" என்று குற்றம் சாட்டி, நாமாகவே ஒரு முறைக்கு இருமுறை படித்துப் பார்த்து, சிந்தித்துப் பாசுரங்களுக்குப் பொருள் கொள்ளவேண்டும் என்று வைணவர்களுக்கு உபதேசிக்கிறார். அப்படி இவர் தாமாகவே சிந்தித்துப் பார்த்து "உளன் கண்டாய் நன் னெஞ்சே" [நான் திரு 86] என்னும் பாட்டில், "என்னைப் பார்க்கு ஈசன் இமை" என்னும் அடிக்கு இவர் கடிதத்தின் 13-ம் பக்கத்தில் கொண்டிருக்கும் பொருளை வைணவவுலகம் அவசியம் அறியவேண்டும். "சிவபெருமானை வீண் சண்டைக்கு இழுக்கிறார். 'என்னைப்பார்க்கு ஈசன் இமை'. என்ன பொருள் தெரியுமல்லவா? செல்வி ஜெயலலிதா தன்னிட மிருந்து பிரிந்து சென்றவர்களைக் குறிப்பிட்ட சொல்தான் அது" என்று பொருள் விளக்கம் செய்வதன் மூலம் தான் செல்வி ஜெயலலிதாவின் பொன்மொழிகளால் மூளைச்சலவை செய்யப்பட்டவர் என்று காட்டிக் கொள்கிறார். இதுபற்றி நாட்டின் அரசியல் நிகழ்ச்சிகளை அறியாத பலருக்குத் தெரி யாதாகையாலே, இவரது உரையை விளக்கவேண்டிய தலைவிதி நமக்கு ஏற்பட்டு விட்டது! தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற நெடுஞ்செழியன் முதலான அ.தி.மு.க. அரசியல் தலைவர்களை அ.தி.மு.க. தலைவி செல்வி ஜெயலலிதா "உதிர்ந்த ரோமங்கள்" என்று வர்ணித்தாள். புரட்சித் தலைவியின் அப்பொன்மொழி யால் மூளைச்சலவை செய்யப்பட்டவராய், புரட்சி வைணவத் தலைவராக மணப்பால் குடிப்பவரான நமது சுராஜ் செல்வி ஜெயலலிதாவின் இந்தப் பொன்மொழியைக் கொண்டு "என் னைப்பார்க்கு ஈசன் இமை" என்னும் பாசுரத்துக்கு 'என்னைப் போன்றவர்களுக்கு சிவன் ஓர் உதிர்ந்த ரோமம் (மயிர்)" என்று பொருள் காண்கிறார்! ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்கிற ரீதியிலே, "முன்னோர் மொழிந்த" என்னும் மாமுனிகளின் பாசுரத்துக்கு முரணாகத் தன் நெஞ்சில் தோற்

http://acharya.org

றினபடியெல்லாம் இவர் திவ்யப்ரபந்தங்களுக்கு உரை செய்யப்புகுந்தால் அவ்வுரை எப்படி அமையும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இப்பாசுரத்தில் 'ஈசன்' என்னும் பதம் ஸர்வேச்வரனுன நாராயணனைக் குறிக்குமே தவிர, சிவனைக் குறிக்கமாட்டாது. "இமை" என்னும் பதம் "அறிவாயாக" என்னும் பொருள் உடையது. 'இமை' என்பதற்கு 'மயிர்' என்னும் பொருள் எந்த அகராதியிலுமில்லை. "தமியேற்கு, என்னொப்பார்க்கு, தன்னொப்பான் ஈசன் தாஞயுளன் காண்; நன்னெஞ்சே இமை" என்னும் பகுதிக்கு "ஒரு கைம் முதலுமற்ற எனக்கும், என்னைப்போலே கைம்முதலற்ற மற்றவர்களுக்கும், தனக்குத்தானே ஒத்திருப்பவனுன அந்த ஸர்வேச்வரன் தானே ரக்ஷகனுய் இருக்கிருன் காண். நல்ல மனமே! இதனை அறி" என்பது பூர்வாசார்யர்கள் காட்டியிருக்கும் அற்புதமான உரை. திருவாய்மொழி முதலானவற்றைக் காத்த குணவாளர்களாக மாமுனிகளால் பாராட்டப்பெற்ற இவ்வுரையாசிரியர்களைப் பலவாறு பழிப்பவராய், "இனி பேச்சிலும் எழுத்திலும் புரட்சிசெய்வதைவிட்டுச் செயலில் சமயப்புரட்சி, வைணவப் புரட்சி செய்வதுதான் நாட்டுக்குத் தேவை" [புரட்சி வைணவம் 31] என்று திருமாலில் கொக்கரிக்கும் இவர் செல்வி ஜெயலலிதா போன்ற அரசியல் தலைவர்களாலும், சைவாத்வைத சமரசவாதிகளாலும் சலவை செய்யப்பட்ட தம் மூளையைக்கொண்டு திவ்யப்ரபந்தங்களுக்குப் புதுவுரை செய்து புகழ்பெற விரும்புகிருர் என்பதும், பல கனவுக் காட்சிகளைப் புனைந்துரைத்து, "பாஷ்யகாரர் திவ்யப்ரபந்தங்களைக்கொண்டு ஸூத்ரவாக்யங்களுக்குப் பொருள் காண்பதுபோலே நமது புரட்சி வைணவத்தலைவர் அரசியல் தலைவர்களின் பொன்மொழிகளைக்கொண்டு அந்த திவ்யப்ரபந்தங்களுக்கே பொருள் காண்கிருர்" என்று இவரது புகழ் பாடும் காவல்பாக்கம் வரதாசார்யர் போன்ற சிலரைத் தமக்குத் துணையாகக் கொண்டு புரட்சி வைணவத்தலைவர் என்று பெயர்பெற விரும்புகிருர் என்பதும் இவற்றிலிருந்து தெளிவாக விளங்குகிறது. இந்த அவலநிலை வைணவத்துக்குத் தேவையா என்பதை உண்மையான திருமாலடியார்கள்

http://acharya.org

முடிவு செய்யவேண்டும்; இப்படித் தன் நெஞ்சில் தோற்றி னதே சொல்லி, பூர்வாசார்யர்களையும் ஆழ்வார்களையும் நிந்திக்கும் இவருடைய தொடர்பு திருமாலுக்கும், திருமாலடி யார் குழாத்துக்கும் இனியும் தேவைதானா? என்பதை உண்மையான திருமாலடியார்கள் திருமால் ஆசிரியருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

திருமால் அடியார் குழாம் கூட்டத்தில் பொய்க் கனவு கூறிக் கொட்டம் அடித்தவராகக் காட்டப்பட்ட காவல்பாக்கம் வரதாசார்யர் ஏற்கனவே பல வருடங்களுக்கு முன் வைண வத்துக்கு முரணாகப் பேசிய செய்தி விகடனில் வெளிவந்தது. அப்போதே இவர் நம்முடைய கண்டனத்தைப் பெற்றவர். (இவர் மதுராந்தகம் ஸ்வாமி ஜாமாதாவைக் காட்டிலும் வேறுபட்டவர் என்பது அறியத்தக்கது) இத்தகைய பொய்க் கனவுக் கதைகளைக்கூறி ஆழ்வார்களுடைய பாசுரங்களைத் தள்ளுவதற்கு எவர்க்கும் அதிகாரம் கிடையாது என்பதையும் திருமாலடியார்கள் அனைவர்க்கும் எடுத்துச் சொல்லவேண்டும்.

நம் தர்சனத்துக்கு "எம்பெருமானார் தரிசனம்" என்று நம்பெருமாளே பேரிட்டு நாட்டி வைத்ததாக மாமுனிகள் அருளுகின்றார். "ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே பரம்பொருள். சிவன் முதலான தெய்வங்களெல்லாம் அவன் பெருமைக் கடலில் ஒரு துளியேயாவர். 'கொண்டானையல்லால் அறியாக் குலமகள்' போன்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் அவனையல்லது வேறெந்த தெய்வத்தையும் தொழலாகாது" என்று எம்பெருமா னாரும், அவருடைய பரமாசார்யரான ஆளவந்தாரும், அவருடைய புநரவதாரபூதரான மணவாள மாமுனி களும் தங்கள் க்ரந்தங்களில் நிலைநாட்டியிருக்கிறார்கள். வேதாந்ததேசிகரும் தம் நூல்களில் இவ்விஷயத்தை ஐயந்திரி பறப் பல இடங்களில் நிலைநாட்டி யிருக்கிறார். இவ்விஷயத்தை மாற்றப்பார்க்கும் சுராஜ், காவல்பாக்கம் வரதாசார்யர்போன்ற வர்களை, "நீ அவர்பால் சென்றணுகக் கூசித்திரி" என்னும் மாமுனிகள் வாக்குக்கு இலக்கானவர்கள் என்று உண்மை யான திருமாலடியார்கள் இனம் கண்டுகொள்ள வேண்டும் என்னும் பிரார்த்தனையுடன் இந்த பதிலை நிறைவுபடுத்திக் கொள்கிறேன்.

http://acharya.org

V ஸ்ரீநிவாஸன். ஸ்ரீரங்கம். ஸ்ரீமத்ரங்கம். N. ராமஸ்வாமி அய்யங்கார். மதுரை முதலான பலர்.

75. 'திருமால்' ஏப்ரல் இதழில் பக்கம் 18ல் கீழ்க்கண்ட வரிகள் உள்ளன. "வண்டு, மயில், கொண்டல், குயில், சோலை, இவற்றுக்கெல்லாம் 'சுவாபதேசம்' ஏதாவது கூறி பயமுறுத்தப்பட்டிருக்கிறதோ என்று பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்யானத்தை—அதுவும்—'புத்தூர்' பதிப்பையே பார்த்தேன். இல்லை. பரம ரஸிகரான பிள்ளையும் இயற்கை யழகிலேயே ஈடுபட்டிருக்கிறார்! கவிதை பிழைத்துக்கொண்டது! நானும் ஒருவாறு தப்பித்தேன்" என்கிறார் சுராஜ். இத்தகைய வரிகளுக்கு ஸ்வாமிதான் பதிலுரைக்க வேண்டும். மேலும் 'திருமால்' ஆசிரியரும் பக்கம் 26ல் 'ஒரு விளக்கம்' என்று தலைப்பிட்டு "திருமால் இதழ் புனிதமானது. சம்பிரதாய நிந்தைக் கந்தையாகவோ, அன்றி சண்டைச் சுவடியாகவோ அது ஒருநாளும் மாறாது. 'ருஷ்டி' விமர்சனங்களையோ அதற்கு எதிரான 'கோமேனி'பாணி, 'களையெடுப்பு'த் தீர்ப்பினையோ திருமால் அடியார்கள் அறவே விரும்பவில்லை. 'பயனன்றாகிலும், பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப்பணி' கொள்வோம். இது குறித்து, மனக்குற்ற மாந்தர் பழிக்கில் புகழ் என ஏற்போம். 'ஊரார் இகழிலும் ஊராதொழியேன்' என்று தொடர்வோம்—ஆசிரியர்" என்றும், அட்டை இரண்டாம் பக்கத்தில், " 'திருமால்' இதழ் ஒரு குறிப்பிட்ட, குறுகிய சம்பிரதாய அல்லது குடும்பவெளியீடு அல்ல. பரந்து விரிந்த திருமால் நெறியில் நின்று, சமுதாயத்தில் வையம் தழுவிய ஆன்மிக உணர்வினை எழுப்பிடும் அரியதோர் திங்கள் ஏடு திருமால் என்பதனை, ஆதிமுதலே உணர்த்தி வருகிறோம்" என்றும் எழுதியிருக்கிறார். இவற்றையும் விமர்சித்து உண்மையை உலகுக்கு உணர்த்த வேண்டுகிறோம்.

'திருமால்' பத்திரிகை முதன் முதலில் வெளிவந்தவுடன் நாமே முழு மனத்துடன் வரவேற்று வைணவ உலகுக்கு அறி

http://acharya.org

முகப்படுத்தினேம். ஆயினும், தொடக்கம்முதல் ஸுதர்சனத்தைக்குறித்து "குடும்பப்பத்திரிகை" "ஒருவரே எழுதும் பத்திரிகை" முதலான மறைமுகமான நிந்தைகளை எழுதி ஆசிரியர் தம் காழ்ப்புணர்ச்சியைக் காட்டிவந்தார். நாம் அதைப் பொருட்படுத்தவில்லை. திருமாலில் இவர் செய்த தவறை ஒருமுறை நாம் சுட்டிக்காட்டியபோதும், அதை நன்றியுடன் ஏற்றுத் திருத்தம் வெளியிடவும் இல்லை. இன்றுவரை எழுதியதை நிலைநாட்டவும் இல்லை. திருமாலோடும் திருமாலடியார் குழாங்களிலும் தொடர்புகொண்ட 'சுராஜ்' அவர்கள் ஆங்காங்கு வைணவ விரோதவாதங்களையும், ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும் நிந்திக்கும் உரைகளையும், வைணவர்களிடையே சாதிவெறியைத் தூண்டிவிடும் பேச்சுக்களையும் நிகழ்த்தி வருகிறார் என்று கேள்விப்பட்டோம். பாண்டிச்சேரி மகாநாடுகளிலும் இருமுறை நேரிலும் கண்டு அவரைத் திருத்த முயன்று தோல்வியுற்றோம். "இத்தகைய வாதங்களுக்கு இடமளிக்க வேண்டாம்" என்று 'திருமால்' ஆசிரியரிடமும் கேட்டுக் கொண்டோம். முதலில் இசைந்த அவர் படிப்படியாக இவருடைய து₃ர்வாத₃ங்களுக்குத் திருமாலில் இடமளிக்கத் தொடங்கினார். வைணவர்களிடையே சாதிப்பிணக்குகளைத் தூண்டிவிடும் கட்டுரைகளையும், வைணவத்துக்கு ஒப்பற்ற தொண்டு புரிந்துவரும் ஸ்ரீ உ. வே. சதாபிஷேகம் ஸ்வாமி போன்ற மஹநீயர்களை மறைமுகமாகத்தாக்கும் கட்டுரைகளையும் எழுதி 'சுராஜ்' திருமாலை ஒரு வைணவ நிந்தைக் கந்தையாகவும், சண்டைச்சுவடியாகவும் ஆக்கிவந்தார். அதையும் பொறுத்திருந்தோம். இதனால் துணிவுபெற்ற 'சுராஜ்' அடியேனைப் புகழ்ந்து ஒரு கட்டுரை எழுதிவிட்டு, ஆழ்வார்களையும் ஸ்ரீ வைஷ்ணவ பூர்வாசார்யர்களையும் நிந்திக்கும் கட்டுரைகளையே திருமாலில் எழுதத்தொடங்கினார், அதனால் ஸுதர்சனம் கிளர்ந்தெழுந்து ஸுதர்சனர் பதிலிலும், பல மகாநாடுகளிலும் சுராஜின் து₃ர்வாத₃ங்களை மறுத்தொழித்து, உண்மையான திருமாலடியார்கள் அனைவரது பாராட்டையும் பெற்றதையும், அதனால் சுராஜின் துணை ஆசிரியர் பதவி பறிபோனதையும் வைணவ உலகம் நன்கு அறியும். இவ்வரும்பணியைப் பாராட்டி நூற்றுக்கணக்கான

http://acharya.org

வைணவப் பெருமக்கள் நேரிலும் கடிதம் மூலமாகவும் தமது நன்றியைத் தெரிவித்தனர். மதுரைப்பேராசிரியர் அரங்கராஜன் ஸ்வாமி வைணவத்தில் 'சமரச சன்மார்க்க'த்தை நுழைக்க முயன்ற சுராஜின் முயற்சி தகர்க்கப்பட்டதைப் பாராட்டி, "திருமால் ஸுதர்சனத்துக்குக் கடன்பட்டுவிட்டார்; உண்மை வென்றது" என்று நமக்கு எழுதினார். மற்றும் பலரும் இவ்வண்ணமே தெரிவித்தனர். இவ்வரும் பணிக்கு நன்றி தெரிவிக்க வேண்டிய திருமாலாசிரியர் "ஒருவிளக்கம்" என்று தலைப்பிட்டு ஸுதர்சனத்தைத் தாக்குகிறார். ஆழ்வார்களையும், ஆசார்யர்களையும் ஸ்ரீவைஷ்ணவ வித்வான்களையும் தாக்கும் நிந்தைக்கந்தையாகவும் சண்டைச்சுவடியாகவும் பல மாதங்களாகத் திருமால் மாறியிருக்கும்போது 'அப்படி ஒரு நாளும் மாறாது' என்று அதன் ஆசிரியர் எழுதுவது வியப்பை அளிக்கிறது. "சர்ச்சைக்கிடமில்லாத சுராஜின் கட்டுரைகளே வெளியிடப்படும்" என்று எழுதிவிட்டு, அதே இதழில் ஸுதர்சனத்தைத் தாக்கும் கட்டுரையை வெளியிட்டதும், ஏப்ரல் இதழில் ஸுதர்சனத்தைத் தாக்கும் நிந்தை மொழிகளை வெளியிடுவதும், வண்டு மயில், கொண்டல், முதலான அருளிச்செயல்களுக்கு ஆச்சரியமான ஸ்வாபதேசார்த்தங்களை ஆசார்ய ஹ்ருதயத்தில் அருளியிருக்கும் ஆசார்யாக்ரேஸரரான அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரைப் பரிஹஸிக்கும் வாக்கியங்களை சுராஜைக்கொண்டு எழுதச்செய்திருப்பதும் 'திருமாலை' ஒரு ஸ்ரீவைஷ்ணவ பூர்வாசார்ய நிந்தைக்கந்தையாகவே அதன் ஆசிரியர் நடத்த விரும்புகிறார் என்று தெளிவாக்குகிறது. 'ருஷ்டி' விமர்சனங்களை அறவே விரும்பவில்லை என்று எழுதியிருக்கும் அதே இதழிலேயே ஆசார்யஹ்ருதயகாரரைப் பரிஹஸித்திருப்பது வைஷ்ணவருஷ்டியான சுராஜின் ஆசார்ய நிந்தனைக்கட்டுரைகளைத் திருமால் தொடர்ந்து வெளியிடப்போகிறது என்று தெளிவாகக்காட்டுகிறது. இஸ்லாம் மதத்தை அவமதித்து எழுதிய ருஷ்டிக்கு மரண தண்டனை விதித்த கோமேனியை அப்ரஸக்தமாகப்பிடித்து இழுப்பதன் மூலம் இஸ்லாம் மதத்தில் சுராஜைப்போலே ஒருவர் வாலாட்டியிருந்தால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் என்பதை உணர்த்தியதற்கு

http://acharya.org

'திருமால்' ஆசிரியருக்கும் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் அதே சமயத்தில் நான்முகன் திருவந்தாதி வியாக்கியானத்தில் 'திருமழிசையாழ்வார் வைணவத்துக்குக் களையெடுக்கும் திருப்பணியைச் செய்திருக்கிறார்' என்று அருளிய பெரியவாச்சான் பிள்ளையையும், அத்திருப்பணியைச் செய்த திருமழிசையாழ்வாரையும், அவர் களை அடியொற்றி அத்திருப்பணியைச் செய்துவரும் நம்மையும் 'கோமேனி' என்று வர்ணித்திருப்பது நம்மிடம் அவருக்குள்ள காழ்ப்புணர்ச்சியையும், அவரும் பூர்வாசார்யர்களின் நிந்தனையில் சுராஜுக்குச் சளைத்தவரல்லர் என்பதையுமே காட்டுகின்றது.

களையெடுக்காவிட்டால் எந்தப் பயிரும் செழிக்காது. களையெடுப்பின் அவசியம் கருதியே ப்ரஹ்மஸூத்ரகாரர் ஸ்ரீபாஷ்யகாரர் முதலான வைதிக மத ஸ்தாபகர்களும், சங்கரர்போன்ற குத்ருஷ்டி மத ஸ்தாபகர்களும் தத்தம் நூல்களில் ஸ்வமத ஸ்தாபனத்தையும் பரபக்ஷப்ரதிக்ஷேபத்தையும் செய்திருக்கிறார்கள், அப்படியிருக்க திருமாலடியார்கள் அனைவருக்கும் தம்மையே பிரதிநிதியாக நினைத்துக்கொண்டு, "களையெடுப்பை அவர்கள் அறவே விரும்பவில்லை" என்று எழுதியிருப்பது உண்மைக்கு முரணானது. ஆழ்வார்களும் ஸ்ரீபாஷ்யகாரரும் செய்த காரியத்தை உண்மையான திருமாலடியார்கள் அனைவரும் விரும்புகிறார்கள் என்பதை நாற்பது வருஷங்களுக்கு மேலாக ஸு⁼தர்சனத்தை வெற்றிமுரசு கொட்டி நடத்திவரும் நாம் அறிவோம். 'திருமால்' சுராஜின் கட்டுரைகளை வெளியிட்டு ஓர் அவைஷ்ணவப் பத்திரிகையாக மாறிவருவதற்கு மறுப்புத் தெரிவித்திருப்பதாக நம்மிடம் நூற்றுக்கணக்கான அன்பர்கள் கூறி வருகிறார்கள். சிலர் கடிதமும் எழுதியுள்ளனர். திருமாலில் கட்டுரைகள் எழுதி வந்த திருவாலி சே. ஸ்ரீநிவாஸன் ஸ்வாமி 30–3–89 அன்று 'திருமால்' ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் 'திருமால்' பத்திரிகையில் வைஷ்ணவத்திற்கு முரண்பட்ட கருத்துக்களை "சுராஜ்" எழுதி வருவதற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து "முன்னோர் மொழிந்த" என்ற மாமுனிகளின் திருவாக்குக்கு இலக்கான சுராஜின் கருத்துக்கள் இனியும் திருமாலுக்குத் தேவைதானா? என்று கேட்டுத் தம் கடிதத்தை நிறைவுபடுத்தியிருக்கிறார். ஸ்ரீயான் கே. ஏ. தேவராஜன் 3–4–89ல் நமக்கு எழுதிய

http://acharya.org

கடிதத்தில் — குமாரவாடி ஸ்வாமி, தாம் சுராஜ் பற்றி எழுதி யதைக் கடுமையாகக் கண்டிப்பதாகவும், "வைணவர்கள் ஸ்ரீமான் சுராஜ் அவர்களின் ஸ்ரீபாததீர்த்தத்தை உட்கொண்டால் அவர்களுடைய ஆன்மா உய்வடையும்" என்று கூறிய தாகவும், திருமாலடியார் கூட்டங்களில், சுராஜ் பாதத்துவ நிர்ணயம் செய்பவர்களை மூடர்கள் என்று பழித்து வருவதாக வும் எழுதியிருக்கிறார். ஏப்ரல் திருமாலில் அதன் ஆசிரியர் விளக்கம் எழுதியிருப்பதைக்கண்டவுடன் ஞானபுத்திரரான செல்வநாரண ராமாநுஜதாஸர் திருமால் ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் "பயனன்றாகிலும்" என்று தொடங்கி விளக்கத்தில் அவர் எழுதியிருப்பதைக் குறிப்பிட்டு,

"திருத்திப் பணி கொள்வதற்குப் பயனும் வேண்டாம், பாங்காகவும் இருக்க வேண்டாம். ஆனால் அத்வேஷமும் ஆபிமுக்யமும் வேண்டும். இவை இரண்டும் திரு. சுராஜிடம் இருக்கிறதா என்பதைத் தங்கள் திருவடிகளுக்கே விட்டு விடுகிறேன். எம்பெருமானடியாராக வெளியில் காட்சியளித்துக் கொண்டு, கொடிய பாபங்களிலும் கொடிய பாபத்தைச் செய்து கொண்டு (ஸ்ரீகைசிக புராணம் 50-வது ஶ்லோகம் 18-வது பாபம்) த்வேஷத்துடன் நமது ஆழ்வார் ஆசார்யர்களை அவமதித்துக்கொண்டு; ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளுக்கு அவப்பொருள் உரைத்துக்கொண்டு, ஆசார்யர் ஸ்ரீஸூக்திகளைக் காற்கடைக் கொள்ள வேணும் என்று சொல்லிக்கொண்டு திரிபவர் திருந்துவாரா? அப்படியே திருந்துவதாயிருந்தால், தேவரீர் அவரைத் திருத்திப்பணி கொள்வதாயிருந்தால், அவர் திருந்திய பிறகு திருமாலில் கட்டுரை ஸமர்ப்பிக்கவோ, அல்லது திருமாலடியார் குழாங்களில் கருத்தரங்குகளில் பேசவோ செய்யலாமே? அப்படி திருந்தி தான் இதுவரை நினைத்தது, செய்தது, சொன்னது எல்லாம் தவறே என்று ஒப்புக் கொள்ளும் நேர்மை அவருக்கு இருப்பதாக அடியேனுக்குப் படவில்லை. ஆயினும் தங்களைப் போன்ற பாகவதோத்தமர்களின் அனுக்ரஹத்தால் அவர் திருந்தினாலும்

http://acharya.org

திருந்தலாம். அப்படி அவர் திருந்திய பிறகு தான் திருமாலிலோ அல்லது திருமாலடியார் குழாங்களிலோ அவருக்கு தேவரீர் வாய்ப்பளிப்பீர்கள் என்று இதுவரை நடந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது தோன்றவில்லை. ஆதலால், ஸ்ரீ ஸ்வாமி அடியேனுக்கு இனிமேல் "திருமால்" அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்; அடியேன் ஆயுள் சந்தாதாரராக இருந்தாலும் அதை ரத்து செய்து விடுமாறு வேண்டிக்கொள்கிறேன். ஏனென்றால் இப்போது தான் அடியேன் தங்களைப் போன்ற ஸ்ரீ வைஷ்ணவர்களின் அன்புக்குப் பாத்ரமாகி, சத்தை பெறும் நிலை வந்துள்ளது, ப்ரதிகூல ஸஹவாஸம் (திரு. சுராஜ் போன்றவர்களின் கட்டுரை வெளிவரும் திருமால் போன்ற பத்திரிகைகளின் ஸஹவாஸம் - ஒரு கட்டுரையேயானாலும் ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் போல) பாகவத அபிமானத்தைக் கெடுத்து விடும். திருமாலடியார் குழாம் கூட்டங்களுக்கும் நோட்டீஸ் (அழைப்பிதழ்) இனிமேல் அனுப்ப வேண்டாம்." என்று தம் கடிதத்தை நிறைவு படுத்தியிருக்கிறார் (செல்வநாரணர்). இக்கடிதத்தைக் கண்ட பின்பும் திருமால் ஆசிரியர் தம் போக்கை மாற்றிக் கொள்ளவில்லையெனில். உண்மையான திருமாலடியார்கள் 'தொடக்கம் முதலே திருமண்காப்பு இல்லாமல் வெளிவரும் 'திருமால்' பத்திரிகை ஓர் வைஷ்ணவ விரோதப் பத்திரிகை என்று புரிந்து கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். திருமால் பத்திரிகையில் வைஷ்ணவ விரோதக் கட்டுரைகள் வெளிவந்தால் அவற்றுக்கு நம்மால் அவ்வப்போது மறுப்பு எழுதப்படும். திருமாலடியார் குழாங்களிலும் சுராஜ், நாவல்பாக்கம் வரதாசாரியர் போன்றவர்கள் பேசும் வைணவ விரோதப் பேச்சுக்களை நமது அன்பர்கள் தெரிவித்தால், அவை ஸுதர்சனத்தில் விமர்சிக்கப்பட்டு உண்மை நிலைகாட்டப்படும்.

http://acharya.org

K.P. ராஜகோபாலன் சென்னை-24.

76. 11-4-89 'ஹிந்து' பத்திரிகை பக்கம் 23ல் ஸ்ரீபாஷ்யத்தின் ஐந்தாவது அதிகரணத்திலிருந்து முதல் அத்தியாயம் முடிவுவரையில் உள்ள பகுதியை S. ஜகந்நாராயணன் என்னும் ஓய்வுபெற்ற மத்திய அரசு அதிகாரி தமிழில் மொழி பெயர்த்திருப்பதை அக்னிஹோத்ரம் ராமாநுஜதாதாசாரியார் (அஹோ) விமர்சனம் செய்யும்போது "உபனிஷத்துக்களை ஆழ்ந்து ஆராய்ந்து ப்ரஹ்ம ஸூத்ரகாரர் ப்ரஹ்மமே உலகத்திற்குக் காரணம் என்று நிர்ணயித்தார். ராமாநுஜர் இந்த நிர்ணயத்தை ஏற்றுக்கொண்டபோதிலும் IMPERSONAL ஆக (எந்தப்பெயருமற்று) இருக்கும் இந்த ப்ரஹ்மத்தை, புராணங்களில் காணப்படும் PERSONAL (பெயருடைய) கடவுளான நாராயணனோடு ஒன்றுக்க எண்ணினார்" என்று பொருள் படும் வாக்கியங்களை எழுதியிருக்கிறார். இந்த அபத்த விமர்சனத்தை விமர்சிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

விமர்சனம் செய்யப்பட்ட புத்தகத்தை எழுதியிருப்பவர் ஸ்ரீபாஷ்யஜ்ஞானமும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயஜ்ஞானமும் நன்கு அமையப்பெறாதவர். சில வருஷங்களுக்கு முன் இவர் இந்த மொழிபெயர்ப்பை நம்மிடம் கொண்டு வந்து காட்டி அதை அச்சிட்டுத்தரவேண்டினார். அதில் ஒவ்வொரு பக்கத்திலும் ஏராளமான சொற்பொருட் பிழைகள் காணப்பட்டன. "உம்முடைய தகுதிக்கு அப்பாற்பட்ட இவ்விஷயத்தில் நீர் தலையிட்டதே தவறு; இதை அச்சிட இயலாது" என்று கூறி அவரை அனுப்பினோம். விமர்சனம் செய்திருக்கும் அஹோவும் இதில் ஏராளமான பிழைகள் இருப்பதைக் குறிப்பிட்டிருப்பது காணத்தக்கது, இந்த ஜகந்நாராயணன் திருவாய்மொழியை விளக்கி முன் எழுதிய தொருநூல் அபத்தக்களஞ்சியமாயிருப்பதைப் பல வருடங்களுக்கு முன் ஸுதர்சனத்தில் காட்டியிருக்கிறோம். விமர்சனம் செய்திருக்கும் அஹோவுக்கும் ஸ்ரீபாஷ்யத்தில் ஆழ்ந்த பரிசயம் கிடையாது என்பது

http://acharya.org

முன்னமே நம்மால் பலமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. வேதத்தின் பூர்வபாகங்களிலும் உபநிஷத்பாகங்களிலும் நூற்றுக்கணக்கான இடங்களில் 'விஷ்ணு' என்றும் 'நாராயணன்' என்றும் முழங்கப்பட்டிருப்பவனே பரப்ரஹ்மமும், பரமாத்மாவும், பரஞ்சோதியும், பரதத்த்வமுமாவான் என்று முழங்கப்பட்டிருக்கும்போது அவனைப் புராணங்களில் மாத்திரம் சொல்லப்பட்டிருப்பவனாக இவர் எழுதுவது இவர் விஷ்ணுவிடமும் வைஷ்ணவமதத்திடமும் ஸ்ரீராமானுஜர் முதலான ஸ்ரீவைஷ்ணவ பூர்வாசார்யர்களிடமும் கடுமையான த்வேஷம் கொண்டவர் என்று காட்டுகிறது. காமகோடி சங்கராசாரியரிடம் நிரந்தரமாகக் கைக்கூலி பெற்று வருமிவர் அதற்குக் கைம்மாறாக இப்படி அடிக்கடி எழுதி வருகிறார் என்பது உலகமறிந்தது. ஹிந்து பத்திரிகை சொந்தக்காரர்களுக்கு இவர் குடும்ப ஆசாரியராகையாலே ஸ்ரீ வைஷ்ணவ த்ரோஹியான இவரைக் கொண்டு ஸ்ரீ வைஷ்ணவ நூல்களை "ஹிந்து" அடிக்கடி விமர்சிக்கச் செய்து வருகிறது. ஸ்ரீபாஷ்ய வித்வான்களின் ஸதஸ் ஒன்றில் இந்த நூலை விமர்சிக்கும்படி செய்தால் இது எத்தனை அபத்தமானது என்பதும், அஹோபாவின் விமர்சனம் ஸ்ரீராமானுஜ த்வேஷத்தால் ஏற்பட்டது என்பதும் வெளிவரும். வருஷம் தோறும் நடக்கும் ஸ்ரீமதழகியசிங்கர்ஸதஸ்ஸிலும், ஸ்ரீமதாண்டவன்ஸதஸ்ஸிலும், மற்ற ஸ்ரீபாஷ்ய ஸதஸ்ஸுக்களிலும், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா, ஸ்ரீரங்கநாத பாதுகா முதலான ஸ்ரீ வைஷ்ணவ பத்திரிகைகளிலும் ப்ரக்ருதமான ஸ்ரீபாஷ்யத் தமிழ் மொழி பெயர்ப்பு நூலும், அதற்கு அஹோபா எழுதியுள்ள அக்ரம விமர்சனமும் கண்டிக்கப்பட்டாலொழிய இந்த அக்ரமம் தொடர்ந்து நடந்து கொண்டேதான் இருக்கும். அஹோபாவின் திருமண்காப்பைப் பார்த்து அபிமானம் காட்டாமல், தேசிக ஸம்ப்ரதாயப் பத்திரிகைகளும் வித்வத்ஸதஸ்ஸுக்களும் இந்த நற்பணியைச் செய்யும் என்று நம்புகிறோம்.

http://acharya.org

V. ஸ்ரீனிவாஸன், ஸ்ரீரங்கம்

77. ஏப்ரல் '89 'கலைமகளில்' "புஷ்ய மண்டபம்" என்னும் தலைப்பில் காமகோடிப் பெரியபீடாதிபதி தல புராணங்களின் புகழ் பாடியுள்ளார். ஸ்ரீராமன் பிரம்ம ஹத்தி, வீரஹத்தி, சாயாஹத்தி என்னும் மூன்று பாபங்கள் போவதற்கு மூன்று இடங்களில் லிங்கபூஜை செய்தான் என்று புலம்புகிறார். தல புராணங்களின் சாயத்தை அலச வேண்டுகிறேன்.

நம் நாட்டில் மதாசார்யர்கள் அனைவராலும் அபௌருஷேயமான (ஒரு புருஷனால் இயற்றப்படாத) வேதங்களே இயல்வான ப்ரமாணங்களாகக் கொள்ளப்பட்டன. மனிதனால் செய்யப்பட்ட ஸ்மிருதி, இதிஹாஸம், புராணம் முதலான அனைத்துமே இருள், துயக்கு, மயக்கு, மறப்பு முதலான குற்றங்களுக்கு ஆட்பட்டவையாகையால் வேதத்திற்கு முரணில்லாமலிருந்தால்தான் அவை ப்ரமாணமாகும் என்றும் கொள்ளப்பட்டது. இதிஹாஸபுராணங்களில் பல இடைச்செருகல் ஏற்பட்டுவிட்டபடியால், அவற்றிலேயே முழுவதையும் ப்ரமாணமாகக்கொள்ள முடியவில்லை. கோயில், திருமலை, பெருமாள்கோயில் போன்ற சில திவ்ய தேசங்களுக்கு ஆழ்வார்கள் காலத்திலும், ஆசார்யர்கள் காலத்திலும், தலபுராணங்கள இருந்ததாகத் தெரிகிறது. இதற்குப் போட்டியாக நாயன்மார்கள் காலத்திலிருந்து சிவஸ்தலங்களுக்கும் தல புராணங்கள் உண்டாகத் தொடங்கின. ராமேசுவரத்தில் ராமன் சிவலிங்கபூசை செய்தான் என்பது அவற்றில் ஒன்று. வேதங்களுக்கும் வால்மீகி ராமாயணத்திற்கும் முரணுகை யால் இத்தலபுராணங்கள் ஏற்கத்தகாதவை என்று பூர்வா சார்யர்கள் மறுத்தனர். பூர்வாசார்யர்கள் காலத்திற்குப் பிறகு இத்தலபுராணங்கள் ஆயிரக்கணக்கில் ஒவ்வொரு கிராமக் கோயிலுக்கும் புனையப்பெற்றன. 300 வருடங்களுக்குள் இப்படிப் புனையப்பெற்ற வடமொழித் தலபுராணங்கள் ஆயிரக்கணக்கில் இருக்கும். வடமொழிப் பண்டிதர்கள் பலர் தங்கள் ஊருக்கும், அருகில் உள்ள ஊர்களுக்கும் இப்படிப் பல தலபுராணங்களைப் புனைந்தார்கள். இவை ப்₃ரஹ்மாண்ட₃ புராணத்திலிருப்பதாகவும் புளுகினார்கள். இதனாலேயே "ப்₃ரஹ்மாண்ட₃ப்புளுக" என்னும் வழக்கு ஏற்பட்டது. இதைப் பார்த்த தமிழ்ப்புலவர்கள் பலர் தமிழிலும் இத்தகைய தல புராணங்களைத் தாங்கள் அபிமானித்த ஊர்களுக்குப் புனைந்தார்கள். உ. வே. சாமிநாதய்யரின் ஆசிரியர் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை எழுதிய தலபுராண நூல்கள்

http://acharya.org

நூற்றுக்கணக்கில் இருக்கும். ஒருவரே பல தலபுராணங்களை எழுதியதால் இவற்றினிடையே ஒன்றுக்கொன்று தொடர்பும் இருக்கும். இவை பெரும்பாலும் ராமாயணம், மஹாபாரதம் என்னும் இதிஹாஸ பாத்திரங்களை வைத்து இயற்றப்பட்டதால் அவற்றோடும் தொடர்புடையதுபோல் தோன்றும். ஆகையால், "இப்படி ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பையெல்லாம் பார்க்கிறபோது இது எல்லாம் வெறும் கட்டுக்கதை என்று எப்படிச்சொல்வது? மஹாபுராணங்களைவிட ஸ்தலபுராணங்களில் அதிக உண்மை இருக்கிறது என்பது என் அபிப்பிராயம்" என்று பீடாதிபதி எழுதுவது பொய்க்கதைகளான தலபுராணங்களுக்கு எப்படியாவது உயிர் கொடுத்துவிட வேண்டும் என்னும் அவரது வெறியுணர்வையே காட்டுகிறது. ''துஷ்டநிக்ரஹம் செய்வதற்காக நான் அவதரிக்கிறேன்'' என்று கீதையில் கண்ணன் முழங்கியிருக்கிறான். அவன் நிரசித்த அசுரரரக்கர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள். மூலபலசேனை கரதூஷணாதியர் முதலான அரக்கர்களான எண்ணிறந்த வீரர்களை இராமனும் அழித்திருக்கிறான். தாடகை என்னும் அரக்கியை அழித்ததன் மூலம் ஸ்த்ரீ வதமே செய்திருக்கிறான். இதற்கெல்லாம் அவன் ப்ராயச்சித்தம் செய்து கொண்டான் என்று எங்கும் இல்லையே. ஆகையால், இராவணன் என்னும் ஓர் அரக்கனைக் கொன்றதால் ப்ரஹ்மஹத்தி தோஷத்தைப்போக்க ஓரிடத்திலும், வீரஹத்திதோஷத்தைப்போக்க ஓரிடத்திலும், சாயா (புகழ்) ஹத்திதோஷத்தைப்போக்க ஓரிடத்திலும் இராமன் லிங்கபூஜை செய்தான் என்று எழுதிவைத்திருப்பவை அப்பட்டமான கட்டுக்கதைகளாகும். இவற்றை ஆதரிப்பதன் மூலம் தம் வயிற்றில் ஊறிக்கிடக்கும் விஷ்ணு த்வேஷத்தையே பீடாதிபதி அடிக்கடி வெளிப்படுத்திக்கொள்கிறார். பொய்யைப் பலமுறை கூறி உண்மையாக்கப்பார்க்கிறது "கலைமகள்" பத்திரிகை. நாயன்மார்கள் காலத்திற்கு முற்பட்ட தென்மொழி வடமொழி இலக்கியங்கள் எதிலுமே சான்றோர்களால் ஆதரிக்கப்படாத அடிமுடி தேடிய கட்டுக்கதையைக்கூறும் திருமூலர் பாட்டு ஏப்ரல் '89 "கலைமகள்" இதழிலேயே விளக்கப்பட்டுள்ளது. இத்தகைய கட்டுரைகளை வெளியிடுவதன் மூலம் இலக்கியப் பத்திரிகையான கலைமகளும் விஷ்ணுத்வேஷப் பிரசாரப் பத்திரிகையாக மாறிவருவது வருந்தத்தக்கது.

http://acharya.org

K. A. பார்த்தசாரதி, சென்னை-44—மற்றும் பலர்

78. மே'89 திருமால் அட்டை 2, 3-ல் 'திருமால்' ஆசிரியர் இந்த நூற்றுண்டில் நெடுங்காலம் பணி செய்த ஸ்ரீகாஞ்சி மஹாவித்வான் P.B.A. ஸ்வாமி முதலான பல மஹநீயர்களும், இப்போதும் தொண்டு செய்துவரும் 'ஸுதர்சனர்' போன்ற மஹநீயர்களும் பாடு பட்டு வைணவத்திற்குச் செய்துள்ள சாதனைப் பணிகள் அனைத்தையும் திருமாலுடைய சாதனைகளாகப் பீத்திக்கொள்வதோடு நில்லாமல், ஸுதர்சனரை வாய்க்கு வந்தபடி வையத் தொடங்கியுள்ளார். சுராஜ், நாவல் பாக்கம் வரதாசாரியர் ஆகிய இரு களைகளை வைணவப் பயிரை அழிக்க முடியாதபடி களைவதற்காக தேவரீர் தொடங்கிய விவாதத்தை முடிவு காண முடியாத வசவு மாலை விவாதமாக மாற்றப்பார்க்கிறார். அவரது குற்றச் சாட்டுகளுக்குத் தக்க பதிலளித்து, இந்த விவாதத்திற்கு ஒரு முடிவு ஏற்பட வழி செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

'ஸுதர்சனம்''திருமால்'விவாதத்தில் நியாயத்தைச் சொல்லுங்கள்

திருமாலின் அட்டைக் கட்டுரையின் முதல் 5 பாராக்களில் குறிப்பிட்டிருக்கும் சாதனைகள் பல பெரியோர்கள் தொண் டர்களின் கூட்டு முயற்சியால் விளைந்த சாதனைகள். அவற்றை மூன்று வருடக் குழந்தையாய், பாலாரிஷ்ட நிலை யைத் தாண்டாத 'திருமா'லின் ஏகதேச சாதனைகளாகப் பீத்திக்கொள்வது அடாத செயலாகும். இப்படிப் பீற்றிக் கொள்ளும்போது "கியாதிலாப பூஜைகளுக்காக, கொத்த வால் சாவடியைச் சுற்றிவந்த சுயநலவித்வான்கள்" என்று ஸ்ரீகாஞ்சீ மஹாவித்வான், ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு ஸ்வாமி, இன்று உபயவேதாந்தங்களையும் சென்னையில் வர்ஷிக்கும் வித்வான்கள் ஆகிய அனைவரையும் தாக்குவது இவர் ஆணவத்தின் எல்லையில் நிற்கிறார் எனக் காட்டுகிறது. ஒரு ஞாஞசார்யரையும், ஒரு ஞானபுத்திரரையும் இதுவரை அறிமுகப்படுத்தாத இவர், பல ஞானபுத்திரர்களால் திரஸ் கரிக்கப்பட்ட இவர், ஞானபுத்திரர்களை முளையிலேயே கருகிப் போம்படி செய்வதற்காக சுராஜ், நாவல்பாக்கம் வரதாசார்யர் முதலானவர்களின் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவமத விரோத ப்ரசாரங்களுக்குத் திருமாலிலும், திருமாலடியார் குழாங்களிலும் இடமளித்துவரும் இவர், ஞாஞசார்யர்களின் அறிமுகமும், ஞானபுத்திரர்களின் தோற்றமும் திருமாலின் சாதனைகளே என்று எழுதிக்கொள்வது விலவறச் சிரிக்கத் தக்கதாயுள்ளது. இந்த விவாதம் தொடங்கியதிலிருந்து

சென்ற பல மாதங்களாக நாம் டில்லி, சென்னை, பாண்டி, மதுரை முதலான பல மஹாநகரங்களிலும், ஸ்ரீரங்கம், ஆழ்வார்திருநகரி, ஸ்ரீபெரும்பூதூர், வானமாமலை, திருக்குறுங்குடி, திருநாங்கூர், திருக்கோவலூர் முதலான திவ்யதேசங்களிலும் உள்ள வித்வான்களையும், மடாதிபதிகளையும், ஆசார்யபுருஷர்களையும். ஸ்ரீவைஷ்ணவ பத்திரிகாசிரியர்களையும், பரமபாகவதர்களையும் சந்திக்கும்போது, அவர்கள் அனைவரும் இவர் செய்யத் தொடங்கியுள்ள வைணவ விரோதச் செயல்களைக்கண்டு மிக்க மனவருத்தத்தை வெளியிட்டார்கள். ஒருவர்கூட இவருக்கு ஆதரவாகவோ, நாம் செய்வதைக் குறைகூறியோ பேசவில்லை. இவர்களிற் பலர் இவரது வசவுமாலைகளுக்கு அஞ்சி எழுத்துமூலம் கடிதம் எழுதத் தயங்குகிறார்கள். ஒருசிலர் இவருக்குக் கடிதம் எழுதி நமக்கு நகலும் அனுப்பியுள்ளனர். ஒரு சில கடிதங்களை வெளியிட்டோம். மேலும் கடிதங்களை இவர் பெற்றுக்கொண்டேயிருக்கிறார்.

இங்கிலையில் விவாதத்தைத் திசைதிருப்பிவிடுவதற்காக ஸ்ரீராமாநுஜர் படப்பிடிப்பில இடம்பெறாத ஆத்திரத்தால் நாம் பொருந்தாத பொய்க்குற்றங்களைக் கூறி வீண் வம்புகளுக்கு வித்திட்டு வருவதாக ஓர் அபாண்டமான பொய்க்குற்றச்சாட்டை நம்மீது வீசுகிறார். நிறைவடைந்து ஒருவருடமாகியும் விலைபோகாத இப்படத்தை, முதல் காட்சியிலே நாம் பங்களூரில், இதில் ஸ்ரீராமாநுஜராகத் தோன்றி அருமையாக நடித்திருக்கும் ஸ்ரீ உ. வே. லக்ஷ்மீதாதாசார்ய ஸ்வாமியோடும், அவரது குமாரரோடும் மேலக்கோட்டைத் திருநாராயணபுரத்திலிருந்து வந்து பார்த்தோம். படத்தின் இயக்குநரான ஜீ. வி. அய்யரின் பிடிவாதத்தினாலும் கதை வசனம் எழுதியவர்களுக்கு ஸ்ரீபாஷ்யாதிக்ரந்தங்களிலும் வரலாற்று நூல்களிலும் ஞானமின்மையாலும் இப்படத்தில் திருத்தமுடியாத பலகுறைகள் நேர்ந்து விட்டதை நாம் அப்போதே தாதாசார்யஸ்வாமியிடம் சுட்டிக்காட்டினோம் திருமாலில் சொல்லியுள்ளபடி இந்தப்படப்பிடிப்பில்கலந்து கொள்ளாததால் நமக்கு ஆத்திரமிருந்தால் நாம் அப்போதே ஸுதர்சனத்தில் அப்படத்திலுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கவேண்டுமே! பல மாதங்கள் கழித்து 'சுராஜ்' செய்த அக்ரமங்களைக் கண்டித்ததற்கு அவ்வக்ரமங்களே காரணமாகும் என்பதும், எப்போதோ நடந்த படப்பிடிப்பு காரணமாகாதென்பதும் சிறுவர்க்குக்கூட விளங்குமே! இந்த விவாதத்திற்கு எத்தொடர்புமில்லாத இந்த அபாண்டமான அக்ரமமான பொய்க்குற்றச்சாட்டை இவர் சொல்லியிருப்பதால், இது பற்றிய உண்மைகள் பலவற்றை நாம் விளக்க வேண்டியுள்ளது, அதற்கு இவரே பொறுப்பேற்க வேண்டும்.

http://acharya.org

அக்ஷயவருடம் கார்த்திகை மாதத்தில் சென்னையில் Dr. ஸம்பத் ஸ்வாமியின் மணிவிழாவில் 'திருமால்' ஆசிரியரை நாம் சந்தித்தபோது "சங்காரது வரலாற்றையும், மத்வரது வரலாற்றையும் திரைப்படமாகப் பிடித்த ஸ்ரீ ஜி. வி. அய்யரவர்கள் ஸ்ரீராமாநுஜரது வரலாற்றைத் திரைப்படமாக எடுக்கவிருக்கிறார். அதற்குக் கதை வசனத்தை ஒருவர் கன்னடத்தில் எழுதியிருக்கிறார்; நான் அதைத் தமிழ்ப்படுத்தி வருகிறேன். தேவரீர் அதை முழுவதும் கடாக்ஷித்துக் குறைகளைத் திருத்திக்கொடுக்க வேண்டும்" என்று இவர் பிரார்த்தித்து G.V. அய்யாரிடமும் கூட்டிச்சென்றார். G.V. அய்யர் "சில காரணங்களுக்காக நான் ஸ்ரீராமாநுஜரை ஸமாச்ரயணத்திற்கு முன்பு சந்தனத்தால் ஊர்த்வபுண்ட்ரமிட்டுவந்த ஸ்மார்த்த குடும்பத்தைச் சேர்ந்தவராகவே காட்டப்போகிறேன். இதேபோல் குருபரம்பரை வரலாறுகளில் மற்றும் சில மாறுதல்களையும் செய்யப்போகிறேன். மற்ற விஷயங்களிலும், ஸ்ரீபாஷ்யம் முதலான கிரந்தங்களுக்கும் விசிஷ்டாத்வைதஸ்ரீவைஷ்ணவ மதத்திற்கும் விரோதமில்லாதபடி நீங்கள் வசனத்தைத் திருத்திக்கொடுக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். நாமும் எந்தக் கைம்மாறுமில்லாமல் அதைச்செய்து தருவதாக ஒப்புக்கொண்டு வசனத்தைச் சிறிது வாசிக்கச் சொன்னோம். "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்னும் ஶ்ருத்யர்த்தத்தை வாசித்தார். அது தவறாயிருந்தது. "இதுபோல் மேலும் பல தவறுகள் இருக்கலாம். அவற்றைப் பார்த்து ஸ்வயம்ப்ரயோஜனமாகத் திருத்தித்தருகிறேன்" என உறுதியளித்துத் திரும்பினோம். அதற்குப்பின் திருமால் ஆசிரியரைப் பார்க்கும்போது பலமுறை "வசனம் எப்போது தருவீர்கள்" என்று கேட்டு வந்தோம். "ஜி. வி. அய்யரின் உத்தரவு வந்தவுடன் தருகிறேன்" என்று கூறிவந்தார். "தருவதற்கு எண்ணமில்லை" என்று புரிந்துகொண்டு, பிறகு கேட்பதையும் நிறுத்திவிட்டோம். ப்ரபவவருடத்தில் படப்பிடிப்பு பல இடங்களிலும் நடக்கிறது என்று கூறிவந்தார். ஸ்ரீரங்கத்தில் படப்பிடிப்பு தொடங்கியபோது, ஒருநாள் அடியேனைச் சந்தித்த இவர் "திருக்கோஷ்டியூர் நம்பியாக நடிப்பதற்கு ஒருவருமில்லை; தேவரீர் அப்பாத்திரத்தை ஏற்று நடிக்கவேண்டும்" என்று கைகூப்பி வேண்டிக்கொண்டார். இவருடைய ஸ்வபாவத்தை முன்னமே அறிந்த நாம் இவரை மற்றும் ஒருமுறை பரிசோதிப்பதற்காக "திருக்கோஷ்டியூர் நம்பி ஸம்பந்தப்பட்ட வசனங்களைக் காட்டினால் நடிப்பது பற்றி எனது முடிவைச்சொல்லுகிறேன்" என்று கூறினோம். சிலநாட்களில் "ஜி. வி. அய்யர் ஒப்புக்கொள்ளவில்லை" என்று கூறினார். அதன் பிறகு படப்பிடிப்பு நடக்குமிடத்திற்குச் சென்றால், படத்தில் தலையைக் காட்டச் செய்து அப்படத்திற்கு நமது இசைவு உண்டு என்னும் தோற்

றத்தை விளைத்துவிடுவார்களாகையாலே, படப்பிடிப்பு நடக்கும் இடத்திற்குச் செல்வதையும் தவிர்த்துவந்தோம். ஸ்ரீரங்கத்தில் படப்பிடிப்பைக் கண்ட சிலர் "ஜி. வி. அய்யர் ஆட்டி வைக்கிறபடியெல்லாம் 'திருமால்' ஆசிரியர் ஆடுபவராகவே உள்ளார்; அவருக்குப் படப்பிடிப்பில் எந்த அதிகாரமும் அய்யரால் அளிக்கப்படவில்லை" என்று கூறினார்கள். இத்தகைய இவரிடம் நாம் அநுதாபப்பட இடமுண்டேயொழிய ஆத்திரப்படவோ இவரோடு இவ்விஷயமாக மோதவோ இடமேது? "ராஜஸம்ச்ரய வச்யாநாம் குர்வந்தீநாம் பராஜ்ஞயா । விதேயாநாம் ச தாஸீநாம் க: குப்யேத் வாநரோத்தம? ॥" என்ற பிராட்டியின் வார்த்தையை நினைப்பது. படம் வெளிவந்தபிறகு ஸ்ரீமத் பரமஹம்ஸ சின்ன ஸ்ரீமந் நாராயண ராமானுஜ ஜீயர் ஸ்வாமி முதலான பலர் முன்னதாக வித்வான்களிடம் வசனத்தைக் காட்டியிருந்தால் எளிதில் தவிர்த்திருக்கக்கூடிய பல பிழைகள் அப்படத்தில் புகுந்துவிட்டதைக்குறித்து வருத்தம் தெரிவித்ததாகக் கேள்விப்பட்டோம். ஸ்ரீ உ. வே. வாக்ம்ருதவர்ஷீ கே. வரதாசார்ய ஸ்வாமியும் ஜி. வி. அய்யர் படம் தொடங்குவதற்கு முன்பே தம்மைக் கலந்து ஆலோசித்ததாகவும், தாம் உதவி செய்வதாகக் கூறியதாகவும், அதற்குப்பிறகு தம்மிடம் வரவேயில்லை என்றும், படம் வெளியானபின் அதில் பல குறைகள் இருப்பதைக் கண்டதாகவும் கூறினார். உண்மை இவ்வாறிருக்க, ப்ரக்ருத விவாதத்திற்குச் சம்பந்தமேயில்லாத படவிஷயத்தை இவர் வீணாக இழுப்பது விவாதத்தைத் திசைதிருப்பிவிடவே என்பதை நடுநிலையாளர் நன்கு உணரலாம். நிற்க.

திருமால் அட்டைக் கட்டுரையில் ஏழாவது பாராவில் "புதிதாக முளைக்கும் தூய வைணவப் பயிர்களின் முளைகளை 'களை' என்று பேரிட்டுக் கிள்ளி எறிய முயல்கின்றார். ஸ்ரீவைஷ்ணவத்துக்குத் தாம் ஒருவரே 'வேலி' என்று கருதும் இவர் பயிரையே மேயத் தொடங்கியுள்ளார்" என்றும், எட்டாவது பாராவில் "தூய உள்ளத்துடன் தந்தையார் தொடங்கிய பணியை இதுகாறும் ஒருவாறு தொடர்ந்து வந்தவர், என்ன வினைப்பயனோ துஷ்ப்ரயோகம் செய்யத் தலைப்படுகிறார். இப்போது சக்கரப்படை சீமாலிகன் கையில் சிக்கியதுபோல் தெரிகிறது. திருமால் அடியார்களின் இதமான திருமாலைத் தாக்குகிறார்" என்றும் மனம் போனபடி மிகக்கடுமையாக நம்மைத் தாக்கிவிட்டு, "குற்றம் செய்தவர்கள் பக்கல்" என்று தொடங்கும் ஸ்ரீவசநபூஷணக் கட்டளையைத்தாம் பின்பற்றுவதாக வெட்கமில்லாமல் எழுதுவது சாத்தான் வேதமோதும் கணக்காயுள்ளது. இப்போது நம்மீதும் ஸுதர்சனத்தின் மீதும் அவதூறுச் சேற்றை வாரியிறைக்கும் இவர், நமது மணிவிழா மலரில் "கொள்கை வீரர் ஸுதர்சனர்" என்னும் தலைப்பில்,

http://acharya.org

"ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் போன்றே அதற்கு முன்னரும் பின்னரும் பல இதழ்கள் வெளிவந்தது உண்டு. ஆயினும் ஒரு குடும்பச் சொத்திலிருந்து, லாப நஷ்டம் பாராமல் கொள்கைப் பிரசாரத்துக்காக, கடுமையான பல எதிர்ப்புக்களையும் ஏற்றுப் போராடி, தாக்குப் பிடிக்கும் தனிச்சிறப்பு 'ஸுதர்சனம்' ஒன்றுக்கே உண்டு எனலாம். புலிக்குப் பிறந்தது பூனையாகாமல், தந்தையை விஞ்சியவராய் "விடுத்த திசைக்கருமம் திருத்தி" வருகிறார் இப்போது மணிவிழாக்காணும் புத்தூர் வக்கீல் ஸ்ரீ உ. வே. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி. ஸ்ரீவைஷ்ணவப்பயிர் புத்துயிர்பெற்றுத் தழைத்தோங்கும் வகையில், களையெடுத்துக் கைகொடுத்து வருகிறார். மழுங்காத வைந்நுதிய சக்கரமாய்ச் சுழன்று செயலாற்றிவரும் 'ஸுதர்சனர்' ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மேடைகளிலும் முழங்குவதுண்டு. எதிரிகளின் இதயம் பிளக்க ஒலி எழுப்பிய பகவான் கிருஷ்ணனின் கையில் பாஞ்சஜன்னியத்தின் பணியை இது நினைவூட்டும், தமிழ்த்துறையில் பிள்ளைப்பெருமாள் அய்யங்காரைப்போல் புத்தூர் அய்யங்காரும் எதிரிகள் அஞ்சி மதிக்கும்படி செயல்படுகிறார். தீவிரமும், தியாக உணர்வும், தீரமும் கொண்டு ஸுதர்சனர் ஆற்றிவரும் பணிகள் போற்றுதற்குரியன. புத்தூர் வக்கீல் ஸ்வாமி எல்லோருடனும் எளிமையும் இனிமையும் கலந்து பழகவல்ல பண்பினர். ஆயினும் ஸ்ரீவைஷ்ணவ எதிரிகளை அவர்கள் எத்தகையவராயினும் எதிர்த்துப் போராடத் துணிவதுடன், கடுஞ்சொல் கணைகளைத் தொடுக்கவும் தயங்குவதில்லை. அவரை ஆதரித்து நிற்பவரும், வக்கீல் ஸ்வாமிக்கு இவ்வளவு சூடான சொற்கள் தேவைதானா என்று யோசிக்கும் அளவுக்குத் தீவிரமானவர் ஸுதர்சனர் இவ்வாறு அவர் ஒரு கொள்கை வீரராக வைணவத்துக்கு வாய்த்திருக்கிறார்! ஸ்ரீவைஷ்ணவ விரோதிகளின் குறும்பறுக்கும் பணியில் தம் தந்தையையும் விஞ்சிநிற்கும் சுதர்சனர் — பகவத்குணானுபவத்தில் ஆழ்ந்த ஆழ்வார்கள், பராங்குசராயும், பரகாலராயும் பணியாற்றியதுபோல் விளங்குவதில் வியப்பில்லையே!"

என்று தொடங்கி எழுதியிருப்பது நடுநிலையாளர்கள் அனைவராலும் காணத்தக்கது; நாலு வருடங்களுக்கு முன் இவர் பாராட்டிய நமது களையெடுத்துக் கைகொடுக்கும் பணி, எதிரிகளின் இதயம் பிளக்க ஒலியெழுப்பும் பணி, ஸ்ரீவைஷ்ணவ விரோதிகளின் குறும்பறுக்கும் பணி ஆகிய அரும்பெரும் பணிகளே இப்போது ஆழ்வார்களையும், ஆசார்யர்களையும், எம்பெருமானையும் மனம்போனபடி தூஷிக்கும் இவரது நெஞ்சுக்கினிய சுராஜை விஷயமாகக் கொண்டுவிட்டதால் இவருக்குக் கசக்கின்றன; அதனால் நம்மையும் ஸுதர்சனத்தையும் தாறுமாறாகத் தாக்குகிறார்.

http://acharya.org

இந்த விவாதத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வரவும், இதில் எந்தப் பக்ஷத்தில் நியாயமும் நேர்மையும் இருக்கிறது என்று உலகம் உணர்வதற்காகவும் நாம் சில கேள்விகளைக் கீழே கொடுக்கிறோம். துணிவிருந்தால், நியாயம், நேர்மை முதலான நற்குணங்கள் மீது மதிப்பிருந்தால் 'திருமால்' ஆசிரியர் அக்கேள்விகளை அடுத்த திருமால் இதழில் அப்படியே அச்சிட்டு பதில் இறுக்கட்டும். அத்துடன் 'ஸுதர்சனம்' 'திருமால்' ஆகிய இருபத்திரிகைகளின் பெறுவோர் பட்டியலில் ((Mail List) இருப்பவர்களும் இக்கேள்விகளுக்கு ஆதாரத்துடன் பதிலிறுத்து, தங்கள் முழுவிலாசத்தையும் கொடுத்து இரண்டு பத்திரிகைகளுக்கும் அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். (ஒரு பத்திரிகையை மட்டும் பெறுபவர் மற்ற பத்திரிகையின் வாதங்களை முழுவதும் அறியமாட்டாராகையால் பதிலிறுப்பவர் இரு பத்திரிகைகளையும் பெறுபவராயிருக்க வேண்டியது முக்கியம்.) இதில் பெரும்பான்மையினரின் தீர்ப்புக்கு நாம் தலைவணங்கி ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறோம். 'திருமால்' ஆசிரியர் கேள்விகளை அச்சிட்டு பதில் எழுதுகிறாரா என்பதையும், வாசகர்களின் பெரும்பான்மைத் தீர்ப்புக்குத் தலைவணங்குகிறாரா என்பதையும் பார்த்து அடுத்த ஓரிரு இதழ்களில் இவ்விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவோம்.

கேள்விகள்

1. திரு. 'சுராஜ்' தமது துணைஆசிரியர் பதவியைத் துறப்பதற்கு முன்னும் பின்னும் திருமாலில் ஆழ்வார்களையும், ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களையும் கண்டித்துள்ளாரா இல்லையா?

2. திரு. சுராஜ் ஆழ்வார்களையும், ஆசார்யர்களையும் கண்டித்துள்ளதைக்காட்டி ஸுதர்சனர் மறுப்புரைத்திருப்பது நியாயமானதா நியாயமற்றதா?

3. முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டுப்பின் ஓர்ந்து தாம் அதனைப் பேசாதே தம் நெஞ்சில் தோற்றினதே சொல்லும் திரு. சுராஜ் வைணவப் பயிருக்குக் களை போன்றவர் என்றும், அவரது கட்டுரைகளைத் திருமாலில் வெளியிடுவது சரியல்ல என்றும் ஸுதர்சனர் கூறுவது நியாயமா? அல்லது திரு. சுராஜ் புதிதாக முளைக்கும் தூய வைணவப்பயிரின் முளையாயிருப்பவர் என்றும், வீண் பழிக்கு ஆளானவர் என்றும், அதனால் அவரது கட்டுரைகள் திருமாலில் வரவேண்டியவையே என்றும் 'திருமால்' ஆசிரியர் கூறுவது நியாயமா?

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்.

79. 'திருமால்' ஆசிரியர் "ஸுதர்சனர் கேள்விகளும் நமது பதில்களும்" என்ற தலைப்பில், 78-வது கேள்வியின் பதிலின் இறுதியில் தாங்கள் கேட்டிருந்த மூன்று கேள்விகளையும் ஜூன் திருமாலின் கடைசிப்பக்கத்தில் அச்சிட்டு, ஐந்து வரிகளுள்ள முதல் கேள்விக்கு மூன்று வரிகளிலும், நாலு வரிகளுள்ள இரண்டாம் கேள்விக்கு இரண்டு வரிகளிலும், 13 வரிகளுள்ள மூன்றாம் கேள்விக்கு 4 வரிகளிலும் பதிலுரைத்து, "இவையே நமது இறுதி பதில்கள்" என்று முடித்துள்ளார். ஸாமான்ய வாசகர்கள் புரிந்து கொள்ள முடியாத இந்த பதில்களை தேவரீரே விளக்கி விமர்சிக்க வேண்டும் என்றும், வாசகர் தீர்ப்பு எப்படி அமைந்துள்ளது என்று அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

"'சுராஜ்' ஆழ்வார்களையும், ஆசார்யர்களையும் கண்டித்துள்ளாரா இல்லையா?" என்னும் கருத்துள்ள நமது முதல் கேள்விக்கு "திரு. சுராஜ் விமரிசனம் மட்டுமே செய்துள்ளார்; கண்டனம் வேறு; விமரிசனம் வேறு; புரிந்து கொள்ள வேண்டும்" என்று பதில் எழுதுகிறார் 'திருமால்' ஆசிரியர். "சுராஜின் கண்டனத்தை ஸுதர்சனர் மறுத்திருப்பது நியாயமானதா அல்லவா" என்னும் கருத்துள்ள இரண்டாம் கேள்விக்கு, "விமரிசனம் கண்டனமாகத் திரித்து மறுப்புரைக்கப்பட்டிருக்கிறது" என்று பதில் உரைக்கிறார். "சுராஜ் செய்வது தவறு என்று ஸுதர்சனர் கூறுவது நியாயமா அல்லது அவர் செய்வது சரியே என்று திருமால் ஆசிரியர் கூறுவது நியாயமா?" என்னும் கருத்துள்ள மூன்றாவது கேள்விக்கு, "முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டுப் பின் ஓர்ந்து பேசுவது முறையே; புதியன புகுதல் வழுவல [ஓர்தல்-சிந்தித்தல்; விமர்சித்தல்]" என்று பதில் கூறுகிறார்; "89 ஜனவரி திருமாலில் சுராஜ் திருமழிசையாழ்வாரைச் சண்டைக்காரர்' என்றும், தொண்டரடிப்பொடியாழ்வாரின் ஸ்ரீஸூக்திகளை 'வெறிச் சொற்கள்' என்றும் கண்டித்திருப்பது சரியா? டிசம்பர் '88 திருமாலில் 'பொன் திகழும்' (முதல் திருவ 98) என்னும் பாட்டின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தைக் கண்டித்திருப்பது சரியா?" என்னும்

http://acharya.org

நம் கேள்விகளுக்கு உண்மையான ஸ்ரீவைஷ்ணவர் எவரும் "சரியல்ல" என்றே பதில் எழுத முடியும். ஆனால், திருமால் ஆசிரியர் "அது ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும் கண்டிப்பதல்ல; விமர்சிப்பதே; ஆகையால் அது சரியானதே" என்று பொருள்பட பதிலுரைத்திருக்கிறார்! அப்படியானால், "1–1–89 அன்று பேயாழ்வார் தேவஸ்தான மண்டபத்தில் 'சுராஜ்' ஆழ்வார்களையும், ஆசார்யர்களையும் பிறர் கருத்துப் படி கண்டனமோ, அல்லது இவர் கருத்துப்படி விமர்சனமோ செய்த போது இவர் 'சுராஜ்' துணை ஆசிரியர் பதவியைத் துறக்குமளவுக்கு அவரைக் கண்டித்தது ஏன்? அன்று சுராஜ் செய்தது சரியல்ல என்று நினைத்த இவர் இன்று அது விமர்சனமாகையால் சரியே என எழுதுவது முன்னுக்குப் பின் முரணல்லவோ?" என்னும் கேள்விகளுக்கு இவர் என்ன பதில் சொல்ல முடியும்? "நான் எந்த ஆசாரியனிடமும் எந்த அர்த்தத்தையும் கேட்டு மூளைச் சலவை செய்யப்பட்ட வனல்லன். ஆழ்வார்பாடல்களை ஒரு முறைக்கு இரு முறை படித்துப் பார்த்து என் நெஞ்சில் பட்ட பொருளையே சொல்லுகிறேன்" என்று பறையறைந்து வரும் சுராஜை 'முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு, பின் ஓர்ந்து' பேசுவதாகத் திருமால் ஆசிரியர் எழுதுவது எப்படிப் பொருந்தும்? இவற்றிலிருந்து, 'திருமால்' ஆசிரியர் சுராஜின் மேல் பக்ஷபாதத்தால் தமது மனஸ்ஸாக்ஷியையே அவரிடம் அடகு வைத்து விட்டார் என விளங்குகிறது. மேலும்,இவர் "புதியன புகுதல் வழுவல" என்னும் தமிழிலக்கணச் சூத்திரப் பகுதியை மேற்கோள் காட்டுகிறார். ஆசாரவிஷயத்தில் நம் நாட்டு மக்கள் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல" என்று கொண்டு வருகிறார்கள். ஆனால், ஸ்ரீவைஷ் ணவ மதத்தின் அடிப்படைக் கொள்கைகளை மாற்றி, புதுக் கொள்கைகளை அமைப்பதில் இந்த நியாயத்தைப் பயன்படுத்த இரண்டொரு தனி மனிதர்களுக்குத் தகுதி ஏது? நாராயண பரத்வம், மறந்தும் புறந்தொழாமை என்னும் கொள்கைகள் ஆழ்வார்களும், ஆசாரியர்களும் நம் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ தர்சனத்திற்கு அடிப்படையாக அமைத்த கொள்கைகள். இவற்றை, ஓராசார்யனிடமும் அடி பணிந்து ஓரர்த்தத்தையும் கேளாத சுராஜும் அவரிடம் அபிமானங் கொண்ட 'திருமால்' ஆசிரியரும் எப்படி மாற்ற முடியும்?

http://acharya.org

இதை ஸ்ரீவைஷ்ணவவுலகம் ஒருபோதும் அனுமதிக்காது. சென்ற ஆறு மாதங்களாக நாம் ஆயிரக்கணக்கான ஸ்ரீவைஷ்ணவோத்தமர்களைச் சந்தித்து, பிரகிருதவிவாதம் பற்றிக் கருத்துக் கேட்டுவருகிறோம். ஒருவரும் நமது நிலையை மறுத்தோ, 'திருமால்' ஆசிரியரின் நிலையை ஆதரித்தோ கருத்துக் கூறவில்லை. 16—6—89 அன்று ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி தலைமையில் சென்னை திருவல்லிக்கேணி வானமாமலைமடத்தில் நடந்த ஆசார்ய பீட₂வித்₃வத்ஸத₃ஸ்ஸில் பல வித்₃வான்களும் ஸ்ரீவைஷ்ணவ அறிஞர்களும் கூடியிருந்தபோது நாம் இந்த விவாதத்தை ப₃ஹிரங்க₃மாக ப்ரஸ்தாபம் செய்து ஜீயர் ஸ்வாமியிடமும், அங்கு குழுமியிருந்த வைணவப் பொது மக்களிடமும் தம் கருத்துக்களை வழங்கும்படி பிரார்த்தித்தோம். ஜீயர் ஸ்வாமி, "ஆழ்வார்களின் அருளிச்செயல்களை ஆசார்யர்களின் விரிவுரைகளை அனுஸரித்துப் பிரசாரம் செய்வதற்கே நமது பெரிய ஜீயர் ஸ்வாமி இந்த உப₄ய வேதா₃ந்த ஆசார்ய பீட₂த்தை அமைத்தார். அதற்கு முரணாக நடக்க நாம் அனுமதிக்கமாட்டோம்" என்று அனுக்₃ரஹித்தார். இதை அங்கு குழுமியிருந்த பெருமக்கள் அனைவரும் ஒருமனமாக ஆமோதித்தார்கள். எழுத்து மூலமாகக் கருத்துத் தெரிவிப்பதால் மனக்கசப்பு வளருமாகையால், பலரும் 'திருமால்' ஆசிரியருக்கு எழுதத் தயங்குகிறார்கள். ஒரு சிலர் எழுதியுமுள்ளனர். நமது கேள்விகளுக்கு பதிலையும் எழுதி, நமக்கும், திருமால் ஆசிரியருக்கும் சிலர் அனுப்பியுள்ளார்கள். இவர்களில் ஒருவர் கூட நமது நிலையைத் தவறென்றோ, 'திருமால்' ஆசிரியரின் நிலை நியாயமானது என்றோ எழுதவில்லை.

இக்கடிதங்களில் ஸுத₃ர்சன ஞானபுத்திரரான திரு. செல்வ நாரண ராமாநுஜதா₃ஸரின் கடிதம் மிகப் பண்போடும், பணிவோடும், பரிவோடும், உருக்கமாகத் 'திருமால்' ஆசிரியரைப் பிரார்த்திப்பதாக அமைந்துள்ளது. இக்கடிதத்தைக் கண்ட பின்பாவது "திருமால்" ஆசிரியர் சுராஜின் நிலையை ஆதரிப்பதைவிட்டு, உலகம் நிறைந்த புகழாளரான தமது ஆசாரியர் ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமியின் திருவுள்ளவுகப்புக்குப் பாத்திரராகும்படி நடந்து கொள்வார் என நம்பி அக்கடிதத்தை அடுத்தபடி அச்சிடுகிறோம்.

http://acharya.org

ஸ்ரீ. உ. வே. குமாரவாடி ராமாநுஜாசார்யர்ஸ்வாமிக்கு
செல்வநாரண ராமானுஜதாஸரின் கடிதம்

ஸ்ரீ உ. வே. ஸ்வாமி திருவடிகளில் அடியேன் அநேக தண்டன்கள் ஸமர்ப்பித்து விஜ்ஞாபனம் செய்துகொண்டது. உபயகுசலம்.

தங்களைப்போன்ற உயர்ந்த மஹா பாகவதர்களை மறுத்து எழுத வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதற்கு எம்பெருமான் கருணையுடன் இச்சிறுவனை மன்னிப்பானாக.

1. திரு சுராஜ் விமர்சனம் மட்டுமே செய்துள்ளார். விமர்சனம் வேறு, கண்டனம் வேறு என்று தாங்கள் அருளியிருக்கிறீர்கள். விமர்சனம் செய்பவருக்கு, தாம் விமர்சனம் செய்யப் புகுந்ததில் ஆழ்ந்த ஞானம் வேணும். தான்தோன்றித்தனமாகச் சொல்வதெல்லாம் விமர்சனம் என்று சான்றோர் எவரும் ஏற்க மாட்டார்கள். திரு சுராஜ் செய்திருப்பது விமர்சனமா அல்லது தான்தோன்றித்தனமான குதர்க்க, குத்ருஷ்டி வாதங்களா என்பதை, அவர் அடியேனுக்கு எழுதிய கடிதத்தின் சில பாகங்களால் தங்களுக்குத் தெரியவைக்க முற்படுகிறேன். இந்நிலை வந்ததற்கு மன்னித்து அருளவும். அக்குதர்க்கவாதங்களாவன:—

(a) ஆழ்வார்களை யுகங்களுக்கு முற்பட்டவர்கள் என்றெல்லாம் சரித்திர ஆராய்ச்சியின்றி மௌடீகமாகப் பரப்பிவரும்வைணவத்தில் என்றுதான் விடிவு ஏற்படுமோ அறியேன்.

(b) திருமழிசை ஆழ்வாரைப்பற்றி — "இவரே தெளிவுபெறுது பற்பல சமயங்களில் இருந்து அல்லது அவற்றை ஆராய்ந்து திருமால் நெறிக்கு வந்தவர். அரசியலில் கட்சிமாறியவர் பழைய கட்சியைக் காட்டமாகத் தாக்குவார். அதுபோலத்தான் இவர் பாசுரங்களில் சிவபெருமானை வீண் சண்டைக்கு இழுக்கிறார்."

(c) "என்னொப்பார்க்கு ஈசன் இமை — என்னபொருள் தெரியுமல்லவா? செல்வி ஜெயலலிதா தன்னிடமிருந்து பிரிந்து சென்றவர்களைக் குறிப்பிட்ட சொல்தான் அது" — "இமை" என்பதற்கு "மயிர்" என்று விநோத அதி அத்புத விளக்கமிட்டது விமர்சனமா? ஆழ்வார் பாசுரங்கள் விமர்சனத்திற்கு உட்பட்டதா? குறைந்தபட்சம் தமிழ் ஞானமே இல்லாதவர் செய்த "விமர்சனத்"தின் அழகுதானிது.

(d) "நானேதான் ஆயிடுக — வியாக்கியானத்தில் சொல்லப் பட்டுள்ள ஸ்ரீ வைஷ்ணவத்துவ பூர்த்தி, குறைந்தபட்சமாக சகிப்புத் தன்மை, நாவடக்கம் இந்த (திருமழிசையின்) வரிகளில் காணப் படுகிறதா?" — இந்த வரிகளைத் தாங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? ஆழ்வாருக்கு நாவடக்கம் இல்லையாம். என்ன ஆணவம்?

http://acharya.org

(e) "'அவரவர் இறையவர் குறைவிலர்'
'ஒக்கத் தொழுகிற்றிராகில்
கலியுகம் ஒன்றும் இல்லையே'

போன்ற திருவாய்மொழி வாக்குகள் எப்படி ஒற்றுமையை எதிரொலிக்கின்றன! வியாக்கியான கர்த்தாக்கள் இங்கெல்லாம் என்ன குழப்பி இருக்கின்றார்களோ தெரியாது."—வேதமே பயந்ததுபோல் ஆகிவிட்டது!. நமது திராவிட வேதமும் குத்ருஷ்டிகளிடமும் அவித்வான்களிடமும் மாட்டிக்கொண்டுவிட்டது. ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு ஸ்வாமி இவைகளைக் கேட்டிருந்தால் என்ன மனவருத்தம் பட்டிருப்பார்?

(f) "சிவபெருமானைத் தாமசமூர்த்தி என்று நாம் சொல்லி மகிழ்கிறோம்! நரசிம்மர், பரசுராமர் இவர்களெல்லாம் சாத்விக மூர்த்திகளா?"

(g) "திருமழிசையாழ்வாரைப்பற்றி சொல்லப்படும் வரலாறு உண்மையென்று கொண்டால், ஊசியில் நூல் கோர்ப்பாயா? இப்படியெல்லாம் ஒரு தேவதையை ப்ரிபவப்படுத்தலாமா?" — நமது ஆசார்யர்களிடமிருந்து நாம் பெற்ற குரு பரம்பரை சரித்திரங்களையே இவர் நம்பாதவர் என்று "உண்மையென்று கொண்டால்" என்னும் வாசகம் புலப்படுத்துகிறது.

(h) "திருப்பாற்கடல் கடைந்தபோது இந்திரனுக்கு ஐராவதம், செல்வங்கள், தேவர்களுக்கு அமுதம், திருமாலுக்கு மகாலட்சுமி—விஷம் வந்தபோது—அதை உண்ண சிவன்தானே வரவேண்டி இருந்தது."

(i) "நமக்கு அழகிய மணிகளைத்தந்து அவன் இடுகாட்டில் ஆடுகிறான்! ஆபரணங்கள் நமக்கு; அவனுக்கு பாம்புகள்; சந்தனம் நமக்கு; இடுகாட்டுச் சாம்பல் அவனுக்கு." — சிவன் தியாகச் செம்மலாம். இன்னும் பல பகுதிகள் உண்டு. அவற்றையும் எழுதினால் பெரிய புத்தகமாகவே ஆகிவிடும். இப்படி சாஸ்த்ரங்களையும் புராணங்களையும் அருளிச்செயல்களையும் அறியாத ஒருவர், ஆழ்வார் வாக்குகளை "விமர்சிப்பதும்", அதை ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு ஸ்வாமியின் ப்ரிய சிஷ்யரான ஒருவர் வரவேற்பதும் கலியின் கோலாகலம் போலும்!

2. 'விமர்சனம் கண்டனமாக' திரித்து மறுப்புரைக்கப்பட்டிருக்கிறது' என்று அருளியிருக்கிறீர்கள். ஸ்ரீ ஸுதர்சனர் ஸ்வாமி திரு. சுராஜின் குதர்க்க அபத்த வாதங்களைக் கண்டித்திருப்பது தங்களுக்கு 'திரித்து' உரைப்பதாகப்பட்டிருக்கிறது. இது எப்படி இருக்கிறதென்றால், ஒரு க்ருஹத்தில் பூட்டை ஒரு கயவன்

http://acharya.org

உடைக்கும்போது, 'பூட்டை உடைக்கிருன்' என்று ஒரு நல்லவர் மற்றவர்களை எச்சரிக்கும்போது, மற்ருெருவர் 'அவன் பூட்டு நல்லதா, உடைக்கும்போது உடைபடாமல் இருக்கிறதா என்று சோதிக்கிருன்' என்று கூறுவதுபோல் இருக்கிறது.

9. பகவத் பாகவத அபசாரங்களின் எல்லையில் நிற்கும் திரு. சுராஜுடன் தங்களுக்கு சம்பந்தம் வேண்டாம் என்று தங்கள் திருவடிகளை இறைஞ்சுகிறேன். வீர சோழ ப்ரஹ்மராயன்மாதிரி பாகவத அபசாரத்தில் முடியப்போகும் ஸ்ரீ சுராஜ் தங்களது உயர்ந்த பக்தியையும் ஆசார்ய ப்ரதிபத்தியையும் கெடுத்து விடுவாரோ என அஞ்சுகிறேன். மதிராபிந்து மிஸ்ரமான ஸாதகும்பகத தீர்த்த ஸலிலம்போல ஆகிவிட வேண்டாம் எனத் தங்கள் திருவடிகளிலும், பரமபதத்தில் எம்பெருமானுக்கும் ஸர்வ ஆசார்யர்களுக்கும் நித்ய கைங்கர்யம் செய்துகொண்டிருக்கும் ஸ்ரீ உ.வே. காரப்பங்காடு ஸ்வாமியின் திருவடிகளிலும் சரணம் புகுகிறேன்.

அடியேன் அபசாரத்தைப் பொறுத்தருளவேணும்,
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

அடியேன் ஸ்ரீ வைஷ்ணவ தாஸன்.
செல்வ நாரணன்.

முடிவுரை

இந்த உருக்கமான கடிதத்தைக் கண்டபின்பும் 'திருமால்' ஆசிரியர் மனம் மாருமலிருந்தால், நாம் கண்ணநீரோடே இவ்விவாதத்தை முடித்துக்கொண்டு, ஆழ்வார்களும், ஆசார்யர்களும் எவராலும் அசைக்க முடியாதபடி அரண் செய்துள்ள நமது விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ தர்ஶனத்தை இறுதி மூச்சு உள்ளவரையில், முழுமூச்சுடன் பிரசாரம் செய்யும் திருப்பணியைத் தொடர்வோம்.

S. வேங்கடம் சமயபுரம்.

80. ஜூன் '89 திருமாலில் திரு. "இரா. சுராஜ்" "சொன்னுல் விரோதம்" என்னும் தலைப்பில் எழுதுகையில், "சொன்னுல் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ" என்னும் பாசுரத்தில் ஆழ்வார் "உறுதியாக, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நீ தவறு என்று கருதுபவைகளை எதிர்த்துக் குரல் கொடுக்க உனக்கு உரிமை உண்டு. அப்படிச் செய்வது உன் கடமையுமாகும்" என்று அனைவர்க்கும் உணர்த்துவதாகக் கூறுகிருர். இது சரியா?

இது சரியல்ல. இதை ஒப்புக்கொண்டால் "நாஸ்திகர்களும் தம் நெஞ்சில் உறுதியாகப்படும் நாஸ்திகக் கொள்கைகளைப்

http://acharya.org

ப்ரசாரம் செய்வதற்கு உரிமையும் கடமையும் உண்டு” என்று ஆழ்வார் கூறுவதாக ஆகிவிடும். ஆகையால் “உளன்சுடர் மிகுசுருதியுள்” [திருவாய் 1-1-7] “வைதிகரே மெய்ப்படி யால் உன் திருவடிச்சூடும் தகைமையினர்” [திருவிருத்தம் 94] என்று ஆழ்வார் தாமே அருளிச்செய்தபடி, வேதார்த்தங் களை ஸதாசார்யர்களிடம் அடிபணிந்து கேட்டவர்களுக்கே இக்கடமையை உணர்த்துகிறாரேயொழிய ஓராசார்யனிடமும் ஒன்றும் கேட்காதவர்களுக்கு இவ்வுரிமையும் கடமையும் உண்டு என்று கூறுவதாகக் கொள்ள முடியாது. இவ்வுண் மையை நன்கு ஆராய்ந்து, திரு. “சுராஜ்” அவர்கள், தாம் ஏற்கனவே பஞ்சஸம்ஸ்காரம் ஆகாதவராயிருந்தால் அதையும் ஒரு ஞானாசார்யரிடம் பெற்று, உபயவேதாந்தங்களையும் பொழியவல்ல ஓராசார்யரிடம் முக்கியமான திவ்யப்ரபந்தங் களின் அர்த்தத்தையும், ‘முமுக்ஷுப்படி’ முதலான ஸ்வரூப க்ரந்தங்களையும் கேட்டபின்பு தம் எழுத்துப்பணியையும், ஸ்ரீவைஷ்ணவப்ரசாரப் பணியையும் தொடரவேண்டும் என்று அவரிடம் நல்லெண்ணத்தாலும், ஸ்ரீவைஷ்ணவவுலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டும் கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்ரீமத்ரங்கம் N. ராமஸ்வாமி அய்யங்கார், மதுரை.
ஸ்ரீ. வரததேசிகன், அட்வகேட், விழுப்புரம், மற்றும் பலர்.

81. தினமணி கதிர் (28—5—89) இதழில் “அபூர்வ சிற்பம்” என்கிற தலைப்பில், ரத்த வெறியில் நரசிம்மம் தேவர்களையே துன்புறுத்தத் தொடங்கினபடியால் தேவர் களின் வேண்டுகோளின் பேரில் சிவபிரான் சரபமாகத் தோன்றி நரசிம்மத்தை மாய்த்ததாகவும், அதர்வண வேதத்தில் ‘சரபோபநிஷத்’ என்கிற பிரிவு உள்ளதாகவும், ருக்வேதம் ‘அஹம் ம்ருணோ சரபாய ருஷாபந்தயே’ என்று முழங்குவதாகவும் சித்திரத்தோடு வரையப்பட்டுள்ளது. இவைகளின் பொய்ம்மையைத் தெளிவுபடுத்தப் பிரார்த்திக்கிறேன்.

இந்த தினமணிக் கதிரைக் கண்டவுடன் ‘சரபக்கதை ஓர் மறுப்பு’ என்னும் தலைப்பில் நாம் தினமணிக்கதிர் பொறுப்பாசிரியர் திரு. கி. கஸ்தூரிரங்கனுக்கு ஓர் கட்டுரை எழுதி, அதை வெளியிடும்படி கேட்டுக்கொண்டிருந்தோம். அதற்குப்பின் மூன்று இதழ்கள் வெளிவந்த பின்பும் நமது மறுப்புக் கட்டுரையை வெளியிடும் நேர்மையோ, சரபக்கட்டுரை யை எழுதியவரிடம் விளக்கம்கேட்டு வெளியிடும் நேர்மையோ

http://acharya.org

அவருக்கு இல்லை. அக்கட்டுரையை அடுத்து அச்சிட்டு, இத்தகைய கட்டுரைகளை வெளியிடக்கூடாது என்று ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸாத்விகமுறையில் போராட்டம் நடத்தினாலொழிய, கதிர், கலைமகள், கல்கி முதலிய 'காமகோடி' ஆதரவுப் பத்திரிகைகள் இத்தகைய துஷ்ப்ரசாரங்களை நிறுத்தமாட்டா என அன்பர்களுக்கு உணர்த்துகிறோம்.

சரபக்கதை - ஓர் மறுப்பு

[ஸுதர்சனர் கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார். திருச்சி-17]

28—5—89 தினமணி கதிரில் 10—வது பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கும் கட்டுரையில் பல ஆதாரமற்ற செய்திகள் உள்ளன. சரபக்கதை பிற்காலப் புராணங்கள் தவிர வேறெந்த நூல்களிலும் காணப்படாதது. திருமாலின் அவதாரங்கள் பலவற்றைச் சங்ககாலப் பழந்தமிழ் நூல்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பாடியுள்ளன. நரசிங்கனைப் பரிபாடல் சிறப்பாகப் பாடியுள்ளது. சிலப்பதிகாரம் முதலான [நாயன்மார்கள் காலத்திற்கு முற்பட்ட] எல்லாத் தமிழிலக்கியங்களிலும், காளிதாசன், பாஸன், ஸ்ரீஹர்ஷன், சூத்ரகன், பட்டநாராயணன், மாகன் முதலான எல்லா வடமொழிக்கவிஞர்களின் காவியங்களிலும் நரசிம்மாவதாரம் முதலிய திருமாலின் அவதாரங்கள் பாடப்பெற்றுள்ளன. ஆனால் இந்நூல்களில் ஒன்றுகூட சரபக்கதை, அடிமுடிதேடிய கதை, கண்ணைப் பிடுங்கி அர்ச்சனை செய்த கதை, கூர்மாவதாரத்தின் ஓட்டைப் பிரித்தகதை, வராஹாவதாரத்தின் கொம்பை ஒடித்த கதை, திரிவிக்கிரமனின் தோலை உரித்த கதை முதலான சிவபரத்துவக்கதைகளைக் குறிப்பிடவில்லை. இதிலிருந்து திருமாலின் பெருமையில் பொருமை கொண்ட சிலரால் கற்பனை செய்யப்பட்டவையே இக்கதைகள் என விளங்குகிறது. சரபோபனிஷத் என்பது 300 வருடங்களுக்கு முற்பட்ட எவராலும் கையாளப் படாத ஓர் கற்பனை உபநிஷத்து. ருக்வேதம் "அஹம் ர்ருத்ரேண சரபாய குஷிபந்தயே" என்று எந்த இடத்தில் முழங்குகிறது, அதன் பொருள் என்ன என்று கட்டுரை ஆசிரியர் விளக்குவாரா? 'சரபத்தை கண்ட பேரண்டம் அழித்தது' என்னும் கதையைக் கற்பனை என்று கூறும் கட்டுரையாசிரியர் சரபக்கதையும் ஓர் பெருங்கற்பனையே என்பதை உணராதது என்னே?

http://acharya.org

உண்மையின் வெற்றி

81வது கேள்வியின் பதிலை, சென்ற இதழில் நாம் அச்சிட்டு வெளியிட்ட அடுத்தநாளே (25-6-89) தினமணிகதிரில் (பக்கம் 14) சரபக்கதைபற்றிய நம்முடைய மறுப்புக்கட்டுரை வெளியிடப் பட்டது. கதிர் பொறுப்பாசிரியர் திரு. கஸ்தூரிரங்கனின் நேர்மையைப் பாராட்டுகிறோம். நம்முடைய இந்த மறுப்பு கதிரில் வெளிவந்து மூன்று இதழ்கள் வெளியானபின்பும், நாம் எடுத்துக்காட்டியிருக்கும் பலபல விஷ்ணு தூஷணக்கதைகளுக்கு வேதம் முதலான பிரமாணங்களிலிருந்தோ பழைமையான தென் மொழி வடமொழிக் காவியங்களிலிருந்தோ ஓர் ஆதாரமும் எவராலும் காட்டமுடியவில்லை. 25-6-89 கதிரிலேயே (பக்கம் 20) 'தேவி மகாத்மியம்' என்னும் கட்டுரையில் "காளியின் அருளால் திருமால் மதுகைடபர்களை அழித்தார்" என்னும் (மிகப் பிற்கா லத்தில் எழுதப்பட்ட தேவீ பாகவதத்தில் உள்ள) ப்ரம்மாண்டப் புளுகுக் கதை அச்சிடப்பட்டுள்ளது. இத்தகைய பொய்க் கதைகள் ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸங்களுக்கும், காளிதாஸன் முதலான பழைய வடமொழிக் கவிஞர்களின் காவியங்களுக்கும், சங்கநூல்கள் முதலான பழைய தென்மொழி இலக்கியங்களுக் கும் முரண்பட்டவையாகையாலே, சிவபரத்வக் கதைகளைப் போலவே திருமாலின் பெருமையில் பொறாமைகொண்ட சில ரால் கற்பனைசெய்யப்பட்டவையாகையால் அறிவாளிகளால் காற்கடைக்கொள்ளத்தக்கவை என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். சிவபுராணம், கந்தபுராணம், தேவீபாகவதம் முதலான பிற்காலத்தில் எழுந்த தாமஸ நூல்களில் காணப்படும் நூற்றுக்கணக்கான விஷ்ணு த்வேஷக் கதைகளுக்கு மரண அடி கொடுத்திருக்கும் நமது மறுப்புக்கட்டுரையை வெளியிட்டு உண்மை வெற்றியடைய உதவியதற்கு தினமணி கதிருக்கு மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறோம். கலைமகள், கல்கி பத்திரிகைகளுக்கும் இந்த நேர்மை உண்டாக வேண்டுமென்று எதிர்பார்ப்போமாக. "ஸத்யமேவ ஜயதே" (உண்மையே வெல் லும்) என்னும் வேதவாக்கு எவராலும் மாற்ற முடியாததாகும்.

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்

82. என்னுடைய 79வது கேள்விக்குப் பதிலாக சுமார் ஐந்து பக்கத்துக்குமேல் தேவரீர் காட்டிய உண்மைகள் எதற்கும் எந்த பதிலையும் எழுதாமல், ஜூலை 'திருமால்' இருபதாம் பக்கத்தின்கீழே பல பொய்கள் நிரம்பிய கடிதம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. 'சுராஜ்' தனக்கு

எழுதிய கடிதம் என்று தெளிவாக ஸுதர்சனத்தில் செல்வ நாரணர் குறிப்பிட்டிருக்கும்போது அது திருமால் இதழில் வெளியிட்டதுபோல் ஸுதர்சனத்தில் திரித்துக்கூறி யிருப்பதாக அக்கடிதத்தில் பெரும்பொய் எழுதப்பட் டுள்ளது. "காரப்பங்காடு ஸ்வாமி" என்று தொடங்கி அக்கடிதத்தில் எழுதியிருக்கும் அநந்விதமான வாக்கியம் அப்பட்டமான பொய் என்பது வெளிப்படை. அக்கடிதத் தின் கடைசிப்பாராவில் தனி வெளியீட்டின் மூலம் தங்கள்மீது வசைமாரிகள் பொழியப்போவதாக பயமுறுத் தப்பட்டுள்ளது. தங்கள் நிலையைத் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

எட்டு மாதங்களாக நடக்கும் இந்த விவாதத்திலிருந்து 'திருமால்' ஆசிரியரின் மனப்பான்மை மிகத் தெளிவாக விளங்கிவிட்டது. தகாத வழியில் செல்லும் இவர் திருந்த வேண்டும் என்னும் நல்லெண்ணத்தாலேயே நாமும், பல அன்பர்களும் இவருக்கு ஹிதத்தை எடுத்துக்காட்டினோம். 7—7—89 அன்று மூதறிஞரும் ஆங்கிலத்தில் பலபல ஸம்ப்ர தாய நூல்களை எழுதியவருமான குவாலியர் ஸத்யமூர்த்தி அய்யங்கார் ஸ்வாமி சுராஜை இவர் ஆதரிப்பது தவறு என எடுத்துக்காட்டி ஓர் உருக்கமான கடிதத்தை எழுதி, அதன் நகலை நமக்கு அனுப்பியுள்ளார். எவர் சொல்லுக்கும் இவர் செவி சாய்ப்பார் என்று தோன்றவில்லை. டிஸம்பர் '88 திருமாலில் "பொன் திகழும்" [முதல் திருவ 98] என்னும் பாட்டின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தை சுராஜ் கண்டித்ததும் சிவவிஷ்ணு ஸாம்யவாதத்தைச் செய்ததும் விமரிசனமேயாகையால் சரியானதே என்கிறார் 'திருமால்' ஆசிரியர் '89 ஜனவரி 'திருமாலில்' சுராஜ் திருமழிசை யாழ்வாரைச் 'சண்டைக்காரர்' என்றும், தொண்டரடிப் பொடியாழ்வாரின் ஸ்ரீ ஸூக்திகளை 'வெறிச் சொற்கள்' என்றும் எழுதியது விமரிசனமேயாகையால் சரியானதே என்கிறார் 'திருமால்' ஆசிரியர். திருமால் பத்திரிகையின் துணை ஆசிரியர் பதவியிலிருந்து சுராஜ் நீங்கியபின்பு '89 ஏப்ரல் இதழில் (பக்கம் 18) வண்டு, மயில், கொண்டல், குயில் முதலானவற்றுக்கெல்லாம் ஸ்வாபதேசம் கூறு வது பயமுறுத்தல் என்றும், அரஸிகர்களின் செயல் என்றும் பொருள்பட எழுதுவதன்மூலம் ஸ்வாபதேசார்த்தங்களைப் பல இடங்களில் அருளியிருக்கும் நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் முதலான பூர்வாசார்யர்களை 'சுராஜ்' பரிஹாஸம் செய்திருப்பது விமரி

http://acharya.org

சனமேயாகையால் சரியானதே என்கிறார் திருமால் ஆசிரியர். இதிலிருந்து ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும் இப்படி 'விமர்சித்து' சுராஜ் எழுதும் கட்டுரைகள் திருமாலில் தொடர்ந்து வெளிவரப்போகின்றன என்று விளங்குகிறது. '89 ஜூன் திருமாலில் தம் நெஞ்சில் தோன்றினதைச்சொல்ல அனைவர்க்கும் உரிமையும், கடமையும்உண்டு என்று நம்மாழ்வார் அனைவர்க்கும் அறிவுறுத்துவதாக சுராஜ் எழுதியிருப்பது இதை வலியுறுத்துகிறது. ஓர் ஆசாரியரிடமும் ஓர் அர்த்தத்தையும் கேளாதவராய், தன் நெஞ்சில் தோற்றினதே சொல்லுகின்றவராய், ஆழ்வார்களை யும் அருளிச்செயல்களையும் தாழ்வா நினைப்பவராய், ஆழ்வார் களையும் ஆசார்யர்களையும் முற்கூறியபடி திருமால் கட்டுரை களிலும், மற்றும் பலவாறு திருமால் அடியார் குழாம் பேச்சுக் களிலும் இடைவிடாது நிந்தித்து வருபவரான சுராஜ் உபதேச ரத்தினமாலையில் 68ம் பாட்டில் ''பின்னவர்'' என்று சொல்லப் பட்ட ஆத்திகநாத்திக வகுப்பைச் சேர்ந்தவர் என்று தெளிவாக விளங்குகிறது. அத்தகையவர்களை அடியோடு கைவிட வேண்டும் என்று மாமுனிகள் அப்பாட்டில் அருளிச்செய்தி ருக்கிறார். ஆழ்வார்களையும் அருளிச்செயல்களையும் தாழ்வா நினைப்பவர்கள் மிகத்தீயவர்களாகையாலே, எப்போதும் அவர்பால் சென்று அணுகக் கூசித்திரிய வேண்டும் என்று 35ம் பாட்டில் மாமுனிகள் தம் நெஞ்சுபோல்வாரான ஸ்ரீவைஷ் ணவர்களுக்கு நியமிக்கிறார். மாமுனிகளின் திருவடி ஸம்பந் தத்தையே பெருப்பேருக நினைக்கும் நாம் இந்த நியமனங் களைத் திடமாகப் பின்பற்ற உறுதிபூண்டுள்ளோம். ''தீய கந்தமுள்ளதொன்றைச் சேர்ந்திருப்பதொன்றுக்குத் தீயகந்த மேறும் திறமதுபோல்'' (70) என்னும் பாட்டில் மாமுனிகள் அருளியதுபோல் சுராஜ் கட்டுரையைச் சுமந்துவரும் 'திருமால்' பத்திரிகையும் மாமுனிகளின் நியமனத்தைச் சிரமேற்கொள் ளும் ஸாத்விகர்களுக்குக் கைவிடத்தக்கது என்பது சொல்லா மலே விளங்கும். ஆகையால், நமக்கு இனி 'திருமால்' பத்திரி கையை அனுப்ப வேண்டாம் என்று 'திருமால்' ஆசிரியரைக் கேட்டுக்கொள்கிறோம். மீறி அனுப்பினால் திருப்பியனுப்பப் படும். 'த்₃விஷத₃ந்நம் ந போ₄க்தவ்யம் த்₃விஷந்தம் நைவ போ₄ஜயேத்'' [விரோதியின் அன்னத்தைப் புசிக்க லாகாது; அவனுக்கு உணவிடலுமாகாது.] என்னும் எம்பெரு மானின் நியமனத்தை அடியொற்றி, 'சீமாலிகன் கையில் ஸுத₃ர்சனம்' என்று எழுதியதன் மூலம் ஸுத₃ர்சனத்தின் மேல் கடுமையான த்₃வேஷ விஷத்தைக் கக்கிய இவருக்கு இனி ஸுத₃ர்சனமும் அனுப்பப்படமாட்டாது.

http://acharya.org

K. ரகுநாதய்யங்கார், சைதாப்பேட்டை, சென்னை-15.

83. '89 ஜூன் 17உ மாலை மயிலையில் நடைபெற்ற ஸ்ரீவைஷ்ணவ ஆகமக் கருத்தரங்கில் கண்டபடி பேசிய "அஹோ" (அக்னிஹோத்ரம் ராமாநுஜதாதாசாரியார்) தமது கருத்துக்களை 23உ 'ஹிந்து' சென்னை நகரப் பதிப்பில் "பாஞ்சராத்திரத்தின் மேல் புதுவெளிச்சம்" எனும் தலைப்பில் சிறு கட்டுரையாக வெளியிடுவித்திருக்கிறார். மறுநாள் நடந்த ஆகமக் கருத்தரங்கிலும் பல ஸ்வாமிகள் ஆகமங்களின் பெருமையை அழகாகப் பேசினார்கள். சிலர் 'அஹோ'வின் கருத்துக்களை ஆதாரத்துடன் அழகாகக் கண்டித்தார்கள். 'ஹிந்து'வில் வந்துள்ள கட்டுரையை இத்துடன் அனுப்பியிருக்கிறேன். கிருபையுடன் நன்கு பரிசீலனை செய்து, ஸுதர்சனத்தில் பதில் அளித்து உபகரிக்க வேண்டுகிறேன்.

ஆகமக் கருத்தரங்கில் "அஹோ" கேட்பார் செவி சுடும்படி பேசிய பேச்சு பத்திரிகையில் சில மாறுதல்களுடன் (எடிட் செய்யப்பட்டு) 'ஹிந்து'வில் வெளியிடப் பெற்றுள்ளது. "அஹோ"வின் ஆதாரமற்ற கருத்துக்களை ஒவ்வொன்றாகக் கொடுத்துஅவற்றுக்கு பதில் அளிக்கிறோம் :— (1) 'பௌத்தர்களைப்போலே இந்தப் பாஞ்சராத்ரமதமும் சாதிப்பிரிவுகளை மறுத்தது. பாகவதர்கள், ஸாத்வதர்கள் முதலான பெயர்களையுடைய புது ஸமூஹத்தை உண்டாக்கிற்று. இந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒரே கடவுளை வலியுறுத்தியபடியால் ஏகாந்திகள் என்று அழைக்கப்பட்டார்கள். வாழ்க்கையில் துறவு நிலையொன்றையே வலியுறுத்தியபடியால் பரமைகாந்திகள் என்றும் அழைக்கப்பட்டார்கள்" என்கிறார் அஹோ. இது முழுப்பொய். பாஞ்சராத்ராகமங்கள் வர்ணாச்ரம தர்மங்களை ஏற்றுக்கொண்டே அமைந்திருப்பவை என்று ஸம்ஹிதைகளில் இன்றும் நாம் காணலாம். வர்ணாச்ரம தர்மங்களைக் காட்டிலும் வைஷ்ணவ தர்மத்துக்கே பல ஸ்ம்ருதிகளிலும் இதிஹாஸங்களிலும் ஸாத்விக புராணங்களிலும் முக்கியத்வம் கொடுக்கப்பட்டிருப்பது போலே பாஞ்சராத்ரத்திலும் வைஷ்ணவ தர்மத்துக்கு முக்கியத்வம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களில் "எம்பெருமானடியார்கள் சூத்ர வர்ணத்தில் பிறந்திருந்தாலும் சூத்ரர்கள் அல்லர்; அந்தணர்களேயாவர்; ஜநார்த்தனனிடம் பக்தியில்லாதவர்கள் எந்த வர்ணத்தில் பிறந்திருந்தாலும் சூத்ரர்களே" "நாலு வேதத்தையும் ஓதியிருந்தாலும் வாஸுதேவனையடையாதவன் வேதமாகிற சுமையைச் சுமக்கும் கழுதையேயாவான்" "பன்னிரண்டு குணங்களையுடையவனாயினும் பத்மநாபனின் பாதாரவிந்தங்

களில் பக்தியில்லாத அந்தணனைக் காட்டிலும் நாய் மாமிசம் தின்பவன் சிறந்தவன்" முதலான வித்₃வத்₃கோ₃ஷ்டீ₂ ப்ரஸித்தமான வசனங்களில் கேவல ப்₃ராஹ்மண வர்ணம் இகழப்பட்டிருப்பதைக் காணலாம். பாஞ்சராத்ரத்திலும் இதுவே செய்யப்பட்டுள்ளது. சாதிப்பிரிவினை மறுக்கப்படவில்லை. ஒரே தெய்வக் கொள்கையும் "ஈசாதே தே₃வ ஏக:" "ஏகமேவாத்₃விதீயம்" "தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:" முதலான உபநிஷத்₃வாக்யங்களிலும், பல்லாயிரக்கணக்கான ஸ்ம்ருதீதிஹாஸபுராண வாக்யங்களிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்த ஒரு தெய்வமான நாராயணனுக்கு அடங்கிய பல தெய்வங்களும் கூறப்பட்டுள்ளன. பாஞ்சராத்ரத்தின் நிலையும் இதுவேயாகும். ஆகவே 'அஹோ' கூறுவது போல் பாஞ்சராத்ரம் எந்தப் புது மதத்தையும் ஸ்தாபிக்கவில்லை, பரமைகாந்திகள் துறவு நிலையை வலியுறுத்தியவர்கள் என்பதும் அபத்₃த₄ம். "ஜ்ஞாநீ து பரமைகாந்தீ தத₃ாயத்தாத்மஜீவந: | தத்ஸம்ஶ்லேஷ வியோகைகஸுக₂து₃:க்க₂ஸ் தத₃ேகதீ₄:||" [கீ₃தார்த₂ஸங்க்₃ரஹம் 29] [தன் வாழ்வை எம்பெருமானுக்கு அதீ₄னமாகக் கொண்டவனாய், அவனைச் சேர்வதிலேயே இன்பத்தையும், பிரிவதிலேயே துன்பத்தையும் காண்பவனாய், அவனிடமே நெஞ்சு செலுத்தியவனான ஜ்ஞானியே பரமைகாந்தியாவான்] என்று ஆளவந்தார் அருளினார். "எம்பெருமானையே தெய்வமாகக் கொண்டவன் ஏகாந்தி; அவனையே பயனாகவும் கொண்டவன் பரமைகாந்தி" என்று ஸ்ரீவேதாந்த தேசிகர் இதற்கு உரையிட்டார். ப்ரச்சூ₂ன்ன பௌ₃த்₃த₄ர்களோடு கூடிக் குலாவி வாழும் இவர் பாஞ்சராத்ரிகளை பௌத்தர்களைப் போன்றவர்கள் என்று எழுதுவது பெரிய மோசடியாகும்.

(2) "மஹாபாரதத்தில் பாஞ்சராத்ரிகள் வேதத்தையொட்டியவர்கள் என்று சில இடங்களிலும், வேதத்துக்கு மாறுபட்டவர்கள் என்று சில இடங்களிலும் வர்ணிக்கப்பட்டுள்ளார்கள். பாஞ்சராத்ரமதம் மோக்ஷ மார்க்கம் என்று சில இடங்களிலும் மோக்ஷத்திற்கு முரண்பட்டது என்று சில இடங்களிலும் கூறப்பட்டுள்ளது" என்று எழுதுகிறார் அஹோ. எந்த இடத்தில் இப்படி முன்னுக்குப் பின் முரணாக எழுதப்பட்டுள்ளது என்று இவர் காட்டவில்லை. பாஞ்சராத்ர மதம் மோக்ஷ மார்க்கம் என்றும், வேதத்தை ஒட்டியிருப்பது என்றும் மஹாபாரதத்தில் பல இடங்களில் சொல்லப்பட்டிருப்பதைப் பூர்வாசார்யர்கள் காட்டியிருக்கிறார்கள். இன்றும் அந்த சுலோகங்களை மஹாபாரதத்தில் நாம் காண்கிறோம். முரணாகப் பேசியிருக்கும் இடங்களை நேர்மையுள்ளவராயிருந்தால் இவர் எடுத்துக்காட்டட்டும்.

http://acharya.org

(3) "பாஞ்சராத்ரிகள் உபநிஷத்தில் 'ப்₃ரஹ்ம' என்று கூறப்படும் பரம்பொருள் விஷ்ணுவாகிற வாஸுதேவனே என்று கூறியபடியால் ஆளவந்தாரும் ராமாநுஜரும் அதை ஆதரித்தார்களேயொழிய, அதைப் பின்பற்றவில்லை. சாதுர் வர்ண்யக் கொள்கையையும், அக்னியில் கடவுளை ஆராதிப்பதையுமே பின்பற்றினர்கள். ராமாநுஜர், மனத்தில் பரமாத்மாவைக் காண்பதையே மோக்ஷ ஸாதனமாகக் கொண்டார். பாஞ்சராத்ரிகள் கோயில் பூஜையைத் தொழிலாகக் கொள்ள ராமாநுஜரால் அனுமதிக்கப்பட்டார்கள். ஏற்கனவே வேத வழியைப் பின்பற்றிய வைகாநஸர்கள் கோயில் பூஜையைக் கைக்கொண்டிருந்தார்கள். ஆனால் துரத்ருஷ்ட வசமாக இந்த மதங்கள் அழிந்து விட்டன. அதற்குக் காரணம் இந்த ஆகமிகள் அந்தந்தப் பிரதேச தெய்வங்களை வணங்க முற்படாததேயாகும்" என்று எழுதுகிறார் அஹோ. இது முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதாகும். உபநிஷத்துக்கள் பரம்பொருளை "ப்₃ரஹ்ம" என்று மாத்திரம் குறிக்கவில்லை. ஸத், ஆகாசம், வாயு, அக்₃னி, ஆத்மா, இந்த்₃ரன், ப்ரஜாபதி, ஹிரண்யகர்ப்ப₄ன், சிவன், ருத்₃ரன், விஷ்ணு, அச்யுதன், அனந்தன், ஹரி, வாஸுதே₃வன் நாராயணன் முதலான பலபல பெயர்களால் பரம்பொருளைக் குறிப்பிடுகின்றன. இதை அடியோடு மறைத்து அஹோ அடிக்கடி எழுதுவதும், பேசுவதும் பாமர ஜனங்களை ஏமாற்றுவதற்காகச் செய்யும் பெரிய மோசடியாகும். பரம்பொருளின் திருநாமங்களான இவையனைத்தும் ஸாமான்ய விசேஷ ந்யாயத்தால் நாராயணனையே குறிக்கும் என்று ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்கள் நிர்ணயித்திருப்பதற்கு எந்த பதிலும் சொல்ல முடியாத இவர் இப்படி அடிக்கடி பொய் எழுதுகிறார். ஆளவந்தாரும் ஸ்ரீராமாநுஜரும் பாஞ்சராத்ரத்தைப் பரிபூர்ணமாகப் பின்பற்றியவர்கள் என்பது அவர்களது நூல்களிலிருந்து தெளிவாக விளங்கும்போது இவர் அதை இல்லை செய்வது இவர் பெரும் பொய்யர் என்பதையே காட்டித் தருகிறது. ஆகமங்களிலும் அக்னியில் எம்பெருமானை ஆராதிக்கும் யாகசாலைக் காரியங்கள் சொல்லப்பட்டிருக்கும்போது அது பின்னால் வந்தது என்று இவர் எழுதுவது இவருடைய கற்பனையேயாகும். ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீரங்க₃க₃த்₃யத்தில் ஸ்ரீரங்க₃நாத₂னிடம் சரணாகதி செய்திருப்பதிலிருந்து அவர் பாஞ்சராத்ர ஆகமத்தில் சொல்லப்பட்ட அர்ச்சாராத₄னத்தைப் பரிபூர்ணமாக ஏற்றுக்கொண்டவர் என விளங்குகிறது. ஸ்ரீராமாநுஜருடைய சிஷ்யரான விஷ்ணுசித்தர் (எங்களாழ்வான்), பெரியவாச்சான் பிள்ளை, ஶ்ருதப்ரகாசிகா பட்டர், ஸ்ரீவேதாந்த தேசிகர் ஆகிய பல ஆசார்யர்களால் உரையிடப்பட்டிருக்கும் கத்யத்ரயத்தை ஸ்ரீராமாநுஜர் செய்ததில்லை என்று இவர் பிதற்றுவது நடு

http://acharya.org

நிலையாளர்களால் ஏற்கத்தக்கதன்று. பாஞ்சராத்ரமும் வைகாநஸமும் இன்றும் தமிழ்நாட்டில் வெற்றி முரசு கொட்டிக் கொண்டிருக்கும்போது அவை அழிந்துவிட்டன என்று எழுதுவதும், அதற்குக் காரணத்தைக் கற்பிப்பதும் இவர் ப்ரஹ்மாண்டப்புளுகர் என்பதையே காட்டுகிறது. பாஞ்சராத்ரத்துக்கும் வைகாநஸத்துக்கும் சண்டை மூட்டி விடுவதற்கு அஹோா செய்யும் முயற்சியில் எவரும் மயங்க மாட்டார்கள்.

(4) "ஆசார்யர்கள் பரம்பொருளுக்கு 'நாராயணன்' என்னும் பெயரை ஏற்றுக் கொண்டார்களேயொழிய 'வாஸுதேவன்' என்னும் பெயரை ஏற்றுக்கொள்ளவில்லை" என்று கதைக்கிருர் அஹோா. பூர்வாசார்யர்கள் நாராயண நாமத்துக்கு மற்ற நாமங்களைக் காட்டிலும் சிறப்பைச் சொல்லியிருக்கிருர்கள் என்பது உண்மை. "வாஸுதேவாதிநாமங்களை ஏற்றுக்கொள்ளவில்லை" என்பது முழுப்பொய்.

(5) தென்கலை வடகலைச் சண்டையையும் மூட்டி விடப் பார்க்கிருர் அஹோா. ஸ்ரீவேதாந்த தேசிகர் ஏகபாதத்திரு நாமத்தையே ஆதரித்தார் என்று எழுதுகிருர். ஸ்ரீதேசிகர் ஸச்சரித்ரரக்ஷையில் திருநாமம் எம்பெருமானுடைய பாதாக்ருதியாக அமைய வேண்டும் என்று ப்ரமாணம் காட்டிப் பலவிடங்களில் எழுதியுள்ளார். 'பாதாக்ருதி' என்னும் ஸமஸ்தபதத்தை 'பாதஸ்ய ஆக்ருதி:' என்றும் "பாதயோ: ஆக்ருதி:" என்றும் இருவிதமாகவும் பிரிக்கலாம். "பாதஸ்ய ஆக்ருதி:" என்று பிரித்தார்கள் வடகலையினர். "பாதத்வயாக்ருதி" என்னும் மற்றொரு வசனத்தையொட்டி, "பாதயோ; ஆக்ருதி:" என்று பிரித்தனர் தென்கலையினர். "புண்ட்ரத்தின் நடுவில் சிறிது இடம் விட்டால் போதும்" என்று எழுதுகிருர் அஹோா. "ஊர்த்வ புண்ட்ரஸ்ய மத்யே து விசாலே அதிமனோஹரே" என்னும் ப்ரஹ்மாண்ட புராண வசனத்தைக் கொண்டு, இடைவெளி விசாலமாயிருக்க வேண்டும் என்றும், அந்த இடைவெளியில் லக்ஷ்மியோடு எம்பெருமான் எழுந்தருளியிருக்கிருன் என்றும் தேசிகர் நிர்ணயித்திருப்பதற்கு இது முரண்பட்டதாகும். ஏகபாதாக்ருதியாயிருந்தால் அதில் இடைவெளியிருப்பதும், அதில் ஸ்ரீமந் நாராயணன் எழுந்தருளியிருப்பதும் எப்படி ஒட்டும்?

(6) ஆலயங்களிலுள்ள அர்ச்சைத் திருமேனிகளில் தம் காலத்தில் தீப ஶிகாகாரமான திருமண்காப்பே இருந்ததாக ஸ்ரீதேசிகர் கூறுவதாக எழுதுகிருர் அஹோா. இதுவும்

http://acharya.org

பெரும் பொய்யாகும். "அழகு பற்றிய அவரவர் அபிமானத்தின்படி அர்ச்சைத் திருமேனியில் பலவிதமான ஊர்த்வ புண்ட்ரங்களை அடியார்கள் சாத்துவதாக ஸ்ரீதேசிகர் ஸச்சரித்ரரக்ஷையில் அருளியிருக்கிறார்.

(7) "ஆழ்வார்கள் ஸங்கர்ஷணன் ப்ரத்யும்னன் முதலான வ்யூஹமூர்த்திகளின் பெயரை எடுக்காமையாலே அவர்கள் ஆகமங்களைப் பின்பற்றவில்லை" என்று எழுதுகிறார் அஹோரா. ஆழ்வார்கள் பாஞ்சராத்ரத்தை மொழிபெயர்க்கவில்லை. ஆகையால் ஸங்கர்ஷணன் ப்ரத்யும்னன் முதலான பெயர்களை அவர்கள் எழுதவேண்டிய அவசியமில்லை. பரம் முதலான ஐந்து நிலைகளையும் அவர்கள் பல இடங்களில் காட்டியிருக்கிறார்கள். அர்ச்சாவதாரத்தில் மண்டியிருக்கிறார்கள். வ்யூஹத்துக்கு எடுத்துக்காட்டாக, பாற்கடலில் பையத்துயின்ற பரமனைக் கூறியிருக்கிறார்கள். ஆகமங்களில் கூறியுள்ள பஞ்சஸம்ஸ்காரங்களை ஆதரித்திருக்கிறார்கள். மற்றும் பல ஆகமக்கொள்கைகளையும் அறிவித்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் காணக் கண்ணிட்டிருப்பது அஹோராவின் வைணவ விரோதப்போக்கையே தெளிவுபடுத்துகிறது.

"வரலாற்றில் பிறந்த வைணவம்" என்னும் நூலில் பல வருடங்களுக்குமுன் இவர் இத்தகைய பல அபத்தமான விஷயங்களை எழுதி வைணவத்தைத் தாறுமாறாகத்தாக்கிய போது "அக்னிஹோத்ரியும் வைணவமும்" என்னும் நமது நூலில் அவற்றுக்குத் தக்க பதில் உரைத்திருக்கிறோம். பல பல ஸ்ரீவைஷ்ணவவித்வான்கள் இவரைக் கண்டித்திருப்பதையும் அச்சிட்டிருக்கிறோம், அப்படியிருந்தும் 'ஹிந்து' பத்திரிகைக்காரர்களுக்கு ஆசார்யராயிருக்கும் சலுகையைப் பயன்படுத்தி, அடிபட்டுப்போன வாதங்களையே அப்பத்திரிகையில் திருப்பித்திருப்பி எழுதிவருகிறார். இவருக்கு நேர்மை சிறிதாவது இருந்தால், மயிலை குப்புஸ்வாமி சாஸ்திரி ஆராய்ச்சிக் கழகத்தின்மூலம் ஆகமம் அறிந்த வைதிக லௌகிகர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் ஒரு கருத்தரங்கை நடத்தச்செய்து அதில் தம் கொள்கைகளை ஆதாரங்காட்டி நிலைநாட்டட்டும். அக்கருத்தரங்கில் நாமும் கலந்துகொண்டு "இவர் கொள்கைகள் ஆதாரமற்றவை" என்று நிரூபிப்போம். இதைச்செய்யாமல் தாறுமாறாக வழக்கப்படி இவர் எழுதிக்கொண்டிருந்தால் உன்மத்தப்ரலபிதம் (பைத்தியக்காரனின் பிதற்றல்) போலே நடுநிலையாளர்கள் அவற்றைக் காற்கடைக்கொள்ள அடுக்கும்.

http://acharya.org

ப. வெ. ஸௌந்தரராஜன், சென்னை-33.

84. மே '89 கலைமகளில் காமகோடிப் பெரிய பீடாதிபதி, "ஸ்ரீராமன் ராமேச்வரம், பட்டீச்வரம் முதலான பல இடங்களில் லிங்க ப்ரதிஷ்டை பண்ணி, தான் செய்த ராவணவதம், தாடகா ஸம்ஹாரம், வாலிவதம் ஆகிய வற்றால் ஏற்பட்ட பாபங்களைப் போக்கிக் கொண்டார்" என்று எழுதியிருக்கிறார். வால்மீகி ராமாயணம் முதலான எந்தப் பழைய ப்ரமாணங்களிலும் இலக்கியங்களிலும் இல்லாத இக்கற்பனைக் கதைகளை மிகச்சமீபகாலங்களில் எழுதப்பட்ட தலபுராணங்களை ஆதாரமாகக் கொண்டு பொது ஜனப் பத்திரிகைகளில் அடிக்கடி இவர் எழுதி வருவதின் நோக்கம் என்ன?

'ஸுதர்சனம்' வைகாசி இதழில் வெளிவந்த 77வது கேள்வியின் பதிலில் பீடாதிபதி அடிக்கடி கூறிவரும் இக் கதைகளின் பொய்ம்மை நிரூபிக்கப்பட்டது. பல வருடங் களாக ஸுதர்சனர் பதிலில் பல இடங்களில் நாம் இதைப் பல ஆதாரங்களைக் காட்டி நிரூபித்து வருகிறோம். "ராமேச் வரத்தில் ராமன் லிங்க ப்ரதிஷ்டை செய்தான் என்பதே ஒரு பெரும் பொய்" என்னும் விஷயம் முகவை வழக்கறிஞர் திரு. S. T. சடகோபன் அவர்களால் தமது 'இராமலிங்க ப்ரதிஷ்டை' என்னும் நூலில் விரிவாக நிரூபிக்கப்பட்டது. இப்படியிருந்தும், இப்பொய்யை மிகவும் விரிவுபடுத்தி சமீப காலத்தில் சிலர் தல புராணங்கள் எழுதியதை ஆதாரமாகக் கொண்டு பீடாதிபதி நம்முடைய மறுப்புகளுக்கு எந்த பதிலை யும் சொல்லாமல் பொய்க் கதைகளையே "கலைமகள்" முதலான பொதுஜனப் பத்திரிகைகளில் திருப்பித் திருப்பிப் பிரசாரம் செய்வது பாமர மக்களை ஏமாற்றும் நோக்கத் தையே கொண்டது என்பது வெளிப்படை. உண்மையை மறைத்து, பொய்யையே திருப்பித் திருப்பி எழுதி வருவது விஷ்ணு த்வேஷத்தாலானது என்றும் மிகத்தெளிவாக விளங்குகிறது. இத்தகைய த்வேஷப்ரசாரங்களின் பொய்ம் மையை, உண்மைக்கு மதிப்பளிப்பவர்கள் அனைவரும் இடை விடாமல் கண்டிப்பதே இப்பொய்ப் பிரசாரத்தை முறியடிக்க வழியாகும். அதை அன்பர்கள் அனைவரும் மேற்கொள்வார் களாக.

http://acharya.org

S. வேங்கடம், சமயபுரம்.

85. 14—8—'89 தினமலரில், கம்பன் கோட்டம் அமைப்பது பற்றித் தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி பேசியதாக வந்த செய்தியில் "வால்மீகி ராமாயணத்தில் ராமன் காட்டுக்குப் போகும்போது சீதை அவனோடு புறப்படத் தயாராக இல்லை. ஆனால் கம்பன் காப்பியத்தில் சீதை அவனோடு புறப்படுகிறாள்" என்றும், "கி. பி. 86 (86?) இல் கம்பன் காப்பியம் அரங்கேற்றப் பட்டதாகவும், இரண்டாவது அரங்கேற்றம் திருவரங்கத்தில் நாதமுனி தலைமையில் நடந்ததாகவும் வரலாறு தெரிவிக்கிறது. நாதமுனிக்கு ஓர் ஆசை; திவ்யப்ரபந்த வரிசையில் கம்பராமாயணத்தைச் சேர்க்க வேண்டும் என்பதுதான் அது. ஆனால் சடையப்ப வள்ளல் என்ற மனிதனைப் புகழ்ந்து பாடியதற்காக அது புறக்கணிக்கப் பட்டது. இன்றும் அந்த நிலை நீடிக்கிறது. அது ஏன்? என்று சிந்தித்து உணர்வு கொள்ள வேண்டும்" என்றும் வெளிவந்துள்ளது. இவற்றை விமர்சிக்க வேண்டுகிறேன்.

வால்மீகி ராமாயணத்திலும் "ஸ்ரீராமபிரானுக்கு முன்னமே சீதை காட்டுக்குப் புறப்படத்தயாராகி விட்டாள்" என்றே உள்ளது. காட்டுக்குக் கூட்டிச் செல்ல மறுத்த ஸ்ரீராம பிரானை சீதை கடுமையாக விமர்சித்ததாகவும் உள்ளது. ஆகையால் முதல்வர் பேசியிருக்கும் முதல் விஷயம் தவறான தகவலை அடிப்படையாகக் கொண்டது. நாதமுனிகள் கம்ப ராமாயணத்தை திவ்யப்ரபந்த வரிசையில் சேர்க்கவேண்டும் என்று ஆசைப்பட்டதாகக் கூறியிருப்பதற்கு எந்தப் பழைய நூலிலும் ஆதாரமில்லை. திவ்யப்பிரபந்தத்தை அருளிய ஆழ்வார்கள் வெறும் கவிஞர்களல்லர். ஸ்ரீமந்நாராயணனால் மயர்வறமதிநலமருளப் பெற்றவர்கள். அவர்களுடைய அருளிச் செயல்களில் கற்பனை எதுவும் கிடையாது. கம்பன் ஒரு மகாகவியேயொழிய மயர்வறமதிநலமருளப் பெற்றவனல்லன். அவனுடைய காப்பியத்தில் மற்ற காப்பியங்களிற்போலவே கற்பனைகள் பல உள்ளன. ஆகையால், திவ்வியப்பிரபந்த வரிசையில் அவனது காப்பியத்தைச் சேர்ப்பதற்கு இடமே யில்லை. "கம்பராமாயணம் சடையப்பவள்ளல் எனும் மனிதனைப்

http://acharya.org

பாடியதற்காக திவ்வியப்பிரபந்த வரிசையில் சேர்க்கப்படவில்லை" என்று கூறியிருப்பது தவறு. கோயில் திருப்பணி செய்த பல அரசர்களைத் திருமங்கையாழ்வார் பெரியதிருமொழியில் பாடியிருந்தபோதிலும் அது திவ்வியப்பிரபந்த வரிசையில் சேர்க்கப்பட்டுள்ளது. "கம்பன் மயர்வறமதிநல மருளப் பெருதவன் என்பதே அவனது நூல் திவ்யப் பிரபந்தமாகப் போற்றப்படாததற்குக் காரணம்" என்று தெளிவாக விளங்குகையால், முதல்வர் கூறுவது போல் இதில் சிந்தித்து உணர்வு கொள்வதற்கு எதுவும் இல்லை.

V. ஶ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்.

86 22—7—89 தினமலர் இணைப்பில் "இலங்கைக்கு என்ன கஷ்டகாலமோ?" என்னும் தலைப்பில் 'ஸ்ரீரங்கம் கோயில் கும்பாபிஷேகம் நடந்து முடிந்தபின் கொஞ்சம் கொஞ்சமாக இலங்கை அழிந்துவிடும் — என்று தஞ்சை பெரியகோயிலில் உள்ள கல்வெட்டில் எழுதியிருப்பதாக மத்திய அரசு ஆராய்ச்சியாளர்கள் பேசிக்கொண்டார்கள்" என்று அந்தக்கோயில் குருக்கள் கூறியதாக ஓர் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இது உண்மையா?

சமீபத்தில் ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் கட்டும் வேலை நடந்து கொண்டிருந்தபோது இப்படி ஒரு பொய்ப்பிரசாரம் சிலரால் கிளப்பிவிடப்பட்டது. இது பற்றி ஒரு கல்வெட்டு இருந்தால் அதன் முழு வடிவத்தையும் பத்திரிகையில் வெளியிடவேணும். அது செய்யாமல் பொறுப்பற்றமுறையில் ஒரு வதந்தியை ஒரு பொதுஜனப் பத்திரிகை வெளியிடுவது முறையற்றது. அதிலும் ஒரு பெரிய கோயிலுக்குச் செய்யப்பட்ட திருப்பணியைப்பற்றி இப்படி ஒரு செய்தி வெளியிடுவது மிகவும் தவறானது.

S. K. ராமஸ்வாமி, நாமக்கல்

87. ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில் தினமலர் இதழொன்றில் இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் படிப்பதற்குத் தமிழ் அறிவு இருந்தால் போதுமென்றும், கந்தபுராணத்தைப் படிப்பதற்கு சாஸ்திரஞானம் வேண்டுமென்றும், 'உள்ளது அழியாது' என்பதே அந்த சாஸ்திர ஞானமென்றும் கிருபானந்தவாரியார் பேசியதாகச் செய்தி வெளிவந்துள்ளது. இதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

http://acharya.org

இராமாயணம் மகாபாரதம் ஆகியவற்றைப் படிப்பதற்குத் தமிழ் அறிவு போதும் என்று கூறுவதிலிருந்து, கம்பராமாயணத்துக்கும் வில்லிபாரதத்துக்கும் மூலமான வால்மீகி ராமாயணத்தையும், வியாசரின் மகாபாரதத்தையும் அறியாதவர் வாரியார் என்று விளங்குகிறது. வடமொழி ராமாயண பாரதங்களில் பழக்கம் இருந்திருந்தால் அவற்றில் ஆயிரக்கணக்கான சாஸ்த்ரார்த்தங்கள் இருப்பதை வாரியார் உணர்ந்திருப்பார். மகாபாரதத்தின் ஒரு பகுதியான கீதையிலேயே நூற்றுக்கணக்கான சாஸ்த்ரார்த்தங்கள் உள்ளன. வாரியார் கூறும் 'உள்ளது அழியாது' என்னும் சாஸ்த்ரார்த்தமும் கீதை முதலான சாஸ்த்ரங்களில் பலவிடங்களில் வெளியிடப்பட்டுள்ளது. இதை "ஸத்கார்யவாதம்" என்று சாஸ்திரம் அறிந்தவர்கள் கூறுவார்கள். சாஸ்த்ரகாரர்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளும் கொள்கை இது. இக்கொள்கை கந்தபுராணத்துக்கே உரியது போலவும், ராமாயண பாரதங்களில் இல்லை என்றும் வாரியார் பேசியிருப்பது வடமொழி நூல்களில் அவர்க்குள்ள அறியாமையையே காட்டுகிறது,

வானமாமலை பத்மநாபன், புதுடெல்லி-3.

88. இங்கு லோடிரோடிலிருக்கும் ஸ்ரீராமர் கோயிலில் ஒவ்வொரு வியாழன் சனியன்றும் குருவிற்கும் சனிக்கும் படைத்த சுண்டல் எள்ளோரை — ஆழ்வார் ஆசார்யர்கள் சன்னிதியில் அருளிச்செயல் ஸேவாகாலம் முடிந்து சாற்றுமுறை நடைபெறும் போது பெருமாள் ப்ரஸாதத்தோடு ஒக்க கோஷ்டிக்கு விநியோகிக்கப்படுகிறது. இது முறையா?

இது மிகவும் முறையற்றது. நவக்ரஹம் போன்ற சிறு தேவதைகளுக்குப் படைத்தவை வார்த்தாமாலையில் 'எச்சில் சோறு' என்று இகழப்பட்டிருக்கையால், மறந்தும் புறந்தொழாத வைணவர்கள் ஏற்கத்தக்கவையன்று. அத்தகைய ஸ்ரீவைஷ்ணவர்கள் கலந்து கொள்ளும் கோஷ்டியில் சாற்றுமுறையை அடுத்து ஆழ்வார் ஆசார்யர்கள் ஸன்னிதியில் பெருமாள் ப்ரஸாதத்தோடொக்க அவற்றை விநியோகிப்பது ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிப்படைத் தேவையான மறந்தும் புறந்தொழாமையைக் கெடுப்பதாகுமாகையால் இது மிகவும் தகாத செயலாகும். கோயில் போஷகரான ஸ்ரீமத்பரமஹம்ஸ த்ரிதண்டி சின்ன ஸ்ரீமந்நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் இது தடுத்து நிறுத்தப்படுமென்று நம்புகிறோம்.

http://acharya.org

K. கல்யாணராமன், உபந்யாஸகர் ஸ்ரீரங்கம்.

89-வது கேள்வியைக்கேட்டிருக்கும் இவரைப்பற்றிய அறிமுகம்.

இந்த இளைஞர் ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்மார்த்த உபந்யாஸகர். தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் உபந்யாஸம் செய்து புகழடைந்து 'சொல்லின் செல்வன்' 'சொற்புயல்' 'வில்லிபாரத கேசரி' 'கம்பராமாயணச் செம்மல்' முதலான பட்டங்களைப் பொது மக்களிடமிருந்து பெற்றிருப்பவர். தமது ஸ்ரீராமாயணம் முதலான உபந்யாஸங்களில் பகவத்பரத்வத்தை மறைக்காமல் மேடைகளில் முழங்கிவருபவர். அவர் விருப்பப்படி அவருடைய கடிதத்தின் ஒருபகுதியைக் கீழே அச்சிடுகிறோம்:-

கல்யாணராமனின் கடிதம்.

இராமலிங்க ப்ரதிஷ்டையைப் பல மேடைகளில் கண்டித்துப் பேசிவருகின்றேன். நேற்றும் திருச்சியில் பேசினேன். மேலும் பிரம்மாஸ்திரத்தினாலேயே இராவணனை இராமன் கொன்றான் என்று கம்பன் எழுதவில்லை. 'சக்கரப்படையினால் கொன்றான்' என்றுதான் வலியுறுத்தி உள்ளான். அதனால் முழுமுதற் கடவுளாய், பரந்தாமனாகிய ஸ்ரீமந்நாராயணனுக்கு ப்ரஹ்மஹத்தி தோஷம் வர இடமில்லை என்று கம்பன் அழகாக உணர்த்திய பாடலைத்தருகிறேன். இதைப்பிரசுரிக்கக் கேட்டுக்கொள்கிறேன். அனைவருடைய சந்தேகமும் தீர்ந்துவிடும்.

அக் கணத்தின் அயன்படை ஆண்தகை
சக்கரப் படையொடும் தழீஇச் சென்று.
புக்கது அக் கொடியோன் உரம், பூமியும்,
திக்கு அனைத்தும் விசும்பும் திரிந்தவே.

[யுத்தகாண்டம்—இராவணன்வதை—195] அவர் ஏவிய சக்கரம் தான் பிரம்மாஸ்திரத்துடன் சென்று அழித்தது இராவணனை என்பதில் சிறிதும் ஐயமில்லை.

திரு. கல்யாணராமனின் கேள்வி.

89. தாங்கள் 85-வது கேள்வி பதிலில், கம்பராமாயணத்தை திவ்யப்பிரபந்தத்தில் சேர்க்காத விஷயத்தில் "அவன் அரங்கன் அருள் பெறவில்லை" என்று எழுதியுள்ளீர்கள். அரங்கன் அவனுக்குத் தோன்றித் தான், சடகோபரந்தாதி எழுதியதாக உள்ளது. "'அவன் லட்சுமி நரசிம்ம உபாசகன்; அரங்கன் அருள் பெற்றவன்' என்பதில் துளிக் கூட சந்தேகமில்லை" என்பது அடியேன் கருத்து. பாசுரத் தோடு சேர்த்துத்தான் கம்பருக்குப் புகழும், பெருமையும் வரவேண்டியதில்லை. ஹரேராம்.

http://acharya.org

நம்முடைய பதில் இவரால் சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. கம்பன் ஓர் மகாகவி என்பதையும், அவனுக்குப் பொது மக்களிடம் ஒப்பற்ற புகழ் உள்ளது என்பதையும் நாம் மறுக்கவில்லை. எவராலும் மறுக்கவும் இயலாது. இக்காரணத்தாலேயே எல்லா மதத்தவர்களும் கம்பராமாயணத்தில் ஈடுபடுகிறார்கள், அவன் வைணவன் என்ற உண்மையையும் சிலர் மாற்ற முற்படுகிறார்கள். அவன் அரங்கன் அருள் பெற்றவன் என்பதையும் நாம் மறுக்கவில்லை. அரங்கன் நியமனத்தாலே சடகோபரந்தாதியைக் கம்பன் பாடிய பின்பு, திருவரங்கம் பெரிய கோயிலில் அரங்கேறி மேட்டழகிய சிங்கரின் இசைவையும் பெற்றது கம்பராமாயணம் என்பது வரலாற்றுச்செய்தி. "கம்பராமாயணம் அரங்கனின் அருளால் பாடப்பெற்றது; அவனது அனுமதி பெற்றது" என்பதில் எப்படி ஐயமில்லையோ, அப்படியே 'அவன் ஆழ்வார்களைப்போலே மயர்வற மதிநலமருளப் பெற்றவனல்லன்' என்பதிலும் சிறிதும் ஐயமில்லை. ஆழ்வார்களுடைய அருளிச்செயல்கள் பொய்யில் பாடல்கள். அவற்றில் கற்பனைகள் சிறிது கூட இல்லை. மகாகவிகளின் காவியங்களுக்குப் பெருமை உண்டாவது அவற்றில் உள்ள அழகான கற்பனைகளால்தான். கம்பன் தனது ராம காவியத்தில் பலபல அழகான கற்பனைகளைப் புகுத்தி மெருகூட்டிப்பாடியதாலேயே ஒப்பற்ற மகாகவியாகக் கொண்டாடப்படுகிறான். அவனை ஆழ்வாராக்கவும், கம்பராமாயணத்தை அருளிச்செயலாக்கவும் முயல்வது மிகவும் தவறு: அவனுக்குள்ள புகழைக்கெடுத்து விடும். சிலர் 'கம்ப நாட்டாழ்வார்' என்று அவனை வழங்குவது உபசார வழக்கேயாகும்.

S. வேங்கடம், சமயபுரம்.

90. 16-9-89 தினமணி கடைசிப் பக்கத்தில் 'ஆன்மீகம்' என்னும் தலைப்பில் நாடோடியால் ஜயேந்திர சரசுவதி சொன்னகதை ஒன்று எழுதப்பட்டுள்ளது. அதில்—பிடிபிடித்துக் கொண்டு நிலத்தை உழுகிறவனாய், இரவில் நன்றாகக் குடித்துக் கும்மாளம் போடுகிறவனான உழவன் ஒருவன் காலையிலும் மாலையிலும் சூரியனைப் பார்த்து "ஆண்டவனே! இன்றைய பொழுது எனக்கு நல்ல பொழுதாகப் போகணும் அப்பா" என்று சொல்லுவதே காரணமாக நாரதரைக் காட்டிலும் சிறந்த பக்திமான் என்று விஷ்ணு கூறியதாக எழுதப்பட்டுள்ளது. இக்கதைக்கு ஆதாரமுண்டா?

http://acharya.org

இதிஹாஸபுராணங்களில் இக்கதைக்கு எங்கும் ஆதாரம் இல்லை. ராமகிருஷ்ணர் போன்ற சில அத்வைதிகள் இத்தகைய நூற்றுக்கணக்கான கதைகளைக் கற்பனைச்செய்து நாட்டில் பரவவிட்டிருக்கிறார்கள். இடைவிடாமல் எம்பெருமானைச் சிந்தித்துக்கொண்டிருப்பவராக இதிஹாஸபுராணங்களில் வர்ணிக்கப்படும் நாரதரை மூன்று நாட்கள் ஒருமுறை கூட அவனைச் சிந்திக்காதவராகக் கதைகட்டி, பீடிகுடித்துக் கொண்டு குடித்துக்கும்மாளம் போடும் பாமரனை நாரதரைவிடச் சிறந்த பக்தன் என்று கூறியிருப்பது நமது மதத்துக்குச் செய்த பெரிய துரோகமாகும். இதைப் படிப்பவர்கள் “காலையிலும் மாலையிலும் சூரியனைப் பிரார்த்தித்தால் போதும்; பீடி குடித்துக்கொண்டு, குடித்துக்கும்மாளம் போட்டாலும் நாரதரை விட பக்திமான்களாவோம்” என்று நினைத்து அதன்படி நடக்கத் தொடங்கினால் நாடு என்ன ஆகும் என்பதை நினைக்கவே நம் நெஞ்சம் நடுங்குகிறது.

கி. ஜகந்நாதன், சென்னை-28.(91. 92 கேள்விகள்)

91. **சிவன் தமோகுணதேவதை என்று பிரசித்தம். “சிவனிடமிருந்து பரமாத்மஜ்ஞானத்தை அடையலாம்” என்று ஒரு ப்ரமாணம் கூறுகிறது. “தமோ குணம் அஜ்ஞானத்தை விளைக்கும்” என்று கீதை முதலான சாஸ்திரங்கள் கூறுகின்றன. அப்படியிருக்க, தமோகுண தேவதையான சிவன் பரமாத்ம ஜ்ஞானத்தை எப்படி விளைக்க முடியும்?**

பொதுவாக தேவதைகள் ஸத்வகுணம் மிகுந்தவர்கள் என்பதும் சாஸ்திரங்களில் உள்ளது. சிவனும் ஒரு தேவதையாகையாலே ஸத்வகுணம் மிகுந்தவனே. ஆனால், ஸம்ஹாரத்தின் பொருட்டும், தாமஸசாஸ்திர ப்ரவர்த்தனத்தின் பொருட்டும் மற்ற தேவதைகளைக்காட்டிலும் அதிகமான தமோகுணமுடையவனாக சிவன் எம்பெருமானால் படைக்கப்பட்டுள்ளான். இதனாலேயே பிறக்கும்போதே “நான் பாபம் நீங்கப் பெறாதவனாயிருக்கிறேனே” என்று தன் தந்தையிடம் அழுததாக ஶதபத₂ப்₃ராஹ்மணம் கூறுகிறது. சிவன் கோபம் காரணமாகப் பிறந்தான் என்று பல பிரமாணங்கள் கூறுகின்றன. ப₃த்₃த₄ஜீவர்கள் அனைவர்க்குமே ஸத்வரஜஸ்தமோ கு₃ணங்கள் மூன்றுமே உண்டு. ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு கு₃ணம் மிகுதியாகிச் செயல்படுவதுமுண்டு. ஆகை

http://acharya.org

யால், ஸம்ஹார காலத்திலும், சைவாகமங்களை உபதேசிக்கும் போதும், எம்பெருமானோடு எதிரிடும்போதும், சிவனுக்குத் தமோ குணம் மிகுந்திருக்கிறது என்றும், மார்க்கண்டேயன், கண்டாகர்ணன் முதலானவர்களுக்குப் பரமாத்மஜ்ஞானத்தை உபதேசிக்கும்போதும், ராமநாமத்தில் ஈடுபடும்போதும் அதைப் பிறர்க்கு உபதேசிக்கும்போதும் ஸத்வகுணம் விஞ்சியிருக்கிறது என்றும் கொள்ளவேண்டும். இக்காரணத்தால், தமோகுண தேவதையாயிருந்தபோதிலும், சிவன் ஸத்வகுணம் தலையெடுக்கும்போது பரமாத்ம ஜ்ஞானத்தை உபதேசிப்பதற்குத் தடையில்லை. இதையிட்டே "நுண்ணுணர்வின் நீலார்கண்டத்தம்மானும்" [திருவாய் மொழி 6-10-8] என்று ஆழ்வாரும் சிவன் ஜ்ஞானத்தில் மிக்கவன் என்று பேசினர்.

92. பஞ்சஸம்ஸ்காரமும் பரந்யாஸமும் செய்து கொண்டபின்பும் சில ஸ்ரீவைஷ்ணவர்கள் இதரதேவதை களின் கோயில்களுக்குச் செல்கின்றார்கள். இவர்களுக்கு மோட்சம் கிடைக்குமா? இவர்களைத் திருத்தும் வழி என்ன?

தேவதாந்தர ஸம்பந்தம் உள்ள ப்ரபன்னனுக்கு மோட்சம் இல்லை என்பது ஸகலசாஸ்த்ரஸித்தம். ஸகல ஸ்ரீவைஷ்ணவ பூர்வாசார்யர்களும் இதை அருளியுள்ளார்கள். அவர்களுக்குப் பஞ்சஸம்ஸ்காரமோ அல்லது பரந்யாஸமோ செய்து வைத்த ஆசாரியரோ, அல்லது அவர்களுடைய ஹிதத்தை விரும்பும் மற்ற ஸ்ரீவைஷ்ணவர்களோ அவர்களுக்கு சாஸ்திர வசனங்களை எடுத்துக்கூறி முதன்முதலில் தேவதாந்தர ஸம்பந்தத்தை அவர்கள் விடும்படிச் செய்யவேண்டும். தேசிகஸம்ப்ரதாயத் தவராயிருந்தால் மறுபடியும் பரந்யாஸம் செய்விப்பது பிராயச்சித்தம். தென்னாசார்யஸம்ப்ரதாயத்தவராயிருந்தால் தேவதாந்தரஸம்பந்தத்தை அனுதாபத்தோடு விட்டுவிட்டு பஞ்சஸம்ஸ்காரத்தின்போது ஆசார்யன் உபதேசித்த த்வயத்தின் அர்த்தத்தை அனுஸந்திப்பதே பிராயச்சித்தம்.

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்.

93. அக்டோபர் '89 கலைமகளில் "பயத்தைப்போக்கும் பவநாசினி" என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் காமகோடி ஜயேந்திரசரசுவதி "பரமாத்மா இரண்டுவித தனித்தனி உருவங்கள் கொண்டது. அந்த இரண்டு உருவங்களையும் வழிபடலாம். அவற்றுள் ஒன்று ஸர்வ வ்யாபி, நிராகாரம், நிர்க்குணம். அதாவது — எங்கும் நிறைந்த-உருவமில்லாதநிலை. அடுத்தது ஸகுணம் சகரம்-நாமரூபமுள்ளஉருவநிலை .... ஸகுணநிலையில் இறைவன் பலஉருவங்களை மேற்கொள்கிறான். சிவன், கணேசன், சுப்பிரமணியர், கார்த்திகேயன், பார்வதி, காளி, விஷ்ணு என்று பலநாமரூபங்கள் இந்த முறையில் இறைவன் பல தேவதா ரூபங்களை எடுக்கிறான். ஆனால் இவையெல்லாம் ஒன்றேதான். பரமாத்மாதான் இப்படி பல அவதாரங்களை மேற்கொள்கிறான் .... காரியசித்தியை அடைய கணேசனை வணங்கி வழிபடுகிறோம். மோட்சத்தை அடைய சிவபெருமானை பூசிக்கிறோம். துர்க்கையை வழி படுவது உள்ளத்திலுள்ள பயத்தைப்போக்கும் .... சுப்பிரமணியர் என்றால் பரப்ரும்மம் என்று பொருள். பரப்ரும்மம் என்பதுதான் மூலப்பொருள். அதனால் சுப்பிரமணியர் என்பது பரப்ரும்மத்தின் ஓர் அவதாரம். நமக்கு அருளையும் கருணையையும் வழங்க பரப்பிரம்மம் இப்படி ஓர் அவதாரத்தை எடுத்துக்கொண்டது......நமது செயல்களில் வெற்றிபெற நவகிரகங்களை வணங்குவதும் வழக்கத்தில் இருக்கிறது" என்று எழுதியிருக்கிறார். இதை விமர்சிக்கவேண்டுகிறேன்.

"பரமாத்மா இரண்டுவித தனித்தனி உருவங்கள் கொண்டது" என்று சொல்லிவிட்டு, "அவற்றுள் ஒன்று உருவம் இல்லாதநிலை" என்று எழுதியிருப்பது முன்னுக்குப் பின் முரணுடையுள்ளது. 'உருவமில்லாதநிலை' என்பதை 'எங்கும் நிறைந்த' என்று விளக்கி இருப்பது எல்லாமே அதன் உருவம் என்று காட்டுகிறது. இதிலிருந்து இவர் விசிஷ்டாத்வைதம் பேசுகிறாரே தவிர அத்வைதத்தை அறியவில்லை என்று விளங்குகிறது. "ஸகுணநிலையில் இறைவன் சிவன் தொடக்கமாக நவகிரகங்கள் ஈறுகப் பலஉருவங்களை-அவதாரங்களை மேற்கொள்கிறான். இவையெல்லாம் ஒன்றே

தான்" என்று கூறுகிறார் இவர். "சிவனை உபாசித்தால் மோட்சம் கிடைக்கும்" என்றும் கூறுகிறார். உபநிஷத் ப்ரஹ்ம ஸூத்ர கீதா ஸஹஸ்ரநாம பாஷ்யங்களில் ஆதிசங்கரர் 'நாரா யணன் ஒருவனே ஸகுணப்ரஹ்மம்' என்றும், 'அவனை வழி பட்டால்தான் மோக்ஷம் கிடைக்கும்' என்றும், 'மற்றதெய் வங்களெல்லாம் ஜீவர்களே' என்றும், 'அவர்களை வழி பட்டால் ஸாம்ஸாரிக பலங்களே கிடைக்கும்' என்றும் தெளி வாகக் கூறியிருப்பதை இவர் அறியாதவர் என்றும் விளங்கு கிறது. இவ்விஷயங்களை 'சங்கரரும் வைணவமும்' என்னும் நூலில் நாம் நிலைநாட்டியிருக்கிறோம். "சங்கராத் ஜ்ஞாநமந் விச்சேத் மோக்ஷமிச்சேத் ஜநார்த்தநாத்" [சங்கரனிட மிருந்து பரமாத்ம ஜ்ஞானத்தைப் பெறவிரும்பவேண்டும். மோக்ஷத்தை நாராயணனிடமிருந்தே பெற விரும்ப வேண்டும்] என்ற உலகமறிந்த பிரமாணத்துக்கு முரணாக மோக்ஷமளிக்கும் பெருமையை சிவனுக்குக் கூறிவிட்டு விஷ்ணு விடமிருந்து எதைப்பெறுவது என்பதைச் சொல்லாமலே விட்டுவிடுகிறார். இது இவர் தன் நெஞ்சறியப் பொய் சொல் லுகிறார் என்று காட்டுகிறது. 'நவகிரகங்கள், கறுப்பு காட்டேரி, ஐயனார் முதலான தெய்வங்களும் ஒன்றுதான் பரமாத்மாவின் அவதாரங்கள் தான்' என்று கூறி, சுப்பிரமணி யனையும், கார்த்திகேயனையும் இரு வேறு தெய்வங்களாக எடுத்திருக்கும் இவருடைய சாஸ்திர ஞானத்தைக் கண்டு நாம் விலவறச் சிரிக்கவேண்டியுள்ளது.

K. வரததேசிகன், அட்வகேட், விழுப்புரம்.

94. 1987 அக்டோபர் 'ஞானபூமி'யில் முற்றும் துறந்த பெரியவர் ராமானுஜர் போசள மன்னருடனும் பாண்டிய மன்னருடனும் உறவுகொண்டிருந்ததாகவும். அதற்காகச் சோழப் பேரரசன் இரண்டாம் குலோத்துங்கச் சோழன் அவர்மீது கோபங்கொண்டு, அவர் தனக்கு எதிராக சதி செய்வதாகக் கருதி அவரைக் கைதுசெய்ய முயன்றதாகவும் கதைத்துள்ளது. இக்கூற்றுகளுக்குச் சரித்திர பூர்வமான ஆதாரங்கள் உண்டா?

எந்த நூலிலும் இக்கூற்றுகளுக்கு எந்த ஆதாரமும் கிடையாது. "சிவனைக்காட்டிலும் மேலானதில்லை" என்று எழுதி (கிருமிகண்ட) சோழன் கட்டாயக் கையெழுத்து வாங்க முயன்றதாலேயே எம்பெருமானார் மேல்நாட்டுக்கு எழுந்தருளினார் என்று பலநூற்றாண்டுகளுக்கு முன் எழுதப் பட்ட பல நூல்களில் உள்ளது. ஸாஹித்ய அகாடமி பரிசு பெற்ற பி. ஸ்ரீயின் 'ராமானுஜர்' நூலில் இவ்வாதாரங்களை விரிவாகக் காணலாம்.

http://acharya.org

ராஜகோபாலராமாநுஜதாஸர், காட்டேரி, (95-96 கேள்விகள்)

95. 6-10-89 தினமணி நாளிதழில் கடைசிப்பக்கத்தில் நாடோடி அளித்த ஆன்மிகப்பகுதியில்—கடம்பத்தூரில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் சைவ சித்தாந்தக் கழகத்தின் சார்பில் பேசிய சிதம்பரம் புலவர் சாமிநாதன் தமது "தெய்வத் திருமணங்கள்" என்னும் உரையில் விச்வாமித்திரர் விஷ்ணுவைக்காண வைகுண்டம் சென்றதாகவும், அவருக்கு விஷ்ணு பீடமிட்டு, அவர் உட்காரு முன் 'பார்த்து அமருங்கள்' என்று சொல்லியும் அவர் உட்கார, விசுவாமித்திரரைப் பீடம் பலமுறை குப்புறத் தள்ளியதாகவும். அதனால் சினமடைந்த முனிவர் 'தங்களுக்கு சாபமிடுகிறேன்' என்று கூறி, 'பூலோகத்தில் மனிதனாகப் பிறக்கக் கடவீர்' என்று சாபமிட்டார் என்றும் உள்ளது; ராவணனை அழித்து தேவர்களை ரக்ஷிக்க விஷ்ணுவுக்கு அவதாரம் செய்ய ஒரு வியாஜம் தேவைப்பட்டதால் விசுவாமித்ரரின் சாபம் அவருக்குப் பயன்பட்டதென்றும், விஷ்ணு முனிவரை நோக்கி 'அங்கே பாருங்கள்' என்றுகாட்ட, வைகுண்டத்தில் அரிச்சந்திரன் அமர்ந்திருந்ததை முனிவர் பார்த்ததாகவும், மீண்டும் விஷ்ணு முனிவரை நோக்கி 'சத்தியவானான அவர் முன்னால் அசத்தியவானான நீங்கள் எப்படி அமரமுடியும்? அதனால் தான் உங்களைப் பீடம் குப்புறத் தள்ளியது, என்று கூற, 'அரிச்சந்திரனையும் அவர் மனைவியையும் பிரித்து இம்சித்த அந்தப்பாபம்தீர நான் என்ன செய்யவேண்டும்' என்று முனிவர் கேட்க, 'ராமனாக அவதாரம் செய்யும் என்னையும் லக்ஷ்மியான சீதையையும் ஒன்று சேர்த்து திருமணம் செய்து வைத்தால் அந்தப்பாபம் தீரும்' என்று வாக்களித்தார் என்றும் உள்ளது. எங்கேயும் கேட்டிராத இச்செய்திக்கு ஆதாரம் உண்டா?

இந்தச் செய்திக்குப் பிரசித்தமான எந்த இதிஹாஸ புராணங்களிலும் ஆதாரமில்லை. "ப்ருகு மஹரிஷியின் சாபத்தை ஏற்றுக் கொண்டு எம்பெருமான் ராமனாக அவதரித்தான்" என்று இதிஹாஸ புராணங்களில் உள்ளது. இந்தக் கதை உபந்யாஸகரின் கற்பனைக் கதை என்றே தோன்றுகிறது.

http://acharya.org

96. சென்னை கப்பன்கழகத்தின் மூலம் திரு நா. வரத ராஜுலு நாயுடு இயற்றி வெளியிட்ட 'வால்மீகியும் கம்பனும் கண்ட சமூகங்கள்' என்னும் நூலில், "ஸ்ரீராமன் முதலானவர்கள் மாமிசம் மது முதலானவற்றை உண்டார்கள்" என்று வால்மீகி கூறியிருப்பதாகவும், ஆகையால் கொல்லாமை, புலால் மறுத்தல் முதலியவற்றை ராமனின் தவவாழ்க்கையின் உறுப்புக்களாக வால்மீகி கொள்ளவில்லை என்று விளங்குகிறது என்றும், கம்பன் அவற்றை உறுப்புகளாகத் தம் காப்பியத்தில் கொள்கிறான் என்றும் எழுதப்பட்டுள்ளது. இது சரியா?

துஷ்டநிக்ரஹம் செய்த ராமபிரான் கொல்லாமையை மேற்கொள்ள முடியாது நம் சாஸ்திரங்களில் புஜபலம் நிறைந்திருக்க வேண்டிய க்ஷத்திரியர்களுக்கு மாமிசம் மது முதலானவை அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் நம்முடைய ஆழ்வார்கள் "கொல்வன முதலா அல்லன" (திருவாசிரியம்) 'ஆடும் கள்ளும்பராய்" (திருவாய்மொழி) முதலான பாசுரங்களில் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குக் கொல்லாமையையும் கள்ளுண்ணாமையையும் சிறந்ததாகக் கூறினர். ஆழ்வார்களின் அடிச்சுவட்டில் வந்த கம்பனும் வால்மீகி ராமாயணத்திலிருந்து மாறுபட்டு, ராமனுக்கு வனவாசத்தின்போது புலால் உண்ணாமை முதலானவற்றை வலியுறுத்தினான் என்று கொள்ளவேண்டும்.

S. வேங்கடம், சமயபுரம்.

97. 15—10—89 ஞாயிறு இரவு 9-45 முதல் பாலகிருஷ்ண சாஸ்திரிகள் திருச்சி வானொலியில் நிகழ்த்திய "சூரிய நாராயண வைபவம்" உபந்யாஸத்தில் "சூரியனிடமுள்ள சைதந்யமே ராமனாக அவதரித்தது" என்று கூறினார். ஆதிசங்கரர் ஆறு மதங்களை ஸ்தாபித்ததாகவும் கூறினார். இவற்றுக்கு ஆதாரமுண்டா?

எந்த ஆதாரமுமில்லை. பகவான் விஷ்ணுவே ஸ்ரீராமனாக அவதரித்ததாக வால்மீகி பலவிடங்களில் தெளிவாகக் கூறியுள்ளார். "அத்வைதமதத்தை ஸ்தாபித்த ஆதிசங்கரர் சைவம் முதலிய ஆறு மதங்களை ஸ்தாபித்ததாகக் கூறுவது பெரும் பொய்" என்று நம்மால் "சங்கரரும் வைணவமும்" என்னும் நூலில் நிலை நாட்டப்பட்டுள்ளது.

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம். (98, 99 கேள்விகள்)

98. 1989 நவம்பர் (ஓம்) சக்தி பத்திரிகையில் "அரக்கனை அழித்தது தீபாவளியானால் அரக்கனாகிவிட்ட நரசிம்மத்தை அழித்த சரபசாகஸமும் திருநாள்தானே. அதை ஏன் நாடு தீபாவளியாகக் கொண்டாடுவதில்லை" என்று தலைப்பிட்டு 'நாராயண ஸ்வாமி' என்பவர் கட்டுரை எழுதியிருக்கிறார். இப்பத்திரிகையை அனுப்பி யிருக்கிறேன். இதன் பொய்மையை வெளிப்படுத்தப் பிரார்த்திக்கிறேன்.

இந்த நாராயண ஸ்வாமி என்பவர் 28—5—89 தினமணி கதிரில் இந்த சரபப் பொய்க்கதையைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதுபற்றி நாம் இந்த சதகம் 81வது கேள்வியின் பதிலில் மறுப்பெழுதி, அதை தினமணிகதிருக்கும் பிரசுரிக்கும்படி அனுப்பியிருந்தோம். 25—6—89 தினமணி கதிரில் பக்கம் 14ல் இந்த மறுப்புக்கட்டுரை வெளியிடப் பட்டது. அதில் நாம் "இந்த சரபக்கதை பிற்காலப் புராணங்கள் தவிர வேறெந்த நூல்களிலும் காணப்படாதது; நாயன்மார்களுக்கு முற்பட்ட சங்கநூல் முதலான எல்லாத் தமிழ் இலக்கியங்களிலும், எல்லா வடமொழிக்காவியங்களிலும் நரசிம்மாவதாரம் முதலான திருமாலின் அவதாரங்கள் பாடப் பட்டுள்ளனவேயொழிய, திருமாலை இழிவுபடுத்தும் சரபக்கதை முதலானவை பாடப்படவில்லை; இதிலிருந்து பிற்காலத்தில் விஷ்ணு த்வேஷிகளால் புனையப்பெற்றவையே இக்கதைகள் என விளங்குகிறது" என்று எழுதியிருந்தோம். இவர் எடுத்த ருக் வேத வாக்கியம் எங்குள்ளது? என்றும், அதன் பொருள் என்ன? என்றும் கேட்டிருந்தோம். இக்கேள்விகளுக்கும் நமது மறுப்புக்கட்டுரைக்கும் இன்று வரை எந்த பதிலையும் எழுதாத இவர் சக்திக்கட்டுரையிலும் எந்த பதிலையும் எழுதவில்லை. சரபோபனிஷத் என்னும் பொய் உபநிஷத்தை இக்கட்டுரையில் புராணம் என்று எடுப்பது இவரது குழப்பத்தைக் காட்டுகிறது.

http://acharya.org

"இக்கதை வடமொழியில் ஸ்காந்த மகாபுராணம், தைத்ரியகம், காசி காண்டம், பிரும்மாண்ட புராணம், நரசிம்மோத்ர புராணம் என்ற கிரந்தங்களில் காணக்கிடக்கின்றன'' என்றும் எழுதுகிறார். தைத்திரீயகம் ஒன்று தவிர மற்றவை புராணங்கள்; நம்பத்தகாதவை. தைத்திரீயகத்தில் எங்குள்ளது என்று இவர் எழுதவில்லை. பழைய தமிழ் நூல்களில் எங்கும் இக்கதை குறிப்பிடப்படவில்லை என்று நாம் சொல்லியிருக்கும் போது எவரும் கேள்விப்படாத 'உபதேசகாண்டம்' என்னும் நவீனமான தமிழ் நூலிலிருந்து ஒருபாட்டை எழுதுகிறார். நாயன்மார் காலத்துக்குப் பிற்பட்ட சிற்பங்கள் சிலவற்றைக் காட்டுகிறார். இவற்றிலிருந்து வேதம், சங்கநூல்கள், பழைய வடமொழி தென்மொழிக்காப்பியங்கள் முதலானவற்றில் இக்கதைக்கு எந்த ஆதாரமும் கிடையாது என்று இவரே ஒப்புக்கொண்டதாகிறது. சிங்கப்பிரானை அரக்கன் என்று பிதற்றும் இவர் கடுமையான விஷ்ணு த்வேஷி என்று விளங்குகிறது. "விஷ்ணுபக்திபரோ தேவ: விபரீதஸ்ததா‍ऽஸுர:" [விஷ்ணுபக்தியுடையவன் தேவன். விஷ்ணுத்வேஷமுடையவன் அஸுரன்] என்னும் ஸுப்ரஸித்தப்ரமாணமும், தன்னை த்வேஷிப்பவர்கள் அஸுரர்கள் என்று கண்ணன் முழங்கும் பல கீதாவாக்யங்களும் இவருடைய தன்மையை எடுத்துக்காட்டுகின்றன.

99. ஆகஸ்ட் '89 கலைமகளில் "தியானமூர்த்திகள்" என்னும் கட்டுரையில் காமகோடிப் பெரியபீடாதிபதி "யோ யோ யாம் யாம்" என்னும் கீதா ச்லோகத்தை எடுத்துக்கொண்டு "எந்த மதத்தின் வழியாகச் சென்றாலும் முடிவில் மோட்சந்தான்" என்னும் கருத்தை அந்த ச்லோகம் சொல்லுவதாகக் கூறுகிறார். "ஸாங்க்யம் யோக: பாஞ்சராத்ரம் வேதா: பாசுபதம் ததா...ந ஹந்தவ்யாநி ஹேதுபி:" என்னும் பாரதச்லோகத்தில் 'ஸாங்க்ய மதம். யோகமதம், பாஞ்சராத்ரமதம், பாசுபதமதம், வேதமதம் என்னும் ஐந்து மதங்களும் ஒன்றுதான்' என்றும், 'இவற்றையெல்லாம்

http://acharya.org

யுக்திகளாலே ஆட்சேபணை பண்ணவேண்டாம்' என்றும் கூறியிருப்பதாகக் கூறுகிறார். சிவமஹிம்நஸ்தோத்ரத்திலும் "த்ரயீ ஸாங்க்₂யம்" என்னும் ஶ்லோகத்தில் இப்படிக்கூறி யிருப்பதாகச் சொல்லுகிறார். இவை சரியா?

இவை அடியோடு தவறானவை. "யோ யோ யாம் யாம்" [கீ₃தை 7—20] என்னும் ஶ்லோகத்திற்கு முந்தின ஶ்லோகத்தில் "காமைஸ் தைஸ்தைர் ஹ்ருதஜ்ஞாநா: ப்ரபத்₃யந்தேऽந்யதே₃வதா:' [கீ₃தை 7-20] என்று மற்றைத் தெய்வங்களைத் தொழுகிறவர்கள் விஷய ஆசைகளாலே அறிவிழந்தவர்கள் என்கிறான் கண்ணன். அந்த ஶ்லோகத்திற்கு மேலுள்ள இருபத்துமூன்றாவது ஶ்லோகத்தில் "அந்தவத்து ப₂லம் தேஷாம்' தத்₃ப₄வத்யல்ப மேத₄ஸாம்" என்று மற்ற தெய்வங்களை அடைபவர்கள் புல்லறிவாளர்கள் என்றும், அவர்களுக்கு அழியும் ப₂லன்களே கிடைக்கின்றன என்றும் கூறுகிறான். ஆதிசங்கரரும் இந்த ஶ்லோகத்திற்கு இப்படியே பா₄ஷ்யம் எழுதியுள்ளார். ஆகையால், காமகோடி பீடாதி₄பதி தன்நெஞ்சறியப் பொய் சொல்லுகிறார் என விளங்குகிறது. பா₄ரத ஶ்லோகத்திலும் "ந ஹந்தவ்யா நிஹேதுபி₄:" என்று ஸாங்க்₂யம் முதலானவற்றில் கைக்கொள்ளத்தக்க அம்ஶங்களிருப்பதால் அவற்றை அடியோடு அழித்துவிட வேண்டாம் என்று கூறப்படுகிறதேயொழிய, அவையனைத்தையும் ஆட்சேபிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. பா₄ரதம்பாடிய வியாஸரே தமது ப்₃ரஹ்மஸூத்ரத்தில் இவற்றில் ஸாங்க்₂ய யோக₃ பாசுபத மதங்களை ஆட்சேபித்திருக்கிறார். சிவமஹிம்நஸ்தோத்ரத்திலுள்ள "ருஜுகுடிலநாநாபத₂ஜுஷாம்" என்னும் பத₃த்தில் — இவ்வைந்தில் வேதமதம் நேரான அறிவுடையவர்களுக்குரியது என்றும், மற்ற மதங்கள் கோணலான அறிவுடையவர்களுக்குரியது என்றும் தம்கருத்தை உணர்த்தியுள்ளார். "தன் நெஞ்சறிவது பொய்யற்க; பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச்சுடும்" என்னும் திருக்குறளைப் பெரிய பீட₃ாதி₄பதிக்கு உணர்த்தி நிற்கிறோம்.

http://acharya.org

K. ஸௌந்தரராஜன், பம்பாய்-20.

100. நவம்பர் மாத 'ஞானபூமி'யில் 'தீபாவளிக் கதைகள்' என்ற தலைப்பில் பல விளக்கங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அதில் திருமகள் மணநாளே தீபாவளித் திருநாள் என்பது ஒன்று. "தேவர்கள் ஸ்ரீமந் நாராயணனின் யோசனைப்படி பாற்கடலைக் கடைய, அதிலிருந்து வெளிப்பட்ட ஆலகால விஷத்தைச் சிவபெருமான் உண்டதால் பல அற்புதமான பொருள்கள் வெளிப்பட்டன. மகாலக்ஷ்மியும், மூதேவியும் அதில் தோன்ற, மகாவிஷ்ணு மூதேவியை உத்தாலகர் என்ற முனிவருக்குக் கன்னிகா தானம் செய்வித்து, தாம் மகாலக்ஷ்மியை மணந்து கொண்ட நாளே தீபாவளி நாளாகும்" என்று இது விளக்கப்பட்டுள்ளது. இது சரியா?

இது சரியல்ல. ஹாலாஹல விஷத்தை எம்பெருமான் சிவனுக்குப் புன்சிரிப்புடன் அளித்ததாக ஸ்ரீராமாயணத்தில் உள்ளது. விஷ்ணுபுராணத்தில் அதுபற்றிய பேச்சேயில்லை. "ஆலகாலத்தை சிவபெருமான் உண்டதால் பல அற்புதமான பொருள்கள் வெளிப்பட்டன" என்பது தவறு. 'கடலைக் கடைந்ததால் அவை தோன்றின' என்றே விஷ்ணு புராணத்தில் உள்ளது. மூதேவியை உத்தாலகருக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்த விஷயம் ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் இல்லை. எம்பெருமான் ஸ்ரீமகாலக்ஷ்மியைத் திருமணம் புரிந்து கொண்ட தினமே தீபாவளி நாள் என்பதும் விஷ்ணு புராணத்தில் இல்லை. இப்படிப் பல பொய்களைக் கூறி அஞ்ஞானத்தை வளர்க்கும் 'ஞானபூமி'யைப் படிக்காமலிருப்பதே நல்லது.

ஸுதர்சனர் பதிலில் பத்தாவது ஶதகம்
நிறைவுற்றது.

http://acharya.org

ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-39] [ஒளி-7

வலம்புரிஜானின் விதண்டாவாதம்

இந்துமத ஸ்தாபனங்களுக்குவேண்டுகோள்

[ஸ்ரீ. S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார். M.A.B.L., அட்வகேட்,
'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' ஆசிரியர்.
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620 017.]

சென்ற இதழில் வெளியிடப்பட்ட எமது நோட்டீசைப் பெற்றுக் கொண்டபின் "தாய்" ஆசிரியர் திரு. வலம்புரி ஜான் 19—5 86 அன்று அதற்குப் பதில் எழுதினர். அதில் "ஞானச்சேரியில் மோனவேள்வி என்னும் கட்டுரைத் தொடர் இலட்சக்கணக்கான மெய்யன்பர்களால் போற்றப் படும் மகான் ஒருவரால் எழுதப்படுகிறது. உங்களது வைணவ தர்மத்தில் அவர் அறிவு சிறிதும் அற்றவராகக் காணப்படுவது நமக்கு வருத்தத்தை உண்டாக்குவதோடு அல்லாமல் தங்கள் மீதான தக்க நடவடிக்கைக்கும் இடம் கொடுத்திருக்கிறது" என்றும், "எழுதப்படுகிறவைகள் அவரது கருத்துக்கள். அதில் உங்களுக்கு உடன்பாடு இல்லா விட்டால் கண்ணியமாகத் தாங்கள் எழுதலாம். அதற்கும் நமது பத்திரிகை இடமளிக்கும். உங்களது துண்டுப் பிரசு ரங்களில் தரக்குறைவான வார்த்தைகளால் தாய் தாக்கப் பட்டிருக்கிறது. வைணவத்தைப் பற்றி ஏதும் அறியாத பாமரன் இல்லை நான்". என்றும், "எங்களை வருத்தம் தெரி விக்கத் தாங்கள் கோருவது கருத்துச் சுதந்திரத்துக்குத் தடை விதிக்குமாகையால் தங்களது கட்டளையை நிறை வேற்ற இயலாமலிருக்கிறோம்" என்றும், "இதற்கு மேலும்

http://acharya.org

தாங்கள் நடவடிக்கை எடுக்கவிரும்புகிற பட்சத்தில் தெய்வத்தமிழ் திருமாலின் பெயரால் தங்களை வழக்கு மன்றத்தில் சந்திக்கிறேன். மாலவனின் சங்கும் சக்கரமும் நெறிநிற்பவர்க்குத் துணைநிற்கும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றும் எழுதியிருக்கிறார். மற்றும் சில விதண்டாவாதங்களையும் செய்திருக்கிறார். 19—5—86 முதல் 26—5—86 முடிய மேல்கோட்டை திருநாராயணபுரம் முதலான பல திவ்யதேசங்களை மங்களாசாஸனம் செய்துவிட்டு ஊர் திரும்பிய நாம் 28—5—86 அன்று அவருடைய கடிதத்துக்குப் பின்வருமாறு பதில் எழுதினோம்.

ஸுதர்சனம் ஆசிரியரின் பதில் கடிதம்

அன்புள்ள திரு. வலம்புரிஜான் அவர்களுக்கு.

தங்களது (19—5—86) தேதியிட்ட கடிதம் எனது பார்வைக்கு வந்தது. 'மோன வேள்வியை எழுதுகிறவர் லட்சக் கணக்கான மெய்யன்பர்களால் போற்றப்படும் மகான்' என்று தாங்கள் குறிப்பிடுகிறீர்கள். அந்த 'மகான்' யார்? என்று வைணவ உலகம் அறிய விரும்புகிறது. கட்டுரை எழுதுபவரின் பெயரை வாசகர்களுக்குத் தெரிவிக்க வேண்டியது பத்திரிகை தர்மம் என்பது தாங்கள் அறியாததல்ல. மறு தபாலில் அவரது முழு விலாசத்தை எனக்கு எழுதி அனுப்புவீர்கள் என நம்புகிறேன். குதிரை முகக் கடவுளைக் கண்டவுடன் ஒருவனுக்குக்காமவேகம் மிகுந்தது என்றும். கழுதை குதிரைகளுக்குக் காம வேகம் அதிகம் என்றும் தாயில் எழுதியது தரக் குறைவா? அதை நான் கண்டித்தது தரக்குறைவா என்பதை நடுநிலையாளர்களே நிர்ணயிக்கவேண்டும். சிலுவையில் அறையப் பட்ட கிறிஸ்துவைக் கண்டவுடன் ஒருவனுக்குக் காம வேகம் மிகுந்தது என்று ஒரு கயவன் எழுதினால் நீங்கள் சும்மா இருப்பீர்களா? இந்த ஒரு கேள்வியையாவது தாயில் அச்சிட்டுப் பதிலுரைக்க வேண்டும். மற்றும் வைணவத்தைப் பற்றியும் ஸ்ரீ வேதாந்த தேசிகரைப் பற்றியும் ஆதாரமில்லாமல் தாக்கியிருப்பதற்குத் தங்கள் பத்திரிகையில் வருத்தம் தெரிவிக்க வேண்டும். இம்மாத ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம் தலையங்கத்தில் இவ்விஷயத்தை வெளியிட்டு உங்களுக்கும் ஒரு பிரதி அனுப்பியுள்ளேன். தாங்கள் நேர்மையையும் பத்திரிகை தர்மத்தையும் கடைப் பிடிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

(ஒப்பம்) **S. கிருஷ்ணசாமி அய்யங்கார்**

http://acharya.org

இக்கடிதத்தைப் பெற்று சுமார் ஒரு மாதமாகியும் திரு. வலம்புரிஜான் யாதொரு பதிலும் எழுதவில்லை. மோன வேள்வி எழுதுபவர் யார் என்று பத்திரிகையில் இன்னமும் தெரிவிக்கவுமில்லை. ஆகையால் வலம்புரிஜான் நேர்மையையும் பத்திரிகை தர்மத்தையும் கடைப்பிடிக்க விரும்பவில்லை என்று தெளிவாக விளங்குகிறது. ஆளும் கட்சியின் ஆதரவு தமக்கு இருப்பதால் வழக்கு மன்றத்தில் நீதி கிடைக்காதபடி செய்து விடலாம் என்னும் தைரியத்தாலே அவர் அகம் பாவத்துடன் பதில் எழுதியிருக்கிறுர் என்றும் விளங்குகிறது. 25—5—86, 1—6—86, 8—6—86 தாய் இதழ்களில் வெளிவந்திருக்கும் மோனவேள்விக் கட்டுரைகளையும் ஓர் அன்பர் என்னிடம் காட்டினுர். 25—5—86 கட்டுரையில் ருக்வேதத்தை எழுதியவர்கள் வடதுருவத்தில் இருந்தவர்கள் என்று ஓர் ஆதாரமும் காட்டாமல் எழுதப்பட்டிருந்தது. ஜுன் 1, 8 தாயிதழில் எழுதப்பட்டிருந்த சில விஷயங்களாவன:—

1—6—86 தாய்:—

"வேதியர்கள் கூறும் இந்திரன் கடவுளல்ல; இவன் வாழ்ந்த ஒரு அரசனே. எவனொருவன் தன் கண் என்னும் இந்திரியத்தை எத்தனை ஆண்டுகள் வரை அதன் கூர்மையைப் பல மைல்களுக்கு அப்பால் தீட்டி நீடித்து வைத்திருக்கிருனோ அவனே அவ்விந்திரியத்தால் இந்திரன் என்ற பெயரைப் பெறுகிருன், இந்த இந்திரன் என்னும் அரசனை ஏற்றுத் துதிபாடுபவர்களே வேதியர்கள். இப்பதவி கண்ட இந்திரனுக்கு வேதியர் கூட்டத்தின் பேரழகி எவளோ அவளே இந்திராணியாக இருப்பாள். இந்திராணியும் இந்திரனுக்குச் சமமாகத் தனது இந்திரியங்களை பல ஆண்டுகளுக்குச் செம்மையாக வைத்திருக்கவேண்டும். இடையில் இந்திராணி நலிந்து இந்திரன் நலியாமல் இருந்தால் சமூகம் இரண்டாவது இந்திராணியை அரசியாக்க வேண்டும். இது வேறுவிதமாகவும் நடக்கலாம். இந்திராணி நலியாமல் இருந்து இந்திரன் நலிந்தால் ஐம்புலன்களில் வேறு இந்திரியத்தில் பலம் கொண்டவன் பழைய இந்திரனை நீக்கிவிட்டு புதிய இந்திரனுகப் பதவி ஏற்பான். ஒரே காலத்தில் இரண்டு மனிதர்கள் இந்திரிய பலங்கொண்டவர்களாக இருந்து விட்டால் ஒன்றுக்கு மேற்பட்ட புலன்களில் வல்லவன் இந்திர

http://acharya.org

ளுகி விடுவான். இருவரும் ஒரே இந்திரியத்தில் வல்லவர்களாக இருந்தால் சண்டை துவக்கப்பட்டு வீரமே எடையாகி ஒருவன் இறக்கவேண்டும். இம்மாதிரி நடந்த சமயங்களில்தான் சில இந்திரர்கள் பயந்து கடவுளைச் சரணமடைய தென்னுட்டு சிவாலயங்களை வந்து அடைந்தனர். கடலில் ஒளிந்தனர் என்பதெல்லாம் இதுவே. இதுவே ருக் வேதச் சட்டம். அது கூறும் தகவல். ருக் வேதம் என்பது சிறப்பான அறிவு நூல். அங்கே வர்ண ஆஸ்ரமம் என்பது சிவந்த மேனியை உடைய ஆரியர் என்பதே. கறுத்த மேனியை உடைய இந்தியர் அல்லது திரமிளம் பேசும் தமிழர் அல்லது திராவிடர் இவர்களிடமிருந்து தங்களை உணர்த்திக் காட்டவே வர்ணமும் ஆஸ்ரமமும் வந்ததாகச் சொல்லுகிறது. குல முதல்வன் இந்திரன். குலம் என்ருல் மூதாதையர்களின் எண்ணத்தைத் தர்மமாகப் பிரதிப்பலிப்பார். கோத்திரம் என்ருல் இம்முறையை ஒப்புக்கொண்ட பல குட்டித்தலைவர்கள். அவர்களின் வழித்தோன்றல்கள் என்று இன்றும் கோத்திரம் சொல்லும் அந்தணர்களே அந்தணர்கள் எனப்படுவர். இந்த வேதம் பாரதத்திற்கு வந்தபின் பாரதமக்களுக்காக இவைகளில் விளம்புவதே பாரத ஆதிவாசிகளுக்கான ஜாதிவர்ணுஸ்ரமம். அந்தணர்களுக்கு கோத்திர வர்ணுஸ்ரம ஒற்றுமை தான் உண்டே ஒழிய ஜாதிவர்ணுஸ்ரம பாகுபாடு இல்லை. உலகெங்கிலும் இருந்து பாரதம் வந்து அடைந்து இந்திரனைத் துதித்து வேதம் சொல்லும் முறையை ஒப்புக்கொண்டவர் முப்பத்தியாறு கோத்திரக்காரர்கள் உண்டு. இந்த முப்பத்தியாறு குட்டித் தலைவர்களே இன்றுவரை வேதத்தைக் காப்பாற்றுவதாகப் பொருள். எங்கோ வாழ்ந்துவந்த இந்திரன் என்பவன் பல ஆதிவாசிக் குழுக்களை உலகில் பல பாகங்களில் குடியமர்த்தினன். அப்படியே இந்தியாவில் இரண்டு குழுக்களைக்கொண்டு வந்து வைத்தான். ஒரு குழு என்ற அந்த ஓர் குலத்திற்கு யதுகுலம் என்று பெயர். இந்த யதுவுக்கு பசு அல்லது பார்சு என்ற பாரசீக நாட்டினர் எங்களுக்கு உறவினர்கள் என்று ருக் வேதம் கூறுகிறது. எங்களைக் கொண்டுவந்த இந்திரன் தர்வாசா என்ற குலத்தினரையும் இந்தியாவில் குடியமர்த்தினன் எனப் பாடுகிறது வேதம். ஈரான் நாட்டினருக்கும், துர்வாசா குலத்திற்கும் நெடுநாளைய பகை இருந்ததாம்.

8 6–86 தாய்

பாரதம் வந்து சேர்ந்த ஆரிய ஆதிவாசிகள் இங்கே மீண்டும் சண்டையிட்டு பல கூறுகளாகப் பிரிகின்றனர். விரிஞ்ஜாயஸ்

http://acharya.org

என்ற பரதவர்கள் இக்குழுவினர் முன் குலத்திலிருந்து பிரிந்த வர்கள். இவர்களே வேதத்தில் மந்திரத்தை அறிந்த பூசாரிகள். அதனால் வலிமையுள்ள குழுக்களாயினர். இவர்கள் பாரத்வாஜ குலத்தைச் சார்ந்தவர்கள். இக்கோத்திரமே இன்றும் அந்தணர் கூட்டத்தில் மிகப்பெரியது. தந்திரத்தால் தென்னாட்டி லிருந்து வடநாடு வரை இருந்துவந்த பல இந்திய ஆதிவாசி களுடன் உறவைக்கொண்டனர்; கலந்தனர்; குடும்பமும் நடத்தினர். பழக்கவழக்கங்கள் இரு குழுக்களிலும் கலந்தது. இதன் விளைவாகத் தோன்றியவர்களே அந்தணர்கள் எனக் காண்க; காலப்போக்கில் இவர்களின் நிறம் கறுப்பாகிவிட்டது. இவர்களும் இந்தியாவில் வேதங்களைப் பாடல்களாகப் பாடி அதில் இந்தியக் கடவுள்களைச் சேர்த்தனர். இதற்கே யஜுர் வேதம் என்று பெயர். ருக்வேதம் துருவப் பகுதியிலும், யஜுர் வேதம் பாரதத்திலும், சாமவேதமும், அதர்வணவேத மும் அவ்வண்ணமே இங்கு செய்யப்பட்டது. வேதவியாசர், ருக்வேதத்திலுள்ள மிகப்பெரிய மந்திரப் பகுதிகளை மூன்றாகப் பிரித்தார். அதையே நான்கு வேதமாக ஆக்கினார். அதனால் ருக்வேத மந்திரமே எல்லா வேதங்களிலும் வரும். எல்லா வேதங்களின் கடைசிப்பகுதி பாரதத்தில் செய்யப்பட்டது. இதில் யஜுர்வேதப் பகுதியைச் சிவந்தவர் வேதம் என்றும், கறுத்தவர் வேதம் என்றும் பிரிக்கப்படுகிறது கறுத்தவர் என்ற கிருஷ்ணர் யஜுர் வேதத்தைச் செய்தவர். கலப்பட அந்தணர் என்பதற்காகவே அதைக் கிருஷ்ண யஜுர்வேதம் என்கின்றனர். ருக்வேதம் ஆரியரின் ஆதிவேதம். அதேபோல் சிவந்தவர் வேதமான சுக்ல யஜுர் வேதம் கலப்பில்லா அந்தணர்களின் வேதம் என்க. பாரதத்தில் வந்து பிரிந்த பரத குலம் வலிமையின் குலம் ஆகிவிட்டது. அதனால் அக்குலத் தின் பெயரே இந்நாட்டிற்கு பரதநாடு என வந்துவிட்டது. சம்பரன் என்ற இந்திய ஆதிவாசி கறுத்தவர்த் தலைவனை விஸ்வாமித்ர முனியின் துணைகொண்டு ஆரியரை எதிர்த்தான். பின்பு பணிந்து கிருஷ்ண யஜுர் வேதத்தில் சேர்ந்தான் என் பதும் வேதக்கிடக்கையே. ஆப்கானிஸ்தானத்திலிருந்து சிந்து நதிவரையே சண்டை, பிறகே கலப்பு. இங்கு உள்ள சட்லஜ் நதியுடன் ஏழு நதிகளை ருக்வேதம் ஸப்த சிந்து என அழைப்ப தால் இதன் கால நேரம் விவரம் மனித அறிவே.

http://acharya.org

சிவனும் வடிவேலு வாத்தியாரும்

ஆசையே வராத சிவபெருமானுக்கு வடிவேலு வாத்தியாராகப் பிறக்கவேண்டும் என்று தோன்றி விட்டது. பள்ளிக்கூடங்களை மேற்பார்வையிடும் இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸாகப் பிறந்துவிடுகிறார். பார்வதிதேவி வாத்தியாரம்மாவாகத் தோற்றமெடுத்து இவர்களின் பியூனாக, பணியாளனாக நந்திதேவரும் வந்துவிடுகிறார். திருக்காட்டுப் பள்ளியில், தஞ்சை, மாயவரம் திருக்காட்டுப்பள்ளி மாணவர்கள் அங்கு கூடிவிடுகிறார்கள். வினாடிவினா: க்விஸ் நிகழ்ச்சியை வடிவேலு வாத்தியார் துவக்குகிறார். இந்த நிகழ்ச்சியில் தேவர்களும் அரக்கர்களும் மாணவர்களின் வேடம் பூண்டு அங்கே புகுந்துவிடுகின்றனர், மாணவர்களைப்பார்த்து வடிவேல் வாத்தியார் முதல் கேள்வியைக் கேட்டார். பிள்ளைகளே ! கேள்வி கேட்கிறேன். சில நொடிகளுக்குள் இக்கேள்விக்கு நீங்கள் பதிலளித்துவிடவேண்டும் என்றார் அவர். மாணவர்கள் அனைவரும் சிவபெருமானின்மீது பக்தி உள்ளவர்கள். அவர்களுக்கு எல்லாவற்றையும் அருள திருமால் காத்துக்கிடந்தான் அங்கு. நடந்த வேடிக்கையைப் பாருங்கள். "கந்தக நெருப்பில் அவனது காயங்கள் கருகிக்கொண்டிருந்தன. சின்னஞ்சிறு செடியை வேர்வரைக்கும் அசைத்துவிட்டதற்காக அவனே தன்னைச் சபித்துக்கொண்டான்." இந்த வரிகள் எந்த நாவலில் வருகின்றன? கேள்வியைக் கேட்ட வடிவேலு வாத்தியார் மீசையை முறுக்கினார். பிள்ளைகள் முழித்தனர். ஒருவன் எழுந்தான். "இது வார்த்தைச் சித்தர் வலம்புரிஜான் எழுதிய 'பூவுக்கு வாசம் வந்தாச்சி' நாவலில்தான் சார் என்றான்-" "நீ எந்தப் பள்ளி? உனக்கு மார்க்கு ஐந்து" "நான் எந்தப் பள்ளியும் இல்லை. தேவலோகத்து இந்திரன். மாறுவேடத்தில் மாணவன் சமூகக் கேள்விகளுக்கு விடையளிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டேன்: இந்த நிகழ்ச்சியில் புகுந்தேன்" என்றதும் அனைவரும் சிரித்தனர்.

மோனவேள்விக் கட்டுரையாளர் ஓர் ஆதாரமும் காட்டாமல் வேதங்களைப்பற்றியும், இந்திரன் முதலான தெய்வங்களைப்பற்றியும் இப்படி மனம்போனபடியெல்லாம் எழுதியிருப்பதும், ஆங்காங்கு கதையளப்பதும் இவர் கதையெழுதத் தகுதியுடையவரே தவிர சமயக் கட்டுரையை எழுதச் சிறிதும் தகுதியில்லாதவர் என்று விளக்குகிறது. இவர் 'சதம்' என்னும் வட சொல்லுக்கு ஆயிரம் என்று பொருள் கொண்

http://acharya.org

டதை ஸுதர்சனர் பதில் பத்தாவது சதகம் முதற்கேள்வி யின் பதிலில் காட்டினேம். 8—6—86 'தாய்' இதழில் சுக்லயஜுர் வேதத்தைப்பற்றி மனம்போனபடி எழுதும்போது 'சுக்ல' என்னும் ஸம்ஸ்க்ருத பதத்துக்கு 'சிவந்த' என்று பொருள் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். 'சுக்ல' என்பதற்கு 'வெளுத்த' என்று பொருளே தவிர 'சிவந்த' என்ற பொருள் கிடையாது என்பது வடமொழியில் சிறிது அறிவுடையவர்களுக் குக் கூடத் தெரியும். இவற்றிலிருந்தும் 'இந்திரன்' 'இந்தி ராணி' முதலான பதங்களுக்கு இவர் அபத்தமாகப் பொருள் கொண்டிருப்பதிலிருந்தும் இவர் சிறிதும் வடமொழி அறிவு அற்றவர் என்று விளங்குகிறது. இவரை நேரில் கேள்விகள் கேட்கத் தொடங்கினுல் இந்த உண்மைகளெல்லாம் வெளி யாகிவிடுமே என்று பயந்தே வலம்புரிஜான் இவருடைய பெய ரையும் விலாசத்தையும் கொடுக்காமல் தன் பத்திரிகையைப் படிக்கும் லக்ஷக்கணக்கான வடமொழியறியாத வாசகர்களை ஏமாறச்செய்கிருர் என்று வெளிப்படையாக விளங்குகிறது.

இந்த வலம்புரிஜான் டில்லி ராஜ்யசபையில் ஓர் அங்கத் தினர். கிறித்துவர். *அங்கு சென்ற மாதம் ஓர் புத்தகத் தைப் பற்றிக் கண்டனக்குரல் எழுப்பியிருக்கிருர். அப்புத்த கத்தில் 'ஏசுகிறிஸ்து தூக்கிலிடப்பட்டார்' என்று எழுதி யிருப்பதாகவும் இது கிறித்துவர்களின் மனத்தைப் புண் படுத்துவதாகவும். இதனுல் பெரிய பின்விளைவுகள் ஏற்படும் என்றும் ராஜ்யசபையில் குரல் எழுப்பியிருக்கிருர். சிலுவை யில் அறையப்பட்ட ஏசுவை 'தூக்கிலிடப்பட்டார்' என்று எழுதியிருப்பதற்காகக் கிறித்துவர்கள் கொதித்தெழுவார்கள் என்று கூறிய இவர் வைஷ்ணவர்களின் கடவுளைக் கண்ட வுடன் ஒருவனுக்குக் காமவேகம் மிகுந்தது என்று தமது பத்திரிகையில் வெளியிட்டதும், இந்துக்களின் வேதத்தைக் கலப்பட வேதம் என்றும், வேதத்தை ஓதும் அந்தணர்களைக் கலப்படமானவர்கள் என்றும் வெளியிட்டதும் இந்துக்களின் மனத்தை மிகவும் புண்படுத்தும் என்பதை ஏன் உணரவில்லை? ஆளும்கட்சியின் ஆதரவு தமக்கிருப்பதால் தாம் எதைவேண்டு மாலும் செய்யலாம் என்று நினைக்கிருரா? இந்துக்களின் வேதத்தைக் கலப்பட வேதம் என்று வெளியிட்டதுபோல்

* இச்செய்தி 28-5-86 'ஹிந்து' பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

http://acharya.org

கிறித்துவர்களின் பைபிளை நாம் கலப்பட வேதம் என்று எழுதி வெளியிட்டால் இவர் பேசாமலிருப்பாரா? இந்துக்களின் வேதத்தையும் வேதமோதும் அந்தணரையும், வேதக் கடவுளரையும் இப்படியெல்லாம் இழிவுபடுத்தி இவர் கட்டுரைகள் வெளியிட்டிருப்பது பற்றி இந்துசமூகம் முழுவதுமே இவரைக் கூண்டிலேற்றி விசாரிக்கக் கடமைப் பட்டுள்ளது. அப்படி விசாரித்தால் கிறித்துவரான இவர் இந்துமதத்தை அழிப்பதற்காக இந்துசமய அறிவு சிறிதுமற்ற ஒருவரைத் தூண்டிவிட்டு இந்துமதத்தை இழிவு படுத்தும் மோனவேள்விக் கட்டுரைகளை எழுதச்செய்து வெளியிடுகிறார் என்னும் உண்மை வெட்டவெளிச்சமாகும். நாம் நமது கண்டனங்களையும், தலையங்கங்களையும் இந்து மதத்தலைவர் பலருக்கும், விச்வஹிந்து பரிஷத், இந்து முன்னணி, ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங்கம், பிராம்மண சங்கம் முதலான பல இந்து ஸ்தாபனங்களின் தலைவர்களுக்கும் அனுப்பியிருக்கிறோம். அவர்கள் இவர் மீது சட்டத்துக்குட்பட்ட தக்க நடவடிக்கைகளை எடுத்து இந்து மதத்தின் மானத்தைக் காப்பார்கள் என நம்புகிறோம்.

திருவாபரணங்கள் மீட்கப்பட்டன.

சென்ற இதழில் நமது தலையங்கம் இரண்டும் 'கீதாசார்யன்' பத்திரிகையில் வெளியிடப்பட்டன ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரது பிரார்த்தனைக்கும் செவிசாய்த்து, பெருந்தேவித் தாயாரும் பேரருளாளனும் திருவாபரணங்களின் பெரும்பகுதியை உருக்கிய தங்கமாகவும், கற்களாகவும் மீண்டு வரும்படி செய்துவிட்டார்கள். இதற்குக் கருவியாயிருந்த காவல் துறையினரும் பாராட்டுக்குரியவர்கள். முன்பு இதேபோல் திருவெள்ளறையில் நீலநாயகப் பதக்கம் களவுபோனபோது நமது பத்திரிகையில் அவ்விஷயம் வெளிவந்து அன்பர்கள் பிரார்த்தித்த ஒருவாரத்தில் திருடன் பிடிபட்டுத் திருவாபரணம் மீட்கப்பட்டதும், நமது பத்திரிகையில் வெளியிட்டது காவல்துறையினருக்கு உதவியதும் அனைவரும் அறிந்ததே. திருவெள்ளறை வழக்கு விசாரணை முடிந்து தங்கம் மீட்கப்பட்டுப் பல வருடங்களாகியும் கோயில் நிர்வாகத்தினர் பெருமாளுக்கு நீலநாயகப் பதக்கத்தை மறுபடி செய்து சாத்தாமலே இருக்கின்றனர். அதுபோலாகாமல் பெருந்தேவித் தாயார் திருவாபரணங்களை அணிந்துகொள்ளும் நாள் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-39] [ஒளி-8

பைரவி பதிலின் பிதற்றல்

[ஸுதர்சனம் ஆசிரியர்]

வைகாசி மாதம் ஆனி மாதம் தலையங்கங்களிலும் வைகாசி மாதம் வெளிவந்த ஸுதர்சனர் பதிலிலும், டில்லி ராஜ்யசபா அங்கத்தினரும் தமிழ்நாடு ஆளும் கட்சிப் பிரமுகருமான திரு. வலம்புரிஜான் — விஷ்ணுவையும், வைணவத்தையும், வைஷ்ணவ பூர்வாசார்யர்களையும், வேதங்களையும், வேதக் கடவுளரையும், வைதிகர்களையும் இழிவுபடுத்தி ஓர் அநாமதேயப் பேர்வழி எழுதிவரும் தொடர் கட்டுரையைத் தமது "தாய்" வாரப்பத்திரிகையில் வெளியிட்டுவருவதைச் சுட்டிக் காட்டி, அதிலிருந்து சில பகுதிகளையும் அச்சிட்டு விமர்சித்திருந்தோம். இதைக் கண்டு நமது ஆயிரக்கணக்கான வாசகர்கள் வலம்புரிஜான் செய்துவரும் அடாதசெயலைக் கண்டித்துத் தாய் பத்திரிகைக்குக் கடிதம் எழுதியிருப்பதாக நம்மிடம் நேரிலும் கடிதம் மூலமும் தெரிவித்துள்ளனர். சிலர் தங்களது கடிதங்களின் நகல்களையும் நமக்கு அனுப்பியுள்ளனர். சென்னையிலிருந்து வெளிவரும் "ஸ்ரீதாசார்யன்" பத்திரிகை நம்முடைய இரண்டு தலையங்கங்களையும் வெளியிட்டு இம் மாதம் ஸுதர்சனர் பதில் மூலமாகவும் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமியின் அநுக்ரஹத்துடன் வெளிவரும் ஸ்ரீரங்கநாதபாதுகா பத்திரிகையிலும் ஜூலை மாத இதழில் "தாய் ஆசிரியர் அவர்களுக்கு" என்று தலைப்பிட்டு,

http://acharya.org

'பாதுகா' ஆசிரியர் ஸ்வாமி வலம்புரிஜானின் செயலை வன்மையாகக் கண்டித்துள்ளார். மோனவேள்விக் கட்டுரையாளரைப் பற்றி "ஸம்ஸ்கிருதத்திலும் வேதத்திலும் இதிஹாஸ புராணங்களிலும் மற்றும் ஸ்ரீவைஷ்ணவத்திலும் அடிப்படை ஜ்ஞானம் கூட இல்லாதவர்" என்றும், "அவர் எழுதியிருப்பதில் பல விஷயங்கள் பிதற்றல்களே" என்றும், "தேசிக க்ரந்தங்களைப் படித்திருக்கவும் கேட்டிருக்கவும் மாட்டார்" என்றும், "கிரமப்படி சாஸ்திரம் தெரியாதவர்" என்றும், "எந்த ஒரு மதத்திலும் பூர்ணமான ஜ்ஞானமில்லாமல் லக்ஷக்கணக்கானவர்கள் படிக்கும் பத்திரிகையில் உண்மைக்கு மாறான கருத்துக்களைக் கொண்ட கட்டுரையை எழுதுகிறவர்' என்றும் எழுதியிருக்கிறார். இவை அனைத்தையும் பார்த்த பிறகாவது திரு. வலம்புரிஜான் உண்மையை உணர்ந்து தான் செய்த தவறுக்கு மன்னிப்புக்கேட்டு அபத்தமான மோனவேள்விக் கட்டுரையை திருத்துவாரா என்பது ஐயத்திற்கு இடமாகவேயுள்ளது. மோனவேள்விக் கட்டுரை விஷயமாகப் பல ஆஸ்திகர்களின் ஆயிரக்கணக்கான கண்டனக் கடிதங்களையும், கட்டுரைகளையும் பெற்றுவரும் வலம்புரிஜான் அவற்றில் எதையும் தன் பத்திரிகையில் வெளியிட்டு பதில் கூறும் நேர்மையில்லாமல், சம்பந்தமில்லாத எதையோ ஒரு கேள்வியைத் தனது பைரவி பதிலில் அச்சிட்டு, அதற்குச் சம்பந்தாசம்பந்தமில்லாமலும், மனம்போனபடியும், தடித்தனமாகவும் நம்மைப் பற்றி அவதூறாகப் பதில் வரைந்துள்ளார். அக்கேள்வி பதில்கள் பின்வருமாறு—

13—7—86 'தாய்' கேள்வி—பதில்

கேள்வி:

இந்தியாவில் இரண்டாவது கடவுளைக்கண்டுபிடித்தவர் யார்?

(கேட்டவர்-பரந்தாமன், அலமாதி)

பைரவி பதில்:

ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனம் மாதப்பத்திரிக்கை நடத்தும் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐய்யங்கார் அவர்கள்.

இவர் தனது 'வலம்புரிஜானின் விதண்டாவாதம்' என்கிற கட்டுரையில் கிறிஸ்துவர்களின் கடவுளிலிருந்தும், வைஷ்ணவர்களின் கடவுள் வேறுபட்டவர் என்ற மாபெரும் உண்மையைக் கண்டுபிடித்திருக்கிறார். நம்மைத் தாக்குகிற பலபேர்களில் இவரும்

http://acharya.org

ஒருவர். ஆனால் நம்மை அதிகமாகத் தாக்குகிறவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதை இவர் அறியமாட்டார் போலும்!

விலா வலிக்கச் சிரிக்கவேண்டும் என்று கருதுகிறவர்கள், இவரது கட்டுரையை படித்தாலே போதும். 'காக்கை குருவி எங்கள் சாதி.........என்ற பாரதி எங்கே! ஞானச்சேரி மகாஜன சேரி மகான் என்று எழுதி தனது வக்கிரத்தை வெளிப்படுத்துகிற இவர் எங்கே? 'வேதம் தமிழ் செய்த மாறன்' இன்று இருந் திருந்தால் சமுதாயத்தை பிளந்து பேதத்தை விளைவிக்கும் இவர் களைப் பார்த்து 'ஓ' வென்று அழுதிருப்பார்.

இனி, ஸுதர்சனரின் விமர்சம்

மோன வேள்விக் கட்டுரையாளர் சங்ககாலத் தமிழர் கண்ட பரம்பொருளான திருமாலின் ஓர் அவதாரத்தைக் கண்டவுடன் ஒருவனுக்குக் காமவேகம் மிகுந்தது என்று மிகக் கீழ்த்தரமாகவும் ஆபாசமாகவும் தாக்கியிருந்தார். வேதத் தைப் பற்றி ஓர் அக்ஷரம் கூடத் தெரியாத அவர் வேதத் தைப் பற்றி மனம்போனபடியெல்லாம் எழுதியிருந்தார். வேதத்தைக் கலப்படவேதம் என்றும், வேதம் கண்ட ரிஷிகளைக் கலப்பட அந்தணர் என்றும் கடுமையாகத் திட்டி யிருந்தார். "ஸ்ரீவேதாந்த தேசிகர் முதலான வைஷ்ணவா சார்யர்கள் வேதத்தில் 'சிவன்' என்று வருமிடங்களிலெல்லாம் 'விஷ்ணு' என்று மாற்றிவிட்டார்கள்" என்று அபாண்டமான ப்ரஹ்மாண்டப்புளுகை எழுதியிருந்தார். இதற்கெல்லாம் எந்த ஆதாரத்தையும் அவர் காட்டவில்லை. இவற்றை வெளி யிட்டது தவறு என்று நாம் ஆதாரத்தோடு நிரூபித்து, இந்த அடாத செயலுக்கு மன்னிப்புக் கேட்கும்படி வலம்புரிஜா னுக்கு எழுதினோம். அதற்கு விதண்டாவாதம் செய்து அகம் பாவத்துடன் பதில் எழுதினார். அந்த விதண்டாவாதங்களை அம்பலப்படுத்தி "சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைக் கண்டவுடன் ஒருவனுக்குக் காமவேகம் மிகுந்தது" என்று ஒரு கயவன் எழுதினால் நீங்கள் சும்மா இருப்பீர்களா? என் னும் இந்த ஒரு கேள்வியையாவது தாயில் அச்சிட்டு பதி லுரைக்க வேண்டும் என்று நாம் அறைகூவல் விடுத்திருந்தோம். ஏதோ ஒரு புத்தகத்தில் 'கிறிஸ்து தூக்கில் இடப்பட்டார்' என்று எழுதியதற்கே டில்லி ராஜ்யசபையில் கண்டனக்

http://acharya.org

குரலை எழுப்பிய இவர் நம்முடைய கேள்வியை அச்சிட்டுப் பதிலுரைக்கத் தொடங்கினால் மோனவேள்விக் கட்டுரையாள ரின் சாயமும், இவரது பண்பின் சாயமும் வெளுத்துவிடும். அதனாலேயே நம்முடைய விமர்சனங்களையும் கேள்வியையும் அச்சிடத் துணிவில்லாமல், நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனையாக எவரோ ஒருவர் இவ்விஷயத்துக்குச் சம்பந்தமில்லாமல் எழுதிய ஏதோ ஒரு கேள்விக்கு பதில் எழுதத் தொடங்கி, அதில் மனம்போனபடி நம்மைப்பற்றி அவதூறாக எழுதியிருக்கிறார். சிவன் முருகன் முதலானவர்களைப் போற்றியும், திருமாலை இகழ்ந்தும், வைஷ்ணவ பூர்வாசார்யர் களைத் திட்டியும், வேதத்தையும் வைதிகர்களையும் இழிவு படுத்தியும் ஓர் அநாமதேயப் பேர்வழி எழுதிய கட்டுரையை லக்ஷக்கணக்கானவர்கள் படிக்கும் பத்திரிகையில் வெளியிடு வதன்மூலம் சாதி த்வேஷத்தையும், மத த்வேஷத்தையும் வளர்த்து இந்திய சமுதாயத்தைச் சின்னாபின்னமாகச் சிதைக்க முயலும் இவர் நாம் சமுதாயத்தைப் பிளந்து பேதத்தை விளை விப்பதாக அபாண்டமாகக் குற்றம் சாட்டுகிறார். 'சேரி மகான்' என்று அநாமதேயப் பேர்வழியை நாம் குறிப் பிட்டதை இதற்குக் காரணமாகக் கற்பிக்கிறார்.

மோனவேள்விக் கட்டுரையாளரின் பெயர் என்ன? என்று கேட்டதற்கு இன்றுவரை இவர் பதில் எழுதவில்லை. ஞானபூமியி லிருந்து இவர் பாமர மக்களை ஏமாற்றுவதற்காக 'ஞானச்சேரி மகான்' என்று தனக்குத் தானே பெயர்வைத்துக் கொண்டி ருக்கிறார் என்று விளங்கிற்று. இவருடைய எழுத்துக்கள் அஞ் ஞானமயமாக இருந்தமையால் அப்பெயரை நாம் ஏற்பதற் கில்லை. அதனாலேயே அப்பெயரில் 'ஞான' என்பதை நீக்கி விட்டு "சேரி மகான் யார்?' என்னும் தலைப்பில் இவரைப் பற்றிய விவரங்களைக் கூறும்படி நம் வாசகர்களைக் கேட்டிருந் தோம். அரசியல் வாதியாகையாலே இதை வக்கிரமாக எடுத்துக்கொண்டு சாதி த்வேஷத்தைக் கிளப்பிவிடப் பார்க் கிறார் வலம்புரிஜான். நம்மாழ்வார் போற்றும் கடவுளை ஆபாச மாக இழிவுபடுத்தி எழுதும் கட்டுரையை வெளியிடும் இவர் நம்மாழ்வாரைப் பற்றி எழுதுவது சாத்தான் வேதமோதுவது போலிருக்கிறது. சோரம்போகும் கதைகளையும், காமரசக்

http://acharya.org

கட்டுரைகளையுமே மிகுதியாகக் கொண்ட பாலுணர்வுப் பத்திரிகையை நடத்திப் பாமரமக்களைக் குட்டிச் சுவராக்கிவரும் இவரது செயலை இப்பொழுது இயேசுகிறிஸ்து இருந்து பார்த்தால், மக்களை மாக்களாக்க முயலும் இவரைக் கண்டு தம்மைத் தாமே மறுபடியும் சிலுவையில் அறைந்து கொண்டிருப்பார்.

நாம் இரண்டாவது கடவுளைக் கண்டுபிடித்திருப்பதாகவும் கிறிஸ்துவர்களின் கடவுளிலிருந்தும் வைஷ்ணவர்களின் கடவுள் வேறுபட்டவர் என்ற மாபெரும் உண்மையைக் கண்டு பிடித்திருப்பதாகவும் கதைக்கிருர் இவர். நாம் இப்படி எங்கும் எழுதவில்லை. எழுதியிருந்தால் காட்டலாம். சென்ற மாதத் தலையங்கத்தில் "இந்துக்களின் வேதத்தையும், வேதமோதும் அந்தணரையும், வேதக்கடவுளரையும் இப்படியெல்லாம் இழிவு படுத்தி இவர் கட்டுரைகள் வெளியிட்டிருப்பது பற்றி இந்து சமூகம் முழுவதுமே இவரைக் கூண்டிலேற்றி விசாரிக்கக் கடமைப்பட்டுள்ளது. அப்படி விசாரித்தால், கிறித்துவரான இவர் இந்துமதத்தை அழிப்பதற்காக இந்து சமய அறிவு சிறிது மற்ற ஒருவரைத் தூண்டிவிட்டுஇந்துமதத்தை இழிவுபடுத்தும் மோன வேள்விக் கட்டுரைகளை எழுதச்செய்து வெளியிடுகிருர் என்னும் உண்மை வெட்ட வெளிச்சமாகும்" என்று நாம் எழுதியிருப்பதற்கு இவர் மனம் போனபடி வியாக்யானம் செய்துகொள்கிருர் போலும்! சங்ககாலத் தமிழர் கண்ட வேத முதல்வனை திருமால் ஒருவனே பரம்பொருள் என்னும் உண்மையை மிக உறுதியாகப் பின்பற்றி நிற்பவன் நான் என்பதை உலகமே அறியும். சென்ற வருஷம் 22-1-85 இல் வெளிவந்த ஜூனியர் விகடன் பேட்டிக் கட்டுரையிலும், இவ்வருஷம் 30—8—86 தினமணிக்கதிர் பேட்டிக் கட்டுரையிலும் இவ்விஷயம் உலகறியப் பறை சாற்றப்பட்டுள்ளது. தாய் பத்திரிகையைவிடப் பலமடங்கு விற்பனையாகும் 'குமுதம்' பத்திரிகையிலும், கண்ணதாசனோடு விளைந்த மோதல், முன்னாள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு இஸ்மாயிலை மறுத்து நாம் எழுதிய கட்டுரை, அரசுபதில்கள் ஆகியவற்றில் நமது இக்கொள்கை எவரும் மறுக்கமுடியாதபடி முழங்கப்பட்டுள்ளது. வைணவர், சைவர்,

http://acharya.org

கிறித்துவர், இஸ்லாமியர் முதலான உலகமக்கள் அனைவருக்கும் 'மாயோன்' ஆகிய திருமால் ஒருவனே கடவுள் என்னும் உண்மையை "மூவேழுலகமும் உலகினில் மன்பதும் மாயோய்! நின்வயின் பரந்தவை உரைத்தேம் மாயா வாய்மொழி உரைதர" என்று சங்ககாலச் சான்றோரான கடுவன் இளவெயினனார் மூன்றாம் பரிபாடலில் முழங்கியிருப்பதை உறுதியாகப் பின்பற்றி. 'சங்ககாலத் தமிழர் சமயம்' 'சாதிமத ஆராய்ச்சி' 'ஸ்ரீவைஷ்ணவ மதவிஜயம்' முதலான நூல்களில் உலகத்தமிழர் அனைவரும் அறிய நிலைநாட்டியிருக்கிறோம் நாம். சென்னையிலும் மதுரையிலும் நடந்த உலகத்தமிழ் மகாநாடுகளில் முற்கூறிய முதல் இரண்டு நூல்களும் முறையே உலகத்தமிழ் அறிஞர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டன. இன்று வரையிலும் எந்தத் தமிழ் அறிஞரும் இந்நூல்களை மறுக்கத் துணியவில்லை. இப்படிப் பட்ட நாம் "கிறித்துவருக்கு வேறு கடவுள், இந்துக் களுக்கு வேறு கடவுள்" என்று கூறுவதாக இவர் எழுதுவது பெருத்த மோசடியாகும். தன் பத்திரிகையின் வாசகர்களில் பெரும்பான்மையினர் நமது நூல்களை அறிய மாட்டார்கள் என்ற தைரியத்தாலே இவர் இப்படிப் பெரும் பொய்யை எழுதுகிறார். உண்மையில் ஆதிசங்கரர் ஆறு கடவுள்களைப் பரம்பொருளாகக் கொண்ட ஆறு சமயங்களை ஸ்தாபித்தார் என்னும் பெரும் பொய்யை எழுதிவரும் மோனவேள்விக்காரரும், அதை அச்சிடும் வலம்புரிஜானுமே புதிது புதிதாகக் கடவுள்களைக் கண்டுபிடித்து வருபவர்கள். இப்படி இவர் ஒருதெய்வக்கொள்கைக்கு முரணான காரியங்களைச் செய்வதாலும், பாலுணர்வுப் பத்திரிகை நடத்தி மக்களை மாக்களாக்குவதாலுமே கிறித்துவர்களில் அறிவாளிகள் பலர் இவரை அதிகமாகத் தாக்குகிறார்கள் என்பது இவர் எழுத்திலிருந்தே விளங்குகிறது. உலகம் முழுவதுக்கும் நாராயணன் ஒருவனே கடவுள் என்பதே நமது கொள்கை. வேதவேதாந்தங்களிலும் ஸ்மிருதிகளிலும் இதிகாச புராணங்களிலும் சங்க நூல்களிலும் இவ்விஷயமே முழங்கப்பட்டு உள்ளது என்பதை நாம் ஆயிரக்கணக்கான பக்கங்களில் 'விஷ்ணு சித்த விஜயம்' முதலான நூல்களில் நிலைநாட்டியுள்ளோம். பெரும் கவிஞர் அரங்க

*http://acharya.org

ஸ்ரீநிவாஸன் போன்ற நடுநிலையாளர்கள், தினமணிபோன்ற பொதுஜனப் பத்திரிகைகளின் விமர்சனங்களில் நமது நூல்களை மனமாரப் பாராட்டியுள்ளனர். அப்படியிருக்கும்போது நம்முடைய கேள்விகளுக்குப் பதில் கூற இயலாமல் விதண்டா வாதங்களைச் செய்யும் இவர் நம்முடைய கட்டுரையைப் படிப்பவர்கள் விலாவலிக்கச் சிரிப்பார்கள் என்று எழுதுவது துரியோதனன் தன்னைப்போலவே உலகிலுள்ள அனைவரும் அயோக்யர்கள் என்று பேசியதையொக்கும். மோனவேள்விக் கட்டுரையில் "முனிவரான வசிட்டரை விசுவாமித்திரர் பலவந்தமாக கிச்சுகிச்சா செய்கிறார்" என்றும், "சிவன் வடிவேலு வாத்தியாராக அவதரித்து வினாடி வினா நடத்தினார்" என்றும் "ஒருதெய்வம் மூக்குச்சளியை மிதித்தது" என்றும், மற்றும் பல அபத்தக் களஞ்சியங்களையும், எழுவாய் பயனிலை செயப்படுபொருள் தொடர்பில்லாமல், அநாமதேயப்பேர்வழி எழுதிவருவதையும், அதை விடாப்பிடியாக இவர் வெளியிட்டு வருவதையும் கண்டே உலகமெல்லாம் விலவறச் சிரிக்கிறது. பைரவி பதிலின் பிதற்றல்களை விமர்சிப்பதை விரிவிற்கஞ்சி இத்துடன் நிறுத்திக்கொள்கிறோம்.

நம்மைப்பற்றி அவதூறாகத் தாக்கியிருக்கும் பைரவி பதிலைத் தாங்கி நிற்கும் 'தாய்' இதழை நமக்கு அனுப்பும் நேர்மை கூட இவருக்கு இல்லை. அதைப்பற்றி நமக்குத் தெரிவித்த இரு அன்பர்கள் சிலகேள்விகளை எழுதி அவற்றுக்குப் பைரவி பதிலில் பதில் கூறும்படி இவருக்கு அறைகூவல் விடுத்திருப்பதாகவும் நமக்குத் தெரிவித்து, கடிதங்களின் நகல்களையும், அனுப்பியிருக்கிறார்கள். அவ்வன்பர்களின் கேள்விகளை இனி அச்சிடுகிறோம்.

1. காரைக்கால் பேராசிரியர் R இராஜகோபாலாச்சாரி, M A. அவர்கள் வலம்புரிஜானுக்குப் பதிவஞ்சலில் எழுதிய கடிதமும் விடுத்த கேள்விகளும்

அன்புள்ள "தாய்" ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். கிறிஸ்தவ மதத்தவரான தாங்கள் பிறமதங்களிடம் சகிப்புத்தன்மையும், சமரசமனப்பான்மையும் உடையவர் என்று பல முறை தங்கள் எழுத்துக்களில் காட்டிக்கொண்டிருக்கிறீர்கள்.

http://acharya.org

ஆனால், ''ஞானச்சேரியில் மோனவேள்வி''— என்ற கட்டுரைத் தொடரில் (1) வைணவத்தையும், (2) வேதாந்த தேசிகரையும் (3) ஹயக்ரீவ அவதாரத்தையும் இழிவு படுத்தும் வகையில் தொடர்ந்து சில கட்டுரைகள் வெளியிட்டு இருக்கிறீர்கள்!

குதிரை முகக்கடவுளான ஹயக்ரீவரைப் பற்றி எழுதும்போது ''குதிரைக்கும் கழுதைக்கும் காமவேகம் அதிகம்''—என்று மோன வேள்விக்காரர் எழுதுகிறார்; அதை நீங்கள் உங்கள் பத்திரிகையில் வெளியிடுகிறீர்கள்.

நீங்கள் உண்மையில் சகிப்புத்தன்மையும், ''சமரச மனப்பான்மை''யும் உடையவர் என்றால், இக்கடிதத்தைத் தங்கள் பத்திரிகையில் அச்சிட்டுக் கீழ்க்காணும் கேள்விகளுக்குப் பதில் அளியுங்கள்:-

(1) சர்ச்சைக்குரிய பல விஷயங்கள் மோனவேள்விக் கட்டுரையில் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றுக்காவது கட்டுரை எழுதியவர் ஓர் ஆதாரமும் காட்டவில்லையே, ஏன்?

(2) இந்து மதத்தில் குதிரைமுகக் கடவுள், யானைமுகக் கடவுள், காளைமுகக்கடவுள் என்றெல்லாம் உண்டு. இன்று குதிரை முகக் கடவுளை இழிவுபடுத்தி எழுதிய மோனவேள்விக்காரர், நாளை யானைமுகக்கடவுள் போன்ற பிறகடவுள்களையும், ஆராய்ச்சி என்ற பெயரால் இழிவுபடுத்தமாட்டார் என்பது என்ன நிச்சயம்? அதையும் தாயில் வெளியிட நீங்கள் தயங்கமாட்டீர்கள் அல்லவா? வாழ்க உங்கள் சமரசம்!

(3) இந்து அல்லாத பிறமதத்தினரின் கடவுள்களை இழிவு படுத்தி யாராவது எழுதினால், நீங்கள் அதையும் வெளியிடுவீர்களா? வாழ்க உங்கள் தைரியம்!

ஒரு வேண்டுகோள்:

பல மதத்தினரும் படிக்கும் ஒரு வார இதழில் வெளிவரும் எந்தக் கட்டுரையும் யாருடைய மனமும் புண்படாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டிய தார்மீகப்பொறுப்பு உங்களுக்கு உண்டு. பத்திரிகை தர்மத்தைக் காப்பாற்றுங்கள். நன்றி.

தங்கள் நலனை விரும்பும்,

(ஓம்) R. ராஜகோபாலாச்சாரி

http://acharya.org

2. 43, மேலச்சித்திரைவீதி, ஸ்ரீரங்கத்திலிருக்கும் ஸ்ரீ S. திருவேங்கடாச்சாரி அவர்கள் வலம்புரிஜானுக்கு எழுதிய கடிதம்

பொருள் : பைரவி பதில்கள் - 13—7—86, தாய் இதழ்

மேற்படி பகுதியில் "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் ஆசிரியர் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் கிறிஸ்தவர் கடவுளிடமிருந்து வைஷ்ணவர்கள் கடவுள் வேறுபட்டவர் என்ற மாபெரும் உண்மையைக் கண்டு பிடித்திருக்கிறார்" என்று எழுதப்பட்டுள்ளது.

சங்கத்தமிழர்களும் வேதகாலச் சான்றோர்களும் சங்கத்தமிழ்ப் பாடல்களிலும், வடமொழி நூல்களிலும் வைணவர்கள் சிறப்பாக வழிபடுகிற "திருமால்" ஒருவனே பரதெய்வம், முழுமுதல் கடவுள் என்று பாடியிருக்கிறார்கள். வடமொழி வேதமும், வேதம் தமிழ் செய்த மாறனும் தங்கள் பாசுரங்களில் இந்த உண்மைப் பொருளையே வலியுறுத்துகிறார்கள். ஆனால் 1986 ஆண்டுகளுக்கு முன் இரண்டாவது கடவுளை இறக்குமதி செய்தவர்கள் கிறிஸ்தவர்கள் என்கிற மாபெரும் உண்மையை நீங்கள் உணராதது ஏன்? கிறிஸ்தவர்களும் தங்களை ஏன் தாக்குகிறார்கள் என்றால் அவர்கள் மதக்கொள்கைகளையும் தாங்கள் திரித்து வெளியிடுகிறீர்கள் போலும்! 'காக்கை குருவி எங்கள் சாதி' என்ற பாரதியார் பாட்டு சமுதாயப் பொதுவாழ்க்கையில் அனைவரும் ஒருமைப்பாட்டுடன் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தத்தான். வைஷ்ணவர்கள் உள்ளிட்ட இந்துக்கள் தங்கள் கடவுள் கொள்கைகளைக் கைவிட்டு உங்கள் கண்டுபிடிப்பான இரண்டாவது கடவுளுக்குத் துதிபாட அல்ல. "வண்புகழ்நாரணன்" "உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்", "கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ", "மாயாவாமனனே மதுசூதா நீயருளாய்" என்பன போன்ற வேதக் கருத்துக்களைத் தமிழ் செய்த மாறன் இன்று இருந்திருந்தால் உங்கள் கருத்துக்களைப் படித்து அழமாட்டார். கைகொட்டி எள்ளி நகையாடியிருப்பார். எழுதுபவர்க்கும் அதைப் படிப்பவர்க்கும் ஒன்றும் புரியாமல் குழப்பத்தால் தலை சுற்றவேண்டும் என்றால் ஞானச்சேரிக்காரர் கட்டுரைகளைப் படிக்கவேண்டும்.

நீங்கள் தாய் பத்திரிகையில் வெளியிடும் சமயக்கட்டுரைகளில் உள்ள அடிப்படைத் தவறுகளைச் சுட்டிக்காட்டினால் நீங்கள் ஆதாரத்துடன் பதில் அளிக்கவேண்டும். அல்லது தவறுகளைத் துணிவுடன் ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்கவேண்டும். அதைவிடுத்து தரக்குறைவாக பைரவி பதில் எழுதுவது முறையா? பத்திரிகை தர்மத்திலும், தமிழ்ப் பண்பாட்டிலும், மாற்றார் கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற ஜனநாயக பண்பிலும் உங்களுக்கு அணுவளவு நம்பிக்கை இருந்தால், இக்கடிதத்தை "தாய்" பத்திரிகையில்

வெளியிட்டு அடியிற்கண்ட கேள்விகளுக்குப் பத்திரிகை வாயிலாக விடையும் விளக்கமும் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(1) "குதிரை முகக்கடவுளை (ஹயக்ரீவரை) கண்டவுடன் காம வேகம் மிகுந்தது. ஏனெனில் குதிரைக்கும், கழுதைக்கும் காம வேகம் அதிகம்" என்று வெளியிடுகிற நீங்கள் "யானைமுகக் கடவுளைக் கண்டால் காமவேகம் உண்டாகும்; ஏனெனில் அவர் ஆற்றங்கரைகளில் பெண்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்" என்ற கருத்தை வெளியிடுவீர்களா?

(2) சேரிக்காரர் தொடர்ந்து எழுதும் கட்டுரைகளில் காணப்படும் (அபத்தக்) கருத்துக்களுக்கு பண்டைத்தமிழ் இலக்கியங்களிலோ, ராமாயணம், பாரதம், பாகவதம் போன்ற இதிகாசங்கள், புராணங்களிலிருந்தோ ஆதாரம் அல்லது அடிப்படை காட்டமுடியுமா?

(3) வைஷ்ணவ மதப்பிரிவுகளையும் வைஷ்ணவ ஆசார்யர்களையும் இழிவுபடுத்தித் தரங்கெட்ட முறையில் எழுதியுள்ள நீங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைக் கண்டால் காமவேகம் உண்டாகும் என்று ஒரு கயவன் ஞானச்சேரிக்காரரைப்போல் எழுதினால் வெளியிட்டுப் பதில் கூறுவீர்களா?

(4) கிறிஸ்து தூக்கிலிடப்பட்டார் என்று எழுதிய புத்தகத்தைத் தடைசெய்யவேண்டுமென்று பாராளுமன்றத்தில் குரலெழுப்பிய நீங்கள் ஆதாரமில்லாமல், தரக்குறைவான முறையில் ஸ்ரீவைஷ்ணவ மதக் கருத்துக்களையும், ஆசார்யர்களையும் வாரந்தோறும் வசைபாடுகிற "தாய்" பத்திரிகையும் தடை செய்யப்பட வேண்டும் என்று ஒப்புக்கொள்வீர்களா?

(5) எம்மதமும் சம்மதம் என்று பொதுவாழ்வில் பிற மதங்களைச் சகிப்புத்தன்மையுடன் ஏற்காமல் இந்து வைஷ்ணவர்கள் மனத்தைப் புண்படுத்தும் ஞானச்சேரிக்கட்டுரைகளை இனி உங்கள் பத்திரிகையில் வெளியிடாமல் நிறுத்துவீர்களா?

(6) எழுத்து சுதந்திரம் பிறரை வசைபாடுவதை அனுமதிக்காது என்று உங்களுக்குத் தெரியுமா?

ஸ்ரீரங்கம்
16—7—86.

இப்படிக்கு,
(ஒ-ம்) எஸ். திருவேங்கடாச்சாரி

முடிவுரை

இந்தக் கேள்விகளில் சிலவற்றையாவது இவர் தாய் பத்திரிகையில் அச்சிட்டு பதில் உரைத்தால் அதை அடுத்தமாதம் விமர்சிப்போம். பதில் உரைக்காமல் பிடிவாதமாக வேதவைதிக விஷ்ணு வைஷ்ணவ தூஷணங்களைச் செய்துவந்தால் நீதிமன்றங்களில் நடவடிக்கை எடுப்பதுதவிர வேறு வழியில்லை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-39] [ஒளி-9, 10

மோனவேள்வி மோசடி அம்பலமானது

— ❀ —

சென்ற இதழ் தலையங்கத்தில் வெளியாகியிருந்த—காரைக்கால் பேராசிரியர் *R*. ராஜகோபாலாச்சாரி, *M.A.* அவர்கள் வலம்புரிஜானுக்கு எழுதிய கடிதமும் விடுத்த கேள்விகளும் 10—8—86 "தாய்" இதழில் வெளியிடப்பட்டன. 17—8—86 "தாய்" இதழில் அக்கடிதத்தின் ஒரு சிறுபகுதிக்கு மோனவேள்விக்காரரின் விளக்கம் வெளியிடப்பட்டிருந்தது. அது பின்வருமாறு:—

மோனவேள்விக்காரரின் விளக்கம்

"மோன வேள்விக் கட்டுரைத்தொடரில், 'நினைத்ததை முடிக்க ஓர் கடவுள்' என்ற கட்டுரை ஹயக்ரீவரின் உயர்ந்த உண்மை விளக்கமே.

"வர்க்கம் அல்லது பரம்பரை உற்பத்தியை மனிதன் கவனிக்க வேண்டும்" என்று தோன்றியவரே ஹயக்ரீவர். இக்கருத்தே அக்கட்டுரையில் உள்ளது என்பது வெளிப்படை ஆகும்.

மறைவான உண்மைகள்தான் மனிதனைப் புண்படுத்தும் என உணர்க. சகல சாத்திரங்களையும் கற்பிக்க வந்த கடவுள் இக்கலையினையும் கற்பிக்கத் தோன்றினார் என்பது அசிங்கம் அல்ல. புண்பட வழியேதும் இல்லை என்பதே தெளிவு.

ஹயக்ரீவர் என்ற கடவுள் ஓர் சிறிய குழுவின் சொத்து அல்ல என்பதை உணர்ந்தால் மனிதனுக்குக் கோபமே வராது.

பல கடவுள்கள் பாரதத்திற்குச் சொந்தம் என்பதைப்போன்று ஹயக்ரீவரும் பாரதமக்களுக்குச் சொந்தம் என்பதை உணர்த்தியதே இக்கட்டுரைதான். —ஞானிகள் 8—8—86.

இதுபற்றி ஸுதர்சனம் ஆசிரியரின் விமர்சம்

நமது அன்பர் ராஜகோபாலாச்சாரி கேட்டிருந்த கேள்விகளில் முக்கியமானது "சர்ச்சைக்குரிய பல விஷயங்களை எழுதும் மோன வேள்விக்கட்டுரையாளர் அவற்றுள் ஒன்றுக்காவது ஓர் ஆதாரமும்

http://acharya.org

காட்டாதது ஏன்?" என்னும் கேள்வியேயாகும். எந்த ஆதாரத்தையும் காட்டாமல் மோனவேள்விக்காரர் மறுபடியும் ஆதாரமற்ற விஷயங்களையே இந்த விளக்கத்திலும் எழுதியிருக்கிறார். இதிலிருந்தே இவர் ஆதாரமற்ற விஷயங்களை எழுதும் மோசடிக்காரர் என்பது "தாய்" வாசகர்களுக்கே விளங்கும். ஹயக்ரீவரை வழிபடுவதற்காக அனைவரும் சொந்தம் கொண்டாடலாமேயொழிய அவருக்குக் காமவேகம் அதிகம் என்று நிராதாரமாகக் கூறி இழிவுபடுத்துவதற்காகச் சொந்தம் கொண்டாடுவது எந்த நியாயத்திலும் சேராது. எழுதுபவர் காமவேகம் மிக்கவர் என்பதையே காட்டும். இவருடைய விளக்கத்தைக் கண்டபின்பு நமது அன்பர் ராஜகோபாலாச்சாரி அவர்கள் பின்வரும் கடிதத்தைப் பதிவஞ்சலில் "தாய்" ஆசிரியருக்கு அனுப்பியிருக்கிறார்.

திரு. வலம்புரிஜானுக்குப் பேராசிரியர் எழுதிய கடிதம்:—

அன்புள்ள "தாய்" ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம், மோன வேள்விக் கட்டுரை பற்றி மாறுபட்ட கருத்துக்கள் உண்டு என்பதைத் தங்களுடைய பல்லாயிரக் கணக்கான வாசகர்களுக்கு அறிவிக்கும் வகையில் 10.8.86 தாய் இதழில் என் கடிதத்தை வெளியிட்டதற்காகத் தங்களுக்கு என் இதயம் நிறைந்த நன்றி. இந்தக் கடிதத்தையும் தாயில் வெளியிட வேண்டுகிறேன்.

1. "ஹயக்ரீவர் என்ற கடவுள் ஒரு சிறிய குழுவின் சொத்து அல்ல என்பதை உணர்ந்தால் மனிதனுக்குக் கோபமே வராது" என்று மோன வேள்விக் கட்டுரையாளர் 17-8-86 இதழில் விளக்கம் தந்திருக்கிறார்.

ஹயக்ரீவர் ஒரு சிறிய குழுவின் சொத்து அல்ல; எல்லா உயிரினங்களுக்கும் உரிய கடவுள் என்று இவர் உணர்ந்ததால் தான், இழிவு படுத்தி எழுதினார் போலும்!

"தோள்கள் ஆயிரத்தாய்! முடிகள் ஆயிரத்தாய்!
துணை மலர்க் கண்கள் ஆயிரத்தாய்!
தாள்கள் ஆயிரத்தாய்! பேர்கள் ஆயிரத்தாய்!"— [திருவாய்மொழி]

என்று பல பெயர்களால், பல மதத்தினராலும் அழைக்கப்படும் ஒரே பரம்பொருள் எல்லா உயிரினங்களுக்கும் உரியவர் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் இவர்தான் அந்தக் கடவுளை ஒரு சிறிய குழுவினருக்கு மட்டும் உரியவர் என்று அலட்சியமாக நினைத்துக் கை போன போக்கிலே எழுதியிருக்கிறார்.

2. "மலரினும் மெல்லிது காமம்" என்ற குறளில், தெய்வப் புலவர் திருவள்ளுவர், தெய்வீகக் காதலின் அடிப்படையில் தோன்றும் உயர்ந்த ஒரு காமத்தை, மலரைவிட மென்மையானது; மங்கலகரமானது; தெய்விகமானது என்று புகழ்ந்திருக்கிறார்.

"காமம் வெகுளி மயக்கம் இம்மூன்றன்
நாமம் கெடக் கெடும் நோய்"

http://acharya.org

என்ற குறளில், இரண்டாவதான இழிந்த காமத்தை வெறுத்து ஒதுக்கியிருக்கிறார்; இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்த காமத்தை வருணித்து விரிவாக எழுதுகின்ற ஒரு சிலர், தாங்கள் தப்பித்துக் கொள்வதற்காக, "நாங்கள் புனிதமான ஒரு காதலை அல்லவா வருணித்தோம்?" என்று வாதம் புரிவார்கள்! அதைப்போலவே மோனவேள்விக்காரரும் "கடவுள் இக்கலையினையும் கற்பிக்கத் தோன்றினர்" என்று சமாதானம் கூறுகிறார். "அசுரனிடம் இருந்து வேதங்களை மீட்டுப் பிரம்ம தேவரிடம் அளிப்பதற்காக ஹயக்ரீவர் அவதாரம் செய்தார்" என்று நமது இதிகாச புராணங்கள் கூறுகின்றன.

3. ஹயக்ரீவரும் பாரத மக்களுக்குச் சொந்தம் என்பதை உணர்த்தியவர்கள் இதிகாச புராணங்களை எழுதிய மகரிஷிகளும், அவர்களுடைய அடிச்சுவட்டில் அவதரித்த மகான்களும் தான். அவர்கள் எல்லாம் "நாங்கள் தான் இதனை மக்களுக்கு உணர்த்தினோம்" என்று தங்களுக்குத் தாங்களே பெருமை கூறிக் கொள்ளவில்லை. ஆதலால் அந்தப் பெருமையை ஏகபோகமாகத் தமக்கே உரிமையாக ஆக்கிக்கொண்டுவிட்டார் மோனவேள்விக்காரர்!

இவர் எழுதியுள்ள பல தவறுகளை எல்லாம் ஒதுக்கி வைத்து விடுவோம்; கீழேயுள்ள இந்த நான்கு கருத்துக்கள் மட்டும் யாரையும் புண்படுத்தாதா என்பதை "தாய்" வாசகர்களின் முன்னால் தீர்ப்புக்கு வையுங்கள் என்று தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்;—

(*i*) இந்து மதத்தில் இப்போது உள்ள சாத்திரம் ஓர் சாத்திரமே அல்ல. (தாய் 20-4-86)

(*ii*) "வேதாந்த தேசிகர் காலத்தைக் கடவுள் துறையில் இருண்ட காலம் என்றே கடவுளும் எண்ணினான்" (தாய் 27-4-86)

(*iii*) ஆணவத்தைச் சாத்திரமாகவே கொண்டு தென்கலை வடகலை என்று பிரித்தனர். (தாய் 20-4-86)

(*iv*) தென்கலை அந்தணர்கள் சுத்தமான அந்தணர்கள் அல்ல. (தாய் 20-4-86)

மோன வேள்விக் கட்டுரைகளில் உள்ள அபத்தங்களைச் சரியாகச் சுட்டிக் காட்டித் திருவரங்கம் பெரியாசிரம மாத இதழான "ஸ்ரீரங்கநாத பாதுகா"வும், வைணவ சுதர்சனமும் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன. இவற்றிற்கு மோன வேள்விக்காரர் என்ன பதில் சொல்லுகிறார்?

தவறை ஒப்புக் கொள்வதற்குத் தைரியம் வேண்டும்; உண்மையை நேசிக்கும் மனப்பக்குவம் வேண்டும். இந்த இரண்டும் இல்லாதவர்கள் ஞானக்கட்டுரை எழுதுவது நம் நாட்டின் தலைவிதி போலும்!

இந்து மதம் மட்டும் அல்லாமல், எந்த மதத்தைப் பற்றிய கட்டுரையாக இருந்தாலும் அந்த மதத்தில் உண்மையான பற்றும், தெளிந்த

http://acharya.org

அறிவும் உள்ளவர்களைக் கொண்டு எழுதச் செய்யுங்கள்; அல்லது மதங்களைப் பற்றிய கட்டுரைகளைப் பொதுமக்கள் பத்திரிகையில் வெளியிடாதீர்கள் என்று தங்களை அடிபணிந்து வேண்டிக் கொள்கிறேன்.

மீண்டும் நன்றி.

காரைக்கால்
13—8—86.

தங்கள் நலனை விரும்பும் அன்பன்,
(Sd) R. RAJAGOPALACHARI

ஸுதர்சனம் ஆசிரியரின் முடிவுரை

பேராசிரியரின் இந்த நியாயமும் நீதியும் நிறைந்த கடிதத்தை "தாய்" பத்திரிகை இன்று (25—8—86) வரை வெளியிடவில்லை. வெளியிட்டாலும் மனம்போனபடி எழுதும் மோனவேள்விக்காரர் சரியான விளக்கம் தரப்போவதுமில்லை. இவரைப்பற்றி விசாரித்த நம் அன்பர்கள் இவர் எந்த மதத்திலும் அறிவு சிறிதுமில்லாதவர் என்றும், புத்தர், தத்தாத்ரேயர், சதாசிவப்ரம்மேந்திரர் ஆகியவர்களின் அவதாரமே தான் என்று பொய்கூறிப் பல பாமரமக்களை ஏமாற்றி வருபவர் என்றும், தாய் கூறும் 'அருள்' வாக்கில் மயங்கித் தன்னிடம் வருகின்றவர்களை 'பூர்வஜன்மத்தில் நீ எனக்கு உறவு' என்று கூறித் தகாத உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுகிறவர் என்றும் கூறுகிறார்கள். இவற்றிலிருந்தும், அபத்தக்களஞ்சியமாக இவர் எழுதும் மோனவேள்விக் கட்டுரைகளிலிருந்தும் நாட்டில் மலிந்துவிட்ட போலி ஞானிகளில் ஒருவரே இவர் என விளங்குகிறது. அன்பர்கள் இத்தகைய போலிஞானிகளிடம் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று தங்களுக்குத் தெரிந்தவர்களிடம் எச்சரிக்கை செய்துவைக்கவேண்டும்.

தென்திருப்பேரைக் கோயிலில் கொள்ளை

28—7—86 இரவு தென்திருப்பேரைக்கோயிலில் கருவூலக்கதவை உடைத்து எல்லா நகைகளும் கொள்ளை அடிக்கப்பட்டன என்றும், மோப்பநாய்கள் ஆளும்கட்சியைச் சேர்ந்த தக்காரை மோப்பம் பிடித்தன என்றும் பத்திரிகைகளில் செய்தி வந்தது. நகைகளின் மதிப்பு கோடி ரூபாய்க்குமேல் இருக்கும் என்று கூறுகிறார்கள். மறுநாள் நமது அன்பர் ஒருவர் களவுபோன நகை மூட்டை காயல்பட்டினத்தில் கிடைத்து விட்டதாகக் கடிதம் எழுதினார். போலீஸ் அதிகாரிகள் நகைகள் கிடைத்து விட்டதால் இனிப்பு சாப்பிடும்படி சொன்னதாக ஊர்க்காரர்கள் கூறுகிறார்கள். ஆனால் ஒரு மாதமாகியும் நகைகள் கிடைத்த சேதி பத்திரிகையில் வரவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் சம்பந்தப்பட்டிருப்பதால் தேர்தல் முடிவு பாதகமாகிவிடும் என்று விஷயத்தை அமுக்கிவைத்திருப்பதாகக் கூறுகிறார்கள். அரசியல் வாதிகளின் பகாசுரப்பசிக்கு இரையாகி நகைகள் பறிபோகாமல் மீண்டும் பெருமாளுக்குக் கிடைக்கும்படி அனைவரும் பிரார்த்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-39] [ஒளி-12

விஷ்ணுகோயில்கள் அழியாமல் காக்க வழி உண்டா?

[ஸுதர்சனர்]

சென்ற இதழ்த் தலையங்கத்தைக் கண்டபின் பல அன்பர்கள் இக்கேள்வியை நேரிலும் கடிதம் மூலமும் எழுப்பியுள்ளனர். அதற்குள்ள ஒரே வழியைத் தெரிவிப்பதற்காக எழுந்தது இக்கட்டுரை. ஆங்கிலத்தில் ஸ்ரீமத் பரமஹம்ஸ சின்ன ஸ்ரீமந்நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிக்கும், மற்றும் பலருக்கும் நம்மால் அனுப்பப்பெற்ற ஆலோசனைகளின் தமிழ் வடிவமே இது. வைஷ்ணவமதத் தலைவர் எவரையும் கலந்து ஆலோசிக்காமல், வைணவ விரோதிகளின் ஆலோசனைப்படி விஷ்ணுகோயில்களைக் குறித்துச் சட்டம் இயற்ற முற்பட்டிருக்கும் ஆந்திர அரசின் அடாத செயலைக் கடுமையாகக் கண்டிக்க முன்வந்துள்ள ஜீயர் ஸ்வாமியும், விஷ்ணுகோயில்களில் அக்கரையுள்ள மற்றும் பலரும் ஒன்று சேர்ந்து இவ்வாலோசனையின்படி டில்லி உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுக்கத் துணிவுடன் முன்வருவார்கள் என நம்புகிறோம். அப்படி முன்வருகிறவர்களுக்குப் பல வகைகளிலும் உதவ நாம் ஸித்$_3$த$_4$மாயிருக்கிறோம்.

ஸுதர்சனரின் ஆலோசனைகள்

1. இந்து மதம் எனும் சொல் ஒரு குறிப்பிட்ட மதத்தைக் குறிப்பது போன்றதொரு மயக்கத்தை விளைக்கும்

http://acharya.org

சொல்லாகும் (misnomer), உண்மையில், ஒன்றுக்கொன்று முரண்பட்ட பல மதங்களின் கூட்டே 'இந்து மதம்' எனப் படுகிறது.

2. இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டங்கள் தமிழ் நாடு, ஆந்திரம், கர்நாடகம் முதலான தென்னிந்திய அரசுகளால் பல வருடங்களுக்குமுன் இயற்றப்பெற்றன. வைஷ்ணவாகமங்கள், வைணவசமயம் ஆகியவற்றின் அடிப் படையில் நடைபெறவேண்டிய விஷ்ணுகோயில்களும், சைவாகமங்கள், சைவசமயம் ஆகியவற்றின் அடிப்படையில் நடைபெறவேண்டிய சைவக்கோயில்களும் இச்சட்டங்களின் படி இந்து அறநிலைய இலாகாவால் ஒன்ருக நிர்வகிக்கப் படுகின்றன, அவ்விலாகாவால் நியமிக்கப்படும் ஆலய அதி காரிகள் பெரும்பாலும் சைவர்கள் முதலான அவைஷ்ணவர் களாகவேயுள்ளனர். இதனுல் விஷ்ணுகோயில்கள் சென்ற பல வருடங்களாகப் பல இன்னல்களைச் சந்தித்துவருகின் றன. அவற்றின் தனித்தன்மையை இழந்து படிப்படியாகச் சைவக் கோயில்களாக மாறிவருகின்றன. இது நீடித்தால் அடுத்த நூற்ருண்டில் விஷ்ணு கோயில்கள் அடியோடு மாறிவிடும் அபாயமுள்ளது. சில சான்றுகள் காட்டுவோம்.

3. (1) விஷ்ணு கோயில்களில் விஷ்ணுவை இகழும் திருவெம்பாவையை விளக்கும் பாவை மாநாடுகள் அக் கோயில் பணத்தை வாரியிறைத்து நடத்தப்பெற்றன. பல வருடங்கள் வைஷ்ணவர்கள் கடுமையாக ஆக்ஷேபித்த பிறகே இவை நிறுத்தப்பட்டன. (2) சில வருடங்களுக்கு முன் (சங்ககாலத்திலிருந்து விஷ்ணு கோயிலாயிருக்கும்) திருமாலிருஞ்சோலைமலையில் அறநிலைய அதிகாரிகளின் ஆதரவுடன் பெருமாளுடைய மண்டபத்தில் சைவர்களால் இரவோடிரவாக "பழமுதிர்சோலை" என்னும் பெயர்ப் பலகைகளுடன் ஓர் முருகன் கோவில் கட்டப்பட்டது, வழக்குத் தொடுத்துப் பல வருடங்கள் வைஷ்ணவர்கள் போராடியபின் சென்னை உயர்நீதி மன்றத்தில் வைஷ்ண வர்கள் 'கட்டின கோவிலை இடிக்க வேண்டாம்' என்று

http://acharya.org

பெருந்தன்மையுடன் விட்டுக்கொடுத்தபின் ''பழமுதிர் சோலை'' என்னும் பெயர்ப் பலகைகள் அகற்றப்பட்டு, அழகர்கோயில் அதிகாரிகளால் அக்கோயில் நிர்வகிக்கப் பட்டுவருகிறது. இந்நிலையில் தமிழ்நாடு அரசு ஆதரவுடன் அந்த முருகன் கோயிலுக்கு அருகிலேயே இரண்டு ஏகர் நிலத்தைப் பெற்று அதில் ''பழமுதிர்சோலை'' என்னும் பெயருடன் புதிதாகப் பெரியதொரு முருகன்கோயில் கட்ட மதுரையிலுள்ள சைவப் பணமுட்டைகள் மறுபடியும் முயற்சி தொடங்கவே, மறுபடியும் வைஷ்ணவர்கள் மதுரை சப் கோர்ட்டிலும், சென்னை உயர்நீதிமன்றத்திலும் வழக்குத் தொடுத்துப் போராடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. (3) H. H. காமகோடியும் அவரது சீடர்களும்—பல்லாயிரம் வருடங்க ளாகத் திருவேங்கட மலையில் விஷ்ணுகோவிலாயிருக்கும் ஸ்ரீநிவாசனைச் சிவனென்றும்; சக்தியென்றும், முருகனென் றும் இவையனைத்தும் கலந்த ஒரு தெய்வம் என்றும் திருமலைதிருப்பதி தேவஸ்தான பத்திரிகையுள்ளிட்ட பல பொதுஜனப் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வருகி றார்கள். அந்த தேவஸ்தானத்தின் சார்பில் நடத்தப்பெறும் ஹிந்து தர்ம ப்ரதிஷ்டானத்தைக்கொண்டு, அதில் முக்கிய பங்கு வகிக்கும் H. H. காமகோடி திருமலைக் கோயில்களில் பெரும்பாலான வேதபாராயணக்காரர்களின் ஸ்தானத்துக்கும், காலையில் பெருமாளுக்குமுன் ஸுப்ரபாதம பாடுபவரின் ஸ்தா னத்திற்கும் நீறுபூசிய சைவர்களை நியமிக்கச் செய்துவிட்டார். (4) இவ்வக்ரமங்களுக்கெல்லாம் சிகரமாக அவரும் மற்றும் பல வைஷ்ணவ விரோதிகளும் சொன்ன ஆலோசனையின் பேரில் ஆந்திர அரசு திருமலையிலுள்ள வைஷ்ணவ அர்ச்ச கர்கள்·மிராசுக்காரர்களின் பரம்பரை உரிமையைப் பறிக்கச் சட்டம் கொண்டுவரவுள்ளது. இச்சட்டம் நிறைவேறினால், திருமலைக்கோவில் வெகு விரைவில் அவைஷ்ணவக் கோயிலாக மாறிவிடும் அபாயமுள்ளது. (5) தமிழ்நாட்டி லுள்ள விஷ்ணுகோயில் நிர்வாக அதிகாரிகள் பெரும்பாலும் சைவர்களாயிருக்கையாலே விஷ்ணுகோயில்களில் அவற்றின்

http://acharya.org

பணத்தைக்கொண்டு விஷ்ணுவை இழிவுபடுத்தும் பாடல்களும், அத்தகைய பாடல்கள் நிறைந்த கச்சேரிகளும், சொற்பொழிவுகளும் ஒலிபரப்பப்படுகின்றன. தூண்களிலுள்ள சக்தி, கணபதி, முருகன் சிலைகள் தனிக் கோயிலாக்கப்படுகின்றன. காஞ்சி வரதராஜப்பெருமாள் கோயிலில் உள்ள கஜானனர் விக்ரஹத்தை அலங்கரித்து வந்த வடகலைத் திருமண்காப்பு பழைய அறநிலைய ஆணையரான A. உத்தண்டராமன் அவர்களால் அகற்றப்பட்டுத் திலகம் சாத்தப்பட்டது. காமகோடி சிஷ்யர்கள் மாதந்தோறும் அங்கு கணபதி உபநிஷத், கணபதி ஸ்தோத்ரம் முதலானவற்றை ஒவ்வொரு சதுர்த்தியிலும் பாராயணம் செய்துவருகின்றனர். (6) அவைஷ்ணவர்களான நிர்வாக அதிகாரிகளின் அக்கறையின்மையால் விஷ்ணுகோயில்களில் கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள விக்ரஹங்களும், நகைகளும் களவு போய்விட்டன. விஷ்ணுகோயில்கள் அவைஷ்ணவர்களான அறநிலைய அதிகாரிகளின் ஆட்சியால் பலவகையிலும் நலிவுற்று வருவதற்கு மற்றும் பல பல சான்றுகள் உண்டு.

4. கிறிஸ்தவ மதஸ்தாபனங்கள் கிறிஸ்தவர்களாலும், இஸ்லாமிய மதஸ்தாபனங்கள் முஸ்லிம்களாலும் நிர்வகிக்கப்பட்டுச் செழித்து வரும்போது, விஷ்ணுகோயில்கள் "இந்து" என்னும் போர்வையில் அவைஷ்ணவர்களால் நிர்வகிக்கப்பட்டு நலிந்து வருகின்றன. இது அரசியல் நிர்ணயச் சட்டத்தின்கீழ் நமது மத சுதந்திரத்தைப் பறிப்பதாகும். இவ்வடிப்படையில் டில்லி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, தமிழக ஆந்திர அரசுகள் நிறைவேற்றியுள்ள இந்து அறநிலையச் சட்டங்களை விஷ்ணுகோயில்களைப் பொறுத்தவரையில் செல்லாதவை என்னும் தீர்ப்பைப்பெற்று, பெரும்பாலும் வைணவமத சமூகத் தலைவர்களைக்கொண்ட சுயாதிகார அமைப்பின்கீழ் விஷ்ணுகோயில்களைக் கொண்டுவர முயல்வதொன்றே விஷ்ணுகோயில்கள் அழியாமல் காக்க வழியாகும். இம்முயற்சியை எடுக்க ஸ்ரீவைஷ்ணவத் தலைவர்கள் எவராவது முன்வந்தால் அவர்களுக்கு ஸ்ரீவைஷ்ணவ சமூகம் முழுவதும் கடமைப்பட்டிருக்கும்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-40] [ஒளி-1

இந்து(உ)ப்புக்கடலில் வைணவப் பெருங்காயத்தைக் கரைக்கவிடாதீர்

(ஸுதர்சனர்)

சென்ற மாதம் நமது தலையங்கத்தின் சாரம் ஆங்கிலத்தில் "ஸ்ரீராமானுஜ வாணி" பத்திரிகையிலும் வெளியிடப்பட்டது. பல அன்பர்கள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். வைணவ மத சமூகத் தலைவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதோர் அமைப்பின் கீழ் விஷ்ணு கோயில்களைக் கொண்டுவரவேண்டியது மிக அவசியமாய், அவசரமாகச் செய்யவேண்டிய கடமை என்பதை உணர்த்தும் செயல்கள் தமிழ்நாட்டில் மேலும், மேலும் நடந்து வருகின்றன. அவை யாவன :—

(1) அழகர் கோவிலில் நூபுரகங்கைக்கு அருகில் "மான் பூங்கா" ஒன்று அமைக்கவேண்டும் என்னும் வியாஜத்தில் (முருகன் கோவில் கட்டுவதற்காக?) பெரிய அஸ்திவாரம் தோண்டும் முயற்சியில் காட்டிலாகா இறங்கியுள்ளது. திருக்கார்த்திகையன்று அழகர்மலையுச்சியில் அழகர் தேவஸ்தானம் தீபம் ஏற்றும் பழக்கமுண்டு. இவ்வருஷம் விளக்கேற்றும் போது ஓர் முருகன் சிலையைக் கொண்டுபோய் அங்கு வைத்து விடச் சில சைவர்கள் முயன்றனர். இவ்விஷயங்களை ஆட்சேபித்து நாம் வக்கீல் நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம்.

(2) நாட்டில் ஆங்காங்கு இருமுடி கட்டிக்கொண்டு நள்ளிரவு வரையில் கூச்சலிடும் ஐயப்ப பக்தர்கள் விஷ்ணு

http://acharya.org

கோயிலிலும் இச்சடங்கைச் செய்கிறார்கள். சில வருடங்களாக ஸ்ரீபெரும்பூதூரில் ஸந்நிதிக்கு முன்பேயுள்ள எம்பெருமானாருடைய அவதார ஸ்த₂ல மண்டபத்தில் இவ்வடாத செயல் நடந்து வருகிறது. மறந்தும் புறந்தொழாமையை நிலைநாட்டிய மஹாபுருஷர் அவதரித்த இடத்தில். கோயில் பரம்பரை தர்மகர்த்தாவான ஸ்ரீமத் பரமஹம்ஸ யதிராஜஜீயர் ஸ்வாமி ஆட்சேபித்தும் இது நடந்து வருகிறது. அவ்வூரிலுள்ள சில வைஷ்ணவ பந்துக்களும் இதற்கு உடந்தையாயிருப்பதாகத் தெரிகிறது. அவ்வூரிலும், அருகிலுள்ள சென்னையிலுமுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் யாரும் இதுபற்றி எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

இத்தகைய அடாத செயல்கள் விஷ்ணு கோயில்களில் நடைபெறாமல் தடுப்பதற்கு. நாம் சென்ற இதழில் தெரிவித்தபடி டில்லி உச்சநீதிமன்றத்தில் ரிட் வழக்குத் தொடுப்பதே சரியான பரிஹாரமாகும். 'இந்து' அமைப்புக்களின் முயற்சியால் 'இந்து'மதத் தலைவர்களடங்கிய அமைப்பின்கீழ் எல்லாக் கோயில்களும் வந்துவிட்டால், இத்தகைய அடாத செயல்கள் நூறுமடங்கு பெருகி, விரைவிலேயே விஷ்ணு கோயில்கள் சிவன் கோயில்களாக மாற்றப்பட்டுவிடும். அப்படி நடக்குமுன் வைஷ்ணவர்களில் எவராவது ஓர் மஹாதீ₂ரபுருஷர் ஸுப்ரீம் கோர்ட்டில் விஷ்ணு கோயில்கள் வைஷ்ணவமதசமூகத் தலைவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதோர் அமைப்பின்கீழ் வர வழக்குத் தொடுக்க வேண்டும். 'இந்து' மதம் என்று பெயர் பெற்றுவிட்ட மதம் ஓர் உப்புக்கடல் போன்றது. எவருடைய ஆத்ம தாகத்தையும் அது போக்காது. வைஷ்ணவமதம் பெருங்காயம் போல் மணம் வீசுவது. ஆத்மாவுக்கு நம் வேத சாஸ்திரங்கள் அளிக்கும் உணவை மணம்வீசிப் பரிமளிக்கச் செய்வது. இந்துமதத் தலைவர்கள் அடங்கிய அமைப்பின்கீழ் நமது ஆலயங்கள் வரும்படி நாம் அனுமதித்தோமாகில், அது வைணவமாகிற பெருங்காயத்தை 'இந்து'மதமாகிற உப்புக்கடலில் கரைத்துப் பாழடிப்பதையொக்கும். இப்படி நடக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று ஸ்ரீ வைஷ்ணவர் அனைவரையும் நாம் இறைஞ்சுகிறோம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-40] [ஒளி-3

‘இந்து’மதத்தை விட்டு வெளியேற முடியுமா?

— ❋ —

(ஸுதர்சனர்)

சென்றமாதத் தலையங்கத்தைக்கண்ட பலர் இக்கேள்வியை எழுப்பியுள்ளனர். உதாரணமாக-தற்சமயம் பாளையங்கோட்டை (21. ஸ்ரீ ராமஸ்வாமி ஸந்நிதிவீதி)யில் இருக்கும் நமது அன்பர் ஸ்ரீ K. A. தேவராஜன் ஸ்வாமி எழுதியுள்ள கடிதம் வருமாறு:—

K. A. தேவராஜன் ஸ்வாமியின் கடிதம்

இப்பவும் தலையங்கம் ஸேவித்தேன். ஸ்ரீவைஷ்ணவர்கள் இந்து மதத்தை விட்டு வெளியேற வேணுமென்று தேவரீர் விடுத்துள்ள சவாலை ஸ்ரீவைஷ்ணவர்கள் துணிந்து ஏற்பார்களா? நம்முடைய சமுதாயம் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் போன்று ஒற்றுமையும், ஒழுக்கமும், பண பலமும், கட்டுப்பாடும், உடைய ஒரு Force ஆக மாறுமா? அப்படி ஒரு இயக்கமாக ஸ்ரீ வைஷ்ணவர்களைச் சேர்க்க இன்று யாரால் முடியும்? தென்கலை - வடகலை என்றும், ஸ்வயமாசார்யர் - மடத்தார் என்றும், முனித்ரயத்தார் என்றும் பல்வேறு இனப் பிரிவுகளும், காழ்ப்புணர்ச்சியும் உள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் பாகவதர்களுடன் இணைவார்களா? அப்படியே இணைந்தாலும் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் உள்ள தலைவர் போன்று ஒருவர் நம்மிடையே இருக்

http://acharya.org

கிறாரா? ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் கௌரவ ஆடிட்டராகவும், நெருங்கிய தொடர்புடையவனாகவும் உள்ள அடியேனுக்கு நம்முடைய சமுதாயம் பேரியக்கமாக மாறி மத்திய மாநில அரசுகளைப் பணிய வைக்கும் சக்தியை அடையும் என்று நினைக்கவும் துணிவில்லை.

இக்கடிதத்தில் எழுப்பப்பட்டிருக்கும் ஐயம் மிகவும் நியாயமானது. ஆனால் தென்னாட்டில் ஸ்ரீ ராமாநுஜரால் நிலைநிறுத்தப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவமதமும், அதைச்சார்ந்த கோயில்களும் சென்ற பலவருடங்களாக இந்து மதத்தைச் சேர்ந்த மற்ற பிரிவினரால் தம்முடைய பத்திரிகைப் பிரசார பலம், அதிகாரபலம், பணபலம், அரசியல்பலம் முதலானவற்றைக்கொண்டு படிப்படியாக அழிக்கப்பட்டுவரும் இன்றுள்ள சூழ்நிலையில், ஸ்ரீ வைஷ்ணவர்கள் வெளிநாட்டாரால் நம்மீது திணிக்கப்பட்ட 'இந்து' மதம் என்னும் போலிப் பெயரை உதறி எறிவது தவிர நம்மைத் தற்காத்துக்கொள்ள வேறுவழியில்லை. ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவர்க்கும் ஒரு கண்போல் விளங்கும் திருமலை திருப்பதி கோவிலில், ஸ்ரீ வைஷ்ணவர்கள் எவருடைய ஆலோசனைகளையும் கேளாமல் காமகோடி, சிருங்கேரி, ராமகிருஷ்ணமடம் முதலிய வைஷ்ணவ விரோதிகளின் ஆலோசனைகளின்படி ஆந்திர அரசு வைஷ்ணவாகமங்களுக்கு முரணான பல மாறுதல்களைக்கொண்டுவரத் தீவிரமாக முற்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலும் இப்படிப்பட்ட பல முயற்சிகள் செய்யப்பட்டு வருவது நாம் அறிந்ததே. ஒற்றுமையாயிருந்து இதைத் தடுக்காவிடில் 21-ஆம் நூற்றாண்டில் வைஷ்ணவக் கோயில்கள் அடியோடு அழிந்துவிடும். இன்றுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் தங்களிடையேயுள்ள உட்பூசலிலே ஈடுபட்டு நமக்கு உயிர் நாடியான ஆலயங்களை அழியவிட்டால், நமது ஆழ்வார்களும் ஆசார்யர்களும் அரும்பாடுபட்டு உயிரையும் கண்ணையும் கொடுத்து ரக்ஷித்த நம்முடைய கோயில்களையும் தர்சனத்தையும் அழியவிட்ட பெரும்பழி அவர்களை வந்தடையும். இதை உணர்ந்து மடாதிபதிகளும் மதத்தலைவர்களும் ஒருங்

http://acharya.org

கிணைந்து சென்ற இதழில் தெரிவித்தபடி நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

'இந்து மதம்' என்னும் பெயர் நம்முடைய வேத சாஸ்திரங்களாலோ, ஆழ்வார்களாலோ ஆசார்யர்களாலோ ஆதரிக்கப்பட்ட சொல் அல்ல. நம்மை அடிமைப்படுத்திய வெளிநாட்டானல் நம்மீது திணிக்கப்பட்ட சொல்லேயாகும். வைஷ்ணவர்கள், வைஷ்ணவமதம் என்னும் சொற்களே முன்னேர்களால் ஆதரிக்கப்பட்ட சொற்களாகும். சென்ற தலைமுறைவரையில் சாஸனப் பத்திரங்களில்கூட வைஷ்ணவர்கள் ''விஷ்ணுமதம்'' என்றும், சைவர்கள் ''சிவமதம்'' என்றுமே குறிப்பிட்டு வந்தார்கள். ஆகையால் ஒற்றுமையுடன் வழக்குத் தொடுத்தால் ஏராளமான ஆதாரங்கள் நமக்கு வெற்றியைத் தேடித்தரும். ஸ்ரீ வைஷ்ணவ மடாதிபதிகள் இதற்கான முயற்சியை எடுக்கத்தவறினுல் வைஷ்ணவ விரோதிகளான அரசியல்வாதிகளும் 'இந்து' மதக்காரர்களும் வைஷ்ணவ மடங்களை விரைவில் அழித்துவிடுவார்கள். இன்று ஸ்ரீ ரங்கம் ஸ்ரீரங்க நாராயணஜீயர் ஸ்வாமிக்கு ஏற்பட்டிருக்கும் நிலை மற்ற மடாதிபதிகளுக்கும் வருவதற்கு நீண்டநாளாகாது.

இதை உணர்ந்து ஸ்ரீ வைஷ்ணவ மடாதிபதிகளும் மதத்தலைவர்களும் ஒருங்கிணைந்து செயல்படுவதுதவிர வேறு வழியில்லை.

அரசியல் பிரசாரத்தின்மூலம் மத்தியிலும், மாநிலங்களிலும் சட்டசபைகளில் இடம்பிடித்து நமக்குவரும் ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளலாமென்று சிலர் கருதுகிறுர்கள். நாட்டிலுள்ள பெரும்பான்மை மக்கள் அவைஷ்ணவர்களாயிருக்கும் இன்றுள்ள சூழ்நிலையில், இது இயலாத காரியம். ஆகையால் நம்முடைய வாசகர்கள் தத்தமக்கு ஆசார்யர்களாகவும் தெரிந்தவர்களாகவும் இருக்கும் மடாதிபதிகளுக்கும் மதத்தலைவர்களுக்கும் வரவிருக்கும் பேராபத்தை எடுத்துக்கூறி, ஒன்றுதிரண்டு ஒரு பெரிய வைஷ்ணவ மகாநாட்டைக்கூட்டி, சென்ற இதழில் தெரிவித்தபடி நடவடிக்கைகளை எடுக்க ஆவன செய்யவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேம்.

http://acharya.org

தலையங்கத்தை நாம் எழுதி முடித்தவுடன் "க. வே. நெடுஞ்சேரலாதன், தலைவர், தமிழர் சமயப் பாதுகாப்புக் கழகம் 'பொற்காளி அம்மன் இல்லம்' P. M. தேவர் நகர், ஜெய்கிந்த்புரம், மதுரை-11" என்ற விலாசமுள்ள சைவரிடமிருந்து "சைவமத மக்களே விழித்தெழுந்திடுவீர்!" என்னும் தலைப்பில் துண்டுப் பிரசுரம் வந்தது. அதில் ஒத்த கருத்துகள் வெளியிடப்பட்டிருப்பதைக் கீழே தருகிறோம்.

சைவமத மக்களே விழித்தெழுந்திடுவீர்!

சைவம், வைணவம், மத்துவம், சுமார்த்தம் முதலிய மதங்களும், சில நவீன மதங்களும் வெளிநாட்டார் வைத்த பெயராகிய "இந்து மதம்" என்ற போர்வைக்குள் நுழைந்துள்ளன. இந்தப் பொது இந்து மதத்திற்கு இன்னார்தான் வழிகாட்டுவது என்ற வரையறை இல்லை. யார் வேண்டுமானாலும் வழி காட்டலாம், வழி காட்டுகிறார்கள். யார் எப்படி வழி காட்டினாலும் உடனே பின்பற்றுகிறது என்ற தவறும் நடைபெறுகிறது. சைவ மதத்தைச் சேர்ந்த மக்களை எடுப்பார் கைப்பிள்ளை போன்று மேற்கூறியபடி கெட்டுப் போகாது, தங்கள் சைவசமயக் கற்பை இழக்காமலும் தங்கள் சிவன் கோவில்களைச் சமயக் கற்பழிப்புக்குக் களனுக்காமலும் பாதுகாக்க வேண்டிய தருணம் வந்து விட்டது. இந்துமதக்கோவில்கள் கிடையாது. அற நிலைய ஆட்சியில் இருப்பதோ சைவ, வைணவக் கோவில்களும் அதன் வருவாய்கள் மட்டுமே! இவ்விரண்டு சமயக் கோவில்களும் ஒரே ஆணையர் ஆட்சியில் இருப்பதால் இரண்டு மதமும் ஒன்று என்றும் அல்லது ஒரு மதத்தின் இரு பிரிவு என்றும் தவருன கருத்து மக்களிடையே உண்டாகி மதக் கலப்படத்திற்கு வித்திட்டுத் தமிழகத்தின் சமயத்துறை குழம்பிய நிலையில் உள்ளது. எனவே சைவ சமய ஆட்சித்துறை, வைணவ சமய ஆட்சித்துறை என்று ஏற்படுத்தி, இரு ஆணையர் நியமிக்கவும், அதே சமயம் இரு சமயத் தலைவர்களைத் தனித்தனிக் குழு அமைத்து அவர்கள் ஆலோசனைப்படி அறநிலையத்துறையை இயங்கும்படி செய்யவும் வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. எனவே சைவ மடங்களின் தலைவர்கள், சைவ சமயச் சங்கங்கள், சைவ சமயப் பெரியோர்கள் தலைமையில் சைவ சமய வளர்ச்சி குறித்தும், சிவன் கோவில்களை மதக்கலப்படமின்றி பாதுகாப்பது பற்றியும் முடிவு செய்ய ஒரு மாநாடு விரைவில் கூட்ட எண்ணியுள்ளோம். இதில் ஆர்வமுள்ளவர்கள் தங்கள் கருத்துகளை எங்கட்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-40] [ஒளி-4

இந்துமதமா? இந்துப்பண்பாடா?

— ❋ —

(ஸுதர்சனர்)

சென்ற இதழில் நம்முடைய தலையங்கத்தைப் பார்த்த பின் பல வைஷ்ணவமதத் தலைவர்களும், அன்பர்களும் நேரிலும் கடிதம் மூலமாகவும் அதற்கு ஆதரவைத் தெரிவித் திருக்கிறார்கள், விஷ்ணு காஞ்சீபுரம் ஸன்னிதி வீதியில் எழுந் தருளியிருக்கும் முதலியாண்டான் ஸ்வாமி. கோவை அர்ச்சக கல்பதரு" ஆசிரியர் ஆகம வித்வான் S. T. ரங்கநாதாசாயர் ஸ்வாமி ஆகியவர்கள் எழுத்துமூலம் ஆதரவு தெரிவித் திருப்பவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். வருகிற ஸ்ரீரங்கம் ராஜகோபுர ஸம்ப்ரோக்ஷணத்தின்போது ஸ்ரீவைஷ்ணவமதத் தலைவர்களும் பிரமுகர்களும் ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளும் போது அனைவரையும் கலந்துகொண்டு ஆவனசெய்யலா மென்பது அன்பர் ஒருவரின் ஆலோசனை, மற்றோரன்பரின் ஆலோசனைப்படி இக்கட்டுரையின் இறுதியில் ஓர் வேண்டு கோள் விடுக்கப்படுகிறது. அதன்படி வரும் ஆதரவையும் பார்த்துக்கொண்டு ஓரிரு மாதங்களில் என்ன செய்யலா மென்பதை முடிவெடுக்கமுடியும் என்று நம்புகிறோம், நிற்க

சென்னையில் பிரபல அட்வகேட்டும் R.S.S. முதலான இந்து ஸ்தாபனங்களிடம் ஈடுபாடுடையவரும் நமது பத்திரி கையின் நீண்டநாள் அன்பருமான S. ஸம்பத்குமார் (23, ராம

http://acharya.org

சந்திராரோடு: நேருநகர், குரோம்பேட்டை, சென்னை-44 நம்முடைய தலையங்கங்களின்மீது கருத்துவேற்றுமை தெரிவித்துள்ளார். அவரது கருத்துக்களின் சாரம் அடுத்த பாராவில் கொடுக்கப்படுகிறது.

"தங்களுடை தலையங்கங்களைப்படித்து நான் மிகவும் அதிர்ச்சியுற்றேன். இந்துமதமாகிற பாலிலிருந்து திரட்டப் பட்ட வெண்ணெய்போன்றது வைஷ்ணவமதம். க்ரந்த பரிசயமும் பக்தியும்மிக்க தங்களைப் போன்றவர்கள் அதன் தலைவர்கள். தங்களுடைய நல்லெண்ணத்தைக் (Sicenritly) குறித்து எவராலும் சந்தேகிக்கமுடியாது. (இந்து மதத்திலிருந்து பிரிந்துசென்ற) ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் செய்த பெரும் தவறை நாமும் செய்யவேண்டாம். நமது புனிதமான பாரதத்தின் பண்பாடு நிறைந்த வாழ்க்கைமுறையே இந்து மதமாகும். இந்துமதமில்லையேல் இந்தியா இல்லை. முகத்தோடு கோபித்துக்கொண்டு மூக்கை அறுத்துக்கொள்ளக்கூடாது. இந்து மதத்தைவிட்டு வெளியேறுவது தலையையே அறுத்துக்கொள்வதாகும். எவர் என்ன சொன்ன போதிலும், முஸலீம்களும் கிறிஸதுவர்களும் நம்மை இந்துக்களாகவே காண்கிறார்களேயொழிய சைவர்களாகவோ வைஷ்ணவர்களாகவோ காண்பதில்லை. வெளிநாடுகளில் நம்மை மதிப்பவர்களும் நம்மை இந்துக்களாகவே மதிக்கிறார்கள். இந்துக்களாகிற நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து இந்துப்பண்பாட்டில் சிறந்ததனைத்தையும் காப்பாற்ற வேண்டும். இந்து ராஷ்ட்ரமாக ஒன்றுபட்டு நிற்பதே நமக்கு பலமாகும். தங்களைப்போன்ற பெரியவர்கள் இந்து மதத்தை வழிநடத்திச் செல்லவேண்டும். அதே சமயத்தில் ஸம்ப்ரதாயங்களையும் ரக்ஷித்து வளர்க்கவேண்டும்" என்பது நமது அன்பரின் கருத்துக்களின் ஸாரம்.

இதுபற்றி நம்முடைய விளக்கங்களை இனி அளிக்கிறோம். இந்துக்கள் ஒன்றுபட்டு நின்று இந்து பண்பாட்டுக்கு நேரிடும் இடர்களைக் களைந்து அப்பண்பாட்டைக் காப்பாற்ற

http://acharya.org

வேண்டும் என்பதில் நமக்குக் கருத்து வேற்றுமையே இல்லை ஆயினும் இந்து சமூகத்தில் பொதுவான பண்பாடுகளுக்கு வெளிநாட்டார்கள் 'இந்து மதம்' என்று பெயர் சூட்டியதை ஏற்றுக்கொண்டு சைவ வைஷ்ணவ ஆலயங்களை நிர்வகிப்பதற்கு "இந்து அற நிலையப்பாதுகாப்புச்சட்டம்" என்ற ஒருசட்டத்தை இயற்றி. அதன் மூலம் வைஷ்ணவ விரோதமனப்பான்மை கொண்ட பெரும்பான்மை இந்துக்கள் விஷ்ணுகோயில்களுக்கும் வைஷ்ணவமதத்துக்கும் பற்பல இடையூறுகள் விளைத்து வருவதைத் தடுக்கவேண்டும் என்றே நாம் கூறுகிறோம்.

இன்று 'இந்துக்கள்' என்று அழைக்கப்படுபவர்கள் மிகவும் முரண்பட்ட பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களின் சமூகமேயொழிய ஒரு குறிப்பிட்ட மதத்தைப் பின்பற்றும் சமூகமன்று. வெளிநாட்டினிடமிருந்து விடுதலை பெறுவதற்காக, காந்திஜி அவர்கள் தலைமையில் நடந்த தேசீயப் போராட்டத்தின்போது அனைவரையும் ஒன்றுபடுத்துவதற்காக எம்மதமும் சம்மதம்' என்னும் அடிப்படைகருத்து உருவாக்கப்பட்டது. இக்கருத்து இந்நாட்டில் தோன்றிய மதப்ரவர்தகர்களான எல்லா ஆசார்யர்களுடைய கருத்துக்களுக்கும் முரண்பட்டது. இவ்வடிப்படைக் கருத்தைக் கொண்ட ஓர்பண்பாடு தேசீயப்போராட்டத்தின்போது வலுப் பெற்றது. வெளிநாட்டான் வைத்த 'இந்து' என்ற பெயரை ஏற்றுக்கொண்டு இதற்கு 'இந்து மதம்' என்று பெயர் சூட்டபபட்டது.

எம்மதமும் சம்மதம்' என்னும் அடிப்படையில் அமைந்த பண்பாடு ஸ்ரீவைஷ்ணவ ஆழ்வார்களோ ஆசார்யர்களாலோ ஏற்கப்பட்டதல்ல. ராமகிருஷ்ணமடத்தார்போன்ற அத்வைதிகளாலேயே ஏற்பட்டது. அந்த ராமகிருஷ்ண மடமே வங்காளத்தில் தன்னைக்காப்பாற்றிக்கொள்ள இந்து மதத்தைவிட்டு வெளியேறும்போது. தமிழ்நாட்டில் நமது மதத்தைக் காப்பாற்றிக்கொள்ள வைஷ்ணவர்கள் இந்து மதத்தைவிட்டு வெளியேறினால் என்ன தவறு?

http://acharya.org

உண்மையில் 'இந்து மதம்' என்று ஒருமதம் கிடையாது சிலபண்பாடுகளுக்கே இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஆகையால் அதைவிட்டு வெளியேறுவதா இல்லையா என்பது முக்கியமான பிரச்சனையல்ல. விஷ்ணுகோயில்கள் வைஷ்ணவ விரோதமனப்பான்மையுள்ள பெரும்பான்மை இந்துக்களின் பிடியிலிருந்தும், அரசியல்வாதிகளின் பிடியிலிருந்தும் விடுபட்டு, வைஷ்ணவமத தலைவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டுமென்பதே நமது நியாயமான கோரிக்கை.

வைஷ்ணவ விரோதிகளான பெரும்பான்மை இந்துக்கள் சைவ வைஷ்ணவ ஆலயங்கள் அனைத்தும் அரசியல் வாதியின் ஆட்சியிலிருந்து விடுபட்டு, தங்கள் ஆட்சியின் கீழ் வரவேண்டும் என நீண்டநாளாகக் கிளர்ச்சிசெய்து வருகிறார்கள். இது நிறைவேறினால் விஷ்ணு கோயில்கள் தங்கள் தனித்தன்மையை அடியோடு இழந்துவிடும். ஆகையால் இந்து ஸ்தாபனங்களிடம் மிகவும் செல்வாக்குள்ளவரும், சிறந்த வழக்கறிஞருமான ஸ்ரீஸம்பத்குமார் போன்ற நண்பர்கள் இந்து ஸ்தாபனங்களிடம் எடுத்துக்கூறி, அவற்றைக் கொண்டு வழக்குத் தொடுத்து விஷ்ணுகோயில்கள் பெருபான்மையாக வைஷ்ணவர்களைக் கொண்ட சுயாதிகார அமைப்பினாலும், சிவன் கோயில்கள் பெரும்பான்மையாக சைவர்களைக் கொண்ட சுயாதிகார அமைப்பினாலும் நிர்வகிக்கப் படுவதற்கு வழிவகுக்கவேண்டும். இதைச் செய்தால், சைவர்களோ வைஷ்ணவர்களோ இந்து மதத்தைவிட்டு வெளியேறுவது என்னும் பேச்சுக்கே இடமில்லாமற்போகும். இல்லாவிட்டால்; வைஷ்ணவர்கள் தங்கள் ஆழ்வார்களும், ஆசார்யர்களும் அரும்பாடுப்பட்டு பாதுகாத்து அளித்திருக்கும் வைஷ்ணவமதத்தையும் ஆலயங்களையும் பாதுகாப்பதற்காக, நம்மீது திணிக்கப்பட்ட இந்து மதத்தைவிட்டு வெளியேறவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டே தீரும். இதைத்தவிர்ப்பது நமது அன்பரான திரு ஸம்பத்குமார் போன்றவர்கள் கையிலேயே உள்ளது.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-40] [ஒளி-5

வைஷ்ணவாலயரக்ஷணம்

— ❋ —

(ஸுதர்சனர்)

சென்ற இதழ்த் தலையங்கத்தைக்கண்டபின் சென்னை அட்வகேட் திரு S ஸம்பத்குமார் அவர்கள் நமக்கு எழுதிய கடிதத்தின் ஸாரம் பின்வருமாறு:—

வைஷ்ணவாலயங்கள் விஷ்ணுபக்தியுள்ள வைஷ்ணவர்களாலும், சைவாலயங்கள் சிவபக்தியுள்ள சைவர்களாலும் நிர்வகிக்கப்படவேண்டும் என்று நீங்கள் சொல்லுவதில் அபிப்ராயபேதத்திற்கே இடமில்லை. விச்வ ஹிந்து பரிஷத்தின் காரியதரிசி என்னும் முறையில் ஆலயங்கள் சுயாதிகார அமைப்புக்களால் அரசியல்வாதிகள் அல்லது அரசாங்கத்தின் குறுக்கீடில்லாமல் நிர்வகிக்கப்படுவதற்குரிய உத்தேசச்சட்டத்தின் நகலை, காசி மகாராஜாவுக்கும் இதற்காகப் பரிஷத்தால் நியமிக்கப்பட்ட கமிட்டிக்கும் அனுப்பியிருக்கிறேன். ராமஜன்ம பூமியை முஸ்லிம்களின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காக நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சி தங்களுக்குத் தெரிந்ததே. நாங்கள் அந்த ஸ்ரீராம ஜன்ம பூமியை, அதைப் பல வருஷங்களாக நிர்வஹித்து வந்த ஸ்ரீராமானுஜ ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஓர் மடத்தின்வசத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று முயன்று வருகிறோம். எங்களது முயற்சிகள் வெற்றிகண்டால் நீங்கள் கூறுவதெல்

http://acharya.org

லாம் முழுவதும் நிறைவேறும். நீங்கள் எங்களை ஆசிர்வதிப்பீர்கள். அதுவே நாங்கள் விரும்புவது. கோயில்களும், மடங்களும் ஒரு சுயாதிகார அமைப்பினால் நிர்வகிக்கப்பட வேண்டும். அந்த அமைப்புக்குள் ஒவ்வொரு ஸம்ப்ரதாயமும் முழு சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும். நேர்மையான பயனுள்ள ஒருமைப்பாடு அதில் இருக்கும். இப்பொழுதிருக்கும் குழப்பம் இருக்காது. எங்களுடைய முயற்சிகள் வெற்றிபெறப் பிரார்த்தித்து எங்களை ஆசீர்வதியுங்கள்.

திரு. சம்பத்குமார் அவர்கள் அகில பாரத அளவில் மத ஸ்தாபனங்கள் ஓர் சுயாதிகார அமைப்பின்கீழ் வருவதற்கு விச்வ ஹிந்து பரிஷத் பாடுபட்டு வருவதாக எழுதியுள்ளார். இதில் பல சிக்கல்கள் உண்டு. நம் நாட்டில் சைவம், வைஷ்ணவம், அத்வைதம், த்வைதம் என்று பலவகைப்பட்ட மத ஸ்தாபனங்கள் உள்ளன, ஒவ்வொன்றிலும் பல உட்பிரிவுகள் உள்ளன. வைஷ்ணவம் ஒன்றை எடுத்துக்கொண்டால் வடநாட்டில் சைதன்ய ஸம்ப்ரதாயம், வல்லப ஸம்ப்ரதாயம், ஸ்வாமி நாராயண ஸம்ப்ரதாயம் முதலான பல உட்பிரிவுகள் உள்ளன. தென்னாட்டில் தென்கலை வடகலை என்னும் பிரிவு உள்ளது. சைவம், அத்வைதம், த்வைதம் முதலானவற்றிலும் இப்படியே பல பிரிவுகள் உள்ளன. இவை அனைத்தையும் ஒரு சுயாதிகார அமைப்பின்கீழ் கொண்டுவருவது இயலாத காரியம். ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்தனி சுயாதிகார அமைப்புகள் இருந்தால்தான் நடைமுறைக்கு ஒத்துவரும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், பலவருஷங்களாக அறநிலய இலாகாவில் மிகவும் செல்வாக்குப் பெற்றுள்ள சைவர்களாலும், பெரும்பாலும் சைவர்களாக மாறிவிட்ட அத்வைதிகளாலும் வைஷ்ணவாலயங்களுக்குப் பல இன்னல்கள் இழைக்கப்பட்டு வருவதைப் பலவருடங்களாக நாம் சுட்டிக்காட்டி வருகிறோம். ஆகையால் இங்கு வைஷ்ணவாலயங்களுக்கு ஓர் சுயாதிகார அமைப்பும் சிவாலயங்களுக்கு ஒரு சுயாதிகார அமைப்பும் இருந்தால்தான் சீரான, நேர்மையான நிர்வாஹம் நடக்கும்.

http://acharya.org

வைஷ்ணவ ஆலயங்களுக்குரிய சுயாதிகார அமைப்பின்கீழ் தென்கலே, வடகலே என்று இருபிரிவுகளே அமைத்து. அந்தந்தக் கோயில்கள் அந்தந்தப் பிரிவிஞல் நிர்வகிக்கப்பட வழி செய்யலாம். விச்வஹிந்து பரிஷத்தைப்போல் ஓர் அகில இந்திய அமைப்பு இதற்கு முயற்சி எடுக்கும் என்று நமக்குத் தோன்றவில்லே. ஆகையால், சைவர்களும், வைணவர்களும் நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்து வைஷ்ணவாலயங்களும், சைவாலயங்களும் தனித்தனி சுயாதிகார அமைப்பின் கீழ் வருவதற்குப் பாடுபடுவதே சரியானவழியாகும் என்பது நமது கருத்து.

கூனிவேலே என்றது சரியா?

சென்ற இதழில் ஸ்ரீரங்கம் ராஜகோபுர ஸம்ப்ரோக்ஷணத்தின் தேதியை ஒத்திவைக்கக் கடைசி நேரத்தில் காமகோடிப் பெரிய பீடாதிபதி கூனிவேலே செய்து முயன்றது பலிக்கவில்லே என்று நாம்எழுதியிருந்தோம். இதை நமது அன்பர்களில் பலர் நேரிலும் கடிதம் மூலமும் பாராட்டியுள்ளனர்.

தமிழ்நாடு பாரதீய ஜனதா கட்சியின் மாநில பொதுச் செயலாளரான திரு *K.* சங்கர் அவர்கள் [11-வது குறுக்குத்தெரு. ஜவஹர்நகர், சென்னே-82] நம்முடைய சென்றமாதத் தலேயங்கத்தையும். காமகோடிபீடாதிபதி செய்தது கூனி வேலே என்று நாம் எழுதியதையும் கண்டித்துக் கடிதம் எழுதியிருக்கிருர், சென்றமாதத் தலேயங்கம் பற்றி இம்மாதம் நாம் எழுதியிருப்பதே அவருக்கும் பதில் ஆகும்.

காமகோடிபீடாதிபதி விஷ்ணுவைப்பற்றியும் வைஷ்ணவத்தைப் பற்றியும் ஆழ்வார்கள் ஆசாரியர்களேப்பற்றியும் கடந்த முப்பது வருடங்களாக லக்ஷக்கணக்கானவர்கள் படிக்கும் பொதுஜனப்பத்திரிகைகளில் எழுதிவரும் அவதூறுகள் கணக்கில் அடங்காதவை, ஸுதர்சனர் பதிலில் இதுவரை வெளிவந்துள்ள எட்டு சதகங்களில் சுமார் நூறு பதில்கள் இவர் வைஷ்ணவத்துக்கு இழைத்துவரும் அநீதிகளேப்பற்றியவையேயாகும்- இன்றுவரை இவற்றுக்கு அவரோ அவர்களது சீடர்களோ

http://acharya.org

யாதொரு பதிலும் கூருமல், 'கலைமகள்' 'கல்கி' போன்ற பொதுஜனப் பத்திரிகைகளில் மேலும்மேலும் விஷ்ணு வைஷ்ணவத்வேஷப் பிரசாரங்களையே செய்துவருகிருர்கள். இம்மாத ஸுதர்சனத்தில் வெளிவரும்' 26 வது கேள்வி பதில் ஓர் சான்று. நிற்க. கூனி வேலை என்று நாம் எழுதியது பற்றி இனி விளக்குவோம். ஸ்ரீரங்கம் ராஜகோபுரத்திற்கு மஹா ஸம்ப்ரோக்ஷணம் செய்ய, காமகோடியையும் கலந்து கொண்டே நாள் வைக்கப்பட்டது. நாள் குறிப்பிட்டுப் பல மாதங்கள் கழிந்தபின்பு, கடைசி நிமிஷத்தில் பல லக்ஷங்களைச் செலவழித்து இதுவரையில் எவரும் காணுத முறையில் ஏற்பாடுகள் அனைத்தையும் செய்தபின்பு, எவரோ ஒருவர் "நாள் நன்ருயில்லை அரசுக்கே ஆபத்து" என்று அறநிலைய அமைச்சருக்கு எழுதுவதும், அவர் உடனே ஸ்ரீரங்கம் கோவிலோடு எத்தொடர்புமில்லாத காமகோடி சங்கராசார்யரை அபிப்பிராயம் கேட்பதும், அவர் உடனே தேதியை மாற்றிவிடலாம் என்று கூறுவதுமாக நடந்த இந் நாடகம் 'இது, கூனிவேலை' என்று தெளிவாகக் காட்டுகிறதே! இது வரையில் காமகோடி இச்செய்தியை மறுக்காதது இதை உறுதிப்படுத்துகிறதே! நாம் ஒற்றுமையைக் குலைப்பதாக திரு *K* சங்கர் ஓலமிடுகிருர். சைவ வைணவ ஒற்றுமையைக் கடந்த முப்பது வருடங்களாகக் குலைத்து வருபவர் காமகோடிப் பெரிய பீடாதிபதியே என்பது நமது ஸுதர்சனர் பதில்களைப் படித்தாலே எவர்க்கும் புரியும். காமகோடி பீடாதிபதி செய்தது கூனிவேலையே என்பது "ஸ்மார்த்த வைணவ மோதலே திருவரங்கக் குடமுழுக்குக் குழப்பம்" என்னும் தலைப்பில் "12, *S. P.* ஸன்னதி 3 வது தெரு, ராயப்பேட்டை, சென்னை-14" என்னும் விலாஸத்திலிருந்து வெளிவரும் 'தங்கக் கருடன்' வாரப் பத்திரிகையின் 30-3-87 இதழில் வெளிவந்த கட்டுரையைப் படித்தாலே அனைவர்க்கும் விளங்கும். (இதன் ஆசிரியர் "அடியார்") அதில் சாரமான பகுதிகளைக் கீழே அளிக்கிருேம்.

[திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) கோவில் கோபுரத்திற்குக் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) நடத்துவதில் வைணவத் துறவியிடம் (ஜீயரிடம்) தமிழக அரசாங்கத்தினர் தோற்று விட்டார்கள்.

http://acharya.org

வைணவத் திருத்தலம் திருவரங்கம், அதில் 236 அடி உயரத்திற்கு ராஜகோபுரம்கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அந்தக்கோபுரத்திற்கு மார்ச் 25ம் தேதி நாள் குடமுழுக்குசெய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் அரியலூரில் ரயில்விபத்து நடந்தது. அதையொட்டி குடமுழுக்கு விழாவைத் தள்ளிப் போடலாம் என்று யோசனை கூறப் பட்டது. இந்த யோசனையைக் கூறியது காஞ்சி சங்கராசார்ய சுவாமிகள், அமைச்சர்கள் சென்று கலந்து ஆலோசித்தார்கள். விழாவைத் தள்ளிவைப்பது என்று அரசாங்கம் முடிவுசெய்தது. அதற்கான அறிவிப்பும் வந்தது.

ஜீயர் எதிர்ப்பு.

விழாவைத் தள்ளி வைக்க இயலாது. குறிப்பிட்ட தேதியில் நானே குடமுழக்கை நடத்துவேன் என்று அகோபில மடத்து ஜீயர் சுவாமிகள் அறிவித்தார்.

ஆலயக் கதவுகளைப் பூட்டினாலும் சரி, நானே விழாவை நடத்துவேன் என்று ஜீயர் ஸ்வாமிகள் கூறிவிட்டார்.

அமைச்சர் சவுந்திரராஜன் ஜீயர் சுவாமிகளிடம் சென்று ஒரு மணி நேரம் விவாதம் நடத்தினார், ஒத்திவைக்க முடியாது என்று ஜீயர் சுவாமிகள் திட்டவட்டமாகப் பதில் அளித்து விட்டார்.

வேறுவழி இல்லாமல் அரசாங்கம் பணிந்தது. ஜீயர் சுவாமிகள் விரும்பினால் 25-ம் தேதியே விழாவை வைத்துக்கொள்ளலாம்-என்று முதலமைச்சர் உத்தரவிட்டதாக, கோவில் அமைச்சர் வி. வி. சுவாமிநாதன் அறிவித்தார்.

கருடன் பறந்தது.

இந்த மோதலின் உண்மையை அறிய கருடன் திருவரங்கம் நோக்கிச்சென்றது. அகோபில மடத்தைச் சார்ந்த வைணவர்கள் கோபமாகச் சில கேள்விகளைக் கேட்டனர்.

ரெங்கராஜன் (வைணவர்)

திருவரங்கம் கோவில் வைணவர்களின் கோவில். இந்தக்கோவில் கோபுரத்தில் கும்பாபிஷேகம் பற்றி யார் ஆலோசனை கூறுவது? காஞ்சிசங்கராசாரிய சுவாமிகளா? அவருக்கு என்ன உரிமை? ஜீயர் சுவாமிகளை முதலில் ஆலோசிக்காதது ஏன்?

வேணுகோபாலன் (வைணவர்)

நாங்கள் வைணவர்கள். எங்களுக்கு காஞ்சிசங்கராசாரியர் குரு அல்ல! அத்வைதிகளான ஸ்மார்த்தர்களுக்குத்தான் அவர் "லோக குரு". அந்த ஸ்மார்த்தர்கள் சிறுபான்மையினர் (மைனாரிட்டி குருப்). ஆனால் அவர்களின் கையில் பெரிய பெரிய பத்திரிகைகள் உள்ளன. ...பத்திரிகை பலத்தையும்-மந்திரிகளின் ஆதரவையும் வைத்துக் கொண்டு எங்கள்மீது ஆதிக்கம் செலுத்தினால் விடுவோமா?

http://acharya.org

(இவ்விடத்தில் மற்றும் சிலருடையகருத்துக்களும் உள்ளன.)

பொதுக் கருத்து.

திருவரங்கம் பகுதியில் மேற்கண்ட விதத்தில் பலரும் கருத்துக் கூறினாலும் பொதுவான கருத்து ஜீயர் சுவாமிகளின் துணிவைப் பாராட்டுவதாகவே இருந்தது..

அமைச்சர் விவாதம்

சத்துணவு அமைச்சர் சவுந்திரராஜன் இந்தத் தொகுதியைச் சார்ந்தவர். வைணவ-சைவ மோதல்கள் வரலாறு எல்லாம் அறிந்தவர்... விபத்து நடந்த நேரத்தில் விழா வேண்டாம் என்று அமைச்சர் வாதாடிப் பார்த்திருக்கிறார்.

* ஏற்பாடு நடந்தாயிற்று. * அழைப்பு அனுப்பியாயிற்று. * யாகசாலையும் தயார் ஆகிவிட்டது. இந்த நிலையில் ஒத்திவைக்கவே முடியாது என்று சுவாமிகள் கூறியிருக்கிறார்...

அதற்குப் பிறகு சென்னைக்கு தகவல் தரப்பட்டிருக்கிறது. அரசாங்கம் ஒத்திவைப்பதாக அறிவித்தால் ஜீயர் சுவாமிகள் அதை மீறி கும்பாபிஷேகம் நடத்த...... அசிங்கம் ஆகிவிடும் என்று எண்ணிப் பார்த்திருக்கிறார்கள்.

கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை—என்பது போல் ஜீயர் சுவாமிகள் விருப்பப்படியே கும்பாபிஷேகம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

ஜீயரின் விருப்பத்தை முதல் அமைச்சர் எம். ஜி. ஆர். ஏற்றுக்கொண்டு ஏற்கனவே அறிவித்தபடி 25-ந் தேதி கும்பாபிஷேகம் நடக்கும் என்று அறிவித்தார்.

எம்.ஜி. ஆரின் அறிவிப்பைக் கேட்டதும் பக்தர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஊர்வலமாகத் திரண்டு சென்று ஜீயரிடம் விவரம் தெரிவித்தார்கள்.

எம். ஜி. ஆர். அளித்த உறுதிமொழியைக் கேட்டு ஜீயர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார், நிருபர்கள் அவரிடம் கருத்து கேட்டபோது "எம். ஜி. ஆர், எம் ஜீயர்" (எங்கள் ஜீயர்) ஆகிவிட்டார்" என்று ஜீயர் ஆனந்தக் கண்ணீருடன் பாராட்டினார்

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-40] [ஒளி-6, 7

தென்கலை வடகலையும் பொதுஜனப் பத்திரிகைகளும்

— ❀ —

(ஸுதர்சனர்)

உலகிலுள்ள எல்லா மதங்களிலும் உட்பிரிவுகள் உள்ளன. அவற்றினிடையே கோட்பாடுகளை யொட்டி நூல்கள் மூலமாகவும், உரிமைகளை யொட்டி நீதிமன்ற வழக்குகள் மூலமாகவும் வாதவிவாதங்கள் விளைந்துகொண்டும் வருகின்றன. வெளிநாடுகளிலும் கிறித்தவமத உட்பிரிவினர்களிடையிலும், இஸ்லாமிய மத உட்பிரிவினர்களிடையிலும் பெரிய போர்களே நடந்துள்ளன. பஞ்சாபில் சீக்கியர்கள் இந்துக்களிடையே நடக்கும் போராட்டமும், இலங்கையில் பௌத்தர்களான சிங்களவர்கள் சைவர்களான தமிழர்களிடையே நடந்துவரும் போராட்டமும் நாட்டின் அமைதியையும், உலக அமைதியையுமே குலைத்துவரக் காண்கிறோம்.

தமிழ் நாட்டில் சில கொடுங்கோலரசர்கள் விஷ்ணு கோயில்களுக்கும், வைணவர்களுக்கும் இன்னல்கள் இழைத்தது தவிர என்றுமே மதப்போர்கள் நடந்ததில்லை. விஷ்ணு கோயில்களுக்கும், வைணவர்கட்கும் சைவர்களும், அத்வைதி

http://acharya.org

களும் இழைத்துவரும் இன்னல்கள் இன்றும் தொடர்ந்து வருகின்றன: அதில் நம்நாட்டுப் பொதுஜனப் பத்திரிகைகள் வைணவர்கட்கு எதிராகவே எழுதி வருகின்றன. நம் ஸுதர்சனர் பதிலில் இதற்கான சான்றுகளைக் காணலாம்.

அத்வைதிகளிடையேயும். நூல்கள் மூலமாகவும். நீதி மன்ற வழக்குகள் மூலமாகவும் சிருங்கேரி பீடத்திற்கும் காம கோடி பீடத்திற்கும் போராட்டங்கள் நடந்து வருவது அனைவரும் அறிந்ததே. திருவானைக்கா கோயிலில் அம்மனுக்குத் தாடங்கம் என்னும் காதணியைப் புதுப்பிக்கும் உரிமை சிருங்கேரி பீடத்திற்கா காமகோடி பீடததிற்கா என்பது பற்றி. திருச்சி நீதிமன்றத்தில் 1844 ல் ஒரு வழச்கு நடந்ததாகவும், பிறகு 1848ல் மேல்முறையீடு (appeal) நடந்ததாகவும், அவ்வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்துக்கு இரண்டாவது முறையீட்டில் சென்றதாகவும், அதற்குமேல் ஒரு மறுவிசாரணை மனு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதாகவும். இவை அனைத்திலும் சிருங்கேரி மடம் தோல்வியுற்று காம கோடி மடம் வென்றது என்றும் 7-6-87 தினமணிகதிரில் 'மராட்டிய மன்னர்களும் காமகோடி பீடமும்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள கட்டுரையில் காணப்படுகிறது. இவர்களிடையே 'நாலு மடமா ஐந்து மடமா?' 'மஹாவாக்யங்கள் நான்கா ஐந்தா?' 'ஆதிசங்கரர் ஸித்தியடைந்தது எங்கே? அவர் பிறந்தது கி. பி. இலா ? கி. மு. இலா?' முதலான சர்ச்சைகள், இன்றளவும் தொடர்ந்தே வருகின்றன. ஆயினும் இந்நாட்டுப் பொதுஜனப் பத்திரிகைகள் இவை பற்றி கேலி செய்து ஒன்றும் எழுதுவதில்லை. ஆனால் வைணவர்களிடையே மூலை முடுக்குகளில் நடக்கும் தென்கலை வடகலைத்தகராறுகளையும்: வழக்குகளையும் மிகவும் பெரிதுபடுத்திக்காட்டி கேலிசெய்து எழுதவும், தர்மோபதேசம் செய்யவும் இப்பத்திரிகைகள் தயங்குவதில்லை. ['துக்ளக்' முதலான பத்திரிகைகளில் இத்தகைய செய்திகள் வெளிவந்ததை எடுத்துக் காட்டி நாம் அவ்வப்

http://acharya.org

பொழுது கண்டித்திருக்கிறோம்] அவ்வகையில் காஞ்சீ புரத்தில் நடந்த தென்கலை வடகலைத் தகராறை (10-6-87) ஜூனியர் விகடன் கட்டுரை ஒன்றிலும், 4-6-87 குமுதத்தில் வெளியிடப்பட்ட 'தங்கராசு கீரன்' உரையாடலிலும் பெரிது படுத்தி விமர்சிக்கப்பட்டுள்ளது.

காமகோடி சங்கராசார்யரின் அந்தரங்க பக்தர்களால் நடத்தப்படும் 'கல்கி' பத்திரிகை, திருச்சிக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில்—தென்கலையினரும் ஸ்மார்த்தர்களுமே வாழும் கிராமத்தில் — விளைந்துள்ள திருமண்வழக்கில் நீதிமன்றங்களை அவமதிக்கும் முறையில் அநாவசியமாகத் தலையிட்டுக் குழப்பத்தை விளைக்க முற்பட்டுள்ளது. சில வருடங்களுக்கு முன் அக்ரமமாகத் தென்கலைத் திருமண் வடகலையாக மாற்றப்பட்ட அந்த ஊர்க்கோயிலிலே பழைய தென்கலைத் திருமண்ணையே சாத்த வேண்டும் என்று வைணவர்கள் முயன்றார்கள். இதனால் துணை ஆணையர் நீதிமன்றத்தில் வழக்கு ஏற்பட்டு, அதில் கோயிலைப் பற்றிய ஆதாரங்களைக் காட்டி வெற்றியும் பெற்றார்கள். அநாவசியமாக இவ்வழக்கை ஏற்படுத்திய அவ்வூர் ஸ்மார்த்தர்கள் முதல் வழக்கு நடந்துகொண்டிருக்கும்பொழுதே 'தராசு' பத்திரிகையில் ஒருதலைப்பட்சமாக, தங்களுக்கு சாதகமாகத் தாறுமாறாக எழுதவைத்தார்கள். அப்படி எழுதவைத்த பின்பும் வழக்கு தங்களுக்குத் தோல்வியுற்றது கண்டு, தாங்கள் அறநிலைய ஆணையரிடம் தொடுத்திருக்கும் மேல் முறையீட்டின் தீர்ப்பு வரும்வரையில் காத்திருக்கப் பொறுமையில்லாமல்; தங்கள் ஸமூஹத்தினரான காமகோடி பக்தர்களால் நடத்தப்படும் 'கல்கி' பத்திரிகையைத் துணைக்கு அழைத்து வைணவர்களை இழிவுபடுத்த அவ்வூர் ஸ்மார்த்தர்கள் செய்த முயற்சியே 'எப்போது ஓயும் நாமச்சண்டை'' என்னும் இக்கட்டுரையாகும்.

http://acharya.org

நீதிமன்றத்தில் வழக்கு நடந்துகொண்டிருக்கும் பொழுதே 'கல்கி' பத்திரிகை இதில் தலையிட்டுக் கருத்து வெளியிட்டது நீதிமன்றத்தை அவமதித்ததாகும். அத்துடன் நிறுத்திக்கொள்ளாமல் ஒரு வடகலை வெறியரைக் கொண்டு தென்கலை வடகலைபற்றி உண்மைக்கு முரணான பல கருத்துக்களைக்கொண்ட சிறு குறிப்பை வெளியிட்டது. "தென்கலை வடகலைச் சண்டையைத் தமிழ்நாட்டிலெங்கும் வளர்ச்செய்ய வேண்டும்" என்ற கெட்ட எண்ணத்தால் ஏற்பட்டதாகும்.

இதில் ஆசார்ய ஶ்ரேஷ்டரான பிள்ளை லோகாசார்யரை 'பிள்ளைலோகாச்சாரி' என்று எழுதியிருப்பதும், அவரைப் பற்றியும், தென்கலை வடகலை பற்றியும் ஆதாரமில்லாத பல பொய்களை எழுதியிருப்பதும் இதைத் தெளிவாகக் காட்டுகிறது.

இதனால் ஆயிரக்கணக்கான வாசகர்களின் கண்டனக் கணைகளைப் பெற்ற பின்பு 21—6—87 கல்கியில் 'கீதாசார்யன்' ஆசிரியர் முதலான சிலரின் மாற்றுக் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. யஜ்ஞவராஹரின் சிறு குறிப்பிலுள்ள அபத்தங்கள் அனைத்தையும் எடுத்துக்காட்டி நாம் எழுதிய கடிதம் வெளியிடப்படவில்லை. இவ்விஷயத்தைப் பற்றிச் சற்று விரிவாகவே 'கீதாசார்ய'னுக்கு நாம் எழுதி வரும் ஸுதர்சனர் பதிலில் விளக்கியிருக்கிறோம். அடுத்த மாத 'கீதாசார்ய'னில் அது வெளிவரும். இரண்டொரு மாதங்களில் நம்மால் வெளியிடப்பட இருக்கும் 'ஸுதர்சனர் பதில்' ஒன்பதாவது சதகத்திலும் அது இடம்பெறும். "தென்கலை வடகலைச் சண்டையை அதிகப்படுத்த வேண்டும்" என்ற கெட்ட எண்ணத்துடன் 'கல்கி' பத்திரிகையால் விரிக்கப்பட்ட வலையில் விழாமல் ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் சாந்தியுடனிருப்பார்கள் என்று நம்புகிறோம்.

http://acharya.org

'இந்து' ஸ்தாபனங்களைக் குறித்துச் சில கேள்விகள்

பிரபவ சித்திரைமாத ஸுதர்சனத்தின் தலையங்கத்தைக் கண்ட பாரதீய ஜனதாக்கட்சிச் செயலரான திரு. K. சங்கர் அவர்கள் தம்முடைய கடிதத்தை நாம் வெளியிட்டிருந்தால் நியாயம் வழங்கப்பட்டிருக்கும் என்றும், அதை வெளியிடாமல் தம் கருத்துக்களை விமர்சித்தது சரியல்ல என்றும் எழுதினார். அதற்கு நாம் 30—4—87 அன்று எழுதிய பதிலில், "உங்களுடைய கடிதத்தில் உணர்ச்சியால் தூண்டப்பட்ட கண்டனம் இருந்ததேயொழிய, ஆதாரத்தோடுகூடிய நிரூபணங்கள் ஒன்றும் இல்லை என்பதால் அதை வெளியிடவில்லை. கூடுமானால் பின்வரும் கேள்விகளுக்குப் பதில் எழுதி அனுப்புங்கள், அவற்றை ஸுதர்சனத்தில் வெளியிட்டு விமர்சிக்கிறோம்" என்று பதில் எழுதினோம். இன்று (22—6—87) வரை அவரிடமிருந்து எந்த பதிலுமில்லை. இந்து முன்னணி, ஆர். எஸ். எஸ்., விசுவஹிந்து பரிஷத் முதலான இந்து ஸ்தாபனங்களையும், பாரதீய ஜனதா போன்ற அரசியல் கட்சிகளையும் சேர்ந்த எவர் வேண்டுமானாலும் இக் கேள்விகளுக்கு விடை எழுதி அனுப்பினால் அதையும் வெளியிட்டு விமர்சிக்க ஸித்தமாக இருக்கிறோம்.

கேள்விகள் :

(1) 'இந்துமதம்' என்று கூறுகிறீர்களே; அதில் பரம்பொருள் எத்தகையது? "வேதக் கடவுளரில் ஒரு கடவுள் பரம்பொருள்" என்று வேத வேதாந்தங்கள் முழங்குகின்றன. அக்கடவுள் இந்து மதப்படி எந்த தெய்வம்? வேதாந்தக் கொள்கைகளில் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் ஆகிய மூன்றில் எக்கொள்கையை இந்து மதம் பின்பற்றுகிறது?

http://acharya.org

(2) ஸ்ரீரங்கம் கோயிலோடு [சேவார்த்தி என்பது தவிர] எத்தொடர்புமற்ற காமகோடி பீடாதிபதி தம்மையும் கலந்துகொண்டு பல மாதங்கள் முன்பே நிர்ணயிக்கப்பட்ட ராஜகோபுர ஸம்ப்ரோக்ஷணத் தேதியை மாற்ற வேண்டும் என்று கூறியதாக எல்லாப் பத்திரிகைகளிலும் வந்த செய்தி ஏன் இதுவரை மறுக்கப்படவில்லை?

ஆந்திர அறநிலையச் சட்டம்

ஆந்திர அறநிலைய மசோதா ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெற்றுச் சட்டமாகிவிட்டது. இதனால் ஆந்திரத்திலுள்ள ஆலயங்களின், குறிப்பாகத் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் வைதிகமான கைங்கர்யபரர்கள் மிகவும் பாதிக்கப் படுவார்கள். இதை எதிர்த்து ஆந்திரத்திலுள்ள இரு அர்ச்சக சங்கங்களும், ஸ்ரீமத் பரமஹம்ஸ அஹோபில மடம் ஜீயர் ஸ்வாமியின் சார்பில் ஒருவரும், பக்தர் ஒருவரும் ஆந்திர உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளனர். அந்த நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை பிறகு விலக்கப்பெற்று அந்தச் சட்டம் அமலுக்கு வந்துவிட்டது. அந்தச் சட்டமே செல்லாது என்று அறிவிக்கக் கோரியும், இடைக்காலத் தடை கோரியும், ஆந்திரத்திலுள்ள இரு அர்ச்சக சங்கங்களும், ஸ்ரீமத பரமஹம்ஸ ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியால் ஸ்தாபிக்கப்பெற்ற ஸம்ப்ரதாய பரிரக்ஷண ஸமிதியும் டில்லி உச்சநீதி மன்றத்தில் (ஸுப்ரீம் கோர்ட்டில்) வழக்குத் தொடுத்துள்ளன. இடைக்காலத் தடை விரைவில் அளிக்கப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திருமலையப்பன் ஆலயங்களை ரக்ஷித்தருள்வானாக.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-40] [ஒளி-9

"வாழ உலகினில் பெய்திடாய்"

தமிழ் நாட்டில் சில வருடங்களாகவே வரட்சி நிலவுகிறது. இவ்வருடம் பாரதத்தில் பல இடங்களில் வரட்சி நிலவுகிறது. கடல் சூழ்ந்த மண்ணுலகம் . வாழவிரும்பும் நாம் அனைவரும் நமது அன்னை ஆண்டாள் அருளிய "ஆழிமழைக்கண்ணா" என்னும் பாடலை எம்பெருமான் திருமுன்பே அநுஸந்தித்து. தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்ய வேண்டுவோமாக.

இலங்கையில் அமைதி

பல வருடங்களாக உலக அமைதியை அச்சுறுத்திவந்த இலங்கை உள்நாட்டுப்போர் இலங்கைக்கும் பாரதத்துக்கும் ஏற்பட்ட உடன்பாட்டினால் முடிவுக்கு வந்துள்ளது. இதற்கு முக்கிய காரணமாயிருந்த பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும், தமிழக முதல்மந்திரி திரு. M G. ராமச்சந்திரனும் உலகின் பாராட்டுக்கு உரியவர்கள். 'ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் நிறைவடைந்தால் இலங்கை அழியும்' என்றும், 'ராஜகோபுர ஸம்ப்ரோக்ஷணத்தால் நாட்டுக்குக் கேடு விளையும்' என்றும் சில வைஷ்ணவ விரோதிகள் பிரசாரம் செய்துவந்ததின் பொய்ம்மையும் இப்போது நிரூபணமாகிவிட்டது. இலங்கையில் அமைதி நிலையாயிருக்கத் தென்னிலங்கைத் திசை நோக்கிப் பள்ளிகொள்ளும் திருவரங்கனைப் பிரார்த்திப்போமாக.

கோயில்களில் சமயப்பிரசாரம்.

(ஸுதர்சனர்)

மதுரை-11 மீனும்பிகை நகரில் உள்ள தமிழர் சமயப்பாதுகாப்புக் கழகத்தலைவர் திரு. க. வெ. நெடுஞ்சேரலாதன் அவர்கள் மதுரை

http://acharya.org

மீனாட்சி கோயிலில் ஆடிவீதியில் உள்ள பல சங்கங்கள் 'இந்துமதம்' என்ற போர்வையில் சைவமத விரோதப் பிரசாரம் செய்வதைத் தடுக்க வேண்டுமென்று அறநிலைய அதிகாரிகளுக்குப், சைவ ஆதீனங்களுக்கும் அச்சிட்டவேண்டுகோள் அனுப்பியிருக்கிறார். அவரது முயற்சி பயனளிக்கப் பிரார்த்திப்போம்.

விஷ்ணுகோயில்களிலும் இந்நிலையே இருப்பதை நாம் அவ்வப்போது சுட்டிக்காட்டி வருகிறோம். குறிப்பாக, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் திருவாடிப்பூர உத்ஸவத்தின்போது கோயிலின் முன் உள்ள கொட்டகையில் மேடை அமைத்து,பெரும்பாலும் வைஷ்ணவ மதத்திற்கு முரண்பட்ட சொற்பொழிவுகளும் சங்கீதகச்சேரிகளும் நடைபெற்று வருகின்றன. பல சமயங்களில் ஆண்டாள் ரங்கமன்னார் எதிர் மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும்போது திருமஞ்சன கோஷ்டி முதலானவற்றுக்கு இடையூறாக மைக்கில் சொற்பொழிவு கச்சேரி முழக்கங்கள் அமைகின்றன. [இவ்வுபந்யாஸங்களையும், கச்சேரிகளையும் அருகிலுள்ள வடபெருங்கோயிலுடையான் சன்னிதியில் உள்ள சக்கரத்தாழ்வார் கோயிலில் உள்ள பெரிய முன்மண்டபத்தில் வைத்துக் கொண்டால் இவ்வபசாரம் தவிர்க்கப்படலாம்] அவ்வூரில் வேத பாடசாலை நடத்திவரும் ஸ்ரீ உ. வே. ராகவாசார்ய ஸ்வாமியின் முயற்சியால் சிலவருடங்களாக ஸ்ரீவைஷ்ணவ வித்வான்களின் உபந்யாஸங்களும் இடம் பெறறு வருகின்றன. நாமும் சிலவருடங்கள் உபந்யஸித்திருக்கிறோம். நடந்த திருவாடிப்பூர உத்ஸவத்தில் நமது உபன்யாஸத்தை ஏற்பாடு செய்ய அந்த ஸ்வாமி முயன்றபோது, அக்கோயில் தக்கார் "ஏற்கனவே உபந்யாஸ நோட்டீஸ் அடித்தாகிவிட்டது. ஆயினும் ஸுதர்சனரை எழுந்தருளச்சொல்லவும். சக்கரத்தாழ்வார் சன்னிதி முன்மண்டபத்தில் தேவஸ்தானசார்பில் மைக்வசதியுடன் உபந்யாஸத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறியதாக அந்த ஸ்வாமி எழுதி. வரும்படி நியமித்ததால் அடியேன் சென்றேன். நம்மிடமும் தக்கார் மைக்குக்கு ஏற்பாடு செய்வதாக முதல் நாள் கூறினார். ஆனால் உபந்யாஸம் தொடங்கச் சில நிமிடங்களுக்கு முன் "மைக் ஏற்பாடு செய்ய முடியவில்லை" என்று சொல்லியனுப்பினார். 'மைக் இல்லாமலே இரண்டு நாட்கள் 'சங்கத்தமிழ்மாலை' பற்றி ஸ்ரீவைஷ்ணவ பாகவத கோஷ்டிக்கு உபந்யஸித்தோம். தக்கார் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. ஆண்டாள் ரங்கமன்னார் திருமுன்பே கோஷ்டி நடக்கும்போது வைஷ்ணவம் பற்றி ஏதுமறியாதவர்களின் அபத்தச் சொற்பொழிவு மைக் மூலம் ஆரவாரத்துடன் முழங்கிற்று. ஐந்து ஆறும் திருநாட்களில் 2மணி முதல் 4 மணிவரையில் சக்கரத்தாழ்வார் ஸந்நிதியிலும் ஆறும் திருநாள் காலையில் கூரத்தாழ்வான் நந்தவனத்திலும் பாகவதகோஷ்டிக்கு உபந்யாஸம்செய்து வாய்படைத்த பயன்பெற்றுவந்தோம் நாம். டில்லி உச்சநீதிமன்றத்தில் ஸ்ரீமத்பரமஹம்ஸ ஸ்ரீமந்நாராயண ஜீயர் ஸ்வாமியின் முயற்சியால் தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கில் வெற்றி ஏற்பட்டு, வைஷ்ணவ மதத்தலைவர்களின் நிர்வாகத்தில் விஷ்ணுகோயில்களும் சைவமதத்தலைவர்களின் நிர்வாகத்தில் சிவன்கோயில்களும் வந்தால் தான் கோயில்களில் இத்தகைய அநீதிகளும் மதக்கலப்படமும் ஒழியும்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி-40] [ஒளி-12

ஜயேந்திரரின் 'பல்டி'

(ஸுதர்சனர்)

சென்ற இதழ்த் தலையங்கத்தில் ஜயேந்திரரின் 'ஜன ஜாக்ரண் இயக்கம்' அவருக்கு அபகீர்த்தியையே விளைக்கும் என்று நாம் எழுதிய மை உலருவதற்குள் ஜயேந்திரர் தம் திட்டத்திலிருந்து பின்வாங்கிவிட்டார். 27-10-87 தினமணியில் அவ்வியக்கம் ஒத்திவைக்கப்பட்டது என்னும் செய்தி வந்துள்ளது. 'தினமணி' போன்ற பத்திரிகைகளே இத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பதைக் காரணமாகக் காட்டியிருக்கிறார். விளம்பர மடாதிபதியான தமக்குப் பத்திரிகை விளம்பரம் இவ்வியக்கத்தால் நீங்கிவிடும் என்பதை இப்போதுதான் புரிந்துகொண்டிருக்கிறார். புரிந்துகொண்ட பின்பும் அதைக் கைவிடுவதாக அறிவிக்கும் நேர்மையும் துணிவுமில்லாமல், 'குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற கணக்கிலே ஒத்திவைப்பதாகக் கூறுகிறார். இது நிரந்தர ஒத்திவைப்பே என்பதை அனைவரும் அறிவர். ஜயேந்திரர் கிளர்ச்சி செய்து ஜெயிலுக்குப் போகத் தயாராயிருந்தாலொழிய எக்காலத்திலும் இத்திட்டத்தை அவர் நிறைவேற்ற முடியாது என்பது பாமரருக்கும் புரியும். அரசியல்வாதிகளுக்கேயுரிய கிளர்ச்சித் துணிவு இயக்கத்தைத் தொடங்கியவுடனே 'பல்டி'யடித்த ஜயேந்திரருக்குச்

http://acharya.org

சிறிதும் கிடையாது என்பது தெளிவாக விளங்குகிறது. இவர் ஒரு விளம்பர மடாதிபதியே என்னும் உண்மையையும் இந்நிகழ்ச்சி தெளிவாகக் காட்டுகிறது.

வைணவத்தில் 'சதி' ஏற்கப்படவில்லை

கணவன் இறக்கும்போது மனைவியும் உடன்கட்டை யேறும் 'சதி' என்னும் பழக்கம் வடநாட்டில் மிகுதியாக இருந்தது. அரசியல்வாதிகளின் முயற்சியால் இது சட்ட விரோதமாக்கப்பட்டது. சமீபத்தில் வடநாட்டில் ஓர் பெண் பல மக்களின் ஆதரவோடு உடன்கட்டையேறினாள். அதைப் பூரி சங்கராசார்யர் பாராட்டினார். ஜயேந்திரர் அந்த அளவுக்குத் துணிவில்லாமல் 'அதை என்னால் கண்டிக்க முடியாது' என்று கூறினார். இந்நிலையில் வைணவத்தில் 'சதி' ஏற்கப்படுகிறதா என்னும் கேள்வி எழுகிறது.

கூரத்தாழ்வானுடைய தேவியான ஆண்டாள் போன்ற பல உத்தமப் பெண்மணிகள் தம் கணவனின் பிரிவிலே உடன்கட்டையேறவில்லை என்பதையே நாம் காண்கிறோம். வைணவ வரலாற்றில் உடன்கட்டையேறியதாக ஒரு செய்தி கூடக் கிடையாது. இதற்குக் காரணம் மிகத் தெளிவானது. எம்பெருமானுக்கு உரியதான உடலை அழித்துக்கொள்ள நமக்கு உரிமை கிடையாது. "மாயும் வகையறியேன் வல் வினையேன் பெண் பிறந்தே" (திருவாய் 5-4-3) என்னும் நம்மாழ்வாரின் திருவாக்கும் இதையே வலியுறுத்துகிறது. ப₄க₃வச்சே₂ஷத்வஜ்ஞானமில்லாமல், கணவனிடம் உத்தம ப்ரேமம் உடைய பெண்கள் ப₄ர்த்ருலோகம் செல்வதற்கு உறுப்பாகவே நமது ஸ்ம்ருதிகளில் சதிப் பழக்கம் அனு மதிக்கப்பட்டது. ப₄க₃வச்சே₂ஷத்வ ஜ்ஞானமுடைய முமுக்ஷுக்களான ஸ்ரீவைஷ்ணவப் பெண்களுக்கு இப்பழக்கம் ஸ்வரூபத்திற்கு முரண்பட்டதாகும். அதனாலேயே வைணவ வரலாற்றில் 'சதி' நிகழ்ச்சி எதுவும் காணப்படவில்லை. ப₄க₃வச்சே₂ஷத்வ ஜ்ஞானமில்லாமல், கேவல ஸ்மார்த்த த₄ர்மங்களையே பற்றி நிற்கும் சங்கராசார்யர்கள் இதை ஆதரிப்பதில் வியப்பில்லை.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி - 41] [ஒளி - 4

ஹிந்து வாரியமா? சைவ வைஷ்ணவ வாரியங்களா?

[ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
(ஸுதர்சனர்)
3-B, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17]

பொதுஜனப் பத்திரிகைகள் பலவற்றிலும் 'விசுவ ஹிந்து பரிஷத்' நடத்தும் ஒரு பாத யாத்திரைபற்றிய விளம்பரம் வெளிவந்துள்ளது. "ஆலயம் காக்க ஆன்மீக பாத யாத்திரை" என்று வர்ணிக்கப்படும் இப்பாதயாத்திரை 1988 மே 1-ல் கன்யாகுமரியில் தொடங்கி மே 31-ல் சென்னையில் நிறைவுறும் என்றும், இதைத் துறவியர்களும் மடாதிபதிகளும் முன்னின்று நடத்துவார்கள் என்றும் வெளியிடப் பட்டுள்ளது. பங்கேற்க விரும்புவோர் 'செயலாளர், விசுவ ஹிந்து பரிஷத். 43, இராமாநுஜம் தெரு, தி. நகர் சென்னை 17" என்னும் முகவரியோடு தொடர்புகொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. "மதச்சார்பற்ற அரசு ஆலய நிர்வாகத்தைத் தனித்தியங்கும் ஹிந்து அறவோர் வாரியத்திடம் ஒப்படைக்கவேண்டும்" என்பது இப்பரிஷத்தின் கோரிக்கை. இதுபற்றிச் சிறிது ஆராய வேண்டியுள்ளது 'ஹிந்து ஆலயங்கள்' என்னும் பொதுப் பெயரில் சைவ வைணவ ஆலயங்கள் அனைத்தையும் அடக்கி, இவ்விரண்டு மதங்களையும் சேர்ந்த அறவோர் வாரியத்திடம் ஒப்படைப்பது நியாயமா? என்னும் கேள்வி

http://acharya.org

எழுகிறது. சைவமும் வைணவமும் தனித்தனி மதங்கள். சைவ வைணவ ஆலயங்கள் மிகவும் வேறுபட்ட தனித்தனி ஆகமங்கள், சம்பிரதாயங்கள்படி நடப்பவை. இவற்றை நிர்வகிக்கச் சைவ வைணவர்கள் அடங்கிய ஒரு வாரியத்தை அமைத்தால் அதில் சைவர்களே பெரும்பான்மையினராகவும், வைணவர்கள் மிகச் சிறுபான்மையினராகவுமே இருப்பர் என்பது வெளிப்படை. இப்படிப்பட்ட ஒரு வாரியத்திடம் வைஷ்ணவாலயங்களுக்கும், வைஷ்ணவ மதத்திற்கும், வைஷ்ணவர்களுக்கும் நியாயம் கிடைக்க வழியேயில்லை. அரசுத் துறையால் நிர்வகிக்கப்படும்போதே பெரும்பான்மையினரான சைவர்களாலும், சைவர்களாக மாறிவிட்ட அத்வைதிகளாலும் வைஷ்ணவாலயங்களுக்குக் கணக்கற்ற இன்னல்கள் இழைக்கப்பட்டு வருகின்றன. சைவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டதோர் வாரியத்தின்கீழ் வந்தால் எல்லா விஷ்ணு கோயில்களும் படிப்படியாகச் சிவன் கோயில்களாக மாற்றப்பட்டுவிடும். மிகத் தெளிவான இவ்வுண்மையை உணர்ந்து, விசுவ ஹிந்து பரிஷத் சிவன் கோயில்களைச் சைவ அறவோர் வாரியத்திடமும், விஷ்ணு கோயில்களை வைஷ்ணவ அறவோர் வாரியத்திடமும் ஒப்படைக்கப் பாடுபட முன்வர வேண்டும். இவ்விளம்பரத்தில் கையெழுத்திட்டிருக்கும் துறவியர் மடாதிபதிகளில் ஏழுபேர் சைவர்களாகவும் வரத யதிராஜ ஜீயர்ஸ்வாமி ஒருவரே வைஷ்ணவராகவும் இருப்பது காணத்தக்கது. ஏற்கனவே நடந்த கூட்டங்களில் வைஷ்ணவாலயங்களை வைஷ்ணவ அறவோர் வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்னும் கோரிக்கையை வலியுறுத்தியதாகவும், அதற்குச் சரியான வரவேற்பில்லை என்றும் ஜீயர் ஸ்வாமி நம்மிடம் கூறினார். ஆகையால், "வைஷ்ணவாலயங்களை வைஷ்ணவ அறவோர் வாரியத்திடம் ஒப்படைக்கப் பாடுபடுவதாக விசுவ ஹிந்து பரிஷத் உறுதியளித்தாலொழிய, இப்பாத யாத்திரையிலும், மேலும் பரிஷத் எடுக்கும் முயற்சிகளிலும் கலந்துகொள்ள வேண்டாம்" என்று வைஷ்ணவப் பெருமக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி - 41] [ஒளி - 5

'பரிஷத்' காரியதரிசியின் கடிதம்

[ஸுதர்சனம் ஆசிரியர்]

சென்ற இதழில் நம்முடைய தலையங்கத்தைப் பார்த்தபின் விசுவ ஹிந்து பரிஷத்தின் காரியதரிசியான ஸ்ரீமான் S. வேதாந்தம் அவர்கள் பின்வரும் கடிதத்தை எழுதியிருக்கிறார்கள். கடிதத்தை அடுத்தபடி அச்சிட்டு அதுபற்றி நமது கருத்துக்களையும் தெரிவிக்கிறோம்,

காரியதரிசியின் கடிதம்

மதிப்பிற்குரிய ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமிக்கு. தண்டம் சமர்ப்பித்து எழுதுவது,

தங்களது 'வைஷ்ணவ சுதர்சனம்' இதழில் நாங்கள் மேற்கொள்ளவிருக்கும் ஆன்மிக பாதயாத்திரை பற்றி தலையங்கம் எழுதி—வைஷ்ணவ சம்பிரதாயத்தவரிடையே - விளம்பரம் கிட்ட உதவியதற்கு நன்றி.

விசுவ ஹிந்து பரிஷத் இந்த நாட்டில் அனைத்து சம்ப்ரதாயங்களின் தனித்தன்மையைக் காக்க முயற்சிக்கும் இயக்கம் என்பது பலரும் அறிந்ததே. எனவே எந்த சம்ப்ரதாய முறைகளிலும் மற்றவர்களின் தலையிடு இருப்பதை நாம் விரும்பவில்லை. நமது திருக்கோயில்கள் — சைவ வைணவ சம்ப்ரதாயங்களில் எவற்றைச் சேர்ந்ததானாலும் அவற்றின் சம்ப்ரதாய வழிபாட்டு முறைகளில் என்றும் அரசியல் குறுக்கீட்டினாலேயே அல்லல்கள் ஏற்பட்டுள்ளன. தனித்தியங்கும் வாரியம் அமைக்கப்பட்

http://acharya.org

டால், நிச்சயமாக அந்தந்த சம்ப்ரதாயத்தவரே அந்தந்தக் கோயில்களின் நிர்வாகத்தையும், நியமங்களையும்-கவனித்துக் கொள்ள வாய்ப்பு இருக்கும்படி பார்த்துக்கொள்ளலாம். எந்த சம்ப்ரதாயத்தவரும் இன்னொரு [சம்ப்ரதாயத்தவர் மீது ஆதிக்கம் செலுத்துவதை பரிஷத் அங்கீகரிக்கவில்லை.

நமது வைணவ மடாதிபதிகள் அனைவரது ஆதரவையும் தங்களைப் போன்றவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டால் நாம் பெறமுடியும், தற்போது ஸ்ரீபெரும்பூதூர் ஜீயர் சுவாமிகள் வெளிப்படையாக நமது தர்மத்தைக் காக்க முன் வந்துள்ளது போல அனைவரையும் ஈடுபடுத்த முயன்று வருகிறோம். இன்றைக்கு நமது தர்மத்திற்கு வெளியிலிருந்தும், அரசியல்வாதிகளிடமிருந்தும் ஆபத்து வந்திருக்கும் நிலையில்-நம்மிடையே பொதுவான அமைப்பிற்கும்-ஒற்றுமைக்கும் அவசியம் ஏற்பட்டு இருப்பதைத் தாங்களும் அறிவீர்கள். எனவே தங்கள் ஒத்துழைப்பைப் பூர்ணமாக அளிக்குமாறு வேண்டுகிறோம். இக் கடிதத்தைத் தங்கள் பத்திரிகையில் வெளியிடுமாறு வேண்டுகிறோம்.

கடிதம்பற்றிய நமது கருத்துக்கள்

(ஸுதர்சனர்)

நமது தர்மத்திற்கு வெளியிலிருந்தும் அரசியல்வாதிகளிடமிருந்தும் ஆபத்து வந்திருக்கும் நிலையில் நாம் ஒற்றுமையுடன் இருந்து அவ்வாபத்தைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமைக்கு இடமேயில்லை. நமது ஆலயங்கள் அந்தந்த மதங்களைச் சேர்ந்த அறவோர்களின் ஆட்சியின்கீழ் வர வேண்டும் என்றே நாமும் விரும்புகிறோம். "ஹிந்து அறவோர் வாரியம்" என்னும் பெயரில் ஒரே வாரியம் அமைக்கப்பட்டால் அதில் சைவர்கள் பெரும்பான்மையினராகவும் வைஷ்ணவர்கள் சிறுபான்மையினராகவும் இருக்க வேண்டிவரும்; ஆகையால் விஷ்ணு கோயில்களை வைஷ்ணவ அறவோர் வாரியத்திடம் ஒப்படைக்கப் பாடுபடப் பரிஷத் முன்வரவேண்டும்" என்னும் நமது கோரிக்கைக்குப் பரிஷத்தின் கடிதத்தில் யாதொரு பதிலுமில்லை. 'எந்த ஸம்ப்ரதாயத்தவரும் இன்னொரு ஸம்ப்ரதாயத்தவர்மீது ஆதிக்கம் செலுத்துவதைப் பரிஷத் அங்கீகரிக்கவில்லை' என்று கடிதத்தில் உள்ளது. நமது நாட்டில், சமயத்துறையில் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக விஷ்ணு கோயில்களில் சைவர்களின் ஆக்ரமிப்பு மிகுதியாக இருந்து வருகிறது. சிலவற்றை இங்கு

http://acharya.org

காட்டுகிறோம்;—(1) காமகோடிப் பெரியவரின் தூண்டுதலால் விஷ்ணுவைத் தூஷிக்கும் திருவெம்பாவையோடு திருப்பாவையைச் சேர்த்து ஒற்றுமைப் போர்வையில் 'பாவை மகாநாடுகள்' விஷ்ணு கோயில்களில் நடத்தியதின்மூலம் ஏராளமான கோயில்நிதி விரயம் செய்யப்பெற்றது, வைஷ்ணவர்களின் எதிர்ப் பிரசாரத்தால் இப்போது இம்மகாநாடுகள் அடங்கியுள்ளன, (2) காஞ்சீபுரத்திலுள்ள 'கஜாநனர்' என்னும் விஷ்ணு பரிவார தேவதையின் ஸன்னிதியில் காமகோடி பக்தர்கள் வைஷ்ணவர்களின் எதிர்ப்பையும்மீறி ஒவ்வொரு சதுர்த்தியிலும் கணபதி ஸ்தோத்ரங்களைப் பாராயணம் செய்து வருகிறார்கள். (2) ஸ்ரீரங்கம் முதலான பல பெரிய கோயில்களில் கம்பங்களிலுள்ள துர்க்கை முதலான சிற்பங்கள் தனிக்கோயிலாக்கப்பட்டுச் சைவர்களால் வழிபாடு நடத்தப்பட்டு வருகின்றது. (4) விஷ்ணு கோயில்கள் பலவற்றில் ஐயப்பன்படம், பதினெட்டுப்படிகள், சரபமாயிருந்து சிவன் நரசிங்கத்தைக் கிழிப்பதாகக் காட்டும்படம், ராமன் லிங்க பூஜை செய்யும்படம் முதலானவை வைக்கப்பட்டு, இருமுடி கட்டுவது முதலான நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. (5) சேலம் சின்னத்திருப்பதியில் கோயிலைப் புதுப்பிக்கும்போது விமானத்தில் சிவசின்னங்கள் அமைக்கப்பட்டு வைஷ்ணவர்கள் வழக்காடிய பின்பே அது மாற்றப்பட்டது. (6) அழகர் மலையில் இரவோடு இரவாக ஒரு முருகன் கோயிலைக்கட்டி சைவர்கள் அதற்கு 'பழமுதிர்சோலை' என்று பெயர்வைத்துப் பிரசாரம் செய்தார்கள். பல நீதிமன்றங்களில் வைஷ்ணவர்கள் வழக்காடி, கட்டிய கோயிலை இடிக்கவேண்டாம் என்று பெருந்தன்மையோடு விட்டுக்கொடுத்தபின் 'பழமுதிர்சோலை' என்னும் பெயர்ப் பலகைகளை அகற்றும்படி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. அதற்குப்பின் சைவர்கள் பணபலத்தாலே பழமுதிர்சோலை என்னும் பெயரில் பழையகோயிலுக்கு அருகிலேயே புதிதாகப் பெரிய முருகன்கோயிலைக் கட்டப் பெருமுயற்சி எடுத்தார்கள். மறுபடியும் வைஷ்ணவர்கள் வழக்காடி அதைத் தடுக்க அரும்பாடுபட்டு பட்டு வருகிறார்கள்.

இத்தகைய சைவர்களின் ஆக்ரமிப்புக்களைத் தடுக்க விஸ்வஹிந்து பரிஷத் எந்த முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. ஆகையால் நாம் சென்ற தலையங்கத்தில் தெரிவித்ததுபோல் ''வைஷ்ணவ ஆலயங்களை வைஷ்ணவ அறவோர் வாரியத்திடம் ஒப்படைக்கப் பாடுபடுவதாக விசுவஹிந்துபரிஷத் உறுதியளித்தாலொழிய பரிஷத்தின் முயற்சிகளில் பங்கு கொள்வதில்லை'' என்னும் நமது நிலையை மாற்றுவதற்கில்லை என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

http://acharya.org

அன்பரின் அன்புக் கடிதம்.

ஸ்ரீமதே நாராயணாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம் ஆசிரியர் அவர்களுக்கு ஜகந்நாதன் அநேக தண்டன் சமர்ப்பித்துச் செய்யும் விஜ்ஞாபனம். நேற்று (27-3-88) தேசிக பவனம், மயிலாப்பூர் வெங்கடேச அக்ரஹாரத்தில் ஆளவந்தாரின் சது:ச்லோகி உபந்யாஸம் வித்வான் உ. வே. ஸ்ரீவத்ஸாங்காசாரியர் ஸ்வாமி அவர்களால் நடைபெற்றது. உபந்யாஸத்தில் ஆளவந்தார் ச்ரிய:பதியான நாராயணனின் பரத்வத்தை நிர்ணயம் செய்வதில் அரும்பாடுபட்டு பல இன்னல்களுக்கு உள்ளானவர் என்று சொல்லி, தற்போது கலியுகத்தில் எம்பெருமானது பரத்வத்திற்கு முரணாகப் பேசுபவர்களை ப்ரமாணங்களோடு மறுத்து உண்மையை வெளியிட்டு ஸ்ரீவைஷ்ணவத்துக்காகப் பாடுபடுபவர் 'தேவரீர் ஒருவரே' என்று சாதித்து தேவரீர்தான் ''உண்மையான ஸ்ரீவைஷ்ணவர்'' என்றும் 'பரம பாகவதர்' என்றும் பலபேர் முன்னிலையில் உபந்யாஸத்தில் தேவரீரைப் பாராட்டிப் பேசி உபந்யாஸத்தைச் சிறந்த முறையில் பூர்த்திசெய்தார். அந்தப் பாராட்டைக் கேட்டதும் பெருமைப்பட்டேன். அந்த மகிழ்ச்சியை தேவரீருக்கு இக் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். தேவரீருடைய ஸ்ரீவைஷ்ணவத் தொண்டு மேன்மேலும் தொடர எம்பெருமானை ப்ரார்த்தித்து அந்தத் தொண்டை செவ்வனே நடத்த தேவரீருக்கு நீண்ட ஆயுளையும், நல்ல உடல் ஆரோக்யத்தையும் கொடுக்கவும் எம்பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

17, V. C. கார்டன் 2வது தெரு,
மந்தைவெளி, சென்னை-28.

இங்ஙனம்
அன்புள்ள ஜகந்நாதன்

ஆசிரியரின் குறிப்பு: ஸ்ரீ உ. வே. ஸ்ரீவத்ஸாங்காசார்ய ஸ்வாமி தேசிகஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த வித்வத்வரிஷ்டர்களில் ஒருவராவார். கோழியாலம் ஸ்வாமி என்று ஸுப்ரஸித்தரான யதீச்வரரின் பூர்வாச்ரம தௌஹித்ரருமாவார். ஸம்ப்ரதாயபேதமற ஸ்ரீ வைஷ்ணவ வித்வான்கள் பலராலும் பாராட்டப்பெறும் நம்மை ஒரு ஸ்ரீ வைஷ்ணவப் பத்திரிகையில் ஒருவர் தேசிகதூஷகர் என்று எழுதியது பொய்யானது என்பதைக் காட்டவே இக்கடிதம் பிரசுரிக்கப்பட்டது.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி - 41] [ஒளி - 6

வைணவர்களே! விழிப்புடனிருங்கள்

[ஸுதர்சனர்]

சென்ற இதழில் நாம் எழுதிய தலையங்கத்திற்கு 'விச்வ ஹிந்து பரிஷத்' காரியதரிசியிடமிருந்து யாதொரு பதிலும் வரவில்லை. இதிலிருந்து 'வைஷ்ணவாலயங்களை வைணவ அறவோர் வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும்' என்னும் நமது நியாயமான கோரிக்கையை 'பரிஷத்' ஏற்கவில்லை என விளங்குகிறது.

வைணவப் பெருமக்களும், தலைவர்களும் நமது தலையங்கத்திற்குப் பெரும் ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள். பரிஷத்தின் பாதயாத்திரையில் கலந்துகொள்வதாயிருந்த ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீமத்பரமஹம்ஸ வரதயதிராஜஜீயர் ஸ்வாமி, நம் தலையங்கங்களைப் பார்த்தபின்பு, அதில் கூறப்பட்ட கருத்துக்கள் ''ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம்'' என்று ஏற்கத்தக்கவையாயுள்ளன என்றும், அதனால் தாம் பாதயாத்திரையில் கலந்துகொள்ளவில்லை என்றும் எழுதியுள்ளார்.

இந்நிலையில் நமது சகோதரபத்திரிகையான திருமாலில், ''சைவ ஆதிக்கம், சுமார்த்த (வைதிகர்) ஆதிக்கம், வைஷ்ணவ ஆதிக்கம் என்று ஒருவரை ஒருவர் குறைகூறிக்கொண்டு விலகி நிற்பது விவேகமன்று...ஹிந்துக்களுக்குள் பரஸ்பர அவநம்பிக்கையும் போட்டியும் பொறாமையும் தவிர்த்து, முதலில் வெளி எதிரிகளை விலக்கியபின் உள் அமைப்புச் சிக்கல்களைப் பின்னர் தீர்த்துக்கொள்வதே விவேகம்...விசுவ ஹிந்து பரிஷத் போன்ற பெரிய இயக்கங்களில் திருமால் அடியார்களும் பங்குகொண்டு நமது 'திவ்விய தேசங்களை' மீட்பார்களாக'' என்று நமது தலையங்கங்களை மறுத்து எழுதப்பட்டுள்ளதால், அதை நடுநிலை

http://acharya.org

நின்று ஆராய்ந்து அனைவர்க்கும் நன்மையான வழியைக் காட்ட வேண்டியது நம் கடமையாயுள்ளது.

"சைவ ஆதிக்கம், சுமார்த்த ஆதிக்கம், வைஷ்ணவ ஆதிக்கம் என்று ஒருவரை ஒருவர் குறைகூறிக்கொண்டு" என்று எழுதி யிருப்பதில் 'வைஷ்ணவ ஆதிக்கம்' என்னும் தொடரைச் சேர்த் திருப்பது முற்றிலும் பொருந்தாது. ஆயிரம் வருடங்களுக்கு மேலாக, எம்பெருமானார் காலத்திலிருந்தே நமது கோயில்களைப் பிறர் ஆக்ரமிக்கும் முயற்சிகள் நடந்துள்ளன என்பது வரலாற்று உண்மையாகும். அழகர் மலையை ஆக்ரமிக்கும் முயற்சி இன்றும் தொடர்கிறது. திருவேங்கடமலை மற்றொரு தெய்வத்தினுடையது என்று 'பரிஷத்' கொண்டாடும் அத்வைத சைவமதத் தலைவர்கள் இன்றும் கூறிவருகிறார்கள். திருமலையில் வேதபாராயணமும், சுப்ர பாதம் ஸேவித்தலும் வைஷ்ணவர்களிடமிருந்து சுமார்த்தர் களுக்குச் சென்றுவிட்டதைக் கண்கூடாகக் கண்டுவருகிறோம். சென்ற இதழ்த் தலையங்கத்தில் நாம் காட்டிய அத்வைத சைவ மதத் தலைவர்களின் ஆக்ரமிப்புக்களை எவரும் இல்லை செய்ய இயலாது. 'வைணவர்கள் சிவாலயங்களை ஆக்ரமித்தார்கள்' என் னும் நிலை அன்றுமில்லை; இன்றுமில்லை. இந்நிலையில் நாம் கேட்பது என்ன? 'வைணவ ஆலயங்கள் வைணவ அறவோர் வாரியத்திடம் ஒப்படைக்கப் பாடுபடுவோம்' என்னும் ஓர் உறுதிமொழியே. அதை அளிக்கவும் 'பரிஷத்' முன்வராதபோது, நாம் எப்படி அவர்களோடு கலந்து போராட முடியும்?

'பரிஷத்' போன்ற 'இந்து' ஸ்தாபனங்களின் தலைவரான திரு. ராமகோபாலனை, இதுபற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று பல வருடங்களுக்கு முன்பே குளித்தலை இளைஞர் திரு. நந்தகுமார் மூலம் அழைத்தோம். இன்றுவரை நம்மோடு இது பற்றிப் பேசுவதற்குக்கூட அவரோ பரிஷத்தின் வேறு தலைவர் களோ முன்வரவில்லை. ஆகையால், இதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தவாவது 'பரிஷத்'தின் தலைவர்கள் முன்வரும்படி அவர் களோடு நட்புறவுள்ள 'திருமால்' ஆசிரியர் முயலவேண்டும். அதற்குக்கூட முன்வராதவர்களை நம்பி, நமது மதத்திற்கு அடிப் படையான வைஷ்ணவாலயங்களை ஒப்படைப்பது — நமது மதத்தை அழிப்பதற்கு அரும்பாடுபடுபவர்களின்* கையில் அவற்றை ஒப் படைப்பதேயாகும். அதனாலேயே மறுபடியும் பிரார்த்திக்கிறோம்.— "வைஷ்ணவர்களே! விழிப்புடனிருங்கள்" என்று.

---

*சைவ சுமார்த்தத் தலைவர்கள் வைஷ்ணவத்தை அழிக்க அரும்பாடுபடுவது 'ஸுதர்சனர் பதில்களில் நூற்றுக்கணக்கான இடங்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

http://acharya.org

ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி - 41] [ஒளி - 10

வைணவமும் விசுவஹிந்து பரிஷத்தும்

விசுவஹிந்து பரிஷத்தையும், ஆலயங்களையும் பற்றிய நம்முடைய தலையங்கங்களைப் படித்த நமது அன்பரான ஸ்ரீ O. M. ஸ்ரீநிவாஸன், (37, ராஜாபாதர் முதலித் தெரு, சென்னை 17) அவர்கள் பரிஷத்தின் செயலாளர் திரு. வேதாந்தம் அவர்களுடன் தொடர்புகொண்டு பேச்சு வார்த்தைகள் நடத்தினர். அதன் விளைவு என்ன ஆயிற்று என்பதை 31-8-88ல் அவர் நமக்கு எழுதிய கடிதத்தில் விளக்கியிருக்கிறார். அக்கடிதத்தை அடுத்து அச்சிட்டு நமது கருத்துக்களைக் குறிக்கிறோம்.

நமது அன்பரின் கடிதம்

(O. M. ஸ்ரீநிவாஸன், சென்னை 17)

ஸுதர்சனம் 484 விசுவஹிந்து பரிஷத் பற்றிய தலையங்கம் கண்டதிலிருந்து அதன் செயலாளர் வேதாந்தம் என்பவருடன் பரிசயம் ஏற்பட்டது. முதலில் என்னுடன் பேசிய அவர் ஹிந்து ஆலயங்களின் ஒவ்வொரு ஸம்ப்ரதாயத்திலுள்ள முறை மாற்றப் படாமல் அந்த அந்த நடைமுறைகளுக்கும் ஆகமத்திற்கும் மதிப்புக் கொடுத்தே ஹிந்து வாரியம் இயங்கும் (விசுவஹிந்து பரிஷத் தன் முயற்சியில் வெற்றிபெற்றால்) என்று கூறிக்கொண்டிருந்தார்.

28-8-88 அன்று விசுவஹிந்து பரிஷத்தின் ஆலயம் காக்க அறப்போர் போன்ற நடவடிக்கைகள்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, அடியேன் "ஸ்ரீபெரும்பூதூர் போன்ற வைணவத் தலங்களில் சமீப காலமாக சைவ பூஜையான இருமுடி கட்டுதல் போன்றன நடக்கின்றன. குறிப்பாக வைணவ மதத்தைப் புநருத்தாரணம் செய்யவென்றே அவதாரம் செய்தருளின இராமாநுஜர் அவதரித்த ஸ்தலத்தில் இதுபோன்ற பூஜைகள் செய்வது சரியாகப்

http://acharya.org

படவில்லை. வைணவர்களின் கொள்கைககளுக்கு மதிப்புக் கொடுக்கப்படவேண்டும்" என்பதுபோல் பேசினேன்.

இதைக் கேட்டவுடன் திரு. வேதாந்தம் அவர்கள் நிதானம் இழந்துவிட்டார். அடியேனைக் குறித்து "நீங்களெல்லாம் மத வெறியர்கள், இந்து மதத்தின் ஒற்றுமையையே குலைத்து விடுகிறீர்கள், குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள், சைவம் வைணவம் என்று பிரித்து இந்துக்களிடம் பேதத்தையும், விரோதத்தையும் வளர்க்கிறீர்கள். இதைத் தொடாதே, அதைத் தொடாதே என்பதுபோன்ற நடைமுறைக்கு ஒத்துவராத திண்ணைப் பேச்சு பேசிக்கொண்டு மக்களை ஒற்றுமையாக இல்லாமல் செய்து வருகிறீர்கள். இன்று பெரும்பான்மையான இந்துக்கள் — திருக் குலத்தார்—முஸ்லிம்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் மாறினதற்கு உங்களைப்போன்ற வெறியர்களே காரணம். நம்நாடு மாற்ரு னிடத்தில் அடிமைப்பட்டதும் உங்களைப்போன்ற பிரிவினைவாதிக ளால்தான். ஹரிஜனங்களை, ஆகமமுரணாகக் கோயிலில் நுழைய விட்ட உங்களுக்கு, ஐயப்பபூஜையையும் செய்யவிட்டால் என்ன குடிமுழுகிவிடும்?" என்பதுபோன்ற பல விதண்டாவாதங்களையும், சாதிச் சண்டைகளையும் கிளப்பிவிடும்படியான ஆவேசமான பேச்சுகளைப்பேச ஆரம்பித்துவிட்டார்.

"அந்த அந்தக் கோயிலில் அந்த அந்த ஸம்ரதாயப்ரகாரம் பூஜை நிர்வாகம் முதலியன நடப்பதற்கு விசுவ ஹிந்து பரிஷத் போராடும்" என்று முதலில் கூறியவர் இன்று தனது வேஷத்தை வெளிப்படுத்திவிட்டார். இவர்களிடத்தில் நமக்கு — வைணவர்க ளுக்கு—நியாயம் கிடைக்கும் என்று எண்ணுவது பகற்கனவேயாகும்.

திரு. வேதாந்தம் அவர்கள் நிதானம் இழந்தபோதிலும் அடியேன் பின்வருமாறு எடுத்துக் கூறினேன். "ஐயா, விஷ்ணு கோயில்கள் வைஷ்ணவ ஆகமத்தைப் பின்பற்றிக் கட்டப்பட் டிருக்கின்றன. அவ்வாறே வைணவ ஆகமத்தை ஒட்டித்தான் பூஜைகளும் திருவிழாக்களும் நடந்துவருகிறது. நடக்கவும் வேண்டும். விஷ்ணு கோயிலில் வைணவ ஆகமத்திற்கு முரணாக சைவ பூஜையில் சேர்ந்ததான — ஐயப்பன் பூஜை — போன்றது நடத்துவது ஆகம சாத்திரத்திற்கும் ENDOWMENTS ACT-க்கும் முரணானது. மேலும் சிறுபான்மை சமூகமாகிய வைணவர்களின் எண்ணங்களுக்கும், மத உணர்வு களுக்கும் மதிப்புக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமையுமாகும். உள்ளூரிலேயே அழகிய பெரிய சிவன் கோயில் இருக்கும்போது அதைவிட்டுப் பிடிவாதமாக சைவ பூஜைகளை விஷ்ணு கோயிலில் செய்வது அநாகரிகத்தின் பாற்படுவது. சைவ சமயமும், வைணவ சமயமும் இந்து மதம் என்று பெயர் பெற்று விட்டாலும் இரண்டும் வெவ்வேறு கொள்கைகளையுடைய மதங்களாகும். ஒற்றுமை

http://acharya.org

என்பது மற்ற மதத்தினரது வழிபாடுகளிலும், வழிபாட்டுத் தலங்களிலும் தலையிடாமலும், பொது இடங்களில் அவர்களைப் பழிக்காமலும், தம்முடைய மதக்கொள்கைகளில் ஊற்றமுடன் இருப்பதே யாகும், அதைவிட்டு, 'பகவானது நாமாக்களைத்தானே சொல்கிறார்கள், அது ஐயப்பனானால் என்ன, விஷ்ணுவானால் என்ன' என்பதனால் ஒற்றுமை குலையுமேயொழிய வளராது'' என்று எவ்வளவு எடுத்துக்கூறியும் அவர் (வேதாந்தம்) கேட்பவராக இல்லை.

செவிடன் காதில் ஊதிய சங்கு என்பது போலவும், கொக்குக்கு ஒன்றே மதி என்பது போலவும், நான் சொன்னது எதையும் காதில் வாங்கிக் கொள்ளாததோடு மட்டுமல்லாமல், ''நீங்களெல்லாம் வெறியர்கள், ஒற்றுமையைக் குலைப்பவர்கள்'' என்ற ஒன்றையே திருப்பித் திருப்பிக்கூறிக்கொண்டு வந்தார்.

கடைசியாக அவரிடம் கூறவேண்டியது ஒன்றுமில்லையாகையால் வெளியேறி விட்டேன். ஆனால் இவர்களெல்லாம் பசுத்தோல் போர்த்திய புலி என்பதை மட்டும் தெரிந்து கொண்டேன். எம்பெருமானார் க்ருபை கூர்ந்து அவர்களுக்கு நல்ல ஞானத்தைக் கொடுக்கட்டும்.

மேலும். வைணவர்கள் நாட்டு ஒற்றுமையைக்குலைத்து விட்டார்கள் என்பது அப்பட்டமான பொய். அரசர்கள் தங்களுக்குள் மண்ணாசையின் காரணமாகப் பலமுறை அடித்துக்கொண்டதோடு மட்டுமல்லாமல் மாற்றானாகிய வெள்ளைக்காரர்களுடனும் நட்பு வைத்துக்கொண்டு நாட்டை இழந்தார்கள். வைணவர்களுடைய பற்பல உயிர்த்தியாகத்தினாலும் மாறாத பக்தியினாலும் மட்டுமே இன்று வானளாவிய பல பல கோயில்கள் வாழ்கின்றன என்பதைச் சரித்திரம் காட்டுகிறது. சைவர்கள் வலிய வந்து வைணவர்களை இம்சைப்படுத்தியதெல்லாம் சரித்திரத்தில் ஏறியுமிருக்கிறது.

மேலும் வடநாடு தென்நாடு இங்கெல்லாம் முஸ்லீம்களின் காலத்திலும் சரி, மற்ற ஜனநாயக ஆட்சியிலும் சரி. கொள்ளையடிப்பதும், கோயில்களை இடிப்பதும், சிலைகளைக் கடத்தியதும், ஒற்றுமையின்மையாலோ, சைவ வைணவச் சண்டைகளினாலோ அல்ல. முஸ்லீம்கள் நம்முடைய சொத்துக்களை ஆசைப்பட்டார்கள். நம்முடைய ஜனநாயக அரசும், அதே சொத்துக்கே—அதாவது தங்க வெள்ளி நகைகள், நிலம், வீடு போன்றன — ஆசைப்படுகின்றது. அதனால் மட்டுமே பல கோயில்கள் நாசமடைந்தன. பல சைவ வைணவர்கள் பலவந்தமாக மதம் மாற்றப்பட்டனர்.

ஹரிஜனங்கள் ஒட்டு மொத்தமாக மதம் மாறுவது என்பது அன்னியநாட்டின் பணத்தாசையினாலும். மத விஷயங்களை அறியாத பாமர மக்கள்-ஹரிஜனங்கள் - போடும் சண்டையினாலும் மட்டுமே என்பதைக் குழந்தைகூட அறியும்,

http://acharya.org

நிற்க; இதெல்லாம்–வேதாந்தம் போன்றவர்களின் காதுகளுக்கு ஏருது. மாருக நம்மை எதிர்த்து வாதந்தான் செய்வார்கள், இதன் மூலம் அடியேன் கூறிக்கொள்வது என்னவென்ருல்; வைணவர் களுக்கு நியாயம் கிடைப்பதென்பது தற்காலத்தில் அரிதாக இருக் கிறது; ஆகவே சமரசம், சமத்துவம் என்ற போர்வையில் நாம் ஏமாந்துவிடக்கூடாது. இப்பொழுதே சில கைதேர்ந்த வக்கீல் களின் குழுவை அணுகி — வைணவர்களாக இருக்கவேண்டும் — தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நமது கருத்துக்கள்

திரு. வேதாந்தம் அவர்கள் நிதானம் இழந்ததால், அவர் உள்ளத்தில் அடக்கிக்கொண்டிருந்த உண்மைகள் வெளிப்பட்டு விட்டன. வைணவாலயங்களில் சிறிது சிறிதாக இவர்கள் சைவ நடைமுறைகளைப் புகுத்திவருகிருர்கள். ஐயப்ப பூஜையைப் பல விஷ்ணு கோயில்களில் செய்வது, அரியலூர் போன்ற சில இடங் களில் பெருமாள் கோவிலுக்குள்ளேயே ஐயப்பன் கோயிலைக் கட்டுவது, கூடலூர் (ஆடுதுறைப் பெருமாள்கோவில்) போன்ற சில விஷ்ணு கோயில்களில் ஐயப்பன் படத்தையும் பதினெட்டுப் படிகளையும் வைப்பது, காஞ்சீபுரத்தில் வரதராஜர் ஸன்னிதியில் உள்ள கஜானனருக்கு முன்பு கணபதி ஸ்தோத்ரங்களைப் படிப்பது, ஆங்காங்கு விஷ்ணு கோயில்களில் தூண்களில் உள்ள காளி முதலிய சிற்பங்களைத் தனிக்கோயிலாக்குவது, விஷ்ணு கோயில்களில் லிங்கப்ரதிஷ்டைப் படத்தையும், நரசிம்மனைச் சரபம் கிழிப்பதாகக் காட்டும் படத்தையும் வைப் பது, மற்ற தெய்வப் பாடல்களை ஒலிபரப்புவது முதலான அடாத செயல்களைப் பரிஷத்தின் தலைவர்களும் அபிமானிகளும் தொண்டர்களும் இப்போதே செய்வித்து வருகிருர்கள். தனி இந்து வாரியம் அமைக்கப்பட்டால் இது தீவிரமாகி விஷ்ணுகோயில் கள் எல்லாம் சிவன் கோயிலாக மாறிவிடும் என்பதில் ஐயமில்லை. விஷ்ணு கோயில்களைப் பலிகொடுத்துத்தான் ஹிந்து ஒற்று மையை ஏற்படுத்த வேண்டும் என்று இவர்கள் கருதினுல், அத் தகைய ஒற்றுமை நமக்குத் தேவையில்லை. வைணவத்தை அழிக்கும் முயற்சிகளில் இவர்கள் தொடர்ந்து இவ்வண்ணமே ஈடுபட்டு வந்தால் எந்த சாஸ்திரத்திலும் காணப்படாததாய், நம்மீது திணிக்கப்பட்டிருப்பதான 'இந்து மதம்' என்னும் பெய ரையும் நாம் உதறி எறியத் துணிய வேண்டும். திரு. வேதாந்தத் தின் உண்மைக் கருத்து யாதென்று விளங்கிவிட்டது. இனியா வது பரிஷத்தின் பசப்பு வார்த்தைகளில் மயங்கி அதனுடன் நட்பும், உறவும் கொண்டிருக்கும் ஒரு சில வைணவர்கள் விழித் தெழுந்து பரிஷத்தோடு தம் உறவைத் துண்டித்துக்கொள்வார் கள் என நம்புகிறேம்.

http://acharya.org

ஸ்ரீ:

அருள்வாக்கில் பொருள் வேறுபாடு

[அலங்கார தேவராஜன், ஸ்ரீவில்லிபுத்தூர்]

—⋙⋘—

27—4—86 கல்கி இதழில் ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீசந்திரசேகர சரஸ்வதி சங்கராசாரியார் சுவாமிகளின் அருள் வாக்கு வெளிவந்திருக்கிறது. அது வருமாறு:—

"கவிகளை ரொம்பவும் ஆதரித்த பாரிவள்ளல் காலமாகி, அவனுடைய இரண்டு பெண்கள் அநாதையாக நின்றபோது அவ்வைதான் மிகவும் நன்றியறிதலோடு அவர்களுக்கு வரன் தேடிக் கல்யாணம் பண்ணிவைத்தார். அந்தக் கல்யாணத்துக்கு அவள் அழைப்போலை (இன்விடேஷன்) அனுப்பினாள் என்பதற்காக மூவேந்தர்களும் வந்துவிட்டார்கள். பரஸ்பரம் குஸ்தி போட்டுக் கொள்பவர்களானாலும், அவ்வையின் அழைப்பைத் தட்டப்படாது என்றே வந்து அப்படி மூன்றுபேரும் ஒன்று சேர்ந்ததைப் பார்த்தவுடன் அவள் ரொம்பவும் சந்தோஷமடைந்தாள். இருபிறப்பாளர்களான பிராம்மணர்கள் வளர்க்கிற முத்தீ (கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்னி) மாதிரியல்லவா நீங்கள் மூவரும் ஒரே இடத்தில் சேர்ந்து ஜ்வலிக்கிறீர்கள்! என்று பாடினாளாம். புறநானூற்றிலே அந்தப் பாட்டு இருக்கிறது;

'ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப்பாளர்
முத்தீ புரையக் காண்தக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்.' [புறம் 367]

"பொம்மனாட்டி: அதிலும் கிழவி; கூழுக்குப் பாடுவது என்று அத்தனை எளிமையாக இருந்தவள் அவ்வை. ஆனாலும் ராஜாக்களும் அவள் சொல்வதை பயபக்தியோடு கேட்டுக் கொண்டார்களென்றால் அதற்குக் காரணம் அவள் கற்றவளாக இருந்ததுதான்.

"கவிகள் பாவாணர்கள் என்பவர்கள் ரொம்பவும் கற்றறிந்தவர்களாக இருப்பார்கள். அதனால் அவர்கள் ராஜாவுக்கு மேலே சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெற்றிருந்தார்கள்.

"இப்படித் தங்களுக்கு இருக்கிற சிறப்பை அவர்கள் நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தார்கள். அதனாலேயே ஒரு ராஜாவுக்குக்கூட தாங்கள் ஸலாம் போடவேண்டியதில்லை என்பதாக ரொம்பவும் மானம், ரோஷம், தைர்யம் உள்ளவர்

http://acharya.org

களாக இருந்தார்கள். இப்படி அவர்கள் இருந்ததற்கு அந்தக் கிழப்பாட்டி,

''மன்னர்க்குத் தன் தேசமல்லால் சிறப்பில்லை; கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு''

என்று தைரியமாகப் பிரசாரம் பண்ணியதே பெரிய சான்று.''

இது ஆசாரிய சுவாமிகளின் அருள்வாக்கு. இனி இதி லுள்ள பொருள் வேறுபாட்டினைக் காண்போம். இதில்,

''கவிகளை ரொம்பவும் ஆதரித்த பாரிவள்ளல் காலமாகி அவனுடைய இரண்டு பெண்கள் அநாதையாக நின்றபோது அவ்வைதான் மிகவும் நன்றியறிதலோடு அவர்களுக்கு வரன் தேடிக் கல்யாணம் பண்ணிவைத்தார்'' என்பது வணக்கத்துக் குரிய ஆசாரிய சுவாமிகள் அருள்வாக்கு.

போற்றுதலுக்குரிய ஆசார்ய சுவாமியின் அருள் வாக்கில் கபிலருக்குப் பதில் அவ்வை இடம்பெற்றிருக்கிறாள்.

வேள் பாரியின் ஆருயிர் நண்பர் கபிலர். அவைக் களத்துப் புலவருங்கூட. பாரிவள்ளல் மறைந்தபின் அவனது மகளிர் இருவருக்கும் வரன் தேடி நன்றியறிதலோடும் நட்புக் கடனைக் கழித்தவர் கபிலர் என்பதே வரலாறு.

வள்ளல் பாரி வானுலகேகியபின் பாரியின் புதல்வியர் இருவருக்கும் திருமணம் செய்யக் கருதினார் கபிலர். அவர் விச்சிக் கோன் என்ற அரசனிடம் சென்றார். பாரியின் செல்வியரை மணமுடித்துக்கொள்ள அவ்வரசனை வேண்டினார். இச்செய்தியினை,

''கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்
யானே பரிசிலன் மன்னு(ம்) அந்தண(ன்;) நீயே
வரிசையில் வணக்கும் வாண்மேம் படுநன்
நினக்கியான் கொடுப்பக் கொண்மதி சினப்போர்
அடங்கா மன்னரை யடக்கும்
மடங்கா விளையுள் நாடுகிழ வோயே.'' [புறம் 200; 11-17]

எனப் புறநானூறு கூறுகிறது. அம்மகளிரை ஏற்க விச்சிக் கோன் மறுக்கவே கபிலர் இருங்கோவேள் என்ற அரசனிடம் சென்றார். பாரியின் பாவையரை மணந்து வாழவேண்டுமென அவ்வரசனை இறைஞ்சினார். இக்கருத்தினை—

http://acharya.org

"இவரியா ரென்குவை யாயி னிவரே
ஊருட னிரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி மகளிர்; யானே
தந்தை தோழ னிவரென் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே
....
யான்தர இவரைக் கொண்மதி......" [புறம் 201; 1-16]

எனக்கூறும் புறநானூற்றுப் பாடலில் காணலாம். இவ்விரு பாடல்களிலிருந்து பாரியின் மகளிர்க்குக் கல்யாணம் செய்து வைத்தவர் கபிலரே என்பது புலனாகும்.

இவ்வாறிருக்க, "அவ்வை தான் மிகவும் நன்றியறிதலோடு அவர்களுக்கு வரன்தேடிக் கல்யாணம் பண்ணிவைத்தார்" என்று வணக்கத்துக்குரிய ஆசாரிய சுவாமிகள் தமது அருள் வாக்கால் உரைத்தருள்கிறார்.

"முடிமன்னர் மூவரும் பறம்புமலையை முற்றுகையிட்ட போது. பறவைகளால் நெற்கதிரைப் புறத்திருந்து வரு வித்து உள் நகரத்தாரைப் பசியால் வருந்தாதபடி பாதுகாத் தளித்தார் கபிலர்" என்ற செய்தியை அகநானூற்றில் 303வது பாடலில் அவ்வையே கூறியிருக்கிறார்.

கபிலர் பாரியின் மகளிர்க்கு மணம்செய்து வைத்திருக்க, அவ்வை முடிமன்னர் மூவர்க்கும் அழைப்போலை விடுத்தார் என்பது மேலே கண்ட வரலாற்றுக்கு முரணாகத் தோன்ற வில்லையா? போற்றுதலுக்குரிய பீடாதிபதி உதாரணமாகக் காட்டும்

"ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப்பாளர்
முத்தீ புரையக் காண்தக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்" [புறம்:367]

என்ற புறநானூற்றுப் பகுதி— சேரமான் மாரிவெண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப்பெருவழுதியும், சோழன் இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்தாரை நோக்கி அவ்வையார் கூறியதாக உள்ளதே யொழிய, அவ்வையின் அழைப்போலை கண்டு பாரி மகளிர் திருமணத்துக்கு வந்தாரை நோக்கிக் கூறியதாக இல்லையே? இது எவ்வாறு சான்றாகும்

http://acharya.org

அரசர்கள் இருவரும் பாரியின் பெண்களை மணக்க மறுக்கவே கபிலர் அந்தணர்க்கு அவர்களை வாழ்க்கைப்படுத்தினார் என்பது வரலாறு, உண்மை இவ்வாறிருக்க ஆசாரிய சுவாமிகளின் அருள் வாக்கில் பொருள் வேறுபாடு தோன்றவில்லையா? பத்திரிகைஆசிரியர் இதைச் சிறிது சிந்தித்துப் பார்த்திருக்கலாம்.

இக்கருத்துக்கள் மதிப்பிற்குரிய கல்கி ஆசிரியர் அவர்கள் அறியாதவையல்ல. இலக்கியத்துக்குச் சேவை செய்யும் பத்திரிகை கல்கி; பள்ளியிற் பயிலும் பாலர்கள் முதல் முதியவர்கள் வரை யாவரும் படிக்கும் பத்திரிகை கல்கி; பலப்பல ஆண்டுகளாகத் தமிழ்த் தொண்டு செய்து வருவது கல்கி; இவ்வளவு சிறப்பு மிக்க கல்கி பத்திரிகையின் ஆசிரியர் அவர்கள், அருள் வாக்கைப் போலப் பொருள் வேறுபட வேறு யாராவது எழுதியிருந்தால் பிரசுரிப்பாரா? ஏன்? இந்த மறுப்புக் கட்டுரையை யானே அனுப்பினால் பிரசுரிப்பாரா? எழுதியிருப்பது தன் ஆசாரியராயிற்றே? அதைப் பிரசுரிக்காமல் இருக்க முடியுமா? இதுதானே அவர் கருத்து?

இஃது மதிப்புக்குரிய கல்கி ஆசிரியரின் ஆசாரிய பக்தியைக் காட்டுகிறது என்பது தெளிவு. ஆசாரிய பக்தி காட்டப்பட வேண்டியதே! ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஆசாரியனைப் போற்றுவதும், புகழ்வதும் இயல்பே. இதில் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. எனவே கல்கி ஆசிரியரின் ஆசாரிய பக்தியைப் போற்றுகிறோம். ஆனால், வணக்கத்துக்குரிய அவ்வாசாரியர் உண்மைக்குப் புறம்பாகக் கூறினால் அதை எவ்வாறு ஏற்பது ?

பள்ளியிற் பயிலும் பாலர்களுக்குப் பாரிவள்ளல் கதை பாடமாயிற்றே ? கல்கியில் படித்ததைக்கொண்டு சிறுவர்கள் தேர்வில் எழுதிவிட்டால் அவர்களுக்கு மதிப்பெண்கள் கிடைக்குமோ? அருள்வாக்கில் உள்ள பொருள் வேறுபாட்டைச் சிறுவர்கள் அறிவார்களா ? இச்சிந்தனையே என்னை இவ்வாறு எழுதத் தூண்டியது. ஆசாரிய சுவாமிகளிடம் அபசாரப்படவோ, அன்புக்குரிய ஆசிரியரிடம் குறை காணவோ யான் இதை எழுதினேனல்லேன் என்பதைப் பணிவன்புடன் கூறி இதை நிறைவு செய்கிறேன்.

http://acharya.org